# மெய்ஞ்ஞானி பீர்முகம்மது அப்பா இலக்கிய ஆய்வுக் கோவை

பதிப்பாசிரியர்

பேராசிரியர் கா. முகம்மது பாருக்

மெய்ஞ்ஞானி

# பீர்முகம்மது அப்பா

இலக்கிய ஆய்வுக் கோவை

ASSISTANT REGISTRAR OF BOOKS
16 JUN 1978
MADRAS 600 009
PUBLIC (I & PR) DEPARTMENT

பதிப்பாசிரியர்

பேராசிரியர் கா. முகம்மது பாரூக்

நன்னெறிப் பதிப்பகம்
அஞ்சுவன்னம்
திருவிதாங்கோடு-629174
கன்னியாகுமரி மாவட்டம்

# A COLLECTION OF PAPERS ON THE WORKS OF SHEIKH PEER MUHAMMAD SAHIB

(MEIGNANI
**PEER MUHAMMADHU APPA**
ILAKKIA ANVUKKOVAI)

4808.
23 FEB
EGMORE, MADRAS-600 008
0-1:g
N78

*Editor*

**Prof. K. MOHAMED FARUK,** M. A.
Head of the Department of Tamil
Sadakathullah Appa College
PALAYAMKOTTAI-627011

TAMIL NAD ARCHIVES LIBRARY
4808
MADRAS-600 008

©NANNERI PUBLISHERS
ANJUVANNAM
THIRUVITHANCODE-629174
KANYAKUMARI DT.

Copies can be had from the Publishers

**Rupees** 15/-

Printed at Meelad Printers, Tirunelveli-6.

# பதிப்புரை

'உலகெலாம் படைத்தே உயர்வுறக் காக்கும்
புலமையோன் இறைக்கே புகழெலாம் உரிய'

வல்லான் இறைவனின் வான் கருணையால், இஸ்லாமிய நெறியையும் இனிய தமிழையும் வளர்ப்பதை முதன்மை நோக்கமாகக் கொண்டு நன்னெறிப் பதிப்பகம் செயல்பட்டு வருகின்றது. பைந்தமிழ் மொழியில் பல்லாயிரக்கணக்கான பாடல்களைத் தந்த புலவர் ஞானி பீர்முகம்மது அப்பாவின் பூத்துக் குலுங்கும் இலக்கியப் பணியை நினைவு கூரும் முறையில் ஐந்தாண்டுகட்கு முன்னர், இப்பதிப்பக வெளியீடாக, 'மெய்ஞ்ஞான மேதை பீர்முகம்மது அப்பா மலர்' வெளிவந்தது. அதன்பயனாக அப்பா இலக்கியத்தை அறிமுகம் செய்யும் அரும்பேறு வாய்த்தது. மலரை நுகர்ந்தோர் மனமாரப் பாராட்டினர். பாராட்டிய பண்பாளருள் தக்கலை ஜனாப் சே. முகம்மது முஸ்தபா சாகிப் அவர்கள் சிறப்போடு குறிப்பிடத் தகுந்தவர். அவர்கள் நேரிய உழைப்பும் நெஞ்சுறுதியும் சீரிய செயற்பாடும் செம்மைப் பண்பும் செறிந்தவர். கடல் கடந்த நாடு சிங்கையிலிருந்து கரைகாண முடியாத ஆர்வத்தோடு அப்பா இலக்கியத்தில் மேலும் ஆய்வு காணத் தூண்டினார்கள். அவர்களைப் போன்ற அன்பர்கள் பலரின் ஆர்வத்தை அடிப்படையாகக் கொண்டு, பேரருளாளன் இறைவனின் பெருங்கருணையால் 'மெய்ஞ்ஞானி பீர்முகம்மது அப்பா இலக்கிய ஆய்வுக்கோவை'யை வெளியிடுகின்றோம்.

## நன்றி

'மெய்ஞ்ஞானி பீர்முகம்மது அப்பா இலக்கிய ஆய்வுக் கோவை' அனைவர்தம் மலர்க்கரங்களிலும் திகழப் பல வகையாலும் ஆக்கமும் ஊக்கமும் நல்கிய பி. எஸ். கே. வி. பல்லாக்கு லெப்பை & கம்பெனி, சென்னை சீதக்காதி டிரஸ்டு, ஏ. எம். அகமது & கம்பெனி ஆகிய நிறுவனங்களுக்கும், அல்ஹாஜ் ஏ. பீர்முகம்மது சாகிப், ஜனாப் சே. முகம்மது முஸ்தபா சாஹிப், ஜனாப் எஸ். எம். சகாப்தீன் சாகிப், ஜனாப் எஸ். எம். ஹமீது அப்துல் காதிர் சாகிப் ஆகிய பெருமக்களுக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆய்வுக்கோவை சிறக்க ஆக்ககரமான ஆலோசனைகளைத் தந்துதவிய சென்னை ஹாஜி ஏ. என். எச். அப்துல்கனிசாகிப், ஏரல் ஜனாப் அ. ஜ. அஷ்ரப் அலி எம். ஏ., தக்கலை ஜனாப் எச். முகம்மது சலீம் எம். ஏ., கடையநல்லூர் ஜனாப் எம். ஏ. சாகுல் ஹமீது, ஜனாப் உ. அப்துல்ஹமீது சாகிப் ஆகியோருக்கும் நன்னெறிப் பதிப்பகத்தின் அன்பு கலந்த நன்றியை அறிவிக்கின்றோம்.

மெய்ஞ்ஞானியார் இலக்கிய ஆய்வுக் கோவைக்கு மெய்ஞ்ஞான விளக்க மொன்றை மேவுகின்ற மேலுறை ஓவியத்தை வரைந்தவர் ஓவியர் ஜனாப் ஏ. கே. செய்யது மொகிதீன். அவருக்கும் அகங்கனிந்த நன்றி.

திருநெல்வேலி மீலாது அச்சகம், கோவைப்பணியை ஆர்வத்தோடு அச்சிட்டு உதவியுள்ளது. அதன் உரிமையாளருக்கும் உளமார்ந்த நன்றி.

திருவிதாங்கோடு
14–10–'76

நன்னெறிப் பதிப்பகம்

# முன்னுரை

அருளன்பு பண்பால் அனைத்துலகும் காப்போன்
திருப்பெயர் போற்றித் திறப்பு.

ஒளிவீசும் பாரதத்தின் உயர்வுக்கு உறுதுணை புரிவது பக்திநெறி. பக்தி நெறியை வளர்ப்பது பக்தியிலக்கியம். பக்தி யிலக்கியம் சிந்தைக்கினிய செந்தமிழ் மொழியில் சிறப்பாக அமைந்துள்ளது. அனைத்து பக்திநெறியினரையும் ஒன்றாய் இணைத்து உரிமை உணர்வை ஊட்ட வல்லது தமிழ். சைவமும், வைணவமும், சமணமும், பௌத்தமும் தமிழ் வளர்ச் சிக்குத் தக்க துணைபுரிந்துள்ளன. பிற்காலத்தில் தமிழகம் வந்த பெருநெறி இஸ்லாமும், கிறிஸ்தவமும் இனிய தமிழுக்கு எல்லா நலன்களையும் ஈந்துள்ளன. எனினும் கன்னித் தமிழுக்குக் காலத்தால் அழியாத கவினார்ந்த பணியாற்றிய இஸ்லாத்தின் பங்கைப் பலரும் உரிய அளவுக்கு உள்ளங் கொள்ளவில்லை என்றே குறிப்பிடவேண்டும். அத்தகைய குறை அகலும் முறையில் சென்ற சில ஆண்டுகளாக இஸ்லா மிய இலக்கிய மாநாடுகள் நடைபெற்றுள்ளன. திருச்சியிலும் சென்னையிலும் நடைபெற்ற மாநாடுகளில் இஸ்லாமியப் புலவர்கள் பற்றிய ஆய்வுரைகள் நிகழ்ந்துள்ளன. அத்துறை யில் ஆர்வங்கொண்ட நெஞ்சங்களுக்கு அரிய விருந்தாக 'மெய்ஞ்ஞானி பீர்முகம்மது அப்பா இலக்கிய ஆய்வுக்கோவை' வெளிவருகின்றது.

தென்காசியிற் பிறந்து தக்கலையில் மறைந்த மெய்ஞ் ஞானி பீர்முகம்மது அப்பா அவர்கள் பக்தி நலங்கனியும் பல்லாயிரம் பாடல்களைப் பாடிய சூஃபி மெய்ஞ்ஞானியாவார். பதினேழாம் நூற்றாண்டைச் சார்ந்து வாழ்ந்த இப்பல்துறைச்

செம்மலை இலக்கியச் சிந்தனையாளர்கள், எண்ணும் வாய்ப்பு எவ்வளவுக்கு எழவேண்டுமோ அவ்வளவுக்கு எழவில்லை. அஃது ஒரு பெருங்குறையே. அக்குறையைக் களைய ஆய்வுக் கோவையொன்றை உருவாக்கும் எண்ணம் எழுந்தது. எண்ணத்தைச் செயல்படுத்தும் பொருட்டுச் சிந்தனைச் செல்வர்களை அணுகியபோது நற்பயன் கனிந்தது. அதன் விளைவே அப்பா ஆய்வுக்கோவை! புலத்துறை முற்றிய அறிஞர் பெருமக்கள் அறுபதுக்கும் மேற்பட்டோரின் ஆய்வு களைத் தாங்கி இக்கோவை அன்புக்கரங்களில் தவழ்ந்து கொண்டிருக்கின்றது! இலக்கிய ஆய்வினை முறையாக நிகழ்த்தி டாக்டர் பட்டம் பெற்ற பேரறிஞர் ஐவர் கட்டுரைகள் கோவையில் இடம் பெற்றுள்ளன. ஆய்வுக் கட்டுரைகள் வழங்கியுள்ள பேராசிரியர்கள் இருபத்தொருவர்; அவருள்ளும் இலக்கிய ஆய்வுப் (Ph. D.) பயிற்சியை மேற்கொண்டிருப் போர் எண்மர். இஸ்லாமிய நெறியிற் புலமை சான்ற 'உலமாக்கள்' எண்மர் கட்டுரைகளும் இதில் உள்ளன. பதிப் பாசிரியர்களும், பன்னூலாசிரியர்களும், பத்திரிகையாசிரியர் களும், சிறுகதைச் செல்வரும் கட்டுரைகள் வழங்கியுள்ளனர். கவிஞர்களும், இலக்கியச் சிந்தனையாளர்களும், மாதர் மணிகளும் தமது மதிப்புக்குரிய துணையை ஆற்ற மறக்கவே இல்லை. எனவே இந்த இலக்கிய ஆய்வுக்கோவை எழில்கொழிக்கும் ஓர் இலக்கியப் பூச்செண்டு! இதன் இனிய தோற்றத்திற்குத் துணைபுரிந்த அத்தனைபேரும் காலம் மறைத்துவிட்ட கணிசமான இலக்கியக் கொடையொன்றைப் பெருமையோடு வெளிப்படுத்த வேண்டும் என்ற பெருந் துடிப்போடு முயன்றிருப்பதைக் காணலாம். இம்முயற்சியின் முடிவாக 'அப்பா இலக்கிய நினைவு' இன்னும் அதிகமாகத் தமிழ்நாட்டில் எழுமாயின் பீடார் முயற்சியில் பெருவெற்றி பெற்றவர்களாவோம். ஆய்வுக் கட்டுரைகள் வழங்கிய அறிஞர் பெருமக்கட்கும் அன்பர்கட்கும் ஆழிய நன்றி உரித்தாகுக.

ஆய்வுக்கோவையை நூல் வடிவமாக்கும் பணிக்கொரு 'அறிமுகம்' தரவேண்டுமென எங்கள் சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரித் தாளாளர் அல்ஹாஜ் த. இ. செ. பத்ஹுர் ரப்பானி சாகிப் அவர்களை வேண்டியபோது அவர்கள் ஆர்வம் கனிய

இசைந்தார்கள். அவர்கள் தாளாளராக இருந்து தகுதியோடு நடத்தும் கல்லூரியின் இலக்கிய விழாக்களுக்கு அவர்கள் காட்டும் ஆதரவும், வழங்கும் ஊக்கமும் சிறப்போடு குறிப்பிடத் தகுந்தவை. 'அறிமுகம்' தந்த பெருந்தகைக்கு அகங்கனிந்த நன்றியை அறிவிக்கின்றேன். ஆய்வுக்கோவைக்கு உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு எம். எம். இஸ்மாயீல் எம். ஏ., பி. எல்., அவர்கள் வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள்; கோழிக்கோடு பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ஹாஜி என். ஏ. நூர்முகம்மது எம்.ஏ., எல்எல்.எம்., ஜே. எஸ். டி. அவர்கள் அணிந்துரை தந்து அழகு சேர்த்துள்ளார்கள். நாடு மதிக்கும் இவ்விரு நீதிவேந்தர்களும் இலக்கிய ஏடு மணக்க ஆற்றும் பணிகள் சிறந்தவை; மிகச் சிறந்தவை. அருகியிருக்கும் ஓய்வின் மத்தியிலும் பெருகியிருக்கும் இலக்கிய உணர்வோடு நன்மொழிகள் வழங்கிச் சிறப்பளித்தமைக்காகச் சிந்தை நிறைந்த நன்றியை அறிவிக்கின்றேன். இந்த ஆய்வுக் கோவைக்கு மதிப்புரை வழங்கிய நாகர்கோவில் தெ. தி. இந்துக்கல்லூரித் துணைமுதல்வரும், பட்டமேற்படிப்புத் தமிழ்த்துறைத் தலைவருமான பேராசிரியர், டாக்டர் சி. சுப்பிரமணியன் எம். ஏ., பி. ஓ. எல்., பிஎச். டி., அவர்கள், பழுத்த தமிழறிவும் பண்பட்ட வாழ்க்கையும் கொண்ட சிந்தனைச் செல்வர்; எனது ஆசிரியர். அவர்கட்கு இப்போதும் யான் மாணவனே. மதிப்புரை வழங்கிய பேராசிரியப் பெருந்தகைக்கு மனமார்ந்த நன்றி.

மிகச் சுருங்கிய காலப்பகுதிக்குள் கட்டுரைகளும் கருத்துரைகளும் வழங்கியோருக்கும், பலவகையாலும் சிறப்புச் செய்த அனைவோர்க்கும் மீண்டும் சிந்தைக்கினிய நன்றியைச் சிறப்பாக அறிவித்துக் கொள்கின்றேன்.

முன்னுரையை முடிப்பதற்கு முன் ......

இதன்கண் அமைந்துள்ள கட்டுரைகள் குறுகிய காலத்தில் படித்து முடித்தற்குரியவையன்று; எந்நாளும் படித்து மகிழ்தற்குரிய நிலைத்த சிறப்புடையவை.

பாளையங்கோட்டை — *கா. முகம்மது பாரூக்*

14—10—'76

# உள்ளுறை


பதிப்புரை iii

முன்னுரை v

அறிமுகம்

அல்ஹாஜ் த. இ. செ. பத்ஹுர் ரப்பானி xiv

வாழ்த்துரை

மாண்புமிகு ஜஸ்டிஸ் எம். எம். இஸ்மாயீல் எம். ஏ., பி. எல். xvii

அணிந்துரை

டாக்டர் ஹாஜி என். ஏ. நூர்முகம்மது எம். ஏ., எல்எல். எம்., ஜே. எஸ். டி. (எயில்) xx

மதிப்புரை

டாக்டர் எஸ். சுப்பிரமணியன் எம். ஏ., பி. ஓ. எல்., பிஎச். டி. xxiv

1. இலக்கியம் என்றால் என்ன?
டாக்டர் தா. வே. வீராசாமி எம். ஏ., பிஎச். டி. 1

2. இலக்கியத்தின் பணி
டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் எம். ஏ., எம்.லிட்., பிஎச். டி. 8

3. இஸ்லாமிய இலக்கியத்தில் திருக்குர்ஆன்
பேராசிரியர் எம். நசுருதீன், எம்.ஏ., எல்எல். பி. 13

4. பாரதப் பண்பாட்டு வளர்ச்சியில் இஸ்லாமிய இலக்கியத்தின் பங்கு
பேராசிரியர் கா. அப்துல் கபூர், எம். ஏ. 17

5. வரலாற்றுச் சுடரொளியில் வண்ணத் தமிழகம்
பேராசிரியர் கா. முகம்மது பாரூக், எம். ஏ. 25

6. தென்குமரியில் இஸ்லாம்
எம். எம். மீரான் பிள்ளை, எம். ஏ., பி. எஸ்சி. 37

7. மெய்ஞ்ஞான மேதை பீர்முகம்மது சாகிப் வலியுல்லாஹ் அவர்களின் நூற்பரப்பும் அவை தரும் செய்தியும்
கா. முகம்மது பாருக், எம். ஏ. 44

8. தயக்கம்
எச். முகம்மது சலீம், எம். ஏ. 55

9. தவநாதர்
மவ்லவி டி. ஹாமீம் ஆலீம் சாகிப் 62

10. ஞானப்பால் — ஓர் அறிமுகம்
ஏரல் அ. ஜ. அஷ்ரப் அலி, எம். ஏ., 81

11. ஞானப்பூட்டு — ஒரு கண்ணோட்டம்
அ. ஜமாலுதீன், எம். ஏ. 86

12. ஞானப் புகழ்ச்சி — ஓர் ஆய்வு
தக்கலை எச். முகம்மது சலீம், எம். ஏ. 99

13. ஞானப் புகழ்ச்சி — ஒரு பார்வை
பி. தெட்சிணாமூர்த்தி, எம். ஏ. 110

14. "ஞானப் புகழ்ச்சி"—ஓர் ஒப்புமைக் கண்ணோட்டம்
நெல்லை ந. சொக்கலிங்கம், எம். ஏ. 115

15. ஆழ்ந்து நிற்கும் கவியுளம்
பெரும்புலவர், பேராசிரியர் சி. நயினார் முகமது, எம். ஏ. 120

16. பீர்முகம்மது அப்பா அவர்களின் பாடற்றிறம்
பேராசிரியர் எல். ஆர். சுகராசன், எம். ஏ. 128

17. உனைப்போலொருவருண்டோ இறைவா!
திருவை. அப்துர் ரஹ்மான், எம். ஏ. 134

18. "தாயினும் மேலானவன்"
கே. கமருன்னிஸா, எம். ஏ., பி. டி. 139

19. "ஞானம் பிறந்தது, மோனம் இசைத்தது!"
எஸ். எஸ். அப்துல்லாஹ், எம். ஏ. 144

20. துக்கமது அகற்றத் தொழுகை
மவ்லவி எம். முகம்மது ஷெய்கு 149

21. சுக்கோ சுரோணிதமோ
அ. முகம்மது இக்பால் 153

22. சோபனம்
பீ. ஷெய்கு 158

23. ஞானமணிமாலையில் உவமை நயம்
அதிரை அஹ்மத் 161

24. ஞானகுரு துணைகூட்டும் ஞானப்பாடல்கள்
மௌலவி மூ. முஹம்மது ஹஸன் காதிரி 165

25. இஸ்லாமியச் சித்தர்
சௌ. மதார் மைதீன், எம்.ஏ. 174

26. திருமெய்ஞ்ஞான சரநூல்
சூ. இன்னுசி, எம். ஏ. 182

27. ஞானக்குறம் — ஓர் ஒப்பாய்வு
அ. ச. இராமையா, எம். ஏ. 188

28. ஞானரத்தினக் குறவஞ்சி
தக்கலை எம். எஸ். பஷீர் 207

29. மெய்ஞ்ஞான மார்க்க மேதை பீரப்பா
வழங்கும் பிஸ்மில் குறமும் ஞான ஆனந்தக் களிப்பும்
கே. பீர்முகம்மது, பி. எஸ்சி. 214

30. பெருமானார் நெறிபாடும் பெருஞானியின்
ஈடேற்ற மாலை
தக்கலை சே. முகம்மது முஸ்தபா 218

31. தமிழ் வளர்த்த மெய்ஞ்ஞானி
ஹாபிஸ் எம். கே. சையிது அஹமது 224

32. இமாம் ஷேக் சதக்கத்துல்லாஹ் (ரஹ்)
அ. காஜா கமாலுதீன் எம்.ஏ., பி.எல். 229

33. அவையடக்கம்
எம். கே. இ. மவ்லானு 234

34. மெய்ஞ்ஞானி குணங்குடியார்
கா. மு. பா. 240

35. பீரப்பாவும் குணங்குடியாரும்
திருமலர் எம். எம். மீரான்பிள்ளை,
பி. எஸ்சி., எம். ஏ. 246

36. மௌலானு ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்)
எம். ஹபீப் முஹம்மது, பி. எஸ்சி., பி. டி., 261

37. அப்பாவின் அருள் உள்ளம்
பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்
எம். ஏ., பி. ஓ. எல்., எம். லிட். 266

38. பெருக உண்ணுமல்
என். சின்னராசு, எம். ஏ. 270

39. அந்த வெகு நன்றிக்கு
புலவர் கா. மு. நூர்முகம்மது 272

40. இறைநேசச் செல்வர்கள்
மௌலவீ அல்ஹாஜ் வி. யு. ஏ. யூசுப்அன்சாரி 278

41. உறவு
ரா. திருவேங்கடம், எம். ஏ. 287

42. நற்பரர் பீர்முகம்மது வலீயுல்லாஹ்
அதிராம்பட்டணம், அல்ஹாஜ்
ஏ. எம். சம்சுதீன், B. A. 293

43. ஆருறுக்கப்பால்
மௌலவி எஸ். எம். அலவி சாகிப், (அல்மதனி) 298

44. நமது நூற்குவியல்கள் எங்கே?
தோப்பில் முகம்மது மீரான் 303

45. ஞானச் சரவிளக்கு
டாக்டர் அ. மா. பரிமணம், எம். ஏ.,
எம். லிட்., பிஎச். டி. 309

46. மிக்குயர்ந்த மேதை
கவிஞர் பி. மு. அலியார் 315

47. வாழ்க்கைக்கு வழிகாட்டும் இஸ்லாமிய நெறி
பேராசிரியர் கா. அப்துல்கபூர், எம். ஏ. 321

48. சூஃபியாக்கள் வரலாறு
அபூ ஜமால் 353

49. யானுன் அடைக்கலம்
சீனி. சௌமிய நாராயணன், எம். ஏ. 359

50. இறையே போற்றி
அ. அப்துல் ரசாக், எம். ஏ., டி. ஜீ. டி. 363

51. இறைநேசச் செல்வர்கள் மாண்பு
மௌலவி, அல்ஹாஜ், எஸ். ஆர்.
ஷம்சுல்ஹுதா மிஸ்பாஹி, பாகவி 367

52. இறைநேசச் செல்வர்களும் தென்னாடும்
எம். ஆர். எம். முஹம்மது முஸ்தபா, பி. ஏ. 380

53. சூஃபி மார்க்கமும் இஸ்லாமும்
எஸ். எம். ரகுமான் 389

54. ஞான மரபு
ஜே. எம். சாலி, எம். ஏ. 397

55. அப்பா வழங்கும் சரநூல்
கொழும்பு எப். எம். இபுருஹீம் 401

56. 'வீட்டிலே தேடாய் விரைந்து'
மௌலவி டி. ஹாமீம் ஆலிம் காதிரி 405

57. பெரும் புதையல்
டி. எம். பீர்முகம்மது 409

58. உதவி தா எங்கள் ஒருவனே
எம். அப்துஸ்ஸலாம், எம். ஏ. 412

59. ஞானக் கலைக்கூடம்
உ. அப்துல் ஹமீது 417

60. ஞானப்புகழ்ச்சிப் பாடல்களிற்
சிலவற்றிற்குப் பொருள் விளக்கம்
ஹக்கீம் எம். எஸ். அப்துல்காதிர் 421

61. **Divine Grace in Sufism**
M. Shamsunnahar, M. A. 429

62. பிஸ்மில் குறம்
அல்ஹாஜ், கலாநிதி ம. மு. உவைஸ்,
எம். ஏ., பிஎச். டி., ஜே. பி. 433

63. கூடிக் கலந்திருக்கும் கோமான்
புலவர் அ. பகதூர்ஷா 438

64. அடைக்கலப் பகுதிப் பாடல்
திருமதி நகோமி ஜாண்சன், எம். ஏ., பி. டி. 444

பாளையங்கோட்டை

சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரித் தாளாளர்

## அல்ஹாஜ் த.இ.செ. பத்ஹுர் ரப்பானி சாகிப்

அவர்கள் வழங்கிய

# அறிமுகம்

மகான் பீர்முஹம்மது அப்பா ஒலியுல்லாஹ் அவர்களின் இலக்கிய ஆய்வுக் கோவையை நன்னெறிப் பதிப்பகத்தார் நன்கு பயன்படும் முறையில் பதிப்பித்து இருக்கிறார்கள். புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே! பல்வேறு துறைகளில் பரிண மிக்கின்ற அறிஞர் பெருமக்கள், கற்றுணர்ந்த இஸ்லாமிய மார்க்க மேதைகள் பலரும் கட்டுரைகள் பல மிக அழகுறத் தீட்டி இருக்கின்றனர்.

பதிப்பாசிரியர் கா. முஹம்மது பாரூக் அவர்கள் சதக்கத்துல்லாஹ் அப்பா கல்லூரியில் தமிழ்த்துறையின் தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றி வருகின்றார்கள். பதிப்பாசிரியர் பாரூக் சாஹிப் அவர்கள் சிறந்த பண்பாளர்; சொல்லாளர்; எழுத்தாளர். இந்த அரிய ஆய்வுக் கோவையை ஆக்கித் தந்த தற்காக நம்முடைய பாராட்டுக்கள் உரித்தாகுக! 'பீரப்பா என்றால் யாரப்பா?' என்று கேட்பவர்களுக்கு அநேக விஷயங் களைத் தெளிவுறக் குறிப்பிட்டு இருக்கின்றது இக்கோவை. இக்கோவையிலே உள்ள பல கட்டுரைகளை நான் படித்து இன் புற்றேன். மகான் பீர்முஹம்மது அப்பா அவர்கள் இயற்றிய ஞானப்பாடல்களைப் பேராசிரியர் அவர்கள் "டாக்டர்" பட்டம் பெறுவதற்கு ஆராய்ச்சி செய்து வருகின்றார்கள். மதுரைப் பல்கலைக் கழகத்தில் அதற்காகப் பதிவும் செய்து இருக்கிறார்கள். அப்பா அவர்களின் ஞானப்பாடல்களை ஆய்வுக்காக முதன்

முதலில் எடுத்துக் கொண்டவரும் இவர்கள்தான். நாயன் பேராசிரியர் அவர்களின் முயற்சிக்கு வெற்றியை ஈட்டித் தருவாளுக!

மகான் பீர்முஹம்மது அப்பா அவர்கள் நாஞ்சில் நாட்டில் தக்கலை என்னும் இடத்தில் அடங்கப்பட்டு இருக்கின்றார்கள். தெற்கு எல்லை என்பதுதான் தக்கலை என்று மருவி வழங்கி வருகின்றது. தக்கலை வாழ் தவஞானி மகான் பீர்முஹம்மது அப்பா அவர்கள் தமிழ் ஞானக்கடல்; தவப் போதகர்; மெய்ஞ் ஞான ஒளி வீசும் ஒலியுல்லாஹ்; உள்ளம் உருக இறைவனை, இறைத்தூதரை வாழ்த்திப் புகழ்பாடிய மாமேதை; அப்பா அவர்களின் ஞானப்பாடல்களை எல்லோரும் தப்பாமல் படித்து மனம் மகிழ்ந்திட வேண்டும். நம் வீடுகளில் முதியோர்கள் அப்பா அவர்களின் ஞானப்பாடல்களை - குறிப்பாக சிங்காசிங்கி, பிஸ்மில்குறம் போன்றவைகளை — மனப்பாடம் செய்து பாடக் கேட்டு இருக்கின்றோம். இளைஞர்கள் அப்பா அவர்களின் பாடல்களை ஊன்றிப்படித்துப் பயன் அடைதல் வேண்டும்.

மகான் பீர்முஹம்மது அப்பா அவர்களை அறிந்து கொள் வதற்கும், அவர்கள் இயற்றிய ஆயிரக்கணக்கான மெய்ஞ் ஞானப்பாடல்களைப் புரிந்து கொள்வதற்கும் இந்நூல் பெரிதும் துணைபுரியும் என்பதில் கிஞ்சிற்றும் ஐயம் இல்லை. மகான் பீர்முஹம்மது அப்பா அவர்களைப் பற்றியும், அவர்களின் பாக்களைப் பற்றியும், இக்கோவையில் பலரும், பல்வேறு கோணங்களில் அலசி ஆராய்ந்து விரிவாக எழுதி இருக்கின் றார்கள்.

மகான், மாதிஹுர்ரசூல், சதக்கத்துல்லாஹ் அப்பா அவர் கள், நம் பீர்முஹம்மது அப்பா அவர்களுக்கு மெய்ஞ்ஞானத் தத்துவங்களை விளக்கியவர்களாகவும், இஸ்லாமிய இலக்கியங் களுக்குப் போதகர்களாகவும் இருந்து இருக்கின்றார்கள் என்று தெரிய வருகின்றது. இரண்டு அப்பாக்களும் சந்தித்து எவ் வாறு உரையாடி இருப்பார்கள் என்று நம் சிந்தனை சிறகடித் துப் பறக்கின்றது. நினைக்க, நினைக்க நெஞ்சம் இனிக் கின்றது.

இறைவன் தன் அழகிய திருமறையில் கூறுகின்றான், "அலா இன்ன அவ்லியா அல்லாஹி லா ஹெவ்புன் அலைஹிம் வலாஹும் யஃஸனூன்" "அல்லாஹ்வுக்குச் சொந்தமான நல்லடியார்களுக்கு நிச்சயமாக அச்சம் என்பது இல்லை; அவர்கள் துக்கிக்கவும் மாட்டார்கள், என்பதை அறிந்து கொள்ளுங்கள்." இறை நேசச் செல்வர்களுக்கு, இம்மையிலும், மறுமையிலும் யாதொரு அச்சமும் இல்லை, துக்கமும் இல்லை என்று இறைவன் எடுத்து இயம்புகின்றான். மகான் பீர் முஹம்மது அப்பா அவர்கள் மஃரிபத்து என்னும் ஞானவழியில் மெய்ப்பொருளை அறிந்தவர்களாக, மேற்படித்தரத்தில் இறைவனைத் துதித்து வந்தாலும், இஸ்லாமியக் கடமைகளையும், இறைக்கட்டளைகளையும் செவ்வனே நடாத்தியும் வாழ்ந்து இருக்கின்றார்கள்.

ஊருக்கு ஒதுக்குப்புறங்களில், நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் பத்து அடி நீளத்திற்கு கபுறு அமைத்து, பச்சைப் போர்வை போர்த்தி, பலவித பேர்கள் வைத்துப் போலி அவ்லியாக்களை உற்பத்தி செய்துவரும் கொடுமையைப் பார்க்கிறோம். பலஹீனமான மாதர்களும், தவ்ஹீதை மறந்து அங்குசென்று பல அனுச்சாரமான விஷயங்களில் ஈடுபடும் கொடுமை ஒழிய வேண்டும்.

உள்ளங்களால் உவந்து இயற்றுகின்ற நம் அப்பா அவர்களின் இக்கோவை எல்லோரின் இல்லங்களிலும், நூலகங்களிலும் இலங்க வேண்டும் என்பது நம் அவா. நன்னெறியில் நடாத்திச் செல்கின்ற நாயன் இந்த நன்னெறிப் பதிப்பகத்தாருக்கும், பதிப்பாசிரியர் முஹம்மது பாரூக் சாஹிப் அவர்களுக்கும் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கிய பேரறிஞர்களுக்கும், இதைப் படித்து இன்புறும் பெருமக்கள் அனைவருக்கும் நல்லருள் நல்குவானாக! அப்பா அவர்களின் நல்லாசியும் கிடைத்திடற்கு இறைவனை இறைஞ்சுகின்றேன்.

பாளையங்கோட்டை — *த. இ. செ. பத்ஹூர் ரப்பானி*

உயர் நீதிமன்ற நீதிபதி

மாண்புமிகு

**ஜஸ்டிஸ் எம்.எம். இஸ்மாயீல்** எம். ஏ., பி. எல்.

அவர்கள் வழங்கிய

# வாழ்த்துரை

திருநெல்வேலி ஜில்லா தென்காசியில் பிறந்து அப்போது திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் இருந்து இப்போது கன்னியாகுமரி ஜில்லாவிலிருக்கிற தக்கலையில் அடக்கமாகியிருக்கிற, பீர்முகம்மது ஒலியுல்லாஹ் என்றும் மரியாதையுடன் கூறிப் போற்றப்படுகிற, மெய்ஞ்ஞானி அவர்கள், கிட்டத்தட்ட பதினெண்ணாயிரம் பாடல்களைத் தந்துள்ளார்கள். என்ருலும் அவர்கள் ஒரு ஞானி என்ற முறையிலே அவர்களிடம் மக்கள் ஒரு விதமான பக்தியை வைத்திருக்கிருர்களே தவிர அவர்களுடைய ஞானப்பாடல்கள் அனைத்தையும் தமிழ் முஸ்லீம்களில் கூட எல்லோரும் நன்ருக அறிந்திருந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. அவற்றை ஆழ்ந்து படித்த முஸ்லீம்களிடேயும் கூட அவர்களால் ஆக்கப்பட்டவை என்று, இன்று கருதப்படுகிற சில நூல்கள் உண்மையில் அவர்களால் ஆக்கப்பட்டவைதாமா என்பது பற்றிக் கருத்து வேற்றுமையிருக்கிறது. அதுவுமல்லாமல் அவர்கள் ஆக்கியவை என்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிற நூல்களும் ஆழ்ந்த அகப்பொருள் பொதிந்தவையாக அமைந்திருக்கின்றன. தமிழ்நாட்டுச் சித்தர்

களுடைய பரிபாஷைகளும் சூபிகளுடைய பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்ட அறபு, பார்சிச் சொற்களும் ஒன்றோடொன்று இணைந்து இந்த நூல்களில் காணப்படுவதால் அவற்றிற்குப் பொருள் காண்பதிலும் சிறிது சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. பீர்முகம்மது அப்பா அவர்களுடைய நூல்கள் அனைத்தையும் இஸ்லாமிய அடிப்படையிலே நோக்க விரும்புபவர்கள், இந்தச் சித்தர்களுடைய பரிபாசைகளுக்கு அவை மேலெழுந்தவாறு உணர்த்தும் பொருளல்லாமல் வேறு பொருளும் இருக்கிறது என்று கூறுகிறார்கள். வேறு சிலரோ இதை மறுக்கிறார்கள். அதற்கு ஆதாரமாகப் பதினெண் சித்தர்கள் பாடலென நிலவி வரும் பெரிய ஞானக்கோவையில் பீர்முகம்மது அவர்களுடைய ஞானரத்தினக்குறவஞ்சி இடம் பெற்றிருப்பதை எடுத்துக் காட்டுகிறார்கள்.

மேற்கூறியவை அனைத்தும் ஒன்றை நமக்கு உணர்த்துகின்றன. பீர்முகம்மது அப்பா அவர்களுடைய படைப்புகள் பற்றிய ஆதார பூர்வமான ஆராய்ச்சி ஒன்று அவசியம் என்பது தான் அது. அவர்களுடைய வாழ்க்கை வரலாறு பற்றிக்கூட ஆதார பூர்வமாக எதுவும் தெரியவில்லை. கீழக்கரையில் வாழ்ந்த சதக்கத்துல்லா அப்பா அவர்களும், பீர்முகம்மது அப்பா அவர்களும் சமகாலத்தவர் என்ற ஒன்று மாத்திரம் தெரிகிறது. அதன் காரணமாகப் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் என்று கூறமுடியும்.

இந்த நிலையில் திருநெல்வேலி சதக்கத்துல்லா அப்பா கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் ஜனாப் கா. முகம்மது பாரூக் எம்,ஏ., அவர்கள் மெய்ஞ்ஞானி பீர்முகம்மது அப்பா ஆய்வுக் கோவை என்ற இந்நூலைப் பதிப்பித்திருப்பது வரவேற்கத் தக்கதே ஆகும். இந்த நூல் ஒரு கட்டுரைத் தொகுதி. இந்த நூலுக்குக் கட்டுரை தந்து உதவியவர்கள் முஸ்லிம்கள் மாத்திரமல்லர். முஸ்லீமல்லாத அறிஞர் பலரும் கட்டுரைகள் எழுதி உதவியிருக்கின்றனர். இஃது அப்பா அவர்களுடைய பாடல்கள் சாதி சமயங்களைக் கடந்த நிலையினைக் குறிப்பவை என்பதை ஓரளவு எடுத்துக்காட்டும். சாதி, சமய பேதமில்லாமல் எல்லாராலும் அப்பா என்று அவர்கள் அழைக்கப்

படுவது இதனை மேலும் வலியுறுத்தும். இந்நூலில் பீர் முகம்மது அப்பா அவர்களைப் பற்றியும், அவர்களுடைய படைப்புகள் பற்றியும் அமைந்த கட்டுரைகள் மட்டும் இடம் பெற்றிருக்கவில்லை; பொதுவாகத் தமிழிலக்கியம் பற்றியும் குறிப்பாக இஸ்லாமியத் தமிழிலக்கியம் பற்றியும், இஸ்லாத்தைப் பற்றியும், சூபியாக்களைப் பற்றியும் அமைந்த கட்டுரைகள் சிலவும் இடம் பெற்றிருக்கின்றன. கட்டுரைகள் அனைத்தும் ஈடுபாட்டுடன் எழுதப்பட்டிருப்பது தெளிவாகிறது. குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களைப் பற்றியும் குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களுடைய படைப்புகளைப் பீர்முகம்மது அப்பா அவர்களுடைய படைப்புகளோடு ஒப்பிட்டுக் காண்பதாயும் கட்டுரைகள் அமைந்திருக்கின்றன. இவையனைத்தும் படிப்போரனைவருக்கும் நல்லதொரு தமிழ் விருந்தாகவும், அறிவு விருந்தாகவும் அமைந்திருக்கின்றன என்று தயக்கமின்றிக் கூறலாம். எனவே இந்த முயற்சியை வாழ்த்தி வரவேற்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். என்றாலும் தேவை என்று முன்னர் எடுத்துக்காட்டப்பட்ட ஆராய்ச்சி என்று இதனைச் சொல்லிவிட முடியாது. இந்த ஆராய்ச்சி பீர்முகம்மது அப்பா பற்றியும் அவர்களுடைய படைப்புகள் பற்றியும் ஆன கருத்துக்களைச் சீர்படுத்துவதற்கும் செம்மைப் படுத்துவதற்கும் அவசியமாகும். அத்தகையதோர் ஆராய்ச்சிக்கு இந்தத் தொகுப்பு ஒரு தூண்டுகோலாய் அமையும் என்று நம்புகிறேன்.

**மு. மு. இஸ்மாயீல்**

கோழிக்கோடு பல்கலைக் கழகத் துணைவேந்தர்

**டாக்டர் ஹாஜி என். ஏ. நூர் முகம்மது**

எம். ஏ., எல் எல். எம்., ஜே. எஸ். டி. (எயில்)

அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

"மெய்ஞ்ஞானி பீர்முஹம்மது அப்பா இலக்கிய ஆய்வுக் கோவை" என்ற அரிய நூல் வெளிவருவதைக்கண்டு பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஞான மேதை பீர்முகம்மது ஒலியுல்லா அவர்களைத் தமிழுலகம் நன்கறியும். அவர்களை 'அப்பா' என்று உள்ளன்புடனே அழைப்பதிலே பொதுமக்கள் பெருமிதம் கொள்கின்றனர். தக்கலையிலிருக்கும் அவர்களது சமாதிக்கு ஞாயிறு, வியாழன் இரவுகளில் ஜாதி மத பேதமின்றி நூற்றுக்கணக்கானவர்கள், அவர்கள் ஆசி பெறவருகின்றனர். ரஜப் மாதத்தில் கொண்டாடப்படும் அப்பாவின் ஆண்டு நிறைவு விழாவில் பங்குபெறத் தமிழ்நாடு, கேரளம் முதலிய பிரதேசங்களிலிருந்து வந்து குவியும் மக்கள் பிரவாகத்திற்குக் கணக்கே இல்லை. அப்பா அவர்கள் அருளிய ஞானப்புகழ்ச்சியின் இனிய கீதம் தமிழ் முஸ்லிம்களின் இல்லங்கள்தோறும் ஒலிப்பதையும் கேட்கலாம். இவையனைத்தும் அப்பா அவர்கள்பால் தமிழ் மக்கள் கொண்டுள்ள நன்மதிப்பையும், அன்பையும் பிரதி பலிக்கும்.

பெருமைக்குரிய இப்பெரியார் 17-ம் நூற்றுண்டில் திருநெல்வேலி மாவட்டத் தென்காசியில் பிறந்தார்கள் என்றும், கேரளத்து பீர்மேட்டு வனங்களிலே பல்லாண்டு தவமிருந்தார்கள் என்றும், பின்னர் குமரி மாவட்டச் சிறுக் கடை, தக்கலை முதலிய இடங்களிலே வாழ்ந்தார்கள் என்றும் அறிகிறோம். இவற்றோடுகூட, நீண்ட அவர்கள் வாழ்வில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகளைப்பற்றிய கதைகளையும் கேட்கிறோம். ஆனால் ஆதாரபூர்வமான அவர்களது வாழ்க்கை வரலாறு இதுகாறும் வராதது குறித்து வருந்தாமலிருக்க முடியாது. இஸ்லாமிய ஆராய்ச்சிகளில் ஆர்வமுள்ள அறிஞர்கள் இதில் அதிகம் ஈடுபடுவார்கள் என்று தமிழுலகம் எதிர்பார்க்கிறது.

அப்பா அவர்களது வாழ்க்கை வரலாறு பூர்ணமாகக் கிடைக்காவிட்டாலும், அவர்கள் தந்துதவிய ஞான உபதேசத்தை அவர்கள் இயற்றிய பதினெண்ணாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் எடுத்துக் கூறுகின்றன.

அவர்களது நூல்கள் அனைத்தும் இஸ்லாமிய நெறி தழுவிய மெய்ஞ்ஞானச் சார்புடையவை. அவர்கள் பாடல்களிலே திருக்குர்ஆன் கருத்துக்களும்கருணை நபி முஹம்மது முஸ்தபா ரசூல் (ஸல்) அவர்கள் கனிவாய் மொழிந்தருளிய அமிர்த மொழிகளும் மிளிரக் காணலாம்.

அப்பா அவர்கள் ஷரகு அல்லது மெய்ப்பொருள் அறிவு நிலை எனப்படும் மெய்ஞ்ஞான நிலை எய்தி உள்ளொளி பெற்றவர்கள்.

ஷரகு நான்கு வழி என்பர். இதனை அப்பா அவர்கள்,

“ஆதியை அறியவேண்டில் அழகிய நிலமை நாலாம்
ஓதிய ஷரீஅத்தென்றும் உவந்திடு தரீக்கத்தென்றும்
நீதி சேர் ஹக்கீகத்தென்றும் நெறியுள்ள மஃரிபத்தால்
ஆதியைக் காணலாமென் றகுமதர் அருளிச்செய்தார்”

என்ற ஞானமணிமாலைப் பாடலில் குறிப்பிட்டு, முஹம்மது நபி (ஸல்) அவர்களே இந்நான்கு வழிகளையும் போதித்தார்கள் என்றும் கூறுகிறார்கள்.

இந்நான்கு வழிகளிலும் மஃரிபா வழி உள் வணக்க வழி. இவ்வழிச்சென்ற செம்மல்கள் சூஃபியாக்கள் என்று கூறப்படுகிறார்கள்.

சூஃபியாக்களிடையே காதிரியா, ஷாதலியா முதலிய பல தரீக்காக்கள் உள்ளன. இவற்றுள்ளே தொன்மை வாய்ந்ததும் அப்துல் காதிர் ஜீலானி (1077—1166) அவர்களால் நிறுவப்பட்டதுமான காதிரியா . தரீக்காவைச் சார்ந்தவர்கள் அப்பா அவர்கள்.

இறை பக்தியும், இறைஞானமும் பெறுவதுதான் சூஃபி தத்துவத்தின் முக்கிய அம்சங்கள்.

ஹாத்திமல் அசம் என்ற சூஃபி இடத்தில் இறை பக்தியின் அடிப்படைத் தத்துவங்கள் என்ன என்று ஒருவர் வினவினர். அதற்கு அவர்கள் "இறைவன் எனக்கருளிய அன்றாட இரணத்தை எவராலும் எனை ஏய்த்து எடுக்க இயலாது என்றறிந்து மனச்சாந்தியடைகிறேன். என் கடனை எனையன்றி வேறெவரும் ஆற்றார் என்றுணர்ந்து என் கடனாற்ற எக்கணமும் முனைந்திருக்கிறேன். மரணம் எனைத் தேடி நொடிப்பொழுதில் வரும் என நினைந்து மரணத்தை எதிர்நோக்கி விரைந்துகொண்டிருக்கிறேன். நான் எவண் இருப்பினும் இறைவன் கண் என்மீதிருக்கும் என்றெண்ணி ஒழுக்கத்தையே பழக்கமாக்கி இருக்கிறேன்" என்று பதில் கூறினார்கள். இதுதான் சூஃபிஸத்தில் பரிணமிக்கும் இறை பக்தி.

இறை ஞானம் பெறுவதற்கு தலப் (yearning) ; இஷ்க் (Love) மஅரிபத் (Enlightenment) ; இஸ்திராக் (Absorption) தௌஹீத் (unity consciousness) ஹைராத் (Amazement) பகூர் வஃபனு (Annihilation of ego) என்று ஏழு படித்தரங்கள் (stages) உண்டென்று சூஃபி ஞானமேதை அத்தார் விவரிக்கிறார்.

இத்தத்துவங்கள் அனைத்தையும் தொகுத்து அப்பா அவர்கள் "தனைத்தேறும் காயம் சுழலு மெண்ணுவினை தான் தொலைத்தல்" என்று வழி வகுத்து, "நினைப்போரை மேவி நினையாரை நீக்கி நிரம்பி நிற்பான்" என்ற வாழ்க்கை லட்சிய முக்தியையும் கோடிட்டுக் காட்டுகின்றார்கள். இது போன்ற தத்துவ விளக்கங்கள் அப்பாடல்களில் எங்கணும் மிளர்ந்து கிடப்பதைக் காணலாம்.

இப்பாடல்களின் கருவூலக் கருத்துக்களை அறிந்தவர்கள் சிலர்; அறிய ஆசைப்படுபவர்கள் பலர். அவர்கள் அனைவருக்கும் பயன்பட வேண்டி இந்நூலில் பதிப்பாசிரியர் அரிய பல ஆய்வுக் கட்டுரைகளைக் கோர்த்துத் தமிழ் மக்களுக்கு ஆர்வமுடன் வழங்கி இருக்கிறார்கள்.

இவ்வாய்வுக் கோவையில் பேராசிரியர் கா. அப்துல்கபூர் அவர்கள் இஸ்லாத்தின் மூல தத்துவங்களைப் பற்றியும், பாரதப் பண்பாட்டு வளர்ச்சியில் இஸ்லாமிய இலக்கியத்தின் பங்கு பற்றியும், அழகான கட்டுரைகள் எழுதி இருக்கிறார்கள். அது போலப் பதிப்பாசிரியர் பேராசிரியர் கா. முகம்மதுபாருக் அவர்கள் "பீர்முகம்மது சாகிப் வலியுல்லா அவர்களின் நூற்பரப்பும் அவை தரும் செய்தியும்" என்ற தலைப்பில் அப்பா அவர்களின் நூல்களைப் பற்றி ஒரு சுருக்கமான தொகுப்புரை வழங்கி யிருக்கிறார்கள். இவற்றினைத் தொடர்ந்து பல அறிஞர்கள் அப்பா அவர்களின் ஞானப்புகழ்ச்சி, ஞானப்பூட்டு, ஞான மணிமாலை, ஞானக்குறம், ஞான ரத்தினக் குறவஞ்சி, ஞான ஆனந்தக்களிப்பு, திருமெய்ஞ்ஞானசர நூல், பிஸ்மில்குறம் முதலிய நூல்களின் ஆய்வு உரைகளையும், தனிப்பாடல்களின் ஆய்வு உரைகளையும் எழுதியிருக்கிறார்கள்.

இவ்வரிய நூலைப்படித்து மக்கள் மிகப் பயன் பெறுவார்கள் என்று பெரிதும் நம்புகிறேன்.

---

நாகர்கோவில், தெ. தி. இந்துக்கல்லூரித் துணைமுதல்வரும்,
முதுகலைத் தமிழ்த்துறைப் பேராசிரியருமான

## டாக்டர் சி. சுப்பிரமணியன்

எம். ஏ., பி. ஓ. எல்., பிஎச். டி.
அவர்கள் வழங்கிய

# மதிப்புரை

"மெய்ஞ்ஞானி பீர் முகம்மது அப்பா இலக்கிய ஆய்வுக் கோவை" எனும் நூல் பல பேரறிஞர்களுடைய ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டு, பேராசிரியர் திரு. கா. முகம்மது பாரூக், எம். ஏ. அவர்களது அருமுயற்சியால் பதிப்பிக்கப் பெற்றுத் தமிழுலகுக்கு வருகின்றது. குற்றால மலையருகே தென்காசியில் பிறந்து, யானைமலை யருகே பீர்மேட்டில் ஐம்பொறி துறந்து, அறிவொளி சிறந்து, மெய்யுணர்ந்து, தற்கலை வளர, வேளிர் மலையருகே தக்கலையில் உடல் துறந்து ஒளி சிறக்க, உருமறைந்த தவச்சித்தர் பீர் முகம்மது அப்பா அவர்களைப் பற்றிய ஆய்வுக் கட்டுரைகள், தக்கலையின் பக்க மாக விளங்கும் திருவிதாங்கோட்டில் பிறந்து, வளர்ந்து, பேரறிவு பெற்ற, நாள்தோறும் அப்பா அவர்களது வாழ்வை, நூலை, மெய்யுணர்வை அறிந்துணரும் வாய்ப்புடைய பேராசிரியர் திரு. முகம்மது பாரூக், எம். ஏ. அவர்களால் பதிப்பிக்கப் பெறுவது சாலப் பொருத்தமுடைத்தாகும்.

சிறப்பாக மெய்யறிஞர் பீரப்பா அவர்கள் படைப்புக் கருவூலங்களிலுள்ள "சூஃபிக் கொள்கை"யினைப் பற்றிப் பேரறிஞர் (டாக்டர்) பட்டத்திற்காக மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வு செய்யும் அருவினைஞரும், மெய்ஞ்ஞானி பீர் முகம்மது அப்பா அவர்களை உண்மையறிந்து தவஞானி யென உலகுக்கறிவித்த மெய்ஞ்ஞானி, தவமேதை சதக்கத்துல்லா அப்பா அவர்கள் பெயரிலமைந்த கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரிபவருமாகிய திரு. முகம்மது பாரூக் அவர்களே தமிழுலகுக்குப் பீரப்பா அவர்களது ஞான நெறியினை உணர்த்த வல்லவராதலால், இத்தகைய கட்டுரை களைப் பதிப்பித்து வெளியிடத்தக்காரால் வெளி வருவது பாராட்டற் குரியது.

பெரும் பகுதிக் கட்டுரைகள் பீரப்பா அவர்களையும், அவர்களது ஞான நூற்களையும், ஒருசில கட்டுரைகள் சதக்கத்துல்லா அப்பா, குணங்குடியார் முதலியோரையும், ஒரு சில இசுலாமியக் கொள்கைகளையும், இசுலாமிய இந்தியா, இசுலாமியத் தமிழ் உறவுகளையும், பழந்தமிழ் உலகத் தொடர்பினையும் ஆய்ந்து விளக்கிச் செல்கின்றன.

நல்ல தமிழ்ப் பேச்சாளரும், எழுத்தாளரும், ஞானிகளும், சித்தர்களும், புலவர்களும், தமிழ் ஆர்வலரும் இசுலாமியர் பலர் இருந்தனர்; இருக்கின்றனர். அவர்கள் தமிழ் மொழிக்களித்த அறிவுக் கருவூலங்கள் பலவிருந்தும் அச்சாக்கி வெளிப்படுத்தும் அரும்பாடிலாமையால் ஒரு சிறிது மறைவாகப் புலப்படுகின்ற ஆன்றோர் அருந்தொண்டினை வெளிப்படுத்தித் தமிழுலகுக்கறிவிப்பது இவ்வாய்வுக் கோவையாகும்.

ஆதம் (அலை) முதலாக நபிகள் நாயகம் (ஸல்) ஈருகவுள்ள இறை தூதர்களாகிய நபிமார்கள் பற்றிய வரலாற்றுக்குறிப்புக்களையும், திருக்குர்ஆனின் கருத்துக் கருவூலங்களையும், தொழுகை, நோன்பு, கடமை, தனி மனிதன், மாதர், வீடு, நாடு, ஒன்றுபாட்டுணர்ச்சி முதலாகிய இசுலாமியக் கொள்கைகளையும் இந்நூற் கட்டுரைகள் தெளியக் காட்டும்.

அராபிய, பாரசீகக் கொள்கைகள், கருத்துரைகள், அறிவியல், மருத்துவம், இலக்கியம், மொழி, ஆட்சிமுறை, பண்பாடு முதலியன எவ்வளவில், எந்நிலையில் இந்தியாவைச், சிறப்பாகத் தமிழ், மலையாளத்தை அடைந்துள்ளன, ஆக்கியுள்ளன என்பனவற்றைச் சில கட்டுரைகள் காட்டுகின்றன.

பழைமை தொட்டே அராபியர் வாணிபம் சேர, சோழ, பாண்டிய நாடுகளில் எவ்வாறு தொடர்புற்றிருந்தது; இசுலாமியம் தமிழகத்தில், இன்றைய கேரளத்தில் எவ்வாறு வித்திட்டு வேரூன்றியது; சேரமான் பெருமாள் நாயனாராகிய சேர மன்னர், சிவனடியார்க்கும் அராபியர்க்கும் அல்லது இசுலாத்துக்கும் உள்ள தொடர்பு ஆகிய இன்னோரன்னவற்றைச் சில கட்டுரைகள் சீர்பெற எடுத்தியம்புகின்றன.

சில, அரபு, பாரசீக இலக்கியங்களையும், ஞானிகளையும், புலவர்களையும் பேசுகின்றன. சில இசுலாமியப் புலவர்கள் செய்த தமிழ்த் தொண்டினை அளவிட்டு அகலம், ஆழம் காண

முடியாதபடி அமைகின்றன. சில தமிழ்ச் சித்த மருத்துவத் திற்கும், யுனானி மருத்துவத்திற்குமுள்ள தொடர்பினைப் பேசுகின்றன. சில தமிழ்ச் சித்தர்களுக்கும் இசுலாமியச் சித்தர் களுக்குமுள்ள இயைபினைப் புலப்படுத்துகின்றன. சில ஆலிப் புலவர், சேகனுப் புலவர், உமறுப் புலவர், குஞ்சுமூசுப் புலவர், சதகத்துல்லா அப்பா, குணங்குடியார் போன்ற இசுலாமியத் தமிழ்ப் புலவர்களை, ஞானியார்களைக் கருத்துக் குவியக் கட்டுரைக்கின்றன.

சிறப்பாக இந்நூல் பெரும்பகுதி தவச்சித்தர் பீர்முகம்மது அப்பா அவர்கள் படைப்புக்களை வகை செய்து விளக்கி, வரலாறும் தந்து அவர்களது ஞானப் பூட்டைத் திறந்து, ஞானப் புகழ்ச்சியால் இறைவனைப் புகழ்ந்து, ஞானமணிமாலையால் இறைவனை அணி செய்து, ஞான ஆனந்தக்களிப்பால் ஞானம் பெற்றோர் ஆனந்தக் களிப்படையச் செய்து, ஞான நடனத் தால் நம்மை மெய்யறிவடைந்து இறைமுன் நடனம் செய்ய வைக்கின்றது.

பீரப்பா அவர்களின் ஞானப் பாடல் பலவற்றை விளக்கி, ஆழ்ந்த மெய்யறிவைத் தவநுட்பத்தை இறையொடு கலக்கு மின்பத்தை, எளிய வாழ்வைத் துறவொடு நிற்கும் துணிவை சூஃபிக் கொள்கைகளைப் பட்டினத்தார், வள்ளலார், சித்தர் முதலாரோடு ஒப்பிட்டுக் காட்டும் கருத்துணர்வைப் பாடற் போக்கை, ஓசையுயர்வோடு உள்ளாழ்ந்த பொருட்பாட்டை, உவமைகளை, மெய்யறிவோரிடம் காணும் உலகத்துவத்தை, ஒளிபடக் காட்டி உரையாக மிளிர்கின்றன, பல கட்டுரைகள்.

ஆக இக்கட்டுரைக் கோவையினைக் கற்பார், பீரப்பா அவர் களின் நூலாழத்தில், மெய்யறிவில் மூழ்கி மகிழ்வார் என்பது உறுதி யாதலால் இது போன்ற ஆய்வுக் கோவை எண்ணிறந்தன தோன்றுவதற்குக் கற்பாரார்வமே கதிரும், மழையும், காற்றுமாக உதவுவதாகுக.

நாகர்கோவில் — *சி. சுப்பிரமணியன்*

# பீரப்பாமாலை

ஞானத்தின் தனிப்பிழிவே! நாள்மலரின் நறுமணமே!
வானத்தின் ஒளியனைத்தும் வையத்துட் பாய்ச்சுகின்ற
கானத்தின் நறும்பொழிலே! கவின்செறியும் கனிச்சுவையே!
மோனத்தின் பேரொளியே! முகம்மிலொளி என்பீரே!

— இறையருட் கவிமணி, பேராசிரியர் கா. அப்துல்கபூர், எம்.ஏ.

ஓரப்பார் ஞானியெல்லாம் ஓதுகின்ற தக்கலை
பீரப்பா மெய்ஞ்ஞானப் பெட்டகத்தைப் — பாரில்
திறந்தறிந்தால் யாரும் தெரிந்திடுவார் ஞானம்
பிறந்தவிடம் தன்னைப் பெரிது.

— பணைக்குளம் மு. அப்துல்மஜீது

வானம் வரும்ஒரு வார்த்தையில்; சொர்க்க வனிதையரின்
கானம் வரும்நற் கவிதையின் சந்தத்தில்; கற்றவர்க்கு
மானம் வரும்தமிழ் மாமொழி யில்,திரு மக்கநகர்
ஞானம் வரும்புகழ்ப் பீரப்பா வாக்கு நயத்தினிலே.

— கவிக்கோ, பேராசிரியர் எஸ். அப்துர்ரகுமான், எம். ஏ.

கற்கின்ற தோறுமுயர் ஞானம் நல்கும்
கவினொளியைப் பெய்கின்ற கொடையதாக
அற்புதமாய் அமைந்ததெனும் நூல்கள் தந்து
அளப்பரிய கீர்த்தியினைக் கொண்ட தோடு
நற்பயிராம் 'தீன்' ஓங்கச் செய்த அந்த
நற்பெரியார் பீரப்பா ஞான நூல்கள்
பொற்புடனே உலகமுள்ள நாட்கள் மட்டும்
பொலியுமெனில் பிழையாமோ! பொலிக மாதோ!

— மௌலவி, பாஜில், ஆலிம்கவிஞர்
அல்ஹாஜ், ஜி. எம். எஸ். ஸிராஜ் பாக்கவி

எண்ணில்புது எழிலோவியம் எழும்பச்செய்யும் அப்பா
வண்ணத்தமிழ்க் கவிமேவிடின் வாழ்வின்வழி தப்பா
கண்ணில்உறை கருத்தில்உறை கவிமாமணி அன்னார்
விண்ணில்உறை பொருள்பேசிடும் வேதக்கலை மன்னர்.

— திருவை. கா. முகம்மதுபாரூக்

[ நன்னெறிப் பதிப்பகத்தின் சார்பில் விரைவில் வெளிவர விருக்கும் *'பீரப்பா மாலை'* யிலிருந்து ஒரு பகுதி ]

# மெய்ஞ்ஞானி பீர்முகம்மது அப்பாவின் நூல்கள்

1. ஞானப்பால்
2. ஞானப்பூட்டு
3. ஞானப் புகழ்ச்சி
4. ஞானமணிமாலை
5. ஞானக்குறம்
6 ஞான ரத்தினக் குறவஞ்சி
7 ஞான ஆனந்தக் களிப்பு
8. திருமெய்ஞ்ஞானச் சரநூல்
9. ஞான நடனம்
10. ஞான முச்சுடர்ப் பதிகங்கள்
11. ஞான விகட சமர்த்து
12. மஃரிபத்து மாலை
13. மெய்ஞ்ஞான அமிர்தக்கலை
14. மிகுராசு வளம்
15. ஈடேற்றமாலை
16 பிசுமில் குறம்
17. திருநெறி நீதம்

இவை தவிர அப்பா அவர்களின் நூல்கள் என மேலும் அறியப் படுவன:

ஞானத்திறவுகோல்
ஞான சித்தி
ஞான உலக உருளை
ஞானக்கண்
ஞானமலைவளம்
மெய்ஞ்ஞானக் களஞ்சியம்
ரோசுமீசாக்குமாலை முதலியன.

# இலக்கியம் என்றால் என்ன?

டாக்டர் தா. வே. வீராசாமி எம்.ஏ.,பிஎச்.டி.,
இணைப் பேராசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-20

இலக்கியம் என்றால் என்ன? என்ற கேள்வியைக் கேட்பது மிக எளிது. ஆனால் இக்கேள்விக்குரிய விடை காண்பது தான் அரிது. பல ஆண்டுகள் இலக்கியம் பற்றியே ஆராய்ச்சி செய்து இலக்கியக் கொள்கைகள் என்ற நூல் எழுதிய வாரனும் வெல்லக்குமே இத்தகைய விடையை நமக்கு அளிக்கின்றனர். 'இது தான் இலக்கியம்' என்று கூறிவிட்டு அதுபற்றிய உண்மையை ஆராய்தல் கூடாது எனச் சொல்வர் சிலர். இலக்கியத்தைப் பற்றிய கருத்துக்களை அறிந்து கொள்ள இத்தகைய போக்குகள் துணை புரியா.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சங்க இலக்கியம், பதினெண் கீழ்க்கணக்கு இலக்கியம், சமய இலக்கியம், சிற்றிலக்கியம், புதுமை இலக்கியம் என இலக்கியம் பற்றிப் பல பிரிவுகளைக் காண்கின்றோம். ஆனால் இன்று நாம் இலக்கியம் என்று எண்ணுகின்ற கருத்திற்குப் பெரிதும் ஒத்துப்போகின்ற நெறியில் 12-ஆம் நூற்றாண்டில் தோன்றிய பெரிய புராணத்தில் தான் 'இலக்கியம்' என்ற சொல்லைச் சேக்கிழார் கையாண்டுள்ளார். அதனால் அதுவரை தமிழில் இலக்கியமே இல்லை என்பதன்று பொருள். 'நூல்' என அவற்றை வழங்கி வந்தனர்.

மனிதனின் மனம் ஒய்ந்திருப்பதில்லை. தொடக்க கால வாழ்வில் உணவுக்கும் உறையுளுக்கும் போராடியபோது

அவனுடைய எண்ணங்கள் விரிந்து வளரவில்லை. உடை நெய்யக் கற்றபோது-நாரினையும் நூலினையும் பின்னிப் பின்னிப் புதுமை கண்டபோது-சொல்லையும் அத்தகைய நூற் பின்னலாக அமைக்க முயன்ருன். வாய்மொழி இலக்கியங்கள் வாய் நூலாக வடிவெடுத்தன. காட்டிலே உழும்போது வெற்றிக் களிப்பூட்டும் சொற்கள் வெளிவந்தன. சின்னஞ்சிறு தொழில்கள்-கொல்லுத் தொழிலாக, அச்சுத் தொழிலாக வளர்ந்தபோது அங்கங்கே தொழிலின் இசைமைக்கு ஏற்பக் களைப்பைப் போக்கச் சொல்லின் மலர்கள் வாய் மொழி இலக்கியமாக வார்த்தெடுக்கப் பெற்றன. இவையெல்லாம் காற்றிலே கலந்த கருத்துக்களாகவே மிதந்து போயின.

தான் பேசிய ஒலிகளை மறையாமல் பிடித்து வைக்க எழுத்துக் கலையைப் புதிதாக கண்டான் மனிதன். அது கல்லிலும், மரப் பட்டையிலும், பனை ஓலையிலும் எழுத்தாக உருவெடுக்கத் தொடங்கியது. அவ்வெழுத்திற்கு மந்திர ஆற்றல் இருக்கும் என அஞ்சிய மனித உள்ளங்கள் தாம் எத்தனை! மந்திர ஆற்றல் வாய்ந்த எழுத்தில் அமைந்த பாடல்கள் எதுவும் செய்யும் என அஞ்சிய காலமும் உண்டு. ஏட்டில் எழுதினல் எண்ணிய எண்ணங்களின் ஆற்றல் குறையுமென்று 'எழுதா மறை'யாகவே போற்றிய காலமும் உண்டு. எனினும் எண்ணிய எண்ணங்களுக்கு மொழிவடிவம் தரும்போது பிழையற்ற நிலையில் பொலிய வேண்டும் எனப் பெரிதும் வேண்டினர். அதில் பிழை இருந்தால் தள்ளவும் தயங்கவில்லை. தனிப்பட்ட மனிதனின் பிழையற்ற மொழிச்செல்வத்தைப் பலரும் ஏற்றுக்கொள்வாராயின் அது சமுதாயத்தின் மதிப்பைப் பெற்றது. அம்மதிப்பின் ஒளி பெருகப் பெருக மக்களிடையே அப்படைப்புகள் நீண்ட நாள் மறவாமல் உயிர் வாழத் தொடங்கின. இவற்றை இலக்கியமாக மேற்கொள்ளலாயினர் என ஒருவாறு கூறலாம்.

பண்டைய நூல்களைப் பார்க்கும்போது, எல்லாம் செய்யுள் வடிவிலே காணப் பெறுகின்றன. அப்படியானல் செய்யுள் வடிவிலே அமைந்துள்ளவை எல்லாம் இலக்கியம் என்ற தவருன முடிவிற்கும் செல்லக்கூடும். ஏனெனில் அன்று மாட்டு வைத்தியம், சோதிடம், பல்லி விழுந்த பலன் போன்றவற்றிற்கும் செய்யுளே உற்ற துணையாக வடிவம் நல்கிற்று. செய்யுள் வடிவமே இலக்கியமாகும் என்ற கருத்தை நம்பினல் இவற்றையும் இவைபோல்வனவற்றையும் இலக்கியமாகக் கருதும் நிலை ஏற்பட்டு விடும். ஆயினும் அன்று செய்யுள் வடிவம் இலக்கியம் அமைந்ததற்கு அடிப்படைக் காரணங்கள் இல்லாமல் இல்லை. மொழியின் வடிவம் வளர்ந்து வரும் நிலையில் இருந்தது ஒரு காரணம். சொற் சுருக்கமும் செறிவும் ஆற்றலைப் பெருக்கும் என்ற நம்பிக்கையும் ஒரு வகையில் துணைபோகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியப் பாக்களே முன்னர்க் கிடைத்த செல்வம். அவற்றில் தனி மனித உணர்வுகள் இயற்கைப் பின்புலத்தில் நன்கு வெளிப்படுகின்றன. 'காதல்' 'வீரம்' என்ற இருவகை நிலையில் உணர்வு ஆகிய இரண்டும் புதுப்புது வடிவம் தாங்கிக் காதலரின் ஆற்றாமையாகவும் இன்ப மாகவும் வெளிப்பட்டுள்ளன. தன் நன்மைக்காகவும் பிறர் நன்மைக்காகவும் பொங்கி எழும் சீற்றமாகப் புறப்பாடல் நிலையில் பூத்துள்ளன. வாழ்க்கை மோதல்களில் இன்பம் துன்பம் இவை யிரண்டுமாக அலைவீச அவைகளில் என்ன குறிக்கோள் இருக்க முடியும் என்று எண்ணிய எண்ணத்தின் விளைவாகக் குறிக்கோள் பொதிந்த கதைகள் சிலம்பாகவும் மேகலையாகவும் ஒலித்தன. அற உணர்வுகள் எழுந்தன. நாலடி நான்மணிக்கடிகை போன்ற அறநூல்கள் இலக்கியமாக எழுந்தன. உணர்வும் அறிவும் அறமாக மாறிய நிலை இது.

அறத்தைக் கூறும்போதும் அதனிடையே அழகுப் பின்னணி யாகக் கதையும் வரலாறும் பேரளவில் பிணையும்போது புராணங் கள் சிற்சில காப்பிய வடிவங்கள் தாங்கி வெளி வந்தன. அதில் வேகம் குறையக் குறையச் சிற்றிலக்கிய வடிவில் உலா, மடல், பிள்ளைத் தமிழ் போன்றவை எழுந்தன. அவ்வடிவச் சுருக்க இயக்கம் இன்றுவரை இயங்கிக் கொண்டே இருக்கிறது. அதன் தாக்கமாகப் 'புதிய ஆத்தி சூடி'யும் அதன் எதிரிடையாக உணர்ச்சி வெள்ளமானது கற்பனை வடிவில் தேங்கி நிற்கும் 'குயி'லாகவும் 'பாஞ்சாலி சபத'மாகவும் வெளி வந்துள்ளன. எள்ளல் நிலையில் சமுதாய நிலையைச் சாரும் 'மருமக்கள் வழி மான்மிய'ங்கள் பழைய வடிவில் புதிய வகைக்குத் திரும்பும் போக்கை வெளிப்படுத்துவன. பாரதிதாசனின் பாடல்களும் உரைநடைப் படைப்புகளும் புதுமைப் போக்கிற்கும் வேகத்திற்கும் தக்க சான்றுகளாம். இக்கவிதை நெறியினைவிட உரைநடை இந்த நூற்றாண்டில் ஆல்போல் சிறு கதை, நாவல், நாடகம், கட்டுரை என்ற வடிவில் படர்ந்துள்ளது. இங்ஙனம் வடிவத்தால் புதுப்புது வளர்ச்சி பெற்றுப் புதுமைக் கோலம் கொள்வது இலக்கி யத்தின் ஓரியல்பாக உள்ளது.

வேட்டையாடிய விலங்குகளின் வடிவத்தைத் தான் தங்கிய குகைகளின் சுவர்களில் ஓவியமாகத் தீட்டினான் அன்றைய மனிதன். பார்த்த பொருள்களை நினைவில் பதிய வைக்கக் கற்களைச் செதுக்கி வடிவமைத்தான். அதிலும்கூட இடை யிடையே தான் கண்ட பொருள்களைக் கண்ட வண்ணமே வடிக் காமல் ஓரிரு மாற்றங்களைத் தன் உள்ள மகிழ்ச்சிக்கு ஏற்ப மாற்றி

ஞன். தன் 'உள்ளம் கவர்' பொருள்களின் புதுமையையும், கவர்ச்சியையும், கூட்டுவதற்கு ஏற்பத் தன் மனச்சிறகை விரித்துக் கண்காணு உலகில் பறக்கவிட்டு அங்குக் கண்ட மனக் கோலத்தைக் கற்பனையாகப் படைத்தான். அதில் இயற்கையில் பொருந்தாத சொற்களைப் பொருத்திப் பொருத்திப் புதுப் பொருளை ஊட்டினுன். மாசுள்ள பொன்னுகை உலகிடைக் காண்பதை 'மாசறு பொன்'னுகக் காண்கிருன். கற்பனையில் பாற்கடலைப் படைத்து அக்கடலை மந்தரமலையை மத்தாக இட்டு வாசுகி என்ற பெரும் பாம்பைக் கயிருகப் பிணைத்துக் கலக்கிக் கடைந்து அமுதம் எடுத்ததாகப் புராணக் கதையை விளைத்தனர். ஆனல் கவிஞனின் கற்பனை அத்துடன் நில்லாமல் மேலும் வளர்ந்தது. தான் காணும் பொருளுக்குச் சிறப்புக் காண முன்னர்ப் பாற்கடலைக் கடைந்தெடுத்த அமுதத்திலும் குறை காணும் வண்ணம் கற்பனை வளர்ந்தது. அதனையே 'அலையிடைப் பிறவா அமுத'மாகக் கண்டது. இங்ஙனம் கற்பனையின் வட்டங்கள் ஒன்றைத் தொடர்ந்து மற்ருென்று என்ற முறையில் எண்ணற்ற கற்பனை வட்டங்களைப் படைப்பதன் வாயிலாகப் புதிய புதிய இலக்கியக் கோலங்களைத் தீட்ட முடிந்தது. வான்மீகி கண்ட அகலிகை கம்பனில் மாற்றம் பெறுகிருள். இருவரின் படைப்பில் காணும் வடிவம் புதுமைப்பித்தன், வெ. ப. சுப்ரமணிய முதலியார் ஆகியோர் படைப்பில் மேலும் மாறுகிருள். இன்றைய நிலையில் அகலிகை, 'கல்லிகை'யாக வடிவெடுத்துப் புதுக் கோலமே பூண்டுள்ளாள். இங்ஙனம் புதிய கற்பனைக்கு இடம்தரும் களமாக இலக்கியம் அமைந்துள்ளது.

மனிதனின் மொழியும் பண்பாடும் இடத்துக்கு இடம், காலத்திற்குக் காலம் மாறுபட்டுள்ளன. அவற்றுடன் ஒன்றியே மனிதனின் அறிவுப் படைப்பாம் இலக்கியமும் மாறுபட்ட நிலையில் நமக்குக் கிடைத்துள்ளது. சங்கப்பாக்களும் அவற்றின் கருத்து வடிவமும் இன்று நமக்கு ஒரு வகையில் தொலை நோக்கைத் தருவதாகவே உள்ளன. இன்று அவை நம் பயிற்சிக்குப் புதுமையாக உள்ளன என்பதில் ஐயமில்லை. சிலப்பதிகாரக் காப்பியத்தை இன்றைய எழுத்தாளர் எழுத முற்படின் உறுதியாகப் பல கதைகள் மாறுபட்ட வடிவமே கொள்ளும். கம்பர் தோன்றுவாராயின் எந்தக் கதையை எப்படி எழுதுவார் என்பதை இக்காலமே முடிவு செய்யும். பழைய நெறியிலேயே சென்றிருக்க மாட்டார் என்பது மட்டும் உறுதி. இந்நூற்ருண்டின் தொடக்கத்தில் பாரதி விளைவித்த புதுமைதாம் எத்தனை. எனவே இலக்கியம் என்பது மாறக் கூடியது. மாறுவதைத் தன் இயல்பாகவும் கொண்டு

உள்ளது. அத்தகைய மாற்றத்தை அது ஏற்காவிடில் தேங்கிய நிலையில் பின்தங்கி விடுகிறது. அத்துடன் வலிமையற்ற காரணத்தால் வாடிச் சோர்ந்தும் விடுகிறது.

கிரேக்க நாட்டுப் பெருமையைத் தொன்றுதொட்டு இன்று வரை பேசிப் புகழ்வதற்கு 'ஓடிசி', 'இலியடு' போன்ற காப்பியங்கள் உள்ளன. இங்கிலாந்து நாட்டுப் பெருமையை நிலைநாட்டுவதற்கென ஷேக்ஸ்பியர் போன்ற பெரும் கலைஞர்கள் உள்ளனர். இப்படி ஒவ்வொரு நாட்டையும் அதன் பெருமையை நிலை நாட்டும்வகையில் அழியாப் புகழ்தருவனவாகச் சில இலக்கியங்கள் விளங்குகின்றன. வள்ளுவரின் குறளும், கம்பரின் இராமாயணமும் நம் நாட்டார்க்கு என்றும் நிலைத்த புகழைப் பரப்புகின்றவைகளாகவே உள்ளன. எனவே இத்தகைய நூல்கள் நிலைத்துநின்று புகழ்பரப்புவனவாக அமைந்திருத்தலும் இலக்கியத்தின் இயல்பில் ஒன்றுகவிளங்குகிறது.

மனிதன் வாழ்ந்த காலம் பல நூற்றுண்டுகள் என்பர். அக்கால இடைவெளியில் இலக்கியம்பற்றி ஆழமாக எண்ணிப் பார்த்ததும் வகைபிரித்ததும் கொள்கை வகுத்ததும் எக்காலம் எனில் உறுதியாக நாம்வாழும் இக்காலம்தான் என்ற விடை கிடைக்கும். இலக்கியத்தை வரலாற்று அடிப்படையில் பார்க்க விரும்பியவரும் உள்ளனர். இலக்கியம் பற்றிய வரையறை செய்யவேண்டும் என்ற நிலை ஒன்றுண்டு. வரையறைக்குட்படாத நிலையில் முடிவுகள் வெளிப்படவேண்டும் என்பதும் உண்டு. இலக்கிய விளக்கம்பற்றிப் பகுத்தறிவுப் பார்வையில் நோக்குவதும் உண்டு. கவிதைக்கு எனத் தனிநடை, உரைநடைக்கு எனத் தனிநடை வேண்டுமெனப் பகுக்கின்றவரும் உள்ளனர். வகை பிரித்து ஒப்பீடுசெய்து பதிப்புக்கலை மிளிர ஆய்வதும் ஒரு பக்கம் வெளிப்படும். இவையெல்லாம் இலக்கிய அகத்திருந்து எழுகின்ற முயற்சியின் வெளிப்பாடுகள்.

வாழ்க்கையில் எத்தகைய கருவியை முதலில் மனிதன் பயன்படுத்திலுைம் அவற்றில் இன்பம் கிடைக்கிறதா எனப் பார்க்கின்முன். அந்த இன்பமும் குறைந்த காலத்தில் குறிப்பிட்ட இடத்தில் தோன்றிப் பின் மறைவதைக் கண்டு அதை நீடித்த, நிலைத்த இன்பமாகக்காண ஆசைப்படுகிறுன். அந்த இன்பத்தை ஒலியின் வாயிலாகக் காணப் பலவகையில் முயல்கிறுன். மெல்லின ஓசைகளை எழுப்பி இனிய சூழலை அழகு கொழிக்க அமைத்து 'வஞ்சமெனை, நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்' என்று கூறும் போது 'பண்பும் பயனும்' வடிவெடுத்து மெல்லென நடக்கும்

மெல்லோசையை 'மனக்காது' கொண்டு கேட்டுச் சுவைக்க முடிகிறது. உணர்வு மாறிய வலிய சூழலைக்காட்டிச் சினம் பெருக்கெடுக்கும்போது வல்லோசைகொண்டு தன் கருத்தைக் கவிஞன் வெளியிடுகின்றான். அப்போது வல்லோசையுடன் நெடிலோசையும் துணைபுரிவதுண்டு. 'ஆழநெடுந்திரை ஆறு கடந்திவர் போவாரோ?' என்ற தொடரைக் கூறும்போதே குகனின் சினம் கங்கையாறெனப் பெருக்கெடுத்தோடுவதைக் கண்முன் காண முடிகிறது. நெடிலோசைகள் மலைவீழ் அருவியாக நம் காதெங்கும் நிறைந்து கவிஞன் கருதிய உணர்வை நம் நெஞ்சகமெல்லாம் நிரப்புகின்றன. இவையெல்லாம் 'ஓசை தரும் இன்பம்' ஆகும். வேறுசில சமயங்களில் சொல்களை அழகிய பளிங்குக் கற்களைப் போல் அமைத்துப் பொருளுள்ள சொற்றொடர்க் கொடிகளைப் படர விடுவான். ஜார் மன்னன் வீழ்ந்ததைக் கூறும்போது 'இமயமலை வீழ்ந்தது' போல் வீழ்ந்தான் என்பான். இவ்வீழ்ச்சியிலும் ஒருவகை 'உணர்ச்சி அலை' வீசக்காண்கிறோம். இங்ஙனம் ஓசையும் சொல்லும்கொண்டு இலக்கியம் தான் நினைத்த உணர்வுப் பெருக்கைப் படிப்போரிடை நிரப்பி நிற்கிறது.

ஓசையும், தொடரும் வெறும் ஓசைக்காகவே அமையுமானால் பொருளற்ற புல்லோசையாக வற்றி வறண்டுவிடும். பொருளும் கலந்து அதன் போக்கைப் பெருமிதப்படுத்துமேயானால் படிப்போர் மனத்தில் அவ்விலக்கியம் தன்னைப் பசுமரத்தாணி போல் பதித்துக்கொள்வதிலிருந்து தவறாது நிலைநாட்டிக் கொள்ளும். எடுத்துக்கொண்ட பொருளுக்கேற்பத் தன் வன்மை மென்மைகளை வேர்விடச் செய்யும். சான்றாகக் 'கூளப்ப நாய்க்கன் காதல்' பற்றிய பொருளையும் தெளிவாகச் சீரிய கூரிய சொல்லாலும் ஓசை நயத்தாலும் தன்னிலை பெறச் செய்கிறார் அக்கவிஞர். ஆனால் பொருளின் விளைவு அதன்போக்கை விட்டுப் படிப்போரை விலகச் செய்கிறது. அல்லது அதன்போக்கிலே ஆழ்வோரை மனித வாழ்விலேயே வீழ்ச்சியுற்றுக் கருகும்படி செய்கிறது. ஆதலால் தக்க பொருளைக் கொண்டு விளங்குவதே இலக்கியமாகும் என அறிகிறோம்.

தக்க பொருள், தகாத பொருள் என்ற உணர்வு கொண்டவர் படைப்பவரா, அதைப் படிப்பவரா எனில் அப்படைப்பைத் தக்க படைப்பாக வெளிக்கொணரும் கவிஞன் மீதே பெரும் பொறுப்பு வீழ்கிறது. தீயன படைத்துப் படிப்போரையும் தீய நெறியில் செலுத்தி அவர்தம் வாழ்வையும் தீய்க்கின்ற 'நச்சு இலக்கியம்' மானிடப் பயிரிலே தோன்றும் களை! அவற்றைப் படைப்பதை யாரும் ஏற்க மாட்டார்கள். ஏற்பவர் 'நஞ்சுண்பர் நச்சிலக்கியம்

கொள்பவர்' எனப் புறக்கணிக்கத் தக்கவராகின்றனர். எனவே இலக்கியத்தின் களையை இலக்கியம் அன்று எனத் தள்ளுவதே தக்க செயலாகும். தக்க இலக்கியத்தின் தகுதிக்கு ஏற்ற குறியீடு எது என்பது இதனைத் தொடர்ந்து எழும் வினவாகும். மக்கள் நல்வாழ்வு வாழத்தக்க நெறிகளைக் காட்டும் குறிக்கோள்களை ஏற்ற இலக்கியமே நல்லிலக்கியமாகிறது. மனிதனை மனிதன் விரும்ப, வழிகாட்ட அது ஒளிகாட்ட வேண்டும் துன்பப்படும் மனிதனின் நிலையை உயர்த்தி இன்பநிலையத்திற்கு அழைத்துச் செல்லும் வழிகாட்டியாக அமையவேண்டும். தக்கது எது தகாதது எது எனத் தத்தளிக்கும்போது சிறந்த வழிக்குக் கொண்டு செல்லும் கூட்டாளியாக இருக்கவேண்டும். இதுவே இலக்கியத்தின் குறிக்கோளாக இருத்தல் நன்று.

இக்குறிக்கோளைச் சில நூல்கள் வெளிப்படையாகக் காட்டித் தாம் எப்பிரிவைச் சேர்ந்தவை என இனங்காட்டிக்கொள்ளும். அத்தகைய நூல்கள்தாம் இன்று உலகத்தில் பெருவாரியாக வழங்கி வருபவை; இலக்கியம் என நின்று நிலைப்பவை. கலை வடிவிற்கும் அழகுப் பின்னணிக்கும் 'தூய்மை'ப் பெருக்கிற்கும் முதலிடம்கொடுத்து மானிட நலத்தைச் சற்றே மறந்த நிலையில் இருப்பர்; குறிக்கோள் என்பதையும் நழுவவிடுவர். நன்மை செய்தலை வெளிப்படையாகக் கூறுவதே 'பச்சை இலக்கியவழு' வாகப் புறக்கணிப்பார். குறியேற்றமும், புகைமூட்டமும் பொதிந்த வெறுங்கலை யாரவாரத்தையே மதிப்பர். இத்தகைய நூல்கள் படிப்போர்களைச் சுற்றியொரு புகைத்திரையிடுமே ஒழியப் பயன் ஏதும் தராது. இதனால் நல்லிலக்கியம் என்பது மானிட நலம் நாடும் குறிக்கோளை அடையத் தெளிந்த இனிய நல்ல பாதையில் நடையிட்டுச் செல்வது எனலாம்.

இவ்வாறு இலக்கியம் என்பதற்கு ஒருவகையில் விடைகாண முடிகிறது. இது முடிந்த விடை அன்று. தொடரும் முயற்சிக்கு ஒரு விதை.

---

'தீன்'மொழியும் ஞானவழி தீந்தமிழில் யாத்துதவிப்
போந்தவலி பீர்முகம்மத் வாழ்கபுகழ் — சாந்திநெறி
ஒன்று முணர்வுநினை வொண்டமிழி லாதலினல்
நன்றிதமிழ் கூறு முலகு.

— மருதமுனை அல்ஹாஜ் ஆ. மு. ஷரிபுத்தீன்.

# இலக்கியத்தின் பணி

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன்,
எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.,

தமிழ்த்துணைப் பேராசிரியர்,
சென்னைப் பல்கலைக் கழகம்.

*முன்னுரை :* இலக்கியம் வாழ்க்கையின், சமூகத்தின் ஒரு விளக்கமேயாகும். இலக்கியம் சமூகத்திலிருந்து, சமூகத்திற்காக, சமூகத்தின் அங்கமாகிய தனி மனிதர்களால் படைக்கப்படுவது தான். நாட்டுக்கு நாடு மொழிகள் வேறுபட்டாலும், அவ்வம் மொழிகளில் படைக்கப்படும் இலக்கியங்கள், அந்த அந்த நாட்டவரின் வாழ்க்கையைச் சித்திரித்து, அவர்களின் வாழ்க்கைச் செம்மைக்கே பாடுபடுகிறது. அழகுணர்ச்சி மிகுந்த ஆசிரியன் ஒருவனது உள்ளத்தில் உணர்ச்சியாயும், கருத்தாயும் அரும்பி, அவன் அறிவில் வளர்ந்து, பலர் சுவைத்து மகிழ, வல்லதொரு மொழியுருவம் பெற்றுத் தோன்றுகிற இவ்விலக்கியம் ஆற்றும் பணிகளை இனி விரிவாகக் காண்போம்.

*இலக்கியத்தின் வளர்ச்சி :* மனிதன் புற-அக அனுபவங்களைக் கற்பனையின் துணையோடு, மொழிகளின் போர்வை போர்த்து, இலக்கியமாக்கினன். மனிதனின் சிந்தனை செம்மைப் பட்ட காலமே, இலக்கியத்தின் தோற்ற காலமாகும். அவ்வாறு அவன் படைத்த இலக்கியம் அவனுடைய பண்புகள், சமூக சமய நாகரிக நிலைகள், வாழ்க்கை ஆகியவற்றையொட்டி எழுந்தது. அவனுடைய வாழ்வும் பண்புகளும் அறிவாற்றல்களும் வளம் பெறப் பெற, அவனது இலக்கியமும் வளம் பெறலாயிற்று. பண்டை மனிதன் இயற்கை நிகழ்ச்சிகளின்பால், தான் கொண்

டிருந்த வியப்பையும், அச்சத்தையும் மொழி மூலம் வெளியிட்டான். பல தெய்வங்களை வணங்கி வந்த அவன் ஒரே கடவுள் என்ற கொள்கையைத் தழுவி, அறவுணர்ச்சி, அழகுணர்ச்சி, இறை அன்பு ஆகியவற்றில் வளர்ச்சியடைந்தபோது, அவனது இலக்கியமும் அந்த வளர்ச்சியை வெளிப்படுத்தியது. காதல், போர், வீரதீரச் செயல்கள் ஆகியவற்றையே பாடி வந்தவன், மெல்ல மெல்ல ஏனைய சுவைகள் கொண்ட பலவகை இலக்கியங்களைப் படைத்துக் கொள்ளலானுன். கரடுமுரடாயிருந்த மொழி பலவகைகளிலும் இனிமையும், நலங்கள் பலவும், ஆழ்ந்த கருத்துகளை வெளியிடும் ஆற்றலும் பெற்று விளங்கலாயிற்று. இன்று இலக்கியம், கவிதை, காவியம், நாடகம், புதினம், சிறுகதை முதலிய பல சுவைகளை உடையதாயும், வாழ்க்கையின் பல துறைகளையும் தழுவி நிற்பதாயும், நிகழ்ந்த உண்மை மட்டுமன்றிக் கற்பனையுண்மையையும் கொண்டதாயும் விரிந்து விளங்குகின்றது. இன்றைய இலக்கியம், இன்றைய மனிதனையும் மனித வாழ்க்கையையும் இனிது எடுத்துக் காட்டுகிறது.

*இலக்கியத்தின் பணி :* நம் பண்டைப் பெரியார்கள் மனிதன் அடைய வேண்டிய உறுதிப் பொருள்களை 'அறம், பொருள், இன்பம், வீடு' என வகுத்து, அந்நான்கையும் எய்துவதற்கு இலக்கியம் வழிகாட்ட வேண்டும் என்று கூறியுள்ளனர். இவ்வுலக வாழ்வில் எங்கும் ஊடுருவியுள்ளனவும், ஆயினும் இலைமறை காய் போல நம் கண்களுக்கு எளிதில் புலனுகாதனவுமான அழகிய உண்மைகள் மிகப் பல. இலக்கியம் அவற்றைக் கண்டுபிடித்து நமக்குப் புலப்படுத்துகின்றது. அது நம் மனத்தைப் பண்படுத்தித் தூய சிந்தனைகளை வளர்க்கின்றது; நம் உள்ளத்தில் குமுறும் உணர்ச்சிகளையும் வெறிகளையும் வெளிப்படுத்தி, அவற்றின் நன்மை தீமைகளை அறிவுறுத்துகின்றது. அவாவறுத்தல், புலனடக்கம், தான் எனும் அகந்தையை ஒழித்தல் ஆகியவற்றை மறைமுகமாக எடுத்துக் கூறி, இறுதியான உறுதிப் பொருளான வீட்டை எய்தவும் அது உதவுகின்றது.

வீடு என்ற ஒன்று, முன்னேர் அறிவுறுத்திச் சென்ற ஒன்று. அதில் கருத்து வேறுபாடுகள் இன்று நிறைய இருப்பினும், வையத்து வாழும் நல்வாழ்விற்கே இன்று இலக்கியம் ஆற்றும் பணி, பெரிது என்பதை யாரும் மறுக்க இயலாது. கலைஞன், அநீதிகளை எடுத்துரைப்பதும், அவற்றை ஒழிக்க வேண்டுவதும், தன் கடமை இல்லை என எண்ணியிருந்த காலமெல்லாம்

இன்று மலையேறி, செல்வர்களின் பொழுதுபோக்குக்காக இருந்து வந்த இலக்கியம், இப்போது பெரும்பான்மையான மக்களின் வாழ்விற்குரியதாகி விட்டது. இன்று எழுத்தாளர்களில் பலர் வாழ்க்கைப் போராட்டத்தில் நேராக ஈடுபட்டும், வாழ்க்கைச் சிக்கல்களைத் தம் நூல்களில் சித்திரித்துக் காட்டியும், தொண்டுகள் செய்து வருகின்றனர். குழந்தைகள் மணம் நீக்கவும், விதவைகள் மணம் ஊக்கவும், சாதி நோயைக் களையவும், சமய ஒருமை ஓங்கவும், எல்லார்க்கும் கல்வி, எல்லார்க்கும் உணவு, எல்லார்க்கும் எல்லாம் எனும் பொதுவுடைமைக் கொள்கை பூக்கவும் இன்றைய இலக்கியங்கள் ஆற்றிவரும் பணிகள், உள்ளங்கை நெல்லிக்கனி அல்லவா?

*தமிழிலக்கியத்தின் பணி :* கல்தோன்றி, மண்தோன்றாக் காலத்திலேயே தோன்றிய தொன்மை இலக்கியம் தமிழிலக்கியம் என்பர். நம் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் நம் முன்னோர்களின் வாழ்க்கையினையும், பண்புகளையும், சமய சமூக அரசியல் நிலைமைகளையும் பளிங்கு போலக் காட்டுகின்றன. காதலும் வீரமும் கொடையும் பண்டைத் தமிழரின் தனிச் சிறப்புகள். அகநானூறு போன்ற அகத்துறை நூல்களும், புறநானூறு போன்ற புறத்துறை நூல்களும் அச்சிறப்புகளை நன்கு வெளிப்படுத்துகின்றன. பின்னர் அறவுணர்ச்சியும் சமய உணர்ச்சியும் மேலோங்கிய போது, திருக்குறள், நாலடியார் போன்ற அறநூல்களும், உறுதிப் பொருள்கள் நான்கினையும் கதையின் மூலம் எடுத்துரைத்த பெரும், சிறு காப்பியங்களும், தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் முதலான பக்தி நூல்களும் வெளிவந்தன. இடைக் காலத்தில் தோன்றிய கம்பராமாயணம் ஒப்புயர்வற்று விளங்கியது. பின்னர் வாழ்க்கையில் ஒருவகைத் தேக்கம் ஏற்படவே, படைப் பாற்றல் குன்றித் தல புராணங்களும் ஏனைய புராணங்களும் புற்றீசல் போல் கிளம்பின. இறுதியில் செல்வர்களை மகிழ்வு செய்வதற்காகச் சிறுபிரபந்தங்களும், பாமர மக்களை மகிழ்வுறுத்த பள்ளு, குறவஞ்சி நூல்களும் வெளிவந்தன. பிறகு, ஆங்கிலேயர் தொடர்பினாலும், மேலை நாட்டிலக்கியங்களின் செல்வாக்கினாலும் வாழ்க்கையின் பல துறைகளிலும் கிளர்ச்சியும் கொந்தளிப்பும் ஏற்பட்டன. பாரதியார் தோன்றிப் புரட்சி செய்தார். பெண்ணடிமை தீரப் பெருந்தொண்டாற்றிய பெருந்தகை அவரன்றோ! தமிழ் இலக்கியம் இன்று பாரதியார், அவர் வழிவந்த பாரதிதாசன் முதலானோரைப் பின்பற்றிப் பல துறைகளிலும் முன்னேறி வருகின்றது. இன்றைய இலக்கியம் புது உலகிற்கும், புது வாழ்விற்கும் வழிகாட்டியாய் நிற்கின்றது. அது இன்று எளிய மக்களின் வாழ்க்கையையும் படம் பிடித்துக் காட்டுகின்றது;

சமுக அநீதிகளையும், கொடுமைகளையும் அம்பலப்படுத்திச் சமதருமத்தைப் போதிக்கிறது. தமிழ் இலக்கியமும், அவற்றின் படைப்பாளிகளும் இவ்வகையில் இன்று பெருந்தொண்டாற்றி வருகின்றனர்.

*இலக்கியத்தின் பணி பற்றி அறிஞர் கருத்துகள்:* "பூங்காவினைப் போல் அழகும் கவர்ச்சியும் தருவது மட்டுமின்றிக் காய்கறித் தோட்டங்களைப் போல் நல்ல பயனும் தருவதே இலக்கியம்" என்று கூறுகிறார் வில்லியம் டெம்புள் என்ற அறிஞர். சமூகத்திற்குப் பயன்படாத இலக்கியம் வெறும் ஒலிக்கூட்டமே என்று கருதும் ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ் அவர்கள், "பண்பாடு, சமயம், ஆழ்ந்த கருத்துகளைத் தருதல், வேகமான உணர்ச்சிகளையும் புலனையும் அடங்கச் செய்தல், வாழ்க்கையின் நன்மைகளை மிகுதிப்படுத்தல் இவை எல்லாம் இலக்கியத்தின் பணிகள்" என்று கூறுகிறார். ஆபர்கிராம்பி என்னும் அறிஞரும் அவ்வாறே, "இலக்கியக் கலையைக் கற்பனையின் துணை கொண்டு ஆக்கும் உலகின் தலையாய குறிக்கோள், நமது வாழ்க்கையில் என்றும் கண்டு, கடைப்பிடிக்க வேண்டிய உயர்ந்த குறிக்கோளை உணர்தற்கே ஆகும்" என இலக்கியத்தின் தலையாய பணியைக் கூறியுள்ளார். நம் இருபதாம் நூற்றாண்டு இணையற்ற கவிஞர் பாரதியாரும்,

"வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்"

என்று பாடி, இலக்கியத்தின் பணி, பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரை விழிபெறச் செய்வதே என்பதை உணர்த்தியுள்ளார். சமூகத்திற்குப் பயன்படாத எந்த இலக்கியமும், சமூகத்தில் நிலை பெறாது என்பதையே மேற்காட்டிய அறிஞர்களும், பலரும் வற்புறுத்தி வருகின்றனர். "கலை வாழ்க்கைக்காகவே" எனும் கோட்பாட்டினைக் கொண்ட இவர்களே யல்லாமல் "கலை கலைக்காகவே" எனும் கோட்பாட்டினைக் கொண்டிருக்கும் சிலரும் உள்ளனர். அவர்கள் இலக்கியத்தில் பிரச்சாரம் இடம் பெறக் கூடாது என்று வற்புறுத்தியுள்ளனர். அவ்வாறு கூறியவர்களுள் குறிப்பிடத் தகுந்தவர்கள் ஏ. சி. பிராட்லே எனும் அறிஞரும், வால்டர் ஹொரேசியோ எனும் அறிஞரும் ஆவார்கள். கலைக்கருவியைச் சமயப் பிரச்சாரங்களுக்கும், அரசியல் பிரச்சாரங்களுக்கும் கலைஞர்கள் பயன்படுத்தி,

இலக்கியங்களை வெறும் கொள்கைகளைத் தாங்கி நிற்கும் வண்டிகளாக மாற்றியதையே, அவர்கள் கண்டித்தார்கள் எனலாம். கருத்துக்கள் இன்றி இலக்கியமே இல்லை. இலக்கியத்தில் இடம் பெறும் கருத்துக்களும், கொள்கைகளும் எந்த அளவு இடம் பெற்றுள்ளன என்பதையே ஆய்தல் வேண்டும். கருத்துக்கள், கலையழகுடன் கூறப்படுதல் வேண்டும். மூன்று கருத்துக்களை வலியுறுத்த எழுந்த சிலப்பதிகாரம், அதன் கலையழகால் முத்தமிழ்க் காப்பியமாய்த் திகழ்கிறது அல்லவா! ஆனால் மணிமேகலையோ புத்தமதப் பிரச்சாரத்தை மிகுதியாகக் கொண்டு, அதன் இலக்கியத்தன்மையை இழந்து விடுகிறது. கலையிலே கருத்துக்களைக் கதைகளாய் இழைத்து, படிப்பவரை அவர்களையும் அறியாது, அழைத்துச் சென்று அக்கருத்துகளில் திளைக்கச் செய்யும் கலைஞரே சிறந்தவராகிறார். உணவில் உப்பைப் போல, இலக்கியத்தில் கருத்துக்களை இருப்பது தெரியாமல் இட்டுச் சமுதாயத்தை நல்வழிப்படுத்த வேண்டும். ஹட்சன் எனும் அறிஞர் கூறுமாறு போலக், “கதை அமைப்பினிடையே நீதிகள் இழைந்திருக்க வேண்டும். தத்துவக் கருத்துக்கள் கரைந்திருக்க வேண்டும். இலக்கியப் படைப்பாளி, ஒரு கணமேனும் பிரச்சாரம் செய்பவராகவோ, உபதேசக் குருவாகவோ மாறிவிடாமல், படைப்பாளியாகவே இருந்து, சமூகத்தைப் பண்படுத்தும் பணியைச் செய்ய வேண்டும்.”

*முடிவுரை:* இதுகாறும் கூறியவற்றால், இலக்கியம் இன்பம் ஊட்டலே அன்றி இன்னும் பலவற்றைச் செய்கிறது என்பதும், அவற்றுள்ளும் மனித வாழ்வினைச் செம்மைப்படுத்தும், ஆசிரியத் தொழிலையும் செய்கிறது என்பதும் தெளிவாகிறது. ஆகவே, அதற்கு ஆசிரியத் தொழிலைச் செய்யும் படைப்பாளி, படைப்பாளியாக நின்று சமூகத்தைப் பயன்படுத்த முயல வேண்டுமே தவிரப் பிரச்சாரகனாய் மாறி, நீதிகளைக் கூறக்கூடாது. இலை மறைவு காயாக இலக்கியத்தில் மறைந்துள்ள கருத்துகளுக்குப் புதிய ஆக்க உலகினை ஆக்கும் ஆற்றல், இயல்பாகவே உள்ளதெனலாம்.

---

அண்ணல் சதகதுல்லா அப்பாவின் ஒப்புதலைக்
கண்ணியமாய்ப் பெற்றபீர் முகம்மதப்பா—வின்னூலை
ஆவலுடன் ஆராய்ந்தே அவ்வழியிற் செல்வோர்க்கு
யாவும்கை கூடி வரும்.

—எஸ். செய்கு அப்துல்காதிர் பாவலர், காயல்பட்டினம்.

# இஸ்லாமிய இலக்கியத்தில் திருக்குர்ஆன்

**பேராசிரியர் மு. நசுருதீன்**, எம். ஏ., எல்எல்.பி.,
*முதல்வர்: சதக்கத்துல்லா அப்பா கல்லூரி*,
பாளையங்கோட்டை.

இஸ்லாமிய இலக்கியம் வையகம் முழுவதும் வரிசையோடும் மதிப்போடும் பேசப்படும் மாபெரிய இலக்கியமாக மாண்பிணைப் பெற்றுத் திகழ்கின்றது. பொதுவான சமயக் கோட்பாட்டில் பூத்துக் குலுங்கும் இஸ்லாமிய இலக்கியம் அரபு, பாரசீகம், துருக்கி, தமிழ் என எம்மொழியில் வடிவம் பெற்றுலும் அது தனது தனித்தன்மையை என்றும் போற்றிக் காத்துக் கொண்டிருக்கின்றது. அனைத்துலகத் தொடர்பு மொழியான ஆங்கிலத்தில் 'ஆயிரத் தோர் இரவுகளும்', 'உமர்கய்யாமின் ருபாயாத்தும்' அடிக்கடிப் பேசப்படுவதுண்டு. அவைகள் நீண்ட புகழை உலகில் நிலைக்கச் செய்தாலும் அரபியரும், பாரசீகரும், தத்தம் சிறப்பான இலக்கியக் குவியல்களின் மத்தியில் அவற்றிற்குச் சாதாரண இடத்தையே தருகின்றனர். அரபியரும், பாரசீகரும் மிகச் சிறப்பாகக் குறிப்பிடும் இஸ்லாமிய இலக்கியங்கள் உரிய முறையில் வேற்று மொழிகளில் அறிமுகப்படுத்தப்பட்டால் உலகுக்கு அதனுல் பெரும் பயன் விளையும்.

இஸ்லாமிய இலக்கியம் எனக் குறிப்பிடும்போது அது ஒரு மொழியையோ, மொழியினத்தையோ சுட்டாமல் ஒரு சமயத்தையே குறிப்பிடக் காணலாம். உலகின் மிகப் பெரும் சமயமாக இஸ்லாம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதனைச் சமயம் என்பதை விட வாழ்க்கை நெறி என்பது இன்னும் பொருந்தும். அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் விளக்கப்பட்ட வாழ்க்கை நெறியாம் இஸ்லாம் இன்றைய உலக மக்கள் தொகுதியில் ஆறில் ஒரு பகுதியினர் வாழ்வுக்கு வழிகாட்டுகின்றது. உலக முஸ்லிம்கள் ஆப்ரிக்காவின் வடக்குப் பகுதியிலும் கீழைப் பகுதியிலும் மிகப் பேரளவில் உள்ளனர்; மேலை ஆசியாவிலும் தென் ஆசியாவிலும் மேலும் அதிகமாக உள்ளனர். கீழைநாடுகளில்

கீர்த்தியோடு இலங்கும் இஸ்லாம் மேலை நாடுகளிலும் மேம்பாட்டுடன் விளங்கிக் கொண்டிருக்கின்றது.

இஸ்லாமியப் பண்பாடு மனித வரலாற்றில் காணலாகும் மிகச் சிறந்த பண்பாடுகளில் தலைமையானது. இஸ்லாம், கலைச் செல்வங்கள் பலவற்றை வையகத்திற்கு வனப்போடு வழங்கியுள்ளது. எனினும் அதன் மணியான பணி அதன் இலக்கியக் கொடையில்தான் ஒளிவீசிக் கொண்டிருக்கின்றது. இஸ்லாமிய இலக்கியங்கள் மிகச் சிறப்போடு இலங்கும் மொழிகளில் அரபும், பாரசீகமும், துருக்கியும் தலைமை சான்றவை. பெர்பர் (BERBER) ஹவ்சா (HAUSA), சுவாகிலி (SWAHILI), சோமாலி (SOMALI), அல்பானியன் (ALBANIAN), குர்திஷ் (KURDISH), உஸ்பெக் (UZBEK), தஜிக் (TADJIK), பஷ்டோ (PASHTO), பலூசி (BALUCHI), உர்து, பஞ்சாபி, பெங்காளி, குஜராத்தி, சிந்தி, தமிழ், தெலுங்கு, மலையாளம், மலேயா, ஜாவானியம் (JAVANESE), சாம் (CHAM) முதலிய எண்ணிறந்த மொழிகளில் இஸ்லாமிய இலக்கியம் தனது முத்திரையைப் பதித்துள்ளது. இஸ்லாமிய இலக்கியங்கள் எம்மொழியில் எழுந்தாலும் அரபும், பாரசீகமும் அவைகளுக்கு அதிகமான துணையினைப் புரிந்து கொண்டிருக்கக் காணலாம். இஸ்லாமியப் பண்பாட்டிற்கு அரபு இலக்கியம் உயிர் மூச்சாக விளங்குகின்றது. இஸ்லாமியப் பண்பாட்டையும், இஸ்லாமிய இலக்கியத்தையும் நன்கு புரிய வேண்டுமாயின் அரபுமொழி ஞானம் மிகவும் தேவையானது.

முஸ்லிம்களின் வாழ்வும் வாக்கும் சீரோடும் சிறப்போடும் அமையச் சிறந்த வழிகாட்டும் திருக்குர்ஆன், அரபு இலக்கியத்தின் ஆற்றல் சான்ற நூலாக மட்டுமின்றி அகில உலக முஸ்லிம்களின் சட்ட நூலாகவும் செல்வாக்கடைந்துள்ளது. திருக்குர்ஆனே இஸ்லாமிய இலக்கியத்தில் இணையற்றதாக விளங்குகின்றது என்பதற்கு அதன் பெயரான 'குர்ஆன்' என்னும் ஆட்சியே சான்றாகும். பெயரைக் குறிக்கும் அச் சொல்லுக்கு 'ஓதக்கூடியது', 'ஓதவேண்டியது' என்ற பொருள் உள்ளது. அண்ணலார் (ஸல்) அவர்களுக்கு வானவர் தலைவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலம் 'ஓதப்பட்ட' இவ்விறை நூல் மனித சமுதாயம் 'ஓத வேண்டியதாக' உயர்ந்துள்ளது. மொழி, நாடு, இனம் என்ற வேறுபாடேயின்றி அனைத்துலக மக்களாலும் அதிகமாக ஓதப்படும் இலக்கியமே திருக்குர்ஆன்தான். 'நூல்களின் தாய்' என விளங்கும் திருக்குர்ஆனைப் போன்று அதிக அளவில் உலக மக்களால் படிக்கப்படும் இலக்கியம் வேறு எதுவுமே இல்லை என்று குறிப்பிடலாம்.[1]

A808 LIBRARY 23 FEB 1979

இஸ்லாமிய இலக்கியத்தின் ஊற்றுக் கண்ணாக விளங்கும் திருக்குர்ஆன் மாநிலத்தின் மாபெரிய ஆத்மீக சக்தியாக விளங்குகின்றது. அனைத்துலகையும் படைத்துக் காக்கும் இறைவன் திருப்பெயரால் தொடங்கும் இவ்வேதநூல் இவ்வாறு சிறப்பதில் வியப்பில்லை. இலக்கியத்தின் ஆற்றல் எத்தகையது என்பதை அறியவும் திருக்குர்ஆன் நற்றுணை புரிகின்றது. ஒழுக்கக் கேட்டில் ஊறிப்போயிருந்த மக்களை உன்னதமான ஒழுக்க சீலர்களாக இவ்வுயர் வேதம் ஆக்கியது. பிக்தால் திருக்குர்ஆனைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'அதன் ஆற்றல் வாய்ந்த ஓசையானது மனித நெஞ்சங்களிற் கண்ணீர் மல்கவும், பரவச மூட்டவும் வைத்துவிடும் ஒப்பற்ற ஒருங்கிணைந்த இசைபோல்வதாகும்' என மொழிகின்றார்.[2] வசனமும் கவிதையுமல்லாது, இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட — மேலான — நடையில் அமைந்த திருக்குர் ஆனை அரபுமொழியின் அற்புதமான மாதிரியாகக் கொள்கின்றனர் செம்மையான இலக்கியச் சிந்தனையாளர்கள்.[3]

பிற சமய அறிஞர்களைத் திருக்குர்ஆன் மிகவும் கவர்ந்தது; கவர்ந்து கொண்டிருக்கின்றது. மார்க்க மேதைகளும், ஆராய்ச்சியாளரும், மெய்ஞ்ஞானியரும், அறிவியலாரும், மருத்துவ வல்லுநரும், உலகம் சிறக்க உயரிய நூல்களை உருவாக்கியவர்களும் இத்திருக்குர்ஆனிலிருந்து உணர்ச்சி பெற்று உயர்ந்திருக்கின்றார்கள்.

வல்லான் இறைவனால் வள்ளல் நபிகளாருக்கு அருளப்பெற்ற வான்மறையாம் திருக்குர்ஆன் 6666 திருவசனங்களையும், 114 அத்தியாயங்களையும் கொண்டிலங்குவது. மிகப்பெரிய அத்தியாயம் 286 திருவசனங்களாலானது. (அத். 2). மிகச்சிறியது 3 திருவசனங்களாலானது. (அத். 108).

---

1. 'The Koran is probably the most often read book in the world, surely the most often memorised, and possibly the most influential, in the daily life of the people who believe in it.' — *James A. Michener.*
2. 'That inimitable symphony, the very sounds of which move men to tears and ecstasy.' — *Marmaduke Pickthall*
3. 'From the literary point of view, the Koran is regarded as a specimen or purest Arabic, written in half poetry and half prose' — *F. F. Arbuthnot.*

   'The Koran is composed in rhythmical and rhyming prose held to be of miraculous and inimitable excellence'. — *Encyclopedia Americana.*

அரபு இலக்கியத்தில், தோன்றியது தொட்டு இன்றுவரை அனைவராலும் இலக்கியத்தின் அளவுகோலாக ஏற்றுக்கொள்ளப் பட்டதே இத்திருக்குர்ஆன் தான். திருக்குர்ஆன் தோன்று முன்னர் நிலவிய அரபு இலக்கியம் மதுவையும், மாதரையும், வாளையும், வனப்பான குதிரையையும் வட்டமிட்டுக்கொண்டிருந்தது. திருக்குர்ஆன் அரபு மொழியை அகில உலக மொழியாக ஆக்கியது; அதுமட்டுமன்றி அது அனைத்து இஸ்லாமிய இலக்கியங்களையும் ஆர்வத்தோடு அணைத்து ஆதரித்துக்கொண்டிருக்கின்றது.

திருக்குர்ஆனில் கூறப்பட்டவைகளை விளக்க அறிஞர்கள் முயன்றதன் விளைவாக ஏற்பட்ட விளக்கவுரைகளையும் (தப்ஸீர்கள்) சிறந்த இலக்கியம் எனக் குறிப்பிடலாம். இஸ்லாத்தின் தொடக்க காலத்திலிருந்து இன்றுவரை மிக அதிகமான விளக்கவுரைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. பெருமானார் நபிகள் திலகம் (ஸல்) அவர்களே சில வசனங்களுக்கு விளக்கம் தந்துள்ளார்கள். அவர்கள் தம் தோழர்களும் பல வசனங்களை விளக்கியதோடு, இவ் வசனம் இச்சூழலில் இவ்விடத்தில் இறங்கியது என்னும் விவரங்களையும் அறிவித்துள்ளனர். இதுவே திருக்குர்ஆனுக்கு முதலில் வாய்த்த விளக்கவுரையாகும். பின்னர் மிகச்சிறந்த உரைகள் தோன்றின. அவ்வுரைகளில் வரலாற்றறிஞர் தபரி (AL-TABARI: 838—923) கண்ட விளக்கவுரை மிகவும் மதிக்கப்படுகின்றது; அது 30 தொகுதிகளாக அச்சிடப்பட்டுள்ளது. அதுபோன்றே இலக்கண அறிஞர் இமாம் ஸமக்ஷரி (AL-ZAMAKHSHARI: 1143), தத்துவச் செல்வர் இமாம் பக்ருத்தீன் ராஜி (FAKHR AL-DIN AL-RAZI: 1149—1209), வேதாந்தி இமாம் பைதாவி (AL-BAIDAWI: 1286) ஆகியோர் படைத்த விரிவுரைகளும் மதிப்போடு பேசப்படுபவை. நமது காலத்தை ஒட்டி எகிப்திய அறிஞர்கள் முகம்மது அப்துஹ் (MUHAMMAD ADDUH: 1849-1905) என்பாரும், முகம்மது ரஷீத் ரிதா (MUHAMMAD RASHID RIDA: 1865—1935) என்பாரும், இந்தியாவின் கல்வி அமைச்சராயிருந்த அபுல்கலாம் ஆசாத் (1888—1958) அவர்களும் இயற்றிய விரிவுரைகள் சிறப்பாகக் குறிக்கத்தகுந்தவை. இவ்வாறாக, இதுவரை வெளிவந்த திருக்குர்ஆன் விரிவுரை இலக்கியத்தை மதிப்பிட முற்படின் அது பெரும் கடல்போலக் காட்சிதரும். திருக்குர்ஆனுக்கு விரிவுரை தருவதில் எடுக்கப்பட்ட முயற்சியும், ஈடுபடுத்தப்பட்ட ஆற்றலும், அறிவுத் திறனும், காலமும், பொருளும்போல் உலகில் வேறு எந்த நூலுக்கும் மேற்கொள்ளப்படவில்லை எனத் துணிந்து கூறலாம்.

———

# பாரதப் பண்பாட்டு வளர்ச்சியில் இஸ்லாமிய இலக்கியத்தின் பங்கு

பேராசிரியர் கா. அப்துல் கபூர், எம். ஏ.

நீர்பாய்ச்சி எருவிட்டுப் பண்படுத்திய நிலத்தில் விதைக்கப் படும் நெல்மணிகள் பொற்கதிர்களாகப் பொலிவடைந்து குலுங்கு வதைப்போன்று, உயர்ந்த பண்பாடு செறியும் சூழலில் வாழ்வோர் சிறந்த புகழினை அடைவர். பல்வேறு இனங்களும், மொழிகளும், மதங்களும், நெறிகளும், பழக்கவழக்கங்களும் பல்கிப் பெருகியுள்ள பாரதப் பண்பாடு புகழ்மணம் பரப்புமோர் பூச்செண்டு. 'பொற்சைவ வைணவமும், புத்தரருள் நல்லுரையும், நற்சமணக் கிரித்தவமும், நபிகள்பிரான் நல்லுரையும் பற்பலவாயிருந்திடினும் பாரதத்தில் பண்பேற்றுக் கற்போரைப் பிடித்திழுத்துக் கனி தமிழின் சுவையூட்டி, நாயன்மார் நாவமுதும், நல்லாழ்வார் பாசுரமும், மேயபுகழ் மேகலையும், மேம்படு சிந்தாமணியும், மாமுனி தேம்பாவணியும், மாண்பேறு சீறுவும் காமுறவே எல்லோரும் கண்ணுரக் கண்டோதும் காவியமாய் இந்நாட்டில் கதிர்வீசக் காண்கின்றோம்.'

கி.பி. ஏழாம் நூற்றாண்டில், அண்ணல் நபிகள் நாயகமவர்கள் அரபு நாட்டிலே தோன்றி அறவிளக்காகிய இஸ்லாமிய நெறியை நிறைவுபடுத்தியதும், பாருலகின் பெரும் பகுதிகளெல்லாம் அவ் வறச்சுடர் பரவியதும், உலக வரலாற்றிலேயே உயர்வுபெற்று விளங்குகின்றது. இந்திய அரபியத் தொடர்பு, இந்திய இஸ்லா மியத் தொடர்பினும் தொன்மைவாய்ந்தது. "நீரின் வந்த நிமிர்பரிப் புரவிகள்" பூம்புகாரைப் பொலிவுறச்செய்த காட்சியைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. ஹிஜ்ரி 116-ல் (கி.பி. 738-ல்) கட்டப்பட்ட பள்ளிவாயிலொன்று திருச்சி மாநகரின் நடுப்பகுதி யில் இன்றும் இடம்பெற்றுள்ளது. கி. பி. 788-ல் கொல்லத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்திருந்ததற்கு ஆதரமாக அங்குள்ள மண்ண றைக் குறிப்பொன்று அமைந்துள்ளது. ஷஹர் என்னும் அரபு நாட்டுத் துறைமுகத்தருகே அரசர் அப்துர்ரகுமான் சாமரி என்பார் ஹிஜ்ரி 216-ல் அடக்கமாகியுள்ள குறிப்பும் அவரே சேரமான் பெருமாள் வேந்தரென்பதும் சிந்தனைக்குரியது. கி. பி. 9-ம் நூற்றாண்டிலேயே மலபார் பகுதிகளிலும் காயற்பட்டினத் தையடுத்தும் அரபு நாட்டு முஸ்லிம்கள் குடியேறத் தொடங்கினர். தென்னக இஸ்லாமியத் தொடர்பின் தொன்மையை இவை

தெள்ளிதின் காட்டுவன. முகம்மது பின் காசிம் வாயிலாக சிந்துக் கடற்கரையோரத்தில் ஏற்பட்ட இஸ்லாமியத் தொடர்பு நீண்ட நாள் நிலைத்திருக்கவில்லை.

மத்திய ஆசியாவிலிருந்து வந்து இந்தியாவை ஆட்சி புரிந்த மன்னர்கள் பாரசீக மொழியை அரசவை மொழியாகவும் இலக்கிய மொழியாகவும் கொண்டிருந்ததால் இ ந் நா ட் டு இந்துக்களும் முஸ்லிம்களும் பாரசீக மொழிப்பயிற்சியில் தனியார்வம் காட்டினர். பாரசீக வசனத்திலும் கவிதையிலும் ஆற்றல்மிகுந்த இந்து அறிஞர்கள் — குறிப்பாக காசுமீரத்துப் பண்டிதர்கள் — பலர் இருந்தனர். இஸ்லாமியக் கருவூலங்கள் நிறைந்த அரபு மொழியின் செல்வாக்கு மிகப்பெற்ற பாரசீக மொழியின் வாயிலாக இந்திய நாட்டறிஞர்களின் சிந்தனைகள் உருவாக்கப்பட்டன. அ த ன் வி ளை வ ா க இறையொருமையை வலியுறுத்திக்கூறும் கொள்கைக் கோட்பாடுகளும் உரம்பெறத் தொடங்கின. சுவாமி தயானந்த சரசுவதி அவர்களின் ஆர்ய சமாஜம், ராஜாராம் மோகன்ராய் அவர்களின் பிரம்ம சமாஜம், இராமானந்தர், கபீர் தாஸ், இராமதாஸ், சைதன்யர் ஆகியோர் வளர்த்த பக்தி இயக்கம், தென்னகத்தில் சிவவாக்கியர் போன்ற சித்தர்கள் எழுப்பிய குரல் ஆகியன இஸ்லாமியத் தொடர்பின் இனிய விளைவுகளெனக் குறிப்பிடுதல் குற்றமாகாது.

இந்திய மொழிகளாகிய பஞ்சாபி, வங்காளி, குஜராத்தி, மராத்தி, காஷ்மீரி ஆகிய மொழிகள் இஸ்லாமியத் தொடர்பால் பெரும்பயன் பெற்றன. நூற்றுக்கணக்கான அரபி — பார்சிச் சொற்கள் தமிழ் மொழியில் மட்டுமின்றி இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் இரண்டறக் கலந்தன. அசல், நகல், அமுல், ஆபத்து, ஆஜர், கைதி, கஜானு, வக்கீல், திவான், முன்சீப், இனும், ஜில்லா, தாலுகா, வசூல், பாக்கி, பதில், மசோதா, மகசூல், தகராறு, கடுதாசி, மராமத், வாரிசு, ரசீது, தாக்கல், கம்மி, காலி, கேசரி, அல்வா, சர்பத் என்பன அவற்றுள் சில. அரபி — பார்சி மொழிகளுக்கும் இந்திய மொ ழி க ளு க் கு ம் ஏற்பட்ட கூட்டுறவின் பயனாக உர்து என்னும் ஒரு புது மொழியே உருவாயிற்று. இம்மொழி அரபி, பார்சி ஆகிய பழமையான பண்பட்ட மொழிகளிலுள்ள மிகச்சிறந்த இலக்கியங்களையெல்லாம் மிகக் குறுகிய கால அளவில் தன்னுடையதாக்கிக்கொண்டு புது இலக்கியங்களையும் படைத்து இந்தியப் பண்பாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிந்தது. "ஸாரே ஜஹான்ஸே அச்சா ஹிந்துஸ்தான் ஹமாரா, ஹம் புல்புலே ஹேன் உஸ் கி, ஏ குலிஸ்தான் ஹமாரா" —"அனைத்துலகிலும் சிறந்த ஹிந்துஸ்தான் எ ம் மு டை ய து.

நாமோ புல்புல் பறவைகள்; அதன் இப்பூங்கா எம்முடையது'' எனத் தொடங்கும் அருமையான உர்து நாட்டுப் பண், கவிஞர் அல்லாமா இக்பாலின் அரும்புகழை நாட்டுகின்ற பண்ணுகக் காலமெல்லாம் கவின்பெறும். திருமறை, நபிமொழி, நாயக வாழ்வு, மேதைகள் வரலாறு, சட்டம், நீதி, ஒழுக்கம், தத்துவம் போன்ற துறைகளில் உர்து மொழிப் பேரறிஞர்கள் ஆயிரக்கணக்கான நூல்களை எழுதி நாட்டின் இலக்கியச் செல்வத்தை இனிதே வளர்த்தனர். தக்காணத்தை ஆட்சி செய்த இப்ராஹிம் ஆதில்ஷா உர்துவை முதலில் ஆட்சிமொழியாக்கினர். அதன் பின்னர் டில்லியும், லக்னேவும், ராம்பூரும், ஹைதராபாத்தும், அலிகரும் உர்து மொழியின் வளர்ப்புப் பண்ணைகளாயிருந்து உயரிய பணிகளைச் செய்தன. அல்லாமா ஷிப்லி நுஃமானி, மவ்லானு அஷரப் அலி தானவி, மவ்லானு ஹிப்சுர் ரகுமான், மவ்லானு ஹுசைன் அகமது மதனீ, முஹம்மது ஹுசைன் ஆஸாத் ஆகியோரின் அரிய நூற்கள் பெரிய கருத்துக் கருவூலங்களாகும். டாக்டர் முஹம்மத் அஸீஸ் அவர்கள் இஸ்லாமல்லாத மதங்களை ஆராய்ந்து வெளியிட்டுள்ள நூல் பண்பாட்டுத் துறையில் பெரும் பயன் விளைவிப்பதாகும். வரலாற்றுக் கதைகளுக்கும், மாயக் கதைகளுக்கும், புதினங்களுக்கும், சிறு கதைகளுக்கும் உர்து மொழியில் பஞ்சமேயில்லை. கவிதைத் துறையில் உர்து மொழி உயர்நிலை அடைந்துள்ளது. கண்ணீர்க் கவிதைகள், மெய்ஞ்ஞானப் பாடல்கள், பக்திப்பாடல்கள், உணர்ச்சிப் பாடல்கள், நகைச்சுவைப் பாடல்கள் என அவற்றைப் பல கூறுகப் பிரிக்கலாம். மிர்ஜா காலிப், அல்தாப் ஹுஸைன் ஹாலி, அக்பர் இலாஹாபாதி போன்ற பெருங்கவிஞர்கள் இலக்கிய உலகிற்கு ஆற்றிய பணியையும், சென்ற நூற்றுண்டின் இறுதியில் சர் ஸையித் அஹமத் கான் அவர்கள் கல்வி வளர்ச்சிக்காகவும், உர்து இலக்கிய மறுமலர்ச்சிக்காகவும் ஊட்டிய ஊக்கத்தையும் யாரும் மறக்கமுடியாது. ஜோஷ், அஸீஸ், ஸாபி, நியாஸ், ஹாதி, மஜீத், நஹ்ஷர், கௌகப், யாஸ், ரவான், ஷதர் போன்ற பலர் இந்நூற்றுண்டின் சிறந்த கவிஞர்களாகப் புகழீட்டியுள்ளனர். கவிதைகளைச் சுவைப்பதற்கும், கவிஞர்களுக்கு ஊக்கமூட்டுவதற்கும் அமைக்கப்பட்ட உர்து முஷாயிராக்கள் இன்று நாட்டின் பல்வேறு மொழிகளிலும் நடைபெறும் கவியரங்குகளுக்கு முன்னேடியாகும் என்பது பொருந்தும். உர்து கஸல்களும், கஸீதாக்களும், கவாலிப் பாடல்களும் அம்மொழி அறியாதவர்களைக்கூடப் பேரின்பப் பரவச நிலையடையச் செய்துவிடுகின்றன; பண்பாட்டு வளர்ச்சிக்குப் பயன்படுகின்றன.

பாரதத்து நல்லறிஞர் சாத்திரங்களை அரபு மொழியில் பெயர்க்கின்ற ஆர்வம் பாக்தாது நகரில் சிறந்திருந்ததுபோல் இஸ்லாமியக் கலைகளை இந்திய மொழிகளில் பெயர்க்கும் வேட்கை வற்று வளர்ந்தது. ஜெய்ப்பூர் மன்னர் ராஜா ஜெய்சிங் ஆதரவிலும், காஷ்மீர் மன்னர் ஜெய்னுல் ஆப்தீன் ஆதரவிலும் அரபு இலக்கியங்கள் பல வடமொழியில் ஆக்கப்பட்டன. இந்தியா வந்த மாமேதை பெருனி என்பார் சிறந்த அரபி நூற்கள் மூன்றினை சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்தார். காசி அந்தணர் போஜர் என்பார், காலி ருகீனுத்தீன் என்னும் அறிஞரை அணுகி இஸ்லாமிய இலக்கியப் பயிற்சியை மேற்கொண்டு அவருக்கு சமஸ்கிருதம் கற்றுக்கொடுத்தார். ஷாஜஹான் புதல்வர் தாராஷிகோ இந்து சமயத்தையும், இஸ்லாமிய நெறியையும் ஆய்ந்து நோக்கி "மஜ்மவுல் பஹ்ரைன்"—இரு கடல்களின் சேர்க்கை என்னும் நூல் எழுதினர். அதனை அவரே வடமொழியில் "ஸ்முத்ர ஸங்கம கிரந்தம்" எனவாக்கினர். மேலும் அவரே உபநிஷத், பகவத் கீதை போன்றவற்றை அரபியில் பெயர்த்து இருமொழித் தொடர்புக்கு இடையறுது முயன்றுர்.

இராமாயணம், மகாபாரதம், பாகவத புராணம் போன்றவற்றை வங்க மொழியில் பெயர்ப்பதற்கு அந்நாட்டை ஆண்ட முஸ்லிம் மன்னர்கள் முயற்சி மேற்கொண்டனர். கிரிஷ் சந்திர கோஷ் போன்ருேர் திருக்குர்ஆனையும், மிஷ்காத் என்னும் நபி மொழித் தொகுப்பையும், பிற பல அரபி இலக்கியங்களையும் வங்க மொழியிலாக்கினர். அரபி, பார்சிச் சொற்கள் பல வங்க மொழியில் இடம்பெற்று அம்மொழியை வளப்படுத்தின. இது போன்றே பஞ்சாப் மொழியிலும் இஸ்லாமியப் பண்பாட்டின் முத்திரை பதிந்தது. இன்று அரபி, தேவநாகரி, குர்முகி ஆகிய மூன்று எழுத்துகளாலும் அம்மொழி எழுதப்படுகிறது. மஹ்மூது கஜ்னியின் புதல்வர் மசூதி என்பாரின் அவைக்களப் புலவராகிய மசூத் ஸாத் ஸல்மான் என்பவரே பஞ்சாபி மொழியின் முதற் புலவராகக் காட்சி தருகிருர். டில்லி காஜா நிஜாமுத்தீன் அவுலியா அவர்களின் ஞான குருவாகிய பாபா பரீதுத்தீன் கஞ்சஷகர் அவர்களின் பக்திப் பாடல்களையும், பரீத்ஸானி, மதோலாஹுஸன், சுல்தான் பாஹுபுலே ஷா, ஹாஷிம் ஷா ஆகியோரின் அரிய பாடல்களையும் பஞ்சாபியர் இன்றும் பக்திச் சுவை சொட்டப் பாடி மகிழ்கின்றனர்.

கவின்மிகு காஷ்மீரில் எழில்மிகு பார்சி ஆட்சி மொழியாக அமைந்ததிலிருந்து அரபு எழுத்துக்களாலேயே அம்மொழி எழுதப்பட்டு வருகிறது. இளவரசர் யூசுப் ஷாவின் காதலி

ஹபாகோடான் பொழிந்த உணர்ச்சிப் பாடல்களும், ஓர் அந்தண பார்சிக் கவிஞரால் துறக்கப்பட்ட துணைவி ஆர்னிமால் பாடிய கவிதைகளும், ரசூல் மீரின் மறுமலர்ச்சிக் கவிதைகளும் காஷ்மீர் இலக்கியப் பூங்காவிற்குக் கவின் சேர்க்கின்றன. மற்றும் மூது காமியின் யூசுப் சுலேகா, ஷீரின் குஸ்ரு, லைலாமஜ்னு, மக்பூலின் குல்ரேஸ் ஆகியவை அரிய சுவைகளை வெளிப்படுத்துகின்றன. 1952-ல் மறைந்த மறுமலர்ச்சிக் கவிஞர் மக்பூலின் பாடல்களிலும், அவரது பாணியைப் பின்பற்றும் ஆஸாதின் பாடல்களிலும் வாழ்வு வளம் பெறுதற்குரிய துடிப்பைப் பார்க்கின்றோம். ஆரிப், ஆரிஸ், ரோஸன், ரமத்தி ஆகிய இளைய சமுதாயத்தின் எழுச்சிக் குரல் பண்பாட்டுத் துறையில் பல நற்பயன்களை விளைவித்துள்ளது.

மராட்டிய மாநிலத்தில் பாமினி மன்னர்களின் ஆட்சியில் இந்துக்களும் முஸ்லிம்களும் தோளோடு தோள் தொட்டு நின்று நாட்டைக் காக்கும் நற்பணியில் ஈடுபட்டிருந்த கூட்டுறவின் விளைவாக மராத்தி மொழி வளம் பெற்றது. பக்கீர்கள் வீதிகளிற் பாடிச் சென்ற இஸ்லாமிய நெறிப் பாடல்கள் பாமர மக்களைப் பெரிதும் கவர்ந்தன. அரபுச் சொற்கள்-குறிப்பாக படைக் கருவிகளுக்கு முஸ்லிம்கள் பயன்படுத்திய சொற்கள் - பல மராத்திய மொழியில் இடம்பெற்றன. இது போன்ற சொற்களை அம்மொழியிலிருந்து அகற்றிவிடவேண்டும் என்னும் முயற்சி பாலகங்காதர திலகர் போன்ற பெருமக்கள் அறிவுரையின் பயனாகக் கைவிடப்பட்டது. ஏறத்தாழ 600-க்கும் மேற்பட்ட அரபு பார்சிக் சொற்கள் அம்மொழியில் இடம் பெற்றுள்ளன. சிந்தி மொழியில் 17-ம் நூற்றாண்டுக்குப் பின்னர் அப்துல்கரீம் முதல் ஷாலதீப் ஈறாக அறிஞர்கள் பலர் தோன்றிப் பல் பொருள் பற்றிக் கவிதைகள் வழியாகவும் வசனங்கள் வாயிலாகவும் பண்பாட்டு வளத்தைப் பெருக்கியுள்ளனர்.

கேரள நாட்டுப் பொது வாழ்விலும் பண்பாட்டிலும் இஸ்லாத்தின் பங்கினை எளிதாக உணர்ந்து கொள்ள முடியும். முஸ்லிம்களின் வாழ்க்கையைப் பின்னணியாகக் கொண்டு வைக்கம் முஹம்மது பஷீர் எழுதியுள்ள, "பால்ய கால சகி", "என்றெ உப்பாக்கு ஒரு ஆன உண்டாயிருந்நு" போன்ற நூல்கள் நாடனைத்தும் போற்றுகின்ற நவீனங்களாகப் புகழ் பெற்றுள்ளன. வைக்கம் அப்துல்காதர், கே. டி. முஹம்மது போன்றவர்கள் மிகச் சிறந்த எழுத்தாளர்களாக மதிக்கப் படுகின்றனர். அரபுப் பாடல் இசையுடனும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் சந்தங்களுடனும் வெளிவரும் மாப்பிள்ளைப் பாடல்கள் கேரளத்து

மக்களின் இதழ்களைக் கௌவிப் பிடித்து இல்லங்களிலெல்லாம் எதிரொலிக்கக் கேட்கின்றோம். இத்துறைக்கு ஊக்கமூட்டிய மோயின் குட்டி வைத்தியரின் 'ஹுஸனுல் ஜமால் பத்ருல்முனீர்' என்னும் காவியம் மாப்பிள்ளைப் பாட்டின் மணிமகுடமாகும். இஸ்லாமியப் பயிற்சிக்காக கேரள முஸ்லீம்கள் மலையாள மொழியை அரபி எழுத்துக்களில் எழுதி "அரபு மலையாளம்" என்னும் ஒரு மொழிப் பிரிவையே அமைத்தனர். அதனைப் பின் பற்றித் தமிழகத்திலும் "அரபுத் தமிழ்" எழுந்தது. இவ்விரு பிரிவு களிலும் ஆயிரக் கணக்கான அரிய நூல்கள் வெளிவந்துள்ளன. பொன்னுனி மக்தூம் தங்ஙள் அரபு மலையாளத்திற்கும் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் போன்றோர் அரபுத் தமிழுக்கும் ஆற்றிய அரும் பணிகள் குறிப்பிடத்தகுந்தவை.

இஸ்லாமிய நெறி, மிகப் பழங்காலத்தே பைந்தமிழ் மண்ணில் வேரூன்றியிருந்தும் முஸ்லிம் புலவர்களின் இலக்கியங் கள் ஏறத்தாழ நானூறு ஆண்டுகட்கு முன்பிருந்துதான் நமக்குக் கிடைக்கின்றன. உமறுப் புலவர், குணங்குடி மஸ்தான் என்னும் இருவரைத்தான் இஸ்லாமியப் புலவர்களாக உலகம் அறிந் துள்ளதே தவிர, இலக்கியத் துறைக்கு அணி செய்கின்ற முந்நூற்றிற்கும் மேற்பட்ட புலவர்களையும் அவர்கள் இயற்றியுள்ள நானூற்றிற்கும் மேலான இலக்கியங்களையும் பலருமறியார். நமது பண்பாட்டு வளர்ச்சியில் தமிழ் முஸ்லிம்களுக்குத் தனியான சிறப்புண்டு. "யாதும் ஊரே யாவரும் கேளிர்", "செல்வம் என்பது சிந்தையின் நிறைவே", "பிறப் பொக்கும் எல்லாவுயிர்க்கும்", "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்றெல்லாம் பாடிப் பரவசமடைந்த தமிழ்ப் பண்பாட்டிற்கும், இஸ்லாமிய நெறிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆகவே சீரிய பண்பாட்டைப் பின்னணியாகக் கொண்டிருந்த தமிழ் முஸ்லிம்கள் தமிழ் இலக்கிய மரபினின்று மாறுபடாமலும், இஸ்லாமிய நெறி மரபு வழுவாமலும், அருஞ்சுவை பயக்கும் பெருங்காப்பியங்களையும், சிந்தையள்ளும் சிற்றிலக்கியங்களையும், தனிச்சுவை மிளிரும் தனிப்பாடல்களையும் சிறப்பாகப் பாடிச் சிந்தை மகிழ்ந்தனர். பிள்ளைத்தமிழும், ஆற்றுப்படைகளும், அந்தாதிகளும், அம்மானைகளும் அழகுறப்பாடி வைத்தனர். மனங்கவரும் மாலைகளும் எழில் மிகுந்த ஏசல்களும், தித்திக்கும் திருப்புகழ்களும், கேட்டாரைப் பிணிக்கும் கீர்த்தனைகளும், சிந்தனையை ஈர்க்கும் சிந்துகளும், மழலைகள் மனங்களிக்கும் தாலாட்டுக்களும், கும்மிகளும் தெம்மாங்குகளும், கப்பல் பாட்டு களும், தோழிப்பெண் பாட்டுகளும் பற்பலவியற்றி இலக்கிய இதயங்களுக்கு இன்சுவை விருந்தளித்தனர். இஸ்லாமியத்

தொடர்பால் தமிழிலக்கியம் பெற்ற பயனுள்ள பகுதிகளாக படைப் போர்களும், முனுஜாத்துகளும், கிஸ்ஸாக்களும், நாமாக்களும் இடம் பெற்றன. கி. பி. 1589-ல் கோட்டாற்றில் அரங்கேற்றம் செய்யப்பட்ட மிஃராஜ் மாலையின் ஆசிரியர் ஆலிப்புலவர் தமிழ் முஸ்லிம் புலவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றார். ஞானப் புகழ்ச்சி முதற்கொண்டு திருமெய்ஞ்ஞானச் சரநூல் வரையிலே பல்பொருள்பற்றிப் பல்லாயிரம் பாடல்கள் பாடிவிட்டுத் தக்கலையில் உறையும் தவமாமேதை பீர்முகம்மது சாகிப் வலியுல்லாஹ் அவர்கள் நமது பண்பாட்டிற்கு வித்திட்ட இந்திய ஞானிகள் வரிசையிலே தனியிடம் பெற்று விளங்குகின்றார். அண்ணல் பெருமான் நபிகள் கோமான் அவர்களைத் தன்னிகரில்லாத் தலைவ ராகக் கொண்டு புலவர் கோமான் உமறு இயற்றிய சிந்தையள்ளும் சீறு இஸ்லாமிய இலக்கியப்பணியின் சிகரமாக அமைகிறது. புதுகுஷ்ஷாம், குதுபு நாயகம், திருமணிமாலை, திருக்காரணப் புராணம் ஆகிய அரிய இலக்கியங்களை அளித்த காயற்பட்டினம் சேகனுப்புலவர், புலவர் நாயகமாகப் பொலிவடைகிறார். இராச நாயகம், தீன்விளக்கம் போன்ற அரிய நூல்களை அளித்த வண்ணக்களஞ்சியப் புலவர் அவர்களும் நாகூர்ப்புராணம், ஆரிபு நாயகம் போன்ற நலமார் நூல்களை வழங்கிய நாவலர் குலாம் காதிறு அவர்களும், முஹ்யித்தீன் புராணம் ஈந்த பதுறுத்தீன் புலவர் அவர்களும், கனகாபிஷேக மாலை பாடிய கனகவிராசரவர் களும், செய்தத்துப் படைப்போர் தந்த குஞ்ஞுமூசுப் புலவர் அவர்களும் சிறந்த காப்பியப் புலவர்களாகச் சிறப்படைகின்றனர். திருமதினத்தந்தாதி போன்ற சீரிய பனுவல்களை யாத்த திருச்சி யின் இலக்கண வித்துவான் பிச்சை இபுருகீம் புலவர், சித்திரகவி வித்துவான் செய்யிதிமாம் பாவலர், சின்ன சீறு இயற்றிய காயல் பட்டினம் பனீ அகமது மரைக்காயர், திருப்புகழ் இயற்றிய காசிம் புலவர், அரும்புகழ் நூல்கள் ஆக்கிய அருள்வாக்கு அப்துல் காதிருப்புலவர், பிக்ஹ் மாலை இயற்றிய அதிரை காதிர் முஹயித்தீன் அண்ணவியார், பொன்னரிய மாலை புனைந்த மின்னு நூறுத்தீன் புலவர், முஹ்யித்தீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ் அளித்த சவ்வாதுப்புலவர், சீறுக் கீர்த்தனைகள் இயற்றிய கோட்டாறு செய்தபூபக்கர் புலவர் போன்ற நூற்றுக்கணக்கான அறிஞர்கள் அருந்தமிழ் நூல்கள் ஆக்கியளித்து நமது பண்பாட்டு வளர்ச்சிக்கு நற்றொண்டாற்றியுள்ளனர்.

"மாதவர்க்கரசான மன்னர்க்கு மன்னுக வந்த மகராஜனியே
மண்டிசையும் விண்டிசையும் எண்டிசையும் நின்றசையும்
வாசனும் போசனியே

ஆதிநீ மஹ்சுகு றஹ்மானு நீயெனக்கான மஹ்பூபு நீயே
அக்கானியத்திலே சொக்குமிறு சாறுதந்தருள் செய்ய
வந்த நீயே

வேதநீ வேத வேதாந்தநீ எனையாளும் வித்தகனதானு நீயே
மெய்ஞ்ஞான வீடுநீ வீட்டின்விளக்குநீ விரிகதிர்ச்சுடர் நீயே
நாதர் நவநாத சித்தநீ முத்தநீ நாதாந்த மூர்த்திநீயே
நற்குணங் குடிகொண் பாதுஷாவான குருநாதன்
முஹ்யித்தீனே"

என்பது போன்ற விழுமிய விருத்தங்களாலும்

"பாசமொழித்து நெறிபற்றி நின்ற வித்தகர்க்கு, வீசுந்
திருக்கருணை வீசும் நிராமயமே" என்பது போன்ற
கண்ணிகளாலும்

"போவோங் குணங்குடிக் கெல்லோரும் புறப்படுங்கள்
போவோங் குணங்குடிக் கெல்லோரும்" என்பது போன்ற
கீர்த்தனைகளாலும்

தத்துவ ஞானக் கருத்துக்களைத் தமிழ் நெஞ்சங்களில் வாரி இறைத்துத் தாயுமானவரை நினைவூட்டும் தத்துவப்பொய்கை குணங்குடி மஸ்தான் அவர்கள், அரபுமொழிப் புலமை வாய்க்கப் பெற்றவர்களென்பதும், பல அரபுக் கவிதைகளின் ஆசிரியர் என்பதும் பலருக்குத் தெரியாது. நூஹ் வலியுல்லாஹ், ஞானியாரப்பா, மச்சரேகைச் சித்தன் போன்றவர்களின் தத்துவ ஞானப் பாடல்கள் தமிழ் இலக்கியத்திற்கு அணியாகத் திகழ்வன. ஒருமவதானம் ஒரு நூறு செய்திந்தப் பாரில் பெயர்படைத்த செய்குத்தம்பிப் பாவலர் அவர்கள் கலைக்கடல் கடைந்து அரிய ஆற்றல்களை வெளிக்காட்டிய மேதையாவார். கவிதைத்துறையில் மட்டுமின்றி இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் பணியாற்றுகின்ற முஸ்லிம் அறிஞர்கள் பலர் இன்றும் தமிழகத்தில் வாழ்ந்து வருகின்றனர். முஸ்லிம் புலவர்களால் புனையப்பட்ட பிள்ளைத்தமிழ் நூல்கள் மட்டும் பதினன்கிற்கும் அதிகமாக உள்ளதெனின் பிற துறைகளைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? நமது பண்பாட்டில் ஊறித்திளைத்த நல்அறிஞர்கள் பலர் இஸ்லாமியநெறியின் ஊற்றுக் கண்ணுகவும், முஸ்லிம்களின் ஞானக் கண்ணுகவும், அமைந்த அண்ணல் நபிகள் நாயகமவர்களை நெஞ்சார வாயாரப் போற்றித் துதிப்பதில் வியப்பில்லை. காந்தியடிகள் போன்ற நாட்டுத் தலைவர்களும், குருநானக் போன்ற சமயத்தலைவர்களும் போகர் போன்ற ஞானமேதைகளும், திரு. வி. க. போன்ற தமிழ் மேதைகளும், பாப் சியாம் சுந்தர் போன்ற கவிஞர்களும் அண்ணல் பெருமானர் மீது பொழிந்துள்ள புகழ்ப் பூந்துணர்கள் இவ்வுண்மையை வலியுறுத்துவதாக அமையும்.

# வரலாற்றுச் சுடரொளியில் வண்ணத் தமிழகம்

— பேராசிரியர் கா. முகம்மது பாரூக், எம். ஏ.

தேனினும் பாலினும் சுவை தந்து ஊனிலும் உயிரிலுங்கலந்து உறவாடும் ஒப்பற்ற மொழி தமிழ்மொழி. இத்தமிழ்மொழி வழங்கும் தனிச்சிறப்புடைய நிலப் பரப்பு தமிழ்நாடு எனவும் தமிழகம் எனவும் கூறப்படும். தமிழகம் வரலாற்றுக்கு முற்பட்ட தொன்மையினையும் வரையறை செய்யவியலாத பெரும்பரப்பினையும் கொண்டு இலங்கிய நிலப்பகுதியாகும். இற்றை நாட்களில் இந்தியாவின் தெற்குப் பகுதியில் குறுகிய நிலப் பரப்பை உட்கொண்டிருக்கும் தமிழகம் முன்னர் குமரி முனைக்குத் தெற்கே தென்பட்ட பரந்து விரிந்த இலெமூரியா (Lemoria) என்னும் நிலப்பகுதியோடு தொடர்புற்று அப்பெரு நிலப்பரப்பின் வடக்கெல்லையாக விளங்கிற்றென்றும், இலெமூரியாக் கண்டம் தென் அமெரிக்கா, தென் ஆப்பிரிக்கா என்று ஒரு பக்கத்தோடும், மலேயா, ஆஸ்திரேலியா என்று இன்னொரு பக்கத்தோடும், தொடர்புடையதாக அமைந்திருந்தது என்றும் வரலாற்றறிஞர் குறிப்பிடுவர்[1]. ஸ்காட் எலியட் என்ற அறிஞர் 'இழந்த இலெமூரியா' (Lost Lemoria) என்னும் தமது நூலில் 'இலெமூரியாக் கண்டம் மனித நாகரிகத்தின் தொட்டில்' என்று குறிப்பிடுகின்றார். இக்கருத்துக்கு விளக்கம் நல்கும் ஜெர்மானிய அறிஞர் (Haeckel) இக்கண்டத்தில்தான் மக்கள் வாழ்வதற்குத் தகுந்த நிலையை முதலில் அடைந்தனரென்று உணர்த்துகின்றார். இங்குக் குறித்துள்ள இலெமூரியாக் கண்டம் குமரிக் கண்டம் எனவும் அழைக்கப்படுவதாகும். பஃறுளியாறும் பன்மலைத்தொகுதியும் பாங்குற ஓங்கிய அந்நிலப்பகுதி காலத்தின் கோலத்தால் கடல்கோளுக் குட்பட்டு அழிந்ததெனச் சிலப்பதிகாரம்[2], இறையனார் களவியலுரை[3] முதலிய தமிழ் நூற்கள் உணர்த்துகின்றன. தமிழகத்தின் தொன்மையை உணர்த்த முற்படும் ஸர் ஜான் ஈவான்ஸ் (Sir John Evans) என்ற அறிஞர், 'மனித இனம் தென்னிந்தியாவில் இருந்துதான் தோன்றியிருத்தல் வேண்டும்; மக்கள் உலகமெங்கும் இப்பகுதியிலிருந்தே பரவியிருத்தல் வேண்டும்' என்னும் உண்மையை நிறுவுகின்றார்[4]. இத்தகைய தொன்மைச் சிறப்பில் தோய்ந்துள்ள தென்னகம் பற்றி

---

1. V. R. R. Dikshitar: Pre-historic South India, P. 170,
2. சிலப்பதிகாரம்-காடுகாண்காதை 19-20:
3. இறையனார் களவியலுரை: பக், 6
4. T. R. Sesha Iyengar: Dravidian India, P. 63.

ஆராய முற்படும் அறிஞர்கள், 'தென்னிந்தியா தனக்கெனத் தனித்ததோர் இயல்பினையும் வரலாற்றையும் கொண்டிலங்குவதாகும்,'[5] எனவும், 'அஃது முன்னைய உலகின் மையமாகவும் இதயபீடமாகவும் பல்லாண்டு சிறப்புற்று விளங்கிற்று'[6] எனவும் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறாக உலகம் தோன்றிய போதே தோற்ற முற்றுத் திக்கெட்டும் புகழ் பரப்பி நின்ற தீந்தமிழ் நிலத்தில் தொடக்க நிலையிலிருந்தே வாழ்ந்துவரும் குடியினர் தமிழராவர். தமிழர் 'இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலிருந்து வந்த ஆரியருள் ஒரு வகையினரெனவும், அவ்வாரியரின் பகைவரான துரானிய வகுப்பினரெனவும், மேலை ஆசிய நாட்டிலிருந்து வந்தோரெனவும்' வழங்கும் கொள்கைகள் வன்மையற்றவை. தமிழ்ப் பெருங்குடியினர் தமிழகத்தின் ஆதிக்குடியினரே யாவர்[7]. தமிழகத்தின் ஆறுகள், அருவிகள், குன்றுகள், குக்கிராமங்கள், நகர்கள் முதலியவற்றிற்கு வழங்கும் தூய தமிழ்ப் பெயர்கள், இவ்வுண்மையை உணர்த்துதற்கு உறுதுணை புரிகின்றன.

முன்னைய தமிழ்ப் பெருமக்கள் குன்றாத ஆர்வமும் கூர்த்த அறிவு நிலையும் உந்தித்தள்ள தமது நாட்டெல்லையைக் கடந்து வையகமெங்கும் வலம் வந்து வெற்றிக்கொடி நாட்டி நின்றனர். அவர்கள் பெலுசிஸ்தான் (Baluchistan) மெசபடோமியா (Mesopotomia) முதலிய வடமேற்கு ஆசிய நாடுகளிலும் காக்கேசிய மலையின் பகுதிகளிலும் தங்கினர் எனவும், பர்மா, மலேயா, இலங்கை இந்தோசீனம் முதலிய தென்கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றை வென்று தம் ஆட்சிக்குள்ளாக்கினர் எனவும், உரோம்

---

5. 'Southern India, as distinguished from the plateau of the Deccan, from which it is separated by the Krishna (kitna) and Tungabhadra rivers, has a character of its own, and a history generally independent of that of the rest of India'—Vincent A. Smith, The Early history of India P. 456. 'The Southern extremity of the Indian peninsula has always had a history and character of its own'—J. Allan, Sir T. Wolseley Haig, H. H. Dodwell & R. R. Sethi, The Cambridge shorter history of India, P. 140.

6. 'South India, the home of the ancient Dravidians, was the heart and centre of the old world for ages'—T. R. Sesha Iyengar, Dravidian India, P. 137.

7. They have no traditions which point to any seat of their race out side India, or of their having migrated from any country with whose inhabitants they can claim any kindred. So far as we know they are indigenous and aboriginal, — Dr. Ferguson.

கிரேக்கம் ஆகிய நாடுகளோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்த னர் எனவும் வரலாற்றுச் சான்றுகள் அறிவுறுத்துகின்றன. தொன்மையான நாகரிகமுடைய உலக நாடுகள் நடுவண் தமிழ்த்திரு நாடு தனக்கேயுரிய தனிச் சிறப்பினைப் பெறுதற்கு அப்பெருமக்கள் துணைபுரிந்தனர். பாபிலோன், எகிப்து, சீனு, பினீசியா, எபிரேயம், கிரேக்கம், பாரசீகம், உரோம் முதலிய நாடுகள் தொன்மையான நாகரிகச் சிறப்புடைய நாடுகளாகும். இவற்றுள் பாபிலோனிய நாகரிகத் தொடக்கம் மிக முற்பட்டதாகக் கொள்ளப்படுகின்றது. எகிப்து நாகரிகம் கி. மு. 4000-க்கு முற்படு கின்றது; கி. மு. 2852-ல் வாழ்ந்த முதலரசன் வு. கி. (Fu-Hi) முதற்கொண்டு சீன நாகரிகம் பற்றித் தெரிய முடிகின்றது; பினீசியா கி. மு. 13-ம் நூற்றுண்டில் சிறப்புற்றிருந்த நாகரிகத்தைக் கொண்டிலங்கியது; கிரேக்க நாகரிகம் தோன்ற ஏதுவாயிருந்த மைசீனிய (Myceanean) நாகரிகம் கி. மு. 13-ம் நூற்றுண்டில் தொடங்குவதாக குறிக்கப்படுகின்றது. பாரசீக நாகரிகம் கி. மு. 6-ம் நூற்றுண்டிலும் உரோம நாகரிகம் கி. மு. 5-ம் நூற்றுண்டிலும் முதன்மை எய்தியதாக உணர்த்தப்படுகின்றது. ஆயினும் இந் நாகரிங்களோடு போட்டியிடும் தமிழ் நாகரிகமாகிய திராவிட நாகரிகத்தின் தொடக்கம் யாது என வரையறை செய்யத் தெளி வான மேனுட்டுச் சான்றுகள் இல்லாமற் போய்விடினும் குறிப் பாகச் சொல்லிச் செல்லும் பன்னுட்டறிஞர்களின் ஆய்வுரைகளும் இத்துறையில் இன்னும் போதிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட வில்லை என்பதையே உணர்த்துகின்றன.

வண்டமிழ்ப் பெருமக்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தி லேயே வளங்கொழிக்கும் வாழ்க்கையினைப் பெற்று சீரும் சிறப்பு முற்று நின்றனர் என்பதைத் தமிழ் நூற்கருத்துக்களும், வட நாட்டார் குறிப்புரைகளும், பிறநாட்டுச் சான்றுகளும் உணர்த்து கின்றன. தமிழ் நூற்களுள் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த தமிழர்தம் தொன்மையான அறிவு நிலையை அறிவிப்பது இறைய ஞர் களவியலுரை என்ற நூலாகும். இந்நூலின் வழி நின்று காணும் போது முச்சங்கங்களின் காலம் 9990 (4440+3700+1850) என அமைகின்றது. கடைச்சங்கத்தின் இறுதிக் காலம் கி. பி. 2-ம் நூற்றுண்டு எனக் கொள்ளின் தலைச்சங்கம் நிறுவப்பட்டது கி. மு. 9790 என்றுதல் வேண்டும். அவ்வாறுயின் தனிச்சங்கம் நிறுவி மொழி வளர்ச்சியில் ஈடுபட்ட தமிழர்தம் நாகரிகப் பொலிவு மிக முற்காலத்தைய நாகரிகங்களையுடைய நாடுகளை வென்று விடுகின்றது. 'தமிழ் மறவர்குடி' என்னும் தொடருக்கு விளக்கம் தரும் புறப்பொருள் வெண்பா மாலைப் பாடலொன்று,

கற்றேன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு
முற்றேன்றி மூத்தகுடி''

எனக் குறிப்பிடுகின்றது. பாடற்கருத்தில் உயர்வு நவிற்சியிருப்பினும், "தமிழ்க் குடியினரே உலகின் பழங்குடியினர்" என்னும் உறுதிவாய்ந்த உண்மை இப்பாடலுள் ஒளிர்வதைக் காணலாம். திருக்குறளில்,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐயம்புலத்தாறு ஓம்பல் தலை''

என்னும் பாடலில் வரும் 'தென்புலத்தார்' என்னும் தொடருக்கு விளக்கம் நல்கும் பரிமேலழகர் "படைப்புக்காலத்து அயனால் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி' அவர்க்கு இடம் தென்றிசையாதலின் தென்புலத்தார் என்றார் எனவும்,

"வழங்குவதுள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று''

என்னும் பாடலில் வரும் "பழங்குடி'' என்னும் தொடரினை விளக்கும் அதே உரையாசிரியர் 'சேர சோழ பாண்டியர் என்றாற் போலப் படைப்புக் காலந் தொடங்கி மேம்பட்டு வருங்குடி' எனவும் கூறியிருக்கும் கருத்துக்களை ஊன்றிப் பயிலும்போது ஸ்காட் எலியட், ஸர். ஜான் ஈவான்ஸ், ஹெக்கெல் முதலிய மேனாட்டறிஞர் கருத்துகட்குத் தமிழ் நூற்களே சான்று பகர்ந்து நிற்கும் நிறைவினைக் காணுகின்றோம்.

தென்னகத்துத் தமிழர் தம் தொன்மைச் சிறப்பை வடநாட்டு அறிஞர் குறிப்புரைகளிலிருந்தும் அறிந்து கொள்கின்றோம். அவ்வறிஞர்கள் திசையெல்லாம் இசைபரவ நாடாண்ட மூவேந்தர்தம் நல்லியல்பினையும் தமிழ்ப் பெருமக்களின் வணிகச் சிறப்பினையும் தம் நூற்களில் குறிப்பிடத்தவறவில்லை. தமிழ் நாட்டு முத்து வடநாட்டு 'இருக்கு' வேதத்தில் சிறப்புற்றது[8]. வடநாட்டு ஆதி காவியமாகிய வான்மீகி இராமாயணத்தில் பாண்டியர் பற்றியும் தமிழ்மொழி பற்றியும் சிறப்பான செய்திகள் இடம் பெற்றுள்ளன. தென்னகம் பற்றிய செய்திகளை முதன் முதல் அறிவிக்கும் வாய்ப்பினை வான்மீகி இராமாயணமே பெற்றுள்ளது[9]. 'பொன்னிறத்தை

---

8. 'The Sanskrit name of pearl (mukta) is from the Tamil muttu, its name in the land where it was dived for'.
— T. R. Sesha Iyengar, Dravidian India, P. 145

9. 'The story of Rama brings South India definitely into view for the first time'.
— T. R. Sesha Iyengar, Dravidian India, P. 16

உடையதாகவும், அழகினை உடையதாகவும், முத்துமணிகளினால் அலங்கரிக்கப்பட்டதாகவும், நகரத்து அரணோடு இணைக்கப்பட்ட தாகவுமுள்ள பாண்டியர் வாயிற் கதவை, வானரர்காள்! போய்க் காண்பீர்' என்னும் கருத்துடைய தொடர்கள் வான்மீகி இராமா யணத்தில் இடம் பெற்றுள்ளன. வான்மீகி முனிவர் குறிப்பிடும் 'கவாடம்' பாண்டியர் தலைநகராகும். சொல்லின் செல்வன் அநுமன் சிறையிருந்த மிதிலைச் செல்வியிடம் தூது சென்றபோது 'மதுரமான மொழியில் போசினான்' என வான்மீகி முனிவர் குறிப் பிட்டுள்ளார்[10]. அம்மதுரமான மொழி தமிழ்மொழி என்று கொள்ளப்படுகின்றது[11].

வியாசர் பாடிய பாரதத்தில், நாகிரிகத்தில் மேலும் முதிர்ச்சி அடைந்திருந்த தென்னகம் பற்றி அறிகின்றோம்[12]. ஐவருக்கும் நூற்றுவருக்கும் இடையே பெரும் போர் மூண்டபோது 'பெருஞ் சோற்று மிகுபதம் வரையாது' கொடுத்துப் புகழ் கொண்டோனாக 'பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன்' என்னும் சேர மன்னன் முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவரால் புறநானூற்றில் சிறப்பிக்கப்படுதல் இவண் நினைவுகூரத்தக்கது[13]. சேர சோழ பாண்டியர் திரௌபதியின் திருமண விழாவிற்கு வந்து, அவண் நிகழ்த்தப் பெற்ற இராச சூய யாகத்தைக் கண்டுகளித்தனர் என மகாபாரதமே குறிப்பிடுகின்றது. ஐவருள் ஒருவனான அர்ச்சுனன் பாண்டியன் மகள் சித்திராங்கதையை மணந்தான்.

கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த வடமொழி இலக்கண அறிஞர் காத்தியாயனர் தம் நூலில் சேர சோழ பாண்டிய அரசர் களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்[14]. அதே நூற்றாண்டைச் சேர்ந்த மோரிய மன்னன் சந்திரகுப்தனின் அமைச்சரான சாணக்கியர்

---

10. வான்மீகி இராமாயணம்—சுந்தரககண்டம் சர்க்கம் 30, சுலோகம் 43
11. ரா. ராகவையங்கார்—தமிழ் வரலாறு ப—7, 8
12. 'The Picture of South India presented in the Mahabarata is in marked contrast with that of Ramayana and exhibits a latter and more advanced stage in civilization'
— T. R. Sesha Iyengar, Dravidian India, P. 17,
13. புறநானூறு பாடல் எண்: 2
14. 'Katyayana, the grammarian of the 4th century B. C. who was probably a southener and who supplemented the aphorisms of Panini to bring his grammatical system up to date, makes mention of the country of the extreme south, Pandya, Chola and Kerala'
—K. A. Nilakanta Sastry, A History of South India, P. 66—67

என வழங்கப்படும் கௌடில்யர், பாண்டியர் பற்றியும் அவர்தம் முத்து வாணிபம் பற்றியும் சிறப்பித்துக் கூறுகின்றார்[15]. கௌடில்யரின் 'அர்த்த சாஸ்திரத்திலுள் பாண்டியரின் வணிகப் பொருட்களாகிய பருத்தியும் முத்தும் குறிக்கப்பட்டுள்ளன[16].

'தென்னாட்டு வணிகம் விலையுயர்ந்த விற்பனைப் பொருட்களைக் கொண்டிலங்கியது. வடநாட்டு வணிகமே கம்பளி ஆடை, தோல், குதிரை ஆகிய எளிய பொருட்களையே வணிகப் பொருட்களாகக் கொண்டிருந்தது[17]. எனவே வடநாட்டு வாணிகத்தைவிட தென்னாட்டு வணிகமே சிறந்தது' என்னும் கருத்தைக் கௌடில்யர் கொண்டிருந்தார். கி. மு. 273 முதல் 232 வரை இந்தியாவை ஆண்ட பேரரசர் அசோகர் கல்வெட்டுக்கள் சிலவற்றுள் மோரியா ஆட்சிப் பரப்புக்கு அருகாமையிலுள்ள தெற்குப் பகுதினர் பாண்டியராவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது[18]; வேறுசில கல்வெட்டுக்களில் சேரநாட்டரசர் கேரள புத்திரர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர்[19]. மோரியர் பற்றிய செய்தியினைத் தமிழ் இலக்கியமும் அறிவிக்கின்றது[20].

எனவே இக்குறிப்புரைகள் தென்பகுதியினர் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே சிறப்புற்று வருவோர் என்பதனையும் வடநாட்டினர் தென்னகத்தாரைக் குறித்து நீண்ட நாட்களுக்கு முன்னரே அறிந்திருந்தனர் என்பதனையும் உணர்த்தி நிற்பதை அறிகின்றோம்.

மிகப் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் நாட்டினர் பாபிலோன், சுமேரியா, கிரேக்கம், உரோமம் முதலிய மேலை நாடுகளோடும், அரபகம், எகிப்து, சுமத்திரா, மலாயா, சயாம், இலங்கை முதலிய கீழை நாடுகளோடும் அரசியல், வாணிகத் தொடர்புகொண்டு திகழ்ந்தனர். தமிழர்தம் தரை வணிகமும் கடல் வணிகமும் முற்காலத்தில் எவ்வாறு சிறந்தோங்கியிருந்தன என்பதனை வரலாற்றேடுகள் வனப்போடு குறிப்பிடுகின்றன.

---

15. 'Kautilya speaks of the pearls and muslins of the Pandya country'
— Ibid P. 67
16. 'The cotton and pearls of the Pandya country are mentioned in the Arthasastra'
— The Cambridge shorter history of India, P. 142
17. T. R. Sesha Iyengar - Dravidian India, P. 143 -44
18. The Cambridge Shorter History of India, P. 142
19. Ibid P. 151
20. 'முரண்மிகு வடுகர் முன்னுற மோரியர்' (அகம். 281)

தமிழர் பயன்படுத்திய மரக்கலத்தின் பிரிவுகளையுணர்த்தும் கலம், கப்பல், அம்பி, ஓடம், நாவாய், தெப்பம், தோணி, மிதவை, திமில், கட்டுமரம் முதலிய சொற்கள் கன்னித் தமிழ் மக்கள் முற்காலத்தில் கடல் வணிகத்தில் தேர்ந்திருந்தனர் என்பதைத் தெளிவுறக் காட்டுகின்றன. தமிழ் நாட்டு வணிகர் அகில், சந்தனம், முத்து முதலிய தம் நாட்டுப் பொருட்களை உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் எடுத்துச்சென்றனர். பிறநாட்டு வணிகர்கள் தமிழ் நாட்டுக் காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, முசிறி முதலிய துறைமுகங்களுக்கு மது வகைகள், பாவை விளக்குகள், போர்ப்பொறிகள் முதலியவற்றைக் கொண்டுவந்தனர். அப்பிறநாட்டு வணிகர்கள் வசதியோடு குடியிருப்புக்களை அமைத்துக்கொண்டு தமிழ் நிலப்பகுதிகளில் வாழ்க்கை நடத்தியுள்ளனர்[21].

அறிவியல் வளர்ச்சி குன்றிய அக்காலத்தில் தென்கிழக்குப் பருவக்காற்றின் துணைக்கொண்டு ஜூலை, ஆகஸ்டு திங்களில் அரபகத்திலிருந்து முசிறித் துறைமுகத்திற்குப் பயணம் மேற்கொள்ளின் அது முடிவடைய நாற்பது நாட்கள் ஆகும். அரபிய வணிகர்கள் தாம் கொண்டுவந்த பொருட்களை விற்பனைசெய்து விட்டு டிசம்பர் அல்லது ஜனவரித் திங்களில் தம் தாயகம் திரும்பினர்[22]. தமிழ் நாட்டு வணிகர்கள் பிறநாட்டு வணிகர்களோடு வணிகத் தொடர்பு கொண்டபோது தமிழ்ச் சொற்கள் பலவும் அப்பிறநாட்டு மொழிகளில் இடம்பெறத் தொடங்கின. மயிலைக்குறிக்கும் 'தோகை' என்னும் சொல் எபிரேய மொழியில் "துக்கிம்" ஆயிற்று[23]: அகில் "ஆல்மக்" ஆயிற்று. தமிழ் அரிசி கிரேக்கத்தில் "ஒரைஸ்" என வழங்கப்பட்டது[24]. கறுவாய் கிரேக்க மொழியில் "கற்பியன்" ஆகவும் "இஞ்சிவேர்" "சிஞ்சிபெரோஸ்" ஆகவும் திப்பிலி 'பெப்பரி' ஆகவும் மாறின.

பன்னெடுங் காலத்திற்கு முன்னமேயே தமிழர் சாலதீயரோடு வணிகத் தொடர்புகொண்டு விளங்கினர்[25]. அவர்கள் எகிப்தோடும், அரபகத்தோடும், சைனவோடும், மலாயாத் தீவு

21. 'The Romans are said to have had two Cohorts stationed at Muziris (Cranganore) in the Chera country to protect their interest, and even to have built a temple of Augustus,—The Cambridge Shorter History of India, P-141
22. Vincent A. Smith-The Early History of India, P-477
23. The Cambridge Shorter History of India, P-140
24. Oppert-on the Ancient Commerce of India, P-37
25. 'The Dravidian speaking races of India traded with the Ancient Chaldeans before the Vedic language found its way into India, — T. R. Sesha Iyengar, Dravidian India, P-138

களோடும் அவ்வாறே வணிகத்தொடர்பு கொண்டிருந்தனர்[26]. கி. மு. 4000 ஆண்டுகட்கு முன்னர் சுமேரிய தேசத்து அரசர் தலைநகராகவும் பாபிலோனியத் துறைமுகமாகவும் விளங்கிய 'ஊர்' என்னும் இடத்தில் நமது இந்திய நாட்டுத் தேக்கு மரத்தால் ஆன உத்திரம் கிடைத்துள்ளதெனவும், அத்தேக்கு தென் இந்தியாவில் மலபார் கடற்கரைப்பகுதியில் மட்டுமே வளர்வதென்றும் வரலாற்றுசிரியர் குறிப்பிடுவர்[27].

கி. மு. 1462-ம் ஆண்டுவரை எகிப்தில் ஆட்சிசெய்துவந்த 18-ம் தலைமுறையைச் சார்ந்த இறந்தோரின் சடசலங்களிற் போர்த்தப்பட்டிருந்த துணி இந்திய மஸ்லின் ஆகுமென்று அறிய முடிகின்றது. அக்காலத்தைய எகிப்தியர் பயன்படுத்திய நீலச் சாயத்திற்காக அவர்கள் தமிழகத்தைச் சாரவேண்டியதிருந்தது[28]. கி. மு. 8-ம் நூற்றுண்டிற்கு முன்னரே தென்னிந்தியாவிற்கும் மேலை ஆசியாவுக்கும் இடையே முறையான கடல்தொடர்பு ஏற்பட்டிருந்தது[29]. கி. மு. 727 முதல் 722 வரை அசிரிய நாட்டை ஆண்டுவந்த நான்கம் சால்மனேசர் (Shalmaneser IV) என்னும் மன்னனுக்கு வேதங்களில் குறிக்கப்படாத யானை தமிழ் நாட்டின் சார்பாக அன்பளிப்பாக வழங்கப்பட்டது[30]. கி. மு. 604-ல் இருந்து 562 வரை ஆட்சிசெய்த மூன்றும் நெபுகாட்நேச்சார் (Nebuchadnezzar III) என்ற வேந்தனின் பீர் நிமரூட் (Birs Nimrud) என்னும் இடத்திலுள்ள அரண்மனையில் இந்திய உத்திரமொன்று கண்டெடுக்கப்பட்டது. பாபிலோனுக்கு முதன்முதலாக மயிலைக்கொண்டுவந்த இந்திய வணிகர்கள் பற்றிய குறிப்பு பவரு ஜாதக (Baveru-Jataka) என்ற நூலில் காணப்படுகிறது. இக்குறிப்புகளின் துணைகொண்டு கி. மு. 6, 7, 8-ஆம் நூற்றுண்டுகளில் தமிழகத்திற்கும் மேலை ஆசியாவிற்கும் இடையே நடைபெற்ற கடல் வணிகத்தின் உயர்வைக் கண்டுகொள்ளலாம்[31]. கி. மு. 5-ம்

---

26. The Cambridge Shorter History of India, P-26
27. 'Indian teak was found in the ruins of Ur, and it must have reached there from India of the fourth millennium BC. when it was the sea-port of Babylon and the capital of the Sumeria; Knigs. This particular tree grows in Southern India, where else, it advances close to the Malabar Coast and no where-else; there is none to the north of Vindhya' T. R. Sesha Iyengar, Dravidian India, P-138.
28. Ragozin's Vedic India. P-305
29. T. R. Sesha Iyengar, Dravidian India. P-138
30. Vide Kennedy's Article J. R. A. S. 1898
31. No. 339. Jataka iii, the Cambridge Edition.

நூற்றுண்டில் வாழ்ந்த ஹிரொடாட்டஸ் (Herodotus) என்ற கிரேக்க ஆசிரியர் தம் நூலில் தமிழ் நாட்டைப்பற்றிக் குறித்துள்ளார்.

“பண்டைக்காலத்திலிருந்தே இலங்கை அரசர்கட்கும் சோழ பாண்டிய அரசர்கட்குமிடையே தொடர்புகள் ஏற்பட்டு இருந்தன என்று மகாவம்சம் (Mahavamsa) இராசா வளி (Raja vali) இராசா இரத்திநகரி (Rajarathnakari) முதலிய நூற்களிலிருந்து அறிந்துகொள்கின்றோம். விசயன் என்னும் வேந்தன் கி. மு. 543-ம் ஆண்டு இந்தியாவிலிருந்து இலங்கை வந்து சேர்ந்தான். இலங்கையை ஆண்ட அவ்விசயன் பாண்டிய இளவரசியை மணந்துகொண்டான்[32]. அவ்வமயம் பாண்டிய இளவரசியுடன் 700 உயர் குடும்பப் பெண்களும், 18 அரசாங்க ஊழியரும் அடிமைகளும், 75 பணியாளரும் இலங்கை வந்தார்கள்[33]. கி. மு. 2-ம் நூற்றுண்டின் நடுவண் ‘எலாரா’ (Elara) என்ற சோழன் இலங்கையை வென்று ஏறத்தாழ அரை நூற்றுண்டு அப்பகுதியைத் தன் ஆட்சியின் கீழ் வைத்திருந்தான்[34].

முன்னைய நாட்களில் உரோம, கிரேக்க நாடுகளுக்கும், தமிழகத்திற்குமிடையே மிக நெருங்கிய அரசியல் வணிகத் தொடர்புகள் ஏற்பட்டிருந்தன. தமிழ்நாட்டு முத்தினைப் பெறுதற்கு மேல் நாட்டினர் மிகுந்த ஆர்வங்காட்டினர். உரோமநாட்டுப் பெண்டிர் தமிழ்நாட்டு முத்துகளைப் பெரிதும் விரும்பினர்[35]. கயஸ் கிலாடியஸ் (Caius Claudius) என்ற பேரரசனின் துணைவி உலோலா (Lolla) 30,0,000 ‘ஸ்டர்லிங்கு’ மதிப்புள்ள முத்துகளை அணிந்துகொண்டு பொதுவிடங்களில் தோன்றினள். கிளியோபட்ரா (Cleopatra) என்ற பேரரசி கீழை அரசுகளின் சொத்தாக முற்காலத்திலிருந்த இரு விலையுயர்ந்த முத்துகளைக் காதுகளில் குண்டலங்களாக அணிந்துகொண்டாள்[36]. இத்தகைய ஆடம்பர வேட்கையின் காரணமாக உரோம நாணயத்தின் 2,00,000 ஸ்டர்லிங்குகளை இந்தியா ஆண்டுதோறும் விழுங்கியது என்பதாக வரலாற்றுசிரியர் பிளினி (Pliny) சினந்து கூறுகின்றார்[37]. பாண்டிய வேந்தன்

---

32. Radhakumud Mookerjee's Indian Shipping P. 70.
33. *ந. சி. கந்தையா-உலக நாகரிகத்தில தமிழர் பங்கு ப. 15.*
34. The Cambridge Shorter History of India, P-146.
35. T. R. Sesha Iyengar—Dravidian India, P-149.
36. Ibid, P-150.
37. T. R, Sesha Iyengar-Dravidian India, P-150.

ஒருவன் கி. மு. 20-ல் அகஸ்டன் சீசர் என்ற மன்னனிடத்துத் தூதுக்குழு ஒன்றை அனுப்பியதாகக் கேள்வியுறுகின்றோம். பாண்டியநாட்டுக்குள்ளிருந்த சந்தைகளையும் துறைமுகங்களையும் குறித்து பெரிப்ளுஸ் (Periplus of the Erythrean Sea-C. A. D. 80) என்ற வரலாற்று நூலின் ஆசிரியரும் தாலமி (Ptolemy-C. A. D. 140) என்ற நில நூலின் வல்லுநரும் நன்கறிந்திருந்தனர்[38].

மேல்நாட்டு வணிகர்கள் அடிக்கடி வந்து தங்கிச் செல்லும் துறைமுகமாக மேலக்கடற்கரையிலுள்ள முசிறி செயல்பட்டது. உரோமர்கள் தம் வணிகப் பாதுகாப்பிற்காக இரண்டாயிரம் பேரை உட்கொண்ட படையொன்றை முசிறியில் வைத்திருந்ததாக பியூதிங்கர் தொகை நூலின் (Peutingerian Tables) துணைகொண்டு அறிகின்றோம். அகஸ்டஸுக்காக அப்பகுதியில் கோயில் ஒன்றும் கட்டப்பட்டது[39]. பூம்புகார் நகரிலும் ஒரு வெளிநாட்டுக் குடியிருப்பு (Colony) அமைக்கப்பட்டது[40]. மலபார் கடற்கரைப் பகுதியில் பைசாந்தியக் (Byzantium) குடியிருப்பு ஒன்று இருந்தது[41]. சோழநாட்டுத் துறைமுகங்களில் கி. மு. முதலிரு நூற்றுண்டுகளில் மேலைநாட்டுக் கீழைநாட்டு வணிகத் தொடர்புகள் நிகழ்ந்ததாக அறிகின்றோம்[42]. இந்நூற்றுண்டுகளில் இந்தியாவிற்கு வந்துகொண்டிருந்த வெளிநாட்டு வணிகர் தொகை பெருகிற்று. அக்காலத்தில் வணிக வசதிக்காக அவுரி (Aurei), திஞரி (Dinari) ஆகிய நாணயங்கள் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டன. கோயில் விளக்குகட்காக திஞரியாக வழங்கப்பட்ட நிபந்தங்கள் (gifts) குறித்தும் நாம் கேள்விப்படுகின்றோம். சிறு உரோம நாணயங்கள் உள்நாட்டிலுள்ள வெளிநாட்டினர் குடியிருப்புகளில் வெளியிடப்பட்டன. உள்நாட்டில் புழக்கத்தில் இருந்த பணம் உரோமநாட்டு நாணயங்களாக மாற்றம் செய்யப்படும் அளவுக்கு உரோம வாணிகத்தின் சிறப்பு மிகுந்திருந்தது. தென்னிந்தியாவில் கோட்டயம், கலியம்புத்தூர், பொள்ளாச்சி, கருவூர், புதுக்கோட்டை முதலிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட உரோம நாணயங்கள் இவ்வுண்மைக்கு உறுதுணை புரிவன[43].

---

38. Vincent A. Smith—The early History of India, P-471.
39. T. R. Sesha Iyengar—Dravidian India, P-148.
40. Vincent A. Smith—The Early History of India, P-462.
41. Tamilian Antiquary No. 1, Vol. VI, P-14.
42. Vincent A. Smith—The Early History of India, P-481.
43. T. R. Sesha Iyengar—Dravidian India, P-148.

கி. பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த பிளினி (Pliny) என்ற வரலாற்றுஆசிரியர் பாண்டியநாட்டுத் துறைமுகங்களின் பாதுகாப்பான நிலையினையும் முசிறித் துறைமுகத்துக் கடற்கொள்ளைக்காரரையும் பற்றிக் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்: "எகிப்து நாட்டு ஒசிலிஸ் துறையினின்றும் (Ocelis) புறப்படும் கலம் தென்மேற்குப் பருவக்காற்றின் உதவியால் நாற்பதே நாட்களில் முசிறியை வந்தடைந்துவிடும். அம்முசிறியிலோ கடற்கொள்ளைக் கூட்டத்தினர் இருப்பர். அவர்கள் நித்திரியாஸ் (Nitrias) என்ற இடத்தில் உறைபவர் ...... இம்முசிறிப் பகுதிக்குரிய வேந்தன் கேளோபோதிராஸ் (Caelobothras). இம்முசிறியைவிட நியாசிண்டி (Neacyndi) நாட்டின்கண் உள்ள பாரேஸ் (Barace) துறை சிறப்புற்று விளங்குகின்றது. அதற்குரிய வேந்தன் பாண்டியன் (Pandian) உள்நாட்டில் மதுரை (Modora)யில் இருக்கின்றான்; பாரேஸ் துறைக்குக் கோட்டநாராவிலிருந்து மிளகுப் பொதிகள் வருகின்றன"[44].

மேலைநாட்டார் தம் நாட்டைத் துறந்து தமிழகத்தில் வந்து தங்குவதற்குக் காரணமாயிருந்த வணிகப் பொருட்களில் மிளகு, முத்து, கோமேதகம் (Beryl) ஆகியவை சிறப்பானவை. இவை வேறெங்கும் கிடைப்பன அன்று. மிளகு ஐரோப்பியச் சந்தையில் மிகவுயர்ந்த மதிப்புக்கு விலைபோனது. அலாரிக் (Alaric the goth) என்ற அரசன் கி. பி. 409-ல் உரோம் நாட்டிலிருந்து போரிழப்பீடு (war indemnity) கோரியபோது 3000 பவுண்டு மிளகும் உடன்தருதல் வேண்டுமென அவனது நிபந்தனை மிளகினையும் உட்படுத்தியது; அவ்வளவுக்கு மிளகின் மதிப்பு அக்காலத்தில் உயர்ந்திருந்தது.[45]

கிரேக்கர், உரோமர் முதலிய வெளிநாட்டு வணிகர் தம் தொகை தமிழகத்தில் பெருகிய காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் அவ்வணிகர்களை "யவனர்" எனக் குறிப்பிட்டன.

தென்னிந்தியாவில் மேலைநாட்டு வணிகத் தொடர்பைவிடக் கீழைநாட்டுத் தொடர்பு மேலும் சிறப்புற்றிருந்தது.[46] கி.பி. 11-ம் நூற்றாண்டில் சோழ வேந்தன் ஒருவன் சுமத்திராவின் மீது படையெடுத்த செய்தியை அந்நாளைய லூபாடுவா (Lubadua) கல்வெட்டு அறிவிக்கின்றது. சயாம் நாட்டு அரசவை அந்

---

44. William Logan's Malabar, P-253.

45. Vincent A. Smith—The Early History of India, P-681.

46. The eastern Sea-trade of India exceeded its western trade.
— Schoff, (J. A. O. S 37, P 242)

தணர்கள் தமிழ்நாட்டிலிருந்து அவண் சென்று குடியேறியவ ராவர் எனக் கூறப்படுகிறது. இந்தோனேசியாவில் சைவசமயத் தத்துவங்கள் சிறப்பாகப் போற்றப்படும் நிலையிருந்தது.

இவ்வாறாகத் தமிழ் நாட்டு நூற்களினின்றும், வடநாட்டறிஞர் குறிப்புரைகளினின்றும், மேனாட்டறிஞர்களின் குறிப்புகளினின்றும், வரலாற்றாசிரியர்களின் சான்றுரைகளிலிருந்தும், பலநாட்டு மொழி களுள்ளும் கலந்துறவாடும் தமிழ்ச் சொற்களின் துணைகொண்டும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னாலிருந்தே அளப்பரும் புகழ் நிலைகளைத் தழுவிவரும் தமிழ்ப் பெருங்குடியினரின் தொன்மைச் சிறப்பினை ஓரளவுக்குத் தெரிந்து கொள்கின்றோம்.

இவ்வாறாகப் பன்னெடுங்காலமாகப் பாருலகு போற்றும் வண்ணம் பைந்தமிழ்க் குடியினர் பல்கி வாழ்ந்து வரும் தென்னகத்தை வரலாற்றாசிரியருக்கு வாய்த்த பொன்னகம் எனப் புகழ்வது பொருத்தம்தானே!

---

The first Muslim fleet appeared in Indian waters in 636 A. D. during the Caliphate of Umar, when Usmān Sakifi the Governor of Bahrain and Uman, sent an army across the sea to Tana. He was rebuked by the Caliph who threatened to meet out dire punishment to his kinsman if the experiment was repeated. About the same time expeditions were sent to Broach and Dabul, but Umar's opposition temporarily suspended the activities of the fleet and the policy of armed interference remained in abeyance. During the Caliphate of Umar the land approaches to India were explored and a great deal of information was collected, which led ultimately to the conquest of Sindh in the eighth century by Muhammad bin Qāsim. Meanwhile commerce by sea continued, and Muslims made their settlements in three towns along the South Indian coast and in Ceylon. Rowlandson says that the Muslim Arabs first settled on the Malabar coast about the end of the seventh century. Francis Day corroborates this from traditionary accounts, and Sturrock in his account of the Moplahs confirms it.

—TARACHAND, **Influence of Islam on Indian culture, pp. 31—32**

# தென் குமரியில் இஸ்லாம்

**எம். எம். மீரான் பிள்ளை,** எம். ஏ., பி. எஸ்சி.,
சான்றிதழ் மொழியியல்; காந்தியம்.

## முகவுரை :

இந்தியாவின் இஸ்லாமிய வரலாறு ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொன்மை வாய்ந்தது. முதன் முதலில், கி. பி. ஆரும் நூற்றாண்டில் கேரளாவின் மேலைக்கடற் கரைகள் வழி பரவ ஆரம்பித்த இஸ்லாம், பின்னர் தமிழக, சிந்துக்கரைகளிலும் வளர்ந்து பரவ ஆரம்பித்தது. முந்தைய சேரநாடாகவும் பிந்திய திருவிதாங்கூர்-கொச்சி மாநிலமாகவும் இருந்து இஸ்லாத்தை அணைத்து வளர்த்த கேரளாவின் இஸ்லாமிய வரலாற்றில், 1956-ஆம் ஆண்டுவரை அதன் ஒரு பகுதியாயிருந்த குமரி மாவட்டத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்கு உண்டு என்பதை மறக்க முடியாது.

## தென் குமரியின் தொல்புகழ் :

உலக வரலாற்றில் மிகவும் தொன்மையான கண்டம் என்று கருதப்படுகின்ற லெமூரியாவின் எஞ்சிய பகுதியே தற்போதைய குமரி மாவட்டம். [1]கடல் கொள்வதற்குமுன் [2]நாற்பத்தொன்பது நாடுகளைக் கொண்ட ஒரு கண்டமாக, உலகின் பிற கண்டங் களுடன் இணைந்திருந்த குமரிக்கண்டத்தை "மனிதனின் தோற்றப் பிரதேசம்" என்றும், [3]மனித நாகரிகத்தின் தொட்டில்" என்றும் வரலாற்றுசிரியர் குறிப்பிடுவர். குமரியின் நாகரிகம் சிந்து, சுமேரிய நாகரிகங்களுக்கு இணையான, ஐயாயிரம் ஆண்டுகள் தொன்மை வாய்ந்தது. இந்தத் திராவிட நாகரிகப் பிரதேசத்தில் பிறந்தவர்களே தொல்காப்பியரும், அதங்கோட்டா சானும் என்பர் தமிழறிஞர். அகத்தியரும், வள்ளுவரும், ஔவையாரும் கூட இப்பிரதேசத்தில் பிறந்தவராக, வாழ்ந்தவ ராகவே கருதப்படுகின்றனர். இத்தகைய பழம்புகழ் வாய்ந்த குமரி அன்றிலிருந்தே சமணம், சைவம், வைணவம், கிறித்தவம், இஸ்லாம் போன்ற பல்வேறு சமயங்களையும், சமய இலக்கியங் களையும் அணைத்துப் போற்றி வளர்த்துள்ளது குறிப்பிடத்தக்கது.

---

1. 'பஃறுளி யாற்றுடன் பன்மலையடுக்கத்துக்
   குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள'—சிலப்பதிகாரம்.
2. அடியார்க்கு நல்லார்—சிலப்பதிகார விளக்கவுரை.
3. Scott Elliot—The Lost Lemuria.

### அரபகமும் சேரநாடும் :

இந்தியாவிற்கும் அரபு நாடுகளுக்குமிடையே மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாணிபத் தொடர்பு இருந்து வந்தது. இந்தியா மீது உள்ள உறவை உறுதி செய்யும் வகையில் பல அரேபியர்கள் 'ஹிந்த்' என்ற பெயரைச் சூட்டிக் கொண்டனர். இந்தியப் பிரதேசத்தைச் சுற்றிய கடலும் அரபிக்கடல் என வழங்கப்பட்டது. இத்தகைய வாணிபத்தொடர்பில் முதலிடம் வகிப்பது சேரநாடு என்று வரலாற்றுசிரியர் கருதுகின்றனர். கேரளக் கடற்கரை ஓரங்களில் அரேபிய வாணிகர்களும், கப்பற் பயணி களும் தங்கவும் குடியேறவும் ஆரம்பித்தனர். இதனுல் அவர்கள் பண்பாடு, கேரள மண்ணில் தாக்கம் பெற ஆரம்பித்தது. சுலைமான் நபி (அலை) அவர்கள் காலத்தில் தாக்கம் பெற்ற வாணிபப் பண்பாட்டுத் தொடர்பு முகம்மது நபி (ஸல்) அவர்கள் காலத்தில் உறுதியான வளர்ச்சி பெற்று, கலீபா உமர் (ரலி) காலத்தில் எழுச்சி பெற்றமைந்தது. வாணிபத் தொடர்பில் ஏற்பட்ட இந்த வளர்ச்சியே படிப்படியாகப் பண்பாடு, சமயநிலை களில் தாக்கம் பெறக் காரணமாக அமைந்தது.

### மன்னர் கண்ட மாநபி அதிசயம்

சேரமன்னர்களில் கடைசி மன்னரான [4]சேரமான் பெருமாள் முகம்மது நபியவர்கள் காலத்தில் கேரளத்தை ஆண்டுவந்தார். அக்காலத்தில் அரபகத்தில், [5]அமாவாசை இரவன்று, விண்ணில்

---

4. இந்நிகழ்ச்சி பள்ளிபாணப் பெருமாள் எனும் மன்னர்காலத் தில் நடந்ததாகவும், அவரே அரசு பதிவேட்டில் குறித்து வைத்து, பின்பு அரேபியா சென்று இஸ்லாத்தைத் தழுவி, ஸகர்முல்லா எனுமிடத்தில் இறந்ததாகவும், பிற் காலத்தில் இந்நிகழ்ச்சியைப்பற்றி ஆதம்மலை காணவந்த அரேபியர்களிடம் கூறித் தெளிந்து பின்பு அரேபியா சென்று இஸ்லாம் தழுவி, ஏமனிலுள்ள ஸபாரில் இறந்தவரே சேரமான் பெருமாள் என்றும் மற்றெரு வரலாறுகூறுகின்றது.

5. இந்நிகழ்ச்சிபற்றி மலபாரிலுள்ள ஒரு இந்துக்கோயிலில் வட மொழியில் கல்வெட்டு ஒன்று உளது. அதில் நிகழ்ச்சி கண்ட மன்னர் சோதிடரை அழைத்து நபி பற்றி அறிந்து, அரேபி யாவிற்குப் பண்டிதர்களை அனுப்பி உண்மையறிந்து, பின்னர் அரேபியா சென்று இஸ்லாம் தழுவியதாகக் குறிப்பிடப்பட் டுள்ளது.

நிலவைத் தோன்றச்செய்து, அதை நிலத்திற்கு அழைத்து, இரு கூறுக்கிக் காட்டினார்கள் முகம்மது நபி (ஸல்) அவர்கள். இந்த அற்புதக் காட்சியைக் கேரளத்தில் கண்ட சேரமான் பெருமாள், இந்நிகழ்ச்சி எவ்வாறு நிகழ்ந்தது? என்று வியப்படைந்து, உடனே அரசு பதிவேட்டில் குறித்து வைக்க ஏற்பாடு செய்தார்.

## ஆதம் மலை நோக்கி அரேபியர்கள்

இலங்கையில் ஆதி நபி ஆதம் அவர்களின் பாதம் பதிந்த மலையைக் காண, அரேபியாவிலிருந்து ஷெய்கு ஷஹிருத்தீன் தலைமையில் சில முஸ்லீம்கள் மரக்கலமொன்றில் புறப்பட்டார்கள். திடீரென்று ஏற்பட்ட பயங்கரப் புயலும், கடல் கொந்தளிப்பும் அவர்களை அருகிலுள்ள [6]கொடுங்கல்லூரில் இறங்கச் செய்தது. அவர்களை மக்கள் மன்னரிடம் சேர்க்கத் தாம் முகம்மது நபியின் வழிவந்த இஸ்லாமியர் என்றும், நபியின் அதிசயங்களையும் மன்னரிடம் அவர்கள் தெரிவிக்க, மன்னரும் முந்திய அற்புதத்தை அவர்களிடம் சொல்லி உண்மையைத் தெளிகின்றார். அந்நேரத்திலேயே முகம்மது நபி (ஸல்) அவர்கள்மீது மன்னருக்கு அளவு கடந்த பற்றும் நம்பிக்கையும் ஏற்பட, "நீங்கள் ஆதம்மலை கண்டு திரும்பும்போது இங்கு வந்துவிட்டுச் செல்லுங்கள்" என அரேபியக் குழுவினரிடம் வேண்ட, அவர்களும் சம்மதித்து, இலங்கை நோக்கிப் புறப்பட்டனர்.

## இஸ்லாத்தில் சைவ மன்னர்

மன்னர் தமது நாட்டைப் பதினெட்டுப் பகுதிகளாகப் பிரித்துப் புதல்வர், மருமக்கள், தலைமைப் பிரபுக்கள் இவர்களிடம் ஒப்படைத்து விட்டுத், திரும்பிவந்த அரேபியர்களுடன் ரகசியமாக [7]மக்காவிற்குப் புறப்பட்டுச் செல்கின்றார். அங்கு சென்று இஸ்லாத்தைத் தழுவி[8] அப்துர் ரஹ்மான் சாமிரி எனப் பெயரும் பெறுகிறார். பின்னர் திமிஷ்கு நாட்டு மன்னர் மாலிக் ஹபீபின் புதல்வியான

---

6. குமரி மாவட்டம் குளச்சல் துறைமுகத்தில் இறங்கியதாக மகான் மாலிக்முஹம்மது மவ்லிதுஷரிபு கூறுகிறது.
7. நபிகள் நாயகத்தின் 57-வது வயதில் அவர்களைச் சந்தித்ததாகவும் கேரள வரலாறு கூறுகின்றது.
8. தாஜுதீன் என்ற பெயரும், மணிவிக்கு ராஜியத் என்ற பெயரும் உண்டு. அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ருஹையாவைத் திருமணம் செய்து வாழ்கின்றுர். கேரளாவில் இஸ்லாத்தைப் பரப்பவேண்டும் என்று ஆவல்கொண்ட சாமிரியின் வேண்டுகோளுக்கிணங்க, மன்னர் மாலிக் ஹபீப், தன் மகன் மாலிக் இப்னுதீனுர் குடும்பத்தினருடன் சில அறிஞர்களையும் சாமிரியுடன் அனுப்பிவைக்கிருர். வழியில் சாமிரி நோய்வாய்ப் பட்டு ஸகர்முல்லாவில் மரணமடைகின்ருர்.

## மாலிக் இப்னுதீனுர் குழுவினர்

அப்துர் ரஹ்மான் சாமிரி மரணத்தருவாயில் கேரள மன்னருக்கு அறிமுகக் கடிதமும், அடையாள அணிகலன்களும் தம் குழுவினரிடம் கொடுத்துத் தாம் இறப்பினும் தொடர்ந்து பயணத்தை நடத்தக் கூறுகிருர். இரண்டு கப்பல்களில் வந்த இந்தக் குழுவினரில் மாலிக் இப்னுதீனுர் குழுவினர் கி. பி. 644-ல் கொடுங்கல்லூரில் வந்து சேருகின்றனர். மற்ருெரு குழு காயல் பட்டினத்தை அடைகின்றது. அறிமுகக் கடிதம் பெற்ற கேரள மன்னன், இக்குழுவினருக்குக் கொடுங்கல்லூரில் தங்குவதற்குரிய வீடு, நிலம் முதலியவற்றையும், இறையாலயம் எழுப்புவதற்குரிய இடங்கள் முதலியவற்றையும் கொடுத்துதவுகின்ருன். இக்குழுவில் மாலிக் இப்னுதீனுரின் புதல்வர்களான, ஹபீப், தகீயுதீன், மூஸா, உமர், முஹம்மது, அலி, அப்துர்ரஹ்மான், ஹுசைன், இப்ராஹீம், ஹஸன் ஆகியோரும் புதல்விகளான பாத்திமா, ஆயிஷா, ஸைனபா, தனீரத், ஹலீமா ஆகியோரும் சில உறவினரும், சமய அறிஞர்கள் பலரும் அடங்கியிருந்தனர். மாலிக் இப்னுதீனுர், கொடுங்கல்லூரைத் தலைமையிடமாகக் கொண்டு மதப்பிரச்சாரம் செய்ய, தம் குழுவினரைக் கேரளாவின் பல பாகங்களுக்கும் அனுப்பிவைத்தார். குமரிமாவட்டப் பகுதிக்குச் சமயப்பிரச்சாரத் திற்குத் தம் மகனுர் முஹம்மது இப்னு மாலிக் என்பவரையும், சில அறிஞர்களையும் அனுப்பிவைக்கிருர்.

## குமரி கண்ட இஸ்லாம்

குமரி நோக்கி வந்த மாலிக் முஹம்மது அவர்களும் குழுவினரும் தொழுகைக்கான காலம் நெருங்கவே ஓரிடத்தில் பாங்கொலித் துத் தொழுகையை நிறைவேற்றத் தொடங்கினர். அவ்விடத்தின் அருகாமையில் [9]காட்டில் வேட்டையாடிக்கொண்டிருந்த சேர

---

9. இந்நிகழ்ச்சியின் அடிப்படையில், "பறஞ்ஞது பறையன்கால் திருவாங்கு கேட்டது திருவாங்கோடு" என்ற மலையாளத்தொடர் வழக்கில் உள்ளது.

மான் பெருமாளின் புதல்வரான கோலேகா, புரியாத மொழியிலமைந்த புதுமையான இந்த ஒலிகேட்டு, ஓசைவந்த திசைநோக்கிக் குழுவினருடன் வருகின்றார். இறைவழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்களைக் கண்ணுற்று வியந்த மன்னன், தொழுகை முடிந்ததும் மாலிக் முஹம்மதிடம் "நீங்கள் யார்? இங்கு வரக்காரணம் யாது?" என விசாரிக்க, "நாங்களெல்லாம் அரேபியாவிலிருந்து வந்த முஸ்லீம்கள். சத்திய மார்க்கத்தைப் பரப்பிட வந்தோம்" என மறுமொழி பகர்ந்து, அறிமுகக் கடிதத்தை அளிக்க, மன்னன் மகிழ்ச்சியுற்று அவர்களை வரவேற்று உபசரித்து, உணவு, நிலம், உறைவிடம் அளித்து இறையாலயம் எழுப்ப உதவியும் நல்குகின்றான். அவ்விடத்தில் அரசு முத்திரையுடன் [10] இறையகம் எழுப்பப்படுகிறது. திரு பாங்கு கேட்க, மகான் மாலிக்முகம்மது இறைப்பணிதொடங்கிய திருவிடமே இன்றைய திருவிதாங்கோடு ஆகும்.

## மதப்பணியில் மகான் மாலிக் முஹம்மது

குமரியில் முதன்முதலில் இஸ்லாம் பரவ வழிவகுத்த மகான் குமரிமாவட்டத்தின் பல்வேறிடங்களுக்கும் தம் குழுவினருடன் சென்று இஸ்லாமியக் கொள்கைகளைப் பரப்ப ஆரம்பித்தார். திருக்குர்ஆன் விளக்கமும் திருநபி மொழியும் மக்களிடத்தில் சமய அறிஞர்களால் போதிக்கப்பட்டன. ஆங்காங்கே இஸ்லாமியக் கலாசாரமும் பழக்கமும் வேரூன்ற ஆரம்பித்தன. சமணம், சைவம், வைணவம் கிறித்தவம் பரவியிருந்த பல்வேறிடங்களிலும் சத்திய மார்க்கம் அமைதியாகப் பரவியது. மக்கள் அரபிமொழி கற்றுத் திருக்குர்ஆன் விளக்கம் பெற ஆரம்பித்தனர். பிற்போக்குச் சமூகத்தில் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியின் விழைவால் மக்கள் இஸ்லாத்தைத் தழுவியதுடன், இறைவணக்கத்திற்கென இறையகங்கள் அமைய வேண்டியதன் தேவையையும் உணர்ந்தனர். மகான் மாலிக் முஹம்மது அவர்கள் தம் குழுவினருடன், பொதுமக்களின் ஆதரவால் குளச்சல்,[11] தேங்காய்ப்பட்டினம், கோட்டாறு, ஆளூர் போன்ற இடங்களில் இறையாலயங்களை

---

10. தமது தந்தையார் மாலிக் இப்னுதீனார் காசர்கோட்டில் (கேரளா) அமைத்த பள்ளியைப் பார்த்து அதே வடிவில் இதுவும் கட்டப்பட்டது எனக் கூறப்படுகின்றது.

11. முந்தைய தெங்க நாட்டின் தலைநகரான தேங்காய்ப்பட்டினத்தில் உள்ள பள்ளி மாலிக் இப்னுதீனார் அவர்களின் நேரடிப் பார்வையில், மக்கா ஆலயத்தை ஒத்த கொடுங்கல்லூர்ப் பள்ளியின் வடிவில் அமைக்கப்பட்டது.

எழுப்பினர். அவ்வவ்வூர்களில் இறையகங்களைப் பரிபாலிக்கப் பொறுப்புக் காளிகளும் நியமிக்கப்பட்டனர். எல்லாப் பள்ளிகளிலும் மாலிக் இப்னுதீனர் தொழுகையை ஆரம்பித்துவைக்க இஸ்லாமியர் இறைப்பணியில் விரைந்து செயலாற்ற ஆரம்பித் தனர். இவ்வாறு குமரியில் முதன் முதலில் இஸ்லாத்தைப் பரப்பக் காரணமாயிருந்த மகான் மாலிக் முஹம்மது அவர்கள் வாழ்நாள் முழுவதும் இறைப்பணியாற்றி, கடைசியில் திருவிதாங்கோட்டில் இறையடி சேர்ந்தார்கள். அவர்கள் உடல் அவர்கள் எழுப்பிய இறையாலயமான திருவிதாங்கோடு ஜும்ஆ மஸ்ஜிதினருகில் அடக்கம் செய்யப்பெற்றுள்ளது.

## அறப்பணியில் ஆன்மீக ஞானிகள்

மகான் மாலிக் முஹம்மது அவர்களின் ஆரம்பப்பணிக்குப் பிறகு குமரி மாவட்டத்தில் பல தத்துவ ஞானிகளும் சமய விற்பன்னர்களும், சமய இலக்கிய வளர்ச்சிக்குப் பெரிதும் தொண்டாற்றிச் சிறந்தனர். ஹிஜ்ரி 401-ல்[12] பாரசீகத்திலிருந்து வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டாற்றுக்குவந்து பன்னெடுங்கால மாகக் குமரியில் இஸ்லாமிய வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்த வர்கள் செய்யிது பாவாக்காஸிம் என்பவர்கள். இவர் பல்வேறு அதிசயங்களைச் செய்து, மக்களுக்கு மத நம்பிக்கையூட்டி இறுதி யில் கோட்டாறு வேம்படிப்பள்ளியில் மரணமடைந்து, அங்கேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளனர். மாமேதை ஷெய்கு நூறுத்தீன் (வலி) அவர்கள் பல்வேறிடங்களில் சமயஞானம் பரப்பி, இறுதியில் திருவிதாங்கோட்டில் மறைந்தார்கள். ஹஸரத் ஞானியார் சாகிபு அவர்கள் ஆன்மீக ஞானத்தில் அறிவுப் பிழம்பாகத் திகழ்ந்து தத்துவஞானம் பரப்பிக் கோட்டாற்றில் இறையடி சேர்ந்தார்கள். தென்காசியிலிருந்து வந்து, பீர்மேட்டில் தவயோக நிலைபெற்று, தத்துவஞானத்திலும், இலக்கியத்திலும் தகைமைபெற்றுச் சிறந்த பீர்முஹம்மது சாகிபு அப்பா அவர்கள் அறப்பணியாற்றித் தக்கலை யில் இறையடி சேர்ந்தார்கள். தமிழகத்தின் முதல் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர் ஆலிப் புலவர் அவர்களும் தமது மிஃராஜ்மாலை எனும் பேரிலக்கியத்தைக் கோட்டாறு வேம்படிப்பள்ளியில் அரங்கேற்றிச் சமய இலக்கியப்பணி செய்தனர். தேங்காய்ப் பட்டினத்தில் வாழ்ந்த புகழ்பெற்ற தமிழ்ப் புலவரான[13] குஞ்சு

---

12. இவர் பக்தாதிலிருந்து வந்தவரென்றும், தாஷ்கண்டை அடுத்த புஹைறாவைச் சேர்ந்தவர் என்றும் கூறப்படு கிறது.

13. இவர் ஹஜ் செய்யச்சென்று, முன்கூறியபடி, மக்காவில் மரணமடைந்ததாகக் கூறப்படுகின்றது.

மூஸாப் புலவர், செய்தத்துப்படைப்பு, ஸலவாத்துமாலை, அஜபு மாலை, தூதுரைமாலை, றசூல்மாலை போன்ற சமய இலக்கியங்களைப் படைத்தளித்து அறப்பணியாற்றிச் சிறந்தார். கோட்டாறு இளங்கடையில் வாழ்ந்த மகாமதி சதாவதானி செய்குத் தம்பிப் பாவலரும் பன்முகத்தான் இஸ்லாமிய இலக்கியத்திற்குத்தொண்டு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஹஸ்ரத் நாகூர் மீரான் சாகிபு அவர்களும் குமரி மாவட்டத்தில் வந்து இறைப்பணியாற்றிச் சிறந்ததாகக் கூறப்படுகின்றது.

## முடிவுரை

சைவ சமயம் குறிப்பிடும் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவரான கழறிற்றறிவார் என்ற சேரமான்பெருமாள் நாயனரின் மதமாற்றத்திலிருந்துதான் கேரளாவில் இஸ்லாத்தின் வரலாறு ஆரம்பிக்கின்றது. இந்நிகழ்ச்சிபற்றிக் குறிப்பிடும் பல்வேறு வரலாற்று நூல்களிலும் காலநிர்ணயம் மட்டும்தான் மாறுபடுகிறதே தவிரச் சேரமான்பெருமாள் இஸ்லாம் தழுவினதைப்பற்றிய கருத்தில் எந்த மாறுபாடோ மயக்கமோ இல்லை. மலபாரிலுள்ள ஒரு இந்துக்கோயிலிலுள்ள வடமொழிக் கல்வெட்டும், பல்வேறு பிறசமய வரலாற்றாசிரியர்களின் சான்றுகளும் இதை உறுதி செய்கின்றன. இவ்வரலாற்றின் வழிவந்த குமரியின் இஸ்லாமிய வரலாறும் தொன்மையும் ஆதாரமும்பெற்றுச் சிறக்கின்றது. கிரேக்க நிலநூல் அறிஞரான தாலமியும், பிரயாண நூலாசிரியரான பிளினியும் குமரியைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அரேபிய யாத்திரிகரான இப்னுபதூதாவின் நூலிலும் குமரி இடம்பெறுகின்றது. முந்தைய வேணாட்டின் தலைநகரான திருவிதாங்கோட்டில் தரைவழியாகவும், முந்தைய தெங்கநாட்டின் தலைநகரான தேங்காய்ப்பட்டினத்தில் கரைவழியாகவும் முதன் முதலில் கேரளத்திலிருந்து இஸ்லாம் பரவியதாக நம்பப்படுகிறது. இவ்வரலாற்றின்மூலம் இந்தியாவின் பழமையான இஸ்லாமிய வரலாற்றின் உரிமையாளர்கள் என்ற தகைமையைக் குமரி மாவட்ட முஸ்லீம்களும் பெருமையுடன் பெறுகின்றனர்.

### கட்டுரை ஆய்வுக்குத் துணைபுரிந்த வரலாற்றுச் சான்று நூல்கள்


1. துஹ்பத்துல் முஜாஹிதீன் — ஷெய்குசைனுதீன்
2. ரஹ்லத்துல் முலூக் — ஷேக் உமர் சுகர் வர்தி
3. Malabar Manual — William Logan
4. Travancore State Manual Vol. I
5. மலபார் — சம்சுல்லா ஹாதிரி
6. மகான் மாலிக் முகம்மது மவ்லிது ஷரீபு

## மெய்ஞ்ஞான மேதை பீர்முகம்மது சாகிப் வலியுல்லா அவர்களின்

# நூற்பரப்பும் அவைதரும் செய்தியும்

கா. முகம்மது பாரூக், எம். ஏ.
தமிழ்த்துறைத் தலைவர்,
சதக்கத்துல்லா அப்பா கல்லூரி,
பாளையங்கோட்டை.

**1.1.** ஞானமாமேதை ஹலரத் பீர்முகம்மது சாகிப் வலியுல்லா அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த தென்காசியில் தோன்றினார்கள். அவர்கள் தந்தையார் சிறுமலுக்கர் என்பவர். பாட்டனார் வாவாஞ்சி என்னும் பெயருடையார். இக்கருத்தினை நூலாசிரியர் தமது படைப்புகளில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகின்றார்.

"......ஞான வல்லபம்
சிந்தையுட் டெளிந்த ஞானச் சிறுமலுக்கர் செல்வன்யான்"[1]
"தென்காசி நாடு சிறுமலுக்க ரென்னுமவர்
தன்பால னிக்கதையைச் சாற்றினான்"[2]
"சிறும லுக்க ரகம கிழ்ந்த செல்வன்"[3]
"சிறுமலுக்க ரீன்றதவச் சிறப்புடைய பீர்முகம்மது"[4]

"வேதகுல வாவாஞ்சி பேரனான
வேந்தரெனும் சிறுமலுக்க ரீன்ற பாலன்
நீதமிலா திந்நூலைப் பொய்யென் னுமல்
நிலைநிறுத்தப் பீர்முகம்ம தென்போன் யானே"[5]

**1.2.** இப்பெரியார் பிறந்த ஆண்டு தெளிவாகத் தெரியவில்லை. காயற்பட்டினத்தில் பிறந்து கீழக்கரையில் மறைந்த மெய்ஞ்ஞானி சதக்கத்துல்லா அப்பா அவர்களின் காலத்தவராவர் இவர். சதக்கத்துல்லா அப்பா, தன்னை வாழ்த்திய செய்தியைப் பீர்முகம்மது அப்பா,

---

1. ஞானப்பூட்டு 3:2-3
2. ஞானப் புகழ்ச்சி 23:1-2
3. ஞான மணிமாலை 8:1
4. ஞானக் குறம் 7:1
5. திருமெய்ஞ்ஞானச் சர நூல் 30:2-3

"மனமது மகிழ அறிவையு மறிந்து
வழுத்தினர் சதக்கத் துல்லாவே"[6]

எனத் தமது பாடலொன்றில் கூறியுள்ளார். இரு ஞானியரும் சந்தித்த செய்தியை ஞானமணிமாலை உரையாசிரியர் எம். ஏ. நெய்னா முகம்மது பாவலர் குறிப்பிட்டுள்ளார்.[7] ஞானி சதக்கத் துல்லா இந்தியாவை ஆட்சி புரிந்த மொகலாயப் பேரரசர் அவுரங்கசீப்பின் காலத்தவர். அவுரங்கசீப் கி. பி. 1658 முதல் 1707 வரை ஆண்டவர்.[8] எனவே பீர்முகம்மது அப்பா அவர்கள் கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் அண்மையில் வாழ்ந்தவர் எனத் துணியலாம். பீர்முகம்மது அப்பா தாம் பாடிய 'திருநெறி நீதம்' என்னும் நூலில் அந்நூலைப் பாடிய காலத்தை,

"குருநபி ஹிஜ்ரத் தாகி குவலயத் தாயி ரத்தின்
இருபத்தி ரெண்டா மாண்டில் இயம்பிடும் ரபியுலாகிர்
கருமமென் றிருப தன்று காரண வெள்ளி நாளில்
திருநெறி நீதம் பாடத் திருவருள் பெருகத்தானே"[9]

என்னும் பாடல் மூலமாக ஹிஜ்ரி யாண்டு[10] 1022 எனக் குறிப்பிட்டுள்ள செய்தியும் மேற்கண்ட கருத்தை அரண் செய்ய உதவுகின்றது.

1.3. சிற்றிளமைப் பருவத்திலேயே தமது பெற்றோரையும் பிறந்த பதியான தென்காசியையும் நீங்கிச் சென்ற பீர்முகம்மது அப்பா ஏறத்தாழத் தொண்ணூற்றைந்தாண்டுகள் காடுகளிலும் மலைமுழைகளிலும் வாழ்ந்து வந்தார்கள். முன்னைய திருவிதாங்கூர் அரசின் மலைப்பகுதிகளிலும் தங்கியுள்ளார்கள்.

---

6. பிசுமில் குறம்—2
7. எம். ஏ. நெயினா முகம்மது பாவலர், *ஞானமணி மாலை தாற்பரிய வுரை*, ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ், 1964 ப. 7.
8. ஏ. உஸ்மான் ஷெரீப், இந்திய வரலாறு கி. பி. 1206—1707 தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1972. ப. 320.
9. திருநெறி நீதம் 17
10. நபிகள் நாயகம் மக்காவிலிருந்து மதினா புறப்பட்ட நாள்முதல் தொடங்கும் இசுலாமிய ஆண்டு.

அங்கிருந்து அருகிலுள்ள பல இடங்களுக்கும் சென்றுள்ளார்கள். யானைமலைப் பகுதியில் பதினைந்தாண்டுகள் நிட்டையில் ஆழ்ந்துள்ளார்கள். அவர்கள் வாழ்ந்திருந்த பகுதிதான் இன்று பீர்மேடு (PEER MADE) என வழங்கப்படுகிறது. இதனை டி. கே. வேலுப் பிள்ளை 'திருவிதாங்கூர் ஸ்டேட் மானுவலில்' குறிப்பிட்டுள்ளார்.[11]

1.4. பீர்முகம்மது அப்பா அவர்களின் சமாதி தக்கலை என்னும் ஊரில் உள்ளது. அவ்வூர் கன்னியாகுமரி மாவட்டத் தலைநகராகிய நாகர்கோவிலிலிருந்து பத்துக்கல் தொலைவில் நாகர்கோவில் — திருவனந்தபுரம் சாலையில் உள்ளது. அவ்வூரிலுள்ள சமாதியிடமாகிய 'தர்கா' (DURGA)வில் ஆண்டுதோறும் இசுலாமியத் திங்களாம் ரஜபு பிறை (RAJAB) பதினன்காம் நாள் நடைபெறும் ஆண்டுவிழாவில் பெருந்திரளாகக் கூடுகின்ற பல் சமய அன்பர்கள் மத்தியில் அவர்கள் பாடிய 'ஞானப் புகழ்ச்சி' என்னும் நூற்பாடல்கள் இரவிலிருந்து காலைவரையிலும் பாடப் பட்டு வருகின்றன.

1.5. பீர்முகம்மது அப்பா அவர்கள் பல்துறைச் செல்வராக விளங்கியுள்ளார்கள். அவர்கள் இசுலாமிய நெறியில் ஆன்மீகச் செல்வர்களாய் விளங்கும் இறைநேயச் செல்வர்களுள் ஒருவர் ஆவார். இறைநேயச் செல்வர்களை வலியுல்லாக்கள் (SAINTS) என அரபு மொழியில் குறிப்பிடுவர். இறைவனின் பாதையில் தன்னை முற்றிலும் அர்ப்பணித்துத் தியாகம் செய்த மேதைகளே வலிமார்கள். இத்தகைய வலிமார்கள் மீது அன்பும் மதிப்பும் கொண்டு, அவர்தம் நல்லுறவை அடைவதும், அவர்களிடம் ஆத்மீக அனுபவங்களில் பயிற்சி பெற்றுத் தேர்ச்சியடைந்து நற்பேறு பெறுவதும் ஒவ்வொரு நல்லடியாருக்கும் மிகவும் தேவையானது.[12] வலிமார்கள் அணியிலும் இடம்பெறுகின்றவர் பீர்முகம்மது அப்பா. இசுலாமியச் சட்டதிட்டங்களைப் பாடல்கள் மூலம் அறிவிக்கும் இப்பெரியாரை இசுலாமியத் தமிழுலகம் 'மார்க்க மேதை' (Religious Scholar) யாகவும் மதிக்கின்றது.

---

11. "It is said to have been the residence of the Muhammadan Saint Peer Muhammad hence the name of the place"— T. K. Velu Pillai, The Travancore State Manual Vol. I., The Government of Travancore, 1940. P. 779.

12. O. M. S. ஸய்யிது மக்தூம் ஆலிம் — மெய்ஞ்ஞானக் கருவூலம், ஐக்கிய முஸ்லிம் சங்கம். பினாங்கு (மலேசியா). 1971 ப. iii.

அகத்தூய்மை வாய்க்கப் பெற்று, அன்பின் மூலம் இறைத் தன்மையைத் தங்கள் அகத்தில் பெறும் மெய்ஞ்ஞானிகளைச் 'சூபிகள்' (SUFIS) எனக்குறிப்பிடுவர்.[13]

"இந்த மார்க்கத்தினர் நமது நாட்டுச் சித்தர்களைப் போன்றவர்கள்" என்பார் எஸ். வையாபுரிப்பிள்ளை.[14] தமிழகத்தில் 'சூபித் தத்துவத்தைப் பரப்பிய பெருஞானியாகவும் பீர்முகம்மது அப்பா அவர்கள் விளங்குகிறுர்கள். அவர்களைச் 'சூபியாக்கள் வரிசையில் ஒரு சுடர் விளக்கு' என்பார் எம். எம். பீர்முகம்மது.[15] பதினெண் சித்தர்கள் அருளிச் செய்த 'பெரிய ஞானக் கோவை' என்னும் நூற்றெகுதியில் பீர்முகம்மது அப்பாவின் ஞானரத்தினக் குறவஞ்சியும் இடம் பெற்றுள்ளதாதலின் அவர்கள் சித்தராகவும் சிறக்கின்றுர்கள். 'சாதி சமயங்கடந்த நிலையில் அனைவராலும் 'அப்பா' என்னும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படுவதும் அவர்தம் செல்வாக்கை எடுத்துக் காட்டுகின்றது' என்று எஸ். பத்மநாபன்[16] 'தென்குமரியின் புதைந்த வரலாறு' என்னும் நூலில் குறிப்பிடுகின்றுர்.

**2.1.** பீர்முகம்மது அப்பா அவர்கள் பாடிய பாடல்களின் எண்ணிக்கை பதினெண்ணுயிரம் ஆகும்.[17] இக்கருத்தைப் பாடலொன்றில்,[18]

"உரைத்தேன் பதினெண்ணுயிரம் கவி" என நினைவுபடுத்துகின்றுர் இவ்வாசிரியர்.

---

13. Encyclopaedia of Religions and Ethics Vol. XII. P. 10.
14. எஸ். வையாபுரிப் பிள்ளை, இலக்கிய உதயம் (முதற் பகுதி) தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1965. ப. 113.
15. கா. முகம்மது பாரூக் (Ed.) மெய்ஞ்ஞான மேதை பீர்முகம்து அப்பா மலர், நன்னெறிப் பதிப்பகம், திருவிதாங்கோடு. ப. 9.
16. எஸ். பத்மநாபன், தென்குமரியின் புதைந்த வாலாறு. குமரன் பதிப்பகம், நாகர்கோவில், 1972. ப. 49.
17. கா. முகம்மது பாரூக் (Ed.) மெய்ஞ்ஞான மேதை பீர்முகம்மது அப்பா மலர், நன்னெறிப் பதிப்பகம், திருவிதாங்கோடு. ப. 43.
18. மிகுராசு வளம். 11:3

## 2.2. அவர் பாடல்களில் இன்று கிடைப்பவை பின்வருமாறு :

| வரிசை எண் | நூலின் பெயர் | பாடல் எண்ணிக்கை | பதிப்பு | ஆண்டு |
|---|---|---|---|---|
| 1. | ஞானப்பால் | 33 | ஞானியார் சாகிபு (வலி) டிரஸ்டு, கோட்டாறு, நாகர்கோவில் | 1952 |
| 2. | ஞானப்பூட்டு | 39 | ,, | ,, |
| 3. | ஞானப் புகழ்ச்சி | 687 | ,, | ,, |
| 4. | ஞானமணிமாலை | 242 | ,, | ,, |
| 5. | ஞானக்குறம் | 73 | ,, | ,, |
| 6. | ஞான ரத்தினக் குறவஞ்சி | 64 | ,, | ,, |
| 7. | ஞான ஆனந்தக் களிப்பு | 16 | ,, | ,, |
| 8. | திருமெய்ஞ்ஞானச்சர நூல் | 30 | ,, | ,, |
| 9. | ஞான நடனம் | 10 | ,, | ,, |
| 10. | ஞான முச்சுடர்ப் பதிகங்கள் | 238 | ,, | ,, |
| 11. | ஞான விகட சமர்த்து | 4 | ,, | ,, |
| 12. | மஃரிபத்து மாலை | 612 | ,, | ,, |
| 13. | மெய்ஞ்ஞான அமிர்தக்கலை | 56 | மீனாட்சி பிரசு | 1929 |
| 14. | மிகுராசு வளம் | 11 | ,, | ,, |
| 15. | ஈடேற்ற மாலை | 46 | ஷாஹுல் ஹமீது & சன்ஸ், சென்னை | 1955 |
| 16. | பிசுமில்குறம் | 601 | ,, | ,, |
| 17. | திருநெறிநீதம் | 2991 | | |

2.3. பீர்முகம்மது அப்பா அவர்களின் பாடல்கள் இடம் பெற்ற இன்னும் சில நூல்களைப் பெயரளவில் அறிய முடிகின்றது. அவையாவன: ஞானத் திறவுகோல், ஞான சித்தி, ஞான உலக உருளை, ஞானக்கண், ஞான விகட சமர்த்து, ஞான மலைவளம்,

மெய்ஞ்ஞானக் களஞ்சியம், ரோசு மீசாக்கு மாலை ஆகியன. இவ் வரிசையிலுள்ள ரோசு மீசாக்கு மாலை என்னும் நூலினைப் பனையோலை ஏட்டிலிருந்து பெயர்த்தெழுதிக் கையெழுத்தேடாக வைத்துள்ளனர். அவ்வேட்டுப் பிரதி, தக்கலை தர்கா நிர்வாகிகளிடம் உள்ளது.

**2.4.0.** பீர்முகம்மது அப்பாவின் நூற் பரப்பிலுள்ள சிறப்பியல்புகளையும் பொதுத் தன்மைகளையும் ஆராய ஒவ்வொரு நூலின் அமைப்பினையும் செய்தியினையும் அறிவது இன்றியமையாதது.

**2.4.1.** *ஞானப்பால்:* ஞானப்பாவில் முப்பத்து மூன்று பாடல்கள் இடம்பெற்றுள்ளன. வெண்பா, ஆசிரிய விருத்தம், கலித்துறை ஆகிய யாப்பு முறையில் அப்பாட்டுகள் அமைந்து உள்ளன. காப்பு வெண்பாவோடு தொடங்கும் இந் நூலில் மெய்ஞ்ஞானக் கருத்துகள் நிறைந்துள்ளன.

**2.4.2.** ஞானப்பூட்டு: இந்நூல் ஒரு கீர்த்தனையையும் முப்பத்தெட்டுச் செய்யுட்களையும் பெற்றுள்ளது. கீர்த்தனை உசேனி இராகத்திலும், ரூபக தாளத்திலும் இயன்று வருகின்றது. செய்யுட்களில் வெண்டுறை, ஆசிரிய விருத்தம், கட்டளைக்கலித்துறை, கலிவிருத்தம், கலிவெண்பா ஆகிய யாப்புகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்நூல் இறைவனைக் காணும் இரகசியங்களை உரைப்பது.

**2.4.3.** *ஞானப் புகழ்ச்சி:* நேரிசை வெண்பா, பஃறொடை வெண்பா, வெளி விருத்தம், ஆசிரிய விருத்தம், கலித்துறை, கலிவிருத்தம், கொச்சகக் கலிப்பா, வஞ்சி விருத்தம், கண்ணிகள் முதலிய யாப்புகள் இயன்றுவரும் நூலே ஞானப் புகழ்ச்சி. இதனுள் இடம்பெறும் பாடல்கள் இறையருளை இலக்காகக் கொண்டவை. ஆண்டவனிடம் அடைக்கலம் தேடும் இந்நூற் பகுதியில் பக்தி நெறியின் உயரிய படித்தரங்கள் (Stages) இடம் பெற்றுள்ளன. திருக்குர்ஆன் என்னும் இசுலாமிய மறை நூலின் 'தோற்றுவாய்' அதிகாரமான 'பாத்திகா' (Fathiha)வின் உரைவிளக்கம் இந்நூலில் உள்ளது.

**2.4.4.** *ஞானமணி மாலை:* வெண்பா, ஆசிரிய விருத்தம், கலித்துறை, கலிவிருத்தம், கலிவெண்பா, கொச்சகக் கலிப்பா முதலிய யாப்புகள் பெற்றுவரும் இந்நூலின் பாடல்கள் பெரும்பாலும் அந்தாதியாகப் பாடப்பட்டுள்ளன. நான்குவகை ஞான நெறிகளை (ஷரீஅத், தரீகத், ஹகீகத், மஃரிபத்) விளக்கிச் செல்லும் இந்நூலின் பாடல்கள் இறைவனின் வல்லமையை எடுத்துரைக்கின்றன.

**2.4.5.** *ஞானக் குறம்* : ஏழு வெண்பாக்களும், ஐம்பது ஆசிரிய விருத்தங்களும், பதின்மூன்று கலிப்பாக்களும், மூன்று கீர்த்தனைகளும் உள்ள இந்நூலில் சிற்றிலக்கியப் பிரிவில் இடம் பெறும் 'குறவஞ்சி' அமைப்பு பின்பற்றப்பட்டுள்ளது. மலைவளங் கூறுதல், வாசல் வளங்கூறுதல், நாட்டு வளம், கைக்குறி கூறுதல் முதலிய பிரிவுகள் இந்நூலில் உள்ளன.

**2.4.6.** *ஞானரத்தினக் குறவஞ்சி* : இந்நூலில் காப்புப் பொருளில் உள்ள கலிப்பாவோடு 63 கண்ணிகள் உள்ளன. சிங்கன்-சிங்கி உரையாடல் மூலம் தத்துவக் கருத்துகள் இதன் கண் பாடப்பட்டுள்ளன.

**2.4.7.** *ஞான ஆனந்தக்களிப்பு* : இறைவனைக் கண்டு கொண்டேனே என்னும் பொதுக்கருத்தில் பாடப்படும் 16 பாடல் களின் தொகுப்பாகும் இந்நூல்.

**2.4.8.** *திருமெய்ஞ்ஞானச் சரநூல்* : ஆசிரிய விருத் தங்கள் முப்பதால் அமைந்த இந்நூல் மூச்சுக்கலையை வெளியிடும் அரிய நூல்களிலொன்று. சர ஓட்டத்தின் பொதுத் தன்மையை யும், சரப்பலன்களையும் நவிலும் இந்நூல் நல்வாழ்வுக்குத் தேவை யான கருத்துகளை மூச்சுக்கலையின் அடிப்படையில் தருகின்றது.

**2.4.9.** *ஞான நடனம்* : ஆசிரிய விருத்தங்கள் பத்தினைப் பெற்றுவரும் இந்நூல் துன்பக் கடலிலிருந்து விடுதலைபெற இறை யருளை நாடவேண்டும் என்னும் முறையில் எழுதப்பெற்றுள்ளது.

**2.4.10.** *ஞான முச்சுடர்ப் பதிகங்கள்* : இந்நூலில் காப்புப் பதிகம், ஹக்கு முருதுப் பதிகம், மயில் வலம்புரிப் பதிகம் முதலிய இருபது பதிகங்கள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு பதிகத்திற்கும் 12 பாடல்கள் என்ற முறையில் பதினெட்டுப் பதிகங்கள் அமைந்துள்ளன. இரு பதிகங்களில் மட்டும் அந்நிலை மாறிப் பதினொரு பாடல்கள் வீதம் உள்ளன. இறைஞானத்தைத் தோற்றுவிக்கும் பாடல்கள் இந்நூலில் உள்ளன.

**2.4.11.** *ஞான விகட சமர்த்து*: இந்நூலிலிருந்து நான்கு பாடல்களே கிடைத்துள்ளன. அவற்றுள் ஒன்று பஃறொடை வெண்பா; நான்கு ஆசிரிய விருத்தங்கள். பாடல்கள் ஆன்மீகப் படித்தரங்களை (Stages) உருக்குறியீட்டு (Symbolism) மொழியில் உணர்த்துகின்றன.

**2.4.12.** *மஃரிபத்து மாலை* : முகம்மது நபிகள் (ஸல்) விளக் கிய ஞான நிலையாம் மஃரிபத்தினைப் பொருட்பால், அருட்பால், காமப்பால் ஆகிய மூன்று பிரிவுகளில் இந்நூல் குறிப்பிடுகின்றது.

TAMIL NADU ARCHIVES LIBRARY 23 FEB 19..

ஆதி படைப்புகள் என இசுலாமிய நெறி அறிவிக்கும் ஆதம்-ஹவ்வா (Adam & Eve) தொடர்புடைய கருத்துகளும், உலகம் உருவான செய்தியும் இந்நூலில் உரைக்கப்பட்டுள்ளன.

**2.4.13.** *மெய்ஞ்ஞான அமிர்தக்கலை* : இந்நூலில் ஐம்பத்தாறு ஆசிரிய விருத்தப் பாடல்கள் அந்தாதியாக அமைந்துள்ளன. இஃது இறைவனின் பண்புகளை அறிவிக்கும் நூல். எல்லாமாக இறைவன் இருக்கின்றான் என்ற கருத்து இதன் பாடற் பரப்பில் வெளிப்படுகின்றன.

**2.4.14.** *மிகுராசு வளம்* : ஆசிரிய விருத்தங்கள் பதினொன்றுலான மிகுராசு வளம் நபிகளின் விண்ணேற்றத்தை நவிலுவது.

**2.4.15.** *ஏடேற்ற மாலை* : காப்பு வெண்பாவும், சரணம் என்ற இசைப்பிரிவும் விரவி வரும் இந்நூலில் பேச்சு வழக்குச் சொல்லைப் பெரிதும் காணமுடிகின்றது.

**2.4.16.** *பிசமில் குறம்:* பாரசீக மொழியில் மௌலானா ரூமி என்பார் படைத்த கருத்துக்களைத் தழுவி இந்நூல் இயற்றப் பட்டுள்ளது. இறைவன் பெயரின் பெருமை, ஆன்ம வணக்கநிலை முதலியன இதன்கண் இயம்பப்பட்டுள்ளன.

**2.4.17.** *திருநெறி நீதம்:* நான்கு படலங்களாலான இந்நூல் முன்னர் மூவாயிரத்தறுநூறு பாடல்களைப் பெற்றிருந்தது. இப்பொழுது இந்நூலில் 2229 பாடல்களே கிடைத்துள்ளன. சமயச் சட்டவொழுங்குகள், மெய்ஞ்ஞானக் கருத்துகள், நாட்டு வளம் முதலியன இந்நூலில் உள்ளன.

**3. 0.** பீர்முகம்மது அப்பாவின் நூற்பரப்பிலிருந்து அறிய லாகும் செய்திகளை மெய்ஞ்ஞானம், பக்தி, அறநெறி, சமுதாயம் ஆகிய நான்கு நோக்கங்களில் ஆராயலாம்.

**3. 1.** பீர்முகம்மது அப்பாவின் நூல்கள் அனைத்தும் மெய்ஞ் ஞானச் சார்புடையவை. இசுலாமிய நெறி தழுவிய மெய்ஞ் ஞானக் கருத்துக்களைத் தமிழ்ப் பாடலில் தெரிவிக்கின்ற இப்புலவர் ஞானி அரபுச் சொற்களை ஏராளமாகப் பயன்படுத்தியுள்ளார். ஞானப்பாவில் 34 பாடல்களில் 13 இடங்களில் அரபுச்சொற்கள் வந்துள்ளன. ஞானப்பூட்டில் 39 பாடல்களில் 50 அரபுச்சொற்கள் இடம் பெற்றுள்ளன. மெய்ஞ்ஞான விளக்கத்திற்கு இச்சொல் லாட்சி தேவைப்படுகின்றது. தமிழகத்தில் சைவ சமயத்தார் பயன்படுத்தும் சிவன், சக்தி முதலிய சொற்களை இறைவாழ்த்துப் பாடல்களில் இவ்வாசிரியர் பயன்படுத்துகின்றார்.

"கைலாசத் தோடாள்பனே"[19]
"சிவப்பிள்ளை"[20]
"முத்தன்"[21]
"செகருநாதன்"[22]
"சிவன்"[23]
"அமரர் சிகாமணி"[24]
"அருளானந்தச் சுடரொளி"[25]
"பரம்"[26]
"மூலப் பொருளே"[27]
"பசுபாசம்"[28]
"சத்தி சிவன் விளங்குதெங்கும்"[29]

தமிழ்நாட்டுப் பக்திநெறி இவ்வாசிரியரிடம் பெறும் செல்வாக்கை இச்சொல்லாட்சி எடுத்துக்காட்டுகின்றது. பீர்முகம்மது அப்பா தமிழ்நாட்டிற்குச் 'சூபி' மெய்ஞ்ஞானக் கருத்துக்களை அறிமுகம் செய்து வெற்றி பெறுகின்றார். 'சூபி' நெறியைச் சார்ந்து-ஆன்மீகத் தலைவராக விளங்கிய ஹலரத் முகியித்தீன் அப்துல்காதிர் ஜீலானி என்னும் மெய்ஞ்ஞானியின் ஆன்மீக மரபிற்குக் கட்டுப்பட்டு, மெய்ஞ்ஞான விளக்கங்கள் தரும் பீர்முகம்மது அப்பாவின் பாடல்கள் தமிழகத்தில் தனி முத்திரையைப் பதித்துள்ளன.

3.2. பீர்முகம்மது அப்பாவின் பாடல்களில் பொலியும் பக்திச்சுவை இறைவனின் அருகில் அடியானை அணுக வைக்கின்றது. அவரது பக்திப்பாடல்களின் போக்கு தமிழக பக்திப் பாடல்களை ஒட்டி அமைந்துள்ளது. சுந்தரரும், மாணிக்கவாசகரும், பட்டினத்தாரும், தாயுமானவரும் பாடும் பக்திப்பாடல்களில் விஞ்சி நிற்கும் இரக்கவுணர்வைப் பீர்முகம்மது அப்பா பாடல்களிலும் காண முடிகின்றது.

---

19. ஞானப் புகழ்ச்சி: 359
20. ஞானப் புகழ்ச்சி: 15
21. ஞானப் புகழ்ச்சி: 199
22. ஞானப் புகழ்ச்சி: 318
23. ஞானப் புகழ்ச்சி: 359
24. ஞானப் புகழ்ச்சி: 360
25. ஞானப் புகழ்ச்சி: 361
26. ஞானப் புகழ்ச்சி: 367
27. ஞானப் புகழ்ச்சி: 485
28. ஞானப் புகழ்ச்சி: 490
29. மெய்ஞ்ஞான அமிர்தக்கலை: 38

"பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லை பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவதில்லை"

என்பது பட்டினத்தார் வாக்கு.[30]

"மெய்யாக வேதும் கொடுவந்ததில்லை வினைதுலைந்தால்
பொய்யாமலேதும் கொடுபோவதில்லை"

என்பது பீர்முகம்மது அப்பா கருத்து.[31]

"நாயேன்உனை நாளும் நினைக்கிறேன் மனத்துன்னை"

என்பது சுந்தரர் தேவாரம்.[32]

"நாயேன் நானுனை நல்கியிரக்கிறேன்"

என்பது பீர்முகம்மது அப்பாவின் வாசகம்.[33]

"பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து" என்பது மாணிக்கவாசகர் திருவாசகம்.[34]

"தாயினு மன்பனே நீதா னிரங்குகவே" என்பது ஞானப் புகழ்ச்சி.[35] பீர்முகம்மது அப்பாவின் பாடல்களில் காணும் பக்தி, இந்து-முசுலிம் சகோதரத்துவத் தன்மைக்கு அடிப்படை வகுத்துள்ளது.

3.3. பீர்முகம்மது அப்பா பாடல்களில் ஆட்சி செலுத்தும் அறக்கருத்துக்கள், தமிழகம் பல்லாண்டுகளாகப் பேணிக் காத்து வந்த பெருநிதியங்களேயாகும்.

'அன்பினால் உணர வல்லோர் அனைத்தையும் காணலாமே' என மொழிகின்றார் புலவர்ஞானி.[36] இப் புலவர் ஞானியின் பாடல்கள் இறையுணர்வில் தோயவும், செயலும் சிந்தனையும் ஒன்றவும் வாய்மை உரைக்கவும் வழிகாட்டுகின்றன.

3.4. அவரது பாடல்களிற் பல, சமுதாய எழுச்சியை அடிப்படையாகக் கொண்டவை. நலமான வாழ்வு வாழ அவர் நல்கும் கருத்துரைகளைத் திருமெய்ஞ்ஞானச் சரநூலிற் காணலாம். உணவு குறைத்து வாழும் வாழ்க்கையை உயர்வாகப் பாராட்டும் அவர்,

---

30. பட்டினத்தார் பாடல்கள் - திருவேகம்பமாலை : 7
31. ஞானப் புகழ்ச்சி 9:2-3
32. சுந்தரர் தேவாரம்
33. ஞானப் புகழ்ச்சி 252 : 1
34. மாணிக்கவாசகர் திருவாசகம்-பிடித்தபத்து
35. ஞானப் புகழ்ச்சி. 252 : 4
36. ஞானமணிமாலை. 132

"நீபெருக்கத் தின்றக்கால் நித்திரையும் கோபமுமாம்
நீசுவர்க்கத் தேகாம லேநிறுத்தும் நீபெருக
வுண்ணும லுண்டு முறங்கா திறையைமனக்
கண்ணூரக் காண்பாய் களித்து"[37]

எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஞானி பீர்முகம்மது அப்பா படைக்க விரும்பும் சமுதாயம் சமரச அடிப்படையிலானது என்னும் கருத்தைச்,

'சருவகுரு வாய்ச்சருவ சமயவடி வாய்நின்
றுருவருணைத் தெரிசிப்பவர்க் குறுந்துணை செய்வோனே'

என்ற பாடல் நினைவூட்டுகின்றது.[38] காலத்தால் அழியாத கருத்துக்களைத் தருபவர்களே ஞானியராவர். பீர்முகம்மது அப்பா அவ்வரிசையில் இடம் பெறுகின்றார். அவரது நூல்கள் தரும் செய்திகள் இவ்வுண்மைக்கு அரண் செய்கின்றன.

இவ்வாய்வுக் கட்டுரையின் முடிவுகளாக :—

(1) பீர்முகம்மது அப்பா அவர்கள் 17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவர் எனத் தெளிய முடிகின்றது.

(2) அவர் படைத்த நூல்கள்வழி அவரை நான்கு வகையான நோக்கங்களில் ஆய்ந்து அறிய வாய்ப்புள்ளது.

(3) அவர் நூல்கள் தரும் செய்தியால் அவரை ஒரு சீரிய ஞானி எனத் துணியலாம்.

---

37. ஞானமணிமாலை. 200
38. ஞானப் புகழ்ச்சி. 369

---

இந்த மகான்களுள் தலையாயவர்கள் தென்காசியில் தோன்றி தக்கலையில் மறைந்துள்ள ஞான சொரூபர் பீர்முஹம்மது ஒலியுல்லாஹ் ஆவார்கள். சித்தர்களுள் சிறந்த சித்தராகவும், ஞானிகளுள் சிறந்த ஞானியாகவும் விளங்கிய இம்மகானைத் தமிழ்நாட்டு மௌலானா ரூமி என்பது பொருந்தும். மௌலானா ரூமியின் மத்னவீயில் எப்படி அகப்பொருள் பொதிந்து விளங்குகிறதோ அதுபோல் இவர்களுடைய பாடல்களிலும் ஞான உண்மைகள் மறைந்து கிடக்கின்றன. குறிப்பாக, அப்பா அவர்கள், 'மஸ்னவீ'யின் சாரத்தையே தங்கள் 'பிஸ்மில் குறத்தில்' தந்துள்ளார்கள். மௌலானா ரூமி இருபத்தாறுயிரம் பாடல்களில் தங்கள் மகாபெரும் கிரந்தத்தைத் தந்துள்ளது போல அப்பா அவர்களும் தங்கள் பல்வேறு நூற்களிலுமாக சுமார் பதினெட்டாயிரம் பாடல்களைத் தந்துள்ளார்கள்.

—பக்கம் 181, 182 : இஸ்லாமிய இலக்கியக் கருவூலம்
*(ஜனாப் ஆர். பி. எம். கனி அவர்கள் தயாரித்தது.)*

# தயக்கம்

எச். முகம்மது சலீம், எம். ஏ.

மெய்ப்பொருள் அறிவுநிலை எனப்படும் மெய்ஞ்ஞான நிலை ஒரு வகை மன நிலையாகும். இந்நிலையடைந்தவர்கள் மெய்ந்நிலை கண்ட ஞானியர் எனவும், சூஃபியாக்கள் எனவும் பல்வேறு பெயர்களால் குறிப்பிடப்படுவர். மெய்ஞ்ஞானப் பேரின்பக் கடலில் மூழ்கித் திளைத்து முத்தெடுக்கும் சித்துடைய வித்தகர்களாம் ஞானிகள், தாம் அடைந்து அனுபவித்த இம்மெய்ந்நிலை பற்றி முழுமையான விளக்கத்தினை ஐயம் திரிபறத் தந்ததும் இல்லை; தருவதும் இல்லை. ஏனெனில், ஆன்மீக உலகம் ஓர் அனுபவ உலகம். நீரின் தண்மையையும், நெருப்பின் வெம்மையையும், மலரின் மணத்தினையும், மதுவின் குணத்தினையும், அவற்றோடு பொறி புலன்வழி தொடர்புடையார் மட்டுமே உணர்ந்திட இயல்வது போன்று, ஆன்மீகத்துறை எனப்படும் மெய்ப்பொருள் அறிவுத் துறையில் ஈடுபட்டுள்ளோரும் தத்தம் அனுபவங்களைத் தாம் உணர்தலன்றிப் பிறர்க்கு முழுமையாய் உணர்த்திட இயலாது.

மெய்ப்பொருள் அறிவுநிலை அனுபவம் சொற்களால் விளக்கப் பட முடியாத ஒன்று. ஒருவாறு விளக்கினாலும் அது 'சர்க்கரை இனிக்கும்' என்று மட்டும் கூறினால் என்ன பயனைத் தருமோ அதே பயனைத்தான் விளைக்கும். மெய்ப்பொருள் அறிவுநிலை அனுபவம் ஏனைய அனுபவங்களிலும் வேறுபட்டது. ஏனைய அனுபவங்கள் பொறி-புலன் தொடர்புடையன. அவ்வுணர்ச்சியால் அறிவு விளக்கம் அடைவதில்லை. ஆனால், மெய்ப்பொருள் அனுபவத்தில் அறிவு விளக்கமும் கூர்மை அடைகின்றது. அறிவின் எல்லைக்கும் அப்பாற்பட்ட பேருண்மைகளைக் காணுமாறு செய்கிறது. இவ்வுண்மை விளக்கத்தால் உள்ளொளி பிறக்கிறது; உயர்ஞானம் சிறக்கிறது:

சூஃபியாக்கள் வரிசையில் ஒரு சுடர் விளக்காய் இலங்கும் தவஞானச் செம்மல் பீர்முஹம்மது அப்பா அவர்கள் இக்கருத்தினை ஞானப்புகழ்ச்சியில் குறிப்பிடும்போது:

> ... "சொல்லத் தகுமல்ல விப்பொருளைச்
> சுருட்டி மறைக்கிறேன் ஷரகுக்காக"...
>
> (ஞானப் புகழ்ச்சி...17)

என்றுகூறி மெய்ப்பொருள் அனுபவ விளக்கம் பற்றிய தமது கொள்கையினை நமக்குக் கோடிட்டுக் காட்டுகின்றார்கள்.

எல்லையில்லாக் கருணையினை இல்லையென்றது வழங்கும் இறைவனின் தத்துவத்தை உணர்ந்த அப்பா அவர்கள் 'சொல்லத் தகுமல்ல விப்பொருளை' என்பதோடு நில்லாது 'சுருட்டி மறைக்கிறேன் ஷரகுக்காக' என்றும் கூறுகின்றார்கள். தக்கலையின் பேரொளியாம் வள்ளல் பீரொலியின் இந்தத் தயக்கம் ஆன்மீக இலக்கிய ஆராய்ச்சியாளர்களின் சிந்தனையைத் தூண்டுவதாய் அமைந்துள்ளது.

இரகசியப் பொருளான ஞானச் செய்திகளை எல்லார்க்கும் எடுத்தியம்பக் கூடாது. மெய்ஞ்ஞான அனுபவ விளக்கங்கள் ஆன்மீக அனுபவ முதிர்ச்சி அடைந்த பின்னர் தக்கோரால் தர மறிந்து தெரிவிக்கப்பட வேண்டும். உயர்நிலை எய்திய குருமார் களிடத்து முரீது எனப்படும் தீட்சை பெற்ற பின்னரே இத்தகு செய்திகளை அறியலாகும். இக்கருத்தினை உள்ளடக்கியே,

"சொல்லத் தகுமல்ல விப்பொருளைச்
சுருட்டி மறைக்கிறேன் ஷரகுக்காக"

என்று அப்பா அவர்கள் கூறுகின்றார்கள் என்பது ஒரு கருத்து. இக்கருத்துக்குச் சான்றாக

மிக்க சிறியோர்க்கும் வீணருக்குஞ்
சற்குருவின் உண்மைமொழி சாற்றரிது-மக்கநபி
வாகா யெடுத்துரைத்தார் வான்பொருளைக் கண்டிறைஞ்சிச்
சாகாமற் செத்தவர்க்கே தாம். (ஞானமணிமாலை — 151)

என்ற அப்பாவின் பாடலை மேற்கோளாய்க் காட்டலாம். தென்காசி தந்த தீன்குலக் கொழுந்தாம் அப்பா அவர்களும் 'வான் பொருளைக் கண்டிறைஞ்சிய வல்லோராகிய சற்குருவிடத்துத் தீட்சை பெற்றே ஆன்மீக ஞானம் பெற்றார் என்பதனை

"ஷரகில் மிக்குள நிலைமை கற்றுயர் சகல சற்குரு புத்திரன்"
(ஞானப் புகழ்ச்சி — 25)

என்று ஞானப் புகழ்ச்சியில் தம்மை அறிமுகப் படுத்துகின்ற பாவடியையும்,

அறிந்தே னிறையை யறியாதநாளி லலமலப்பட்
டிருந்தேன் குருவந் துபதேசங் காதிலிருத்தியபின்
வருந்தேன் பலதொன்றும் வையேன் மனத்தினில்
வையகத்தைப்
பொருந்தேன் புறமகத் திட்டேன் நிறைபரி பூரணமே"
(ஞான மணிமாலை —13)

போன்ற அப்பாவின் ஞானமணிமாலைப் பாவடிகளையும் சான்ருகக் காட்டி நிறுவலாம். ஆன்மீக ஞானம் பெறுதற்கு அனுபூதி பெற்ற குருவின் துணை இன்றியமையாதது என்று பல்லாற்ருனும் நமக்கு அறிவுறுத்தும் அப்பா அவர்கள் அத்தகைய மெய்யறிவு நிலை கண்ட மேன்மக்களைக் கண்டறியும் வழிவகைகளையும் நமக்குத் தெள்ளிதின் விளக்கியுள்ளார்கள். அப்பா அவர்களின் மெய்ஞ் ஞான இலக்கியங்களுள் காலத்தால் முந்தியது எனக் கருதப்படும் பிசுமில்குறம் என்னும் நூலில் "இல்ம்" எனப்படும் ஞானம் பெற்ருேராகிய ஆலிம்கள், ஆபிதுகள், ஆரிபுகள் ஆகியோரின் அடையாளங்களை விரித்துக்கூறி, பின்னர் ஷரகு எனப்படும் ஆன்மீக நெறியின் பல்வேறு நிலைகளை உணர்ந்து கடந்த உயர் மக்களாகிய குருமார்களின் அடையாளங்களையும் நான்கு விருத்தப் பாக்களில் பொருத்தமுடன் விளக்கியுள்ளார்கள். காட்டாக:

வீட்டிலே யொருவன்குடி யிருக்கும்வாறும்
வெளியிலிரு பேர்காவ லிருக்கும் வாறும்
கூட்டியே மூவரையும் சேர்க்கும் வாறும்
கூடாமல் மூவரையும் பிரிக்கும் வாறும்
ஆட்டியே யிருவரையும் அமர்த்தும் வாறும்
ஆறிரண்டு பேரொருவ ரானவாறும்
...........................................................
பாட்டிலுள்ள பொருளறிந்து சொன்னபேரைப்
பாருலகில் குருவென்று பணியலாமே...

—(பிசுமில் குறம் 7)

என்று சுட்டிக் காட்டுகின்ருர்கள். சற்குருமாரின் அடையாளங் களை பிசுமில் குறத்தில் சுட்டிக்காட்டும் பீரப்பா அவர்கள் போலி குருமார்களின் பித்தலாட்டங்களையும் "ரோசு மீசாக்கு மாலையில்" பட்டியலிட்டுக் காட்டி நம்மை எச்சரிக்கின்ருர்கள்.

'சொல்லத் தகுமல்ல விப்பொருளை' என்ற அடியினைத் தொடர்ந்து வருகின்ற "சுருட்டி மறைக்கிறேன் ஷரகுக்காக" என்ற பாவடியும் ஆன்மீக அனுபவ விளக்கம் பற்றி நாம் குறிப் பிடும் அப்பாவின் கொள்கையினை மேலும் வலியுறுத்துவதாகவே அமைந்துள்ளது.

ஷரகு எனப்படும் மெய்ப்பொருள் அறிவு நெறி நான்கு நிலைகளைக் கொண்டது. அகக்கண்ணொளி சிந்தும் ஆன்மீகச் செல்வரான அப்பா அவர்கள் ஞானமணி மாலையில் தம்மை அறிமுகப்படுத்தும் ஒரு பாடலில்

"ஷரகு நான்கு வழியிராறு சமையநீதி கண்டவன்"

— (ஞான மணிமாலை 8)

எனக்கூறி ஷரகின் நிலை நான்கு எனத் தெரிவிக்கின்றார்கள். இவை ஷரீஅத்து, தரீகத்து, ஹகீகத்து, மஃரிபத்து என்பன. ஞான மணிமாலையில் பல்வேறு பாடல்களில் அப்பா அவர்கள் இந்நிலைகளை அழகுற விளக்குகின்றார்கள். காட்டாக,

> ஆதியை அறியவேண்டில் அழகிய நிலமை நாலாம்
> ஓதிய ஷரீஅத்தென்றும் உவந்திடு தரீகத்தென்றும்
> நீதிசேர் ஹகீகத் தென்றும் நெறியுள்ள மஃரிபத்தால்
> ஆதியைக் காணலாமென் றகுமதர் அருளிச்செய்தார்
> — (ஞான மணிமாலை 11)

என்ற பாடலைக் கூறலாம். தமிழ் முஸ்லிம் மெய்ஞ்ஞான இலக்கியங்களில் இந்நான்கு நிலைகளைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனக் குறிப்பிட்டுள்ள போதிலும் இச்சொற்கள் பெரும்பான்மையும் அத்துவிதச் சார்புடைய இலக்கியங்களிலும், சைவ சித்தாந்த நூற்களிலுமே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதைத் தமிழ் அறிஞர்கள் அறிவர். எனவே சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் தமிழ்ச் சொற்களை ஷரீஅத்து, தரீகத்து, ஹகீகத்து, மஃரிபத்து என்னும் நிலைகளைக் குறிப்பிடுவதாகப் பயன்படுத்தும் போது மிகுந்த கவனத்துடன் கையாளுதல் ஆராய்ச்சியாளர் கடனாகும்.

ஷரகின் இந்நான்கு நிலைகளையும் முறையே அரும்பு, மலர், காய், கனி இவற்றோடு ஒப்பிடலாம். மெய்ப்பொருள் அறிவுக்கனி அரும்பாய்த் தோன்றி, மலராய்ப் பூத்து, காயாய் விளைந்து, இறுதியில் கனியாய் முதிர்வதாகும். தேமாங்கனியாகிய மஃரிபா என்ற நிலையினைத் தேடிப் பெறவேண்டின் அதற்கு முந்திய நிலைகளையும் நாடிக் கடந்து வரல் வேண்டும். அவ்வாறின்றி முதல் நிலையில் இருப்பவர் முதிர்ச்சி பெறாது மூன்றாம் நிலைக்குத் தாவுதல் ஷரகுக்குப் புறம்பான செய்கை.

இறைநேசச் செல்வர்களாகிய முஸ்லிம் தவஞானிகள் ஷரகின் ஒவ்வொரு நிலையிலும் பல்வேறு வணக்க நிலைகளையும், தோத்திர நிலைகளையும் கையாளுகின்றனர். இவ் வணக்க நிலைகள் "மக்காம்" எனப்படும். தோத்திர நிலைகளை "திக்கிர் முறை" என்பர். ஷரகு நெறியில் எட்டுவகை மக்காம்களும், ஐந்துவகை திக்கிர் முறைகளும் உள. நாஸூத்து, மலக்கூத்து, ஜபரூத்து, லாகூத்து, ஜெம்கூத்து, பாகூத்து, ஆகூத்து, தம்கூத்து என்பன எட்டுவகை மக்காம்களாகும். பிசுமில் குறத்தில் இதனைக் குறிப்பிடும் அப்பா அவர்கள்:

"ஏதமான வணக்கநிலை எட்டு மக்கா முண்டு
இலங்குகின்ற நாஸூத்தும் இயம்புமலகூத்தும்
இதுமேலே ஜபரூத்தும் லாகூத்தும் ஆகும்
துலங்குகின்ற ஜெம்கூத்தும் பாகூத்தும் காட்சி
துலையாத ஆகூத்து தம்கூத்தும் எட்டு"
— (பிசுமில் குறம் 46—48)

என்று தொகுத்துத் தருகின்றார்கள். ஐவகை திக்கிர் முறைகள்: திக்று ஜல்லி, திக்று கல்பி, திக்று றூகி, திக்று சிர்ரி, திக்று கபீ என்பனவாம்.

ஐந்துவகை திக்றுமுறை அறியும்வகை கேளும்
கலங்காத திக்றுஜல்லி கல்பியுடன் றூகி
காட்சிபெற்ற சிர்ரியுடன் கபீயும்திக்கி ரைந்தும்.
(பிசுமில் குறம்... 49, 50)

இத்தகைய பல்வேறு நிலைகளைக்கொண்ட ஷரகின் சூக்குமத்தை உணர்ந்தோர்க்கே மெய்ஞ்ஞான அனுபவ விளக்கம் பயன்விளைக்கும். அத்தகையோர்களை அப்பா அவர்கள் "சூழ்ச்சி அறிந்தோர்கள்" என்று குறிப்பிடுகின்றார்கள். ஞானப் புகழ்ச்சியின் அவையடக்கப் பகுதியில்:

சூழ்ச்சி யறிந்தோர்கள் அடியேன் சொன்ன
சொல்லிற் பிழைதீர்த்துக் கொள்வாரென்றே
(ஞானப் புகழ்ச்சி... 19)

என்று கூறுகின்றார்கள்.

மஃரிபா எனப்படும் மெய்ப்பொருள் அறிவுநெறியின் உயர் நிலையை அடைந்தோர் அதற்கு முந்தைய நிலைகளான, ஹகீகத்து, தரீகத்து, ஷரீஅத்து போன்ற நிலைகளில் பேணப் படும் வணக்க நிலைகளையும், தோத்திர நிலைகளையும் துறப்பர். மஃரிபாவின் நிலை உள் வணக்க நிலை. இதுவே "பேசா அனுபூதி" நிலை. சூஃபியாக்களின் வரலாறு பற்றிய ஓர் அறிமுக நூல் எழுதிய மேனாட்டறிஞர் டாக்டர் ஆர்தர் ஜெ. ஆர்பரி என்பார் இந்நிலை பற்றிக் குறிப்பிடும்போது:

"It is a state of total disengagement of the mind from all temporal concerns and worldly pursuits; an entire throwing off, not only of every superstition, doubt or like, but of the practical mode of worship, ceremonies, etc., laid down in the religion".

எனவே மஃரிபாவென்னும் பரமானந்த நிலையில் ஆழ்ந்திருக்கும் சூஃபியாக்களின் பக்திநிலை பாமரர்க்குப் புரிவதில்லை. அப்பா அவர்களின் வாழ்க்கையில் இந்நிலையை விளக்குவதுபோல் ஒரு நிகழ்ச்சி நடந்ததாக அன்னாரின் பெயரால் ஓதப்படும் 'மௌலிது' எனப்படும் தோத்திரப் பாடல் தொகுப்பில் கூறப்படுகின்றது.

வேணாட்டின் தெக்கெல்லையாய் விளங்கிய தக்கலையின் 'சிறுகடை' என்ற பகுதியில் அப்பா அவர்கள் நெய்தல் தொழிலை நேயமுறச்செய்துவந்த நாட்களில் அங்கு வாழ்ந்திருந்த முஸ்லிம்கள் அன்னார் தொழுகை முதலிய மார்க்கநெறி முறைகளில் ஈடுபடாமலிருக்கக்கண்டு அவர்களின் உயர்நிலைமீது ஐயங் கொண்டனர். அப்போது அப்பா அவர்களின் குருநாதராகிய சதக்கத்துல்லா அப்பா அவர்கள் காயற்பட்டினத்தில் வாழ்ந்திருந்தனர். (சதக்கத்துல்லா அப்பா அவர்களே பீரப்பாவின் குருநாதராய் இருந்தனர் என்பதற்கு பிசுமில் குறத்தில்:

மனதுமகிழ அறிவையுமறிந்து
வழுத்தினர் சதக்கத்துல்லாவே (பிசுமில்குறம்...2)

என்று சதக்கத்துல்லா அப்பா அவர்கள் தமக்கு ஞானபோதனை செய்ததாக அப்பா அவர்கள் குறிப்பிடுவதை ஆதாரமாகக் காட்டலாம்.) சிறுகடை முஸ்லிம்கள் அப்பா அவர்கள் பற்றிய தமது ஐயப்பாட்டினைச் சதக்கத்துல்லா அப்பா அவர்களிடம் முறையிட்டனர். மாபெரும் தவஞானச் செம்மலான பீரப்பாவின் மாட்சியினை அந்த மக்களுக்கு வெளிப்படுத்திக் காட்டுவதற்காகவே வந்ததுபோல் புறப்பட்டு வந்தனர் பொற்புடைய ஞானி சதக்கத்துல்லா அப்பா அவர்கள். சிறுகடை அடைந்து செம்மல் பீரொலியின் சிறுகுடில் அணுகினர். அப்போது நெறிகளைவென்ற நெறியாளரான அப்பா அவர்கள் தறியினில் அமர்ந்து தம் பணியினைச் செய்து கொண்டிருந்தனர். அருகில் நெருங்கிச் சென்ற சதக்கதுல்லா அப்பா அவர்களின் கண்கள் தறியிலிருக்கும் தவஞானச் செம்மலவர்கள் கால்வைத்திருக்கும் காற்குழியில் நிலைத்து நிற்கின்றன. அங்கு அவர்கள் கண்டகாட்சி! தூய்மை மிக்க கஃபத்துல்லாவில் தூதர் நபி நாயகமவர்கள் இமாமாகத் தொழுகை நடத்திக் கொண்டிருக்க, தொடர்ந்து நின்று தொழுது கொண்டிருக்கும் தொகையற்ற நல்லார்களோடு முன் வரிசையில் பீரப்பா அவர்களும் பீடுறத் தொழுதிருக்கும் காட்சியினைக்கண்டு களிபேருவகை கொண்டனர். சுற்றி நின்ற மக்களுக்கும் சுட்டிக் காட்டினர். வலியுல்லா அவர்களைப் போலியெனச் சொன்னவர்கள், மேனி சிலிர்த்து நின்றனர். அவதூறு பேசியவர் அருள் கூர வேண்டினர்.

மேற்கூறிய நிகழ்ச்சிகள் மெய்ஞ்ஞானக் கட்டிடத்தின் மேல் மாடியில் வாசம் செய்யும் ஞானமேதை போன்றோரின் வாழ்க்கையில் நடந்துள்ளன. கட்டிடத்தின் படிக்கட்டில் நிற்போரும், பாதையிலே வருவோரும் பக்குவம் பெறவேண்டும். ஆன்மீகப் பாட்டையிலே தங்கள் பயணத்தைத் தொடர வேண்டும். ஆன்மீகப் பயணத்தின் அனுபவங்கள் உணரத்தக்கனவேயன்றி உரைக்கத்தக்கனவல்ல. எனவேதான் அப்பா அவர்கள் கூறுகின்றார்கள்.

சொல்லத் தகுமல்ல விப்பொருளைச்
சுருட்டி மறைக்கிறேன் ஷரக்குக்காக
எல்லையறிந் துன்னை வணங்க வல்லார்க்
கிரங்கி இருப்போனே துணைச் செய்வாயே.
(ஞானப் புகழ்ச்சி. 17)

## துணை நூற்பட்டி


1. பீர்முஹம்மது வலியுல்லாஹ் (ரலி) — *ஞானக்கோர்வை* ஹாஜி. எம். ஏ. ஷாகுல்ஹமீது அன் சன்ஸ் சென்னை.

2. மௌலவி. அப்துல்வஹ்ஹாப் பாகவி — *மௌலானா ரூமியின் தத்துவங்கள்.* தம்பி புக் சென்டர் சென்னை.

3. Thiru A. V. Subramaniya Iyer — **The Poetry and the Philosophy of the Tamil Siddhars** Manivasagar Noolagam, Chidhambaram.

4. Thiru Kamil V. Zvelebil — **The Poets of the Powers** Rider and Co., London 1974.

5. Thiru T. M. P. Mahadevan (Editor) — **Seminar on Saints** University of Madras Madras.

# தவநாதர்

டி. ஹாமீம் ஆலீம் சாகிப்
பேஷ் இமாம், தக்கலை.

தக்கலையில் மறைந்து தரணிக்கெல்லாம் ஞான வெளிச்சத்தைத் தருகின்ற தக்கலைத் தவஞானி - ஞானசாகரம் - இறைக் காதலர் - மஹ்பூபே இலாஹி - ஆசிகே இலாஹி - அல் ஆரிபுல்லாஹ் - மக்களெல்லாம் அன்போடு அப்பா என்று அழைக்கின்ற மஹான் ஹலரத் பீர்முஹம்மத் வலீயுல்லாஹ் (ரலி) அவர்களைப் பற்றி அறியாதார் மிக அரிது. அவர்கள் தமிழக, கேரள மக்களின் நெஞ்சங்களில் நிறைந்தவர்கள். அவர்கள் தம் வாழ்வு, வாக்கு ஆகியவற்றை அறிய ஆசைப்படாதாரில்லை. ஏனெனில் அல்லாஹ்வின் நேசர்களான அவ்லியாக்கள் எப்படி வாழ்ந்தார்கள்? எந்தக் குறிக்கோளுக்காக இரவு பகலாக இறைவணக்கம் புரிந்தார்கள்? என்பவற்றை உணரும் போது நமது வாழ்வுக்குத் தேவையான முன்னோடி வாழ்க்கை கிடைத்து விடுகிறது. நாம் எப்படி வாழ வேண்டும் எப்படி வாழ்ந்தால் அல்லாஹ்வின் அன்பும் அருளும் நமக்குக் கிடைக்கும் - என்பதை உணர்ந்து அவர்கள் நடந்து காட்டிய வழிகளைப் பின்பற்றி நடப்பதற்கு உறுதுணையாக அவர்கள் வாழ்வும் வாக்கும் அமைந்து விடுகின்றன.

அல்லாஹ்வின் நேயர்களான வலீகளின் சிறப்பிற்கும் நமது தாழ்ந்த கடையான நிலைக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள பொருத்தமே யுண்டு. எனினும் அந்த மஹான்களிடம் பெருமதிப்பு வைத்து அன்பு கொண்டு அவர்களின் திருநாமங்களைப் போற்றிக் கொண்டாடுகிறோம். அவர்களை எப்போதும் சிந்தையிலிருத்துகிறோம். இவற்றால் நமக்கு அவர்களுடன் தொடர்புண்டாகிச்சீரும் சிறப்பும் கிட்டுவதோடு ஆத்மீகத் துறையிலும் விழிப்புணர்ச்சி ஏற்படுகின்றது என்று அதாவுல்லாஹில் இஸ்கந்தரி (ரலி) தங்கள் அற்புத கிரந்தமான ஹிகமில் எழுதுகிறார்கள்.

வலிமார்களில் சிரேஷ்டர்களான மஹான்களிடத்து நாம் கொண்டுள்ள மதிப்பு சாமான்யமானதன்று. அதிலும் தக்கலையில் மறைந்து வாழ்கின்ற மெய்ஞ்ஞான மேதை ஹலரத் பீர்முஹம்மத் அப்பா (ரலி) அவர்கள் மீது நாம் கொண்டுள்ள மரியாதையும் அன்பும் பக்தியும் சாமான்யமானதல்ல. தனிச்சிறப்பு வாய்ந்தவை. அவர்களின் பதினெண்ணாயிரம் ஞானப்பாக்களில் ஒவ்வொரு பாடலையும் நாம் பார்க்கும் போது அப்பா அவர்களே நம் முன் நின்று ஞான உபதேசம் புரிவது போன்ற உணர்வும் எழுச்சியும்

ஏற்படுகின்றன. சிறுவர் முதல் முதியவர் வரையிலும் சிறுமியர் முதல் மூதாட்டியார் வரையிலும் முஸ்லிம்கள் முஸ்லீமல்லாதார் வரையிலும் அப்பா அவர்களைச் சொந்தம் கொண்டாடுவது போன்று உள்ளத்தெழும் அன்புப் பெருக்கால் 'அப்பா' 'அப்பா' 'அப்பா' என்றழைக்கும் இனிமையான இன்ப அழைப்பு கேட்போர் இதயத்தைக் கிளு கிளுக்கச் செய்கின்றது.

அப்பா அவர்களின் திருநாமமோ அற்புத சக்தி வாய்ந்தது. நானிலம், போற்றும் மஹான்களான மஹ்பூபே சுப்ஹானி-குதுபுல் அக்தாப் - முஹியிய்யித்தீன் அப்துல்காதிர் ஜெய்லானி, அஜ்மீரில் மறைந்து வாழும் இந்துல்வலி அதாயிறசூல் காஜாமுயீனுத்தீன் ஜிஸ்தி, மாதவ ஞானி - சுல்தானுல் ஆரிபீன் அஹ்மத் கபீர் றிபாயி (ரலி), குத்புல் அக்பர்-அபுல்ஹசன் அலிய்யிச் சாதுலி (ரலி), நாகூர் சரீபில் மறைந்து வாழும் மஹான் எஜமான் ஆண்டகை என்று அன்புடன் அழைக்கப்படும் ஹலரத் சாகுல்ஹமீது (ரலி) போன்றவர்களின் திருநாமங்கள் எப்படி மக்களின் உள்ளத்தில் சாந்தி தரும் அமைதியான பேரின்ப உணர்ச்சியைத் தருகின்றனவோ அது போன்று அப்பா அவர்களின் திருநாமமும் அமைந்திருக்கிறது. அப்பா அவர்களுக்கு முன்னால் இத்தகைய பெயர் கொண்டோர் தமிழகத்திலோ கேரளத்திலோ வாழ்ந்ததாகத் தெரியவில்லை.

'பீர்முஹம்மத்' 'பீர்முஹம்மத்' 'பீர்முஹம்மத்' — சொல்லச் சொல்ல நாவும் நெஞ்சமும் இனிக்கும் இந்தத் திருப்பெயர்தான் அப்பா அவர்களின் சொந்தப் பெயர்.

இந்தப் பெயரை அப்பாவுக்கு யார் சூட்டியது?
அப்பா அவர்கள் சொல்வதைக் கேட்போம்.

> பாருலகும் வானுலகும் பார அறுசும் குறுசும்
> தாருலகும் ஒன்றாய்ச் சமைத்த நாள் பீர்முஹம்மத்
> என்றழைத்துப் பேசி அவர் இரு தயத்தி
> லுன் னொளிவைக் கண்டுவரச் சொன்னாய்என் காவலனே.

இந்தச் சடவுலகத்தில் நான் பிறக்கும் முன்னால் ஆத்மிக உலகில் இறைவன் என்னைப் பீர்முஹம்மத் என்றழைத்து எனது இதயத்தில் அவனின் பேரொளியைக் கண்டுவர வேண்டுமென்று கட்டளையிட்டான். ஆகவே அல்லாஹ்வே அப்பா அவர்களுக்குப் பீர்முஹம்மத் என்ற திருநாமத்தைச் சூட்டினான்.

மற்றொரு பாடலிலும் கூறுவதைக் கேட்போம்.

> "சிறுமலுக்கர் சிகரமெய்த்தருள் செல்வன் இரு கண்ணற்றவன்
> பிறகுநட்பொடு குருவெனக்கிடு பேருபீர் முஹம்மது"

இறைவன் அமைத்த திருப்பெயரை எனது குருவும் எனக்கமைத்தார் என்று கூறும்போது அவர்கள் திருநாமம் எத்துணைச் சிறப்புடையது என்பது அறியலாம். இன்று தமிழகத்திலும் கேரளப்பகுதியிலும் பல ஆயிரக்கணக்கான பீர்முஹம்மதைப் பார்க்கிறோம்; பீர் உம்மாக்களைப் பார்க்கிறோம்; பீர் பீவிகளைப் பார்க்கிறோம்.

அப்பா அவர்களின் நாமத்தின் பெயரால் வடகேரளாவில் ஒருநகரமே அமைந்திருக்கிறது. பழைய திருவிதாங்கூர் அரசாங்க வரலாறுகளைப் பார்க்கும்பொழுது பீர்முஹம்மத் என்ற துறவியார் நீண்டநாள் தவம்செய்த காரணத்தால் இப்பகுதிக்குப் பீர்மேடு என்று பெயர் வந்தது என்று அறியலாகும். இன்று பீர்மேடு செல்வம் கொழிக்கும் சிறந்த ஜில்லாவாக அமைந்திருக்கிறது.

முற்றும் துறந்த துறவியாக ஏழ்மையை மேற்கொண்டு காடுமலை வனாந்திரங்கள் சென்று பல காலம் கடும் தவமியற்றி, அப்பால் ஊர் ஊராய்ச் சுற்றி இஸ்லாமியச் சேவைசெய்து அஞ்ஞானத்தில் ஆழ்ந்த மக்களின் இதயங்களில் மெய்ஞ்ஞான தீபச் சுடரை ஏற்றி வைத்த அப்பா அவர்களை அறியாதார் இருக்க முடியுமா?

ஞானக்கடல் அலிய்யுன் கர்ரமல்லாஹு கூறினார்கள்:

'பிக்றுக பீய்க்க யக்பீய்க' — 'சோதரா உன்னைப்பற்றிச் சிந்தித்துப் பார்; உன்னுடைய உள்ளம் புலப்படும்' என்று! சைகுல் அக்பர் இப்னு அறபி 'மன் அன்த — நீ யார்?' என வினவிப் பார்க்க வேண்டினார்கள். அப்பா அவர்கள்,

'நாத மானது என்னது என்ன சொல்
வேந்த ரானது என்னது என்ன சொல்
ஆத மானது என்னது என்ன சொல்
ஆல மீதினில் வாழ்வதை நீ சொல்'

எனப் பாடினார்கள். நான் என்பது என்ன? மண், தண்ணீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனப்படும் பஞ்சபூதங்களாலான சரீரமா? இச்சரீரம் 'நான்' என்றால் சில சமயங்களில் எனது கண் வலிக்கிறது, எனது கால் வலிக்கிறது, எனது கை, எனது உறுப்புக்கள் என நாம் வேறு, நமது சரீரம் வேறு எனப் பேசுகிறோமே ஏன்? உண்மை இது தான். நிச்சயமாக நான் என்பது வேறு; நமது சரீரம் என்பது வேறு. சரீரம் என்பதோ நமது வாகனம், அல்லது வீடு. அவ்வளவே. குறிப்பிட்ட காலம் வரை இச்சரீரத்

தில் குடியிருக்கிறோம். நமக்குரிய தவணை முடியும்பொழுது இச்சரீரம் வேறு நாம் வேருகப் பிரிக்கப்படுகிறோம். கீழக்கரையில் அடக்கமாகியுள்ள தைக்கா சாகிப் வலியுல்லாஹ் (ரஹ்) கூறியது போல,

'தானென்பது ஆன்மா அதிலே நின்றும்
தனியோன் சிபாத்துகள் வெளியானதால்
பானியானவர் அவைகளைத்தான்
படைத்தோன் அளவினில் சேர்ப்பார்களே'

நான் என்பது ஆன்மா. இதில் இறைவனுடைய ஹயாத்து, இல்மு, இருதத்து, குத்ரத், ஸம்வு, பசறு, கலாம் என்ற சிபத்திலிருந்து இரவலாக இவ்வேழு சிபத்துகளின் தன்மையும் நம்மில் பிரகாசிக்கிறது. ஆகவே தான் நாம் நம்மைப்பற்றிச் சிந்தித்து நம்மை நாமே அறிவது தலையாய கடமை ஆகிவிடுகிறது. ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் நவின்ருர்கள்:

'எவன் தன்னை அறிந்தானே அவன் நிச்சயமாக அவனின் றப்பை அறிந்தான்' (மன் அறப நப்ஸஹு பகத் அறப ரப்பஹு) என்பதாக. இத்தகைய பாதையில் செல்வோர்களே சூபிகள் (துறவிகள்) எனப்படுவோர். உலகத்தவர் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டும் உலகத் தொடர்பையும் உலக ஆசாபாசங்களையும் மறந்திருப்பர். அக்காலமே நித்திரையின் காலம். ஆனல் துறவிகள் – ஞானவான்கள் – ஆரிபீன்கள் மனமானது எக்காலத்தும் உலகத் தொடர்பான எல்லாவிதமான ஆசாபாசங்களையும் விட்டும் நீங்கிப் பரிசுத்தமுடையதாக ஒளிவீசிக் கொண்டிருக்கும். தேவைக்குத் தகுந்தவாறு இவ்வுலகில் அவர்கள் வாழ்வர். தாமரை இலை மீது தண்ணீர் இருப்பதுபோன்று உலகியலில் ஒட்டியும் ஒட்டாதுமிருக்கும் உள்ளமே அவர்களுக்குரியது. அத்தகையோர் தமது நாட்டம், தேட்டம், வாழ்வு, வளர்ச்சி அனைத்தையும் முழுக்க முழுக்க முதலோன் அல்லாஹ்விடம் ஒப்படைத்து விடுவர்.

'அன்பனே நின்பதம் என்றுனை நம்பும் நல்லடியவர்க்கு
அன்பும் ஆதரவுமாய் நின்றெமக்கு
இன்பம் நீ தருகிலும் துன்பமே வருகிலும்
இகழிலும் அடியேன் நெஞ்சுனை மறந்தொழிவனே
வம்பனேடு ஐம்புலப் பஞ்ச பூதங்களும் வந்ததின்
மாய்கையால் சிந்தை வேருக முன்உன்
தம்பமன்றி எளியவர்க்கு உன்தலீல் தந்தருள்க
யான் தமியேன் நின் சரணமே' (ஞானப்புகழ்ச்சி)

என்று அப்பா பாடுவது போன்ற நிலைதான் உண்மைத் துறவிகள் நிலை.

துறவு இருவகைப்படும். ஒன்று அகத்துறவு; பிறிதொன்று புறத்துறவு. இவ்விரு துறவுகளும் துறவிகளுக்குத் தேவையென்ற போதிலும் இரண்டனுள்ளும் அகத்துறவுதான் முக்கியமானது. அகம் எனப்படுகின்ற கல்பு உலக ஆசாபாசம், பொய், வஞ்சம், சூது, வாது, பொறுமை, பெருமை, அகங்காரம், ஆணவம், தானென்னும் இறுமாப்பு, இறைவனுக்கு மாறாக நடக்கின்ற மனோநிலை இவை அனைத்தினையும் விட்டு நீங்கி,

'அனைத்துயிர் ஒன்றெண்ணி
அரும்பசி எவர்க்குமாற்றி
மனத்தினுள் பேதாபேதம்
வஞ்சகம் பொய்களவு
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ'

எனக் கூறப்படுவதுபோல் தூய்மையாய் இருப்பது.

நாமத்தால், கோலத்தால், உருவத்தால் வேறுவேறாகக் காட்சி வழங்குகின்ற மனித இனம் யதார்த்தத்தில் ஒன்றேயாகும். இதற்கொரு உதாரணத்தை நினைவு கூரலாம்.

பலவகை ஆபரணங்களைப் பார்வையிடும்போது அவையெல்லாம் வெவ்வேறு உருவிலும் பெயரிலும் விளக்கம் பெறுகின்றன. அவைகளை நெருப்பிலிட்டு உருக்கிவிட்டால் அவைகளின் உருவங்களும் பெயர்களும் மாறி அவற்றின் மூலப் பொருளான தங்கம் என்ற பெயரே தலைகாட்டுகின்றது. இரவலாக வந்த உருவமும் பெயரும் இடம் தெரியாமல் மறைந்து விடுகின்றன. இன்னொரு உதாரணத்தையும் எண்ணிப் பார்க்கலாம். நமது உடலில் போர்த்தியிருக்கும் ஆடையையோ அங்கியையோ எடுத்துக் கொள்வோம். ஆடையின் மூலப் பொருள் துணி. துணியின் மூலம் நூல். நூலின் மூலம் பஞ்சு. பஞ்சின் மூலம் விதை. விதையின் மூலப்பொருள் அதன் உள்ளே அமைந்திருக்கும் சத்துப்பொருளான ஹுறூறத்து, புர்தத்து, றுத்பத், யபூசத்து என்னும் பஞ்ச பூதாதிகளான மண், தண்ணீர், நெருப்பு, காற்று இவைகளின் அம்சமேயாகும். அவற்றுள் மண்ணின் மூலம் தண்ணீர். அதன் மூலம் காற்று. காற்றின் மூலம் நெருப்பு. நெருப்பின் மூலம் ஒளி. அதன் மூலப்பொருள் ஹகீகத்தே முஹம்மதியா எனப்படுகின்ற நூறே முஹம்மதிய்யா. "நான் இறைவன் ஒளியில் நின்றும் உள்ளவன்; பராபர வஸ்துக்கள் அனைத்தும் எனது ஒளியில் நின்றும் உள்ளது" (அனு மின் னூரில்லாஹி வ குல்லு ஸைய்வுன் மின்னூறி) என நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்திருளினார்கள். ஆகவே,

இவைகளின் ஹகீகத்தை யுணர்ந்து கல்பைத் தூய்மைப்படுத்துவது அகத்துறவின் அம்சமாகும்.

கல்பு என்பது என்ன என்பதை முதலில் தெரியவேண்டும். கல்பானது மஜாசிய்யா வென்றும் ஹகீகிய்யா வென்றும் இரு வகைப் படும். மஜாசிய்யாவாவது உடலின் இடது பக்கமாய் அமைந்துள்ள ஒரு சதைக் கட்டி. உடலில் ஓடும் இரத்தம் இதன்கண் அமைவது. இதிலிருந்துதான் புகைபோன்ற ஆவி உடலெங்கும் வியாபித்து உடலின் இயக்கத்தை நிகழ்த்துகின்றது. இவ்வகையான கல்பு உலகின் எல்லா வகையான உயிரினங்களுக்கும் உண்டு. உடல் அழியும்போது இதுவும் அழிந்துவிடுகின்றது. ஹகீகிய்யாவான கல்பானது உருவமற்றது. இறைவனின் மஃரிபா வெளியாவதே இதன் மூலம்தான். இவ்வகையான கல்பே இறைவன் இருக்கின்ற சிம்மாசனம் என்று ('குலூபுல் முஃமினீய்ன அர்சுல்லா') நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள். ஹதீஸ் குத்ஸியில், 'பரந்த பாருலகமோ, விரிந்த வானுலகமோ இவையனைத்தும் தன்னகத்தே அடக்கி மிகப்பெரிய விசால விதானமாயிருக்கின்ற அர்ஸ், குர்ஸ் இவைகளோ என்னுடைய இருக்கைக்கு விசாலமானதல்ல; என்னுடைய விசுவாசியான மெய்யடியானின் கல்புதான் எனக்கு விசாலமானது' [மாவஸனி அற்ளிய் வலாசமாயி, வலாஅர்ஷி வலாகுர்ஷி வலாகின் வஸஅனி கல்பு அப்தியல் மூமின்] என்று இறைவன் கூறியதாக ரசூலே கரீம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இதனையே அப்பா அவர்கள்,

'ஆதிபெரியோனே தம்பிரானே அடியார் புகழ்ச்சியைக்
கைக்கொள்வோனே
நீதி யுடையோனே நீயுரைத்த நெறிசேர் மறைநான்கும்
உனைத்தேடியே
ஓதிப் புகழினும் காண்கிலானே உள்ளமதில் உன்னைஉவந்தார்
நெஞ்சுள்
சோதி விளக்காய் நின்றிலங்குவோனே துய்யோனே
உந்தன் அடைக்கலமே

என்ற பாடல்மூலம் உணர்த்தி, விசுவாசிகளின் கல்பின் சிறப்பையும் இறைவனைத் தேடி வாடுகின்றவர்களுக்குக் காத்திருக்கும் உண்மையையும் எடுத்துக் காட்டினார்கள்.

'கோடி கோடி மானிடர் குறைவிலாத சோதியைத்
தேடி வாடி மாண்டனர்; தெளிவு கண்டதில்லையே'
(ஞானமணி மாலை)

என்னும் பாடலில் அப்பா அவர்கள் அழகிய பாதையின் அருமையினைப் பழகிய நடையில் படைத்துக் காட்டுகின்றார்கள்.

'சிறந்த மெய்ப்பொருளை அழிவிலா மணியைத்
தெரிந்து முக்காலமும் உணர்ந்து
துறந்தவர் இதயாசனத் திருந்தவனைத்
தொடரின்ப துன்ப மற்றவனைப்
பிறந்த பல்லுயிரின் மனத்தள வுறைந்து
பிறப்பிறப் பென்றில் லாதவனை
மறந்தவர் சுவர்க்கப் பதியையும் மறந்து
மண்ணினில் மதிமறந் தவரே'

என உமறுப்புலவர் அவர்கள் இறைவனின் சோதி வெளியாகும் இயல்பினைத் தெளிவாகத் தருவதைச் சிந்திக்கும்போது ஹகீகியான கல்பின் சிறப்பு எத்தகையது என்பது புரியவருகின்றது. இந்தக் கல்புதான் நாட்டம் என்பது ஆரிபீன்கள் கருத்து.

அல்லாஹ்வைச் சிந்தனையில் சதாகாலமும் நிலைகொள்ளச் செய்தவர்கள் துறவிகள்.

இந்த நிலையில்தான் நமது அப்பா அவர்களும் சிறுவயதிலேயே இறைவன் நாட்டமுற்றுப் பிறந்த நகரை நீங்கித் தேச சஞ்சாரியாய்ப் புறப்பட்டார்கள்.

ஒரு கம்பளித் துணியை உடுத்திப் பிறிதொரு துண்டால் உடலைப் போர்த்தியவாறு இறைக்காதலில் மூழ்கி அலைகின்ற இளம்வயதுத் துறவிக்கு அல்லாஹ்தான் அழகிய துணையாய் அமைந்திருக்கின்றான்.

"அல்லா நீயென்னைப் படைத்துலகில்
அன்னை யிலுமன்பா யுவந்த கோவே
ஒல்லா நீயெங்கள் மனதகத்துள்
உதிப்பு நினைவையு மறிகின்றேனே
பொல்லா னுனுன்னை மறந்துலகில்
பேசத் தொலையாத பிழைகள் செய்துன்
நல்லா தரவுகேட் டிரந்துநானும்
நாய்போ லொதுங்கிநின் வாயல் வந்தேன்".

(ஞானப்புகழ்ச்சி)

இறைவனிடம் தன்னை ஒப்படைத்துத் தனக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பைத் தெளிவாகக் கூறினார்கள் அப்பா அவர்கள்.

அல்லாஹ்வுக்கும் ஆத்மாவிற்குமுள்ள தொடர்பு ஆண்டவனுக்கும் அடியானுக்குமுள்ள தொடர்பாகும். அஃது எத்தன்மை உடையது என்பதை உணர்ந்து உலகப் பற்றினைத் துறந்து தன்னை உணரவேண்டும். தான் யாரெனத் தெரியவேண்டும். தன்னுள் அமைந்திருக்கும் அற்புத மூலப்பொருளை உணர வேண்டும். இந்தக் குறிக்கோள்தான் அப்பா அவர்களின் சிந்தனையில் நிறைந்திருந்தது.

"கள்ள நினைவு தருமிந்தக் காயம் கலந்ததொன்றை
எள்ளள வாகிலும் காண்கிலனே எம்மை யாள்பவனே
வள்ளல் நபியிற சூல்திரு வாணையுன் வல்லபத்தால்
உள்ளொளி காட்டி யுணர்த்திட வேண்டுமெ னுத்தமனே".
(ஞானப்புகழ்ச்சி)

"சரீர குணங்களான பொறுமை, பெருமை, அகங்காரம், ஆணவம், சூதுவாது போன்ற துர்க்குணங்களான 'அம்மாறத்' துக்கும், இறைவனுக்கு மாறுசெய்கின்ற 'சைத்தானியத்' துக்கும் அடிமைப்பட்டு 'மலக்கானியத்' தென்ற அமரத்துவ குணத்தை விட்டும் நீங்கிப் பாவப்படுகுழியில் வீழ்ந்து தத்தளிக்கும் எனது இதயத்தில் பேரானந்த அற்புதச் சுடரைத் துலங்கச் செய்வாயாக இறைவா!" என்னும் வேண்டுகோளுடன் அப்பா அவர்கள் இளமைப் பருவத்தில் காடு மலை சூழ்ந்த பகுதிகளிலெல்லாம் அலைந்து அனுபவத் தழும்புகளை ஏற்றார்கள். கிடைத்ததை உண்டு கொண்ட அவர்கள் கிடைக்காத நாட்களிலெல்லாம் பட்டினியாகப் பல நாட்கள் பயணம் செய்தார்கள். இரவெல்லாம் இறை வணக்கத்திலும், பகலெல்லாம் நோன்பிலுமாக வையமெல்லாம் வலம் வந்தார்கள். பழைய திருவிதாங்கூர் நாட்டின் வட எல்லையான யானைமலைப் பகுதிகளுக்குச் சென்ற அவர்கள் கொடுவிலங்குகள் கூடிவாழும் சூழலிலும் கடும் இபாதத்தில் ஈடுபட்டார்கள்; காய், கனி, இலைகளை உணவாக உட்கொண்டார்கள். கருணையாளன் அல்லாஹ்மீதுகொண்ட காதலால் கண்ணீர்மல்க அழுது கடுந்தவமியற்றினார்கள். வாசியை வசப்படுத்தி, ஏகத்துவம் என்ற இரண்டற்ற அத்துவைத நிலையில் தம்மை மறந்தவாறே பலநாட்களாக நிட்டையிலிருந்தார்கள்.

"கருவுற்ற வெழுத்தை யுன்னிக் கமலத்தி னழுக்கை நீக்கி
உருவற்ற வொளியை நோக்கி யொன்றுபட்
டிருப்போர்க்கெல்லாங்
குருபத்த ரருள்வார் மூலக் குகையினிற் கவிமாத்தன்னைப்
பருவத்தே பயிர்ச்செய் வோர்க்குப் பலனுண்டாம்
பெருகத்தானே"
(83, ஞானமணிமாலை)

இந்த சரீரத்தை உற்பத்திசெய்த மூல அட்சரமான 'ஹு'வை நினைவில் நிறுத்தி, இதயத்திலுண்டான விகார துர்எண்ணங்களை அகற்றி அருபமாய் எங்கும் நிறைந்து நின்றிலங்கும் பரிசுத்த சோதியைக் கண்டுகளிக்கக் கடினமான தத்துவப் படித்தர நிலையைக் கடைப்பிடித்தார்கள்.

'முகத்துக் கண்ணை முறுக்கித் திருத்தியே
அகத்துக் கண்ணை யறுத்துப் பிளந்தபின்
வகுத்த சோதி மணிவிளக் கென்னுளே
தொகுத்துப் பார்க்க சுகம்பெற்ருய் நெஞ்சமே'
(86, ஞானமணிமாலை)

மெய்ஞ்ஞானப் பாதை எளிமையானதன்று. அதன் கண் பயணம்செய்வோர் வைராக்கிய சித்தத்தோடு கரடு முரடான படித்தரங்கள் பலவற்றைக் கடக்கவேண்டும். தனது 'நப்சை'க் கட்டுப்படுத்துவது, சரீரத்தின் அமல்களை எடுத்து நடத்தல், தனக்கு வழிகாட்டியாக ஒரு 'செய்கை'ப் பின்பற்றல் – இவைகளை அப்பாதையில் செல்வோர் பேணவேண்டும்.

'ஆதியை யறிய வேண்டி லழகிய நிலைமை நாலா
யோதிய ஷரீஅத் தென்னு முவந்திடுந் தரீகத் தென்னும்
நீதிசேர் ஹகீகத் தென்னும் நெறியுள்ள மஃரி பத்தா
லாதியைக் காண லாமென் றஹ்மத ரருளிச் செய்தார்'
(11, ஞானமணிமாலை)

என அப்பா பாடும் நால்வகை நிலைகளுள் முதற்கண் உணர்த்தப் படும் 'ஷரீ அத்'தின் அடிப்படையில் வழுவாமல் நடந்துவருவதற் குரிய மார்க்க அறிவையும் அத்தகையோர் பெற்ருக வேண்டும். மெய்ஞ்ஞானப் பாதை மேவுவோருக்கு வழிகாட்டி (ஷெய்கு) மிகத் தேவை. 'எவருக்கு வழிகாட்டி (செய்கு) இல்லையோ அவருக்கு வழிகாட்டி செய்த்தானே' என்பது ஹலரத் ஜுனைதுல் பக்தாதி (ரஹ்) அவர்கள் கூற்று.

'குருக்களற்ற ஞானமும் குணங்களற்ற சீசனும்
கருக்களற்ற வித்தையுற் களங்கமற்ற புத்தியும்
உருக்கமற்ற நெஞ்சமும் உணர்ச்சியற்ற விவையெலாஞ்
சுருக்கமற்ற சோதியைத் தொடர்ச்சியற்ற தொக்குமே'
(208, ஞானமணிமாலை)

குருவில்லாத ஞானம் குணம்செய்யாது. மனிதனுடைய 'கல்பை' அல்லாஹ்வின் சமுகத்தில் நிலைக்கச் செய்யவும், அல்லாஹ்வின் சமுகத்திற்குப் பொருத்தமற்ற செயல்களையும் எண்ணங்களையும் முறைப்படி நீக்கவும், ஞானப்பாதையில் முன்னேறிச் செல்லவும், பக்குவமாய்ப் பாதை காட்டவும் 'செய்கை' நிச்சயமாகப் பின் பற்றியாக வேண்டுமென்று தரீகத்தைச்சாரும் செய்குமார்கள் குறிப்படுவர் என்பதாக 'அன்வாருல் குத்சிய்யா' என்னும் 'கிதாபில்' அப்துல் வஹ்ஹாபுஸ்ஸஃருனி (ரஹ்) அவர்கள் குறிப் பிட்டுள்ளார்கள். 'ஹுஜ்ஜத்துல் இஸ்லாம்' — 'இஸ்லாத்தின் அத்தாட்சி' என்னும் சிறப்புப் பெயர்பெற்ற இமாம் அபூஹாமிதுல்

கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் செய்கு முஹம்மதுல் பாதிஆனி (ரஹ்) அவர்களிடத்தில் 'பைஅத்து'ப்பெற்று 'தரீகத்தை'யுடையவர்களின் ஹால்களின் இன்பத்தை அடைந்தபோது, 'இவ்வின்பத்தைப்பெருமல் இதுவரையிலும் நமது வாணுளை வீணுக்கி விட்டோமே' என வருந்திக் கூறிஞர்கள். இன்னும் 'சுல்தானுல் உலமா' — 'அறிஞர்களின் அரசர்' என்னும் சிறப்புப் பெயர் பெற்ற செய்கு இஸ்ஸத்தீனிப்னு அப்துஸ் ஸலாம் அவர்கள் தரீகத்தில் இணைந்து முக்திபெற விழைந்து ஹலரத் செய்யித்ஞ அபுல் ஹசன் அலிய்யி சாதுலி நாயகம் அவர்களிடத்தில் 'பைஅத்' என்னும் தீட்சைபெற்று இபாதத்தில் இன்பமடைந்தபோது 'நான் சாதுலி நாயகத்திடத்தில் 'பைஅத்' பெற்ற பிறகுதான் பரிபூரண இஸ்லாமிய இன்பத்தை அடைந்தேன்' என்று கூறிஞர்கள். எனவே பீர்முகம்மது அப்பா அவர்களுக்கும் ஞானப்பாதையில் முன்னேறி முக்திபெற ஒரு செய்கைப் பின்பற்றி ஆகவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அத்தகையதோர் 'செய்கு காமிலே' எங்கே தேடுவது? எப்படி அவரை அடைவது? என்னும் ஏக்கம் அப்பா அவர்களின் மனதை வாட்டியது. மகான் மஹ்பூபே ஸுப்ஹானி முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜெய்லானி நாயகம் அவர்களும், 'இறைவா! செய்கு ஒருவரை எனக்கு வழிகாட்டியாகத் தந்தருள்!' எனப் பிராத்தனை புரிந்தபோது அல்லாஹ், அவர்களுக்கு ஹலரத் செய்கு ஹம்மாது (ரஹ்) அவர்களை அவ்வாறு வழிகாட்டியாகக் காட்டிக்கொடுத்து உதவிஞன். இவ்வாறே எல்லா மகான்களும் தரீகத்தின் பாதையில் வழிகாட்டியின் உதவியோடு சென்றுள்ளனர். அப்பா அவர்களும் செய்கைத் தேடிஞர்கள்; பைஅத்து பெற்ருர்கள். ஆனல் அவர்கள் எந்த தரீகத்தைச் சேர்ந்திருந்தார்கள்?

மகா மேன்மைக்குரிய காதிரிய்யா தரீகத்தை அப்பா சேர்ந்திருந்தார்கள் என்பதற்கு அவர்கள் பாடல்களில் சான்றுள்ளது. வேறு எந்த 'தரீகத்தின்' செய்கைக்குறித்தும் பாடல்களில் குறிப்பிடவில்லை. மஹ்பூபே சுப்ஹானி முகியித்தீன் அப்துல்காதிர் ஜெய்லானி (ரஹ்) அவர்கள் அப்பா அவர்களுக்குக் காட்சியளித்துத் தீட்சைகொடுத்து முக்தி மார்க்கத்தைக் காட்டிக்கொடுத்தார்கள் என்ற உண்மை தெளிவாகப்படுகிறது.

'இந்த அடிமையான நான் கடைத்தேறும் பொருட்டுக் காமிலான என் சற்குருநாதர் வந்து ஞான உபதேசம் என்ற அமுதத்தைப் பருகச்செய்த பின்னர் ஊண் உறக்கம் முதலியவற்றைத் துறந்து பற்றற்றிருந்து பற்றற்ற மெய்ப்பொருளைத்தெரியலானேன்' எனும் பொருள்தொனிக்கும் பாடல் மூலமாகப்பார்க்கும்

போது காமிலான சற்குருவை அணுகி தீட்சைபெற்று ஞானப் பாதையில் நடைபோடுவதே சிறந்ததும் முறையானதுமாகும்.

அப்பா அவர்கள் கொடிய விலங்குகள் உறையும் கானகங் களில் காய், கனி உண்டு கருணையாளன் அல்லாஹ்வின் அன்பையும் அருளையும் நாடித்தவமியற்றிப் பெற்றார்கள். ஆண்டுகள் பல மறைகின்றன.

கொச்சி எனப்படுகின்ற மலைவள நாட்டில் ஒரே பரபரப்பு. ஆனைமலையில் மாபெரும் தவஞானி ஒருவர் தவம் செய்கிறார். வேங்கையும், புலியும், யானைகளும் ஏனைய மிருகங்களும் அவர் பக்கத்தில் பழகியவை போன்று பணிவோடு இருக்கின்றன. அவர் உத்தரவு பெற்றுச் செல்கின்றன. அவர் தவம் செய்வதோ விசித் திரமான முறையாம். பல நாள், பல வாரம், பல மாதம், அன்ன ஆகாரமின்றிப் பேச்சு மூச்சின்றிச் சமாதிநிலையில் மையித்தைப் போன்றிருப்பாராம் என்ற செய்தி கொச்சி மன்னனின் காதுகளி லும் எட்டியது. மன்னவரோ ஞான வாசனை உள்ளவர். பெரியார் களைத் தவஞானிகளைத் தரிசித்து அவர்களின் நல்லாசியைப்பெற்று ஞானப் பாதையின் நிலைகளைக் கேட்டுணர்ந்து அவ்வழி நடந்து முக்தி மார்க்கத்தை அடைய ஆசையுள்ளவர். எத்தனையோ தவஞானிகளை — சாதுக்களை — சாமியார்களை — மஸ்தான்களைத் தரிசித்து மரியாதை செய்து பணிந்து போற்றி மெய்ஞ்ஞானம் சம்பந்தமாய் விளக்கங்களைத் தெரிந்துவந்தவர். என்றாலும் மன்னரின் மனதில் நிறைவு ஏற்படவில்லை. பூரணம் பெறும் மார்க்கத்தைப் புரியும்படி உணர்த்துவாரும் இல்லை. இந்த ஏக்க நிலையில்தான் மன்னரின் காதில் அப்பா அவர்களைப் பற்றிய செய்தி விழுகிறது. தவசிரேஷ்டரைச் சென்று கண்டு களிகூர்ந்து அடங்கா ஞான தாகத்தைத் தீர்க்கும் அமுதுண்ண வேண்டு மென்ற ஆசை! ஒரு நாள் எவருக்குமே தெரியாமல் அதிகாலையில் மாறுவேடம் பூண்டு மன்னவர் செல்கிறார். மன்னுதி மன்னவணுகிய அல்லாஹ்வின் அன்புக்குரிய ஞானி அவர்களைக் காண! பல்லக்கிலே பவனிவரும் மன்னனின் பாதங்கள் பயங்கர முட்களும் செடிகளும் மிருகங்களும் நிறைந்து மண்டிக் கிடக்கும் கானகத்தைத் தாண்டிச் செல்கின்றன. முட்கள் பட்டு பாதங்களில் ரத்தம் சொட்டு சொட்டெனச் சொட்டு கிறது. தாகம் பசி எல்லாவற்றையும் தாங்கிக் கொண்டு மன்னவர் செல்கிறார். ‘எந்தத் துன்பம் வரினும் அப்பா அவர்களைப் பாராது திரும்பேன்’ என்ற ஒரே உறுதியான உள்ளம். ஒருநாள் இருநாள் அல்ல; பலநாள் அப்பா அவர்களைத் தேடி அலைகிறார். காட்டில், கையில் கிடைத்த காய் கனிகளே ஆகாரம்! சோர்ந்து, களைத்து ஒரு கற்பாறையில் சயனித்தார்

மன்னவர். அடுத்தகணம் பக்கத்துப் புதரில் மிகப் பெரிய வேங்கைப் புலி யொன்று பாய்வதற்குக் காத்திருந்தது. பார்த்தார் மன்னவர். மிகவும் நல்லது! மஹான் அவர்களைப் பார்த்துத் தரிசனம்பெற்றுப் பாக்கியம் பெறலாம் எனப் பல நாள் துன்புற்றுக் கானகத்தில் தேடி அலைந்து கால்களும் புண்ணாகிவிட்டன. இனி ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியாது. 'ஏ வேங்கையே! இந்தக் கானகத்தில் தவம் செய்யும் தவஞானி அப்பா அவர்களைப் பார்க்கும் பாக்கியமற்ற என்னை நொடிப்பொழுதில் உண்டு நீயாவது ஆனந்தமாயிரு' என்று சீறிப்பாயவிருக்கும் வேங்கைப் புலிக்கு முன்னால் எழுந்து நின்றார். வேங்கையோ மன்னவரை உற்று நோக்கியவாறு எழுந்தது. மன்னவன் முன்னால் வந்து பாதத்தில் முத்தமிட்டது. சைக்கினை செய்து முன்னால் நடந்தது. கண்களை மூடி நின்ற மன்னவரே சிறிது நேரங்கழித்துத் திறந்து பார்க்க, வேங்கை நாயைப் போன்று வாலைக் குழைத்துக் கொண்டு முன்னால் குந்தி இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். அப்பால் வேங்கைப் புலி ஒரு ஒற்றையடிப்பாதை வழி முன்னால் நடக்க மன்னவரும் பின்னால் நடந்து சென்றார். எதிரே ஆகாயத்தை அளாவிய ஆலமரம் கண்களுக்குத் தெரிகிறது. அடுத்துச் சென்றார் மன்னவர். ஆலமரத்தின் அடியிலே ஒரு உருவம். கண்கள் மூடிய மெலிந்த உருவம். முகமோ பூரணச் சந்திரனைப் போன்று பிரகாசிக்கிறது. யோக நிலையில் இருக்கும் திருவுருவை மன்னவர் பார்த்தார். பரவசமானார். ஆனந்தக் கண்ணீர் உகுத்தவராக நிற்கிறார் மஹான். கண்களைத் திறந்து பார்க்கவேண்டும்; இரு என்று சொன்னால் இருக்கவேண்டும். நிற்கிறார் மன்னவர். ஒரு நாளா? இரண்டு நாளா? பல நாட்களாக அன்ன பானமின்றி திருவுரு முன்னால் நிற்கிறார். நலிந்து சோர்ந்து களைத்துப்போன மன்னவர் முன்னால் முஸாஹதாவில் — நிட்டையில் — பேச்சற்று இருக்கும் அத்திருவுருவத்தவர் யார்? ஆம், அவர்கள்தான் ஞான மாமேதை மஹான் பீர்முஹம்மது அப்பா (றலி) அவர்கள்.

"தன்னுள்விளங்கும் தவமென்ன சொல்லடி சிங்கி—அது
தன்னைமறந்து தவத்தில் இருப்பது சிங்கா!
என்னவிதமாகத் தன்னை மறப்பது சிங்கி—அது
ஒன்றைப்பொருந்தி ஒடுங்கி இருப்பது சிங்கா!
என்னவிதமாக ஒன்றைப் பொருந்தலாம் சிங்கி
எல்லா மறந்து மிருளா யிருப்பது சிங்கா!
(ஞான ரத்தினக் குறவஞ்சி)

முஸாஹதாவின் நிலை இது! மெய்ந்நிலை காணத் துடிக்கும் அன்பர்களுக்கு முஸாஹதாவின் ஒரு நிலையைச் சுட்டிக் காட்டுகிறேன்.

"அன்பனே நீ உன் சரீரத்தையும் உலகிலுள்ள யாவற்றையும் மனதால் அழித்து மேல் கீழ் முன் பின் என்ற திசைகளற்று முடிவில்லாத ஆகாயமாகிய வெட்ட வெளியில் நின்று நினைவில் ஒன்றைப் பொருந்தி அதில் அசைவற்று நிலைத்து நின்றுகொள். இப்படி இதைப் பயிற்சிசெய்து வந்தால் உன்னுடைய மனதில் அநேக உருவங்களும் எண்ணங்களும் ஓடிவரும். அவைகளை உன் மனதால் அழித்து நாசம் செய்துவிடு. இதனைச் சதாகாலமும் பழகி வரும்போது சில சந்தர்ப்பங்களில் நீ வேறு சரீரம் வேறாக மாறும். அப்பொழுது உன்னில் ஒரு தொனி எழும்பும். அதையே கேட்டுக் கொண்டுவா. அதில் உன்னுடைய சுவாசமும் அழிந்துபோகும். அந்த மதுர தொனி உன்னில் சதாவும் கேட்டுக்கொண்டிருக்கும். நீயும் அந்த சப்தமாகவே ஆகி விடுவாய். அதற்கு மேல் அஞ்ஞானமாகிய இருள் திரையைக் கடப்பாய். அதற்கு மேல் ஞானமாகிய ஒளியின் திரையைக் கடப்பாய். மறைவான உலகங்களையும் மறைவான ஆன்மாக்களையும் பார்ப்பாய். அல்லாஹ்வின் தஜல்லியாத்தென்ற பேரொளியில் மூழ்கியவனாய் இருப்பாய். எல்லாம் உனக்குச் சித்திக்கும்."

அப்பா அவர்கள் நிட்டையில் பல நாட்கள் பேச்சற்று மூச்சற்று நினைவற்று இருந்தார்கள். மன்னவரும் அப்பா அவர்கள் கண் திறந்து பாாப்பதை எதிர்பார்த்து நின்றார். பல வாரங்கள் கழிந்தபின் கண்களைத் திறந்து பார்த்தார்கள். மன்னவனே அப்பா அவர்களின் முன்னால் சாஷ்டாங்கமாய் விழுந்து, 'அடியேன் ஏதேனும் தவறு செய்திருப்பினும் மன்னித்து எம்மை ஆட்கொள்ளவேண்டு'மென்று மன்றாடி நின்றார். அருளொழுகு விழிகளால் பார்த்த அப்பா அவர்கள் முன்னால் தெரிந்திராத மன்னனைப் பார்த்து, 'நாடாளும் வேந்தனே! முற்றும் துறந்த துறவியிடத்தில் உமக்கென்ன வேலை?' என வினவினார். மன்னவரோ மெய்சோர்ந்து நாக்குழற, 'துறவியார் அவர்களே! பாவப் பிரளயத்தில் சிக்கித் தவிக்கும் இப்பாவியைப் பாதுகாத்து மோட்ச வழியினைக் காட்டித் தந்தருள வேண்டுகிறேன்' எனப் பதிலுரைத்தார். அப்பா அவர்களின் கருணை நோக்கம் மன்னவர்பால் விழுந்தது. அப்பா அவர்களுக்கு ஊழியம் செய்து கொண்டு சில நாள் இருந்த பின்னர் அரண்மனைக்குச் செல்வதும் வருவதுமாகப் பல வருடங்களைக் கழித்தார். இங்குத் தவம்செய்யும் போது தான் அப்பா அவர்கள் அனேக அற்புதங்கள் நிகழ்த்தினார்கள். பிறகு அப்பா அவர்கள் யானைமலை அடிவாரத்தில் அரசரால் அமைத்துக் கொடுக்கப்பட்ட ஆசிரமத்தில் தவம் செய்யும் நாளையில் தான் காலங்குடியிருப்பு - பெரிய மீறான்கனி அண்ணாவியார் அவர்களும் குலசேகரப்பட்டினம் காரியாப்புலவர்

அவர்களும் அப்பாவின் திருச்சமூகம் சென்று தீட்சைபெற்று அப்பாவுடன் இருந்து வந்தனர். அந்நாளையில் தான் அப்பா அவர்கள் அருள்கூர்ந்து ஞானமணிமாலை, மஃரிபத்துமாலை, ஞானரத்தினக் குறவஞ்சி, மெஞ்ஞானச் சரநூல், ஞானமலைவளம், பிஸ்மில்குறம் போன்ற அனேக பாடல்களைத் திருவாய்மலர்ந் தருளச் சீடர்கள் எழுதிக் கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் ஜடாமுடி நிறைந்த சன்னியாசி ஒருவர் மலையடி வாரத்தில் ஏதோ ஒன்றைத் தேடிக்கொண்டு நிற்பதைச் சீடர்கள் பார்த்தார்கள். ஒருவர் சென்று, 'நீ யார்? என்ன தேடுகிறாய்? உன்னைப் பார்த்தால் சன்னியாசி போல இருக்கிறாய்' என்று கேட்டார். அதற்குச் சன்னியாசி கூறினார்: "நான் அடுத்திருக் கும் பொதிகை மலையில் வாழ்பவன். அங்கு என்னைப்போன்று ஆயிரம் பேர் இருக்கிறோம். எங்களுக்குத் தலைவராகப் பெரியார் ஒருவர் இருக்கிறார். அவர் சதாவும் யோக நிட்டையிலிருப்பவர். ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் குருபூசை நடக்கும். நாங்கள் யாவரும் தவறாமல் அதில் கலந்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குருவின் சாபத்திற்கு ஆளாகி விடுவோம். இன்று காலை பூஜை முடிந்து யான் ஒரு வேலையாக வெளிஇடம் செல்லக் குருவிடம் உத்தரவு கேட்டேன். அவர்கள் ஒரு குளிகையினைத் தந்து இதனை வாயில் அடக்கிக் கொண்டால் பசி, தாகம், களைப்பு தெரியாமல் இருக்கும். பறவைகளைப் போன்று ஆகாயத்தில் பறந்து நினைத்த இடம் செல்லலாம். ஆகவே மாலை பூஜைக்கு முன் சென்று வா என்று எனக்கு உத்தரவு தந்தனுப்பினார். நானோ செல்லுமிடத்திற்குச் சென்று விட்டுத் திரும்பி வந்து கொண்டிருக்கிறேன். ஆனால் துரதிர்ஷ்டமாக இந்த இடத்தில் வரும்போது வாயில்கிடந்த குளிகை தவறிவிழுந்து விட்டது. அது இன்றிப் போகமுடியாது. தேடிக் கொண்டிருக்கிறேன். என்ன செய்வது?" என்று மிக வருத்தத்தோடு கூறினார் சன்னியாசி. இதனைக்கேட்ட சீடர், "எங்களது குருநாதர் பக்கத்து ஆசிரமத் தில் இருக்கிறார்கள். அங்கு வந்து அவர்களோடு முறையிட்டால் உன்னுடைய கவலை நீங்க வழி செய்வார்கள்" என்று கூறச் சன்னியாசி அப்பா அவர்களின் திருச்சமூகம் வந்து முறையிட் டார். 'மஹான் அவர்களே! நேரமோ மாலைப் பொழுதாகப் போகிறது. மாலைப் பூஜையில் கலந்து கொள்ளாவிட்டால் எங்கள் குருவின் சாபம் கிடைக்கும். தயவு கூர்ந்து நான் அங்கு சென்றடைய வழி செய்யவேண்டும்' என்று மன்றாடி நின்றார். அப்பா அவர்களின் அருளொழுகும் முகம் சன்னியாசியை ஏறிட்டுப் பார்த்தது.

அப்பா அவர்களின் அருள் சுரக்கும் இரு கண்களையும் யோகியின் கண்கள் சந்தித்தன. யோகியின் நெஞ்சில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. அப்பா அவர்களின் பாதாரவிந்தத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்தார். 'அப்பா அவர்களே எனக்கு ஞானபோதம் நல்க வேண்டும்' என்று மன்றாடினார். அப்பா அவர்கள் அருள் கூர்ந்து கலிமாவைக் கற்றுக் கொடுத்து முஸ்லிமாக்கி அப்பால் ஞான உபதேசங்கள் புரிந்தார்கள்.

'என் குருநாதர் அவர்களே! அஞ்ஞான அந்தகார இருளில் மூழ்கிக்கிடந்த எனக்கு முக்தி மார்க்கத்தைக் காட்டியது போன்று பொதிகைமலைச்சாரலில் வாழும் சன்னியாசிகளின் தலைவருக்கும் நேர்வழி காட்டவேண்டும். அவர் மிகவும் நல்லவர். நான் அங்கு சென்று பக்குவமாய் எடுத்தியம்பி அவரைத் தங்கள் சமூகத்திற்கு அழைத்து வருகிறேன். அருள்புரிய வேண்டு' மென்று வேண்டி நின்றார். அப்பா அவர்களும் 'நல்லது நீ பொதிகைமலைக்குச் சென்று பக்குவமாய் எடுத்தியம்பி அவரை அழைத்து வா' என்று சொன்னார்கள்.

'என் குருநாதன் அவர்களே! நான் முன்னால் வரும்போது சன்னியாசிகளின் தலைவனால் கொடுக்கப்பட்ட மகத்துவமிக்க குளிகை மறைந்து விட்டது. அஃதன்றி எப்படி அங்கு செல்வது?' என்று வினவ அப்பா அவர்கள் குனிந்து தரையில் கிடந்த ஒரு சிறிய கல்லினை எடுத்து, 'இதோ இதனை வாயில் அடக்கிக்கொள். முந்திய குளிகையை விடச் சிறந்தது. சென்று வா' என்று விடை கொடுத்தனுப்பினார்கள். யோகி அவர்களும் பொதிகைமலைக்குச் சென்று, தமது பழைய குருவான சன்னியாசிகளின் தலைவன் தனித்திருக்கும் நேரத்தில் சென்று யானைமலைச்சாரலில் தவம் செய்யும் அப்பா அவர்களைப் பற்றிச் சிறுகச் சிறுகக் கூறி அப்பா அவர்களைப் பார்க்க வேண்டுமென்ற ஆசையை உண்டாக்கி விட்டார். ஒரு நாள் சன்னியாசிகளின் தலைவரும் யோகியும் அப்பா அவர்களை யானை மலையில் சந்தித்தார்கள்.

ஞான சம்பந்தமான ரகசிய செய்திகளையெல்லாம் தெளிவாகப் புரியும்படியாக அப்பா அவர்கள் எடுத்தியம்ப, அல்லாஹ் சன்னியாசிகளின் தலைவருக்கு ஹிதாயத் எனும் நேர்வழியைக் கொடுத்தான். தலைவர், அப்பா அவர்களின் திருக்கரம் பிடித்து, இஸ்லாமிய மூலமந்திரமாகிய 'கலிமாவை' ஓதி சத்திய சன்மார்க்க நன்னெறியில் ஆனார். அன்னாருக்கு அப்பா அவர்கள், "என்னுடைய பெயர் பீர்முஹம்மது உம்முடைய பெயர் எகீன் முஹம்மது நீரே இன்று முதல் எனது முதல் கலீபாவாவீர்"

என்று திருவாய்மலர்ந்தருளினார்கள். எகீன் முஹம்மது அவர்கள் மாபெரும் வலியாக அனேக அற்புதாதிகள் நிகழ்த்தியவர்களாய் வாழ்ந்தார்கள்.

இங்ஙனமிருக்க, ஒரு நாள் காலங்குடியிருப்பு மீரான்கனி அண்ணாவியார் அவர்களையும் குலசேகரப்பட்டினம் காரியாப் புலவர் அவர்களையும் அழைத்து, "நீங்கள் இருவரும் உங்கள் தாயகம் சென்று திருமணம் செய்து சீரும் சிறப்புமாக வாழ்ந்து மார்க்கப் பணிகளும் செய்வதோடு முருகபா—முஸாஹதா போன்ற நியமநிட்டைகளையும் வழுவாது செய்துவரல் வேண்டும்" என்று அப்பா அவர்கள் உபதேசம் செய்து அனுப்பிவைத்தார்கள். காரியாப்புலவர் அவர்களும் பெரிய மீரான்கனி அண்ணாவியார் அவர்களும் தங்கள் குருநாதரை விட்டுப் பிரியமனமற்றவர்களாய் நிற்பதை அப்பா கண்டு 'காரியா ஏன் தயங்குகிறாய். நாம் எப்போதும் உன்னோடு இருப்போம்' என அமுத வாக்களித்து அனுப்பிவைத்தார்கள்.

இங்ஙனமிருக்க கொச்சி நாட்டு மன்னரோ அடிக்கடி அப்பா அவர்களை வந்து தரிசனம் செய்து ஞானசம்பந்தமான வழிகளில் ஈடுபட்டு துறவியைப் போன்ற வாழ்க்கை நடத்தி வரும்போது அரசபாரத்தைத் தமது அன்பு மகனுக்கு அளித்து அப்பா அவர்களின் சன்னிதானத்திலேயே எஞ்சிய காலத்தைக் கழிக்க எண்ணி இளவரசனுக்குப் பட்டம் சூட்ட எல்லா ஏற்பாடுகளும் செய்ய அமைச்சர் முதலியோருக்கு உத்திரவிட்டார். கொச்சி நாடே திருவிழாக் கோலம் பூண்டது. எங்கு பார்த்தாலும் தோரணங்களும் கொடிகளும். மக்கள் ஆனந்தக்கடலில் மூழ்கி இருக்கிறார்கள். விடிந்தால் மன்னரின் ஒரே புதல்வனுக்கு முடிசூட்டு விழா! நாடே ஆனந்த வெள்ளத்தில் திளைத்துக் கொண்டிருக்கிறது. பட்டத்து ராணி மறுநாள் நடக்கவிருக்கும் மைந்தனின் முடிசூட்டு விழாவிற்கான எல்லா ஏற்பாடுகளையும் கண்ணுங் கருத்துமாகத் தானே முன் நின்று செய்து கொண்டிருக்கிறார். அரண்மனை தீப அலங்காரங்களால் கண்கொள்ளாக்காட்சி நல்குகின்றது. திடீரென்று இளவரசனுக்கு உடல்நலமில்லை. ஜன்னி கண்டுவிட்டது. அரண்மனை வைத்தியர் வருகிறார். இளவரசனைச் சோதனை செய்கிறார். வைத்தியரின் கண்களிலிருந்து பொலபொல வெனக் கண்ணீர் வழிகிறது. தேம்பித்தேம்பி அழுதவண்ணம், 'இளவரசர் காலஞ்சென்றுவிட்டார்' என்றார். இந்தச் சோகச் செய்திகேட்டு நாடே அழுதது; எங்கும் ஒரே அழுகை. மறுநாள் காலையில் முடிசூடி மன்னனாக இருக்கவேண்டிய இளவரசர் சடலமாகக் கிடக்கிறார்.

மறுநாள் ஒரு துறவியார் தலைநகரின் ராஜவீதியில் வேகமாக வந்துகொண்டிருக்கிறார். அரண்மனை வாயிலைத் தாண்டி உள்ளே சென்றார். தர்பார் ஹால் சோகமே உருவாகக் கிடந்தது. அன்ன மின்றிப் படுத்தபடுக்கையிலிருக்கும் மன்னவர் முன்னால் சென்று நின்றார் துறவி. பார்த்தார் மன்னவர். அதிவேகமாக எழுந்தார். "என் குருநாதர் அப்பா அவர்களே! காப்பாற்றுங்கள்; எளியவனைக் காப்பாற்றுங்கள். அப்பா! அப்பா! அப்பா!" — அரசர் குரல் ஓங்கி யது. பாதாரவிந்தத்தில் முடிசூடிய தலையைப் பொருத்துகிறார் மன்னவர். அங்கு வந்தவர்கள் அப்பா அவர்கள் தான். 'மன்னவா!' என்று அன்பு ததும்ப அழைத்தார்கள். "கவலைப் படாதே! உன் கண்ணீரைத் துடைக்கின்றேன். எழுந்து வா! உன் மகனின் சடலம் எங்கே? காட்டு" என்று அழைத்துச் சென்றார்கள். இளவரசன் சடலம் இருந்த அறை காட்டப்பட்டது. அப்பா அவர்கள் அறைக்குச்சென்று தாளிட்டுக்கொண்டார்கள். சிறிதுநேரம் கழித்து அப்பா அவர்கள் மேனி முழுவதும் வியர்வை வடிய இளவரசனைக் கரம்பிடித்து உயிரோடு அழைத்து வந்து அரசனின் கரத்தில் ஒப்படைத்தார்கள். சொல்வதறியாது' செய்வ தறியாது உணர்ச்சியற்றுப் பதுமைபோல் பாதாரவிந்தத்தில் சாஷ்டாங்கமாய் விழுந்த மன்னவனின் கண்களை விட்டும் மறைந்துவிட்டார்கள் அப்பா அவர்கள். அன்று மறைந்தவர்கள் பல்லாண்டுகள் எங்கிருக்கிறார்கள் என்று தெரியாமல் மறைவாக வாழ்ந்தார்கள். அவர்கள், மக்கா, மதீனா, பைத்துல் முகத்திஸ், பக்தாத் போன்ற புண்ணிய பூமியில் பல்லாண்டுகாலம் தங்கிப் பல அற்புதங்களையும் நிகழ்த்தியிருக்கிறார்கள். மக்காவில் பல ஆண்டு வாழ்ந்த காரணத்தால் மக்கா வாசிகளுக்கு அப்பா அவர்களின் தகுதியும் சிறப்பும் தெரிந்திருந்தது. அதனால்தான் சதகத்துல்லா அப்பா அவர்களைப் பீர்முஹம்மத் அப்பா அவர்கள், 'தம்பி சதக்! தறிக்குழியைப் பார்' என்று கூறவும், சதகத்துல்லா அப்பா அவர்கள் தறிக்குழியைப் பார்க்க மக்கமா நகரில் இருக்கும் கஃபதுல்லா தெரி கிறது. அங்கு லுஹறுடைய வக்து தொழுகை நடந்துகொண்டி ருக்கிறது. சதகத்துல்லா அப்பா அவர்களைப் பார்த்து, "வாருங்கள்! ஸமானுடைய குத்பு பீர்முஹம்மத் (றஹ்) அவர்கள் இமாமாக நின்று தொழுகை நடக்கிறது. தாங்களும் கலந்துகொள்ளுங்கள்" என்று மக்காவிலுள்ள ஒருவர் சொன்னதிலிருந்து அப்பா அவர்களை மக்கா வாசிகள் நன்கு தெரிந்திருக்கிறார்கள் என்பதை உணரலாம்.

இங்ஙனம் பல்லாண்டு காலம் உலகெலாம் சுற்றிய அப்பா அவர்கள், பழைய திருவிதாங்கூர் வடபாகத்திலுள்ள பீர்மேடு என்ற காட்டில் தங்கித் தவம் செய்தார்கள்.

பழைய திருவிதாங்கூர் சமஸ்தானத்தைச் சேரவம்ச அரச பரம்பரையினர் ஆண்டுகொண்டிருந்த காலம்.

சேரமன்னர் பரம்பரையில் முத்துசாமித் தம்பிரான் பக்தி நிறைந்த மன்னர்; சிறிது ஞானவாசனையுள்ளவர். சன்னியாசிகள், துறவிகள், சுவாமியார்கள், மஸ்தான்கள் போன்றவர்களை அதிக மதிகம் விரும்புபவர். 'பீர்மேடு என்ற பகுதியில் முதிர்ந்த துறவியார் தவம் செய்கிருர். அவர் பெரும் ஞானி. அநேகக் கருமாத்துகள், அற்புதங்கள் நிகழ்கின்றன' என்றெல்லாம் கேள்வியுற்ற மன்னர், ஒருநாள் யாருக்கும் தெரியாமல் மாறு வேடம் பூண்டு அப்பா அவர்களைக் காணச்சென்ருர்.

பழுத்த பழம்போன்ற, முதிர்ந்த வயதான அப்பா அவர்களின் அருள் ஒழுகும் கண் பார்வை மன்னவர்மீது விழுந்தது. முன்பின் தெரியாத மன்னரைப் பார்த்து, "மன்னவா! நாடாளும் நீ ஏன் காட்டிற்கு வரவேண்டும்" என அப்பா வினவினுர். மன்னரின் உடலெல்லாம் புல்லரித்தது. பீர்மேடு ஞானி, பெரும் ஞானி முக்காலமும் உணர்ந்தவர் எனத் தேர்ந்தார் மன்னவர். "மேதை யவர்களே! எனக்கு உபதேசம் புரியவேண்டும்" என வேண்ட அப்பா அற்புத உபதேசங்கள் நல்கினுர்கள். மன்னரின் கண் களிலிருந்து பொலபொல வென்று கண்ணீர் சிந்த அப்பா முன்னர் அழுது விழுந்தார். அன்றிலிருந்து அப்பாவை அடிக்கடி வந்து சந்தித்து உபதேசம் கேட்டுச் சென்ருர்.

'மஹான் அவர்களே யான் அரசப் பதவியைத் துறந்து காட்டில் வந்து தவம் செய்ய நினைக்கிறேன். அதற்கு உத்திரவு தரவேண்டும்' என அரசர் வேண்டினுர்.

"மன்னவா! இதயத்துக்கும் நாவில் அடங்கியிருக்கும் நடு நாவுக்கும் சுழிமுனை சுவாசக் குழாய் இரண்டுக்கும் அப்பாலுள்ள மூளை, உச்சி, புலன்கள் முதலான யாவற்றிற்கும் எட்டாமல் தூரந் தூரமாய் இருக்கும் றப்பெனும் அற்புத அம்சத்தை நினைவில் நிறுத்தி மனமென்ற மாளிகையில் தேடு அகப்படும்.

"எத்தனையோ மனிதர்கள் ஒழுங்கான ஞானம் தெரியாமல் கரடுமுரடான முறையில் அரைகுறையாய்த் தெளிவற்ற முறையில் குருவினை நாடித் தேடி அவரிடம் தத்துவ முறைகளைப் படித்து வந்து செயல்படாமல் தான்தோன்றித்தனமாகச் செயல்பட்டு வழி தவறிச் சீர்கெட்டு விட்டார்கள்".

"இந்தச் சரீரமான பெரிய உலகத்தில் எங்கு பார்த்தாலும் சுயம் பிரகாச ரூபமாயிருக்கின்ற மெய்ப்பொருளைக் கலிமாவில் உள்ளதெரு எழுத்தில் உன் நினைவை நிறுத்தி உற்றுப்பார், உண்மை தெரியும்.

"உலக மயக்கத்தில் ஆழ்ந்து அழிந்துவிடாமல் தன்னை உணர்ந்திருக்கும் உத்தமர்களான அறிவாளிகளை அண்டி அவர்கள் பாதத்தை முத்தமிட்டு நீ வெட்கத்தைவிட்டுக் கேள். அப்போது ரகசியப் பொருளைப் பற்றி உனக்குச் சுட்டிக் காட்டித் தருவதோடு உன் இதயவடிவையும் அதன் தன்மையையும் உனக்குச் சொல்லித் தந்து உன்னை நேர்வழியிலாக்குவர்" என அப்பா அவர்கள் அருளினுர்கள்."

பயங்கரமான காடாக இருந்த பீர்மேடு அப்பா அவர்கள் தவம் செய்திருந்த காரணத்தால் வளம் கொழிக்கும் பகுதியாக அப்பாவின் பெயரிலேயே சிறந்து விளங்குகிறது.

பீர்மேட்டில் பல வருடங்கள் தங்கித் தவமியற்றிய அப்பா அவர்கள் அங்கிருந்து புறப்பட்டுப் பல ஊர்கள் தங்கிச் சன்மார்க்கப் பிரசாரம் செய்து செத்துக் கிடந்த ஆயிரக்கணக்கான இதயங்களுக்கு ஞானமார்க்க மருந்தளித்து ஜீவனை அளித்தார்கள். வழி கேட்டால், பாவத்தால் இருளாகி இருந்த இதயங்களை மெய்ஞ் ஞானமென்ற பிரகாசமளித்து ஆரிபீன்களாக — அவ்லியாக்களாக — ஆக்கினுர்கள்.

தவநாதர் பீர்முகம்மது அப்பா அவர்கள், அல்லாஹ்வின் அருளைப் பெறும் மார்க்கத்தில் செயல்பட்டுச் சீரிய முறையில் மேலான பதவிகளைப் பெறுவதற்குரிய வழிகளை ஞானப்பாக்கள் மூலமாய் மனித இனத்திற்கு அளித்து, அத்துவைத சித்தாந்தத்தைத் தெளிவாக உலகினர்க்கு உணரவைத்தவர்களாகத் தக்கோர் புகழும் தகுதியும் சிறப்பும் தகைமையும் ஒருங்கே தங்கி இருந்த தக்கலை மாநகர் வந்து, இப்பதியேதான் தங்கியிருந்து தவம்செய்யத் தகுந்த எல்லா நலனுமுள்ள ஊராகக்கண்டு சிந்தை மகிழ்ந்து தங்கிவிட்டார்கள். அக்காலத்தில் இங்கு வாழ்ந்த எமது முன்னேர்களான முஸ்லிம்களிடம் இறையச்சம், இறை பக்தி, சன்மார்க்கக் கலை, கலாசாரங்களில் நம்பிக்கையும் ஈடுபாடும் கொண்டு அகமகிழ்ந்து அவர்களோடு அளவளாவித் தக்கலை வாசியாகவே மாறிவிட்டார்கள்.

———

# ஞானப்பால் — ஓர் அறிமுகம்

*ஏரல் அ. ஜ. அஷ்ரப் அலி, எம். ஏ.*
ஆங்கிலத்துறை, வக்பு குழுக்கல்லூரி, மதுரை.

அருள்நெறி காட்டும் அறநெறிச் செல்வர், தக்கலை தந்த தவப்பெருஞ்சீலர் பீர்முகம்மது அப்பா அவர்களின் ஞானப் பாடல்களைப் பாடுகின்றபோதெல்லாம் உள்ளம் உவகைகொள்ளுகின்றது; இதயம் இறும்பூதெய்துகின்றது. ஞானப்பால் என்றும், ஞானப் பூட்டு என்றும், ஞானப்புகழ்ச்சி என்றும், ஞானமணிமாலை என்றும், ஞானரத்தினக்குறவஞ்சி என்றும் அவர்கள் தங்களின் பாடல் தொகுதிகளைப் பகுத்துள்ளமை வியப்பிற்குரியதன்று. "கல்லாத கல்வியெல்லாம் கற்றுமுயர் ஞான கலை இல்லார்க்கு இன்பநிலை ஏதோ நிராமயமே" என்று குணங்குடியார் கூறுவதுபோன்று ஞானக்கலையில் பேரின்பம் கண்ட பெருந்தகை அப்பா அவர்கள் அஞ்"ஞான" இன்பத்தை ஞாலத்தாரும் பெற்றிடவேண்டும் எனும் பெருநோக்கோடு வாரி வழங்கியிருக்கிறார்கள் தங்களின் "ஞான"ப் பாடல்களில்.

பால் இறைவன் அளித்த இயற்கை உணவுகளில் தலையாயது. திருமறை அல்குர்ஆனில் பால் பற்றி இறைவன் பாரோர்க்கு உணர்த்துகின்றான். நபிகள் கோமானும் பாலைப் பாராட்டிக் கூறியுள்ளார்கள். மழலைச் செல்வங்களுக்கெனத் தாய்ப்பாலைத் தந்த தூயவன் மயங்கும் மக்களுக்கெனப் பசுவின் பாலையும் தந்துள்ளான். விஞ்ஞான வேந்தர்கள் தாய்ப்பால் பற்றியும் பசுவின் பால் பற்றியும் அதனதன் ஆக்கத்தையும் ஊட்டத்தையும் அகிலத்தார்க்கு எடுத்துரைத்த போதிலும், அவனியோர் புரிந்துகொள்ளவில்லை. இதுபோன்றே மெய்ஞ்ஞான நாதர்கள் ஞானப்பால் அருந்தவேண்டிய அவசியம்பற்றி எடுத்துக் கூறும் போதெல்லாம் நாம் 'எடுத்தெறிந்தே' பேசிவிடுகிறோம்.

உடலுக்கு ஊட்டமளிக்கப் பால் இன்றியமையாததுபோன்று உள்ளத்துக்கு ஊக்கமளிக்க 'ஞானப்பால்' இன்றியமையாதது. இன்று உலகில் காணப்படும் அமைதியின்மைக்குக் காரணம் அருள்நெறியை மறந்து வாழ்வதே. உலகில் தோன்றிய மதங்கள் காட்டும் வாழ்வு நெறியை உணராது, கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற பொல்லாத நெறியில் புரண்டு கொண்டிருக்கிறோம். அருள்நெறியில் அமைதியாக வாழ்வதற்கும் இறைவனோடு இசைந்த, இயற்கையோடு இயைந்த இனிய வாழ்வு வாழ்வதற்கும் ஊக்கமளிப்பதே 'ஞானப்பால்'.

இறைவனை இவ்வுலகிலேயே காண்பது எளிதான செயலல்ல. ஆனால் இறைவனை இவ்வுலகிலேயே அறியலாம். மனிதன் தன்னை அறியவேண்டும்; அறிந்து வணங்கவேண்டும் என்பதே இறைவன் மனிதனைப் படைத்ததன் நோக்கம். இறைவனை எவ்வாறு அறிவது, அவன் காட்டும் அருள்வழியில் எவ்வாறு வாழ்வது என்னும் தத்துவங்களையெல்லாம் தரணியோர்க்கு உணர்த்துவதே மெய்ஞ்ஞான நாதர்களின் சீரிய பணியாகும். "ஞானப்பாலில்" அப்பா அவர்கள் இறைவனை அறியும் முறையையும் அவ்வகையில் ஞானச் செல்வர்களின் நட்பின் அவசியத்தையும் அழகாக எடுத்தியம்புகின்றார்கள்.

இறைவனை அறிவது எவ்வாறு? நபிமணி (ஸல்) அவர்கள் மொழிந்தார்கள் "மன் அரப நப்ஸஹு பகத் அரப ரப்பஹு" — 'தன்னை அறிந்தவன் தன் தலைவனை அறிவான்' - என்று. தன்னை அறியும் தலையாய பணியில் ஈடுபட்டார்கள் ஞானச்செல்வர்கள். இத்துறையில் வெற்றி காண்பதென்பது எளிதான காரியமல்ல. பலர் இத்துறையில் முயன்று தோல்வியுற்றிருக்கிறார்கள். இத்துறையில் வெற்றிபெறுவதற்குச் சிறப்பான ஆத்மீகப் பயிற்சியும் இறைஞானச் செல்வர்களின் துணையும் தேவை.

ஞானமதை அப்பா அவர்கள் தங்களின் 'ஞானப்பாலில்'

"விண்ணொளி காணவேண்டின் மெய்யிறை யருளினாலே
கண்ணொளி யுருகச் சேர்த்துக் கருத்தொளி நடுவில் நோக்கிப்
பொன்னொளி மேவும் வாசிப் பொருள்ரச மருந்தி மேலாந்
தன்னொளி கண்டு ஞானத் தானவ னாகலாமே"

என்று கூறினார்கள்.

'மெய்யிறையருளினாலே' என்று கூறுவதன் கருத்து இப்பணியில் வெற்றிபெறுவதற்கு இறைவனின் கருணை மிகமிக அவசியம். "கண்ணொளி யுருகச் சேர்த்துக் கருத்தொளி நடுவில் நோக்கி" என்று கூறுகிறார்கள். நெற்றியின் நடுவே, இரண்டு கண் புருவங்களுக்கும் நடுவே நம்முடைய இரண்டு கண் பார்வையையும் செலுத்தவேண்டும். ஏக இறைவன்மீது ஒரே நினைவாய் நமது கருத்தைச் செலுத்த வேண்டும். உள்ளத்தில் எந்த ஒரு ஊசாட்டமோ வேறு எண்ணங்களோ ஏற்படக்கூடாது. இது ஒரு ஆன்மீகப் பயிற்சி. 'தன்னொளி' காண்பதற்கு இந்தப் பயிற்சி மிகவும் அவசியம் என்பதை அப்பா அவர்கள் வலியுறுத்துகிறார்கள்.

ஒவ்வொரு மனிதனும் அவன் படைக்கப்பட்டுள்ள அற்புதத்தை அறியவேண்டும். அவன் ஸ்தூல, சூக்கும, ஆத்மீக சக்தியுள்ளவன் என்பதை அறியவேண்டும். உடல், உள்ளம்,

ஆன்மா என்ற மூன்று தன்மைகளையுடையவன் மனிதன். உடல் அழியக்கூடியது; ஆன்மா அழியாதது. திருமறையில், 'திடனாக நான் மண்ணில் நின்றும் மனிதனை உருவாக்கிப் பின்பு என்னுடைய 'ரூஹில்' நின்றும் அவனில் ஊதினேன்' என்று அல்லாஹ் கூறுகிறான். அந்த "ரூஹ்" என்பதுதான் ஆன்மா. அந்த ஆன்மாவின் அற்புதத்தை அறியும் முயற்சியே தன்னையறியும் முயற்சி. தன்னை அறியும் முயற்சியில் வெற்றி காண்பவன் இறையின் பேரருளுக்கு ஆளாகின்றான். அவனுக்குத் துன்பமே இல்லை.

மனிதப் படைப்பைப் பற்றிக் கூறவந்த அப்பா அவர்கள்,

"அஞ்சுமேல் மூன்று மாகி யதனுடன் நாலு மாகி
மிஞ்சியே நாலு மொன்றாய் விண்ணதில் நிறைந்த சோதி
கொஞ்சியே யொன்றாய்க் கூடிக் குலாவியே சரசஞ் செய்தாற்
பஞ்சங் களில்லை தேனும் பாலுமே யருந்த லாமே"

என்று கூறினார்கள். அல்லாஹ் மனிதனுக்கு தலை, கண், மூக்கு, செவி, வாய் இவைகளை அமைத்து இரத்தம், தோல், நரம்பு ஆகியவைகளை அவற்றின் இயக்கத்திற்குத் துணையாக வைத்துள்ளான். இதுவன்றி மனிதனுள் ஸ்தூலம் (ஐம்பொறிகள்) சூக்குமம், ஆன்மம், பிரம்மம் என்ற நான்கு தத்துவங்களையும் வைத்துள்ளான். இந்த நான்கு தத்துவங்களும் நான்கு தன்மைகளுக்கு உட்பட்டன. அதாவது ஸ்தூலம் என்பது உடலையும் சூக்குமம் என்பது 'கல்ப்' எனும் உள்ளத்தையும் ஆன்மம் என்பது 'ரூஹை' யும் பிரம்மம் என்பது 'ஸிர்ரீ' என்பதையும் குறிக்கின்றன. அப்பா அவர்களின் மெய்யறிவிற்கொப்ப, உடல், கல்ப், ரூஹு, ஸிர்ரு என்ற நான்கு நிலைகளிலும் இறைவனை எண்ணுகின்றபோது அவன் 'விண்ணொளி' காணமுடியும். அவன் பேரின்பப் பெரும் பேற்றை எய்தமுடியும். இந்நிலை உற்றவர்க்கு

"பிறப்புட னிறப்பு மில்லை பிசகது தானுமில்லை"

இதன் கருத்து அவர்கள் இன்பத்திற்கும் துன்பத்திற்கும் அப்பாற்பட்டவர்கள். எங்கும் எதிலும் அவனின் (இறைவனின்) காட்சியையே காண்பார்கள். அவர்கள் நிலையில் எவ்விதத்தவறும் காண முடியாது. "நிறப்புகழனைத்து மொன்றாய் நிறைந்த சோதி"யைக் காணும் பேறு பெற்றவர்கள் திருப்பதஞ் சேரும் பெரும் பேறும் பெறுவார்கள். இப் பெரும் பேற்றைப் பெறுவது எங்ஙனம்? இப் பெரும் பேற்றைப் பெற வேண்டுமென்றால் இறைநேசச் செல்வர் ஒருவரின் துணைவேண்டும். இறைநேசச் செல்வர் ஒருவரின் துணையின்றி இந்நிலைமை அடைதல் முடியாது. தவத்திரு தக்கலை நாதர் அவர்கள் கருத்தில்,

"காரண பூதந் தானுங் கலந்துவே ருகா வண்ணம்
பூரண குருமெய்ஞ் ஞானப் புதுமையை யறிய வேண்டும்
ஆரண ஷறகி னுலு மடங்கிடா வாதி தன்னை
நேரெனப் பணிவோர்க் கெல்லாம் நித்தங்கண்
காணலாமே"

அப்பா அவர்களின் கருத்துப்படிப் புலன்களை அடக்கிப் புனித இறைவனின் எண்ணத்தில் திளைப்பதுடன் பூரண ஞானகுருவின் துணையும் வேண்டும். மெய்ந்நெறியில் உய்வுகாண மெய்யடியார்களின் துணை அவசியம் என்பதைப் பல அருள் நெறிச் சான்றோர்கள் பகர்ந்துள்ளார்கள். வலிகள் கோமான் முஹியித்தீன் ஆண்டகை (ரலி) அவர்கள் "தூய்மை பெற்ற சீலர்களோடு நேசங் கொள்ளாமலும், அம்மகான்களின் ஞான போதங்களை ஏற்காமலும் அவர்களைச் சித்த சுத்தியுடன் கௌரவிக்காமலும் அலட்சியமாய் இருந்துவிட்டுச் சிரேஷ்டனாகிவிட முடியாது" என்று கூறியுள்ளார்கள். கனீகாஷ்மீரி (ரஹ்) அவர்கள் "ஒரு குருவின் துணையின்றி அறநெறி நடப்போர் யாரும் எந்த இடத்தையும் சேரமுடியாது. பிற உதவியின்றி வில்லானது தானே அம்பை எந்தத் தலத்திலும் செலுத்தாது" என நவின்றுள்ளார்கள். "எவ்வாறு வெளி நிழலின் உதவியால் சூரியனையும் அதன் போக்கையும் அறியப்படுகிறதோ அவ்வாறே அல்லாஹ்வின் நிழலாகிய அவ்லியாக்களின் (இறை நேசச் செல்வர்களின்) பொருட்டால் இறை சூரியன் அஃதாவது தேவஞானம் சித்தியாகின்றது" என மௌலானா ஜாமீ (ரஹ்) அவர்கள் மொழிந்துள்ளார்கள். மௌலானா ஹாபிஸ் (ரஹ்) அவர்கள் இறைஞான நெறிக்கு அச்சம், அடக்கம், வணக்கம் ஆகியன அவசியம் என்பதை 'எங்கள் கடைவீதியில் அச்சம், அடக்கம், வணக்கம் உடையோர்தாம் கொள்முதல் செய்யக்கூடும்; தான் என்ற ஆணவ வியாபாரம் நடைபெறும் கடைவீதி வேறு திசையுள்ளது, என்ற தொடர் மூலம் வலியுறுத்துகிறார்கள்.

இஸ்லாம் காட்டும் இறைஞானப் பாதைக்கு அப்பா அவர்களின் ஞானப் பாடல்கள் கலங்கரை விளக்காகும். உலகத்திற்கோர் அருட்கொடையாக அவதரித்த அண்ணல் நபி (ஸல்) அவர்களை அல்லாஹ் "லகத்ஜாகும் மினல்லாஹி வநூர்" என்றும் — (என்னில் நின்றும் உங்களுக்கு ஒரு ஒளியை அனுப்பியிருக்கிறேன் என்றும்) தன்னைப்பற்றிக் குறிப்பிடும்போது "அல்லாஹு நூருஸ்ஸமாவாத்தில் வல்அர்ள்" என்றும் (அல்லாஹ் விண்ணிலும் மண்ணிலும் ஒளியாக இருக்கின்றான் என்றும்) குறிப்பிட்டிருக்கிறான். இக்கருத்திற்கேற்ப அப்பா அவர்களும், பேரொளியாகிய இறைவனிடமிருந்து தோன்றிய பெருமைமிகு ஒளியான பெருமானார் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்களை "நாலது மவுத்

துக்கப்பால் நடுவில் நின்றிலங்குஞ்சோதி'' என்று குறிப்பிடுகிறுர்கள். நமக்கு இம்மையில் மட்டுமின்றி மறுமை வாழ்விலும் ஈடேற்ற மளிப்பவர்கள் நபிகள் கோமான் (ஸல்) அவர்களே. "அலிபாம் பீடங் குதறத்தைப் பொருந்துவோராகிய ஏகத்துவ நெறியில் வாழ்பவர்களுக்கு இறைஞானப்பாதையை இறைதூதர் (ஸல்) அவர்கள் தங்களின் அழகிய அகபுற வாழ்க்கையின் மூலம் காட்டிச் சென்றுள்ளார்கள். "குலூபுல் முஃமீன் அர்ஷுல்லாஹ்''– 'முஃமீன் எனும் நல்லடியார்களின் கல்ப் (உள்ளம்) அல்லாஹ்வின் அர்ஷாகும்' என்று ரத்தினச் சுருக்கமாகப் பூமான் நபி அவர்கள் புகன்ற கருத்தைக் கண்ணியத்திற்குரிய அப்பா அவர்கள்,

> அறிந்தது நிசமுண்டாஞ லவனியை யாளலாகுஞ்
> செறிந்தவோர் மனமும் நேராய்ச் சித்தினையறிய வேண்டும்
> பிரிந்துவே ருகா வண்ணம் பெலத்திடுங் கனியை யுண்டால்
> திருந்துமே அறுஷில் வாழுஞ் சலத்தினை யருந்தலாமே''

என்ற பாடலில் குறிப்பிடுகின்ருர்கள்.

அப்பா அவர்களின் பல பாடல்களில் அகமியப் பொருள்கள் நிறைந்து காணப்படுகின்றன. அவற்றை நாம் மெய்ஞ்ஞானிகளின் உதவி கொண்டே உணர்ந்திடமுடியும். "சொல்லத்தகு மல்ல இப்பொருளை சுருட்டி மறைக்கின்றேன் ஷரகுக்காக' என்று அப்பா அவர்கள் ஞானப்புகழ்ச்சியில் கூறுவது போன்று ஷரீயத்தைப் பேணும் நோக்குடன் மெய்யடியார்களே சிலவற்றிற்குப் பகிரங்கமாக விளக்கம் தர அஞ்சுகிருர்கள். எனினும் அப்பா அவர்களின் பாடல்களைப் படிக்கின்றபோது ஞானவிளக்கமும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றதென்ருல் அது மிகையன்று.

———

> தானென்ற தீபந் தானுந் தனித்தது வானில் நிற்கும்
> நானென்ற தந்தை தாயும் நாடிய சமயந் தன்னில்
> ஊனென்ற குருதா னேடி யுறைந்தவோர் சிவப்பினுடாய்க்
> கானென்ற பூத மைந்தின் காரணஞ் சமைத்த வாறே.

— 22, ஞானப்பால்.

# ஞானப்பூட்டு-
# ஒரு கண்ணோட்டம்

*அ. ஜமாலுதீன், எம். ஏ.*

"நாயகரே எங்கள் பீரே - எம்
அகத்துள் இருப்பீரே."

1.0. பீர்முஹம்மது சாஹிபு அவர்களின் பாட்டுக் கோட்டையினை இஸ்லாமிய இறை ஞானத்துக்கு ஓர் ஆய்வுக்கூடம் எனலாம். இஸ்லாத்தின் ஞானப்பாங்கு அப்பாவின் பாடல்களில் தழைத் தோங்குகிறது. அவர் பாடல்களோ ஒரு ஞானவயல்; தத்துவங்களின் வேளாண்மையில் இங்கு ஆன்மீகப் பயிரே விளைகிறது.

மெய்ஞ்ஞானக் கவிஞராகிய அப்பா அவர்களின் பாடல்கள் ஒவ்வொன்றுமே தத்துவப் பொதியல்கள் தாம். இஸ்லாமிய இறை ஞானப் படிகளில் காலூன்றினாலன்றி அப்பாவின் கவிமாடத்துள் புகுந்து தத்துவப் பயன்களைத் துய்த்தல் என்பது இயலாததாகும். அதிலும் உள்ளே புகுந்து கருத்துப் பொக்கிஷங்களைக் கண்ணுறக் காண்பதற்கு மிகவும் அரியதாய் அமைந்து விடுகிறது 'ஞானப் பூட்டு' எனும் பகுதி. ஞானப்பூட்டினைத் திறக்கமுடியாத நிலையில், அதை அணுகமட்டுமே முயல்கிறது இக்கட்டுரை.

1.1. முப்பத்தெட்டுக் கருவூலப் பாடல்களிலும் ஞானச்செல்வங்களைப் பூட்டி வைத்துள்ளமையால் 'ஞானப்பூட்டு' எனும் பெயரமைந்திருக்கலாம்.

இப்பாடல்களைப் பயிலுவோர் இதனுள் செறிந்திருக்கும் ஞான மணிகளைத் தம் உள்ளப் பெட்டகத்தில் தவறாது பூட்டிவைத்துக் கொள்ளல் வேண்டும் என்ற பெரு நோக்கிற்காகவும் இப்பெயர் அமைந்திருக்கலாம்.

"ஞான வல்லபம் சிந்தையுள் தெளிந்த ஞானச் சிறுமலுக்கர் செல்வன்" ஆகிய தமக்கும் வல்லமை பொருந்திய ஞானத்தின் பூட்டினை - தேக்கத்தை - தந்தருள்வாயாக என்று இறையிடம் முறையிடுவதால் ஞானப் பூட்டாகியிருக்கலாம்.

பூட்டு எனும் பதத்துக்கு வில் பூட்டும் ஞாண் எனப்பொருள் கொண்டால், இறைவனோடு தன்னைப்பூட்டுதல் வேண்டி-இணைத்துக்கொள்ளல் வேண்டி - இப்பாடல்களுக்கு ஞானப்பூட்டு என்று ஆசிரியர் பெயரிட்டாரோ எனவும் எண்ணத் தோன்றுகிறது.

1. 2. "ஆன்மாவை அறியவேண்டும் என்னும் வேட்கையே 'பக்தி' எனப்படுகிறது" என்பார் சங்கரர். பக்தியின் முதிர்ந்த நிலை ஞானம். இதுவே அப்பாவின் பாடல்களிலும் பரிணமிக்கிறது. "ஆன்மாவை - தன்னை - அறிவதும் பரம்பொருளை விரும்புவதும் ஒன்றே," "இறைவனைக் காண விரும்பினால் முடிவில்லாத விசாரணையில் இறங்க வேண்டாம். மாறாக உங்களையே உற்று நோக்குங்கள். அவன் உங்களுக்குள்ளேயே இருக்கிறான்" என்பர் ஞானவான்கள்.

> "*தன்னையறியுந்*தலமேது சொல்லடி சிங்கி—அது
> கண்ணிடையான நடுநிலையல்லவோ சிங்கா"
>
> — ஞானரத்தினக் குறவஞ்சி, பாடல் - 23.

> "*இறையை அறிவது* மெப்படி சொல்லடி சிங்கி—அது
> இறையெங்கு நின்றுடுந் *தன்நினைவாகுமே* சிங்கா"-
>
> — ஞானரத்தினக் குறவஞ்சி, பாடல் - 25.

எனும் பிரப்பாவின் பாடல் வரிகளில் தன்னையறிதலால் இறையை அறியும் தாகிப்பினைப் பருகமுடியும்.

தன்னையறிய முயலும் தனி முயற்சியில் 'சுவாசம்' பெரும்பங்கு வகிக்கிறது. மனிதர்களுக்குச் சாதாரணமாக எழுபத்தீராயிரம் நாடி நரம்புகள் இருக்கின்றன. அவைகளில் முக்கியமானவை இருபத்தி நான்கு. இந்த இருபத்தி நான்கு நாடிகளிலும் * பத்து நாடிகளை முக்கியமாக எடுத்திருக்கின்றனர். இப்பத்திலுங்கூட மூன்று நாடிகளே மிகவும் முக்கியமானவை. அவை இடைகலை, பிங்கலை, சுழிமுனை என்பவை. இடைகலையானது தேகத்தின் இடப்பாகத்தில் இடது நாசியிலும், பிங்கலையானது தேகத்தின் வலது பாகத்தில் வலது நாசியிலும், சுழிமுனையானது தேகத்தின் மத்தியில் இரண்டு நாசியிலும் 'வரப்போகவுமிருக்கின்ற சுவாசம். இடைகலை, பிங்கலை, சுழிமுனை ஆகியன முறையே சந்திரன், சூரியன், அக்கினி எனவும்படும்.

பிரிதிவி (மண்), அப்பு (நீர்), தேயு (நெருப்பு), வாயு (காற்று), ஆகாயம் — என்னும் ஐந்து தத்துவங்களும் இம்மூன்று நாடிகளில் ஒவ்வொரு நிமிஷத்துக் கொருமுறை மாறிக்கொண்டே வருகின்றன. அதாவது இந்நிலையில் இந்த மூன்று வாய்வுகளையும் அப்யசித்து வருகிறவர்களே இப்பஞ்ச தத்துவத்தைக் கண்டறியும் யோகத்துக்குரியவர்கள்.

---

* பத்து நாடிகள் : 1. இடைகலை 2. பிங்கலை 3. சுழிமுனை 4. சிங்குவை 5. புருடன் 6. காந்தாரி 7. அக்நி 8. அலம்புவி 9. சங்குனி 10. குஹூ

இத்தகைய மகா யோகத்துக்குரியவரே பீரப்பா அவர்களு மாவார். எனவே தான் —

"அஞ்சாமல் நின்றுள மைம்பூத மஞ்சு மறையினின்றே
ஒஞ்சாம லோடிய வாசியைக் கண்டுள முட்கலந்து
மிஞ்சாமல் நின்றவோர் மெய்வழி கண்டபின் மேலவன்றன்
எண் சாணுக் குள் நின் றெனைக் காத் தருளுமென்
கண்மணியே"

— ஞானப்பூட்டு, பாடல் : 19

என்று அவர்களால் பாட இயலுகிறது. "உள்ளத்தினுள் அஞ்சா மல் நின்று மறைவாய் இயங்குகின்ற பூதங்கள் எனும் ஐந்து தத்துவங்களும் ஓயாமல் வாசியில் ஓடிவர, அதனால் மெய்வழியைக் கண்டபின்பாவது எண்சாணுடலுக்குள் நின்று என்னைக் காத் தருளுவாயாக என் கண்மணியே" எனப்பாடி இறைவனை அகக் கண்ணாரக் கண்டு காவல் தேடுகிறார் அப்பா அவர்கள்.

இடைகலை, பிங்கலை, சுழிமுனை இவற்றுள்ளுங்கூடச் சுழிமுனை வாசியே அதிபிரதானம் வாய்ந்ததாகும். "தபசிகளுக்கு ஆதார மான வாசி என்பது பிராணவாயு. இதைக் கொண்டு சகல சித்திகளையும் பெற்றனர். வாசி *நடுநிலையிலும் மூலத்திலும் நாபியிலும் கண்டத்திலும்* சுழியிடம் சதா நிற்பவர்கள்தாம் மெய்ஞ்ஞானிகள்" என்பார் நிஜானந்த போதமுடையார்.

மெய்ஞ்ஞானியாகிய அப்பா அவர்களும் சுழிமுனை வாசியை இந்நிலைகளில் நிறுத்தி சகல சித்திகளையும் பெற்றுள்ளார்கள்.

"முன்னே உதித்த முனைசுழியால் — மன்னவனே
உன்னைப் புகழ்ந்தேத்தி உருக்கமுடன் தேடி"

யானறிந்துகொண்டேன் எனப் பெருமிதப்படுவார்கள் பீரப்பா.

— ஞானப்பூட்டு, பாடல் : 28

"சுழிமுனையானதில் ஷுஹுதைத் தெரிசித்தால்
சூழ்ச்ச மெல்லா மறியலாமே
சுகம் பெற்றிருந் திடலாமே"

— வினா விடைச்சிந்து, பாடல் : 14

என்று அப்பா அவர்களைப் போலவே சுகம் பெறுவார் ஷேகுமுகியித்தீன் மீரா சாகிபு எனும் மற்றோர் இஸ்லாமிய ஞானி.

இச்சுழிமுனை வாசியைப் பீரப்பா அவர்கள் பல்வேறு 'குழி' களில் நிலைபெறச் செய்வார்கள். ஞானப்பூட்டின் முப்பத்தெட்டு பாடல்களிலும் ஐம்பத்து மூன்று இடங்களில் 'குழி' எனும் சொல் கவிஞரால் எடுத்தாளப்படுகிறது. எந்த விதமான எண்ணிறேனும் இல்லாமல் நாற்பது இடங்களில் இச்சொல்லை ஆசிரியர் கையாளு கிறார்.

காட்டுக்கள் சில :

"நாவினின் மேலே உதித்திடுங் குழி"
— ஞானப் பூட்டு, பாடல் — 5.

எனும்போது சுழிமுனை வாசி உள்நாவுக் குழியாகிய *கண்டத்தினுள்* நிலைபெற்றதைக் கூறுகிறதெனலாம்.

"மூலமாங்குழியில் நின்ற முனைசுழியறியவேண்டி"
— ஞானப்பூட்டு, பாடல் — 9.

என்பது சுழிமுனைவாசியானது *மூலக்குழியில்* நிறுத்தப்பட்ட தன்மையைக் குறிப்பிடலாம்.

"வாருன வாசியமுதக் குழிபொரு வாவு கொண்டே
காரானவக் குழி பூட்டிவிட்டேனிறை கண்மணியே"
— ஞானப்பாட்டு, பாடல் — 13.

"அனைந்தவக் குழியை நோக்கி யமுதுன்னைத் தேடிவாடி
வளைந்திடும் வாவை நோக்கி வந்துயா னுன்னைக் கண்டேன்"
— ஞானப்பூட்டு, பாடல் — 29.

என்ற அடிகளில் *நாபியிடத்தில்* — உந்தித்தலத்தில் வாசிநிலை பெற்றமை கூறப்படுகிறதெனலாம். இஸ்லாமிய இறை ஞானிகள் 'வாவை' தொப்புள் அல்லது நாபியாகக் கொள்வர்.

"உந்தி முதலாகி ஓங்காரத்துட் பொருளாய்
நின்றது நாடிநிலை" —பெரிய ஞானக்கோவை, பக். 503.

எனப் பாடுவார் ஒரு சித்தர்.

இம்மாதிரியே, ஞானப்பூட்டில் எண்ணோடன்றி இடம் பெறுகின்ற 'குழி' என்னும் சொற்கள் அனைத்தும் வாசியின் நிலை பேற்றினைக் கூறவந்தவையாயிருக்கலாம்.

இனி, எண் குறிப்பிட்டு இடம் பெறுகின்ற 'குழி'களைக் காணலாம். "குழி ஐம்பத்தஞ்சு" — என்று நான்கு முறையும்,

"குழி நூற்றியைம்பத்தஞ்சு" — என்று மூன்று இடத்திலும்,
"குழி யஞ்சு" — என இரு தடவையும்,

"குழி மூன்று" — என்று ஓரிடத்திலும் — ஆகப் பத்து இடங்களிலும் எண்ணிட்டு சொல்லப்படுபவை எல்லாம் சுவாசம் அல்லது சரவோட்டத்தின் பலதரப்பட்ட படிநிலைகளைக் கூறுவனவாயிருக்கலாம்.

"குழி ஏழும்"-என்று மும்முறை சொல்லப்படுகிறது. உதாரணமாக "விளைந்திடுங் குழியே ழாலே விபரம் நூற் றைம்பத் தஞ்சும்

.......................................................................

வளைந்திடும் வாவை நோக்கி வந்து யானுன்னைக்கண்டேன்"
— ஞானப்பூட்டு, பாடல் — 29.

என வருகின்றமையைக் குறிப்பிடலாம். இங்கு ஏழு குழிகள் என்றது இரண்டு கண், இரண்டு மூக்கு, இரண்டு காது, ஒரு வாய்—ஆகிய ஏழு குழியுறுப்புக்களையும் குறிப்பிடுவதாயிருக்கும். இவ்வேழையும் ஒருநிலைப்படுத்தி, உள்ளத்தை உற்றுநோக்கி இறையைத்தேடிப் பின் வாவாகிய நாபியில் அவனைக் கண்டதாகக் கூறுகிறார்.

1.3. மனித உடலை மெய் என்கிறோம். ஆனால் இவ்வுடலோ வெறும் பொய். இது மண்ணுள் புதைந்து அழுகக்கூடியது. இதனுள் உறையும் இறைத்தத்துவமே—பரமதத்துவமே—ஆன்ம சொரூபமே—மெய். எனவே பொய்யான இவ்வுடலைப் பேணுதலை விட்டு மெய்ப் பொருளாம் இறைவனை உணர முயலல்வேண்டும் என்பதை உணர்த்திக் காட்டவே இவ்வுடலுக்கு 'மெய்' எனப் பெயரிட்டனர் போலும்.

உடலோ மண்ணாலும் நீராலும் உருப்பெற்றது. ஆனால் சுவாசமாகிய 'ரூஹு' எனப்படும் ஆத்மாவே காற்றும் நெருப்பும் கூடினதால் உண்டாயிற்று. இதையே—

"மண்ணும் நீரும்கூடி வல்லபத்தினோடு ரூபமாய்த்
திண்ணமான காலும் வன்னியுஞ் செறிந்து ரூஹதாய்"

என்று ஞானமணிமாலையில் (பாடல் 190) பீரப்பா அவர்கள் சொல்மலர் தொடுப்பார்கள். (ரூபம்=சரீரம். வன்னி=நெருப்பு. ரூஹு=ஆத்மா) ஞானப்பூட்டிலும் இந்தத் தத்துவம் கிளைபரப்புவதைக் காணலாம்.

"அந்தநற் பிரிதி வியப்பு முறுங்குழி வாசஞ் சொல்வோம்
சிந்தையி லெழுந்த வாசி சிறந்திடும் பாலுந்தேனும்
விந்தையாய் வாயுந் தேயும் விரும்பிய குழியில் நின்றே
எந்தமக் கெழுந்த வாசம் எருக்கலம் பூவாம் பிச்சி"
— ஞானப்பூட்டு, பாடல்—32

"பிரிதிவி எனப்படும் மண், அப்பு எனப்படும் நீர் இவற்றாலாகிய சரீரத்தின்—காற்றடைத்த பையின்—புறச் சிந்தனையில் எழுந்த வாசமானது எருக்கலம் பூவுக்குச் சமமானதே. ஆனால்

வாயுவாகிய காற்றும் தேயுவாகிய நெருப்பும் கூடி விந்தையாய் அமைந்த 'ரூஹு' எனும் ஆத்மாவின் குழியில் நின்று நிலைபெற்று எழுந்த வாசமோ பாலுந் தேனுமாய்க் கலந்து பிச்சியின் வாசத்தைப் போல் மணங்கமழ்ந்தது'' எனும் நுண்பொருளை இப்பாடல் சுமந்து நிற்பதாகக் கொள்ளலாம்.

1.4. இன்பத் தமிழிலே இஸ்லாமியக் கருத்துக்களை—தத்துவார்த்தங்களை—வடித்துத் தரும்போது அங்கு அரபுஎழுத்துக்கள், சொற்கள், சொற்றொடர்கள் ஆகியன தவிர்க்க முடியாதவையாகி விடுகின்றன. பிஸ்மி, முதலெழுத்து, ஐந்தெழுத்து, அலிபுநிலை, கலிமாச் சிறப்பு, தொழுகை போன்றவற்றின் ஆழிய ஞானங்களை அகக் கண்ணால் அகழ்ந்து கண்டு, அவற்றைக் கண்டவாறு சொல்கின்ற வேளையில் மூல பாஷையையே முத்திரைச் சொற்களாகப் பயன்படுத்துகிறார் பீரப்பா அவர்கள்.

'ரஹ்மத்துன் லில் ஆலமீன்'—அகிலங்கள் அனைத்துக்கும் அருட் கொடையாக வந்த அஹ்மது இரசூல் (ஸல்) அவர்கள்மீது அணையாத அன்பு கொண்ட பீரப்பா அவர்கள்—

''அந்த நாளையி லஹ்மதைத் துதிக்குமுன் னிறையோன்
விந்தை யாகிய லாமலி பானதை விரும்பிச்
சிந்தை யுற்றெழு மஹ்மூதைப் படைத்தனன்...''
—ஞானப்பூட்டு, பாடல்—1

என்ற பாடலோடு ஞானப்பூட்டின் படையலைப் பரிமாறத் தொடங்குகின்றார்கள்.

இறையவன் நபிகள் நாயகத்தைக் கலிமாவின் மூலம் துதிக்கும் முன்பாக — விந்தையாகிய லாம் அலிபானதை விரும்பினான். லாம்+அலிப்>லா. அதாவது 'லா' என்னும் முதலெழுத்தைக் கொண்ட 'லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹி' எனும் கலிமாவை ஆக்குதற்கு விருப்பங் கொண்டான். அக்காரணத்தால்தான் பொருந்தி உயர் மஹ்மூது நபியைப் படைத்தனன்.

இறைவனே கலிமா ஓதி முஹம்மது நபியைப் புகழுகின்றான் என்பதை ''அஹ்மதைத் துதிக்கு முன்னிறையோன்'' என்ற சொற்களால் பீரப்பா அவர்கள் தெளிவாகக் கூறுகிறார்கள். ஷெய்கு நாயகம் உமறு வலியுல்லா அவர்களும் இக்கருத்தைப் பாடியுள்ளார்கள்—

''கூசாமலே கலிமா குதாவோதும் அம்மொழியை
பேசாமற்பேசிப் பிதற்றுநாள் எந்நாளோ'' என்பது பாடல்.
—ஞானந்த ரத்தினம், பாடல்—96

மேலும் அப்பா அவர்கள் பூட்டுரைக்கின்றார்கள்—

"எத்தங்குகை யுள்ளே யிருந் தெழுந்த துதியறிய
முந்தவொளி வான மஹ்ற மூதரான வெழுத்தாம்
அந்தத் தொனி யாயிரைய அலிபா னது லாமாம்" என்று.
—ஞானப்பூட்டு, பாடல்—36

தமது உள்ளக் குகையிலிருந்து எழுந்த துதியினை அறியக் காரணமாயிருந்தது ஒளிபொருந்திய மஹ்மூதரான எழுத்தாகும். அந்த எழுத்து ஒலிப்பதற்காக 'அலிபானது லாமாம்' என்கிறார். லாமோடு அலியும் இணைந்து 'லா' எனுந் தொடக்கத்தையுடைய கலிமா உண்டாயிற்று. எனவே இங்கும் கலிமாவின் மூலம் மஹ்மூதர் துதிப்பு ஒலிக்கக் காணலாம்.

இறைவனுடைய பேராற்றல், நபிகள் நாயகத்துடைய தனிச் சிறப்பு ஆகியவைகளை இப்பாடல்களில் விதந்து பாடிய பீரப்பா அவர்களுக்கு மூலக்குழியில் நின்ற முனைசுழியை அறிவதற்குக் கைகொடுத்தவைகளாவன "சாலமாம் யோகம் ஞானம் சார்கலைக் கியானம்" என்பனவாகும். இந்தச் சாலமாம் யோகம் ஞானம் முதலிய 'அரும் பொருளை' இறைவனே தனக்கு ஈந்தான் என்கிறார். எவ்வாறு ஈந்தானும்?—

"ஏலவே அலிபில் நின்று மெழுந்திடும் லாமைநோக்கி
ஆலமே படைத்த துய்யோனரும் பொருளெனக்
கீந்தானே" என்கிறார்
—ஞானப்பூட்டு, பாடல்—9

'அலிப்' என்றது ஆண்டவனையும், 'லாம்' என்பது அவ்வாண்டவனிடத்திலிருந்து எழுந்து வந்து (முஹம்மது நபியவர்களுக்கு) இறைவேதம் உணர்த்திய ஜிப்ரயீலையும் குறிக்கும்.* எனவே 'இறையவன் அவனுடைய திருவேதத்தின் மூலமாகவே அரும் பொருளை எனக்கும் ஈந்தான்' என்கிறார் போலும்.

*'அலிப் லாம் மீம்' என்பதற்கு அல்லாஹுத் தஆலா, ஜிப்ரயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மூலமாக, நபி முஹம்மது முஸ்தபா அவர்கட்கு அருட் செய்த திருக்குர்ஆன் என்று இப்னு அப்பாஸ் அவர்கள் பொருள் கொள்வார்கள்.

"ஈந்தவுப தேசங்கண் டறையமொழி யுரைத்தபின்
னெழுந்திடுங் குழிய தனிலே
ஈந்தலிபு லாமுடனே மீமுமிக நூனுடனே
யிரைந்துவரு மக்கு ழியிலே
ஈந்தமஹ் மூதரொளி யிலங்குமக் குழியில்நின்
றிலாமலி பிரண்டு மிடையே
ஈந்தவிறை மீமென்ன வேயிருத யத்தடைத்து
மிருவாசற் பூட்டுரை செய்தான்"

— ஞானப்பூட்டு, பாடல்: 10

என்று மேலும் தொடர்கிறுர் அப்பா அவர்கள். பாடலின் நான்கு வரிகளிலுமே 'ஈந்த' என்ற சொல் அமைந்திருப்பது இலக்கிய ரசனைக்குச் சுருதி கூட்டுவதாக உள்ளது. 'அலிபா'கிய இறையிட மிருந்து 'லா'மாகிய ஜிப்ரயீல் மூலமாக 'மீ'மாகிய முஹம்மதர்க்கு அருளப்பட்ட 'நூன்' எனும் மிக்க தெளிவுடையதானது-குர்ஆன் எனும் வேதமாகும். அவ்வேதப் பொருட்கள் இரைந்து ஒலிக்கின்ற உள்ளக்குழியில் — மஹ்மூதரொளியும் இலங்குகின்ற அவ்விடத்தில்—"லாமலிபு இரண்டிடையே ஈந்தவிறை மீமென்னவே இருதயத்தடைத்தும் இருவாசற் பூட்டுரை செய்தான்" என்கிறுர். இங்கு லாம் அலிபு இரண்டுக்குமிடையே மீமை இருதயத்தில் அடைத்தலாவது — லாம் அலிபு இரண்டினிடையே மீமை நடுவில் விட்டால் 'அமல்' என்று வருவதைக் குறிப்பதாயிருக்கலாம். ஞான அமல்களை — ஞான நடப்புக்களை இறையோன் தன் இருதயத்துள் அடைத்துப் பூட்டினுன் என்பதைத்தான் இவ்வாறு சொல்கிறுரோ என்னவோ. 'இருவாசல்' என்றது இடது, வலது நாசித் துவாரங்களாகிய சந்திரவாசல் (இடைகலை), சூரியவாசல் (பிங்கலை) ஆகியவையாயிருக்கலாம்- இவ்விரு வாசலும் சுழிமுனையாக இணைகின்ற — பூட்டிக்கொள்கின்ற உன்னத நிலையில் ஞான அமல்களை இறைவன் உரைத்தளித்தான் என்கிறுர் போலும்.

"திருநாமங்கொண்டெறிவார்கள் இயல்பாகவிருவாசல் வழி பூடியங்குமலிபே" என்று ஞானமணிமாலையிலும் கூறுவார் பீரப்பா அவர்கள்.

"எழுதுகோலைக்கொண்டு எழுத்தறிவித்த புகழுக்குரிய இறைவனே! எனக்கும் பூட்டு உரைப்பாயாக" என்ற வேண்டுதலைத்தான் —

"காபொரு லாமுடனே பூரணவாசற் குழியொரு மீமிற் புகழ் தருவாய்.........பூட்டுரைப்பாயிறை கண்மணியே"

— ஞானப்பூட்டு, பாடல்:12

என்கிறார் போலும். காப், லாம், மீம் ஆகிய எழுத்துக்கள் 'கலம்' ஆகிய எழுதுகோலுக்கு ஆகிவந்திருக்கலாம்.

'அல்ஹம்து' எனும் சொல்லின் ஐந்து அட்சரங்களுள் ஒன்றாகிய 'ஹே' எனும் எழுத்து 'ஹூவியத்தை'க் குறித்து நிற்கிறது. இந்த ஹூவியத்தை மனக்கண்ணால் கண்டு மகிழும் நிலைதான் இறைஞானத்தின் உச்சநிலை என்பர்.

"அஞ்செழுத்து அலிபுலாம் ஹாமீம் தாலானதிலே
பிஞ்செழுத்தைக் கல்புகண்டு பிலக்கும் நாளெந்நாளோ"
— ஞானந்த ரத்தினம், பாடல்: 91

என்று வேண்டி நிற்பார் உமறுலி நாயகமவர்கள். இதைத்தான் அப்பா அவர்களும் —

"முந்த வமுதக்குழி அச்சரத்துக்கு முன்னின்ற எழுத்து
எந்தமக்கு ஈந்தருள் எம்மிறையே"
— ஞானப்பூட்டு, பாட்டு: 17

என்று வேறுவிதமாக இறைஞ்சுகின்றார் போலும்.

'லாஇலாஹ இல்லல்லாஹூ' — இதில் உள்ள 'ஹூ' என்ற எழுத்தும் அல்ஹம்தில் உள்ள 'ஹூவியத்'தைப்போலவே முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இந்த எழுத்துக்காகவும் பீரப்பா அவர்கள் இறைவனிடம் இரந்து நிற்பார்கள்.

"எட்டுநான் கொன்றையுங் காட்டியருள் பூட்டியருளே"
— ஞானப்பூட்டு, பாடல்: 26

எனும்போது கலிமாவின் முதற்பாதியிலுள்ள (8+4=12) பன்னிரண்டு எழுத்துக்களில் ஒன்றான 'ஹூ'வையே இங்கு 'எட்டுநான்கொன்று' எனக்குறிப்பிடுகிறார்.

"...............மனத்திலுற்ற வல்லபம்
எட்டுநா லெழுத்தில் வந்திருக்குமென்று எண்ணியே
தட்டிமுட்டி பார்த்துளந் தயங்கிமாள்வர் கோடியே"
"பாடியெங்கு மோசையாற் பரந்தெழுந்து நின்றதை
நாடி யோரெழுத்திலே நவின்றுபாரு நம்முளே"
— ஞானமணிமாலை, பாடல்: 172 & 173

என்ற ஞானமணிமாலை அடிகளும் இக்கருத்தையே அரண்செய்கின்றன.

இறையவனையும் முஹம்மதையும் துதித்தெழுகின்ற இந்த 'ஞானப்பூட்டு' பகுதியில் மலக்குகளையும், அவர்கள் ஆற்றலையுங் கூடக் குறிப்பிடத் தவறவில்லை பீரப்பா அவர்கள்.

"இந்தக் குழியிறையோன் லாமுமீம் தால்றேயும்
வந்தமத் ஷத்ஹம் சேழுமேழ் மலக்கால் — உன்றனல்
வெள்ளி திங்கள் செவ்வாய் வேந்தன் புதனுகும்
வள்ளல் முன்னுதித் தெழுந்த நான்மலக்கு — முட்குகையிற்
போந்த நாள் சிந்தை சனிஞாயிறு வியாழனென்றுந்
தான்றுதித்துச் சொன்ன நாள்தான்"

— ஞானப்பூட்டு. பாட்டு: 28

என்ற பாடலடிகளில் லாம், மீம், தால், றே, மத், ஷத், ஹம்சு ஆகிய ஏழும் ஏழு மலக்குகளாக வாரத்தின் ஏழு நாட்களிலும் செயல்படுகின்ற தன்மை குறிப்பிடப்படுகிறது. "நான் மலக்கும் உட்குகையிற் போந்தநாள்" என்றது கண், மூக்கு, வாய், காது ஆகிய நான்கின் உட்குகையிலும் முறையே மீக்காயீல், இசுருபீல், ஜிபரியல், இசுருயீல் ஆகிய நால்வரும் செயலாற்றுகின்ற தன்மையைச் சுட்டுவதாயிருக்கலாம்.

**1. 5.** இவ்வாருகவெல்லாம் இறைஞானக்குளிப்பு நிகழ்த்தினுல் தான் 'இபுலிசு' என்னும் அழுக்கிணைப் போக்கமுடியும். "பதுக்கமுடன் உண்மை புறுக்காணே ஓதினேம் என்று சொல்லி நன்மையுள்ள வல்லபத்தை" நாடாமலும் செம்மை உருக்கமுடன் இறையை உகந்தறியா மூடர்களுமாகிய ஞான ரகசியத்தை அறிந்துகொள்ளாத மறையோர்கள் இபுலிசை வெருட்ட முயல்வதில்லை. காரணம் அந்த இபுலிசோ யாரையும் எளிதில் வெல்லும் வல்லமை கொண்டவன். இதனை மிகவும் நயமாக "வெல்லுமிபுலிசு" (ஞானப்பூட்டு, பாடல்: 37) என்பார் பீரப்பா அவர்கள். அவன் பெருமை மிக்க ஆதம் ஹவ்வா ஆகியோர்களையே வழிகெடுத்த வலிமையாளன். அப்படிப்பட்ட "வெல்லுமியல்பு கொண்ட இபுலிசைத்தான் விரட்டி அல்லுபகலாக அகமகிழ்ந்து விரும்பிப் புகழ்ந்து இறைவனைத் துதித்தேன்" என்கிருர்.

"வேம்பனு மிபுலீ சென்னும் விணையனை வெருட்டிப் பார்க்கச்
சோம்பினுர் காண்ப தில்லை இறைவனை"

என்று ஞானமணி மாலையிலும் (பாடல்:63) இபுலீசு வதைப்படலம் பாடுகிருர் பீரப்பா அவர்கள்.

**1.6.** கொடுப்பவனை உயர்ந்த நிலையிலும், கொள்பவனைத் தாழ்ந்த நிலையிலும் வைத்துப் பார்ப்பது உலக வழக்கமாக இருந்து கொண்டிருக்கிறது. இதே நிலையை ஞானப்பூட்டிலும் காணலாம். இறையவனை வாழ்த்தியும், தம்மைத் தாழ்த்தியும் பாடுகின்ற பாங்கானது பொதுவாக எல்லாச் சமயக் குரவர்களிடமும் காணக் கூடிய ஒன்ருகவே அமைந்திருக்கிறது.

"ஈறிலாத நீயெளியை யாகிவந்
தொளிசெய் மானுடமாக நோக்கியும்
கீறிலாத நெஞ்சுடைய நாயினேன்
கடையனுயினேன் பட்ட கீழ்மையே"
—திருவாசகம், திருச்சதகம், பாடல்: 91

என்று மாணிக்கவாசகர் பலப்பல இடங்களிலும் தன்னை நாயினும் கீழாகக் கருதி, இறைவனை ஜோதி சொரூபமாகப் பாடுவார்

பீரப்பா அவர்களும் இறைவனைக் குறிப்பிடும்போது—'சற்குரு' (பாடல்: 20), 'ஏக ஆதி சோதி நீதியே' (பாடல்: 3), 'ஆளுமிறை யோனே' (பாடல்: 4), 'ஏட்டிலடங்காப் பொருளே', 'கண் மணியே' (பாடல்: 11), 'மருவிற்றெளிந்த பொருளே' (பாடல்:20), 'மன்னவனே', 'தவ்வை பிதாவில்லாத தானவனே', 'ஏகா', 'என்றனிடத்திருப்பவனே' (பாடல்: 28), 'அரசர்கோவே' (பாடல்: 30), 'இணையொன்றில்லாத இறையோனே' (பாடல்: 35) என்றெல்லாம் போற்றிப் புகழ்ந்து சிகர நிலைகளில் நின்று பாடுவார். இந்நிலைகளிலெல்லாம் கவிஞர் இறையவனைத் தம் அருந்தமிழால் துதிக்கின்ற பான்மையையும் காணலாம்.

அருள் வீக்கம் மேற்பட்டத் நிலையிலுங்கூடத் தம்மை மிகவும் தாழ்வாகவே சொல்லிக்கொள்வார் அப்பா அவர்கள். 'சொந்தம தான அடிமை' (பாடல்: 16), 'அடியன்' (பாடல்: 21), 'நஞ்சா யிருந்த வினையுடையேன்' (பாடல்: 15), 'சிறியேன்' (பாடல்:34), 'தொண்டன்' (பாடல்: 30) என்றெல்லாம் தம்மைச் சிறுமைப் படுத்துவதின் மூலம் மேலும் இறைவீறு பெறுகிருர் பீரப்பா அவர்கள்.

1. 7. இறையவனை அழுது தேடுகின்ற இடங்களையும் ஞானப் பூட்டில் காணமுடிகிறது.

"அருளும்படி பொருள் தந்தெனையாளும் மிறையோனே
அருளும்படி யுனைத்தேடி யழுதேன் சிலகாலம்"
—ஞானப்பூட்டு, பாடல்: 4.

எனும்போது பொருள் தந்து தன்னை ஆளும் இறையோனிடத்தில் அருள் தந்து ஆளுமாறு வேண்டுகிருர். அதனைப் பெறுதற்காகச் சில காலமாகவே அருளாளனைத் தேடி அழுகிருர். அழுததன் பயனுக அவனை 'ஆடுங்குழி கண்டேன்' (ஞானப்பூட்டு பாடல்: 4) என்கிருர்.

இன்னமும்—

"அலைந்தவக் குழியைநோக்கி யழுதுன்னைத் தேடிவாடி
வலைந்திடும் வாவைநோக்கி வந்துயா னுன்னைக்
கண்டேன்"

—ஞானப்பூட்டு, பாடல்: 29.

எனவும் பாடுகிறுர். இதயவானில் பறக்கும் தெய்வீகப் பறவையை, அழுது அடம்பிடித்துப் பற்றிய மெய்ஞ்ஞானியவர்கள் அதனை இப்பாநூலில் கட்டி வெளியே பறக்கவிடுகின்றுர்.

"வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே"

—திருவாசகம், திருச்சதகம், பாடல்: 90

என்பார் அழுது அடியடைந்த அன்பராகிய மணிவாசகர்.

1. 8. சில இலக்கிய உத்திகளையும் காண முடிகிறது. முஹம்மது நபியவர்களைக் குறிப்பிடும்போது உமறுப் புலவர் தம் சீருவில் ஓரிடத்தில் "மறுவிலா தெழுந்த முழுமதி......முஹம்மது நபி..." என்பார். பீரப்பாவோ முஹம்மது நபியவர்களைப் பாடும் போது ஒரு பாடலில் "காரிருள் விலகிய ஹபீபு இறசூல்" (ஞானப் பூட்டு, பாடல்: 2) என்று குறிப்பிடுவார். பின்வரும் இன்னொரு பாடலொன்றில், அவ்வடிக்கு விளக்கம் தருவதுபோல "அந்த நாளுதித்த ஏக ஆதி சோதி நீதியே" (ஞானப்பூட்டு, பாடல்: 3) என்று இறைவனைச் சோதி சொரூபமாய்க் காட்டி—அந்த ஜோதி யின் தூதே நபிகள் நாயகமென்பதையும், ஆகவே காரிருளுக்கு அங்கு இடமேயில்லை என்பதையும் குறிப்பாக வெளிக்காட்டி, இரு வேறு பாடல்களை இலக்கிய நயத்தோடு கொழுத்துகின்ற தன்மையையும் இங்குக் காணலாம்.

"............. ஞானவல்லபம்

சிந்தையுட் டெளிந்த ஞானச் சிறுமலுக்கர் செல்வன்யான்
வந்து ஞானப்பூட்டதின் வலிமைதாவென் வல்லவா"

— ஞானப்பூட்டு, பாடல்: 3

எனப் பாடும்போது, இறைவனிடம் "நீயோ வல்லவன், நானும் ஞானவல்லபம் பொருந்திய தந்தையின் மைந்தன், எனவே ஞானப்பூட்டின் வல்லமையை நீ எனக்குத் தருவாயாக" என்று இறைஞ்சி நிற்கிறுர். கொடுப்பவனுடைய நிலைக்குக் கொள்பவனும் உயர்ந்து வருகிற தன்மையை இங்குக் காண முடிகிறது. இவ் விடத்தில், வல்லவனிடமிருந்து வல்லவன் மைந்தன் வல்லமையை வேண்டுதல் பல்லாற்ருலும் பொருத்தமே என்பதையும் கற்போருக்குத் தம் கவித் திறத்தால் உய்த்துணரச் செய்து விடுகிறுர்.

1.9. இறுதிப் பாடலில் — "ஞானப் பூட்டாலுனைத் துதித்தேன்.........ஞானக் குழி பூட்டவருள் தந்தாய்" (ஞானப்பூட்டு, பாடல் : 38) என்று பாடி, ஞானப்பூட்டு பாட அருள்தந்த இறைவனை நன்றியால் துதிக்கின்ற நன்றி மறவாத் தன்மையையும் காணலாம். ஏனைய காப்பியப் புலவர் முதலானோர்கள் பொருள் தந்த வள்ளல்களை, தம் நூற்களில் நன்றியால் பாடுவர். ஆனால் பீரப்பா அவர்களோ அருள்தந்த வள்ளலுக்கு நன்றிப் பொன்னாடை போர்த்தி மகிழுகிறார்.

மெய்ஞ்ஞான வித்தகராகிய பீரப்பா அவர்களின் ஞானப் பாடல்கள் பக்தியைக் கொப்பளித்தாலுங்கூட — அங்கே சமயமும் இலக்கியமும் ஊடும் பாவுமாக விரவுகின்ற தன்மையும் ஏராளமுண்டு. இலக்கியங்களின் சாரமாகிய பிழிவுடன் அறிவோடு கூடிய அனுபவச்சாறும் கலக்கும்போதே தத்துவம் உற்பத்தியாகிறது. எனவே கவிதைக்கும் தத்துவத்துக்கும் நெருங்கிய இயைபும் தொடர்பும் உண்டு எனலாம். "சிறந்த தத்துவ ஞானியாக இல்லாத எவனும் இதுவரையில் ஓர் உயர்ந்த கவிஞனாக விளங்கியதில்லை"* என்பார் 'கால்ரிட்ஜ்' எனும் மேனாட்டறிஞர். பீரப்பா அவர்களோ சிறந்த தத்துவார்த்தமும் உயர்ந்த கவித்துவமும் ஒருங்கே அமையப்பெற்ற ஓர் அற்புத மனிதராக — அருள் பெற்ற தமிழ்க்கவிஞராக விளங்குகின்றார். முடிவாக ஒன்றைக் கூறலாம்—பீரப்பா அவர்களுக்கோ இறைத்தாகம்; அதைக் கவிதை நீரால் தணித்துக் கொள்கிறார். நமக்கோ கவிதைத் தாகம், அவர் தரும் இறை நீரைப் பருகி அதைத் தணித்துக் கொள்கிறோம்.

**துணை நின்ற நூற்கள் :**


1. பதினெண் சித்தர்கள் பெரிய ஞானக்கோவை—
மூன்று பாகங்கள்
தொகுப்பாசிரியர்: வா. சரவணமுத்துப் பிள்ளை,
திருவல்லிக்கேணி, ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ், 1924.
2. ஞானந் தரத்தினம் திருமணியுரை,
தொகுப்பாசிரியர்: அப்துல்கனி சாஹிபுல் காதிரீ ஆரிபு
பில்லாஹி — ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ், 1927.
3. ஞான மணிமாலை — தாற்பரியவுரை,
எம். ஏ. நெயினா முஹம்மதுப் பாவலர்,
ஷாஹுல் ஹமீதிய்யா பிரஸ், 1964.
4. மாணிக்கவாசக சுவாமிகள், திருவாசகம்,
திருவாடுதுறை ஆதீனம், 1971.
5. ஆ. கா. அப்துல் ஹமீது பாகவி,
தப்ஸீரெ தர்ஜுமதுல் குர்ஆன்,
திருக்குர்ஆன் தமிழாக்க நிலையம், சென்னை, 1948.


* "No man was ever yet a great poet without being at the same time a profound philosopher." — S. T. Coleridge

# ஞானப் புகழ்ச்சி—ஓர் ஆய்வு

தக்கலை எச். முகம்மது சலீம், எம். ஏ.,
*துணைப்பேராசிரியர்,*
*பூ. சா. கோ. கலைக்கல்லூரி, கோவை.*

இறை நேசச் செல்வர்களாகிய மெய்ஞ்ஞானிகள் படைத்தளித்துள்ள ஆன்மீக இலக்கியங்கள் பெரும்பாலும் திறனாய்வு செய்யப்படுவதில்லை. ஏனெனில் அவை சாதாரணக் கவிஞர்களின் கற்பனையில் உற்பவித்த கவிதைத் தொகுப்புமன்று; காவியத் திரட்டுமன்று. அவை ஆன்மீக வாழ்வின் அனுபவக் குறிப்புக்கள். இலக்கண விதி என்னும் உரைகல்லில் உரசிப் பார்த்தும், இலக்கிய நியதி என்னும் உருப்பெருக்கிக் கண்ணாடி மூலம் உற்றுப் பார்த்தும் அவற்றின் தகுதியையும் தரத்தினையும் தீர்மானிக்க முடியாது. இலக்கண, இலக்கிய நியதிகட்கும் அப்பாற்பட்ட பேருண்மைகளைத் தன்னகத்தே கொண்டுள்ள இவ்வகை நூற்களின் மெய்ப்பொருள் காணும் ஆற்றல் மேன்மக்களாகிய மெய்ஞ்ஞானியர்க்கே உரித்து.

பீடுயர் ஞானத்தின் பெருநிதியாய் விளங்கும் ஞானப்புகழ்ச்சி என்னும் நன்னூல், வள்ளல் பீர்முஹம்மது அப்பா அவர்கள் ஆன்மீக இலக்கிய உலகிற்குத் தந்த அருட்கொடை. போற்றுதற்குரிய பொற்களஞ்சியமாம் இந்நூலைத் திறனாய்வு செய்தல் இக்கட்டுரையின் நோக்கமன்று. நூலமைப்பின் சிறப்பினையும், கருத்துக்கள் நுவலப்படும் முறையின் நேர்த்தியையும் ஆய்வுக் கண்ணோட்டத்தில் விரித்துரைக்கும் முயற்சியே இக்கட்டுரையாகும்.

## நூலின் அமைப்பு

"ஆருறுக்கப்பால்" என்று துவங்கி "அறுஹமர் ருஹிமீன்" என்று நிறைவுறும் ஞானப்புகழ்ச்சியில் அறுநூற்று எண்பத்து ஐந்து பாடல்கள் அழகுற அமைந்து கற்பவர் நெஞ்சைக் கவர்கின்றன. அரபுச்சொற்களின் ஆட்சி நூல் முழுமையும் பரவலாகக் காணப்படுவதால் நூலினை நுணுகி ஆய்தற்குத் தண்டமிழ்ப் புலமையும், அரபுமொழித் தேர்ச்சியும் வேண்டற்பாலன. ஞானப் புகழ்ச்சி என்பது அப்பா அவர்களே நூலிற்கிட்ட பெயராகும் என்பதனை,

"புகழ்ச்சி துஆவடியேன் புகலுதற்கு நீ மனதுள்
மகிழ்ச்சி தருவாயே மகிழ்ந்து" (ஞா. பு. — 1)
"ஓதும் புகழ்ச்சியை நான் உரைப்பதற்கு நீ மனதுள்
போதந்தருவாயே புரிந்து" (ஞா. பு. — 2)
"சிறியேன் நம் ஆதியைப் புகழ்ச்சி செய்தேன்"
(ஞா. பு. — 19)
"பெரியோன் தனைப்பாடிப் புகழ்ச்சி செய்தேன்"
(ஞா. பு. — 20)

போன்ற பாடல் வரிகள் தெளிவுபடுத்துகின்றன. பரம்பொருளாகிய அல்லாஹ்வைப் போற்றிப் புகழ்வதே நூலின் பாடுபொருள்.

"பத்தியா யெனைவளர்த்த பரமனே யுனையான் பாட"
(ஞா. பு. — 4)
"மதுரமோ டுருவாயென்னை வகுத்தவா வுனையான் பாட"
(ஞா. பு. — 5)
"பூச்சைச் சிறந்ததோர் சொற்பனுவல்
புன்சொல் தொடுப்பேனே... ..." (ஞா. பு. — 19)

என்பது போன்ற பாவடிகளில் நூலின் மையக் கருத்தினையும், குறிக்கோளினையும் அப்பா அவர்கள் நுணுக்கமாகத் தெரிவிக்கின்றார்கள்.

நூலாசிரியரான அப்பா அவர்கள் தம்மைப்பற்றிக் குறிப்பிடுகின்றவிடங்களில் மிகுந்த தன்னடக்கத்தோடு மொழிவதைக் காண்கிறோம்.

"சிறியேன் நம்ஆதியைப் புகழ்ச்சி செய்தேன்"
(ஞா. பு. — 19)
"தெரியாதிருகண்ணும் இழந்தபீர்மு
ஹம்மதெனும் பேராய்த் தெளிந்தோன்தானும்
பெரியோன் றனைப்பாடிப் புகழ்ச்சி செய்தேன்"
(ஞா. பு. — 20)
"பீர்முஹம்மதெனும் உரைபேருடைய
பைதலிறையைப் புகல்வன் கேண்மோ"
(ஞா. பு. — 26)

என்பது போன்ற பாடல் வரிகள் குணமென்னும் குன்றேறி நிற்கும் அப்பா அவர்களின் அடக்கத்தினை அமைவுறக் காட்டுகின்றன.

ஞானப் புகழ்ச்சியின் பாடல்கள் துவக்கத்திலிருந்து இறுதி வரை ஒரு நீண்ட துஆவின் பாங்கிலேயே அமைந்துள்ளது நூலின் தனிச் சிறப்பாகும். பாடல்கள் ஒவ்வொன்றும் கரும்பென்றும் தேனென்றும் கற்போர்க்கு இனிமை தருவதோடு

O-,1:9 N78

படிப்பவர்கள் ஒவ்வொருவரும் தங்களின் கூற்றுகவே இறைவனிடம் மொழிவது போன்ற உணர்வு தோன்ற அமைந்துள்ளது குறிப்பிடத்தக்க மற்றொரு சிறப்பாகும்.

## பகுப்பும் தொகுப்பும்

ஞானப் புகழ்ச்சியின் பாடல்கள் பல பகுதிகளாகத் தொகுக்கப் படாது, நூல் முழுமையும் ஒரே பகுதியாகவே அமைந்துள்ளது. எனினும், நூலினை நுணுகிப் பயில்வோர்க்கு அதில் சில உச்ச நிலைப் பகுதிகள் அமைந்திருப்பதை உணரமுடியும். இவ்வுச்ச நிலைப் பகுதிகள் காப்பு, அவையடக்கம், அடைக்கலம், சரணம், துஆ இரப்பு என்பனவாகும்.

## காப்பு

நூலின் துவக்கத்தில் இறைவனை வாழ்த்தி வேண்டுவது இலக்கிய மரபாகும்.

> "வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றினென்
> றேற்புடைத் தாகி முன்வர வியன்று"

என்று நூலின் துவக்கத்தில் இறைமொழித்து அமைவதன் முக்கியத்துவத்தைத் தண்டியலங்கார ஆசிரியர் குறிப்பிடுவார். இவ்விறை வாழ்த்துப்பகுதியே காப்புப் பகுதி எனப்படும். ஞானப் புகழ்ச்சியின் காப்புப்பகுதி முதன் மூன்று பாக்களில் முறையுடன் அமைந்துள்ளது. இப்பாக்களில் எல்லாம் வல்ல அல்லாஹ்வை வாழ்த்தி வணங்குவதோடு நூலின் நோக்கம் என்னும் 'வருபொருளை'யும் உரைக்கின்றார்கள் உயர் ஞானப் பீரப்பா அவர்கள்.

> "புகழ்ச்சி துஆவடியேன் புகலுதற்கு நீ மனதுள்
> மகிழ்ச்சி தருவாயே மகிழ்ந்து" (ஞா. பு. — 1)
> "ஓதும் புகழ்ச்சியை நான் உரைப்பதற்கு நீயெனக்கும்
> போதம் தருவாயே புரிந்து" (ஞா. பு. — 2)

என்னும் தேன் வடியும் பாவடிகள் நூலின் வருபொருள் உரைக்கும்.

## அவையடக்கம்

ஒரு சொற்பொழிவாளனின் அவை அவன் உரையாற்றுகின்ற நேரத்தில் அதனைச் செவிமடுப்போராவர். இவ்வவையில் கற்றோரும், கல்லாதாரும், அறிஞரும், அல்லாதாரும் அமைந் திருத்தல் இயல்பு. அரங்கேறி நின்று உரையாற்றுவோர் எத்துணை

ARCHIVES No. 4808

அறிஞரேயாகிலும் அடக்கமும் பணிவும் வெளிப்பட மொழிதல் மரபாகும். இதுவே அவையடக்கமாகும். இலக்கியப் படைப்பாளி களின் அவை கணப்போதில் கூடிப்பிரியும் கூட்டமன்று. காலந் தொறும் அப்படைப்பாளியின் இலக்கியத்தைப் பயில்வோரின் ஈட்டமாகும். எனவே, இலக்கியப் படைப்பாளிகட்கும் அவை யடக்கம் இன்றியமையாதது. ஆன்மீக இலக்கியமான ஞானப் புகழ்ச்சியிலும் அப்பா அவர்கள் இவ்விலக்கிய மரபினை இனிதுறக் கையாள்வதைக் காண்கின்றோம்.

"பூச்சைச் சிறந்ததோர் சொற்பனுவல்
புஞ்சொல் தொடுப்பேனே கேட்டு நல்லோர்
சீச்சீயெனத் துப்பிச் சினக்க வென்றும்
சிறியேன் நம்மாதியைப் புகழ்ச்சி செய்தேன்
சூழ்ச்சி யறிந்தோர்கள் அடியேன்சொன்ன
சொல்லிற் பிழைதீர்த்துக் கொள்வாரென்றேன்"
—(ஞா.பு. 19)

"பெரியோன் றனைப்பாடிப் புகழ்ச்சிசெய்தேன்
பிழையுண் டெனவுந்தான் அறிந்தவர்கள்
உரியோன் றனக்காகப் பிழைகள்தீர்த்தே
உலகிற் றிறமாக்கிக் கொள்வாரென்றே"
—(ஞா.பு. 20)

என்ற பாடல் வரிகள் உள்ளிட்ட இரு ஆசிரிய விருத்தப் பாக்களில் ஞானப் புகழ்ச்சியின் அவையடக்கப் பகுதி பாங்குற அமைந் துள்ளமை காண்கின்றோம்.

## அடைக்கலம்

நாற்பத்துஏழு பாடல்களைக் கொண்ட அடைக்கலப் பகுதி நான்கு சிறு பகுதிகளாக நூலில் அமைந்துள்ளது. உலகெலாம் படைத்து, உயிரெலாம் சமைத்து அவற்றை உயர்வுறக் காத்திடும் உத்தமன் அல்லாஹ்வின் உயரிய குணங்களையும், இயல்புகளையும் எடுத்தியம்பி அவன்பால் அடைக்கலம் வேண்டுவதாக அமைந் துள்ள இப்பகுதி ஆன்மீகப் பேழையாய் விளங்கும் ஞானப் புகழ்ச்சியின் நாற்பத்து மூன்றாவது பாடலிலிருந்து நூற்று ஐம்பத் தேழாவது பாடல்வரை விரிந்து காணப்படுகிறது. (அடைக்கலப் பாடல்கள் ஞா.பு. 43 முதல் 76, 97 முதல் 101, 130 முதல் 131, 153 முதல் 157) இப்பகுதியின் இன்னொரு சிறப்பு 'துய்ய பெரி யோனே' என்று துவங்கி இருநூற்று அறுபத்தைந்து சிறப்புப் பெயர்களால் எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் புகழ்கின்ற பாங்காகும். ஆன்மீக ஞானம் என்னும் அருஞ்சுவைப் பானத் தின் நறுஞ்சுவை நாடுவோர்க்கு அடைக்கலப்பகுதி பெரு விருந்தாகும்.

### சரணம்

சரணுகதித் தத்துவம் ஆன்மீகக் கோபுரத்தின் அஸ்திவாரக் கல்லாகும். ஆரணங்கள் போற்றுகின்ற பரிபூரணனும் அல்லாஹ்விடம் அடைக்கலம் கண்ட அப்பா அவர்கள் அக்காரணனிடத்தே சரணடைவதாகப் பாடுகின்ற பதினேழு பாடல்கள் (ஞா.பு. 252 முதல் 268) ஞானப் புகழ்ச்சியின் நடுவண் அமைந்து, நாடுவோர் சிந்தையில் நலம் சேர்க்கின்றன. 'அருள்க'; 'தருக'; 'இரங்குக'; 'ஈடேற்றுக'; என்று இறைவனைப் பலவாறு வேண்டிச் சரண் புகுவதாக அமைந்துள்ள இப்பகுதியின் பாடல் ஒவ்வொன்றும் தத்துவ ஒளி சிந்தும் முத்துக்கள். காட்டாக,

இரவினிலுயர்ந்த பதவிகள்முயன்ற
வர்கள்பெறுவ ரென்றே
இசைவுறநீயெங்க ளிடரகலமுடுகி
நின்றருள்க நின்சரணமே

—(ஞா.பு. 255)

பசித்திருந்து, தனித்திருந்து, விழித்திருந்தால் ஆன்மீகப் பதவி கிடைக்கும். "முகத்துக் கண்ணை முறுக்கித் திருக்கி, அகத்துக் கண்ணை அறுத்துப் பிளந்தபின் (ஞான மணிமாலை 86)" துயில் மறந்து விழித்திருப்பர் துயரறுத்த ஞானியர். இவர்களே அரிதின் முயன்று ஆன்மீகப் பதவி பெறுவோர். அத்தகு உயர்நிலை எய்துவதில் ஏற்படும் தடைகளை உடைத்தெறிந்து உதவிடுக என்று இறைவனை வேண்டிச் சரணடைவதாக அமைந்துள்ளது இப் பாடல் வரிகள்.

## துஆ இரப்பு

ஞானப் புகழ்ச்சியின் உச்சநிலைப் பகுதிகளுள் உயர்நிலையில் வைத்தெண்ணப் படுவது நூலின் இறுதியில் அமைந்துள்ள துஆ இரப்பு எனப்படும் முறையீட்டுப் பகுதியாகும். பெருக்கமுள்ள இறையவனை உருக்கமுடன் வேண்டும் இப்பகுதியின் பாடல் வரிகளில் அமைந்துள்ள ஒவ்வொரு சொல்லும், கல்லும் கசியும் கனிவுடன் அமைந்துள்ளது. இப்பகுதியின் மற்றொரு சிறப்பு 'இறையோனே' என்றுதுவங்கி அல்லாஹ்வின் எண்ணற்ற குணங்களில் (சிபத்துகளில்) முன்னூற்று எழுபத்து ஐந்தினை முறையோடு பகர்வதாகும். மேலும் இப்பகுதியில் சூரத்துல் பாத்திஹாவென்றும், உம்முல் குர்ஆன் என்றும் சிறப்புப் பெயரால் வழங்கப்படும் 'அல்ஹம்து சூராவை' இப்பகுதியில் அப்பா அவர்கள் இணைத்துப்பாடியுள்ளது இன்னொரு சிறப்பாகும். இருள் பற்றிநிற்கும் இதயமெல்லாம் ஒளிபெற்று உய்யும் வண்ணம் இருநூற்று இருபத்தைந்து பாக்களில் அமைந்

துள்ள இம்முறையிட்டுப் பகுதியினைப் படித்திடுதல் ஒரு தவமே. முறையோடு படிக்கக் கேட்டிடுதல் தனிப்பேறே.

## நுவலும்முறை

ஞானப்புகழ்ச்சியின் அமைப்பின் சிறப்பினைப்போலவே கருத்துக்களை நுவலும் முறையின் நேர்த்தியும் ஆய்ந்துணரத் தக்கது. தாம் கருதிய செய்தியினைச் சொல்வதற்கு அப்பா அவர்கள் கையாண்டுள்ள முறைகள் நூலின் சிறப்பிற்கு மேலும் தரம் சேர்க்கின்றன.

## முன்னோர் மொழி போற்றல் :

தாம் சொல்லவருகின்ற செய்திபற்றி முன்தோன்றிய அறிஞர்களோ, நூற்களோ கூறிய கருத்தினை மேற்கோள்காட்டி, தாம் கூறுவன முன்னோர் மொழிப்பொருட்களே என்று உறுதிப்படுத்தி உரைப்பது ஆன்மீக இலக்கிய கர்த்தாவான அப்பா அவர்கள் கையாளும் நுவலும்முறை பற்றிய உத்திகளுள் ஒன்றாகும். காட்டாக;

"பரமா நபியைப் படைத்திலை யாகிற் படைப்பிலையென்
றுரமாய் மொழிந்தவென் னுத்தமனே" (ஞா. பு. — 184)

"உடலொளி சிறந்த ஹபீபையல தொன்றும்
அமைசெய்திலே னென்றுளம் மகிழ்பவனே" (ஞா. பு.–265)

என்றபாடல் வரிகளில் திருக்குர்ஆனை மேற்கோள்காட்டுகின்றார்கள்.

"இன்ன நிற மின்னவடி வென்றொருவ ரேத்தரிய
வன்ன நிற மாயுயர்ந்து வாழ்வோனே"
(ஞா. பு. துஆ இரப்பு — 46)
வேதாந்திகள் காணிலதை பிஸ்மிலென விள்வார்"
(ஞா. பு. — 437)

"தந்தவேத நான்குமாறு சாத்திரங்க ளானதும்
வந்துபேசு நாதரும் வழங்குதேவ னைந்துங்கண்
டுன்றன்நேர்மை இன்னதென் றுரைக்கொணாதென்
றொருவனே"
(ஞா. பு. — 443)

என்பனபோன்ற பாவடிகளில் முன்தோன்றிய மெய்ஞ்ஞானியருடையவும், மறைகளுடையவும் கூற்றினைப் போற்றிக்கூறுகின்ற பாங்கினைக்காண்கிறோம்.

## முரண்பாட்டால் விளக்கம்

முரண்பட்ட செய்திகளை உடன்வைத்துக் கூறுவதால் இரண்டனையும் ஒப்புநோக்கி அவற்றின் குணங்குற்றங்களைக் கற்போர் நன்குணர்வர் என்று கருதி, நூலின் பல்வேறிடங்களில் அப்பா அவர்கள் இம்முறையைக் கையாண்டுள்ளார்கள். காட்டாக;

"தீங்குறுப் பாவங்கள் தேன்கனியாம்நின் திருவுளத்தில்
பாங்குறுஞ் சீர்வேம் பினுங்கசப்பாகும்" (ஞா. பு. — 434)

"கரும்பென வினிக்கும் பாவம் கசக்கும்வேம் பெனவே
தன்மை"
(ஞா. பு. — 90)

"கனைத்துவந் தெழுப்பும் பாவம் கடிதில்வந் தணுகாத்
தன்மை"
(ஞா. பு. — 91)

"வினவிவந் தழைக்கும் பாவம் விரையவந் தணுகாத்
தன்மை"
(ஞா. பு. — 92)

என்பது போன்ற பாவடிகளில் நன்மைசெய்தற்கும் தீமை செய்தற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை உணர்த்துகின்றார்கள். இறைவன் விலக்கிய செயல்களான பாவச் செயல்களைப் புரிவது எளிது; அறவழி உணரார்க்கு அது இனிமை தருவதும் ஆகும் என்ற கருத்தினை முரண்பாடு காட்டி விளக்கந்தருகின்றார்கள். இப்பாடல் வரிகளில் காணப்படும் தன்மை என்ற சொல் நன்மை என்ற பொருளினைக் குறிக்கும்.

## வினுவிப் பொருளுணர்த்தல்

கருத்துக்களைக் கோவையாகக் கூறிவரும்போது சில இடங்களில் அவைபற்றிய செய்திகளைக் குறித்துக் கேள்வி கேட்டும் விடைபகர்ந்தும் விளக்கம் தருவதும் அப்பா அவர்கள் ஞானப் புகழ்ச்சியில் கையாளும் நுவலும்முறை உத்திகளுள் ஒன்றாகும்.

"காலுங்கரமும் மரந்தனக்கேன் விழிகள்வனுக்கேன்
பாலும்பழமும் பசும்பிள்ளைக்கேன் பசியாதெமக்கேன்
பூவும்மதுவும் குரங்கினுக்கேன் பொறிவண்டுக்கல்லால்
ஆலும்அரசும் பணிக்கேன் எமக்கருளாண்டவனே"
(ஞா. பு. — 448)

என்னும் பாடல் இம்முறையில் அமைந்துள்ள ஒன்றாகும். ஞானமேதை அவர்களின் ஞானரத்தினக் குறவஞ்சி என்னும் நூல் முழுமையும் வினா—விடைப் பாங்கிலேயே அமைந்துள்ளது என்பது ஈண்டு நினைவு கூரத்தக்கது.

## எண்ணல் பொருள் வரையறை

கவிஞர்கள் ஏதேனும் ஒரு பொருள் குறித்துப் பேசும்போது அதன் இயல்புகளையோ, சிறப்புக்களையோ இத்துணைய என எண் வரையறை தோன்றக் கூறும் மரபு தொன்று தொட்டே உள்ளது. 'உம்', 'என்று', 'என', 'ஒடு' முதலிய எண்ணிடைச் சொற்களைப் பயன்படுத்தி ஞானமேதை அப்பா அவர்களும் பொருள்களை எண்ணிக் கூறுகின்றார்கள். சொல்லக்கருதிய செய்தியினைத் திட்டவட்டமாக வரையறுத்து உணர்த்துவதற்கு இவ் வெண்ணிடைச் சொற்கள் பெரிதும் பயன்படுகின்றன.

''பொல்லாக் குபிர்களும் வருங்குற்றமும்
பொருந்தாப் பிணி துன்பம் பலவாபத்தும்
நில்லா வறுமையும் மனச்சலிப்பும்
நினைப்பு மறப்பும்வந் தெய்திடாமல்
எல்லா வினைகளும் முஸீபத்தும்வந்
தென்னை யணுகாமல் காத்தருள்வாய்
அல்லாவுனைப் புகழ்ந் துன்னேடிரப்பேன்
அடியேன் துஆப்பேறீ டேற்றுவாயே''

(ஞா. பு. — 102)

என்னும் பாடலில் 'உம்' என்னும் எண்ணிடைச் சொல்லை ஆண்டும்,

''ஆவென்றும் ஈயென்றும் ஊவென்றும் நின்றவுனை
யாரென் றிறைஞ்சவடியேன்
பாவென்றும் நூலென்றும் பகராமல் வேதியர்கள்
பகர்வார்க ளேனேவறியேன்
நானென்றும் நீயென்றும் நடுவே இருந்தெனது
நாட்டம தறிந்தவனும்நீ
தாயென்றும் வாவென்றும் தவறாமல் நல்லுதவி
தருவாய் நிறைந்தபொருளே'' (ஞா. பு. — 127)

என்னும் பாடலில் 'என்று' என்னும் எண்ணிடைச் சொல்லைப் பயன்படுத்தியும்,

"சமதெனுமு டவ்விருளாய்த் தானே ரணுவி
லஹறெதென அவ் வல்நூ றஹறூம — தபதெனநீ
வித்தா கிறுமரமாய் விரிந்துபூத் துக்காய்மேல்
கொத்தாயி ரங்கனியே கூ" (ஞா. பு. — 402)

என்னும் பாடலில் 'என' என்னும் எண்ணிடைச் சொல் சேர்த்தும்,

"அந்தர மாமுனிவர் பசாசோ டரக்கர்ஜின் மாந்தர திற்சிலர்"
(ஞா. பு. — 229)

என்னும் பாடல் வரியில் 'ஒடு' என்னும் எண்ணிடைச் சொல்லைக் கையாண்டுமுள்ள பாங்கினையும் காட்டாகக் கூறலாம்.

## எண்ணளவும் பொருட் சிறப்பும்

ஒரு பொருளின் சிறப்பினை எண்ணி இத்துணையளவு பெரிது எனக் காண்பது அதன் உயர்வை நன்கு புலப்படுத்தும். அப்பா அவர்கள் இம்முறையையும் ஞானப் புகழ்ச்சியில் கையாண்டு உள்ளமை காண்கின்றோம். காட்டாக,

"ஆதம்பெறுமக்க ளெல்லாரிலும் நம்மை யன்புகொண்டே
வேதநபீயிறசூ லும்மத்தாக்கினு னந்த வெகுநன்றிக்குப்
பாதங்கள்மேலும் சிரங்கீழுமாய்ப் பத்து நூறுயிரமாண்
டோதித்தவஞ் செய்தாலும் போதாதவ னன்றுகந்ததுக்கே"
(ஞா. பு. — 29)

"அல்லா வொருவனென்று மகுமதவனன் தூதரென்றும்
சொல்லா லுவந்து தொழுதிரந்தால் — நல்லாரு
மண்ணி லழியாதே மறுமைக்கிறை தாரபலன்
எண்ணிமுடி யாதே யிவர்க்கு" (ஞா. பு. — 33)

என்ற பாடல் வரிகளைக் குறிப்பிடலாம்.

## விளைவு கூறி அறிவுறுத்தல்

இன்ப விழைவும் துன்ப மறுப்பும் எல்லார்க்கும் ஒத்த பண்புகள். இவ்வுளப் பாங்கினைத் தெளிவுற உணர்ந்த அப்பா அவர்கள், தாம் உணர்த்தும் நன்னெறி ஒழுகலான் வரும் நன்மையையும், தவிர்தலான் வரும் தீமையையும் அங்கங்கே எடுத்துக் காட்டிச் சென்றுள்ள பாங்கினை ஞானப் புகழ்ச்சியில் கண்டுவக்கலாம்.

காட்டாக:

“அல்லா திரு நோக்க மரியபல வாழ்வுகளும்
வல்லான் பொருட்டால் வந்தணுகும் — எல்லார்க்கும்
நலங்கா திலங்குமொரு நாயகனை நம்முளத்தில்
கலங்காம லேநினைத்தக் கால்” (ஞா. பு. — 34)

என்ற பாடலும்,

“ஆதி யொருவனை மறந்துலகில்
அனேகம் பிழைகள்செய் திறந்தா லங்கண்
நீதி பெறுமுயிர் தனையோ விண்ணோர்
நெறிசே ருடலையோ கேட்பார் பின்னே
சோதி யருட்படி நரகிலிட்டுச்
சுடும்போ படுந்துயர் அவனோ நாமோ
ஓதி யுணந்தோர்கள் அடியேன் சொன்ன
உண்மை யறிந்துரை சாற்றுவீரே” (ஞா. பு. — 24)

என்னும் பாடலும் அப்பா அவர்களின் வினவு கூறி அறிவுறுத்தும் முறைக்குச் சான்றுகளாகும்.

## உவமை நலம்

உவமை என்பது ஒப்புக்காட்டி விளக்குவதாகும். மதுரைக் காஞ்சி ஆசிரியர்:

“எவ்வகைச் செய்தியும் உவமம் காட்டி
நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கிற்
கண்ணுள் வினைஞர்”

என்று உவமையின் சிறப்பினை உரைப்பார். தவஞானச் செம்மல் அப்பா அவர்களும் ஆய்ந்துணரத்தக்க அழகிய உவமைகளை ஞானப் புகழ்ச்சியில் பயன்படுத்தியுள்ளார்கள். காட்டாக,

“குருடன் வனத்திற் கோலிழந்த குறிபோல் முறையிட்டுனை யடியேன்”
(ஞா. பு. — 82)

“மணைபடும் பருத்திபோல வன்பிழை யனைத்தும் போக்கி”
(ஞா. பு. — 196)

“கன்னலுற் றினித்தவாசம் கமழுங்கஸ் தூரிமேனி
பொன்னிறத் தழகுபோன்ற புகழ்நபி” ஞா. பு. — 210)

என்ற பாடல் வரிகளில் காட்டப்படும் உவமைகளின் நயத்தினை விரிக்கப் புகின் அஃதொரு தனிக்கட்டுரையாம்.

அள்ளக்குறையா அறிவுச்சுரங்கமான ஞானப்புகழ்ச்சியில் விள்ளத் தொலையாக் கருத்துக் கருவூலங்கள் பல கரந்து காணப் படுகின்றன. ஆராய்ச்சி அறிஞர்கள் கீழ்க்கண்ட பொருள்பற்றி ஆய்வு நிகழ்த்திஞல் அஃது ஆன்மீக இலக்கிய உலகிற்குச் செய்யும் அருந்தொண்டாய் அமையும்.

1. ஞானப் புகழ்ச்சி காட்டும் அல்லாஹ்வின் தத்துவங்கள்.
2. ஞானப் புகழ்ச்சி காட்டும் ஆன்மீக வாழ்வு.
3. ஞானப் புகழ்ச்சியில் அப்பா அவர்கள் காட்டும் தன் மண் வண்ணம்.
4. ஞானப் புகழ்ச்சியில் ஆளப்படும் அரபுச்சொற்கள் பற்றிய அகர முதலி — விளக்கம்.
5. ஞானப் புகழ்ச்சியில் ஆளப்படும் எண்கள் பற்றிய தத்துவ விளக்கம்.
6. ஞானப் புகழ்ச்சியில் அணி நலம்.
7. ஞானப் புகழ்ச்சி — கால ஆராய்ச்சி.

இதுபோன்ற ஆராய்ச்சிகள் நிகழ்த்திட அப்பாவின் ஆசியும் அல்லாஹ்வின் அருளும் துணை நிற்பதாக.

“இரக்கமுள்ள நாயனுனக்
கெல்லாப்பு கழ்ச்சியுமே” (ஞா. பு. — 149)

---

## துணை நூற் பட்டி


1. பீர்முஹம்மது வலியுல்லாஹ் (ரலி) — ஞானக்கோர்வை, ஹாஜி எம். ஏ. ஷாகுல்ஹமீது அன் ஸன்ஸ், சென்னை — 5.

2. எஸ். அப்துல் வஹ்ஹாப் பாகவி — மௌலாஞ ரூமியின் தத்துவங்கள், தம்பி புக் சென்டர், சென்னை — 1.

3. க. கைலாசபதி — அடியும் முடியும், பாரி நிலையம், சென்னை — 1.

4. முஹம்மது அப்துல் ரஹ்மான் சாகிப் — முஸ்லிம் அத்வைத மூலமொழி, ஹாஜி எம். ஏ. ஷாகுல் ஹமீது அன் ஸன்ஸ், சென்னை — 5.

# ஞானப் புகழ்ச்சி - ஒரு பார்வை

*பீ. தெட்சிணாமூர்த்தி*, எம். ஏ.
*இந்துக்கல்லூரி, நெல்லை.*

தென்காசியில் பிறந்து தக்கலையில் இறையடி எய்திய பெருமகனார் பீர்முகம்மது அப்பா அவர்கள். இறைக் காட்சியைக் கண்டனுபவித்த ஆன்மீகச் சிந்தனையாளராய் விளங்கிய அவர்கள் தமிழ் இலக்கியத்திற்குத் தத்துவம் செறிந்த ஞானப் பாடல்களைத் தந்துள்ளார்கள். அம்மெய்ஞ்ஞானமேதை எழுதிய நூல்களில் பிரார்த்தனைப் பாடற்றொகையாக விளங்குவது ஞானப் புகழ்ச்சி எனும் சிற்றிலக்கியமாகும். மனிதன் நல்வாழ்வு வாழ இறைவன் அருள் புரிதல் வேண்டும் என்று விண்ணப்பிக்கின்ற வேண்டற் பாக்கள் இத்தொகையில் உள. நாள் வழிபாட்டிற்குரிய முறையில் அமைந்த ஞானப் புகழ்ச்சியில் காணும் இறையியல் கருத்துக்களை ஒப்பியல் ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இறைவனிடம் விண்ணப்பம் விடுக்கும் பக்தர்கள் இறைவனின் இயல்புகளை முதலில் கூறிப் பின்னர்தான் குறையிரந்து வேண்டுபவர். பக்தி ஈடுபாட்டுடன் பாடும்போது இறையியல் இயல்பாகக் கவிதைகளில் கலந்து விடுவதைத் தெய்வப் பாசுரங்கள் அனைத்திலும் காணலாம். ஆழ்வார்களும் அடியார்களும் சித்தர்களும் சிவயோகிகளும் ஆண்டவனை வழிபட்டு இறையுணர்வோடு பாடிய பாக்களைப் படிக்கும்போது அத்திருப்பாடல்களில் அவர்களது அனுபவங்களைக் காணமுடிகின்றது. இறையறிவு பெற்ற ஞானியாரும் இறை இயல்பைத் தமது ஞானப் பாடல்களில் வெளிப்படுத்தியிருப்பது அவரது உள்ளத்தில் எழுந்த உள்ளுணர்வாலும் இறையனுபவத்தாலும் ஆன அனுபூதி நிலையால்தான் எனலாம்.

ஞானப் புகழ்ச்சியில் 687 பாடல்கள் உள. அவை பல்வேறு யாப்பமைதிகளுடன் இலங்குவன. இறைவன் திருநிலையைப் புகழ்தல் ஒரு பகுதி எனின் மறுபகுதி பிழைபோக்க அருள் வேண்டலாகும். திருவருட்டன்மை ஒவ்வொரு பாட்டிலும் வெளிப்படுகிறது. "...பீரப்பாவின் ஒவ்வொரு பாடலும் உயிரை இறையொடு ஒன்றச் செய்யும் அருட்கூறு நிறைந்த ஞானக் கருவூலமாக, மோனப் பெருநெறியாக வழிகாட்டுகின்றது"[1] என்று பேராசிரியர் இன்னாசி கூறுகின்றார்.

---

1. இன்னாசி, சூ., ஒரு மொழியுள் திருமொழி (பாளையங்கோட்டை, 1975) ப. 84

இறைவன் கலைகட்கெல்லாம் இருப்பிடம். நம்மை நாம் மறந்து ஈடுபடும் இயல்பைத் தருவது கலை. அருளாளர்கள் அக் கலையின் இருப்பிடம் அறிந்து இறைவனுடன் ஒன்றியவர்கள். ஆண்டவனும் கலைஞன்தான். ஞானமேதை அவர்கள் ஆண்டவனைக் குறிப்பிடும்போது, "கலையூறித் தரும் பொருள்"[2] என்று அழைக்கின்றார். ஆன்ம நேய ஒருமைப் பாட்டுடன் கவிதை வெளி வருகின்றது.

"தலையூறித் தேன்வடியத் தருவனமக் கென்றுசிலர்
தரையிற் றேடச்
சிலைமீதிற் சிலர்தேடத் தீயிற்சில பேர்தேடத் தெரியா
வண்ணம்
கலையூறித் தரும்பொருளாய்க் கருதுமவர்க் கெங்கு
மொன்றாய்க் கலந்த கோவே
அலையாதுன் னேடிரப்பே னடியேனுக் குதவிதந்திங்
கருள்செய்வாயே"[3]

பக்திப் பாடல்களைச் சிறந்த கவிதை வரிசையில் சேர்ப்பவர் சிலரே. அவருள் மாத்யூ அர்னல்டு ஒருவராவார். "ஆன்மநேய ஒருமைப்பாட்டால் உருப்பெற்று இயற்றப்பெறும் கவிதை சிறப்புடைய கவிதை"[4] என்று அவர் கூறுகின்றார். இக்கூற்று பீரப்பா பாடலுக்குப் பொருந்துவதாகும். மெய்ம்மை உணர்வுடன் இக் கவிதைகளைப் படித்தால் படிப்பவரும் கவிதையுடன் ஒன்ற முடியும். "...பக்தியாகிய உணர்ச்சி, அனைவர்க்கும் வாய்ப்பது ஒன்றன்று. எனவே, அப்பக்தியாகிய அனுபவத்தில் திளைத்து அதன் அடிப்படையில் தோன்றிய கவிதையை ஏற்கனவே அப்பக்தி அனுபவம் கொஞ்சமும் இல்லாதவர் அனுபவித்தல் இயலாத காரியம்"[5] என்று பேராசிரியர் ஞானசம்பந்தம் கூறுகிறார்.

இசுலாமிய சமயத்தின் அடிப்படைக்கொள்கை ஒன்றே எனினும் தத்துவச் சிந்தனையோட்டம் நான்கு வகைகளில் செல்கிறது. தத்துவம் சார்ந்த ஒரு மார்க்கம் சூபிசம் (Sufism) ஆகும்.

---

2. பீர்முகம்மது அப்பா, ஞானப் புகழ்ச்சி — 169
3. Ibid
4. Arnold, M., Essay on Criticism
5. ஞானசம்பந்தம், அ. ச., இலக்கியக்கலை, (நெல்லை, 1956) ப. 250

"கிரேக்கச் சொல் Sophism என்பதன் வேருெரு வடிவம் (Sufism) என்று சிலர் கருதியது தவருகும்."[6] நபிகள் நாயகம் மதினுவில் தொழுத பள்ளியின் திண்ணைப்பகுதியில் வாழ்ந்தவர்கள் 'அஸ்ஹாபே ஸுப்பா' என அழைக்கப்பட்டனர். 'Suffa' எனும் அப்பெயரிலிருந்து சூபிசம் வந்திருக்கலாம். எளிமையின் குறியீடாக விளங்கும் கம்பளித் துணிக்கொரு பெயர் 'சூபி'. சூபி எனும் ஒருமைக்குப் பன்மைப் பெயர் திருக்குர்ஆனில் உள்ளது. எனவே எளிமையான மார்க்கத்தைக் குறிப்பதே சூபிசம். பீரப்பா இம்மார்க்கத்தைக் கடைப்பிடித்தவர். அவரது தத்துவச் சிந்தனை ஓட்டம் இப்பாதை வழி அவரது பாடல்களில் இருப்பதைக்காணலாம்.

இறை அருகர்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஆண்டவனை நம்புகிறவன் ஒருவகை. ஆண்டவனுக்காகத் தன்னை அர்ப்பணித்துக்கொள்பவன் மற்ருெருவகை. ஆண்டவனை அணுகும் இம்முறைகளில் ஞானமேதை தனது கடன் பணிசெய்து கிடப்பதே என்று உலக வாழ்வை ஆண்டவனிடம் ஒப்படைத்தவர். "அத்தனே அருளே எங்கள் ஆதியே அடியேற்கு என்றும் நித்தனே"[7] என்று தன்னை ஒப்புவித்த நிலையைப் பாடுகின்ருர். அவர் செல்லும் சூபிசப்பாதை எத்துணை எளிதோ அத்துணை எளிமையுள்ள பாடல்தான் வெளிவருகின்றது. இறைவன் அவனை அணுகும் அணுக்கர்க்கு அருளும் இயல்பினன் எனும் இறையியல்பை,

> "அகந்தெரிந்து உணர்வோர்க் கென்றும்......
> முகந்திறந்து அருளைக்காட்டும் முத்தன்"[8]

என்று கூறுகின்ருர். ஆண்டவனிடம் தன்னை அர்ப்பணித்து அவன் அருகே இருப்பவரை வலியுல்லா (Wali) இறைநேயர் என்பர். ஆண்டவனை அண்மியோர் வலியுல்லா ஆவர். அவ்வகையில் பீரப்பா வலியுல்லா ஆவார். மறைப்பொருளாகிய மெய்யுணர்வு (Mystery) பெற்றதால் அவரது பாடல்களைப் படிக்கும்போது பக்தி உணர்வு மேலிடுகிறது.

---

6. Syed Muzaffar Ud Din Nadvi, Muslim Thought and its Source (Lahore, 1946) P. 91
7. பீர் முகம்மது அப்பா, ஞானப் புகழ்ச்சி — 171.
8. Ibid—173

"அற்றது பற்றெனில் உற்றது வீடு"[9] எல்லாவற்றையும் துறந்துவிடுவது எளிதன்று. சமயப்பணிக்காகத் தம்மை அர்ப்பணித்துக்கொண்ட ஞானி பீரப்பா, ஆண்டவனையே வாழ்விற்கும் தாழ்விற்கும் துணையாகக்கொண்டார். துன்பமோ துக்கமோ ஆண்டவன் உதவியைத்தான் நாடவேண்டும்.

"செகந்தனில் அடியேன் செய்யுந்தீவினை அகற்றுவாய்"[10] என விண்ணப்பம் செய்கின்றார்.

அங்கிங்கெனாதபடி பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமாய் எங்கும் இருப்பவன் ஆண்டவன்.

"எங்கும் ஒன்றாய்க் கலந்த கோவே"[11]
"ஓதாத மந்திரத்தினுட் கலந்தும் உறுபொருளாய் உல
காண்டெங்கும் ஆதாரமானவன்"[12]

என இறையியல்பு பேசுகிறார். இறைவன் எங்குமுள்ளான் எப்பொருளிலும் உளன் என்ற பரந்த கருத்தைக் கையாள்கின்றார்.

தூய அன்பு இன்பு தரும் எனக் கூறுவது சூபிசம். உள்ளமும் உடலும் தூயதன்மை அடையவேண்டும். சூபிச மெய்யறிவு (Mysticism) ஏனைய சமயங்களின் மெய்யறிவினின்றும் வேறுபட்டது. ஆண்டவனை அணுக நேரடியாகச் செல்லுதல் வேண்டும் என்கிறது சூபிசம். வேற்றுச் சமயங்கள் குரு வழி நின்று இறை காண முயல்கின்றன. ஆண்டவன் முன் அனைவரும் சமம் என்பது இசுலாமியக் கொள்கை. மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கற்பித்துக் கொள்வதில்லை இசுலாம். ஆன்மா புனிதம் அடைய வேண்டுவதுபோல் உடலும் புனிதமாகவேண்டும். ஆண்டவன் ஒருவனே நிலைத்த பொருள். ஏனைய அழியும் தன்மையன. இசுலாமியத்தில் உள்ள சூபிசக் கருத்துக்கள் யாவும் பீரப்பா பாக்களில் பரக்கக் காணலாம்.

மறுபிறவி என ஒன்றில்லை. இப்பிறவியிலேயே இறைவனை வேண்டி அருள் பெறவேண்டும். அவனன்றி ஓரணுவும் அசையாது. அழுதால் அவனைப் பெறலாம். கண்ணீர் மல்கக் காதலாகி ஓதினால் ஓதுவார்தமை நன்னெறி உய்க்கும் உய்விக்கும் தன்மை அவனுக்கு உண்டு. நெஞ்சம் நெக்கு நெக்கு உருக அவனிடம்

---

9. நம்மாழ்வார், திருவாய்மொழி 2.5
10. பீர் முகம்மது அப்பா, ஞானப் புகழ்ச்சி — 173
11. Ibid—169
12. Ibid—170

பற்றுள்ளம் கொண்டு இடைவிடாது பற்றி நின்றால் "ஒளி அண்ணுக்கும் நெஞ்சமும் நினைவும் பொங்கச் சுத்தனின் உதவி"[13] கிட்டும். துக்கம் அகற்றுவான். துணை செய்வான். விழுமிய நெஞ்சத்திலிருந்து ஆன்மநேய ஒருமைப்பாட்டிற்கு வழி தரும் விழுமிய கருத்துக்களை ஆன்மீக உலகின் அருளாளர் பீரப்பா அவர்கள் கவிதைகளால் ஆக்கித் தந்துள்ளார்.

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும்நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே"[14]

என்பது தாயுமானவரின் அருள் வாக்கு. இதுபோன்ற கருத்து ஆன்மீகச் செல்வர் பீரப்பா அவர்களின் மனமுதிர்ச்சியிலிருந்து வெளிப்பட்ட ஞானப் பாடல்களில் காணமுடிகின்றது.

ஆண்டவன் ஒருவனே என்றாலும் அவரவர் மன எண்ணத்திற்கு ஏற்பப் பல நாமம் சொல்லித் தொழுது ஏத்துகிறார்கள். பீரப்பா அவர்களும் அத்தன், நித்தன், முத்தன், சுத்தன் எனப் பல பெயர்களிட்டு அழைக்கின்றார்கள். அத்தனால் தான் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறட்டும் என்ற உயர்ந்த நோக்கில், இறை வழங்கிய உள்ளுணர்வால் பாப்புனைந்தார். அப்பாக்கள் அப்பா அவர்களின் சித்தர் நிலையைச் சித்திரிப்பன. தெய்வநிலை சுட்டுவன. இறை இயல்புகளை இயம்புவன. இறைவன் எங்குமுளான் எனும் இயல்பை விளக்குவன. ஞானப் புகழ்ச்சியின் பார்வையில் ஞான மேதையின் இறைவனைப் பற்றிய ஆன்மச் சிந்தனையை ஒருவாறு உணரலாம்.

---

13. Ibid—171
14. தாயுமானவர் பராபரக்கண்ணி

" தானு யெழுந்து தவத்தால் நிறைந்துநின் தற்சொருபத்
தேனு றெழுந்து திருவாய்ச் சுரந்தநற் றெள்ளமுதை
நானுரு நாத நபிதாண் மொழிந்துன்னை நாடிவந்தேன்
ஆனுறு மந்த மணமீந் தெனக்கரு ளாண்டவனே"

[ஞானப் புகழ்ச்சி 421 ]

## "ஞானப் புகழ்ச்சி"

### ஓர் ஒப்புமைக் கண்ணோட்டம்

நெல்லை, ந. சொக்கலிங்கம், எம். ஏ.
இந்துக்கல்லூரி, திருநெல்வேலி.

### நுழை வாயில்

குமரிக்கடல் அலையின் குளிர் தென்றல் காற்றின் தண்மையைப்போலக் குமரி மாவட்டத்துத் தக்கலையில் அடக்கமாகியுள்ள பீர்முகம்மது சாகிபு வலியுல்லா அவர்கள் அருளிச்செய்த அருள் ஞானப் பாடல்கள் ஞான அலைகளைப் பரப்புகின்றன.

'சந்தம் பொருந்திய பீருமுகம்மது சாகிபு' என்று செந்தமிழ்ச் செய்குத்தம்பி பாடிப் புகழ்வார். தக்கலை பீர்முகம்மது சாகிபு அவர்களின் ஞானப்பால், ஞானப்புகழ்ச்சி, ஞானமணி மாலை, ஞானக் குறம், ஞானரத்தினக் குறவஞ்சி, ஞானமுச்சுடர்ப் பதிகங்கள் இன்னபிற பாடல்களின் தொகுப்பே 'மெய்ஞ்ஞானத் திருப்பாடற் றிரட்டாகும்'. அருள்ஞானி பீர்முகம்மது அருளிச்செய்த ஞானரத்தினக் குறவஞ்சி பதினெண் சித்தர் பாடல்களுள் ஒன்றாகச் சேர்த்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அன்னாரின் திருப்பாடல்கள் ஞான நிலையில் பாடப்பெற்றவையாகும். அத்தொகுப்பில் அமையும் 'ஞானப்புகழ்ச்சி'யில் வரும் சில திருப்பாடல்களைச் சைவ சமய அருளாளர்களின் திருப்பாக்களுடன் ஒப்பிட்டுக் காண்பது உவகை தரும் செய்தியாகும். இங்கே ஓர் ஒப்புமைக் கண்ணோட்டத்தைச் செலுத்தி ஞானப்புகழ்ச்சியின் சிறப்பினை உணர்ந்து இன்புறுவோம்!

### நெஞ்சிற் குடியிருக்கும் நித்தன்

பீர்முகம்மது அவர்களின் 'ஞானப்புகழ்ச்சி'ப் பாடலில்,

"அஞ்சு மறியாமல் ஐபேருங் காணாமல்
நெஞ்சுதனி லேயிருக்கும் நித்தனே—உன்செயல்கொண்
டோதும் புகழ்ச்சியைநா னுரைப்பதற்கு நீயெனக்குன்
போதந் தருவாயே புரிந்து"

[ஞானப்புகழ்ச்சி, செய்: 2]

எனக் கூறித் துவங்குகின்றார். மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்தும் அறியாவாறு உள்ளத்துள் ஊடாடி நிற்கின்றான் இறைவன். அவனன்றி ஓரணுவும் அசையாது என்பார்கள். அவனருள் நமக்கிருக்குமென்றால் எல்லாம் ஈடேறும். அவன் திருப்புகழைப் பேசக்கூட அவனுதவி தேவை. எனவே, அதனைத் தந்துதவ அடிபணிந்து வேண்டுகின்றார் அவர். நம் நெஞ்சுக்

குள்ளே குடிகொண்டிருப்பவன் இறைவன்; அவனை வேண்டித் தொடங்குகின்றார் இத்திருப்புகழ்ச்சியை. இவ்வேண்டுதல் திருமொழியை,

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிவார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே!"

[திருமந்திரம்: 1823]

என்னும் திருமூலர் தரும் தண்டமிழ் மொழியுடன் எண்ணிப் பார்த்தல் வேண்டும். எல்லாப் பொருளையும் அவனே இயக்குகின்றான் என்பதே தக்கலையாரின் உட்கருத்தாகும். உன் அருளிருக்க உன்னைப் பாடப் புகுகின்றேன் என்பது,

"அவனருளாலே அவன் தாள் வணங்கி"

[திருவாசகம்–சிவபுராணம்: வரி 18]

நிற்கும் மணிவாசகப் பெருமானின் மாணிக்கத் தொடரோடு ஒப்பு நோக்கத் தக்கது.

## என் அளவு சற்றும் இரங்காமை ஏன்?

முன் செய்த தீவினையால் இவ்வுலகில் தோன்றிய மனிதன், பின்னும் இப்பூவுலகில் தோன்றாதிருக்க அவன் திருப்பேரையும், அவனுக்குகந்த திருத்தொண்டையும் இடையறாது செய்தல் வேண்டும். தக்கலையார் மெச்சுபுகழ் இறைவன் திருப்பேரை 'முதல்வா! முதல்வா!!' என நித்தமும் உரத்துக் கூறிப்பார்த்தார். ஆனால் ஆண்டவனின் திருச்செவியில் சென்று எட்டவில்லை. "அடியவர்க்கு இரங்கி அருளும் ஆண்டவன், என் வேண்டுதலை, என் அழைப்பினை இன்னுமா செவிமடுக்கவில்லை! பயன் இதுவோ? இன்னமும் என் அளவில் சற்றும் இரங்கா மனமோ இறைவா!" என்று கெஞ்சிக் கேட்கின்றார்.

"முன்னுமெனது தீவினையால் 'முதல்வா! முதல்வா!'
வென்று நித்தம்
உன்னும் பொழுதெல் லாமுறையிட் டோயாதடியே
னழுத சத்தம்
பன்னுமுயர்கா தேறாதோ? பரனே யெனக்கும் பயனிதுவோ
இன்னமடியே னளவுசற்று மிரங்காமனமோ
விறையோனே!"

[ஞானப்புகழ்ச்சி, செய்: 79]

என்பதே அன்னாரின் உரிமை வேட்கை. இறைவனின் திருத்தொண்டே செய்துவரும் தன் பொருட்டுச் சற்றும் இரங்கா

திருக்கும் ஆண்டவனை உரிமையுடன் கேட்கின்றார் தக்கலையார். இக்கருத்துடன் இராமலிங்க அடிகளாரின் அருட்பாவினையும் ஒப்பு நோக்குதல் வேண்டும். அப்பாடல் வருமாறு :

"தாயுந் தந்தையுந் தெய்வமுங் குருவுந்
தாங்கு கின்றதோர் தலைவனும் பொருளும்
ஆயு மின்பமும் அன்புமெய் யறிவும்
அனைத்து நீயென வாதரித் திருந்தேன்
ஏயு மென்னள விரக்கமொன் றிலையேல்
என்செய் வேனிதை யார்க்கெடுத் துரைப்பேன்
சேயு நின்னருள் நகையுறுங் கண்டாய்
தில்லை மன்றிடைத் திகழொளி விளக்கே!"

[திருஅருட்பா, இரண்டாம் திருமுறை திருப்புகழ்ச்சி: 2]

அருள்ஞானி பீர்முகம்மது, 'இன்னம் அடியேன் அளவு சற்றும் இரங்கா மனமோ இறைவனே' என்கின்றார். அருள்வள்ளலார், 'அனைத்தும் நீயென ஆதரித்திருந்தேன் ஏயும் என்னளவு இரக்கமொன்று இலையேல் என்செய்வேன்? இதை யார்க்கெடுத் துரைப்பேன்?' என்கின்றார். இவ்விரு அடியவர்களின் அருளிச் செயல்களிலும் இறைவனிடம் உரிமை பாராட்டும் பண்பு மேலோங்கி மேன்மையுறத் திகழ்வதனைக் காண்கின்றோம்.

## பழவடியார்களைப் பற்றி

இறைவனை வணங்கித் தொழுதுவரும் பழைய அடியவருடன் அவ்விறைவன் உடனிருந்து அருள்பாலிக்கின்றான். அவனருளுக் காகப் பன்னாட்கள் ஏங்கித் தவித்துக் கிடந்தமை குறித்துத் தக்கலை ஞானியார்,

"என்னாலறியப் பதம்விளைத்தா யானுமறியத் தேடுகின்றேன்
உன்னாலொன்றுங் குறைவில்லை யென்னுடையோனே
நின்னருட்கென்றே
பன்னாளுன்னைத் தொழுதேத்தும் பழையவடியா ருடன்கூட
என்னையகனே நீபுறப்பட்டிருந் தாயானு மிருந்தேனே!"

[ஞானப் புகழ்ச்சி, செய்: 83]

என்கிறார். திருப்பூவல்லியில், மணிவாசகப்பெருமான்,

'......................நம்மையும் ஓர் பொருட்படுத்துத்
தாயிற் பெரிதும் தயாஉடைய தம்பெருமான்
மாயப் பிறப்பறுத் தாண்டான்'

[திருவாசகம்—திருப்பூவல்லி, செய்: 3]

என்பது போல், பீர்முகம்மது அப்பா "என்னுலறியப் பதம் விளைத் தாய்" என்கிருர்.

சிவபெருமானின் சீர்பரவும் பெண்கள் மார்கழித் திங்கள் காலையில் எழுந்து நீராடச் சென்று நோன்பு நோற்பர். அவ்வாறு நீராடப்புகும் பெண்டிர் தங்கள் தோழியரையும் எழுப்புவர். அவர்கள், காலை மலர்ந்த பின்பும் துயில் கொண்டிருக்கும் பெண் ஒருத்தியை எழுப்பினர். அப்போது அப்பெண்,

"பத்துடையீர் ஈசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ"
[திருவாசகம்—திருவெம்பாவை : 3]

என்கின்றனள். இவ்வடிகளைப் பீர்முகம்மது அவர்களின் மேலைப் பாடலின் ஈற்றடிகளுடன் ஒப்பிட்டு எண்ணிப் பார்த்தல் தகும். பழைய அடியார்களைப் பற்றிய பேச்சு இவ்விரு அருளாளர்களின் திருப்பாடல்களிலும் பயின்று வருதல் காண்க.

## துணைசெய்ய வா தூயவனே

இம்மண்ணில் தோன்றிய மனிதன் தீவினையின் பயனுலே அல்லற்பட்டு அழுந்திச் சாகின்ருன். பாவங்கள் பற்றி வந்து மனிதனை எற்றித் துன்புறுத்தும். இப்படிப் பிறவிப்பிணியிலிருந்து விடுபடவும் பாவக்கடலிலிருந்து பிழைத்துய்யவும் இறைவனைத் துணை செய்தருள வேண்டுமென விழைந்தும் மனம் குழைந்தும் பணிந்தும் வேண்டுகின்ருர் தக்கலை அருள்ஞானியார். இதோ அவர் தம் அருட்பாடல் :

"கனைத்து வந்தெழுப்பும் பாவம் கடிதில்வந் தணுகாத் தன்மை
வினைத்தொழில் தனக்கா ளான வெறியனின் றீவி னையால்
அனைத்துமென் றுயர மாரு தழுதுநொந் தடியேன் மண்ணில்
உனைத்தொழு திரந்து கேட்பேன் உள்ளவா துணைசெய்
வாயே!"
[ஞானப் புகழ்ச்சி, செய் : 91]

இராமலிங்கரின் திருவுள்ளமும் திருவொற்றியப்பனைத் தொழு கின்றது. நிறைந்த துன்பங்கள், பெரும் பிணிகள் — இவற்ருல் தன் மனம் படாத்துன்பம் படுகின்றது; பஞ்சாகப் படும் துன்பத் தால் பரிதவிக்கின்றது. இப்படித் துன்புற்று நைந்துருகும் போது 'அஞ்சாதே' என்று நெஞ்சு சுக்கும் செஞ்சொல்லை இறைவன் கூறுவானேல் இச்சிற்றுயிர்க்கு உற்ற துணை ஆகு மன்ருே? இவ்வாறே இறைவனிடம் வடலூரார் உரிமையுடன் வேண்டுவார்.

"எஞ்சா விடரால் இரும்பிணியால் ஏங்கி மனம்
பஞ்சாக நொந்து பரதவிக்கும் நாயேனைச்
செஞ்சாலி யோங்குந் திருவொற்றி யப்பாநீ
அஞ்சாதே யென்றுன் அருள்கொடுத்தா லாகாதோ?"

[திருவருட்பா, இரண்டாந்திருமுறை, திருவருட்கு இரங்கல் : 2]

திருவருளுக்கு இரங்கும் அருளாளர்களின் அடிச்சுவட்டில் நாமும் சென்றால் நன்னிலை கிட்டும்.

## தீங்கினைப் பொறுப்பாய்; திருவருள் தருவாய்

இறைவன் முடிவொன்றும் இல்லான்; அநாதி என்று எல்லாச் சமயங்களும் ஏற்கின்றன. அவனுடைய ஆற்றல் அளவற்றது. தன்சிந்தனையை நன்கு அறிந்தவன் ஆண்டவன் என்பதனால் தான் செய்யும் தீங்குகளைப் பொறுப்பதும் உவந்து அருள் புரிவதும் அவன் கடமை. ஆண்டவனை நம்பி அவன் திருமுன் வருவார் கைவிடப்படார். ஆகவே, தக்கலை ஞானியாரும் இரகுமானை நம்பி, அவர் திருமுன் பணிந்து வேண்டுகின்றார்.

"அந்தமு முடிவுமணு காதவனே நீயென்
சிந்தனை யறிந்துமென்றன் தீங்குகள் பொறுப்பாய்
உன்றனை மிகவும் நம்பி யுன்திருமுன் வந்தேன்
என்றனிமை கண்டெனையீ டேற்றுறகு மானே!"

[ஞானப்புகழ்ச்சி: 95]

இத்திருப்பாடலை,

"அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்"

என்னும் பாடலில் வரும்,

"தப்போது நான்செயினும் நீபொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே"
[திருவருட்பா ஆறும்திருமுறை, வேண்டுகோள்: 1]

என்னும் வள்ளலாரின் வாய்மொழியுடன் ஒப்பிட்டு எண்ணி மகிழ்வோம்.

## நிறைவுரை

தக்கலை தந்த அருள்ஞானி பீர்முகம்மது சாகிபு அவர்கள் பிற சமயக் கருத்துக்களையும் தம்அருட் பாடல்களில் பயின்று வரப்பாடியுள்ளார். அன்னாரின் அரும்பாட்டுக்கள் தத்துவக் கொள்கலமாகவே துலங்குகிறது. அன்னாரின் திருப்பாடல்களைப் பிறசமய அருளாளர்களின் திருமொழிகளுடன் மிகுதியாக ஒப்பிட்டுப் பேச நிறைய வாய்ப்புள்ளது. இவ்வொப்புமைக் கண்ணோட்டம் வளர வளரத் தக்கலை ஞானியாரின் தத்துவங்கள் மக்கள் மன்றத்தில் நன்கு விரிந்து பரவும் என்பதுறுதி!

# ஆழ்ந்து நிற்கும் கவியுளம்

*பெரும்புலவர், பேராசிரியர் சி. நயினார்முகமது, எம். ஏ.*
*தமிழ்த்துறைத் தலைவர்*
*ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சி.*

உலக வாழ்வின் உட்பொருளை உணர்ந்து ஒளிபெற்ற உத்தம ஞானச் செல்வர் பலருளர். இத்தவஞானச் செல்வருள் நற்கலை மேவிய தற்கலைப் பீர்முகம்மது சாகிபு குறிப்பிடத்தக்கவர்கள். வீடுவிட்டு, விரும்பும் உறவினரை விட்டு, காடு சென்று, கந்த மூலங்களை உண்டு, கடுந் தவமியற்றினர்கள். தனித்திருந்து, பசித்திருந்து, விழித்திருந்து, 'நான் யார் என் உளமார் ஞானங்களார்' என்னும் தத்துவ விசாரணையில் ஈடுபட்டார்கள். பல்லுயிரும் பலவுலகும் படைத்தளிக்கும் பரம்பொருளை நினைந் துருகினர்கள். மாநபியின் நேர்வழியைப் போற்றினர்கள். மெய்ஞ்ஞானப் பேரொளியை ஏற்றினர்கள். தாம் பெற்ற இன்பத்தை வையகமும் பெற்று வாழ்ந்திட விழைந்தார்கள். தத்துவக் கடலில் மூழ்கியெடுத்த மெய்ஞ்ஞான முத்துக்களைப் பைந்தமிழ்ப் பாக்களாகத் தொடுத்தளித்துள்ளார்கள்; பதினெட்டாயிரம் பாநலம் கனிந்த பைந்தமிழ் முத்துக்கள் ஞான ஒளி வீசுகின்றன.

பீரப்பாவின் பேரொளி வெள்ளத்தில் ஞானப் புகழ்ச்சி எனும் கானத் தமிழ் நூல் பலரும் அறிந்ததாகும். பாரமார்த்திகப் பற்றுடையோர் பாடிப் பரவசமடைவர். கருணைக் கடலாகிய இறைவனிடம் என்புருகி நெஞ்சம் இளகிக் கரைந்து அருள் வேண்டும் உணர்ச்சிப் பெருக்காக அமைந்துள்ள 687 பாடல்கள் இதன் கண் உள்ளன. அவற்றுள் ஓரொளித் துளியை ஈண்டுக் காண்போம்.

பரமா நபியைப் படைத்திலை யாகில் படைப்பிலையென்
றுரமாய் மொழிந்தவென் னுத்தம னேயிவ் வுலகினில்யான்
மரமாகி லேன்மண்ணுங் கல்லாகி லேன்மனு வாக்கியென்னை
தரமாய் வரமருள் தந்தா ளெவர்க்கென்றுந் தானவனே.

எனும் கட்டளைக் கலித்துறையாப்பில் அமைந்துள்ள பாடல் மூன்று செய்திகளைக் கொண்டுள்ளது. முத்தமிழில் மூன்று சிறப்பிடம் பெறுவதன்றோ?

*1. பரமாநபி*

பொருள் சுரக்கும் செஞ்சொற்களைக் கொண்ட இப்பாடலின் முதல் சொல்லே முதல்வனைக் குறித்த முதல் தரமான சொல்லாகும்.

'பரம்'—இம் மூன்றெழுத்துச் சொல் கடவுள், மேலானது, திவ்வியம், மோட்சம், தகுதி, நிறைவு முதலிய பல பொருள் பயக்கும்.

'மா'—என்பது பெருமை, வலிமை, அழகு முதலிய பல பொருள்கள் தரும் உரிச் சொல்லாகும்.

'நபி'—எனும் அரபுச் சொல் வழிகாட்டி எனும் பொருள் கொண்டது.

இறைவன் அனுப்பிய மேலான திவ்வியமான மோட்சத்திற்கு வழிகாட்டும் தகுதியுள்ள நிறைவான நெறிதந்த பெருமையும் வலிமையும் கொண்ட அழகிய வழிகாட்டி எனப் 'பரமாநபி' எனும் மூன்று சொற்களாலமைந்த தொடர் உணர்த்துகின்றது.

இங்கு, இன்ப நபியின் இறுதி ஹஜ்ஜின்போது இறைவன், 'இன்று உமது சன்மார்க்கத்தைச் சம்பூரணமாக்கி என் அனுக்கிரகத்தைப் பூர்த்தி செய்துள்ளேன்' என்று கூறியது குறிப்பிடத் தக்கதாகும்.

உலகில் வழிகாட்டிகள் அனுப்பப்பெறாத சமூகம் இல்லை என்பது திருக்குர்ஆன் நவிலும் செய்தியாகும். 1,24,000 நபிமார்கள் அவ்வப்போது ஆங்காங்குவந்து வழிகாட்டியுள்ளனர் என்பது வழிவழியாக வழங்கிவரும் மரபுச்செய்தியாகும். இவருள் 313 பேர் முறுசலானவர். இவருள்ளும் வேதங்கள் அருளப் பெற்றோர் நால்வரே. இந்நால்வர் கொணர்ந்த வேதங்களுள்ளும் மனிதக்கரம்பட்டுத் திருத்தப்படாமல் புனிதமுடன் திகழ்வதும், வளவாழ்விற்குரிய நெறிகளை வரையறுத்துக் கூறுவதும் திருக்குர்ஆனேயாகும். எத்திக்கும் போற்றும் தித்திக்கும் இத் திருமறைக்குரிய நபி முழுநெறிகாட்டும் முகம்மது (ஸல்) அவர்களே யாவார்கள். அறிவியல், பொருளியல், சமூகவியல், அறவியல், அருளியல் முதலிய வாழ்வியல் அனைத்திலும் அரிய ஒழுக்க நெறிமுறைகளை வகுத்துத் தந்துள்ளார்கள்; வாழ்விலும் நடந்து வழிகாட்டியுள்ளார்கள். தந்தை, தாய் இழந்த தனயராய், சிறந்த குடும்பத் தலைவராய், வாய்மை வணிகராய், தவசீலராய்,

அரிய சமயக்குரவராய், தர்ம நாதராய், மாட்சிதரும் ஆட்சித் தலைவராய், அரசியல் தந்திரியாய், அறப்போர்த் தலைவராய், தொண்டர்க்குத் தொண்டராய், தொண்டர்தம் தலைவராய் வாழ்வாங்கு வாழ்ந்து வையகத்து மக்களுக்கு அழகிய முன்மாதிரியாகத் திகழ்ந்துள்ளார்கள். எனவேதான் பிரித்தானியக் கலைக் களஞ்சியமும் 'தீர்க்கதரிசிகள்—மதச் சீர்திருத்தவாதிகள் அணிவரிலும் மிகவும் வெற்றி வாய்ந்தவர்கள்' என்று மாநபிக்குப் புகழ்மாலை சூட்டுகிறது. 'உலகை உய்விக்க இந்தக் குர்ஆனின் சிறப்பான சட்டதிட்டங்களால்தான் முடியும்' என்றும் 'நான் அந்த அற்புத மனிதரின் (அண்ணல் நபியின்) வாழ்க்கை வரலாற்றைப் படித்தேன். அவர் மனித இனத்தை அழிவிலிருந்து காப்பாற்றப் போந்தவர் என்பது என் கருத்து' என்றும் பேரறிஞர் பெர்னார்ட்ஷா பாராட்டுரை வழங்குகின்றார். மேல்நாடுகள் அந்த காரத்தில் ஆழ்ந்திருந்த சமயத்தில் 'கீழ்நாட்டில் மிகவும் ஒளிமிக்க விண்மீன் ஒன்று உதயமாகி உலகத்துக்கு அறிவுச் சுடரையும் ஆற்றலையும் அளித்துள்ளது' என்றும் 'இறைவன் ஒருவன்தான் என்பதை எள்ளளவும் குழப்பமின்றி உறுதியாக ஊர்ஜிதப்படுத்தியது இஸ்லாம் நமக்குச் செய்தபணியாகும். மக்களிடையே சகோதர சமத்துவத்தை வாழ்க்கையில் நடத்திக்காட்டியது இரண்டாவது பணி' என்றும் பாரதத்தின் தந்தை காந்தியடிகள் கூறுகிறார்.

'சகோதரத்துவப் பாடத்தை, சுதந்திர உணர்வை, சமத்துவப் பண்பாட்டைப்போதித்து இவ்வுலகைப் பொலிவுறச்செய்த பெருமைக்குரிய முகம்மதுவின் திருநாமம் உலகம் உள்ளளவும் ஒலித்துக்கொண்டே இருக்கட்டும்' என்று இந்தியக் கவிக்குயில் சரோஜினி நாயுடு இயம்புகிறார்.

ஏகத்துவம், சமத்துவம், சகோதரத்துவம், மதுவிலக்கு, பெண்ணுரிமை, ஜனநாயகம் முதலியன இன்றைய உலக மக்கள் எடுக்கும் முன்னேற்ற முழக்கங்களாகும். செயல்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றுள் சிலவற்றில் பேரளவு வெற்றி; சிலவற்றில் ஓரளவே வெற்றி; சிலவற்றிலோ தோல்விதான். எடுத்துக்காட்டாக மதுவிலக்கு. ஆனால் அண்ணல் நபிகளோ அனைத்திலும் அமோக வெற்றிபெற்றுள்ளார்கள்.

மாக்களாய் வதிந்தவர்களை மக்களாக்குவதற்கு மாநிலத்து வந்துதித்த வழிகாட்டிகளுக்கு அம்மக்கள் இழைத்த கொடுமைகளுக்கோரளவில்லை. அம்மனிதப் புனிதர்கள் வேதனை தாளாமல் அவர்தம் மக்களை வெறுத்துரைத்துள்ளார்கள். அதனால் அறியாமையில் அவதிப்படுத்திய அம்மக்கள் அழிந்து போயினர். நூஹ் நபி

மனம் நொந்ததால் அவர்களை அல்லல்படுத்திய மக்கள் வெள்ளப் பிரளயத்தில் மூழ்கிப் போயினர். மூசா நபியின் மனவேதனையால் பிர்ஔன் கூட்டத்தார் நீல் நதிக்கு இரையாயினர். ஹூத் நபியின் சாபத்தால் ஆதுக்கூட்டத்தார் புயலால் அழிந்தனர். லூத் நபியடைந்த வேதனையால் மக்கள் மண் மாரிக்குப் பலியாயினர். சாலிஹ் நபியின் சாபத்தால் சமூத் கூட்டத்தார் நிலத்தால் விழுங்கப்பட்டனர். ஆனால் கருணை நபியோ தாயிப் நகரில் காபிர்கள் குருதி கொட்டக் கொட்டக் காலில் கல்லால் எறிந்து துன்புறுத்திய சமயம் வானவர் வந்து அக்கொடியோரை அழித்து விட அனுமதி கோரியபோது 'வேண்டாம்! வேண்டாம்! அகிலத்திற்கு அருட்கொடையாக அனுப்பப்பட்டுள்ளேன்; அவர்களுக்குத் தீங்கு தர விரும்பவில்லை. அவர்களின் சந்ததியரேனும் நன்னெறியில் நடப்பார்கள்' என்று கூறித் தடுத்து, இறைவனிடம் அவர்களுக்காக இறைஞ்சினார்கள்.

இன்னொரு சமயத்தில் அமர்க்களத்தில் பகைவர் அம்புகள் பாய்ந்து அண்ணல் நபி சாய்ந்து விட்டார்கள்; அப்போது உடனிருந்த நாயகத் தோழர் பகைவர்களைச் சபிக்கும்படி வேண்டினார். ஆனால் அகிலத்திற்கோர் அருட்கொடையாக வந்துதித்த அண்ணல் நபியோ 'நான் சபிப்பதற்காக அனுப்பப் படவில்லை' என்று கூறி மறுத்துவிட்டார்கள். இம்மட்டோ!

நானிலத்து மக்கட்கு நன்னெறியை எடுத்துரைத்ததற்காக கொடுமனக் குறைஷிகள் கொடுமைப் படுத்தினார்கள். ஏசினர்; பேசினர்; நடக்கும் பாதையில் கல்லையும் முள்ளையும் பரப்பினர். நடந்து செல்லும்போது குப்பையை அள்ளிக் கொட்டினர். கழுத்திலே கச்சிட்டு இறுக்கி முறுக்கினர். ஒட்டகையின் அழுகிய தசையையும் குடலையும் சாணத்தையும் வாரி வீசினர். கொலை வாள் எடுத்தனர். படை கொண்டு தாக்கினர். தோழர்களையும் சித்திரவதை செய்தனர். கத்தியின்றி, இரத்தமின்றி மக்காவை வெற்றி கொண்டபோது மாநபி அம்மாபாதகரையெல்லாம் மன்னித்து விட்டார்கள். பல்லுக்குப் பல், இரத்தத்திற்கு இரத்தம் எனப் பழிவாங்கத் துடிக்கும் இவ்வுலகத்தில் இஃதோர் அற்புதமாகும். இவ்வியத்தகு காட்சிகளெல்லாம் ஞானச் செல்வரின் மனத்திரையிலே விரிந்திருக்க வேண்டும்.

இவ்வாறு செயற்கரிய செய்த செம்மலை, சமுதாயச் சிற்பியை, வாழ்வியல் தந்த வள்ளலிறசூலை 'பரமா நபி' என ரத்தினச் சுருக்கமாகக் குறிப்பிடுகிறார்கள், பரஞ்ஞானச் செல்வர் பீரப்பா.

உயர் தமிழ்க் காப்பியம் செய்த உமறுப்புலவரும்

'வரிசை நபியே முகம்மதுவே
வானோர்க்கரசே புவிக்கரசே
உரிய தனியோன் முதற்றூதே' என்றும்

'குரிசில் நன்னபி' என்றும்

'ஒளிமா முகம்மது' என்றும்

'நபிகளுக்கரசாய் வந்த நாயகம்' என்றும்

'பூரணக் கிருபைக் கடலெனும் நபி' என்றும் பாடிக் களிக்கின்றார்.

'நீத மறைதேர் நபிகள் அரசு என்ன
உலகில் நின்றாரே' என பனி அகுமது மரைக்காயரும்,

'வள்ளல் இறசூல்' எனக் குணங்குடியாரும்,

''வள்ளல் முகம்மது நபியிறசூல்' என சேகனுப்புலவரும்,

'நபிகளுக்கெல்லாம் நாதர்' என பதுறுதீன் புலவரும்,

'நலமண்டும் அறிவுரைக்கும் மாநபியை' எனப் புரையாற்று மீரான்கனி அண்ணாவியாரும்,

'நபி வேந்தர்' என குஞ்சுமூசுப் புலவரும்

'மாநபியை மேநபியை மாமணத்துப் பூநபியை
கோபிநயைக் காநபியை கோதறுத்த பாநபியை
கோமானைப் பூமானைக் கொள்கையிலே சீமானை
ஈமானைத் துலக்கவரும் எம்மானைப் பெம்மானை
பாலும் தெளிதேனும் பாகும் பழச் சுவையும்
நாலும் தோற்றுவிட நாமென்றும் பாடுவோம்'.

என்று இறையருட் கவிமணி அப்துல் கபூரும் நாவினிக்க, நெஞ்சினிக்க, பாவினிக்கப் பாடி மகிழ்கின்றனர்.

ஆதிமனிதர் தந்தை ஆதம் (அலை) அவர்களை இறைவன் படைத்தபோது அறுஷ் மஜீதின் வாயில் மேல் 'லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுற் றசூலுல்லாஹ்' எனும் மூல மந்திரம் ஒளியெழுத்துக்களால் அணி செய்வதைக்கண்டு இறைவன் பெயருடன் இணைந்திருக்கும் பெயருக்குரியார் யாரென வினவினார் கள் என்றும் அதற்கு, 'ஆதமே முகம்மது மட்டும் இல்லையாயின் உம்மையோ, உலகையோ, வானையோ படைத்திருக்க மாட்டேன்' என இறைவன் பதிலளித்தான் என்றும் *திப்ரானிக் கபீரால்*

அறிகிறோம். நாயக மொழியும் ஆன்றோர் உரைகளும் இதற்கு அரண்செய்கின்றன. செந்தமிழ்ச் சீரு தந்த விந்தைக்கவிஞர் உமறுப்புலவரும்,

'கலைமறை முகம்மதென்னும் காரணமில்லை யாகில்
உலகு விண்ணிரவி திங்கள் ஒளி உடுக்கணம்சொர்க்கம்
மலைகடல் நதிபாதாளம் வானவர் முதலாயும்மை
நிலையுறப் படைப்பதில்லை எனஇறை நிகழ்த்தினனே'

எனக் கலைநலந்திகழக் கூறுகின்றார். வேதபுராணம் பாடிய நூஹ் வலியும்,

'நாமங் கொண்டு அறுஷும் குறுஷும்
நரகும் சொர்க்கமும் வான்புவியும்
கோமான் அமரரும் ஹூறு லீனும்
குத்ரத்தெனும் கடல்மனுவும் ஜின்னும்
ஆம மனுவெதாம் உயிர் எவையும்
அஃதுக் கஃதாகப் படைப்புண்டான
ஏமம் எழுவகைத் தோற்ற மெல்லாம்
இறசூல் நபியைக் கொண்டானது'

எனப் பாடி மகிழ்கின்றார்கள்.

'அவர்களின்றேல் இப்பிரபஞ்சமே படைக்கப்பட்டிருக்காது' என்று பூஸ்ரி இமாமும் கசீதத்துல் புர்தாவில் கசிந்துருகிப் பாடுகிறார்கள்.

இக்கவிஞர் பெருமக்களின் கருத்துக்களையெல்லாம் பிழிந்து தருவதுடன் அவற்றிற்கு மெருகுமேற்றுகிறார்கள் நம் மெய்ஞ்ஞானச்செல்வர். 'பரமா நபியைப் படைத்திலை யாகில் படைப்பிலையென உரமாய் உரைத்த உத்தமனே' என்பதில் 'பெருமை பொருந்திய இறைமாநபியைப் படைக்கவில்லை யென்றால் படைப்பணைத்தும் படைக்கப்பட்டிருக்கமாட்டா என்று உறுதியாக (இறைவன்) உரைத்தான்' எனும் பொருள் வெளிப்படையானது. ஆனால் ஊன்றி நோக்கின் 'பரமா நபியைப் படைத்திலையாகில் படைப்பிலை எனும் கருத்து மனித இதயத்திற்கும் புனித வாழ்விற்கும் உரமாக அமையும், எனும் பொருளும் தொனிக்கக் காணலாம்.

## 2. உயர் படைப்பு

பாரகத்தில் ஓரறிவுகொண்ட புல்பூண்டு முதல் ஆறறிவு கொண்ட மனிதன்வரைப் பல கோடிக்கணக்கான படைப்புக்கள் உள்ளன. தாவரவகையில்தான் எத்தனை, ஊர்வனவற்றிலும் நகர்வனவற்றிலும் பறப்பனவற்றிலும் நடப்பனவற்றிலும்தான் எத்தனை, எத்தனை? உயிரற்றவற்றின் எண்ணிக்கையை உரைக்

கத்தான் முடியுமா? இத்தனையிலும் உயர்ந்த படைப்பு மனிதனு வான். இறைவனும், மனிதனைத் தன் பிரதிநிதியாக இவ்வுலகில் படைத்திருப்பதாகக் கூறுகிறான்.

இழிந்த படைப்பாக இல்லாமல் உயர்ந்த படைப்பாக — அதிலும் — பரமாநபியின் உம்மத்தாகப் படைக்கப்பட்டுள்ளதை நன்றிப் பெருக்குடன் நவில்கின்றார்கள் நம் மெய்ஞ்ஞானச் செல்வர். 'ஓரறிவு கொண்ட உயிராகிய மரமாகவோ, உயிரற்ற மண்ணாகவோ, அதனினும் முந்தியதாகக் கருதப்படும் குழைவற்ற கல்லாகவோ படைக்காமல் ஆறறிவு கொண்ட உயர்ந்த உயிராகிய மனிதனாகப் படைத்துள்ளாய்' என்று குறிப்பிடுகின்றார்கள். இம் மூன்றுமே அசையாப் பொருட்கள் என்பதும் ஈண்டுக் குறிப்பிடத் தக்கது.

'புல்மா நெளிபுழுப் புள்விலங்(கு) எனும்
பன்மைய துயர்செயும் பவங்கள் தப்பியே
வன்மைகொள் நிலமிசை மக்கள் ஆகுதல்
நன்மைகொள் உயிர்க்கலால் அரிது நந்தியே'

எனும் பிரபுலிங்க லீலைப் பாடலும்,

'உற்ற யோனிகன் தம்மில் உற்பவியாமல்
மானுட உற்பவம்
பெற்று வாழுதல் அரிது' எனும் வில்லி பாரதப் பாடலும்,

'அரிதரிது மானிட ராதல் அரிது' எனத் தொடங்கும் ஒளவையாரின் பாடலும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கன.

## 3. இறையருள்

உலகப் பிறப்புக்களுள் உயர்ந்த மனிதப் பிறப்பெடுத்தால் போதுமா?

"தேடிச் சோறு நிதம் தின்று — பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி — மனம்
வாடித் துன்ப மிக உழன்று — பிறர்
வாடச் செயல்கள் பல புரிந்து — நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி — கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும் — பல
வேடிக்கை மனிதர்" இவ்வையத்தில் நிறைந்துளரே.

ஆதலின் மருள் நீக்கி, மெய்ஞ்ஞானம் தேக்கி, அருள் பொழிந் திடக் கருணையந் தடங்கடலாகிய இறைவனிடம்,

'தரமாய் வருமருள் தந்தாள் எவர்க்கென்றும் தானவனே' என்று நெக்குருகி வேண்டுகின்றார்கள்.

'எவர்க்கும் என்றும் கொடையளிக்கும் கோமானே! என்னைத் தரமான படைப்பாகிய மனிதனுக்கினாய்; தரமான வரங்களை வாரி வழங்கி அருள்தந்தாள்வாயாக!' என்று வேண்டுவதில் அருள் மாரி பொழிந்து உயிர்களைத் தழைக்கச் செய்யும் இறைவனது இனிய இயல்பு உணர்த்தப்படுகின்றது.

'கல்லார்க்கும், கற்றவர்க்கும், காணார்க்கும்,
காண்பவர்க்கும், வல்லார்க்கும், மாட்டார்க்கும்,
மதியார்க்கும், மதிப்பவர்க்கும், நல்லார்க்கும்,
பொல்லார்க்கும், நரர்களுக்கும், சுரர்களுக்கும்'

என்றும் நல்லருள் புரிந்து நலந்தரும் இறைவனது அருட்பண்பு 'எவர்க்கும் என்றும் தானவனே' என்பதில் பளிச்சிடுகின்றது. இறைவனால் என்றும் ஆளப்படுதல்வேண்டும் எனும் வேட்கை 'யான் எனது எனும்' செருக்கொழிந்த நிலையையும் — தன்னை யழித்துத் தலைவனும் இறைவனை தன்னுள் அமைத்துக் கொண்ட தன்மையையும் — புலப்படுத்துகின்றது.

இவ்வாறு இவ்வினிய பாடல் தித்திக்கும் முக்கனிச் சாறாக ஒப்பரிய முப்பெருங் கருத்துக்களைக் கொண்டு மாபேரின்பம் பயக்கின்றது. தூண்டப் பிரகாசிக்கும் ஒளிச்சுடராக, தோண்டச் சுரக்கும் மணற்கேணியாக, சேய் உணச் சுரக்கும் தாய் மடியாக எண்ண எண்ணச் சுரக்கும் பொருள் வளம் கொண்டுள்ளது.

———

"ஹக்கா மனித்த ருளத்தே யுறைந்ததென் காரணத்தால்
நக்கா தினித்த நறுமாம் பழத்தை நவின்றெவரும்
சிக்கா தருந்தக் கடனுகுந் தீங்கிலை தேறுமனச்
சக்கா னதைவிட் டுனைக்காண நின்றருள் தானவனே"

[ஞானப் புகழ்ச்சி, 420]

# பீர் முகம்மது அப்பா அவர்களின் பாடற்றிறம்

பேராசிரியர் எல். ஆர். சுகராசன், எம். ஏ.
தமிழ்த்துறைத் தலைவர்,
ஜி. டி. என். கலைக்கல்லூரி,
திண்டுக்கல்-4.

"நாயனே நானுனை நல்கி யிரக்கிறேன்
பேயனுன் செய்யும் பிழைபொறுத் தருள்கவே
காயநெஞ் சுருகிக்கண் கலங்கிப் புகழுவேன்
தாயிலு மன்பனே நீதா னிரங்குகவே"

—ஞானப்புகழ்ச்சி (252-ம் பாடல்)

மலர்தலை உலகம் முழுவதும் எல்லாம்வல்ல இறைவனின் படைப்பு. இப்பூவுலகில் கோடிக்கணக்கான உயிர் இனங்கள் வாழ்கின்றன. யாவற்றினும் மனித இனமே உயர்ந்தது. ஏனெனில், மனிதன் சிந்திக்கும், சிரிக்கும் ஆற்றல் படைத்தவன். அவனுடைய சிந்தனை ஆற்றல்மிக்கது, அளவிடற்கரியது. அறிவியல் முன்னேற்றத்தால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள எல்லாம் அவனுடைய சிந்தனையின் உருவெளித் தோற்றங்களே. கொடிய காட்டு விலங்குகளையும் ஆட்டிப்படைக்கும் ஆண்மை பெற்று விளங்குகிருன். வலிமையுடைய புலியையும் எலியென மதிக்கிருன். குன்றன்ன களிற்றையும் கன்றென்ன அடக்குகிருன். நீர்மேல் நடக்கிருன். மீன்போல் நீந்துகிருன். வானில் பறக்கிருன். வாசியை நாசியில் நிறுத்துகிருன். உணவைத் துறக்கிருன். மதியையும் மதியால் மிதித்து அதன்மீது ஏறு நடை போடுகிருன்.

இவ்வளவு வலிமை படைத்த மனிதன் என்ருே ஒருநாள் இவ்வுலகைவிட்டே மறைந்துவிடுகிருன். வறுமை, பசி, தாகம், பிணி, மூப்பு, இறப்பு முதலிய தாங்கொணுத் துயரங்களுக்கு ஆளாகிருன். உடல், இளமை, செல்வம், மனைவி, மக்கள், சுற்றம், நட்பு யாவற்றையும் சடுதியில் இழந்துவிடுகிருன். இவ்வுலகில் தோன்றிய யாவும் நிலையாமை உடையவை என்பதை உணர்ந்த மனிதன் மரணத்திற்குப்பின் என்னுவோம் என்பதையும் ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கிருன். தனக்கும் மரணமுண்டு என்று அறியும் போது மனந்தளர்ந்து போகிருன்; கலங்கிக் கையற்றுப் போகிருன். அப்பொழுதுதான் தன்னைவிட மேலான ஒரு சக்தி, இறைவன்

இருப்பதை நினைக்கிறான். பழுத்துவீழும் கனி எப்படியும் தரையை அடையுமாறு போல அவனும் மரணத்திற்குப்பின் இறைவனை அடையவேண்டுமென்று விழைகிறான்.

பசிகொண்ட பச்சிளங்குழந்தை அழுகிறது. வாழ்க்கைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தாய் உழைப்பே குறிக்கோளாகக் கொண்டிருக்கிறாள். பசி அதிகரிக்கவே குழந்தை கத்துகிறது; கதறுகிறது. இரக்க உணர்வுள்ள தாய் குழந்தையின் அழுகையை மேலும் சகித்துக்கொள்ளாதவளாய் அலுவல்களை அப்படியே போட்டுவிட்டு ஓடோடி வந்து அதனை அன்போடு வாரியெடுத்து, மார்போடணைத்து, உச்சி மோந்து, முத்தமாரி பொழிந்து, தாலாட்டிச் சீராட்டிப் பாலமுதம் ஊட்டுகிறாள். கதறிக் கதறி அழுத குழந்தை தாய்ப்பாலை அருந்தியபின் வயிறு நிறைந்து சிரித்து மகிழ்கிறது; தாயின் முகம்பார்த்துத் துள்ளி விளையாடுகிறது. அழுதபிள்ளை பால்குடித்து மகிழ்ச்சிக் கடலில் நீந்திக் களிக்கிறது.

அதுபோல, ஆசைக்கடலிலும், பாசக்கடலிலும், உலகப் பற்றிலும் மூழ்கிச் சிக்கித் தடுமாறும் மனிதன் இறைவனை நினைந்து, கசிந்து கண்ணீர் மல்கி அழுதால், இறைவனும் இரக்கங் கொண்டு அழுது துடிக்கும் மனிதனைத் தாய்போல் அரவணைத்துக் கொள்கிறான் என்பது சமயக் கோட்பாடு; மாணிக்கவாசகரும், தொண்டரடிப்பொடியும், பீர்முகம்மது அப்பாவும் கண்ட உண்மையாகும்.

மனிதன் பிறக்கிறான்; வளர்கிறான்; வாழ்கிறான்; இவ்வுலக வாழ்க்கையைப் பெரிதாக எண்ணித் தருக்கித் திரிகிறான். இறைவனை இமைப்பொழுதும் நினைப்பதில்லை. பின் மூப்பு, பிணி, வறுமை முதலியவற்றிற்கு இலக்காகி மாண்டுபோகிறான். மனித உடலின் இழிவையும், யாக்கை நிலையாமையையும் விளக்கச் சீத்தலைச் சாத்தனார் தம் காப்பியமான மணிமேகலையில் மிகவும் அழகுபடக் கீழ்க்கண்ட வரிகளை எழுதியுள்ளார். பளிக்கறை புக்க காதையில், சுதமதி என்பவள் இளவரசன் உதயகுமரனின் மனம் திருந்தும்படி அறிவுரை அல்லது அறவுரை கூறுவதாக அமைந்துள்ள அவ்வரிகளைக் கண்ணுறும் ஒவ்வொருவருக்கும் தம் உடலின்மீது வெறுப்பும் இறைவன்மீது விருப்பும் ஏற்படும்.

"வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கின் புலால் புறத்திடுவது
மூப்புவிளிவு டையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றுஅடங்கு அரவின் செற்றச் சேர்க்கை
அவலம் கவலை கையாறு அழுங்கல்
கவலா உள்ளம் தன்பால் உடையது
மக்கள் யாக்கை இது"

இவ்வளவு இழிவுடையது மனித உடல் என்பதை யாவரும் அறிந்தும் அறியாதார் போலக் கவலையின்றி வாழ்கின்றனர்; வாணாளை வீணாளாக்குகின்றனர். அவர்களுக்கு இரக்கம் காட்டுவதைத் தவிர வேறுவழியில்லை.

நாயன்மார்களும், ஆழ்வார்களும், சமணர்களும், பௌத்தர்களும், கிறித்தவர்களும், இசுலாமியர்களும் ஆகிய எல்லாச் சமயத்தாரும் பிறப்பு இறப்பு பற்றிய கொள்கைகளில் எவ்வித மாறுபாடும் கொண்டிலர்.

இவ்வுலகில் தோன்றிய ஒவ்வொருவரும் சிறிய உயிர்களுக்கும் எவ்விதத் துன்பமும் தாராது, நன்மை செய்யாவிட்டாலும் தீமை விளைக்காமல், ஒற்றுமையும், அன்பும், இரக்கமும் கொண்டு வாழ்ந்தால் மரணத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. பொய், கொலை, களவு, கள், காமம் ஆகிய ஐந்து தீவினைகளைச் செய்யாது விட்டொழிக்க வேண்டும். ஆருயிர்கட்கெல்லாம் அன்பு செய்தல் வேண்டும். ஆசை என்னும் பாசத்தை விட்டுவிடவேண்டும். இவ்வளவே மனிதனிடம் இறைவன் வேண்டுவது. நல்வினை தீவினைகளின் பயனை நன்கு அறிந்து நல்வினைகளை ஆற்றித் தீவினைகளை அகற்றி மனிதன் வாழ்ந்தால் உறுதியாக, பற்றற்ற இறைவனைப் பற்றிக்கோடல் இயலும். இதனை அறியாதவர்களும் உணராதவர்களும் மூப்பு எய்தி மரணம் ஏற்படும்பொழுது அழுது கதறுகின்றனர்; கண்ணீர் பெருக்குகின்றனர்.

"பயனில் மூப்பிற் பல் சான்றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லதுசெய்தல் ஆற்றீ ராயினும்
அல்லவை செய்தல் ஓம்புமின்"

என்ற நரிவெரூஉத்தலையார் இயற்றிய 195 ஆம் புறநானூற்றுப் பாடல் இவ்விடத்து ஒப்புநோக்கத் தக்கது. எப்படியாவது பிறவித் துன்பத்தை அறுத்துக் கொண்டு இறைவன் திருவடி

நிழலை அடையவேண்டும் என்று விரும்புகிறார்கள். இறைவனை அடைவோமா எனவும் ஏங்கி நைகின்றனர். ஆனால் ஒல்லும் வகையான் அறவினை செய்யாமல் இருந்துவிடுகின்றனர்.

எண்ணெய்க் குடத்தைக் கீழே போட்டவனும் அழுகிறான்; தண்ணீர்க் குடத்தைக் கீழே போட்டவனும் அழுகிறான், இழப்பை எண்ணிப் பார்த்தால் இருவருக்கும் சமமான இழப்பே ஆகும். ஆனால் பேரிழப்பு அடைந்தவன் எண்ணெய்க் குடத்தைக் கீழே போட்டவன்தான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஏனெனில் அவனுடைய இழப்பில் பேருழைப்பும் அருமுயற்சியும் அடங்கிக்கிடக்கின்றது. ஆனால் தண்ணீர்க் குடத்தைப் போட்டவன் இழப்பில் அதிக உழைப்பு இன்மையும் முயற்சிக் குறைவும் உள்ளதை யாவரும் அறிவர். இதிலிருந்து முன்னவனுக்காக யாவரும் இரக்கங் காட்டுவர் என்பது விளங்கும். இறைவனும், நல்வினைகளாற்றித் தன்னை இடைவிடாது நினைப்பவர்களுக்கு இரக்கங்காட்டி அவர்களை ஏற்றுக் கொள்கிறார்.

தவறுவது மனித இயல்பு. தவறு செய்ததற்காக வருந்துதலும், மன்னிப்புக் கோருதலும் வேண்டும். திருந்துவதும் திருத்திக் கொள்வதும் மனித இயல்பே. இறைவன் யார்? எப்படி இருப்பான்? இறைவன் கருப்பா, சிவப்பா? எங்கே இருக்கிறான் இறைவன்? என் கண்முன் காட்டு! என்று கேட்கத் தூண்டுகிறது நாத்திக மனம். இறைவன்எங்கும் இருக்கிறான் என்று கூறுகிறது ஆத்திக மனம். இறுதி எய்தியபோது நாத்திகன் ஆத்திகத்தை உறுதியாக ஏற்றுக்கொள்கிறான் என்பது நாம் காணும் உண்மையாகும்.

எனவே தான் நம் முன்னோர்களான மாணிக்கவாசகரும், தாயுமானவரும், இராமலிங்கரும், தொண்டரடிப்பொடியும் இறைவனை அடையத் துடியாய்த் துடித்தனர்; ஆடினர்; பாடினர்; பக்திப் பாமலைகளும், பூமாலைகளும் தொடுத்தனர். இறைவனை ஏற்றிப் போற்றிப் புகழ்ந்தனர். தாம் செய்த தவறுகள், தெரிந்தும் தெரியாமலும் செய்திருப்பினும் அவற்றைப் பொருட்படுத்தாமல் தம்மை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினர். நாய் போலவும் பேய் போலவும் கொடியவனாகவும் நடந்து கொண்டதை உணர்ந்து வருந்தித் தமக்கு அருள் புரியும்படி வேண்டினர். கண்களைக் குளமாக்கி, மனத்தை ஒரு நிலைப்படுத்தி, நெஞ்சுருகிக் கசிந்து கசிந்து ஞானப் பாடல்கள் பாடினர்.

இறைவன்மீது உருக்கமான பாடல்கள் இயற்றுவதில் மாணிக்கவாசகருக்கு நிகர் அவரே 'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்று ஞானப்பழங்கள் முழங்குவர்.

அவர் தில்லையில் இயற்றிய திருக்கோத்தும்பி என்னும் பகுதியில் வரும் 12-வது பாடல் பீர்முகம்மது அப்பா அவர்களின் ஞானப் புகழ்ச்சிப் பாடலோடு ஒப்பிட்டு உணரத்தக்கது.

"நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேன துள்ளப் பிழைபொறுக்கும் பெருமையினைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளுந்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ"

திருநெல்வேலி மாவட்டம் தென்காசியில் தோன்றிக் குமரி மாவட்டம் தக்கலை என்னும் பதியில் வாழ்ந்து மறைந்துபோன மெய்ஞ்ஞான மேதை பீர்முகம்மது அப்பா அவர்கள் இறைவன் மீது ஞானப்புகழ்ச்சிப் பாடல்கள் இயற்றியுள்ளார். மக்களுக்கு இருளகற்றி ஒளி காட்டியுதவுவது விளக்கு. அதுபோல் அஞ்ஞானப் படுகுழியில் வீழ்ந்து உழல்வோர் மெய்ஞ்ஞானம் பெற்று ஆத்மநெறி செல்ல வழிகாட்டுபவை மாமேதைகளின் இறைப்பாடல்களான ஞானவிளக்குகளாகும். இந்த வகையில் அப்பா அவர்களின் பாடல்களில் தப்பாது தனிச்சிறப்புப் பெற்றுத் திகழ்வது ஞானப் புகழ்ச்சியாகும். இப்பாடல்கள் கன்னெஞ்சர்களை யும் மென்னெஞ்சர்களாக்கி உருகவைக்கும் தன்மை உடையவை.

பிள்ளை கொடியவனுயிருந்து பிழைகள் செய்தாலும் தன் தவறுணர்ந்து திருந்தி வரும்போது தாய் அவனைத் தழுவிக்கொள் கிருள். அதைப்போல் தவறு செய்த தன்னைக் கீழான நாயாகவும் வெறுக்கத் தக்க பேயாகவும் தாழ்த்திக்கூறி இறைவனை வாழ்த்தி இரந்து வேண்டுகிருர் பீர்முகம்மது அப்பா அவர்கள். "நாயனே நானுனை நல்கியிரக்கிறேன்; பேயனுன் செய்யும் பிழைகள் பொறுத்தருள்கவே" என்ற பாடலின் முன்னிரண்டு வரிகளையும் படிக்கும்போது நம் மனம் உருகி இரக்க உணர்ச்சி மேலிடுவதை அறியலாம். அன்பில் உயர்ந்தது தாயன்பு; தாயன்பிலும் சிறந்தது இறையன்பு. இறையன்பில் திளைத்தவர்கள் தாயன்பை யும் மறப்பர். பீர்முகம்மது அப்பா அவர்கள் இறையன்பை, இறை யருளைப் பெறத்துடிக்கும் துடிப்பைப் பாடலின் பின்னிரண்டு அடிகளில் பெய்துள்ளார். "காயநெஞ்சுருகிக் கண்கலங்கிப் புகழுவேன்; தாயிலு மன்பனே நீதா னிரங்குகவே"

கி. பி. 17-ஆம் நூற்றுண்டு சமய எழுச்சிக் காலமாகும். அக்காலத் தமிழகத்தில் தோன்றி வாழ்ந்த மெய்ஞ்ஞான மேதை பீர்முகம்மது அப்பா அவர்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்வைத் தமிழ்மரபுக்கு ஏற்ப நெஞ்சம் நெகிழ்ந்து உருகி வேண்டியிரக்கிருர்.

இராமலிங்க அடிகள், "அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும்" என்று இறைவனை வேண்டுதல் போல,

"அழுதால் உன்னைப் பெறலாமே" என்று மாணிக்கவாசகர் கூறுவதுபோல, "கொடுத்துங் கொளல்வேண்டும்" என்பது போல, "கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு ஆட் செய்ம்மின்" என்பது போலப் பீர்முகம்மது அப்பா அவர்களும் இறைவன்மீது பக்திப் பாமாலைகள் தொடுத்துத் தன்னையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறார்.

தமிழில் அருளிச்செய் பாடல்களுக்கு அளவே இல்லை. ஊரிருந்தும், காணியிருந்தும், உறவிருந்தும், தனக்கு யாரும் இல்லை என்று கூறி எல்லாம் இறைவனே என்கிறார் தொண்டரடிப் பொடியாழ்வார். ஏனென்றால் எல்லாம் இறக்கும்பொழுது உடன் வாராதவை என்பதை உணர்ந்த அவர் கீழ்க்கண்டவாறு பாடியுள்ளார்.

"ஊரிலேன் காணியில்லை உறவும்மற் றொருவரில்லை
பாரில்நின் பாதமூலம் பற்றிலேன் பரமமூர்த்தி
காரொளி வண்ணனே கண்ணனே கதறுகின்றேன்
யாருளர் களைகண் அம்மா அரங்கமா நகருளானே"

பீர்முகம்மது அப்பா அவர்கள் பிறப்பால் முஸ்லிம்; அவர் வாழ்ந்தது தமிழகம், பேசியது தமிழ்மொழி, பழகியது பைந்தமிழ்ப் பாவலர்களோடு, பயின்றதும் பக்திப் பாமாலைகள். எனவே அவர் களுடைய ஞானப் புகழ்ச்சிப் பாடலில் தமிழ் மணம், தமிழ் மரபு, தமிழ் உணர்வு, தமிழ் உயிர்ப்பு முதலியவற்றினைக் காணலாம்.

வாழ்க பீர்முகம்மது அப்பா அவர்களின் புகழ்.

---

## இறை வணக்கம்

" பொதுவாக நம்முடைய வணக்கம் இறைவனைப் புகழ்வதாகவே அமைய வேண்டும். ஏனெனில் நமக்கு நன்மை எது என்பதை இறைவனே நன்றாக அறிந்தவன்

— சாக்ரடீஸ்

# உனைப்போ லொருவருண்டோ இறைவா!

திருவை அப்துர் ரஹ்மான், எம். ஏ.,
ஹாஜி கருத்த இராவுத்தர் கவ்தியாக் கல்லூரி,
உத்தமபாளையம்.

அறிவுப் பெருங்கடல், ஆன்மீக மலையருவி. தேன்பாயும் கவிதைகளால் 'தீன்'பாடி நிற்கும் தெவிட்டாத கவிவாணர். இருளோட்டும் எழிற்சுடர். மருளோட்டும் மாமருந்து. ஏற்றிவைத்த மணிவிளக்கு. மார்க்கத் தத்துவங்களைத் தாங்கி நின்று மணம் பரப்பும் பூக்காடு. கவிதை நெடுஞ்சாலையில் நிழல்தரும் மரங்கள் ஏராளம். பயணம் செய்யும் போது பன்னீர்ப் பூக்கள் பட்டொளி வீசும். மறைதந்த போதனைகள் மேவிநிற்கும் சாதனைகள். அத்தனையும் முத்துக்கள்.

தென்காசி நன்னாட்டில் சிறு மலுக்கர் பாலராய்த் தோன்றி பக்தி மணஞ்சுமந்து தக்கலைப் பொன்னாட்டில் தவசீலராய் வாழும் மாமேதை மகான் ஷெய்கு பீர்முஹம்மது சாஹிபு வலியுல்லாஹ் (ரலி) அவர்கள் கவிதை வான்தந்த களங்கமற்ற வெண்ணிலா ஆவார்கள். பாடிய வாயெல்லாம் மணக்கப் பைந்தமிழ்ப் பாடல்களைப் பக்தித் தேனில் குழைத்தெடுத்த பலாச்சுளையாகத் தருகின்றார்கள். தொட்ட இடமெல்லாம் திருகுர்ஆனின் கருத்துக்கள் துலங்கக் காணலாம். கண்பட்ட இடமெல்லாம் கருணை நபிகளாரின் கனிவாய் மொழிதந்த உண்மைகள் மின்னக் காணலாம். தீன்வழி காணும் வானமுதின் வற்றாத கவிதை மழை!

பீரப்பா அவர்கள் பாமலர்களைத் தொடுத்துத் தந்த மாலைகள் பல. அத்தனையும் சிந்தைகவர் சொல்லழகின் சிகரங்கள். விந்தைநிறை வேதாந்த விளக்கங்கள். செவி ஆறுக சிந்தைக் களனுகும் சித்தாந்த முத்திரைகள். மோனவழித் திறவு கோலாய் அமையும் 'ஞானப் புகழ்ச்சி', அழகுக்கு அழகூட்டும் அற்புதமான தீன்விருந்து. அழகிய கருத்தோடு இழைந்து செல்லும் அசைகளும் தளைகளும் ஏற்படுத்திக் கொண்ட உயிரோட்ட மிக்க உறவு இசைநயத்தைக் கொட்டி நம்மை இன்ப லயத்தில் இணைத்து விடுகின்றது.

'ஆறுறுக்கப்பால்' எனும் தூய்மையான தத்துவ அடிப்படையின் தொடக்கம் சீரான வாழ்வுக்கு நேரான பாதையாக அமைந்து விடுகின்றது. வேறுரு மொப்பில்லா இறைவனைப் புகழந் தேத்தும் வெண்பாவாக மலர்ந்து 'அறுஹமர் றுஹிமீன்' என்ற

இறுதி அடியுடன் ஞானப்புகழ்ச்சி நிறைவு பெறுகின்றது என்ப தனை விட்டுத் தொடக்கமாகவே அமைந்து மீண்டும் மீண்டும் பாடத் தூண்டுகிறது என்பதுவே சாலப் பொருந்தும். தாங்கி நிற்கும் கருத்துக்களால் தங்கமெனமின்னும் பாடல்கள் பல. எதனை எடுப் பது எதனைப் புகழ்வது என்பது இயலாத ஒன்றே. அனைத்துப் பாடல்களும் தங்கத் தட்டிலே கொட்டிக் கிடக்கும் வைரங்கள். இஸ்லாமிய இலக்கிய வானின் இணையற்ற தாரகைகள். விரிப்பின் அகன்று தொகுப்பின் எஞ்சுமாதலால் ஒரு வைரத்தைத் தனியாக எடுத்து வெள்ளோட்டமிடுவோம்.

''தனைத்தேறுங் காயஞ் சுழலுமெண் ணுவினை
தான்தொலைந்தால்
தினைப்போது மிங்கிருக் காதுகண் டாய்சிரந்
தாள்பணிந்தே
நினைப்போரை மேவி நினையாரை நீங்கி நிரம்பிநின்றாய்
உனைப்போ லொருவருண் டோவிறை வாவெனக்
குற்றவரே''

கலித்துறை யாப்பில் அமைத்துக் காட்டி இந்நான்கு அடி களிலும் மனிதனின் மனோநிலையினையும், இறைவனின் ஏற்றத்தை யும் அழகுறப் பாடும் அப்பா அவர்களின் ஞானத் தெளிவினையும் மோனமேம்பாட்டினையும் விளக்குவதென்பது எளிதல்ல. எனினும் முயன்று பார்ப்போம்.

'தனைத் தேறுங் காயம்' என்ற சொற்களிலே உலகமே அடங்கி விடுகின்றது. மனிதனின் எண்ணமும் செயலும் சுழலும் வேகத்தை, சுயநலச் சூதினை எவ்வளவு அற்புதமாக, நாசூக்காக, நாகரிகமாகச் சுட்டிக் காட்டுகிறார்கள்! 'காயமே இது பொய்யடா, வெறுங் காற்றடைத்த பையடா', 'தூக்கத்தில் விடுகின்ற மூச்சு அது சுழி மாறிப் போனாலும் போச்சு' என்பன போன்ற சிந்தனை களைச் சித்தர்கள் தந்திருப்பினும் நமது வித்தகர் எடுத்தாளும் 'காயம்'—உடம்பின் தத்துவம் அவற்றைவிடச் சற்று வேறுபட்ட தாகவும் அதே நேரத்தில் வேகம் நிறைந்ததாகவும் அமைந்து விடுகின்றது.

காலையில் கண்விழிக்கும் மனிதன் கண்ணுறக்கம் கொள்ளும் வரை ஆடுகிறான் ஓடுகிறான் கூடுகிறான் தேடுகிறான். ஏன்? எதற்காக? தனது வயிற்றை நிரப்பிக் கொள்வதற்காக. தன்னை வளர்த்துக் கொள்வதற்காக. உடலைத் தேற்றிக் கொள்வதே உலகில் வந்ததன் குறிக்கோள் என்று குறுமதி படைத்தோர் குதிக்கிறார்கள். தேவைகளை முழுமையாக்கி நெஞ்சை நிறைவு படுத்திடத் தன்னையே தேற்றிக் கொள்ளும் நிலை. உண்பதற்காக

வாழ்வது வாழ்வல்ல. இலட்சியப் பாதையில் இனிய பயணத்தினை மேற்கொண்டு ஏற்றமிக்கதொரு எழிலார்ந்த வாழ்க்கையை ஏந்திச்சிறந்திடவே உண்ண வேண்டும். 'தனைத்தேறுங்காயம்'— தன்னைத்தானே தேற்றிக் கொள்ள முனையும் மனிதன், என்ற இக் கருத்தில் அப்பா அவர்கள் விளக்கிக் காட்டும் கருத்துக்கள் ஏராளம். உந்தி நிற்கும் உடம்பின் ஆசை, அதன் காரணமாக அமையும் உலக ஆசை—இவற்றின் கூட்டு மொத்தமே சுயநலம் என்பதனை இலைமறை காயாக இனிதுற விளக்குகிறார்கள்.

தன்னைத் தேற்றிக் கொண்டிருக்கின்ற காயம் சுழலும். எத்தனையோ விதமான செயல்களிலே உழலும். சுழலும் எண்ணு வினை! இதுதான் நடக்கும், அது இப்படித்தான் நடக்கும் என்று யாரும் அறுதியிட்டு உறுதி கூறிவிட முடியாது. நாம் நினைப்பது ஒன்று நடப்பது ஒன்று. காயம் எதற்காகச் சுழலவேண்டும். எதற் காகப் பல வேலைகளில் ஈடுபடவேண்டும்? தன்னைத் தேற்றிக் கொள்ள என்று நமக்குத் தெளிவான விடை கிடைக்கின்றது. ஆனால் அந்த வினைகளின் தன்மைகள் விந்தை மிக்கவை. எதிர் காலத்தைப் பற்றிய இனிய கனவுகளைக் காணலாமே தவிர அதனை நினைவாக்கும் ஆற்றல் நிறைபொருளாய் மறைபொருளாய் நிற்கும் இறைவனுக்கே உரியது. 'சுழலும் எண்ணுவினை' என்ற கருத்தை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் கொண்டுவந்து கோடிட்டுக் காட்டு வோமேயானால் - மனிதனைச் சூழ்ந்துள்ள எத்தனையோ விதமான, நினைத்துப் பார்க்க முடியாத வினைகள்—என்று கூறலாம்.

'தான் தொலைந்தால்' — மனிதன் அவற்றை விட்டும் நீங்கி விட்டால், அல்லது அவற்றின்மீது ஆர்வம் கொள்ளாமல் இருந்து விட்டால்! எவற்றின்மீது? தனைத் தேறுங்காயத்தின் மீதும், சுழலு கின்ற எண்ணு வினைகளின் மீதும் என்று கொள்ளவேண்டும். தொடர்ந்துவரும் வினைகளைத் தொலைத்துவிட, பெரு முயற்சியும் புலனடக்கமும் இதயத் தெளிவும் ஏகனின் நினைவும் வேண்டும். காணும் இவ்வுலகம் நிலையற்ற ஒரு வழிப் போக்குச் சாலையில் அமைந்துள்ள சத்திரம், நீண்டு நிலைபெறக் கூடியதல்ல என்ற நினைவு நிலைத்திடவேண்டும். ஞானிகளும் மேதைகளும் இறை நேயச் செல்வர்களும் உலகை வென்றதால் தம்மைவென்றார்கள்; தானவனை அணுகினார்கள். ஆகவே 'தொலைந்தால்' என்ற கருத்தில் மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை ஆகிய மூவாசைகளையும் மனத்தைவிட்டும் அறுத்துவிட்டால் என்ற அழகான ஆழமான பொருளைத் தேர்வு செய்யலாம்.

பற்றற்ற வாழ்வினைப் பற்றிக்கொள்ளும்போது 'தினைப்போதும் இங்கிருக்காது' காணலாம். உடலையும் உள்ளத்தையும் கட்டுப் படுத்தித் தூய்தான தியாக வாழ்வினை, நேர்மையான இறைவழியை

மேற்கொள்வோமேயானால் ஒரு சிறிதும் இங்கிருக்க மாட்டோம். 'இங்கிருக்காது கண்டாய்' என்று அப்பா அவர்கள் கூறும் கருத்தின் ஆழம் எல்லைக்குட்பட்டதல்ல. உடலென்ற கூட்டில் உறைந்திருப்பது ஆத்மா. ஆத்ம சிந்தனைகள் ஆண்டவன் நினைவிலும், மரணம், மறுமை பற்றிய சிந்தனைகளிலும் எப்போதும் ஊறிக் கிடக்கும்போது, உடல் என்ற கூடு மட்டுமே உருவமாக உலகில் உலவுமே தவிர ஆத்மா இவ்வுலகப் பற்றை விட்டும் அப்பாற்பட்டு நிற்கும். ஆத்மா இன்றேல் உடலுக்கு மகிமையில்லை. அந்த ஆத்மா உடலை நேசித்தால்—ஆத்மாவுக்குச் சிறப்பில்லை. ஆத்மா இறைநேயம் காண முயலும்போது 'தனைத் தேறுங் காயத்'திற்கும், 'சுழலும் எண்ணு வினைகளுக்கும்' வேலையில்லை. அவ்வாறு தெய்வீகம் தோய்ந்த தூய்மையான நிலையினை அடையும்போது 'நாம்' என்ற ஆத்மா உலக இச்சையை விட்டும் உயர்வான இறைப் பற்றைப் பெற்று மிளிரத் தொடங்கிவிடும். இங்கிருக்காத நிலை என்பது உலகப் பற்றற்ற ஒப்பற்ற நிலை என்றே பொருள் கொள்வது சாலப் பொருந்தும்.

தன்னை வென்றால் தானவனைக் காணலாம். அவன் 'நினைப்போரை மேவி' நெஞ்சில் நிறைந்து விடுகின்றான். 'நினைப்போரை மேவி' நிற்பதே இறைவனின் ஈடிணையற்ற எழிலார்ந்த பண்பு. இறைவன் ஒருவன்; இணையற்றவன்; துணையற்றவன்; 'உலகெலாம் படைத்து உயர்வுறக் காக்கும் புலமையோன். முடிவு நாளதனின் முழுமுதல் அரசன். ஆறே நாட்களில் விண்மண்ணை ஆக்கியவன். அர்ஷின்மீது ஆட்சியை நிறுவியன். நிலத்தின் வித்தை, வானமழையைக் கூர்ந்தே நோக்குபவன்.' அந்த அல்லாஹ் அல்லால் வணக்கத்திற்குரிய வேறு நாயனில்லை என்னும் உறுதிப்பாட்டினை நினைப்போரை அந்த வல்லோன் மேவுகின்றான். அவனையே நாடி அடைக்கலம் தேடுவோரின் கண்ணுகவும், கையாகவும் மாறிவிடுகின்றான். ஓரளவு அவனை நினைத்தால், பேரளவு அவன் நினைக்கின்றான். அழைத்தவுடன் நம்மோடு ஐக்கியமாகும் அன்பாளன். நபி நூஹ் (அலை) அவர்கள் இறைவனை நினைத்ததால் பெருவெள்ளத்தில்நின்றும் காப்பாற்றப் பட்டார்கள். நபி இஸ்மாயில் (அலை) அவர்களை அறுத்திட இயலாமல் கூர்மையான கத்தி அச்சமுற்ற நிலையும், பெருமானர் (ஸல்) அவர்கள் 'தௌர்' குகையில் எதிரிகளிடமிருந்து காப்பாற்றப்பட்ட நிலையும் இறைவனை நினைத்ததால் அவன் மேவிநின்ற தன்மைகள் என நமது வரலாறுகள் சுட்டிக்காட்டுகின்றன.

தனைத்தேறுங்காயத்தினையும் சுழலும் எண்ணுவினைகளையும் தொலைத்த ஒரு மேம்பட்ட வாழ்க்கையினை நடாத்தி இவ்வுலக வாழ்வினை நீக்கி மறுமையின் நிலையான வாழ்க்கையைத் தேடும்

போது வல்லோனும் அந்த அல்லாஹ் நினைப்போரை யெல்லாம் மேவி நிறைவான நற்பதவியைத் தருகின்றான்.

வஞ்சகமற்ற மறைப்பொருளாய், மனுவார்க்கு அருந்துணையாய், நெஞ்சினகத்துள் இருந்து, உலகெங்கும் நிறைந்து ஒளி வானவனாய் ஒப்பற்றுநிற்கும் உத்தமனாய் இறையோன் 'நினையாரைநீங்கி' விடுகின்றான். மறப்போரை அவன் மறந்து விடுகின்றான். நன்றி மறந்த மனிதன் ஆண்டவனின் அருட் கொடைகளுக்கு அருகதை அற்றவனாக மாறிவிடுகின்றான். இம்மையில் நீங்குவதுமட்டுமல்ல, மறுமையிலும் அவன் நற் பதவியைவிட்டும் நீக்கிவிடுகின்றான். இக்கருத்துக்களை விளக்கும் மாமேதை பீரப்பா அவர்கள் அடுத்த அடியில் 'நிரம்பி நின்றாய்' என்று பொருத்தமான புகழாரம் சூட்டுகின்றார்கள்.

உலகில் இருசாரார் இருக்கின்றனர். இறைவனை எண்ணுபவர். மறந்தவர். ஆனால் இருசாராருக்கும் அவன் மழையைப் பொழி கின்றான், உணவூட்டுகின்றான். அவனின் அருளின்றேல் 'நினையாரும்' வாழ்ந்திட இயலாது. பாதுகாப்பான வாழ்க்கையை இருவருமே பெறுகின்றனர். அருளாளன் அல்லவா அவன்! நினையாரை நீங்கிடினும் நீக்கமற நிறைந்தவன். கல்லினுள் தேரையும் அவன் கருணையால்தான் வாழ்கின்றது.

'உனைப் போலொரு வருண்டோ இறைவா எனக்கு உற்றவரே' — என்று இப்பாடலின் நான்காவது அடியினை அப்பா அவர்கள் அமைத்துக் காட்டும்போது இறைவனின் தனித் தன்மையினையும், அவனின்மீது கவிஞருக்குள்ள ஈடுபாட்டினையும் எழிலுற விளக்குகிறார்கள். அவனைப்போல் யாருமில்லை. ஈடிணை யற்றவன். தந்தையிலி, தாரமிலி, மைந்தரிலி, அன்னையிலி, அந்தமிலியாய் ஆன அர்ரஹ்மான் அவனைப்போல் யாருண்டு? யாருமில்லான்!

ஞானப் புகழ்ச்சியின் பாடல்கள் அனைத்தும் மோன மெய்ப் பொருளைப் புகழ்ந்தேத்தும் விளக்கங்களாக அமைந்துள்ளன. 'உற்றுருமில்லை உறவாருமில்லை, இங்குன்னையன்றி மற்றுரு மென்னை வளர்ப்பதுண்டோ' என்று வினா எழுப்பும் வலியுல்லா அவர்கள் இறைவனைத் தனக்கு உற்றவன், உறவானவன், அனைத்தும் அவனே என்று கூறுகின்றார்கள். தொடர்ந்துவரும் பாடல்கள் அத்தனையும் வல்லோனின் வளமார் பண்புகளைப் பிரதி பலிக்கும் கண்ணாடியாகவே அமைந்துள்ளன.

நான்கு வரிப்பாடலிலேயே நாம் ஆழம் கண்டுவிட இயலாத அளவுக்கு மெய்ஞ்ஞானக் கருத்துக்களையும் தத்துவ முத்துக்களை யும் மிகுதத்துக்காட்டும் அப்பா அவர்களின் புலமையினை, இறையன் பின் இனிய பண்பினை யாரால்தான் எடைபோட்டுக் காட்டிட வியலும்.

'நினைப்போரைமேவி நினையாரை நீங்கிநிரம்பி நின்றாய்
உனைப்போ லொருவருண் டோவிறை வாவெனக்குற்றவரே'

# "தாயினும் மேலானவன்"

கே. கமருன் னிஸா, எம். ஏ., பி. டி.,
முதல்வர், உஸ்வத்துன் ஹஸனு ஓரியண்டல்
அராபிக் மகளிர் உயர்நிலைப் பள்ளி,
பள்ளப்பட்டி.

இறைவனின் ஆற்றலோ இணையற்றது. அவன் படைப்புக்களோ அளப்பரியன. அவனுடைய ஆற்றலில் அணுவளவு பெற்றுவிட்ட மனிதன் அவன் படைப்புக்களையும் அவற்றின் தோற்றத்தையும், வையகத்தின் இயக்கத்தையும் வளர்ச்சியையும், மறைபொருளின் நுணுக்கத்தையும் தன் நுண்ணறிவால் ஆராய முற்படுகிறான். மனிதனுடைய ஆய்வு விண்ணைத் தொடுகிறது. மண்ணைத் துளைக்கிறது. வியனுறு வானத்தை வளைக்கிறது. ஆழ்கடலின் அடித்தலத்தை அளந்து காட்டுகிறது. ஒவ்வொன்றையும் தேடித் துருவித் தெரிந்து கொள்ளும் ஆர்வத் துடிப்புள்ள இவன் ஒரு விஞ்ஞானி!

எத்துணை அறிவுச் செறிவுள்ள விஞ்ஞானியாக இருப்பினும் மனிதன் தன் இயலாமையை உணரவே செய்கிறான். கற்றது கையளவே என்பதை ஒப்புக் கொள்கிறான். நியூட்டன் என்ற அறிவியலறிஞன் தனது கண்டுபிடிப்புக்களைப் பற்றிக் கூறும் பொழுது "கடற்கரையிலே சிதறிக் கிடக்கும் சிப்பிகளைத் தான் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பொறுக்கி எடுத்துள்ளேனே தவிர என்னால் கண்டு எடுக்கப்படாத ஆழ்கடல் முத்துக்கள் எவ்வளவோ உள்ளன" என அடக்கமாகவும் அழகாகவும் தன்னறிவின் எல்லையை வரையறுத்துக் காட்டுகின்றான். இன்னொருவர் சார்பியலில் (Relativity Theory) சிறப்புப் பட்டம் பெற்ற ஈடிலா மேதை ஈன்ஸ்டீன், தன் ஆய்வுக் கூடத்திலிருந்து ஒரு நாள் வெளியேறும் பொழுது தோட்டத்து வண்ண ரோஜா மலரொன்று செவ்விதழ் விரித்து, சிங்காரப் புன்னகை சிந்தி அவனை வரவேற்கிறது. இதனைக் கண்ட ஈன்ஸ்டீனின் இதயம் இன்பத்தால் நிறைகிறது. "நான் எவ்வளவு அறிந்தும் என்ன? உன்னைப் போன்று சின்னஞ் சிறு மலரையோ, நீ பரப்பும் நறுமணத்தையோ என்னால் படைக்க முடியவில்லையே!" என ஏக்கத்துடன் புலம்புகிறான். அதாவது இறையாற்றலில் ஒரு துளியளவும்கூட மனித ஆற்றலால் எட்டிப் பிடிக்க வியலா நிலையை எண்ணி வியக்கின்றான்.

ஆனால் மெய்ஞ்ஞானியரோ படைப்பெல்லாம் படைத்தவனை, அணுவுக்கணுவானவனை, தன்னிகரில்லாதவனை, வல்லவருக்கு எல்லாம் வல்லவனைக் காணும் வேட்கையிலே அலையாய் அலைகின்றனர். அவர்களின் அறிவும் ஆய்வும் மூலத்தை ஒட்டியே அதனைச் சுற்றியே வட்டமிடுகின்றன. ஆதியின் முன் அகிலம் அவர்களுக்கு ஒரு துரும்பெனத் தோன்றுகிறது. உலகை மறந்து, இல்லறத்தின் இனிய சுகபோகங்களைத் துறந்து புறக்கண்ணை மூடி அகக் கண்ணைத் திறந்து காடுகளிலும், மேடுகளிலும் திரிந்து கடவுளைத் தேடுகிறார்கள். பசித்திருந்து, தனித்திருந்து, விழித்திருந்து அருள்வடிவானவனை அணுக விழைகின்றனர். அவர்கள் மேற்கொள்ளும் அனைத்து நெறிமுறைகளும் வழி வகைகளும் இறைவனின் பேராற்றலை வெளிப்படுத்துகின்றன. மெய்ஞ்ஞான எல்லைக்கோடு மனித மனத்தைத் திகைப்பில் ஆழ்த்துகிறது இதனையே 'கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்'' எனச் சொல்லத் தொடங்கினர்.

இவ்வுண்மையை, மெய்ஞ்ஞான சொரூபராகிய தக்கலை பீர் முகம்மது வலியுல்லாஹ் அவர்கள்

"உற்றுலகிலுனை யாரும் அழன்றழன்று தேடினும்

எத்தலத்தி லிருப்பவன் என்றெவர்க்கும் தெரியாதவனே"

என்று பாடுவாராயினர்.

இறைவனைப் பாடிப் பரவும் ஞானியர் அனைவரும் அவனது அருட் கொடைகளையும், இனிய பண்புகளையும் அவன்மீது ஏற்றிப் போற்றுவது மரபு. இறை நேசச் செல்வர்கள் இறைவனின் ஒப்புவமையற்ற செப்பரிய அருட் பண்புகளில் உயர்வான உவப்பான அன்பும் அரவணைப்பும் நிறைந்த தாய்மையை அவனிடத்தில் காணுகின்றனர். எட்டி உதைக்கும் சேயையும் கட்டியணைக்கும் தாய்மைக்கு உலகில் உவமை காணமுடியாதன்றோ? அருளும் அரிய பண்புகளும் தாய்மையில் கரைந்துவிடுகின்றன.

"அம்மையே அப்பா ஒப்பிலாமணியே" எனவும், "தாயாகித் தந்தையுமாய்" எனவும், "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து" எனவும் தாயன்பை முன்னிலைப்படுத்தி நம் தமிழ்ப் பாவாணர் புகழுவாராயினர். நற்குணத்தின் தாயகம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களோ, "தாயின் காலடிகளையே புவனத்தின் சுவன"மாக்கினர். இறைவனின் அன்பினை விளக்கும் பொழுது, "இலட்சோப லட்சம் தாய்மார்களின் அன்பைக்காட்டிலும் மேலான அன்புடையோன் அல்லாஹ்" என்று நவின்றனர். இவற்றையெல்லாம் சிந்தையில் தேக்கி மோனத்திலமர்ந்து ஞானப்புகழ் பாடுகிறார் பீரப்பா.

ஞானப் புகழ்ச்சியில் வரும் எடுப்பு வெண்பாக்கள் மூன்றனுள் ஒன்றில் தாய்மை பற்றிய கருத்து இழையோடுகிறது.

"அற்பஜல மக்கினியால் அழியாமல் காவல்செய்து
கெற்பமதில் வைத்துருவாய்க் கிளர்ந்ததற்பின் — மெய்ப்புடனே
தாரணியி லாக்கிஎன்னைத் தான்வளர்த்துக் காத்தவொரு
காரணனே நீ இதற்குக் காப்பு"

எனத்தன் பிறப்பின் வரலாற்றை மனக்கண்முன் கொண்டு வருகிறார். கரு உருவான காலத்திலிருந்து அதனை அழியாமல் பாதுகாத்து வேண்டிய உணவும் உணர்வும் கொடுத்து வளர்த்தவர்கள் அன்னையும் அன்னையிலும் மேலான ஆண்டவனும் என்பதை யாரே மறுக்க வியலும்?

பெண்ணைப் பேயென்றும் பிசாசு என்றும் பழிதூற்றும் வழிகேடர்களின் வரிசையிலே சேராமல் காணும் பெண்களையெல்லாம் தாரமாகக் கருதும் தரங்கெட்ட பித்தர்களின் மத்தியிலே பெண்ணைத் "தாய்போல் நினைத்துத் தவமியற்றிய" சித்தர்களும் மஸ்தான்களும் இருக்கத்தான் செய்தார்கள். மேலும் இஸ்லாமிய மார்க்கத்திலே இறைமையும், ஞானநெறியும் ஆண் பெண் இரு பாலாருக்கும் பொதுவானவை. பெண்களுக்கு மெய்ஞ்ஞானப் பாதை அடைத்துவைக்கப்படவில்லை. அரசு துறந்த ஆத்மஞானி இப்ருஹிம் இப்னு அத்ஹம் அவர்களால் அடையமுடியாத ஆன்மீகப் படித்தரத்தை ராபியத்துல் பஸரிய்யா அம்மையார் பெறவில்லையா என்ன?

எனவேதான் தாய்மைப் பண்புகளை இறைவன் மேலேற்றி ஒரு பாடலில் பீர்முகம்மதர் பாடுகின்ற பாங்கு சுவைப்புக்கு மட்டுமல்லாமல் சிந்தைக்கும் விருந்தாக அமைகிறது. இஸ்லாம் தந்தையைக்காட்டிலும் தாய்க்கு முதலிடம் தருமாறு மக்களுக்குக்கூறும் அறிவுரையும் நினைவுக்குவருகிறது. இங்கு இறைவனின் தாய்மைப் பண்பை, அன்பின் செறிவைப் புகழுகிறாரேயன்றித் தனித்தவனும் இறைவனை — அல்வாஹித் — தாயாக உருவகிக்கவில்லை.

"அல்லா நீ யென்னைப் படைத்துலகில்
அன்னையிலும் அன்பாய் உவந்த கோவே"

"அன்னை தன் உதிரத்தைச் செலுத்தி
வெந்திடாமல் வைத்தெனைப் படைத்துயிர் தரும்வேந்தே"

"ஆதிபரம் பொருளே அழிவில்லானே
அன்னையிலும் அன்பான பெரியோனே"

"தாயினும் விரைந்து வந்தருள் ஈடேறவே"

“தாயினும் உண்மையாகவே கதிதந்தருள் என்றுமாதியே” என்றெல்லாம் மாதாவின் மாண்பினை நினைவுகூர்ந்து அதே நேரத்தில் தாய்க்கு நிகரானவன் என்று சொல்ல விரும்பாமல் தவிக்கும் அன்பினை வெளிப்படுத்துகிறார்.

தக்கார் புகழும் தக்கலையார், தன்னை ஈன்று புறந்தந்த நற்றாயாய் மட்டிலும் இறைவனைக் காணவில்லை. தமது உயிர்க்கும் உயிரானவராம் இறைதூதர் முகம்மது நபி (ஸல்) அவர்கள் பீர்முகம்மதுவின் உள்ளத்தின் உள்ளே வாழுகின்றார். நெஞ்சிலே நிறைந்த நபிமணி (ஸல்) அவர்களை இவ்வுலகிற்கு அருட்கொடையாக அனுப்பிவைத்தவன் வல்லோன் அல்லாஹ். உலகையும், அனைத்துப் பொருட்களையும் இறைவன் படைப்பதற்குக் காரணமாக இருந்தவர் கலைமறை முகம்மதரன்றோ?

“கலைமறை முகம்ம தென்னும் காரணமில்லையாகில்
உலகு விண் இரவு திங்கள் ஒளிருடுக்கணம் சுவர்க்கம்
அலைகடல் நதி பாதாளம் வானவர் முதலாய்”

அனைத்தையும் நிலையுறப் படைத்திருக்க மாட்டான் இறைவன் என்பதையும் எண்ணிப்பார்க்கின்றார். தானும், தான் வாழும் இவ்வையகமும் உண்டாவதற்கு இறைவன் அஹ்மதுவானவர்மீது கொண்டிருந்த அளப்பரும் அன்பே காரணமாகிறது. எனவே, தக்கலை பீர்முகம்மது அப்பா அவர்கள் இறைவனைப் புகழும்போது தன்னைப் பெற்ற தாயென்று காண்பதைக்காட்டிலும் அகிலமனைத்திற்கும் அருட்கொடையாய் வந்துதித்த அண்ணல் முகம்மது அவர்களை அன்புத் தாயாக உவமித்து, அவரைப் படைத்தளித்த அருள்வடிவமான தாய்மையிலே இறைவனைக் காண்பதிலே பெருமை கொள்கிறார். அனைத்துலக மக்களுக்கும் அழகிய முன்மாதிரியாக இறைவனால் அனுப்பி யருளப்பட்ட உத்தமத் திருநபி (ஸல்) அவர்கள்மீது புலவர் கொண்டிருக்கும் அன்பின் எல்லையைத் தொட்டுக்காட்டுவதோடு, தாயன்பும்கூட இறையன்பிற்கு ஈடாகுமோ என்று வியக்கும் தவிப்பையும் விளக்கி நிற்கும் புதுமையைக் காண்கிறோம். இறைவனிடம் இரட்டிப்பான தாய்மை அன்பினைத் தொலை நோக்கோடு கலைக்கண்ணோடு காணும் பாங்கினை அறிந்து மகிழாமல் இருக்கமுடியவில்லை. இதோ ஞானப் புகழ்ச்சியிலே இடம்பெற்றுள்ள தாயின் புகழ்ச்சிப்பாடல்:

“உடலுற்ற தாயாய், நம்முள்ளுயிராய்
உள்ளுயிர்க்கு உட்சிறந்து
அடலுற்ற தாயான நல்லஹ்மது வாமவர்க்கன்புறுங்
கடலுற்ற தாயுன்னைக் காண்பதற்கு எம்மிரு கண்ணிலுற்ற
படலத்தை நீக்கிவிடு அல்லா உன்சித்தம் என் பாக்கியமே”

புலவரின் இந்நோக்கு புதுமை நோக்கு. அருவுருவாய் நிற்கும் இறைவனைக் காணும் பெரு நோக்கு. தனித்தவனும் இறைவனைத் தன்னிகரில்லாத் தூதர் நபி முகம்மது (ஸல்) அவர்களின் தாயாகக் கற்பிக்கும் தனி நோக்கு. உண்மையான இஸ்லாமிய நெஞ்சங்களிலே அரும்பும் எழில்நோக்கு. அறியாமை எனும் இருட்படலத்தை அகற்றிவிடும் அருள்நோக்கு. இணையில்லா இறையோனை இணைவைக்காமல், ஆனால் இமை மூடி இதயத்தில் நிலைநாட்டும் கலைநோக்கு! புலவர்தம் நோக்கினைப்போல் நம் நோக்கும் ஞான ஒளியைக் கண்டு இன்புற இறையருள் வேண்டுவோமாக.

---

## பொய்க் குருவின் தன்மை

இகத்தின் வாழ்வினில் இச்சை யருந்தனைச்
சகத்தி னில்குரு சாமியென் றேதுதல்
சுகத்தை நீக்கித் துயரஞ் செறிநரர்
அகத்தை வீடென் றறைதல் சிவனுமே.

ஆதி தேவன், அறிவில் லவர்செயும்
கோதி னைக்கமை கொண்டு பொறுக்கினும்,
நீதி நூலை யுணர்ந்தும், நெறிதவிர்
வேதி யர்க்கு விமோசனம் இல்லையே.

ஒருமை யாய்த்தன் உதரம் நிமித்தமே
தருமம வேடம் தரிக்குதல், வெம்புலி
புருவை தன்னைப் புசிக்கப், புருவையின்
சருமம் பூண்டங்கு சார்தல் நிகர்க்குமே.

——மாயவரம் ச. வேதநாயகம் பிள்ளை

# "ஞானம் பிறந்தது, மோனம் இசைத்தது!"

எஸ். எஸ். அப்துல்லாஹ், எம். ஏ.
கௌதிய்யாக் கல்லூரி
உத்தமபாளையம்

முஸ்லிம் தமிழ்ப் புலவர்களிலே மெய்ஞ்ஞானக் கடலுள் மூழ்கி முத்துக் குளித்த அருட் செல்வர்களான, மூவாப் புகழ்பெற்ற சாகிபுமார் மூவருள், பீர் முகம்மது சாகிபும் ஒருவர். *'அப்பா'* என அன்போடு விளிக்கப்படும் இஸ்லாமிய இறைநேசச் செல்வர் இருவர். வியத்தகு *"வித்ரியாவை"* வளமிகு அரபி மொழியில் பாடியருளிய வித்தகர் *சதகத்துல்லா அப்பா* ஒருவர். மற்றொருவரோ, "காசியிலே பிறந்து, கலையூரிலே மறைந்தும், நாஞ்சில் நாட்டின் கவிபாடும் நெஞ்சங்களில் இன்றும் நிறைந்து வாழும் ஞான வள்ளல் *பீர் முகம்மது அப்பா"* அவர்களாவர்.

பீரப்பா அவர்கள் செத்தும் உயிர்வாழும் சித்து அறிந்த பதினெண் சித்தர்கள் பட்டியலில் இடம் பெற்றவர்கள். சாகாமல் செத்துச் சுகம் பெறும் வித்தை கற்றவர்கள். சூபிஞானக் கருத்துக்களைத் தெள்ளத் தெளிந்த தமிழில் தெரிந்து பாடிய, தமிழ்நாட்டு *'ரூமி'* யெனப் புகழப்படுபவர். ஆயிரமாயிரம் இசைப்பாக்களைக் குற்றால அருவியெனக் கொட்டுவதில் *கம்பனாகவும்,* தமிழோடு இசைப்பாடல் மறந்தறியாப் பெருமையிலே *நாவுக்கரசராகவும்,* அருட்பாக்களை வாரி வழங்குவதில் *வடலூர் வள்ளலாராகவும்,* தெளிந்த கருத்துக்களை இனிய முறையில் பாடுவதில் *தாயுமானவராகவும்* காட்சியளிக்கின்றார்.

பீர் முகம்மது அப்பாவின் பாக்கள் அனைத்திலும் எதிரொலிக்கும் கருத்துக்கள், நுனிப்புல் மேய்வாருக்குப் புதிரெனத் தோன்றக் கூடும். தித்திக்கும் திருமறையாம் திருக்குர்ஆனைக் கோதிலா முறையில் ஓதியுணர்ந்தவராகவும் *"நான் ஞானத்தின் கோட்டை"* என நவின்ற நபிகளார் முகம்மது முஸ்தபா (ஸல்) அவர்களை வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டவராகவும் விளங்கும் பீர் முகம்மது அப்பா அவர்களின் இலக்கியப் படைப்புகளை ஆழ்ந்து ஆயும்போது, இஸ்லாத்தின் ஏகத்துவ நெறிக்கு எதிரான புதிர் ஒன்றும் காணப்படவில்லை. முரண்பாடு கற்பிப்பது நம் மதியின் குறைபாடாகவே உணரமுடிகிறது.

சூபியாக்களின் கொள்கை இஸ்லாத்திற்குட்பட்டதே என்பது ஆய்வாளர்களின் தீர்ப்பாக உள்ளது. *" இறைவன் உங்*

களுடனேயே இருக்கிறான்'' என்பது திருமறை வாக்கு. இறைவனை நேரில் காண்பது போன்ற உணர்வு நிலையில் வணங்குதலும், செயல் படுத்துதலுமே ''சூபி வாழ்வு'' என்று சுருக்கிச் சொல்லலாம். சூபிஞானிகள் புறத் தூய்மையுடன் அகத் தூய்மையும் ஒருங்கே பெற்றவர்கள். 'சிறந்த மெய்ப் பொருளை அழிவிலா மணியைத் தெரிந்து முக்காலமும் உணர்ந்து' துறந்தவர்கள். இஸ்லாத்தின் துறவு நிலை தனிப்பட்ட ஒன்று எனலாம். இஸ்லாத்தின் இறுதி நபி (ஸல்) அவர்களும் ஒரு துறவு நிலையிலேயே வாழ்ந்தார்கள். துறவறத்தை வெறுத்த திருத்தூதர் அவர்கள் இல்லற நெறியில், துறவுநிலை பெற்றிருந்த காரணத்தாலேயே, ஆயிஷா நாயகியின் மடிமீது துயில் கொண்டபோது இறைவெளிப்பாடு இறங்கியது.

மேலும் இறைவன் அவரவர் நெஞ்சத் தூய்மையின் அளவே தங்கியிருப்பான் என்பதை முஸ்லிம் துறவிகள்—சூபிஞானிகள்—உணர்ந்திருந்தார்கள். ஒரு மேதையின் அளவுக்கு ஒரு பாமரன் பரம்பொருளை உணரமுடியாது. ஒரு முதியவன் தரத்திற்கு ஓர் இளையவன் ஆத்மீக உணர்வு பெறமுடியாது. பாலகன் ஒருவனுக்குப் புலாலுணவு தரலாகுமா? அதுபோல், ''தவ்ஹீத்'' எனும் ஏகத்துவத்தில் தம்மை மறந்து, இறைவனைத் தவிர வேறு எதையும் எண்ணிப்பார்க்கும் வாய்ப்பினைப் பெறுமல், இறைஞானக் கடலுள் மூழ்கித் ''தான்'' எனும் தனிநிலையினைக் கரைத்துக் கொண்ட தக்கலையாரின் பாடல் ஒவ்வொன்றும், ஆய்ந்து சிவந்த பாவாணர் நெஞ்சங்களுக்குக் கிடைத்தற்கரிய இலக்கியக் கருவூலமாகவே காட்சி தருகிறது.

பீர்முகம்மது அப்பா பாடியருளிய ஞானப் புகழ்ச்சியிலே ஒரு பாட்டினைத் திறனய்வு செய்து பார்க்கலாம். பீரப்பாவின் ஞானப் புகழ்ச்சியிலே இறை ஞானத்தின் பழுத்த அனுபவம் கனிந்து வழிகிறது. தெளிதேனின் தீஞ்சுவையறிய ஒரு துளிபோதும். ஒரு பானைச் சோற்றுக்குப் பதங்காண ஒரு பருக்கை போதும். அதுபோல ஞானப் புகழ்ச்சி எனும் சுவனப் பூங்காவின் நறுமணத்தை நுகர ஒரு பாமலரே போதுமானதெனலாம்.

''இறைவா உனக்கு நிகரா ரெவர்க்கும்
இனிதா யெழுந்த முதல்வா
மறையா தனைத்து மன்மீ திலுற்ற
வடிவே சலித்துன் னடியேன்
அறவே மெலிந்து முனையான் மறந்தும்
அலைந்தே னுவந்து னருளால்
குறையா தசெல்வந் தருவாய் நீயென்றுங்
குறையே துமற் றபொருளே''

எனும் இப்பாடல், ஞானப்புகழ்ச்சியிலே தலையாய கலைநுணுக்கஞ் செறிந்த, இசையும் பொருளும் இணைந்து, காதலர் இருவர் கருத்தொருமித்துக் கைகோர்த்துச் செல்வதுபோல அழகு நடைபோட்டுச் செல்கின்ற பாடலாகக் காட்சியளிக்கிறது.

உணர்ச்சிக்கு வடிவம் தருவது பாட்டு. உணர்ச்சியலை பொங்கியெழும்போது பாட்டில் சந்தம் பிறக்கும். பாட்டின் விளைவுகளையெல்லாம் திறந்துகாட்டும் திறவுகோல் ஒலிநயம். அசைகளின் தோரணியான ஒரு தொடர்ச்சியைத் தோற்றுவிக்கும் 'எதிர்பார்க்கு நிலை, ஏமாற்று நிலை, வியப்பு நிலை' ஆகிய இசைகளின் பின்னற்பொலிவே சந்தம் எனப்படும். நாவினைப்போலச் செவியும் பல சுவைகளைக் கேட்டின்புற விழைகிறது. சந்தநயம் என்றுமுள தென்றமிழ்ப் பாட்டின் சொந்த நிலையாகும். காசியிலே (தென்காசி) பிறந்த கவிஞர் காசிப்பட்டுப்போல இசைக்கவிதையை இனிதே நெய்து தந்துள்ளார். பாட்டில் தடையின்றித் தாளத்துடன் செல்லும் ஒலிநயம், ஒலியுல்லா அவர்களின் சொல்வளத்தையும் இசை ஞானத்தையும் வெளிப்படுத்துகிறது. இப்பாட்டில் எதிரொலிக்கும் ஓசைதரும் இன்பம் உவமையிலா இன்பமாகும்.

இஸ்லாம் இசையை வெறுக்கிறது என்பது சிலரின் தவறான சிந்தனையாகும். இஸ்லாம் இசைக்கலையை வெறுக்கவில்லை. இசைக்கருவிகளில் சிலவற்றின், சிருங்கார உணர்ச்சிகளைத் தூண்டுகின்ற, இழிந்த ஆசைகளை எழுப்புகின்ற அருவருக்கத்தக்க ஓசைகளை இஸ்லாம் தடைசெய்கிறது. மனித மனத்தை நெறி தவறவும், நிலை தடுமாறவும் காரணமாக அமையும் இசைக் கருவிகளை வெறுக்கிறது இஸ்லாம். மனிதனின் அமைதியான மனத்தைக் கலைத்துப் பைத்தியமாக்கும் ஆபத்தான ஓசைப்புயலிலிருந்து மனித இனத்தைக் காப்பாற்றவேண்டும் என விஞ்ஞானிகளும் விளம்புவதைத்தான் வான்மறையாம் திருக்குர்ஆன் வலியுறுத்துகிறது.

உயரிய எண்ணங்களை இசை வண்ணங்களாக வார்த்து, உள்ளத்தையுருக்கியும், உள்ளொளி பெருக்கியும், மென்மை உணர்ச்சிகளைப் பயன்படுத்தியும் இறைவழியில், மறைநெறியில் உந்திச்செலுத்தும் சந்தப் பாடல்களை இஸ்லாம் எந்தப் பருவத்திலும் வெறுத்ததில்லை. தொழுகைக்கு வாருங்கள், வெற்றியின் பக்கம் வாருங்கள் என அழைக்கும் வாங்கொலியில் வாங்கு வளைந்து வரும் பிலாலின் இன்னிசையை இஸ்லாம் வரவேற்கவில்லையா? முரடர் உமரை மூமின்களின் மன்னராக்கிய, தங்கை பாத்திமாவின் தீங்குரலை இஸ்லாம் வரவேற்கவில்லையா என்ன?

எனவே இப்பாடலின் இனிய சந்தம் படிப்போரின் இதயத்தைப் பரம்பொருளின் பெருகிவரும் பெருங் கருணையின்பால் உருகி ஓடச் செய்கிறது—பொருளாழத்தில் மூழ்கிப் புதுமைகளைக் கண்டு மகிழச் செய்கிறது.

இறைவா என்று தொடங்கும்பொழுதே நெஞ்சம் நெகிழ்கிறது. இறைவனின் புகழ்ச்சியே ஞானநெறிக்கண் மனிதன்மீது உண்டாகும் முதல் பிரதிபலிப்பாகும். புகழனைத்தும் அல்லாஹ்விற்கே (அல்ஹம்துலில்லாஹி) என்பது முஸ்லிம்கள் கூறும் திருமந்திரமாகும். "அடியார் புகழ்ச்சியைக் கைக்கொள்வோன்" எனும் உண்மையினை உணர்ந்த புலவர் இறைவனைப் புகழத் தொடங்குகிருர். இறைவா உனக்கு நிகரார்? என்று கேட்கிருர். "வஹ்தஹூ லாஷரிகலஹூ" இறைவன் ஒருவன் (ஒப்பற்றவன்) இறைவனைப்போன்றது வேறு ஒன்றுமில்லை. (குபுவன்அஹது) அவன் இணையற்றவன், எனும் வான்மறையின் வலுவான கொள்கையும் "தனக்குவமையில்லாதான்" எனும் திருக்குறளும் இணைந்து ஒலிக்கின்றன. அவனன்றி ஓரணுவும் அசையாதன்றோ? அவன் முதல்வன், மூலவன்; உலகில் அவன் படைத்த எல்லா உயிர்களின் அழைப்பிற்கும் இனிதே எழுகின்றவன். அனைத்துயிர்களின் அருகே இருப்பவன். நாடி நரம்புகளுக்கும் நெருக்கமாக உள்ளவன். விருப்பு வெறுப்பு இன்றி, காய்தல் உவத்தல் இன்றி எல்லோருக்கும் இனிதானவன். அருள்மயமானவன். அத்தகைய இறைவன் எல்லா உயிர்களின் மனத்திலும், மனிதப் புனிதர்களின் நெஞ்சத்தவிசிலும் அழகின் சுடரொளியாகத் தங்கியிருக்கின்ருன். படைப்புகள் அனைத்தும் இறையுண்மையை உணர்ந்துள்ளன. இறைவனின் சட்டதிட்டங்களுக்கு, மலை, கடல், நதி, பாதாளம், ஒளிர் உடுக்கணம், சொர்க்கம், இரவி, திங்கள், வானவர் முதலாயனைத்தும் அடிபணிந்து வணங்குகின்றன. ஒழுங்காக இயங்கிவருகின்றன. இவ்வுண்மையை முதலில் உணராதிருந்த புலவர் தன் சிற்றறிவினை நொந்துகொள்கிருர். இறைவனைத் தேடும்பணியில் காடும் மேடும் ஓடியலைந்ததை ஓர்ந்து பார்க்கின்ருர். செயலும் சிந்தனையும் சலனம் அடைந்ததும், உடல் சலிப்புற்றதும், நலிந்ததும் மெலிந்ததும் எண்ணியெண்ணி வருந்துகிருர். எனக்குள்ளே நீயிருக்க உன்னையறியும் உண்மை உணராமல் மறந்து திரிந்தேனே, என மனம் உடைந்து கண்ணீர் மல்கிக் காட்சியளிக்கிருர். தெளிந்த ஞானம் மலருகிறது; பா மணக்கிறது; நா இசைக்கிறது. "இறைவா! குறையேதுமற்ற உண்மைப் பொருளே 'உன்னையே வணங்குகின்றேன். உன்னிடமே உதவிக்கு அடைக்கலம் தேடுகின்றேன்'. உன்னையன்றி எனக்கு உதவிசெய்வோர் யார்?

உன்னை மேலும் மேலும் முழுநிறைவோடு உணர்ந்து என்னை அழித்துக்கொள்ள, ஞானச் செழுஞ் செல்வத்தை அருள்வாயாக'' எனவேண்டுகின்ருர். உலகப் பற்றெல்லாம் முற்றிலும் உதறியெறிந்துவிட்ட பீர்முகம்மது அப்பா அவர்கள், பூரியார் கண்ணுமுள்ள பொருட்செல்வத்தை விரும்பவில்லை. குன்ருச்செல்வமான அருள் ஞானச் செல்வத்தையே தரவேண்டுமென வரம்கேட்கிருர். ஊனுருக உள்ளுருக இறைவனைப் புகழ்ந்து பாடும் ஞானப்புகழ்ச்சி, வெறும் புகழ்ச்சியன்று, உண்மைப் புகழ்ச்சியாகும். நற்றவம் தொழுதிடும் நல்லடியார் உள்ளங்களின் மலர்ச்சியாகும். தவ்ஹீதை இன்பத் தமிழோடு இசைத்து வளர்க்கும் புத்துணர்ச்சியாகும்! நெஞ்சையள்ளுகின்ற, இறை துள்ளுகின்ற இக் ''கொட்டாட்டுப் பாட்டிலே'' கொள்ளை இன்பம் அல்லவா கொட்டிக்கிடக்கின்றது!

---

''இறைஞ்சுதல் என்பது சொற்களால் அமைவதல்ல; ஆனால் அது உள்ளத்தின் எழுச்சியே.''

—மகான் அரவிந்தர்

''நான் பிரார்த்தனை புரிகின்றேன் என்ற உணர்வேயின்றி இறைவனோடு ஒன்றிப் பிரார்த்தனை செய்கின்றவன்தான் நன்ருக பிரார்த்தனை செய்கின்ருன்.''

—செயிண்ட் பிரான்சிஸ்

''வணக்கம் காலை நேரத்தின் திறவுகோலாகவும் மாலை நேரத்தின் பூட்டாகவும் இருக்கிறது.''

—காந்தியடிகள்

# துக்கமது அகற்றத் தொழுகை....

மவ்லவி எம். முகம்மது ஷெய்கு
*சிங்கப்பூர்.*

பெருமானார் (ஸல்) அவர்கள் ஆரம்பத்தில் மக்களிடம், 'லாஇலாஹா-இல்லல்லாஹ் என்று கூறுங்கள்; நீங்கள் வெற்றியடைவீர்கள்' என்று கூறினார்கள். இக் கூற்றை ஏற்ற மக்கள் வெற்றியடைந்தனர். எத்தகைய வெற்றியென்றால்-இவ்வையகமே இதுவரை கண்டிராத வெற்றியை-இறைவன் அவர்களுக்கு நல்கினான். இத்திருக்கலிமாவைக் கூறியவர்களின் வாழ்க்கையில் எத்தனையோ சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. அதில் ஒரு சிறு சம்பவத்தை ஈண்டு குறிப்பிடுதல் சாலப்பொருத்தமாயிருக்குமெனக் கருதுகிறேன். செய்யிதுனா உமர் பாரூக் (ரலி) அவர்கள் கலீபாவாக இருக்கின்றபோது ஹிர்க்கல் என்னும் சக்கரவர்த்தி உமர் (ரலி) அவர்கள் மீது பொறாமை கொண்டு அவர்களைக் கொலை செய்வதற்கு ஒரு நஸ்ரானியை (கிறிஸ்தவனை) அனுப்பி அவனுக்குப் பெரும் செல்வம் தருவதாக வாக்களித்திருந்தான். இதை ஏற்று அந்த நஸ்ரானி உமர் (ரலி) அவர்களைக் கொலை செய்யத் துணிந்து புறப்பட்டான். அவன் அக்காலத்தின் பெரும் பயில்வானும்கூட. அவன் சென்று கொண்டிருந்த வழியிலே உமர் (ரலி) அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். அவன் அவர்களைக் கண்டதும் ஒரு மரத்தில் ஏறிக் கொண்டான். அவர்கள் அங்கு வந்த அலுவலை முடித்துக் கொண்டு அம்மரத்தடியில் கையைத் தலையணையாக வைத்துப் படுத்துத் தூங்கி விட்டார்கள். இதை அறிந்த அக்கொலைகாரன் கீழே இறங்கித் தனது உடைவாளை உருவி வெட்டுவதற்காக முயற்சித்த போது எதிரில் ஒரு பெரும் சிங்கம் அவனை எதிர் நோக்கிச் சமீபத்தில் வந்து கொண்டிருப்பதைப் பார்த்ததும் உமர் (ரலி) அவர்கள் அண்டையில் மூர்ச்சையாகி விழுந்து விட்டான். அந்தச் சிங்கம் உமர் (ரலி) அவர்கள் கால் மாட்டில் வந்து ஏதோ மோப்பம் பிடிப்பது போல அங்குமிங்கும் பார்த்துவிட்டு அவர்களைச் சுற்றி வந்தது. சிறிது நேரத்தில் ஹலரத் உமர் (ரலி) அவர்கள் கண் விழித்ததும் அந்தச் சிங்கம் மறைந்து விட்டது. ஹலரத் உமர் (ரலி) அவர்கள் அக்கொலைகாரனைப் பார்த்து, 'நீ யார்?' என்று வினவ அதற்கு அவன் 'நான் தங்களைக் கொலை செய்ய வந்தவன்' என்று கூறி அங்கு நடந்த காட்சிகள் அனைத்தையும் ஒன்று விடாது எடுத்துக் கூறினான். அப்போது ஹலரத் உமர் (ரலி) அவர்கள், 'அந்தச் சிங்கம்

எங்கே?' என்று கேட்டார்கள். அதற்கு அவன் கூறினன் : 'அது மறைந்து விட்டது.' இத்தனைக்கும் இடையே அந்த மரத்திலிருந்து ஒரு அசரீரி கேட்டது: "உமரே! நீர் எனது 'தீனை'-சன்மார்க்கத்தைக்-காப்பாற்றுக. (அதாவது 'தீன் உயரப் பாடுபடுக,) நான் உமது உயிரைக் காப்பாற்றுகிறேன்."

"இன்தன்ஸுருல்லாஹ என்ஸுர்கும் வயுதப்பித்து அக்தாமக்கும்" - "நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவுங்கள். (அல்லாஹ்வின் சன்மார்க்கம் பாரெங்கும் பரவிட உதவி செய்யுங்கள்.) அல்லாஹ்வும் உங்களுக்கு உதவி செய்வான். மேலும் உங்களது பாதங்களை (உங்களை) நிலை பெறச் செய்வான்." — (குர்ஆன்) என்று இவைகளையெல்லாம் செவிசாய்த்துக் கேட்ட அந்தக் கிறிஸ்தவர் உடனே உமர் (ரலி) அவர்களின் இருகரங்களையும் பற்றி முத்தமிட்டுக் கலிமா கூறி இஸ்லாத்தை ஏற்றுர். என்னே கலிமாவின் மகத்துவம்! எம்பெருமானுர் (ஸல்) அவர்கள், "மக்களே! நீங்கள் 'லா இலாஹ இல்லல்லாஹு" என்ற தாரக மந்திரத்தைக் கூறுங்கள். நீங்கள் வெற்றி பெறுவீர்கள்" என்று மொழிந்தனர். இதன் அந்தரங்கத்தை - உண்மையைச் - சஹாபாக்களுக்குப் போதித்த பின் அவர்கள் கலிமாவின் ஹகீகத்தை—அந்தரங்கத்தை—உணர்ந்து நடக்க ஆரம்பித்து அதிலே ஸ்திரமானபின்—உறுதியான பின்—இவர்களுக்குத் தேவையானவற்றை எவ்வாறு பெறுவது என்பதை வல்ல இறைவன் அறிவிக்கும் முகத்தான் பெருமானுர் (ஸல்) அவர்களை மிஃராஜுக்கு அழைத்துத் தொழுகை என்ற சிறந்த பரிசினை வழங்கி இதன் மூலம் கலிமா கூறியவர்கள் தங்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ள உதவி செய்தான். ஆகவேதான் திருக்குர்ஆனிலே இறைவன் கூறுகின்ருன்:-

"வஸ்தயீனூ-பிஸ்-ஸப்ரி-வஸ்ஸலாத்-"—

"தொழுகையின் மூலமும், பொறுமையின் மூலமும் நீங்கள் (இறைவனிடம்) உதவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று. மெய்ந்நிலை கண்ட ஞானி தக்கலையின் மிக்க புகழ் ஷெய்கு பீர்முஹம்மது அப்பா அவர்கள் இறைவனிடம் இறைஞ்சுகின்ற போது,

"தொழுதுபல மிடையிலடி யேன்நின்னேடு இரந்தேன்
துக்கமது அகற்றியருள் துய்ய பெரியோனே!
எழுதரிய வடிவுடைய சொருபமது உள்ளோனே!
எங்களுடைச் சங்கடம் அறிந்த பெரியோனே!
முழுமனது உனை நினைவு தரும் நல்லிறையே யான்
முடுகி நின்னேடு இரந்ததற்கு உன் உதவியருள்வாயே!
பழுதுபல வினைகள் ஒரு நாளும் வாராமல்
படைத்தானே யானுன் அடைக்கலம் தானேன்"

—என்று ஊனுருக-உள்ள முருகப் பக்திப்பரவசத்துடன் பாடுகிருர்.

இப்பாடலில் நல்ல பல கருத்துக்கள் பொதிந்திருக்கின்றன. 'மனிதன் மறதியைக் கொண்டும் தவறைக் கொண்டும் படைக்கப் பட்டவன்' என்பது மாநபி மொழி. எனவே மனிதனிடம் இவை இரண்டும் இரண்டறக் கலந்து கிடக்கின்ற காரணத்தால் மனிதன் இவ்விரண்டு பெரும் தவறை விட்டும் பாதுகாப்புத்தேடக் கடமைப்பட்டுள்ளான்.

'நாளொன்றிற்குக் குறைந்தது நூறு முறையாவது இறை வனிடம் மனிதன் மன்னிப்புக்கோர வேண்டு'மென்பது அண்ண லாரின் அருள்வாக்கு. மேலும் மனிதனுக்குத் தேவையான யாவற்றையும் இறைவனிடமே வேண்டிப் பெறவேண்டியவனாக உள்ளான். ஆதலால்தான் நாளொன்றிற்கு அறுபது நாழிகை யிலும் ஐவேளை இறைவனைத் தொழுது துஆ- இறைஞ்சுதல் — செய்யவேண்டியிருக்கிறது. இறைவன் மனிதனது உள்ளத்தை நாளொன்றிற்கு அறுபது முறை பார்க்கின்றான். ஐங்காலத் தொழுகையிலும் இவனுக்குத் தேவையானவற்றைக் கேட்பதற் கும், இறைவனிடம் தனது தவறை முறையிட்டு மன்னிப்புக் கோருவதற்கும் வகை செய்துள்ளான். மனிதனுக்குத் தேவை யான உணவு, உடை, மனைவி, இல்லம், வாகனம் இவ்வைந்தும் முக்கியத் தேவையாயுள்ளன. இவை அனைத்தும் மனிதன் எளிதில் அடையப் பெறவேண்டுமானால் தொழுகைதனை ஒழுங்குற நிறைவேற்றிட முனைந்திடவேண்டும். இக்கருத்தினையொட்டியே ஏக வல்லவனும் அல்லாஹ் தன் தித்திக்கும் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்.

> "வஃமுர் — அஹ்லக்க — பிஸ்ஸலாத்தி வஸ்தபிர் அலைஹா லா நஸ் அலுக ரிஸ்க்கன் நஹ்னு நர்ஸுக்குக"

"நபியே! உமது குடும்பத்தாரைத் தொழுமாறு உத்திரவிடுவீராக! மேலும் அதன்மீது ஸ்திரமாக இருப்பீர்களாக! நாம் உங்களிடம் உணவைக் கோரவில்லை. மாறாக நாமே உங்களுக்கு உணவளிக் கின்றோம்."

மனிதனுக்கு வறுமையும், கஷ்டமும், தொல்லையும், துயரமும் ஏற்படுங்கால் அதிலிருந்து விடுதலை பெற நினைத்தால் அவன் கட்டாயம் தொழுகையைக் கடைபிடிப்பதன் மூலமே அதிலிருந்து அவன் விடுதலை பெற முடியும். இது இறைவனின் ஆணை. நபி பெருமானார் (ஸல்) அவர்களின் குடும்பத்தார்க்கு நெருக்கடி சம்பவித்தால் அவர்களைத் தொழும்படித் தூண்டி இந்த ஆயத்தை — மேற்கண்ட வசனத்தை—ஓதிக் காண்பிப்பார்கள் என்று ஹதீது ஷரீபில் வந்துள்ளது.

ஏனைய நபிமார்களுக்கும் ஏதேனும் சிரமம் நேர்ந்தால் தொழுகையின் பக்கமே விரைந்து செல்வதுடன் அவர்களது அறப்பணியில் ஏற்படுகின்ற-குறிக்கிடுகின்ற இன்னல்கள் இடுக்கண்களை அந்த வல்லோனிடமே முறையிட்டு அதற்கான பரிகாரத்தைப் பெறுவார்கள். இறைவனை நினைவு கூர்வதற்குத் தொழுகையை விட வேறு எதுவும் சிறந்த சாதனமாய் அமைந்ததில்லை. வல்ல நாயனே தன் திருமறையில் இவ்வாறு கூறுகிறான்.

"வ அகிமிஸ்ஸலாத்த லிதிக்ரீ"—

'என்னை நினைவு கூர்வதற்குத் தொழுகையை நிலை நாட்டுவீராக!' என்று. இறைவனது நெருக்கத்தை அடைவதற்குத் தொழுகையைவிடச் சிறந்த அமல் எதுவுமில்லை. தொழுகையில் — சுஜூதில்தான்—மனிதன் இறைவனோடு உள்ள நெருக்கத்தைப் பெறுகின்றான். "அடியான் அல்லாஹ்விடம் மிக நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக் கொள்வது அவன் சுஜூதில் இருக்கும் போதுதான்" என்று ஏந்தல் நபி (ஸல்) இயம்பியுள்ளார்கள்.

மனிதன் தனது ஐம்புலன்களை அடக்கி ஒடுக்கி ஆத்மீகத் தன்மையைப் பெறுவதற்குத் தொழுகையை விடச் சிறந்த ஓர் அமைப்பு இல்லை. தொழுகை நிலை அறிந்து வாழ்ந்தால் மனிதனில் அமைக்கப்பெற்ற நீர், நெருப்பு, காற்று, மண் ஆகியவற்றை வென்றிடலாம்.

வற்றிப்போன நைல் நதியை வளமாரப் பெருக்கெடுத்தோடச் செய்ததும், ஆண்டுதோறும் நீண்டு வரும் நெருப்பினை நில்லாது ஒழித்ததும், மலையினை வீழச் செய்த பூகம்பத்தை இல்லாது ஒழித்ததும், ஓராயிரத்து ஐநூறு மைல்களுக்கப்பால் உள்ள தனது படைத் தளபதிக்கு எச்சரிக்கை கொடுத்ததும் இத்தொழுகையின் மூலம் அமைந்த நெறியின் வாயிலாகத்தான் என்பதனை ஸய்யிதுனா உமர் பாரூக் (ரலி) அவர்கள் எண்பித்துக் காண்பித்துள்ளார்கள்.

இக் கருத்துக்களை உள்ளடக்கியே நமது ஞானி பீர்முஹம்மது அப்பா அவர்களின் பாடலில் நாம் பார்க்கிறோம்! வறுமை — துக்கம், துயரம் இவைகளை அகற்றி இறைவனை நீங்காது நினைவு கூரவேண்டும். இறைவனோடுள்ள நெருக்கம் முதலிய அனைத்தும் ஒருங்கே பெற்றுத் திகழத் தொழுகையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்பதைக் கருத்திற் கொண்டு இப்பாடலின் முதல் அடியைப் பாடியுள்ளார்கள் நமது மேதகு அப்பா அவர்கள்.

———

# சுக்கோ சுரோணிதமோ

**அ. முகம்மது இக்பால்,**
மக்காயிப்பாளையம், தக்கலை.

ஞான மாமேதை ஷெய்கு பீர்முகம்மது சாகிபு வலியுல்லா அவர்களின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் இணையேது? அதனைப் பற்றி எழுதிடத்தான் எமக்குத் துணிவேது? இருப்பினும் அன்னாரின் ஆசியை நாடி எனது சிற்றறிவுக்கெட்டிய ஒரு சில உண்மைகளை இங்கு எடுத்துக்கூற முனைகிறேன்.

ஞானமேதை அவர்களை அப்பா என்று அழைப்பதே சிறப்புப் பெயராகஅமைந்துள்ளதால் யாமும் அவ்வாறே அழைக்கின்றோம். சிறு வயதிலேயே தமிழறிவும் இஸ்லாமிய மார்க்க ஞானமும் நிரம்பி விளங்கிய அப்பா அவர்கள் பல கருத்துப் பாடல்களைப் பாடித் தமது தமிழறிவை வெளிப்படுத்தினார்கள். பிள்ளைப் பருவம் தொட்டே இறைநாட்டத்தில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அப்பா அவர்கள் தென்காசியிலே பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டிவிட்டுப் பின்னர், இன்றைய கேரள மாநிலத்தின் ஒரு பகுதியாக விளங்கும் பீருமேடு என்னும் இடத்தில் பல்லாண்டு காலம் தலைகீழ்த் தவம் செய்தார்கள்.

அப்பா அவர்களின் பாடல்களை ஆய்ந்துணர்வதற்குத் தமிழறிவு மட்டும் போதாது. இஸ்லாமிய மார்க்க அறிவும் தத்துவ ஞானமும் தேவை. இஸ்லாமிய ஷரீஅத்தின் கோட்பாடுகளையும், தரீகத், ஹகீகத், மக்ரிபத் என்ற முக்தி நிலைகளின் தன்மையை

யும், அந்நிலைகளை அடைவதற்கான வழிவகைகளையும் அப்பா அவர்கள் தமது பாடல்களிலே தெளிவாக எடுத்துரைத்துள்ளார்கள். எடுத்துக்காட்டாக அப்பா அவர்கள் பாடிய ஞானப் புகழ்ச்சியிலே வருகின்ற கீழ்வரும் பாடலை ஆராய்வோம்:

"தென்காசி நாடு சிறுமலுக்க ரென்னுமவர்
தன்பாலன் இக்கதையைச் சாற்றினன் — வெங்காயம்
சுக்கோ சிவனிருப்பன் சுரோணிதமோ அல்லவிஞ்சி
ஹக்கோஎன் றுள்ளறிந்தக் கால்"

இப்பாடலிலே அப்பா அவர்கள் முதற்கண் தமது பிறப்புக் குறிப்பைப் பற்றிக் கூறுகின்றார்கள். அப்பா அவர்கள் தென்காசி என்னும் இடத்தில் சிறுமலுக்கர் என்னும் பெருந்தகையின் மகனாகப் பிறந்தவர்கள் என்பதனை எடுத்துச் சொல்லி, அப்படிச் சிறுமலுக்கர் என்பவருடைய மகனாகப் பிறந்த நான் இக்கதையைக் கூறினேன் என்று பீடிகை போட்டு விட்டு மனிதனுடைய பிறப்பைப் பற்றிய ஒரு பேருண்மையை நமக்குத் தெளிவாக விளக்குகின்றார்கள்.

உயிர் நூலின் பிரிவாகிய மனித இனத்தின் உடற்கூறு பற்றிய நூலின் வாயிலாக நாம் இதுவரை அறிந்திருப்பதெல்லாம், மனிதப் பிறவி உருவாவதற்கு 'ஸ்பேர்ம்' அல்லது சுக்கிலம் என்ற ஆண் உயிரணுவும் 'ஒவா' அல்லது சுரோணிதம் என்ற பெண் கரு முட்டையும் இணையவேண்டும் என்பதுதான். ஆணும் பெண்ணும் இணையாமல் குழந்தை உருவாவதில்லை என்பது விஞ்ஞானம் கண்ட உண்மை. ஆனால் அப்பா அவர்கள் இதற்கு நேர் மாறான ஒரு உண்மையை நமக்கு எடுத்துச் சொல்கின்றார்கள். மனிதப் பிறவி உருவாவதற்குச் சுக்கோ (சுக்கிலமோ) சுரோணிதமோ (உயிர் இருக்கின்ற சுரோணிதமோ) முக்கியம் அல்ல. விஞ்சி (மிஞ்சியிருக்கின்ற) ஹக்கோ என்றுள்ளறிந்தக்கால்—ஹக்கு என்ற உயிர் மூச்சு—அதாவது றூகுதான் மனிதப்பிறவி உருவாவதற்கு முக்கிய அடிப்படை என்று அப்பா அவர்கள் விளக்கம் தருகின்றார்கள். இதனை நாம் ஆழமாக ஆராயும்போது அப்பா அவர்கள் கூறியது திருமறையின் ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டதாகவும், மறுக்க முடியாத உண்மையாகவும் இருப்பதை நாம் உணரமுடிகிறது.

ஆதி நபி ஆதம் (அலை) அவர்களைப் படைக்கும் போது அங்கே சுக்கிலத்தையும் சுரோணிதத்தையும் இணைத்து இறைவன் அவர்களை உருவாக்கவில்லை. மாறாக, நபி ஆதம் (அலை) அவர்களை மண்ணிலிருந்து உருவாக்கி 'ஆதமே! எழுந்து

வாரும்' என்று கட்டளையிட்டான். ஆதம் (அலை) அவர்கள் உயிர்பெற்றெழுந்தார்கள். இதனை அப்பா அவர்களும் ஒரு பாடலிலே தெளிவாக விளக்குகின்றார்கள்.

"அள்ளிமண் ணெடுத்துச் சென்று ஆதிமுன் னமரரர்
வைக்க
ஒள்ளிய ஆத மென்றே உயிர்விடுத் தெழுப்பும் கோவே!"

என்று அப்பா அவர்கள் அழகாகக் கூறுகின்றார்கள்.

இனி, நபி ஈசா (அலை) அவர்களைப் படைக்கும்போது அங்கே சுக்கிலம் அடிப்படையாக அமையவில்லை. இறைவன் ஜிப்ரீல் (அலை) அவர்களை அன்னை மறியம் பீவி அவர்களிடம் அனுப்பி வைத்து உங்களுக்கு ஓர் அழகான குழந்தை பிறக்குமென்றும், அக்குழந்தைக்கு ஈசா என்று பெயரிடும்படியும் சொல்லச் சொன்னான். அதன்படி ஜிப்ரீல் (அலை) அவர்கள் அன்னை மறியம் பீவி அவர்களிடம் வந்து சொன்னார்கள். அவ்வாறே ஈசா நபியவர்கள் பிறந்தார்கள். இங்கும் சுக்கிலமும் சுரோணிதமும் இணையவில்லை.

அடுத்து, இன்றைய விஞ்ஞானிகளின் ஆராய்ச்சியில் கண்டறிந்த உண்மைகளைப்பற்றி ஆராய்வோம். இன்று எட்டு வயதுச் சிறுமியின் வயிற்றிலே குழந்தை உருவாகியிருந்தது என்பதையும், மேலும் இதுபோன்ற பல செய்திகளையும் நாம் நாளிதழ்கள் வாயிலாக அறிந்தவண்ணம் இருக்கின்றோம். மனிதப் பிறவிக்குச் சுக்கிலமும் சுரோணிதமும் இணையத் தேவையில்லை என்ற முடிவுக்கு விஞ்ஞானிகள் வந்துகொண்டிருக்கின்றார்கள்.

இறைவன் தனது திருமறையின் முதல் ஆயத்தை நபிமணி முஹம்மது (ஸல்) அவர்களுக்குத் தெரிவிக்கும்போது "இக்றஹ் பிஸ்மிறப்பிக் கல்லதி, கலக்க, கலக்கல் இன்ஸானமின் அலக்" என்று மனிதப் பிறவியைப்பற்றி விளக்கம் தருகின்றான். அதாவது "நபியே! (முகம்மதே) உமது ரப்பாகிய இறைவனது நாமத்தைக் கொண்டு ஓதுவீராக! நாம் மனிதனைச் சதைக்கட்டியினின்றும் உருவாக்கினோம்" என்று மனிதனைத் தான் படைத்தமுறையை இறைவன் விளக்குகின்றான். இதனையே அடிப்படையாகக் கொண்டு அப்பா அவர்கள் விளக்கம் தந்துள்ளார்கள். எனவே இஸ்லாமிய ஷரீஅத்திலே, திருமறையிலே கூறப்பட்ட மனிதப் பிறவியின் அடிப்படை மூலாதாரத்தைப்பற்றிய பேருண்மையை அப்பா அவர்கள் வெண்பாவின் கடைசி இரண்டடிகளிலே விளக்கமாக எடுத்துக்கூறிவிட்டார்கள். இங்கே அப்பா அவர்களுடைய அறிவொளி சுடர்வெட்டெரிகின்றதைப் பார்க்கின்றோம்.

இனி, அப்பா அவர்களுடைய மெய்ஞ்ஞான அறிவைப்பற்றி ஆராய்வோம். அப்பா அவர்கள் எழுதிய பாடல்களில் ஞான ஆனந்தக்களிப்பு என்பதும் ஒரு சிறந்த பாடல் தொகுப்பு. அதிலே கீழ்வரும் பாடலை ஆராய்வோம்.

உச்சிக்கு நேரே கிழக்கே — நந்த
மூருக்கு மேலே பெருவெளி தன்னிற்
பச்சைப்பு ருவந்து மேயும் — அதைப்
பாங்குடன் மெல்லப் பழகிப் பிடித்துக்
கச்சைக் கயிற்ருலே கட்டிக் — கலி
மாவுடன் தேனைக் கலந்து புகட்டி
அச்சமில் லாக்கூட்டி லடைத்து — நத்தம்
ஆதியை நன்ருகக் கண்டுகொண் டேனே. — (தீன்)

இங்கே அப்பா அவர்கள்கூறும் கருத்து மிகஆழமானது. உச்சிக்கு நேரே கிழக்கே — நாசித் துவாரம் வழியாக சூரியகலை, சந்திரகலை என்ற பச்சைப் புருவானது வந்துமேயும். அவ் விருகலைகளாகிய மூச்சினைப் பழகிப்பிடித்துக் கட்டுப்படுத்தி 'லா இலாஹா இல்லல்லாஹு முஹம்மதுற்றசூலுல்லா' என்ற கலிமாவாகும் திக்றை அம்மூச்சிலே ஏற்றி நெஞ்சுக்குள்ளே புகுத்தி இறைநாட்டத்துடன் இருந்து இறைவனைக் கண்டு கொண்டதாக அழகாக, ஆழமாக விளக்கமாக எடுத்துக் கூறி யுள்ளார்கள். இது சிறந்த மஃரிபாவின் தத்துவம். இதனை வெளிப் படையாக—விளக்கமாக எடுத்துக்கூற நம்முடைய அறிவுபோது மானதல்ல. வெளிப்படையாக எடுத்துக் கூறுவதும் முறையாகாது. அப்பா அவர்களே இதைப்பற்றி ஒரு இடத்திலே கூறுகின்ருர்கள்:

"அவ்வ லஹுதாக நின்ற மரம்
ஆகி றஹுமதாய்ப் பூத்துப் பூத்து
வவ்வற் கொடியாகப் படர்ந்து காய்த்து
பகுது அஹுதாகக் காலியாமே
சொல்லத் தகுமல்ல இப்பொருளை
சுருட்டி மறைக்கிறேன் சறகுக்காக
எல்லை யறிந்துன்னை வணங்க வல்லார்க்
கிரங்கி யிருப்போனே துணைச்செய்வாயே!"

இங்கே அப்பா அவர்கள் சறகுக்காக சுருட்டி மறைத்தது போல நானும் இதனை அதிகமாக விளக்காது விட்டுவிடுகிறேன். இவ்வாறு அப்பா அவர்கள் மஃரிபாவுடைய வழிமுறைகளையும் தமது பாடல்களிலே விளக்கியுள்ளார்கள்.

"கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துநில
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நேர்ந்தஞ்சி
லொன்றைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் நீதான் பொறுப்பாய் எம்இறையவனே!"

என்று இறைவனிடம் வேண்டுதல் விடுக்கின்ற அப்பா அவர்கள் எழுதியுள்ள ஞானப்புகழ்ச்சி, ஞானப்பால், ஞானப்பூட்டு, ஞான ஆனந்தக்களிப்பு, ஞானமணிமாலை, ஞானச்சரநூல், ஞானக் குறவஞ்சி ஆகிய நூல்களை ஆய்வுசெய்வோமானால், அவர்களுடைய அளவுகடந்த அறிவும் ஞானமும் நமக்குத் தெளிவு படுவதோடு இவ்வளவு ஞானம் படைத்த அப்பா அவர்கள் எவ்வளவு அடக்க ஒடுக்கமாக, எளிமையாக இறைவனிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள் என்று வியப்பும் தோன்று கின்றது. அப்பா அவர்களின் நூல்களிலிருந்து நமது வாழ்க்கைக் குப் பயன்படும் சிறந்த பலநெறிமுறைகளை நாம் கற்றுக்கொள்ள இயலும். அப்பா அவர்கள் எழுதிய நூலொன்று இன்னும் புத்தக வடிவிலே வெளிவராமலிருக்கின்றது. இவற்றையெல்லாம் ஆய்வு செய்து மக்களுக்குப் பயன்படச் செய்வதற்கான வழிவகைகள் செய்யப்படுதல் வேண்டும். இதற்கென ஆய்வுக் கழகம் ஒன்று நிறுவப்பட்டு அதிலே மார்க்க அறிஞர்களும் தமிழறிஞர்களும் குழுமியிருந்து அப்பா அவர்களுடைய பாடல்களைத் திறனாய்வு செய்து நூல்வெளியிடுதல் வேண்டும் என்பது எமது ஆசை.

"ஆதம் பெறுமக்க ளெல்லா ரிலுநம்மை அன்புகொண்டே
வேத நபியிற சூல்உம்மத் தாக்கும் வெகுநன்றிக்குப்
பாதங்கள் மேலும் சிரங்கீழு மாய்ப்பத்து நூறுயிரமாண்
டோதித் தவம்செய்தா லும்போதா தாம் அன்
றுகந்ததுக்கே"

என்று கூறிய அப்பா அவர்கள் இறைவன் தன்னை றசூலுல்லா வுடைய உம்மத்தாக்கியவெகு நன்றிக்குத் தலைகீழ் தவமே செய் தார்கள். அப்பா அவர்களுடைய இலக்கியத் திருப்பார்வையிலே இருப்பதற்கு நமக்குக் கிடைத்த வாய்ப்புக்கு நாம் எத்தனை தவம் செய்தாலும்போதாது.

---

"நான் மனிதனை உருவாக்கி அவனுள்
என் ஆவியிலிருந்து செலுத்தினேன்..."

— திருக்குர்ஆன் 15:29

# சோபனம்

பீ. ஷெய்கு

தக்கலை அப்பா அவர்கள் ஈடுஇணையற்ற மெய்ஞ்ஞான வள்ளல். அவர்கள் வழங்கிய "ஞானப்புகழ்ச்சி" அளவிலா அருளுடைய இறையை உணர்வதற்கு வழிகாட்டும் உன்னத இலக்கியம். அப்பா அவர்களின் பாடல்களில் பொதிந்து காணப் படும் உயர் பொருளை வரையறுத்துக் கூறவல்லார் எவருமிலர். அங்ஙனம் கூறமுனைதல் பரந்துவிரிந்து கட்டுக் கடங்காது காணப் படும் ஆழ் கடல் பரப்பை, ஒரு சிறு சிரட்டையினுள் அடைக்க முயலுதலேயாகும்.

நாமெல்லாம் நல்லன நடக்க நினைக்கும் பொழுதும், நல்லன நிகழவேண்டும் பொழுதும், ஒருவருக்கொருவர் "சோபனம்" கூறிக்கொள்ளுவதுண்டு, ஒலிகள் குழாத்து ஒளிமுத்தாய்த் திகழும் மெய்ஞ்ஞானக் கடல் அப்பா அவர்கள் உலகுயிர் உய்ய உணர்வுடன் கூறிய சோபனத்தை உரைக்க உள்ளுகின்றது என் மனம்; பெரியோர் பிழைதீர்த்துக் கொள்வாராக!

அப்பா அவர்களின் அறிவுப் பெட்டகத்திலிருக்கும் மெய்ஞ் ஞானச் செல்வங்களுள் என் உள்ளங் கவர்ந்த செல்வமாகத் திகழ் கின்றது இவ் வெளிவிருத்தப் பாடலே!

"சேகன நற்பெரி யோர்களீ மானெடு சென்னத்தைத்
சாவிகு வானவர் கட்குப தேசித்த சற்குருவைத் தெரிதல்
சூபி களுக்கொரு சோபன மெய்யிற சூல்நபியைத் தெரிதல்
யோகிக ளுக்குரு வானவ னேயெம துள்ளத்
தெழுந்தருளே"

— (ஞானப்புகழ்ச்சி, 426)

இப் பாடல் மூலமாக ஞானக் கடல் தனது அமுதத்தைச் சுரந்து, பயன் கருதாத மாரிபோல், மாநிலத்தார்க்கு வழங்குகிறது. இப் பாடல் இறையை உணரும் உயர் வழிகள் அனைத்தையும் குறிப் பிட்டு உணர்த்துகிறது. இதில் "உயர்ந்த குரு" யார் என்பதை அருள் நிறை அப்பா அவர்கள் நாமெல்லாம் அறியும் பொருட்டுச் சுட்டிக்காட்டுகின்றார்கள். அப்பா அவர்கள் பிழையிலா ஈமானொடு சொர்க்கத்தைப் பாடத் தொடங்கினார்கள். எனினும் "சென்னத்தை" அல்லது சொர்க்கத்தை — இம்மையில் அறிந்து

கொண்டார்களா? எனும் ஐயப்பாடு நமதுள்ளத்தில் எழாமலில்லை. முற்றிலும் உணர்ந்த ஞானியர், இம்மையில் இருந்து கொண்டே மறுமையை உணர்ந்து உரைக்க வல்ல மதிநுட்பம் பெற்றிருந்தனர் என்பதை மனிதப் புனிதர் முகம்மது முஸ்தபா (ரசூல்) அவர்களின் உரைகள் வழியும், திருமறையின் வழியும் அறிய முடிகின்றது.

வல்ல இறையின் வனப்புமிகு படைப்பிலெல்லாம் உயர் படைப்பாய்த் திகழ்ந்த வள்ளல் முகம்மது நபி (ஸல்) அவர்கள் ஒரு சமயம் உயர்ந்த குன்றொன்றின் மீது நின்றுகொண்டு அதன் அடியில் குழுமி நின்று கொண்டிருந்த தமது நல்லடியார்கள் கூட்டத்தை நோக்கி, "இப்பொழுது எதிர்புறத்தில் ஒரு படை வருகிறது என்றால் நம்புவீர்களா?" என்று கேட்டபோது, அதனைக் கேட்ட நல்லடியார்கள் "ஆம்" என்றனர். இதைத் தொடர்ந்து பெருமானார் அவர்கள் "இதைப் போலவே மறுமையும் இருக்கிறது, அதனை நம்புவீர்களாக" எனப் பகர்ந்தார்கள். எனவே நபிகள் பெருமானார் (ஸல்) இம்மையில் வாழுங் காலையிலேயே, மறுமையை முற்றிலும் உணர்ந்திருந்தார்கள் எனத் தெரிகிறது. இதனைப் போலவே குருக்கள் எனத்தகும் உயர்பெருமையை உடைய பெரியோர் அனைவரும் மறுமையைச் சிறப்பித்துக் கூறினர். இப்பெரியோர்களையே அருள்நெறி புகலும் அப்பா அவர்கள் "சேகன நற் பெரியோர்கள்" என்றார்கள்.

சிறப்புடையன அனைத்தினும் சிறந்தது குண நலனேயாகும். அறனும் அன்பும் ஈடில்லாதவை. இறைவன் தன்னை ஈடற்ற அன்புடையோன் என்றும், இணையற்ற அருளாளன் என்றும், தனது திருமறையில் வனப்புடன் சுட்டிக் காட்டுகின்றான். இத்தகைய அறனும் அன்பும் சால உடையவர்களை இறை அருள் நேசர் அப்பா அவர்கள் "சாலிகுவானவர்" என அழைக்கின்றார்கள். இப்பெயருக்குரியவர்களைச் சிறந்த குருக்கள் தெரிந்தெடுத்துக்கொள்ளுகிறார்கள்.

சோதிவடிவான அல்லாஹ்வை — வடிவிலா சோதியான இறைவனை — அணுக வழிவகை கூறுவதில் "சற்குருக்கள்" எப்பொழுதுமே முன் வரிசையில் நிற்கிறார்கள்.

எப்பொழுதுமே, நல்லவை என நலம் பயப்பவற்றை, நல்லன தெரிவார்க்கே கொடுத்தல் வேண்டும். நல்ல பண்பட்ட நிலத்தில் விட்ட முளை, நல்ல விளையுளைத் தருதல் போல, நல்லனவற்றை அறிந்தவரின் பண்பட்ட மனமே அருள் பயிரை வளர்க்கும்.

எனவே, சற்குருக்கள் இவற்றைத் தெரிந்து, அறிவும் அறனும் உடைய "சாலிகுவானவர்கட்கே" உபதேசிக்கின்றனர். தெரியாத இடத்திற்குத் தெரிந்தவர்களிடம் வழித்துணை கேட்டுச் செல்வது போல், சற்குருக்களின் தன்மைகளைக் கேட்டுத் தெரிந்து, சாலிகுவானவர்கள் மெய்வழியை அறிந்து கொள்ளுவார்கள்.

இங்ஙனம், "மெய்வழி"யை அறிந்த சூபிகளையும், பெறற்கரிய பேருக-இறைவன் நமக்கருளிய "பரமாநபியை"யும் அறிந்து, அவர்கள் போதனை வழி நடப்பதற்கும் நமக்கு மேலான "உள்ளம்" வேண்டும்! வனத்திடை வாழும் விலங்குகளினின்றும் மனிதனை மேம்படுத்திக் காட்டுவது அவனிடம் காணப்படும் "உள்ளம்". அவ் "உள்ளம்" வல்ல இறைவனை வாழ்த்துதற்கே அவனால் வழங்கப்பட்டிருக்கிறது.

---

## சூபிகளின் ஞானம்

"மார்க்க அறிவு, உலக அறிவு என்னும் இருவித அறிவும் கொண்ட சூபிகளின் மிக சாதாரண எளிய வாழ்க்கைமுறை சிறப்பான ஒரு கலையாகும். இக்கலை தன்மட்டே அவர்களது மறைவாய் உள்ள மனோநிலைகளைப்பற்றிய அறிவையும், அவர்களது ஆத்மீக நிலைகளைப்பற்றிய அறிவையும் கொண்டது. மேலும் சூபிகளுக்கே உரிய, இரகசிய கேள்விப்பலன், பேரின்ப நிலை, ஏக்கமுறுதல், கிளர்ச்சியுறல், அமைதி கொள்ளல், உறுதிப் படுத்தப்படல், அழிக்கப்படல், எளிமை, 'நான்' என்பது அகன்று விடல், வலிப்பதவி, சீடநிலை, ஷெய்கு (குரு)ப்பதவி, முரீது (சீடன்) பதவி, இவ்விருவருடைய நிலைகளின் தன்மைகள், ஆத்மீக வெளிசம், பதவி பெறுதல், ஆத்மீகத் துறையில் உள்ள நிலைகள் — முதலியவற்றைப்பற்றிய ஞானமும் இக்கலையைச் சேர்ந்ததே."

— இமாம் கஸ்ஸாலி (ரஹ்)

# ஞானமணிமாலையில் உவமைநயம்

*அதிரை அஹ்மத்*

மணியான ஞானக் கருத்துக்களை மாலையாகக் கோவை செய்து, 'ஞானமணி மாலை' என்ற பெயரில் தக்கலை தவஞானி பீர்முஹம்மது அப்பா அவர்கள் பனுவலாக்கித் தந்துள்ளார்கள். இஸ்லாமிய ஞானக் கருத்துக்களை இருநூற்று நாற்பத்திரண்டு எழிற்றமிழ்ப் பாடல்களில் அப்பா அவர்கள் விளக்கும் பாங்கு அருமையானது. தாம் விளக்க விழைந்த ஞானக் கருத்துக்களைப் புலவர் ஞானியவர்கள் விளக்கிக் காட்ட மேற்கொள்ளும் உத்திகளுள் உவமையும் ஒன்று. "கவிதை, அழகை அழியாமல் பாதுகாக்கிறது; உவமை, கவிதையை அழியாமல் பாதுகாக்கிறது" என்று கவிதைக்கு உவமையின் இன்றியமையாமையை 'இறையருட் கவிமணி' பேராசிரியர் கா. அப்துல் கபூர் சாஹிபவர்கள் எடுத்துக் காட்டுகின்றனர்.

'ஞானமணி மாலை'யின் கவிதை எழிலை, அப்பா அவர்கள் கையாளும் உவமைகள் உயிரோட்டமுள்ளதாக வைத்துள்ளன என்பது மிகைக் கூற்றன்று. இந்நூலின் காப்புச் செய்யுளைப் படிக்கும்போதே இக்கூற்று உண்மையாகின்றது. இறைவனின் காப்பை விழையும் புலவர், தம் இயலாமையை அவையடக்கமாக வெளிப்படுத்திப் பாடுவதையும் நாம் இங்கு உற்று நோக்க வேண்டும்.

"ஏற்ற நாவலர்கள் செந்த மிழ்க்கவி
இசைத்த பாடலொ டெதிர்த்தியான்
சாற்றும் வாறதுசெந் தாம ரைக்கிணை
சருகை மாமலர் சமைத்தல்போல்
ஆற்றும் ஞானமணி மாலை கோத்திடவென்
அன்பனே யுனது தம்பமே."

தேர்ந்த தமிழ் வல்லார் இயற்றும் செந்தமிழ்க் கவிதைகளுக்கு முன்னால் தம் கவிதை மிக அற்பமெனக் கருதி, அதற்கோர் உவமையையும் உருவாக்குகின்றார். சிவந்த தாமரை அழகிய மலர். அதனைப்போன்று சமைக்க நாடி, காய்ந்த சருகுகளைப் பொறுக்கியெடுத்து இதழ்களாக ஒன்று சேர்த்துக் கட்டிவிட்டால் தாமரையாகிவிடுமா? இது போன்றே தமது முயற்சியும் இருக்கிறதென்று கூறி, அடக்கப் பண்புடன் அழகிய உவமையைப் புலவர் கையாண்டுள்ளமை உற்று உணரத் தக்கது.

இவ்வாறு நூல் முழுதும் விரவிக் கிடக்கும் உவமைகளுள் சிலவற்றை நோக்குவோம்:

அழுக்கானது உடலின் வனப்பைக் குறைக்கும். எனவே, அவ்வழுக்கை நீரினால் கழுவித் தூய்மைப்படுத்திவிட்டால், உடல் அழகு பெறும். இதுபோன்றே, இவ்வுடலாகிய ஆடையினைத் 'தௌபா' என்ற பிழைபொறுக்கத் தேடலால் தூய்மையாக்கி, இதயத்தில் இறைவனைத் தவிர வேறொன்றுக்கும் இடமில்லை என்று வெறுத்தொதுக்கினால், பாவம் நீங்கிப் பரிபக்குவம் அடையலாம் என்பது அப்பா அவர்களின் ஆழிய கருத்து.

"உடுதுகி லழுக்கை நீக்கும்
உவமைபோ லுணர்ந்த நீங்கள்
அடுதவ வசனந் தவுபா
ஆடையை யுடுக்கு மாப்போல்
இடுதவங் கமலத் தில்லென்(று)
ஏற்றிடப் பாவந் தீரும்
முடுகுவா ரறுஷின் மேலோன்
முகப்பத்தி லாவா ரன்றே."

இறைச் சந்நிதியை அடைந்து இறையன்பைப் பெறப் புலவர் ஞானியார் கூறும் வழி இதுதான்.

'தான்' என்ற அகந்தையைப் போக்கித் தகைமை பெற்றோர் ஞானியர். இறைவனைத் தவிரப் பிறர் யாருக்கும் எதற்கும் அஞ்சாத மனவுறுதி பெற்றவர்கள் அவர்கள். இத்தகு இரு தன்மைகளும் வாய்த்தால், மனித வாழ்வில் பாவமென்பதே நிகழாது. இக்கருத்தை விளக்க,

"நெஞ்சே யுனக்குநலம் நீயும்நா னும்மெதிர்த்தால்
அஞ்சே னெருத்தருக்கு மாதிதனக் கேயொழியப்
பஞ்சது நெருப்பிலகப் பட்டதுபோற் பாவமெலாம்
பிஞ்சோடிப் போயிருக்கப் பேறுபெற்றாய் நெஞ்சகமே"

என்று ஓர் உவமையை உள்ளடக்கிப் பாடுகின்றுர்கள் பீரப்பா. நெருப்பு பிற பொருள்களைக் கரிப்பதைவிடப் பஞ்சை விரைவில் கரித்துவிடும். இதுபோன்றே, 'நான்' என்ற அகந்தை போக்கி, இறைவனை அஞ்சும் பக்குவம் வந்து விட்டால், அதுவே பாவத்தைப் போக்கும் கருவியாகிவிடும்.

நம்மையாளுடையானுகிய நாயனை நமக்குள்ளேயே ஆராய்ந்தறிந்து கொள்ளலாம். அவ்வாறு அறியும் பக்குவமற்று, ஆண்டவனைத் தேடி அலைகின்ற மனிதர்க்கு ஓர் உவமையைக் காட்டுகின்றுர்கள் பீரப்பா. இறைவனை வணங்கி ஓர்மையுடன் இருக்கும்போது அவனது தன்மை என்னவென்பதைக் கண்கூடாகக் கண்டு கொள்ள முடியும். அவ்வாறு வணங்கி, நம் உடம்பினுள்ளேயே நம்மைப் படைத்த இறைவனின் வல்லமையைக் கண்டுகொள்ளாமல் அவனைத் தேடி அலைகின்ற மாந்தர், கணவனில்லாமல் இன்பம் சுகிக்கும் பெண்களுக்கு ஒப்பாவர் என்று உவமித்துக் கூறுகின்றனர் ஞானியார்.

"தெரிசனை யாக விருக்கின்ற போது திருமறையோன்
பரிசனை யேதென்று பார்த்திருந் தேனையிப் பாருலகில்
அரசனை மெய்யுள் ளறியாத மாந்த ரலைவதெல்லாம்
புருசனில் லாத மடவாள் சுகித்த பொருளொக்குமே."

இறைவன் எங்கும் நிறைந்தவன். எனினும், அவனுடைய உள்ளமையை உணர்வதற்குப் போதுமான சான்றுகள் நம் உடல் முழுதும் நிறைந்துள்ளன என்பது தக்கலை ஞானியாரின் பக்குவக் கருத்து. இக்கருத்தினை வலியுறுத்துவது போன்று திருமூலர் தம் திருமந்திரத்தில் பின்வருமாறு பாடியுள்ளதும் ஈங்கு ஒப்பு நோக்கத் தக்கது :

"உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே யுத்தமன் கோயில்கொண் டானென்(று)
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே."

இறைவனேடு இணைந்த தொடர்புடைய நாதாக்கள் ஊசியுடன் கோக்கப்பட்ட நூலினைப் போன்றவர்கள் என்ற அருமையான உவமையை அடுத்தொரு பாடலில் எடுத்துக் கூறுகின்றுர் புலவர் ஞானி. இரண்டு துணிகளை ஊசியும் நூலும் சேர்ந்து எவ்வாறு இணைக்குமோ, அவ்வாறே இறைவழியில் மனிதர்களை இணைத்து வைப்பர் இறைநேசர்கள். அத்தகையோர் தம் இதயக் கமலத்தினுள்ளே இறைவனைக் கண்டு, நொடிப்பொழுதும் விடாது துதித்துக் கொண்டிருப்பர். கண்ணிமைகளை மூடிப் பார்வையை

மேலே செலுத்தி இறைதியானத்தில் மூழ்கும் துறவிகட்கு, அவர்களின் நெற்றி நடுவில் ஞானஜோதி நின்றுடுவது தோன்றும். இத்தகைய ஞான நாதாக்கள் புவிப் பொருள்களை எங்ஙனம் நாடுவர்? இக்கருத்துகளை உள்ளடக்கிய உவமைப் பாடல் இதோ:

"நாசிக்கு மேலே நெற்றி
நடுவினின் றுடுஞ் சோதி
ஊசிக்குள் நூலும் போல
உள்ளம்விட் டகன்றி ராது
வாசிக்குங் கமல வட்ட
வடிவினை நோக்கிப் பார்த்துப்
பூசிக்க வல்லோர் பூமிப்
பொருளைவிட் டகல்வா ரன்றே."

ஞான வழிச்செலவுக்கு ஆன்மீக ஆசான் ஒருவரின் துணை இன்றியமையாதது. ஆசான் இல்லாத ஞானம் எத்துணை உயர்ந்ததாயினும், பயனில்லை. இது போன்றே, ஞானப் பாட்டையில் செல்லப் பக்குவம் பெற்ற சீடன், தான் பெற்ற அறிவைக் கொண்டு நற்குண நல்லொழுக்கங்களில் நடக்காவிடில், அவன் பெற்ற ஆன்மீக அறிவால் பயனேதுமில்லை. அடிப்படையின்றி நிகழ்த்தப்படும் அற்புதங்களும் அத்தகையனவே. தெளிவில்லாத அறிவும், இறையச்சத்தால் உருகாத நெஞ்சமும் — உண்மையுணர்வற்ற இவையனைத்தும் எதற்கு ஒப்பானவையாகின்றன தெரியுமா? அணையாத ஒளிச்சுடரைக் கண்டும், பாதையை அறிவிக்கும் சாதனமாக அதனைப் பயன்படுத்திக் கொள்ளாத பேதமை நிலைக்கு ஒப்பாகும்.

"குருக்களற்ற ஞானமுங் குணங்களற்ற சீடனும்
கருக்களற்ற வித்தையுங் களங்கமுற்ற புத்தியும்
உருக்கமற்ற நெஞ்சமும் உணர்ச்சியற்ற விவையெலாம்
சுருக்கமற்ற சோதியைத் தொடர்ச்சியற்ற தொக்குமே."

தாம் கொண்ட கருத்தினை எத்துணை அருமையான உவமை நயத்துடன் பீரப்பா அவர்கள் பாடுகின்றார்கள் பாருங்கள்!

இவை போன்று இன்னும் பல உவமைப்பாக்கள் பீரப்பாவின் 'ஞானமணி மாலை'யின்கண் விரவியுள்ளன. அவை எனது சிற்றறிவிற்கு எட்டாத ஞானக் கருத்துகளுடன் பின்னிப் பிணைந்துள்ளதால், அவற்றை விளக்கத் தகுதியின்றி விடுத்தேன்.

# ஞானகுரு துணைகூட்டும் ஞானப் பாடல்கள்!

மௌலவி மூ. முஹம்மது ஹஸன் காதிரி,
*ஆசிரியர், நற்சிந்தனை, காயல்பட்டணம்.*

## மன்னித்திடுக!

தக்கலை மெய்ஞ்ஞான மேதை ஹஜ்ரத் பீர்முஹம்மது அப்பா (றஹ்) அவர்களது தத்துவ மிக்க பாடல்கள் அனைத்துமே எனக்கு மிக மிகப் பிடித்தமானவை. அவர்களது வைபவம் நடைபெறும் சிறப்பு நன்னாளில் 'ஞானப் புகழ்ச்சி' படிக்கும் நேரம் என்னை மறந்து சன்னிதானத்தில் அப்படியே உட்கார்ந்து விடுவேன்; நேரில் அப்பா அவர்கள் பாடிடக் கேட்கும் உன்னத பரவச நிலையை உணர்ந்து இன்புறுவேன்; ஒரு நாள் இரவு தனித்து அவர்கள் சன்னிதானத்தில் அமர்ந்திருந்தபோது, வேறு யாரும் இல்லாத நடுநிசி நேரத்திலே, அங்கு மனிதர் நடந்திடும் காலடி அரவம் நல்லபடி கேட்டுள்ளேன். உயிரோட்டமுடைய ஞானப் பாக்களை தமிழகத்திற்கு அள்ளித் தந்த அப்பா அவர்களது ஆத்ம ஞானத் தொடர்பு நம்மனைவருக்கும் வாய்த்திடுமாக!

அப்பா அவர்களின் பாடல்கள் அனைத்துமே பேரின்ப நயம் சொட்டுபவை! பேரானந்தக் கனிகள்! இவற்றில் இன்ப நயம் பெற முற்படும்போது அது பெருமிதமாகவே ஆகிவிடும்! நீண்டதாகத்தான் ஆகிவிடும்! அவ்வாறு உணரின் தயவு செய்து என்னை மன்னித்திட வேண்டும்!

## பெரியவர் உண்மையில் யார்?

ஞான அனுபவமுடைய அறிஞர்கள் இதனை அழகுறக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்கள்.

"பொன் வெள்ளி செய்தோனும் பெரியோனல்ல
புகழான அஷ்ட சித்தி பெரியோனல்ல
மூச்சடக்கி எழும்புபவனும் பெரியோனல்ல
சின்னமென்ற குழியிருப்பும் பெரியோனல்ல
தன்னிலை அறிந்தவனே பெரியோனாகும்
தாரணியில் இதை அறியார் சண்டிமாடே."

ஆம் உண்மையில் தான் யார் என்ற தன்னிலை அறிந்தோரே பெரியோராவர். தன்னை அறிந்திடில் தன் தலைவனை, நாயனை அறிந்திடும் பேரானந்த வாய்ப்பு கிட்டிடும்.

இந்த ஆனந்த நிலையின் பரிசினையே 'மன் அரப நப்ஸஹு, பகத் அரப ரப்பஹு' என்ற அமுதமொழி அறிவித்துக் காண்பிக்கின்றது.

## பரமானந்த நிலை

நாம் யார்? முஸ்லிம்கள்; மூமின்கள். இறைவனுக்கு முற்றுக நம்மை அர்ப்பணித்திட்ட விசுவாசிகள்.

நாம் ஈமானைப் பற்றி நன்கு தெரிந்துள்ளோம். இஸ்லாமைப் பற்றி விளங்கி அறிந்துள்ளோம். ஆனால், 'இஹ்ஸான்' என்பதனைப் பற்றி விரிவான விளக்கம் பெற்றிருக்கிறோமா? சொற்பப் பேர்களே அதுபற்றி அறிந்திருக்கிறோம்; புரிந்திருக்கிறோம். அதிகமான பேர்களுக்கு அது புதிதாகவே இருக்கும். வேறு பலருக்கு அது புதிராகவே இருக்கும்.

எம்பெருமானார் முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) அவர்கள் அது பற்றித் தெளிவுபட விளக்கம் தந்துள்ளார்கள்.

இஹ்ஸான் என்பது [அன்-தஃபுத-றப்பக-கஅன்னக-தராஹு] "உமது நாயனைக் கண்ணாரக் கண்டதே போன்று வணங்கி வழிபடுவதாகும்" என்று அண்ணல் (ஸல்) அவர்கள் அமுத வாயால் உரைத்துள்ளார்கள்.

இத்தகைய பரமானந்த நிலை அமைந்திட வேண்டுமானால், அகத்தெளிவு பெற்ற, சம்பூரண (காமில்) புருஷர்களான, குருநாதர் (ஷெய்குமார்)களது ஆத்மீகத் தொடர்பு பெற்றிடல் வேண்டும்.

[வ கூனும அஸ்ஸாதிகீன்] "மெய்ப்புருஷர்களுடன் நீங்கள் கூடிச் சேர்ந்திருங்கள்" என்ற திருமறைக் கட்டளையும் இத்தகைய மகானுபாவர்களைப் பற்றியே சுட்டிக்காட்டுகிறது

என்று மெய்ஞ்ஞான மேதைகளான ஆரிபீன்கள் விளக்கம் தருகிறுர்கள்.

"'இஹ்ஸான்' என்னும் உயர் மர்த்தபா (படித்தரம்) சம்பூரணக் குருவின் பராமரிப்பின்றி வாய்த்திட முடியாது" என்பது பெரியோர்களுடைய அனுபவநிலை. இவ்வாருக, 'பைஜுல் ஹபீப்' என்ற உயரிய நூலில், முர்ஷிதுப் பெரியார் (றஹ்) அவர்கள் ஆதாரபூர்வமாக எடுத்துரைக்கிறுர்கள்.

ஞானப் பழம் வேண்டுமானுல் குருநாதருடைய ஞானத் தோட்டத்திற்கு வந்திடவேண்டும். அன்னையின் வயிற்றில் சிசு கருவுண்டாக வேண்டுமாயின் தந்தையின்றி முடியுமா? இல் வாழ்வு இன்பம் சுகித்திட மனைவிக்குக் கணவன் இல்லாமல் நடை பெறுமா? பேரானந்த மஅரிபத்தின் ஞானப் பாக்கியம் பெற்றிட ஞானகுரு, ஷைகு இல்லாமல் சாலாது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. சாவலின்றி கோழி முட்டையிடுமா?

இதனையே ஞானமகான் பீர்முகம்மது அப்பா (றஹ்) அவர்கள் தங்களது 'பிஸ்மில்குறம்' பாடலில் அழகுற வருணித்துப் படம் பிடித்துக் காட்டுகிறுர்கள். இப்பாடல்கள் என் உள்ளத்தை வெகுவாகக் கவருகின்றன. நீங்களும் படித்துப் பாருங்கள்! சரிதான் என்பதை உணர்வீர்கள்!

"வழியான குருவில்லாத வணக்கம் முழுதெல்லாம்
வையகத்தில் புருடனில்லாள் வாழ்ந்த சுகமொக்கும்
தெரியாத குருமாரின் திருமொழி கேட்பதுதான்
தெரிவையவர்கள் குசருவைச் சேர்ந்திருந்த துவமை
சரியான குருவில்லா வணக்கமுள தெல்லாம்
சாவலில்லாக் கோழி முட்டையிட்டது போலுவமை"

ஆஹா! என்ன அருமையான உவமைகளுடன் கூடிய விளக்க போதம்! குருமார்கள் காமில்—சம்பூரணமகான்களாக இருத்தல் வேண்டும் என்பதனையும் நிபந்தனையிட்டுள்ளார்கள். சரியை, கிரியை, யோகம், ஞானம்—ஷரீஅத், தரீகத், ஹகீகத், மஅரிபத் பற்றிய ஞான விளக்க முடையவர்களாய் ஆகி இருத்தல் வேண்டும்.

ஷரீஅத்துடைய பேணிக்கையினின்றும் வழி பிசகிடாமல் மெய்ந்நிலையளவில் அந்த மகானுபாவர்கள் தீன் வனப்புடன், சன்மார்க்கப் பொலிவுடன் கொண்டு சேர்ப்பர் என்பதனை அழகுற விளக்கித் தருகிறுர்கள் அப்பா அவர்கள். இதோ, படியுங்கள்!

"அறிய குருமாரு மற்ற அசடரையு மறிய
அறிவு புத்தி யுள்ளவர்க்கு அறிவுவரச் சொல்வேன்
பெரியவர்கள் ஷறஹு"டைய பிசகாத வணக்கம்
பிரியா வகை நிறுத்திவைப்பார் தீன்குலத்தின் வளமை"

ஒப்புவயர்வற்ற ஞானப்பிரகாச விளக்கத்தை இவ்வண்ணம் தமிழுலகத்திற்கு இனிதே தருகின்ற அப்பா அவர்கள் மிகப் பெரிய ஞானமேதை. இவர்களைப் 'பீர்' என்று அழைக்கிறோம். ஆம்! 'பீர்' என்பதற்கு நேர்பாடான அரபிப் பதம் 'ஷைகு' என்பதாகும். 'ஷைகுல் அக்பர்' என்ற ஞானப்பழம், ஹஜ்ரத் முஹ்யித்தீன் இபுனு அறபி (றஹ்) அவர்களது பிரதி பிம்பமாகவே தமிழ்ப்பூமிக்கு அல்லாஹ் தந்த வரப்பிரசாதம் ஹஜ்ரத் ஷைகு பீர்முஹம்மது அப்பா (றஹ்) என்று மேதைகள் பலர் சிறப்புறப் புகழுரை செய்திருக்கிறார்கள்.

ஞான குருவை நாடாமை, அவர்கள் உபதேசம் பெறுமை, அவர்கள் சகவாசம் அடையாமை, மெய்யடியார் (ஸாதிகீன்) களான அவர்களது தொடர்பு வேண்டாமை எத்தகைய ஈன நிலை என்பதனை, குருமகான் பீர்முஹம்மது ஸாஹிபு வலியுல்லாஹ் (றஹ்) தங்களது ஞானப் புகழ்ச்சியில் விமரிசித்துச் சொல்கிறார்கள் அழகுற.

இதோ, உள்ளத்தைக் கொள்ளை கொண்டு வசீகரிக்கும் அப் பாடல்களைப் படித்துப்பாருங்கள்!

முந்தக் கிருபை பெருகிமுத்தான முஹம்மதை நீ
யெந்தக் கிருபை திங்களை த்தா யிறை நீயெனவும்
வந்தக் குருவிடஞ் சேராம லுன்னை வணங்குதற்கோ
இந்த லுத்தரையும் படைத்தா யெம்மிறையவனே!

பொல்லா தவனுண்மை சொல்லா தவனைம் புலன்கள்தம்மை
வெல்லா தவன்றவம் விரும்பா தவன்மெய் யடியவர்பின்
செல்லா தவன்சிந்தை செய்யா தவனின் றிருவடிக்கன்
பில்லானை யேதுக்கு நீபடைத்தா யெம்மிறையவனே!

மேலும், கலிமாவின் இன்பரசத்தை கருத்திலிருத்தித் தருபவர் குருமகானே என்பதனை, அப்பா அவர்கள் பிஸ்மில் குறத்தில் ஈரடியில் அழகுறச் சொல்கிறார்கள்.

"கலிமாவை யறிந்து கருத் தினிலிருத்திக்
காரணத்தைச் சொல்பவரைக் குருவென்று கருதலாமே"

ஞான குரு அவசியம்தானு, அல்லவா என்பதனைப் பற்றிய தீர்ப்பை சன்மார்க்க அறிவுக்கருவூலங்களான மகானுபாவர்கள்

யாது கூறியுள்ளனர் என்பதனையும் இச்சந்தர்ப்பத்தில் சிறிது நோட்டமிடுவோம். நோட்டமிட்டுப் பயன்பெறுவோம்!

'சத்திய சன்மார்க்க ஞானச் சான்று' 'ஹுஜ்ஜதுல் இஸ்லாம்' என்ற சிறப்புப் பெயர் பெற்ற மஹான், இமாம் கஸ்ஸாலீ (றஹ்), அவர்கள், "மெய்ஞ்ஞான சொரூபர்களான உத்தம மகான்களின் சகவாசம் மாபெரும் பயனை உண்டாக்கித் தரும்" என்று பட்ட வர்த்தனமாகப் பகர்ந்துள்ளார்கள்.

ஞான குரு ஷைகுக்குக் காண்பிக்கப்படும் மரியாதை எத்தகையது என்பதனை ஞானப் பழங்களான ஞானமுதிர் பெரியார்கள் குறிப்பிடுவதைக் காணும்போது நெஞ்சம் நெகிழ்கிறது; சிந்தை சிறக்கிறது.

'புதூஹாதுல் மக்கிய்யா' எனும் ஞான நூலில் தரப்படுகின்ற இவ்வாசகத்தைப் பார்த்திடுவோம்!

"ஷைகுக்கு (குருநாதருக்கு) கௌரவம் அளிப்பதில் அல்லாஹ்வுக்குக் கௌரவம் தருவது அடங்கியிருக்கிறது. ஷைகுக்கு உரிய உரிமைகள் அல்லாஹுத்தஆலாவுக்கு உரிய உரிமைகளாகும்."

இன்னமும், சிறப்பாக, முஜத்திது அல்புதானி, ஷைகு அஹ்மது ஸஹ்ரந்திய்யில் பாரூக்கீ (றஹ்) கூறியுள்ளார்கள்: "ஷெய்கானவர் அல்லாஹ்வின் றஸூலுடைய பிரதிநிதியாவார். அனுப்பப்பட்டவருக்கு மரியாதை செய்வது அனுப்பியவருக்கு மரியாதை செய்வதாகும்."

ஹஜ்ரத் கௌதுல் அஃளம், மஹ்பூபு ஸுபுஹானி, முஹ்யித்தீன் அப்துல்காதிர் ஜைலானீ (றஹ்) அவர்கள் தங்களது ஞான போதங்களில் வெகுவாக விளக்கியிருக்கின்றார்கள். அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்:

"ஞான மகான்களான குருநாதர்களின் பாத தூளியாக நீ ஆகிவிடு. அவர்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பதன் மூலமே சித்தி பெறமுடியும்—ஞான வழி காட்டும் குருநாதரைக் கண்டுகொள்ளாதவன் வெற்றியுற முடியாது—ஆதிகாலந் தொட்டே அல்லாஹுத் தஆலா ஆத்மார்த்திக (ரூஹானிய்யத்) சம்பந்தமான போதனை செய்யும் மகான்களைத் தரிபாடாக்கி வைத்துள்ளான். உலக முடிவு காலம் வரை அவர்களது அமைப்பு இருந்து கொண்டே வரும்"

ஞான குரு இன்றி ஞானபோதனைப் பாக்கியம் அடைந்தவர்கள் படைப்பினங்களில் அபூர்வமாக ஒரு சிலரே. அவர்கள் நமது நபிகள் நாதர் (ஸல்) அவர்கள், ஹஜ்ரத் இபுராஹீம் நபி (அலை)

அவர்கள், உவைசுல்கர்னீ (றலி) ஆகியவர்களைப் போன்றவர்கள் அபூர்வத்திலும் அபூர்வமே. மற்றோர்களெல்லாம் ஞான வழியில் ஞான குருவை அடைந்தே முன்னேற்றம் பெற்று வெற்றி அடைந்துள்ளனர்.

ஞான குருவின் அவசியம் பற்றித் திருமறை குர்ஆனில், ஸூறத்துல் கஹ்பில் நபி மூஸா (அலை) அவர்கள், நபி கிலுறு (அலை) அவர்களைச் சந்தித்து சகவாசித்துப் படிப்பினை பெற்ற விளக்கங்கள் உறுதிபடுத்துகின்றன.

சங்கைக்குரிய பெரியார் அப்துல் வஹ்ஹாபுஷ் ஷஃறானீ (றஹ்) அவர்கள், "எவ்வளவுதான் பெரிதும் கற்றுத் தேர்ந்த ஆலிம் அறிஞர்களாயிருப்பினும் ஞானத்துறையில் வெற்றி காண்பதற்குக் குருநாதரான ஷைகைத் தேடிப் பெறுவது (வாஜிபு) அத்தியாவசியக் கடமை என்று ஹஜ்ரத் இபுறாஹீமுத் தஸூக்கீ (றலி) அறிவித்துள்ளார்கள்" என்பதாகத் தங்களது நூலில் வரைந்திருக்கிறார்கள்.

எனவே, ஞானவழி நடக்க ஒரு ஷைகு உடைய ஆன்மீகத் தொடர்பு அவசியம் தேவை. நமக்குத் தீட்சை தரும் ஷைகு, தனது ஷைகுடைய ஆத்மீகத் தொடர்பில் நம்மை இணைத்திடுவார். அந்த ஷைகு தமது குருநாதரிடம், அன்னவர் தமது குருநாதரிடம் இப்படியே சங்கலித் தொடர் (ஸில்ஸிலா) போன்று, ஆத்மீக (வயர் கனக்ஷன்) வடத் தொடர்பு — ஹஜ்ரத் குத்புல் அக்தாபு, கௌதுல் அஃளம் முஹியித்தீன் (றலி) அவர்கள் மூலம், கடைசியில் ஞான நகரத்தின் மூலபீடம் ஹஜ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் சமுகம் ஞான நகரத்தின் நுழைவாயில் ஹஜ்ரத் அலி (கர்ரமல்லாஹு வஜ்ஹஹு) அவர்கள் வழியாக ஆத்மார்த்திகத் தொடர்பைப் பெறச் செய்திடுவார்கள்.

"அல் உலமாஉ வரததுல் அன்பியாஇ" — "உலமாக்கள் நபிமார்களின் அனந்தர வாரிசுகள்", "அஷ்ஷைகு பீ கௌமிஹி கந்நபிய்யி பீ உம்மத்ஹி" — "உம்மத்துகளுக்கு நபி இருப்பது போன்று ஞானச் சீடர்களுக்கு ஷைகு உள்ளார்" என்ற ஹதீது மணிமொழிகள் ஷைகுடைய சிறப்பை எடுத்துக்காட்டப் போதுமானவை.

பூஅலிஸீனா தலைசிறந்த வைத்திய மேதை மாத்திரமல்லர்; தத்துவ சாத்திரத்திலும் நிபுணத்துவம் பெற்றவர்; மார்க்கக் கலைகளையும் கற்றறிந்தவரே. எனினும், ஆத்ம ஞானத்துறையில் அவர் கவனம் செலுத்தவேயில்லை. அவரது மரணத் தருவாயில், அவர் தமது சீடர்களை நோக்கி, "நண்பர்களே! யாது சொல்வேன்! எனது நெஞ்சத்திலிருந்த அனைத்துக்கலைகளும் இத்தருணம்

ஒன்றுக்கும் உதவாதனவாய் வெளியேறி விட்டன. இப்படி நிகழும் என நான் முன்பு உணர்ந்திருப்பின் இவற்றை எல்லாம் அள்ளிக்கட்டாமல் ஆத்ம ஞான அறிவுகளைப் பெற்றிருப்பேனே! 'மன்அரபநப்ஸஹு Fபகத் அரப Fறப்பஹு' என்ற பேரின்ப நயம் கிட்டாமலாகி விட்டதே! இதனால் பூஅலி பேதையாகவன்றோ செல்கிறான்'' என்று கண்ணீர் வடித்துச் சஞ்சல மிகக் கொண்டு கூறினாராம்.

பஜ கோவிந்தத்திலும் ''குரு சரணம்புஜ நிர்பர பக்த — ஸம்ஸாரத் அசிராத் பவமுக்த'' — ''குருவை நம்பு, முற்றிலும் நம்பு, வாழ்க்கைத் துயரத்தினின்று விடுதலை அடைவாய்'' என்று கூறப்பட்டிருப்பதாக ஹிந்து சமயப் பெரியார்களும் அறிவிக்கின்றார்கள்.

மௌலானா றூமீ (றஹ்) அவர்கள் தங்களது மஸ்னவீ ஷரீபில் அறிவித்துள்ளார்கள்:—

''சிறந்த ஞான குரு உடைய அருள் பார்வை உன்மீது படாத வரை நீ உனது உள்ளமை பற்றிய ஞான இன்பத்தைப் பெறவே மாட்டாய். ஷைகு உடைய அருள் நிழலால்தான் உனது இச்சை என்னும் நப்ஸானியத்தைக் கொல்ல முடியும். ஆகையால், அந்த ஷைகு மகானுடைய முந்தானையைப் பற்றிப் பிடித்துக் கொள்! நீ கருங்கல்லாக இருப்பினும், சலவைக் கல்லாக இருப்பினும் அந்த ஷைகுக் குருநாதர் உடைய தொடர்பினால் நீ வைரமாக மாறி விடுவாய்!''

ஸஹீஹுல் புகாரிக்கு ஷரஹு, விரிவுரை எழுதியுள்ள, மாபெரும் மேதை, ஹஜ்ரத் இபுனுஹஜர் (றஹ்) அவர்கள் உரைத்துள்ளார்கள்:— ''அல்லாஹ்வின் அளவில் ஞானவழி நடக்கும் தாலிபுக்கு உரிய கடமை, சம்பூரணத்துவமுடைய காமிலான, ஆரிபான, ஷெய்கைத் தனக்கு வழிகாட்டியாக அமைத்துக் கொள்வதாகும்'' என்பதாக.

ஞான மேதை, காயல்பதி, தைக்கா ஸாஹிபு வலீ நாயகம் (றஹ்) அவர்களது அருமைத் தந்தை, ஹஜ்ரத் உமர் வலியுல்லாஹ் (றஹ்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்கள்:—

பொய்யுங் களவும் பொருந்தி யிருக்கிற
புந்தியை நந்தி பொருட்ட தினாலே
மெய்யாய் விளங்கியே வேதப் பொருளதை
விஸ்தார மாகவே வுஸ்தாது கிருபையால் —
கல்லைக் கழுகினாலே கரைசேரலாம்
கையைக் கழுகினதால் இறைபோமோ.

இருளிலிருந்த பொருளை வெளியாக்க
எண்ணெயுந் திரியுமெரியும் விளக்குமாய்
குருதரும் பொருளு முடலுமுயிருங்
கூட்டியே மூச்சுடன் நாட்டியே தீபத்தால் (கல்பைக்...)

இத்தகைய பேரின்ப அனுபவ நிலையில் வெற்றியடைந்த அந்த உத்தமப் பெரியார், தங்களது குருவான ஹஜ்ரத் புகாரித் தங்கள் (றஹ்) தம்முடன் எப்போதும் ஆகியுள்ளார்கள் என்ற அனுபவ நிலையை, இவ்வாறு அறிவிப்புச் செய்கிறார்கள்.

நாட்டந் தருமின்ஸான் காமில் முகம்மிலாம்
நந்தியாம் ஸெய்யித் முஹம்மது புகளியைத்
தேட்டமா யெப்போதும் புந்தியில் நாட்டியே
சிந்தை செய்தவுடன் வந்தருள் செய்குவார் (கல்பைக்...)

காமிலான, முர்ஷிது ஷைகு, குருநாதர் உடைய தொடர்பு அடைந்தால் பொல்லாப் பொறிகளின் தீதுகளை அகற்றி, ஜமாலியத் தான பேரின்ப ஞானக் காட்சிகளைக் ஷுஹூது செய்யலாம், இல்லாவிடில் எத்தகைய விபரீத விளைவு ஏற்படும் என்பதனை மேலும் உமர் வலியுல்லாஹ் அப்பா (றஹ்) அவர்கள் விவரிக் கின்றார்கள்:—

பொல்லாப் பொறியும் புலனுங் கரணமும்
போக்கி ஜமாலை ஷுஹூது செய்யாதவர்
எல்லாக் கிதாபு மெழுத்தற வோதினும்
எரிநரகிற் சென்று வீழ்வாரது நிசம் (கல்பைக்...)

தக்கலை மேதை அவர்கள், குருநாதர் உபதேசம் பெறுவது கடமை என நமக்கு அறிவுறுத்துவதன் அவசியம் நமக்கு நன்கு பயன்தரவல்லது என்பதை மேற்சொன்ன விளங்கங்களினால் மனப்பூர்வமாக ஒத்துக்கொள்வோம்.

இறைவனது படைப்பினங்களில் ஒவ்வொன்றிலும் ஜோடி இருப்பதேபோன்று, ஷைகுமார்களிலும் அசலும், போலியும் அமைந்துள்ளன. அசலானவர்கள் ஷரீஅத்தினுடைய வரம்பை விட்டும் அணுவளவும் வழுவாமல் பேணி, கமாலியத் எனும் சம்பூரணத்தன்மை பெற்றவர்களாக இருப்பார்கள். போலியானவர்களோ வெறும் கோலங்களாலும், வாய் வார்த்தைகளாலும் உலகாதய நன்மையைநாடிப் பலவிதமாகப் பேசித்திரிவர். இதையே தக்கலை ஞான வள்ளல் பீர்முஹம்மது அப்பா அவர்கள் கடினமாக விளக்கிச் சொல்கிறார்கள்.

“அறிய வுபதேசஞ் செய்யு மருள்குருமார் தன்னில்
அதிலும் ரண்டு விதமுண்டு வறியவகை சொல்வேன்
பீரானபீர் பெரிய பீரு ஜாதாவுண்டும்
பீருஜாதா வேஷம்பூண்ட ஹறும் ஜாதாவுண்டும்”

ஆகவே, மக்களே! போலிகள் ஜாக்கிரதை என்று எச்சரித்துள்ளார்கள்.

பீர் அப்பா அவர்களின் இத்தகைய போதனைப் பாக்களெல்லாம் உள்ளங்களைக் கொள்ளைகொள்பவையாக உள்ளன; உண்மையிலேயே உள்ளத்திற்கு உயிரூட்டம் தருபவைகளாக அமைந்திருக்கின்றன. கல்கண்டின் எப்பகுதிதான் இனிமை குன்றி இருக்கும்? அதேபோல அப்பா அவர்களின் அமுதப் பாடல்கள் அனைத்துமே உள்ளங்களை வசீகரிப்பனவாகவே உள்ளன. எனக்கு மிகமிகப் பிடித்தமானவை மேலே குறிப்பிட்டனவும், பின்வரும் 'ஆதம்பெறு மக்களெல்லாரிலும் நம்மை' என்ற பாடலும். இப்பாடல் எனது உள்ளத்தில் நீங்காப் பசுமை உடையதாகப் பதிந்து போயிருக்கிறது. படித்துப் படித்து, பாடிப் பாடி, இன்புறுவேன். நீங்களும் இன்புற்றிடுங்கள்!

ஆதம்பெறு மக்களெல்லா ரிலுநம்மை அன்புகொண்டே
வேதநபி யிறசூ லும்மத் தாக்கினனந்த வெகுநன்றிக்குப்
பாதங்கள் மேலும் சிரங்கீழு மாய்ப்பத்து நூறு யிரமாண்
டோதித் தவஞ்செய்தா லும்போதா தவனன்றுகந்ததற்கே.

அல்ஹம்துலில்லாஹ்! நம்மை அந்த உம்மத்து முஹம்மதிய்யாவில் ஆக்கிவைத்த அல்லாஹ், வெற்றியடைந்த, ஆத்மீகத் துறையில் சித்தியடைந்த, நல்லோர்களின் கூட்டத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட ஸுன்னத்வல் ஜமாஅத்து கூட்டத்தில் நம்மை ஆக்கி அருள்வானாக. ஆமீன்! தக்கலை ஞானமாமணி பீர்முஹம்மது அப்பா அவர்கள் பிஸ்மில்குறத்தில் முடிவுரையாகக் கூறும் 'துஆ'வுடன் நாமும் இதைப் பூர்த்தியுறச்செய்கிறோம்.

"துய்யவன் றன்தூதரி ரஸூல் பொருட்டினாலே
ஸுன்னத்து ஜமாத்துடனே சூழ்ந்த குழுவாக
மெய்யாகச் சொர்க்ககதி மேன்மையுள்ள பதவி
மெத்தவெற்றி பெற்றநபி யுற்றகொலுச் சார்பில்
ஐயமற சொர்க்கத்தி யரசுகொலுவாக
அல்லா கொடுத்தருள்வானே ஆமீனுமீன் ஆமீன்!"

# இஸ்லாமியச் சித்தர்


சௌ. மதார்மைதீன், எம். ஏ.
அரசினர் ஆடவர் கல்லூரி, கும்பகோணம்.


சித்துக்களில் வல்லமை பெற்றவரே சித்தர். சித்தன், சித்தம், சித்து, சித்துவிளையாட்டு, சித்தாந்தம், என்ற சொற்கள் எல்லாம் 'சித்' என்ற வேரை அடிப்படையாகக் கொண்டு முகிழ்த்த சொற்கள் ஆகும். சித்தர்களைப் பற்றிக் கூறும்போது பேராசிரியர் தெ. பொ. மீ. அவர்கள் "கடவுளைக் காண முயல்பவர்கள் பக்தர்கள்; கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள்" என்று கூறுகின்றார். சித்து என்ற சொல்லுக்கு மறைவை அறிதல் என்றும் ஒரு பொருள் கூறப்படுகின்றது. கடவுள் நமது புறக்கண்களுக்குப் புலப்படாமல் மறைவாய் இயங்கும் மாபெரும் ஆற்றல். இவ்வாற்றலை அதாவது இறையின் ஏற்றத்தைத் தம் மகக்கண்ணால் கண்டவரே சித்தர் என்று கூறுவோமானால் அச்சித்தர்கள் யாவர் ? என்ற வினாவிற்கு ஏற்றதொரு விடையாக இருக்கும். கடவுள் என்பது "மெய்ஞ்ஞானப் பரம்பொருள்" இப்பொருளைப் பார்க்கின்ற பேராற்றலைத் தம் உள்ளத்துக்கு ஏற்படுத்தும் கலையே 'சித்து' ஆகும். இருதய நோயாளி ஒருவனுக்கு அதிர்ச்சிதரும் செய்திகள் கூறப்படுவதில்லை. ஏன்? அந்தச் செய்தியை, அதாவது அந்தக் கருத்தை அவனது மென்மையான இருதயம் தாங்காது என்பதுதான் காரணம். இதுபோல இறைவனை உணர்வது என்பது சாதாரணமான நிகழ்ச்சியில்லை. இறைவனை நம்புவது எல்லாராலும் இயலும், ஆனால் இறைவனை உணர்வதற்கு உள்ளத்தில் வலிமை மிகவும் வேண்டும். உள்ளத்தில் பக்குவம் வேண்டும் இந்தப் பக்குவத்திற்குப் பெயர்தான் 'சித்தி'. இதைத் தான் சித்துக்களின் மூலம் பெறுகின்றனர். இதைப் பெற்றவர்

தான் சித்தர்கள். இந்தச் சித்துக்களை (அஷ்டமா சித்துக்கள்) எண்வகைச் சித்துக்கள் என்று கூறுகின்றனர். அவையாவன... அணிமா, மகிமா, இலகுமா, கரிமா, பிராப்தி, வசித்துவம், பிராகாமியம், ஈசத்துவம் என்பவையாம். இப்படிப்பட்ட அட்டமா சித்து பெற்ற தமிழ்நாட்டுச் சித்தர்கள் பதினெட்டு பேர். இவர்களுள் ஒருவர்தான் தக்கலை ஞானி பீருமுகமதப்பா அவர்கள் ஆவர். இவர் இஸ்லாமியச் சித்தர். இஸ்லாம் மதத்தில் தோன்றிய தமிழ்நாட்டுச் சித்தர்.

திருமூலர், பட்டினத்தார், சிவவாக்கியவர் போன்றோர்களின் வரிசையில் எப்படி ஒரு இஸ்லாமியரும் இடம் பெற்றார் என்பது சிலருக்கு விளங்காமல் இருக்கின்றது. குறிப்பிட்ட தட்ப வெப்ப நிலையில் சமுதாயச் சூழலில் குறிப்பிட்ட கருத்துக்கள் வளர்வதும் இயல்புதான். இப்படிப் பார்க்கின்ற போதுதான் தமிழ்நாட்டில் சித்தர்கள் தோன்றிய காலம் எப்படிப்பட்டது என்று நுணுகிப் பார்க்க வேண்டியதுள்ளது.

உலகத் தத்துவங்கள் இரண்டு பெரிய பகுப்புக்களில் அடங்குகின்றன. ஒன்று கருத்தை அடிப்படையாகக் கொண்ட கருத்து முதல் கோட்பாடு. மற்றது பொருளை அடிப்படையாகக் கொண்ட பொருள் முதல் கோட்பாடு. கருத்து முதல் கோட்பாடு என்பது சில கருத்துக்களை ஆராய்ச்சி செய்யாமல் அப்படியே ஏற்றுக் கொள்வது. அதாவது ஆண்டவனுக்குச் சிறப்பும், நிறைவும் கொடுப்பது. பொருள் முதல் கோட்பாடு என்பது ஆண்டவன் இல்லை என்று சொல்வது. பொருட்களின் இயக்கங்களை அடிப்படையாகக் கொண்டே உலகைக் கணிப்பது. இரண்டும் இரண்டு துருவங்கள்.

தமிழ்நாட்டிலே சாங்கியம், சமணம், பௌத்தம், யோகம் போன்ற மதங்கள் பரவிக் கொண்டும் பலரால் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் பின்பற்றப்பட்டுக் கொண்டும் இருந்த ஒரு காலம் உண்டு. அவ்வாறு பல சமயங்கள் போட்டியிட்ட காலத்தில்தான் சிலர் சமயங்கள் மீதே வெறுப்படைந்து, 'என்ன சமயம்! என்ன மதம்!' என்ற நிலையை அடைந்தார்கள். இவர்கள்தான் தமிழ்நாட்டுச் சித்தர்கள். சித்தர்கள் சமயங்களைத் தான் வெறுத்தார்களே தவிர, சமயம் கூறும் கடவுள் உண்மையை மறுக்கவில்லை. சித்தர்களின் பாடல்களில் ஆசாரங்கள் தாக்கப்பட்டிருக்கின்றனவே தவிரக் கடவுள் தாக்கப்படவில்லை. எனவே சித்தர்கள் நாத்திகர்கள் என்று சொல்வது பொருந்தாது. இவர்களும் கடவுளை ஏற்றுக் கொண்டவர்களே.

"நட்ட கல்லைத் தெய்வ மென்று நாலு புஷ்பம் சாற்றியே
சுற்றி வந்து மொண மொணென்று சொல்லு மந்திரம் ஏதடா?
நட்ட கல்லும் பேசுமோ? நாதன் உள்ளிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?"

என்ற சிவ வாக்கியர் பாடல் தமிழ் மக்களுக்கு மிகவும் தெரிந்தது. இது சிலை வணக்கத்தையும், மலர்கள் சூட்டி வணங்கும் தன்மையையும் குறை கூறுகிறது. ஆனால் 'நாதன் உள்ளிருக்கையில்' என்று சொல்வதில் இருந்து கடவுள் உண்மையை மறுக்கவில்லை. நாதன் மனம் என்ற உள்ளத்தில்தான் இருக்கின்றான் என்பதே இப்பாடலின் நேர் பொருளாகும். இதே சிவ வாக்கியர் வேறொரு இடத்தில்,

"ஒப்பிலா செஞ்சடையானும் ஒருவன் பாதம் உண்மையே"

என்றும் சொல்லுகின்றார். இதேபோன்ற நிலையில்தான் எல்லாச் சித்தர்களும் கடவுள் உண்மையை மறுக்காமல் ஆங்காங்கே கடவுளைப் போற்றுகின்றனர். சித்தர்கள் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள் என்று நிறுவ நாம் ஏன் முயல வேண்டும் என்றால், "சிந்திப்பவன் சித்தவன்" என்று கூறும் பகுத்தறிவாளர் சித்தர்களை நாத்திகர்கள் என்று கூறுவதில் "அற்ப சந்தோஷம்" அடைகின்றனர். "சித்தர்கள் நாத்திகர்கள் அல்லர். ஆனாலும் மிகவும் மதவாதிகளுமல்லர். அவர்கள் வைதிக சமயத்திற்கு எதிரானவர்கள்; சங்கரரின் ஒருமை வாதத் தத்துவத்தையும், இந்துக்களின் உருவ வழிபாட்டையும் எதிர்த்தோரே" என்று சாமி சிதம்பரனார் கூறுகின்றார். கலாநிதி கைலாசபதி கூறுகின்றபோது, "சித்தர்களின் மொழி, பழகு தமிழில் அமைந்தது. பாமர மக்களை நோக்கியே பாடப்பட்டன" என்று சித்தர்களின் பாடல்களைப் பற்றிக் கூறுகின்றார். சித்தர்களின் பொதுவான இயல்புகளைக் கண்ட நாம், தக்கலை ஞானி பீருமுகமதப்பா அவர்களின் "சித்தர் மரபை"க் காண்போம்.

பீர்முகம்மது அப்பா அவர்கள் ஆண்டவனை நம்பும் அடியார்களில் ஒருவரே. அப்பா அவர்களின் பாடல்களில் ஆழ்ந்தும் மேலோட்டமாகவும் இறையன்பு பளிச்சிடுகின்றது.

"அன்னையிலி யத்தனிலி யாருமிலி நீயே
அழிவு பல கால மணு காதவனு நீயே
முன்னையுரு வற்றொளிமு ழங்குமிறை நீயே
முச்சுடரி லச்சமற நிற்பவனு நீயே
மன்னையொரு முத்தினில்வ குத்தபெரி யோனே
வருத்தமறிந் தெனக் குதவி செய்தருளு வாயே
உன்னையென்ம னத்தினிலு தித்தக லாமல்
உடையோனே யானுன் னடைக்கலம தானேன்"

என்ற அப்பாவின் ஞானப் புகழ்ச்சியும் இன்னும் நூற்றுக் கணக்கான பாடல்களும் அப்பா இறையன்பர் என்பதற்குச் சான்ருக இருக்கின்றன. நடைமுறைக்கும் மேலாக இறையோடு கலக்கும் உன்னத நிலையில் வாழ்வோரே சித்தர்கள் என்ற முறையில் அப்பாவும் சித்தர்களின் வரிசையில் இடம் பெறுகின்ருர்.

சித்தர்கள் வைதிக சமயத்திற்கு எதிரானவர்கள். உருவ வழி பாட்டைக் கண்டித்தவர்கள் என்பது உண்மை. இஸ்லாமே உருவ வழிபாட்டைக் கண்டித்துத் தோன்றிய மதம்தான். ஆகவே சித்தர்கள் எல்லோருமே இஸ்லாம் தோன்றிய அரபு நாட்டுச் சூழலின்-தமிழ் நாட்டுச் சூழலின் மறு பதிப்புக்கள்தான். அதாவது எந்தச் சூழல் அரபு நாட்டில் இஸ்லாத்தைத் தோற்றுவித்ததோ அதே சூழல்தமிழ் நாட்டில் சித்தர்களைத் தோற்றுவித்தது. இஸ்லாத்திலும் சடங்குகள் படிப்படியாகப் புகுந்தன. அதன் காரணமாக சூபிகள் தோன்றினர். சூபிகளின் திலகம் ஜலாலுதீன் ரூமியின் தத்துவக் கருத்துக்கள் தமிழகத்திலும் இடம் பெற்றன. இதன் தாக்கம்தான் பீருமுகம்மது அப்பா அவர்களின் ஞான ரத்தினக் குறவஞ்சியாகப் பிறவி எடுத்தது. அப்பா அவர்கள் சூபிகளின் கருத்துக்களைத் தமிழகத்திற்குத் தந்தார். அவர் சித்தராஞர்.

சித்தர்கள் சிவனைப் பாடினர். 'சிவன்' என்ற சொல் சித்தர்களின் பாடல்கள் எங்கும் காணப்படுகின்றது. அப்பா அவர்களின் பாடலிலும்,

"முத்தொடு பவளம் பச்சை முதலொளி புவனுங்கூட்டிச்
சத்தியாய்ச் *சிவனு* யிந்தத் தாரணி தன்னிலாக்கிப்
பத்தியா யெனைவளர்த்த பரமனே யுனையான்பாட
இத்திசை யனைத்தும் போற்றும் இறைவனே
துணைசெய்வாயே"

என்ற இடத்துச் "*சிவனய்*" என்று வருகின்றது. மேலும் தொடர்ந்துவரும் பாடலில்,

"உதிரமோ டென்புந்தோலும் ரோமமுந் தசைநரம்பும்
திதிவரி தாகிநின்ற சீவனுஞ் சிவனுங் கூட்டி......"

என்றும் வருகின்றது. தமிழ்நாட்டில், "சித்தன் போக்கு சிவன் போக்கு" என்ற பழமொழியும் உள்ளது. சிவன் என்ற சொல் மேலே நாம்கண்ட மூன்று இடங்களிலும் மூன்றுவிதமான பொருட்களில் வருகின்றது.

சத்தியாய்ச் *சிவனாய்* — ஆணுருவாய்......
*சீவனும் சிவனும்* — உடம்புமாய்......
*சிவன்* போக்கு — பித்தன் போக்கு......

என்று பொருள் தருகின்றது. ஆகவே சிவன் என்ற சொல் பல பொருள்களைத் தருகின்றது. செம்பொருள் — உண்மைப் பொருள் — சிவப் பொருள் என்று கூறுகின்றனர்.

சிவன் — சிவப்பு — செம்மை — தூய்மை என்று சைவ சித்தாந்தம் பொருள் விரிவு செய்கின்றது. ஆகவே சிவன் என்றால் தூய்மை என்று கொண்டோம் என்றால், தூய்மையை விரும்பு பவர்கள் சித்தர்கள்; தூய்மையான வாழ்வுடையவர்கள் சித்தர் கள். இம்முறையிலும் அப்பா சித்தர் ஆகின்றார்.

சித்தர்களிடம் இன்றுமொரு பொதுத்தன்மையைக் காண்கி றோம். அவர்கள் பிறவியை இளிவரல் சுவையில் தருகின்றார்கள்.

"ஒருமட மாதும் ஒருவனும்ஆகி இன்பசுகம்தரும்
அன்பு பொருந்தி உணர்வு கலங்கி ஒழுகியவிந்து
ஊறுசுரோணிதம் மீது கலந்து
பனியில் ஓர்பாதி சிறுதுளிமாது பண்டியில்வந்து
புகுந்து திரண்டு......"

குழந்தையாக உருவெடுத்தது என்று பட்டினத்தார் பாடு கின்றார். பெரிய குயவனை இறைவன் நாற்றமெடுக்கும் குழியில் மண் எடுத்து, இரத்தம் என்ற நீரால் உருண்டை யாக்கிச்செய்த மண்பாத்திரம்தான் இந்தப் பிறவி என்ற கருத்தைப் பாம்பாட்டிச் சித்தர்,

"ஊத்தைக் குழிதனிலே மண்ணை எடுத்தே
உதிரப் புனலினிலே உண்டை சேர்த்தே
வாய்த்த குயவனார் அவர்பண்ணும் பாண்டம்
வறை யோட்டுக்கும் ஆகாதென்று ஆடுபாம்பே"

என்று பாடுகின்றார். அப்பா அவர்கள் இதே கருத்தைப் பாடும் போது,

"ஆதிக்கு முன்னம நாதியு மென்னடி சிங்கி?

அந்தக் கருக்குழி முந்த இருளறை சிங்கா"

என்று பாடுகின்றார். அப்பா அவர்கள் ஆண், பெண் சேர்க் கையை அருவருப்பான நிலையில் பாடும் வழக்கத்தைக் கொள்ள வில்லை. இதைப் போலவே மற்ற சித்தர்கள் பெண்களையும் — பெண் உறுப்புக்களையும் கீழ்த்தரமான பொருட்களோடு ஒப்பிட்டுப் பாடியிருக்கின்றனர். ஆனால் அப்பா அவர்களோ பெண்களைப்

பற்றிப் பாடுவதே மிகவும் குறைவு. அப்பாட்டுக்களும் மற்றைய சித்தர்களிடம் இருந்து மாறுபட்ட முறையிலேயே அமைந்துள்ளன. வேசைகளைப் பற்றியும் சில சித்தர்கள் பாடியிருக்கின்றனர். அத்தகைய பாடல்களை அப்பா அவர்கள் பாடவில்லை.

அப்பா அவர்களைத் தனிப்பெருஞ் சித்தர் என்று நாம் மேலே காட்டியிருக்கும் சில காரணங்களால் உணருகின்றோம். அப்பா அவர்கள் பிறவியிலேயே உருவ வழிபாட்டிற்கு எதிரானவர்கள். 'எல்லாம் அவன் செயல்' என்று இருக்கும் பக்தி மார்க்கத்தில் இருந்து மாறுபட்டு அப்பா அவர்கள் ஆணித்தரமான வாதங்கள் மூலம் உலகப்பொருட்களையும் கருத்துக்களையும் காட்டுகின்றார்கள். மனிதர்கள் எல்லாருமே மேன்மைபெற உதவும் சித்தாந்தக் கருத்துக்களை நுணுகி நுணுகி ஆராய்ந்து நமக்குத் தந்திருக்கின்றார்கள். கடவுளை நம்புபவர்கள் — அறிவையும் நம்புபவர்கள். கருத்து — பொருள் முதல் கோட்பாடுகளுக்கு நடுவே இருக்கும் இணைப்புப்பாலம். இந்த முறையில் எல்லாம் அப்பா அவர்களைச் சித்தர்கள் என்று அறிந்துகொண்டு, இனி அப்பா அவர்களின் பாடல்களுக்கு உள்ளே புகுந்து பார்ப்போம். சித்தாந்தக் கருத்துக்கள், உலக நன்மைக்கு வேண்டிய கருத்துக்கள், சித்தி பெற்றோரின் செம்மையான கருத்துக்கள், என்று சொல்லுகின்ற அப்பா அவர்களின் கருத்துக்களைக் காண்போம்.

## ஆருறுக்கப்பால்........

அப்பா அவர்கள் ஞானப் புகழ்ச்சியைத் தொடங்கும்போது முதலில் வெண்பா ஒன்றைத் தருகின்றார்:

"ஆருறுக் கப்பால் அணுஅணுவாய் வந்துலகில்
வேருரு மொப்பில்லா மேலோனே — வீறுன
புகழ்ச்சிது ஆவடியேன் புகலுதற்கு நீமனதுள்
மகிழ்ச்சி தருவாயே மகிழ்ந்து"

'ஆருறுக்கப்பால் அணுஅணுவாய் இந்த உலகில் இருக்கும் எல்லார்க்கும் மேலவனாக இருக்கும் இறைவனே! உன்னைப் புகழ்ந்து பாடுதற்கு இதயத்திற்கு வலிவைத் தருவாயாக' என்று வேண்டுகின்றார். ஆருறுக்கப்பால் என்று அப்பா கூறும்போது ஆருறுக்கப்பால் என்ற தொடருக்கு என்ன பொருள்? தத்துவங்களுக்கு விளக்கம் கூறுவதுபோல அறிஞர்கள் பலர் பலவிதமான பொருட்கள் கூறுகின்றனர். ஆண்டவனைப் பற்றிய வர்ணனை இது. எந்த 'ஆறு' கடந்தவன் அவன்? ஆறு ஆதாரங்களையும் கடந்தவன் ஆண்டவன் என்று கொள்ளலாம். உடலுக்கு

ஆதாரங்கள் ஆறு. அவையாவன, 1. மூலாதாரம் (மூலம்), 2. சுவாதிஷ்டானம் (கொப்பூழ்), 3. மணிபூரகம் (மேல் வயிறு), 4. அநாகதம் (நெஞ்சு), 5. விசுத்தம் (மிடறு), 6. ஆக்நேயம் (புருவநடு)—என்று விளக்கம் கூறுகின்றனர். இந்த ஆதாரங்கள் இல்லாமல் மனித உடல் இயங்கமுடியாது. ஆனால் இந்த ஆறு ஆதாரங்களும் இல்லாமல் இயங்கும் தன்மை கொண்டு இயங்கும் ஆற்றலே இறைவன் என்று இறைவனின் தன்மையைப் புகல்கின்றார் அப்பா.

ஆறு என்றால் வழி என்றும் ஒரு பொருள் உண்டு. ஆறு வழிகளுக்கு அப்பால் இருக்கும் பேராற்றலே ஆண்டவன். ஆறு, ஆறு (6×6) முப்பத்தாறு மார்க்கங்களுக்கும் அப்பால் தனிப்பெரும் பொருளாக இருப்பவன் ஆண்டவன். ஆனாலும் முப்பத்தாறு மார்க்கங்கள் (வழிகள்) என்று கூறுவதைவிட ஆறு ஆதாரங்கள் என்று கூறுவதே சரியாக இருக்கலாம். ஏனென்றால்...

"ஆறுகலைக்குச் சுக்குள்ளே ஆடும் ஒருவன்
அயல்வீடு போகுமுன்னே அரண்கோலிக் கொள்ளு"

என்று பாம்பாட்டிச் சித்தர் பாடுகின்றார். ஆறுகலைக் குச்சுக்குள் என்று மனித உடலின் ஆதாரங்களையே கூறுகின்றார். ஆகவே மனித ஆதாரங்களையே கூறுகின்றார் அப்பா என்று சொல்ல வேண்டியது உள்ளது. அகப்பேய்ச் சித்தர் பாடும்போது,

"ஆறு தத்துவமும் ஆகமஞ் சொன்னதடி
மாருத மண்டலமும் வந்தது மூன்றடியே"

என்று ஆறு தத்துவம் என்ற குறிப்பைத் தருகின்றார். இந்த ஆறுக்கும் ஆறு ஆதாரங்களுக்கும் அப்பால் அணு அணுவாக இந்த வுலகெங்கும் நிறைந்திருக்கும் மேலவனே! ஆண்டவா! என்று அப்பா கூறுவதாகக் கொள்ளவேண்டும். நுண்மைப் பொருள்தரும் சிறந்த ஞானியாக அப்பா அவர்களைக் காட்டும் பல பாடல்களில் இதுவும் ஒன்று.

## ஞானரத்தினக் குறவஞ்சி

அப்பா அவர்களைப் பதினெட்டுச் சித்தர்களில் சேர்த்துப் பேசும் சான்றோர் பெரிதும் போற்றுவது ஞானரத்தினக் குறவஞ்சியைத்தான். சித்தர்களின் மொழி பழகுதமிழில் அமைந்தது; பாமரர்களுக்காகப் பாடப்பட்டது என்று நாம் முன்பே அறிந்தோம். அம்முறையில் குறவனையும் குறத்தியையும் பேசவைக்கும் அப்பா தத்துவச் சந்தனத்தை நம்மீது பூச வைக்

கின்றார். முப்பொருளைப் பற்றிய விளக்கம் தரும்போது அப்பா அவர்கள்,

"முப்பொரு ளென்றுநீ முன்சொன்ன தாரடி சிங்கி—அவர்
அப்பனு மாயிர மாதியாம் நாமடா சிங்கா"

என்று பாடுகின்றார்கள். மனிதன் படைக்கப்பட்டதற்குக் காரணத்தைத் தருகின்றார் அப்பா அவர்கள்.

தன்னையறிவது மெய்யறிவு என்று மேலை நாட்டுத் தத்துவங்கள்கூடக் கூறுகின்றன. தன்னை அறிவதற்கு வழி என்ன? மெய்யறிவு பெறுதற்கு வழி என்ன? இதற்கு வழி சொல்லத் தயக்கம் காட்டுகின்றனர். ஆனால் அப்பா அவர்கள்

"தன்னை அறியுந் தலமேது சொல்லடி சிங்கி!—அது
கண்ணிடையான நடுநிலை யல்லவோ சிங்கா"

இருகண்களுக்கு இடையேயுள்ள நெற்றிப் பொட்டுதான் தன்னையறிவதற்குரிய இடம். இன்றைய மெஸ்மரிச இயலார்களும் நெற்றிப் பொட்டுக்குப் பெரியதொரு இடம் கொடுக்கின்றனர். நெஞ்சின் அலைகளை நெற்றிப் பொட்டில் நிறுத்தினோம் என்றால் தன்னிலையறிவது நடைபெறும் என்றும் தத்துவங்கள் விளக்கம் தருகின்றன.

எல்லாச் சித்தர்களையும் போல அப்பா அவர்களும்,
"எட்டெழுத்தாக எழுந்தவெழுத் தென்ன சிங்கி—" என்றும்
"அஞ் செழுத்தாக அமைந்தவெழுத் தென்ன சிங்கி—"என்றும்
"அன்பத் தோரட்சரம் அறியநீ சொல்லடி சிங்கி—"என்றும்
நமக்குப் புரியாத சில செய்திகளை விளக்குகின்றார். திரு மெய்ஞ் ஞானச் சரநூல் பல வியக்கத்தக்க செய்திகளைக் கொண்டு நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. அப்பா அவர்கள் தமிழ்நாட்டுச் சித்தர்களில் ஒருவர். எல்லா வகையிலும் சிறந்த சித்தராக விளங்கும் பெற்றியவர்.

"உற்ற ஞானப் பொருள் உறுதியாய்ச் சொன்னதார் சிங்கி
— அது
உத்தமர் பீருமுகம்மதுரைத்தது சிங்கா"

---

துணை நின்ற நூற்கள் :

1. சித்தர் பாடல்கள் — அரு. ராமநாதன் தொகுப்பு.
2. ஒப்பியல் இலக்கியம் — கலாநிதி கைலாசபதி.
3. பீருமுகம்மதப்பா பாடல்கள் — கோட்டாறு வெளியீடு.

# திருமெய்ஞ்ஞான சரநூல்

சு. இன்னாசி, எம். ஏ.
தூய சவேரியார் கல்லூரி, பாளையங்கோட்டை.

தண்டமிழ்த்திறமும் தவயோக முறையும் ஒருங்கே கைவரப் பெற்ற தலைவர் அளவிலர் எனினும், வேறுபடு சமயத்தாரும் மாறுபடு கொள்கையாளரும் ஏற்றுக்கோடற்குரிய உண்மைகளை உரைத்த பெருமக்கள் சிலரேயாவர். அவருள் தக்கலைச் சித்த ரென்றும், சொற்கலை நாதர் என்றும் போற்றப்படுகின்ற பீர்முகம்மது ஒருவர். பீர்முகம்மது இசுலாம் நெறி சார்ந்த செந்தமிழ்ப் பாவலர். இறையுணர் வூட்டும் நூல் பல யாத்த மெய்ப்புகழ் ஞானியர். அவர் நூல்களுள் ஒன்றே திருமெய்ஞ்ஞான சரநூல்.

ஞானியரின் நூல்கள் அனைத்தும் ஞான உணர்வின் அடிப் படையில் எழுந்தனவென்பதனை நூல்கட்குரிய பெயரால் உணர லாம். திருநெறி நீதம், பிசுமில்குறம், மிகுராசு வளம், ரோசு மீசாக்கு மாலை ஆகிய நான்கினைத்தவிர, பிறவெல்லாம் 'ஞானம்' என்னும் அடை கூட்டிப் பெயரிடப்பட்டிருக்கின்றன. திருநெறி நீதம், திருமெய்ஞ்ஞான சரநூல் இரண்டும் கிடைத்தற்கரிய சிறப் பினைத் தரும் 'திரு' என்னும் அடைமொழி வழங்கிப் பெயர் தரப் பட்டிருக்கின்றன. இரண்டனுள்ளும் திருநெறி நீதத்திற்கு ஞானம் என்னும் அடைத்தொடர் கூட்டப்படவில்லை. எனவே ஞான மென்னும் தொடரும் திருவென்னும் சிறப்பும் இணைந்தமைந்த பெயரைத் தலைப்பாக்கியது திருமெய்ஞ்ஞான சரநூலினுக்குத் தனிப்பெருமை தருவதேயாம்.

தக்கலை வேந்தர் தந்தருளிய பனுவல்களுள் திருமெய்ஞ்ஞான சரநூல் ஒன்றனுக்கு மட்டும் நூல் என்னும் சொல்லையும் சேர்த்துத்

தலைப்பாக்கியதன் நோக்கம் யாது என்பது சிந்தித்தற்குரியது. முப்பது எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தத்தாலாய ஒன்று நூல் என்னும் தகுதிப்பாட்டிற்கு உரித்தாகுமா என்ற ஐயம் அறுத் தற்கே அவ்வாறு தலைப்பை அமைத்திருத்தல் வேண்டும் எனக் கருதுதற்கு இடனாகிறது. நூலிற்கான அமைப்பும் முறையும் முப்பது பாடல்களுள் அமைந்திருக்கும் தன்மை அக்கருத்தை உறுதிப்படுத்துகிறது.

பனுவலுக்குப் பாயிரம் இன்றியமையாதது என்பதனை,

"ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்
பாயிர மல்லது பனுவ லன்றே"

என்னும் இலக்கண நூற்பா விளக்கும். இருவகைப்பாயிரத்துள் பொதுப்பாயிர இயல்பினை,

"நூலே நுவல்வோன் நுவலுந் திறனே
கொள்வோன் கோடற் கூற்றா மைந்தும்
எல்லா நூற்கு மிவைபொதுப் பாயிரம்"

என்று நன்னூல் சொல்லும். பாயிரம் என்று பாகுபாடு செய்து கூற வில்லையாயினும், பாயிர நெறி சரநூலில் பின்பற்றப்பட் டிருக்கிறது.

"பொன்னான மெய்ஞ்ஞான சரநூ லென்னும்
புகழ்பெரிய சாஸ்திரத்தின் புதுமை தன்னை
இந்நிலத்தி லறியாத மாந்தர்க் கெல்லாம்
எடுத்துரைக்கும் பரிசுதனை இயம்பக் கேண்மோ
முன்னான சாஸ்திரமாங் குசக லத்தின்
முன்னிலையிற் றடியென்ற பெருமை தோன்றக்
கன்னல்ரசச் செந்தமிழின் கவிதை யாகக்
கருத்துறயான் கவலலுற்றேன் உலகத் தோரே"

என்னும் முதற் பாடலைப் பாயிரமாகவே கொள்ளலாம். 'மெய்ஞ் ஞான சரநூல்' என்பதனால் நூலும், 'கன்னல்ரசச் செந்தமிழின் கவிதையாகக் கருத்துறக் கவலலுற்றேன்' என்பதனால் நுவலுந் திறமும், 'இந்நிலத்தில் அறியாத மாந்தர்க்கெல்லாம்' என்பதனால் கொள்வோரும் புலனாகும். முப்பதாம் பாடலை,

ஓதுகின்ற சரமதனை யுலகத் தோர்க்கும்
ஒளியாமல் உரைத்தவிதம் உவந்த பேர்க்கு
வேதகுல வாவாஞ்சி பேர னான
வேந்தரெனும் சிறுமலுக்கர் ஈன்ற பாலன்

நீதமிலா திந்நூலைப் பொய்யென் னுமல்
நிலைநிறுத்தப் பீர்முகம்ம தென்போன் யானே
வேதமெனும் மெய்ஞ்ஞான சரநூ லென்றே
விளம்பினேன் கவிமுப்ப தாக முற்றே''

என்று பாடி முடிக்கிறார். இப்பாடலில் வரும் 'பீர்முகம்மது என்போன் யான்' என்பதனால் நுவல்வோனும், 'நீதமிலா திந்நூலைப் பொய்யென் னுமல் நிலைநிறுத்த' என்பதனால் கோடற் கூற்றும் பெறப்படும்.

''தோன்றாத் தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்றற் புகழ்தல் தகுதி யன்றே''

என்றாற்போன்று அவையடக்கம் பாடுதல் தமிழ் நூன்மரபு.

''முன்னனை சாஸ்திரமாங் குசக லத்தின்
முன்னிலையிற் றடியென்ற பெருமை தோன்ற''

என்ற வரிகள் அவர்தம் அவையடக்க உணர்வைக் காட்டும்.

கருவில் உருவாகும் உயிரொடு சுவாசக்காற்று இயங்கும் முறையினை முற்கூறிப் பின் அக்காற்று இயங்கும் ஐவகை யியல்புகளைக் காட்டுகிறார். அடுத்து, சுவாச ஓட்டத்தின் எண்ணிக்கையைக் கணக்கிட்டுக்கூறி ஏழு கிழமைகட்கும் உரிய நன்னேரத்தை உரைக்கிறார். தொடர்ந்து, காற்றுத் தப்பிவிட்டால் கிழமைகளில் நேரும் பயன்களை விளக்கிச் சந்திரனின் இயக்கத்தில் என்னென்ன செயல்களைச் செய்தால் நற்பயன் விளைக்கும் எனச் சொல்லுகிறார். அதன் பின்னர் கருவிலிருப்பது ஆணா பெண்ணா என்பது போன்ற பல்வேறு உண்மைகளைத் தெரிந்து கொள்ளும் வகைகளைக் காட்டிப் பல செய்திகளை ஒன்றோடொன்று தொடர்புறுத்திக் கொண்டு போய் நூலை முடிக்கிறார்.

சரநூலைப் படிக்குங்கால், 'பீரப்பா அவர்களைக் கவிஞரெனலாமா? கணித மேதை எனலாமா? தத்துவ அறிஞர் எனலாமா? சிந்தாந்தச்செம்மல் எனலாமா? உடற்கூற்று வல்லுநர் எனலாமா? உளவியல் நிபுணர் எனல் பொருந்துமா? உயிரியல் ஆய்வாளர் எனல் பொருந்துமா? உண்மை கூறும் உத்தமர் எனல் சிறப்பா? உவமை காட்டும் வித்தகர் எனல் சிறப்பா?' என மயங்கும் அளவிற்குப் பல்துறையறிவும் பழுத்த அனுபவமும் புலப்படக் காணலாம்.

கருநிலையில், நெருப்புக்கனல் வாயுவோடு கலந்து உயிராம் தன்மை பெற்றுச் சுவாச ஓட்டம் நடைபெறுகிறது எனக் கரு உருவாகும் வகையினை விளக்குகையில் உடலியல் அறிஞராகிறார். நாழிகை ஒன்றுக்குச் சுவாசஓட்டம் 360 எனக்கூறி நாளொன்றுக்கு

21600 எனக் கணக்கிட்டுக் கூறுகையில் கணிதவியல் அறிஞராகத் தோன்றுகிறார். நாழிகை என்பது 20 மணித்துளிகளைக் கொண்டது. ஒரு மணித்துளிக்கு 18 முறை சுவாச ஓட்டம் என அவர் கணக்கிட்டிருப்பது தற்கால உடலியலார் கருத்துக்கு இசைவான தேயாம். உடலிற்குள் சுவாசக்காற்று இயங்கும் முறையினுக்குச் சுருக்குவலை, இராட்டை ஆகியவற்றை உவமையாக்கி,

"சுருக்குவலை தாமசை நூற் சொருகும் வாருய்ச்
சுழன்றுவரும் ராட்டினத்தின் சுழலைப் போலே"

எனக் கூறுவது அவர்தம் உவமைத்திறனைக் காட்டும். தூய்மை வழிகளை மேற்கொண்டால் நாளுக்கு நாள் ஆவி வளரும் என்பதை விளக்க முன் வருகிறார். வேழத்தைத் தும்பியால் இயல்பாக வயப்படுத்த இயலாது. கலையின் ஆற்றலால் இயலும். இசைக்கு மயங்காத துண்டோ? நாளுக்கு நாள் இனிமை தரும் நாதத்தைக் கொண்டால் வேழம் தும்பியின் வயப்படுமன்றோ? எனவே இசையால் கட்டுப்படும் வேழம் போல் சுத்தியால் ஆவி வளரும் என்பதனை,

"நாளுக்கு நாட்பழக்க மதிக மாக
நடந்தேறு நாதத்தை நன்றாய்ச் சூட்டி
வேழத்தைத் தும்பியிலே கட்டொண் ணாது
விதமென்ன கலையதையே விரும்பிக் கொள்ளு
நாளுக்கு நாளாகி வளர்ந்தே யேறும்
நலமான சுத்திதனைச் செய்து கொள்ளு
ஊழூழி காலமெல்லாம் உண்டே நானும்
உலகவர்க்கு இந்நூலை ஓதினேனே"

என்று விளக்குந்திறன் பாராட்டற் பாலது.

நூலின் தொடக்கத்தே தமக்குத் தமிழ் மீதுள்ள பற்றைப் புலப்படுத்திக் 'கன்னல்ரசச் செந்தமிழ்' என்கிறார். அத்துடன் அமையாது கவிதை யாக்குகையில் கருத்தோடிராவிடில் தமிழுக்கு ஊறுக நேரும் என்னுங் குறிப்பில், '*கவிதையாகக் கருத்துற*' எனக் கூறுகிறார். கவலல் எனில் வருத்தமுறக் கூறலாகும். தமிழ்க் கவிதையில் கருத்தூன்றாமல் குறைநேர்ந்துவிடுமோ என்னும் அச்ச உணர்வில் கவலலுற்றேன் எனக் கூறுவதினின்று தமிழ் மீது கொண்ட ஈடுபாடும் அதன் சிறப்பிற்குக் குறை நேரக் கூடாது என்ற உறுதிப்பாடும் புலப்படுகின்றன.

தத்துவ அறிஞர் என்னும் வகையில், நிலை கருமமாக இருத்தல் கூடும்; ஆனால் முடிவில் நிலைக்காது. நிகழ்காலந்தான்; ஆனால் அதுவும் சிறிது நேரத்தில் மரணகாலந்தான். எனவே

சரநூலின் தத்துவத்தை மேலோட்டமாகப் பார்க்காமல் உட்புகுந்து நுணுகி உணர வேண்டும் என்னுங் கருத்தினை,

‘‘உலகவர்க்குச் சரநூலை யொழிப்பில் லாமல்
ஓதும்வகை யேதெனவே உவந்து கேளாய்
நிலைகருமம் நிலையாது நெறியாய்க் கூறும்
நீடூழி வாழ்வரசு நிலைப்ப தோடு
விலங்குவதும் வருங்காலஞ் செய்கா லங்கள்
வியனுறவே நிகழ்காலம் மரண காலம்
கலைபெரிய இந்நூலின் கார ணத்தின்
காட்சிதனைக் கருதிப்பார் காணுந் தானே’’

என்னும் பாடலிற் கூறுகிறார்.

அறவுரை பகரும் ஆசானுகப் பல விடங்களில் விளங்குகிறார். ஆவி போனால் பிராணன் போயிற்றெனக் கூறி அது நிலைக்க மேற்கொள்ளும் வழிகளாகக் கால் வயிறு நீரருந்த வேண்டும் என்றும், நாள்தோறும் அரை வயிறு மூன்று வேளை அமுதருந்த வேண்டும் என்றும் கூறுகிறார். மேலும், ‘குருவில்லா வித்தை பாழ்’ என்பது பழமொழியல்லவா? எனவே, இதமான ஆசானிடம் சரத்திற்குச் சிறிதும் பிழையாத எழுத்தை யறிந்து வாய்மூடி மனதிற் பூட்டி அதனை ஓத வேண்டும் என்பதனை,

‘‘விதமென்ன வொழியாம லோடு நாடி
வீசிவரும் ஓரெழுத்தை விளம்பிக் கொண்டு
இதமான ஆசானை யெழுத்தைக் கேட்டே
எள்ளளவும் பிசகாமற் சரத்தி னூன்றி
ஓதுறவே வாய்திறந்தா லொழுகிப் போச்சு
ஓகோகோ சரமதனை யொன்றும் மாட்டி
மாதிறத்தின் வாய்மூடி மனதிற் பூட்டி
வாசித்தால் மரணகலை சாகா தப்பா’’

என விளக்குகிறார். இப்பாடலின் இறுதியில் அமைந்த *‘மரண கலை சாகா தப்பா’* என்பது முரணணியாய் நின்று நயம் பயக்கிறது.

இடையிலமைந்த பாடல்கள் பெரும்பாலும் சோதிடக் கலைக் குறிப்புணர்த்துவன போல் தோன்றுகின்றன. ஞாயிற்றில் சரம் தப்பினால் வியாதி வரும் என்றும், திங்களில் தப்பிடில் காலம் முடிவுறும் என்றும், செவ்வாயில் தப்புமாகில் கலகம் ஏற்படும் என்றும், புதனில் தவறுமாயில் கருதியது பலியாது என்றும், வியாழனில் தவறுமாகின் பொருட் சேதம் உண்டாகும் என்றும்,

வெள்ளியில் தவறிடில் மக்கட் சேதம் ஆகும் என்றும், சனியில் தப்பிடில் தனக்கே தத்து நேரும் என்றும் கூறுங் குறிப்புகள் ஆருடம் கூறுவது போல் அமைகின்றன.

சிறந்தமனை குடிபுகத் தனம் புதைக்கச், சேராமலிருந்தவரைச் சேர்த்து வைக்க, விரைந்தேறும் விஷ மிறக்க விதை விதைக்க, தரிசிக்கப், பிள்ளைகளுக்குப் பெயர்குறிக்கப், பிணிதீர்க்க, வியாபாரம் செய்ய—என்பன போன்ற பல செயல்களுக்குச் சந்திரனியக்கங் கொள்ளும் சமயம் நலம் என்கிறார். அவற்றுள் முதலமைச்சருக்குத் தூதனுப்பும் செயலும் குறிக்கப்படுகிறது. பெரியோரை வரவழைக்குஞ் செயலும் கூறப்படுகிறது. கப்பற் பயணச் செயலும் சுட்டப்படுகிறது. குருபாதம் பணிந்து உபதேசங் கேட்குஞ் செயலும் காட்டப்படுகிறது.

இக்குறிப்புக்களில் மறைந்துள்ள உண்மைகள் எவ்வகையில் பயன்தரும் என்பது அத்துறையில் ஈடுபாடுடையார்க்கே புலனாகும். மேலும் சித்தர் கூறும் நெறிகளில் உள்ளுறைந்து வேறொரு பொருள் மறைந்திருத்தல் கூடும். அவற்றை ஆய்ந்து பிறருக்கு அறிவித்தல் அறிஞர் கடனாகும். ஆசிரியர் இறுதியில் 'வேதம் என்னும் மெய்ஞ்ஞான சரநூல்' எனத் தம் நூலைக் குறிக்கிறார். ஆதலில் வேத மொழிப் பொருள் நூலின் கண் அடங்கிக் கிடத்தல் சாலும். அவற்றைக்காண மறை வல்லுநர்கள் முனைய வேண்டும்.

சரம் என்பதற்கு மணிவடம், மாலை என்னும் பொருள்களும் உண்டு. அவை இடையில் அறுமாயின் பயன்பெறு; அவ்வப் பெயர்களும் உறு. அவை போன்றே மானிடர்க்குச் சரமென்னும் சுவாசக்காற்று அறுபட்டுப் போமாயின் அவர்க்கு வாழ்வில்லை. எனவே மானிடன் வாழ்வு பெறும் நெறிகளை விளக்கும் உயிர் நூலுக்குச் சரநூல் எனப்பெயரமைந்தது சாலவும் பொருந்தும். அதே போன்று வாழ்விற்குத் துணையாகும் பீரப்பாவை,

"கானத்தினில் வாழ்வார்க்கவர் கனிந்தேதுணை நிற்பார்
மோனத்தினில் ஆழ்வார்க்கவர் மூச்சாய்த்துணை நிற்பார்
வானத்தினை ஆய்வார்க்கவர் வழியாய்த்துணை நிற்பார்
தேனொத்திடும் மொழியார்க்கவர் தெளிவாய்த்துணை நிற்பார்"*

எனப் பாடிப் பரவுவது அவருக்கும் பொருந்தும்.

---

* பேராசிரியர் கா. முகம்மது பாரூக், மெய்ஞ்ஞான மேதை பீர்முகம்மது அப்பா மலர், பக்கம் 60.

# ஞானக்குறம் — ஓர் ஒப்பாய்வு

அ. ச. இராமையா
சதக்கத்துல்லா அப்பா கல்லூரி,
பாளையங்கோட்டை

## முன்னுரை

திருத்தலங்களும் திருமறைகளுந்தான் வெறிபிடித்த மானிடரின் பொறியடக்கி, நெறியோடு முறையாக இந்த நீணிலத்து மாந்தர் வாழ்ந்திருக்கும்படி உயர்வாழ்க்கையின் பிடிகளாய், வானுலகின் படிகளாய் விளங்குகின்றன. இந்தத் திருமறைகளைத் தந்த பெருமொழிகள்தாம் இலக்கிய உலகத்தின் மூதாதையர்கள்; அவைகள் மூவாதவைகள். அகிலத்து ஆரம்ப இலக்கியங்கள் அனைத்துமே வேண்டியதைத் தருகின்ற ஆண்டவனைப் பற்றியவை; அவனை அண்டி நிற்போர் பாடியவை. மூவாத சாவாத முத்தமிழ் இலக்கியங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. முட்டையால் கோழியும், கோழியால் முட்டையும் வளர்வதைப்போல் மதங்களால் மொழியும், மொழியால் மதங்களும் வளர்ந்தன. இசுலாமிய இலக்கியங்களும் ஏனைய இலக்கியங்களைப்போல் தமிழ்க் குழந்தைக்கு ஞானப்பால் ஊட்டி, தாலப் பாட்டிசைத்து, ஞாலம் போற்றும்படிக் காலப்போக்கில் வளர்த்தன. இதில் பீர்முகம்மது அப்பாவின் பேரருள் பாடல்களும் தம் பங்கைச் செவ்வனே செய்கின்றன.

## ஞானச் சூரியன்

தான் பிறந்த நாட்டையும் மொழியையும் சார்ந்த மதத்தையும் வளர்ப்பதற்கென்றே தோன்றிய ஞானச் சுடர்களுள்

இஸ்லாமின் ஞானச் சூரியனாக—தேயாத மதியாக—ஓயாத நதியாக—சாயாத மலையாக விளங்கியவர் காமில் பீர்முகம்மது சாஹிபு வலீயுல்லா அவர்கள். இறைவனை வழுத்திப் பழுத்த ஞானியான அப்பா அவர்கள் அழுத்தந் திருத்தமாக, கொழுத்துச் செழித்த தம் ஞானப் பிரவாகத்தைச் சிங்கன் சிங்கி உரையில்,

[1]"உற்ற ஞானப்பொரு ளுத்தியாய்ச் சொன்னதார் சிங்கி-அது
உத்தமர் பீருமு ஹம்ம துரைத்தது சிங்கா"

என்று சுட்டிக் காட்டுகிறார்கள். அஞ்ஞானத்தில் வாழ்ந்த மெய்ஞ்ஞான சொரூபரின் மெய்ஞ்ஞானத் திருப்பாடற்றிரட்டு ஓர் விஞ்ஞானத் திருப்பாற்கடல். அதைக் கடையக் கடையக், கடைந்தெடுத்த வாழ்வின் உண்மைகளை, வையத்தின் நுண்மைகளை, வானின் தன்மைகளை, தீனின் நன்மைகளைப் பெற்றுப் பயன் பெறலாம்.

'துய்ய உபதேசமதைப் பாட்டிற் கவியாய்த் தொடுத்த பீர்முகம்மது'வின் மோனத் தவத்தில் எழுந்த ஞானக் கருவூலத்தின் நவரத்தினக் குவியலாம் மெய்ஞ்ஞானத் திருப்பாடற்றிரட்டில் உயர்தரப் பாடலாய்—அறப் பாடலாய்—குறப் பாடலாய்—நாம் பெறப்பாடிய திருப்பாடலாய் ஒளிர்வது ஞானக் குறம் என்னும் 'குறவஞ்சி' இலக்கியமாகும். மறைதங்கும் உள்ளத்தினராய்—பிறைபொங்கும் எண்ணத்தினராய்—குறைவஞ்சித் தரைவிஞ்சக் குறவஞ்சி பாடுகின்றார்; ஞானக் குறவஞ்சி பாடுகின்றார். அல்லா பேர்சொல்லி, ஒப்பாருமில்லாத அப்பா இப்பா வகையில் 'ஞானக் குறம்', 'பிஸ்மில்குறம்', 'ஞானரத்தினக் குறவஞ்சி' என முப்பா பாடியுள்ளார். இவற்றுள் கானக்குயில் பாடும் 'ஞானக்குறம்' பற்றிய என் ஊனப் புலம்பல்கள் வடிவம்பெற எத்தனிக்கின்றன. இதில் அமைந்துகிடக்கின்ற கனிந்த சித்தரின் முதிர்ந்த தத்துவார்த்தக் கோட்பாடுகளைச் சலித்துப் பார்க்க இந்தச் சலித்த மனதின் சித்தம் பலிக்கவில்லை. அதன் குறவஞ்சி இலக்கியக் கூறுகளை அலசிப் பார்ப்பதே இக்கட்டுரையாளனின் முயற்சி.

## குறவஞ்சி இலக்கியங்கள் இதற்காகவும் பிறக்கின்றன

காலங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவே அவ்வக்கால ஊமைக் குமுறல்களின் ஒலிப்பதிவுகளாய்—இன்னல்கண்ட இடிமுழக்கங்களின் இளஞ்சிரிப்புக்களாய்—கோடைக்காலத்துக் கரிசல்

1. பீர்முகம்மது அப்பா, ஞானரத்தினக் குறவஞ்சி, 63.

பிழவுகளைப்போல் இலக்கியங்கள் வெடிக்கின்றன. மலர்களைக் குளிர்விக்கும் பனித்துளிகளைப்போல் மனங்களைக் குளிர்விக்கின்றன. அரும்பு மலராவதைப்போல் அரும்பிய எண்ணங்கள் கட்டவிழ்க்கின்றன; கட்டற்ற தன்மைகளைச் சுட்டிக் காட்டித் தட்டி நெறிப்படுத்துகின்றன. வாழ்வின் கலையாத நிலையான அடிப்படைத் தத்துவங்களுள் தலையாயது இறைமைத் தத்துவம். இது வெவ்வேறு காலங்களில் மக்கள் மன நிலைக்கேற்ப வெவ்வேறு வகையாகச் சொல்லப்படுகிறது. இறைத்தத்துவங்கள் இசைப்பாடலாகவும், நாடகக் கூத்தாகவும் உருவெடுத்து இன்ப நிகழ்ச்சிகளிடையே குறவஞ்சி இலக்கியங்களில் சொல்லப்படுகின்றன. இறைவன் உயிர்களை மயக்குகின்றான்; உயிர்கள் இறைவனிடம் மயங்குகின்றன என்ற நிலைபெற்ற கருத்தைச் சித்திரிப்பன இவ்விலக்கியங்கள். [2]'திருவிழாக் காலங்களிலே மக்களுக்கு மறுமையோடு இம்மைப் பயனை வழங்குவதற்காகக் குறவஞ்சி நாடகங்கள் எழுந்தன'. [3]'கும்பேசர் குறவஞ்சி நாடகமெனும் பெயர்கொண்டே இந்நூல் ஆடல்பாடலுக்கென அமைந்திருத்தலை உணரலாம்'. [4]'பல்வளஞ்சேர் குறவஞ்சி நாடகம்' என்றும், [5]'பொருட் குறவஞ்சி நாட்டியம்' என்றும், [6]'இதைத் திருநெல்வேலி இராச்சியத்தின் பிரதான பள்ளிக்கூடங்களில் படிக்கிறதும், அவ்விடத்துக் கணியார் தேசத்தில் எங்கும் *நாட்டிய மாடுகிறதுமான* குற்றாலக் குறவஞ்சிக்கு எதிராய்ப் பாடிற்று' என்றும் பலரால் குறிக்கப்படுவதாலும், பந்தாடுகின்ற காட்சியும், குறத்தி மலைவளம் பாடியிருக்கின்ற காட்சியும், இறுதியில் சிங்கன் சிங்கி ஆடிப்பாடுகின்ற காட்சியும் இடம் பெறுவதாலும் ஆடல் பாடலுக்கென இவ்வகை இலக்கியம் எழுந்தது என்று கூறலாம். ஓர் இலக்கியத்தை எதிர்ப்பதற்காக எழுந்த இலக்கியங்களும் இங்குண்டு. சீவக சிந்தாமணிக்கு எதிராக எழுந்த பெரிய புராணத்தைப்போல், ஒட்டக்கூத்தர் பாடலுக்கு எதிராக எழுந்த புகழேந்தியின் பாடலைப்போல் குற்றாலக் குறவஞ்சிக்கு எதிராக எழுந்த பெத்லகேம் குறவஞ்சியைக் காணுகின்றோம். ஞான தத்து

---

2. திரு. இராசகோட்டியப்பன், சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (மூன்றுவது மாநாடு) பக்கம் 214.
3. திரு கு. பரமசிவன், எம். ஏ., சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (மூன்றுவது மாநாடு) பக்கம் 249.
4. திரு வேதநாயக சாஸ்திரியார், பெத்லகேம் குறவஞ்சி —முன்னுரை.
5. திரிகூட ராசப்பக் கவிராயர், திருக்குற்றாலக் குறவஞ்சி.
6. அர்த்தநாரீசுரர் குறவஞ்சி.

வங்களைச் சொல்வதற்காக ஊராரைக் கூவி அழைத்து இறைவன் பெருமைகளை ஆடிப்பாடுகின்றாள் ஞானக்குறத்தில் வரும் குறமகள். அப்பாவின் ஞானக்குறத்திலும் ஆடல் பாடல்கள் இடம் பெறுகின்றன. ஆகவே, ஆடல் பாடல்கள் துணையோடு இவைகள் எழுந்தன என்பதில் ஐயமில்லை. பாமர மக்கள் இதில் வருகின்ற ஆடல்பாடல்களில் மகிழ்கிறார்கள்; பண்டிதர்கள் மூலப் பொருளைத் தேடியலைகிறார்கள்.

## குறவஞ்சியின் பரிணாமம்

ஆடல் பாடலால் மக்களை மகிழ்விப்பதற்கென எழுந்த குறவஞ்சி இலக்கிய மாளிகைக்கு வழக்கம்போல் தொல்காப்பியமே அடிக்கல் நாட்டுகின்றது.

[7] "கட்டினுங் கழங்கினும் வெறியென விருவரும்
ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்"

என்று குறிப்பிடுவதன்மூலம் கட்டுவைத்தும், கழங்குவைத்தும் குறிகூறல் உண்டென்று உணர்கிறோம். இக்குறி காண்பவளைக் [8] 'கட்டுவிச்சி' என்கிறார் நச்சினார்க்கினியர். இவளை, [9] 'அகவன் மகள்' என்கிறது குறுந்தொகை. அகவன் மகளிர் பற்றியும், அவர்கள் காணும் குறிபற்றியும், [10] 'நற்றிணை', 'குறுந்தொகை', [11] 'அகநானூறு', [12] 'குறிஞ்சிப்பாட்டு' முதலிய சங்க இலக்கியங் களிலும், [13] 'பெருங்கதை', [14] 'திவ்ய பிரபந்தம்', [15] 'திருக் கோவையார்' முதலிய பிற்கால இலக்கியங்களிலும் காண்கிறோம். இவ்வித்துக்களே கலம்பக இலக்கியத்தில் 'குறம்' என்னும் உறுப் பாக முளைத்து, 'குறத்திப்பாட்டு' என்னும் செடியாய் வளர்ந்து 'குறவஞ்சி' இலக்கியமாக மலர்ந்தது. [16] கலம்பகத்தில் 'குறம்' இயலாகப் பிறந்தது. குறத்திப் பாட்டில் இயல் இசையோடு வளர்ந்தது. குறவஞ்சியாக மாறும்போது இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழாய் மலர்ந்தது. முத்தமிழையும் வளர்க்கும்

---

7. தொல்காப்பியர், தொல்காப்பியம், களவியல் 25.
8. நச்சினார்க்கினியர், தொல்காப்பியம், களவியல் 25 உரை.
9. ஔவையார், குறுந்தொகை 23.
10. குளம்பனார், நற்றிணை 288.
11. அகநானூறு 97, 154, 208.
12. குறிஞ்சிப் பாட்டு, 7
13. பெருங்கதை, காதை 37, 235-237.
14. திவ்யபிரபந்தம், சிறிய திருவாய்மொழி 20-22.
15. திருக்கோவையார் 283-86.
16. பேரா. சு. இன்னாசி, பத்துக் கட்டுரைகள், பக். 59.

இலக்கிய வகையாக இது விளங்குகிறது. 'குறவஞ்சியான இயலிசை நாடகத் தமிழ்' என்னும் தொடரால் இது உறுதியாகின்றது. குறவஞ்சி இலக்கிய வரிசையில் இன்று ஏறத்தாள 45 குறவஞ்சி இலக்கியங்கள் கிடைக்கின்றன. இவற்றுள் பெரும்பாலானவை இறைவனையே பாடுகின்றன. அப்பா பாடிய மூன்று குறவஞ்சி நூல்களும் ஞாலத்தின் மூலவித்தான ஆதியும் அந்தமுமில்லாத இறைவனின் தத்துவங்களைப் பாடுகின்றன.

## பெயர் அமைப்பு

குறவஞ்சி இலக்கியங்களில் குறத்தி இன்றியமையாத சிறப்புள்ள பாத்திரமாக விளங்குகின்ருள். அவளே குறவஞ்சி நாடகத்தை நடத்திச் செல்கின்றவள். அவளே மலைவளம், நாட்டு வளம், நகரவளம், வாசல் வளங்கூறிப் பின்பு கைபார்த்துக் குறியுங் கூறுகின்றவளாக வருகின்ருள். இறுதியில், தன் வாழ்க்கைத் துணைவனை சிங்கனுடன் சிற்றின்ப உரையாடிப் பேரின்பக் கருத்துக்களை உணர வைக்கின்ருள். குறப்பெண்ணல் பெரும்பாலான நிகழ்ச்சிகள் நடைபெறும் — அவளது சிறப்பினல் அவள் பெயரால் இவ்விலக்கியங்கள் அழைக்கப்படுகின்றன.

குறக்குலத்து வஞ்சிக்கொடி போன்ற பெண் குறவஞ்சி எனப்படுவாள். அது ஆகு பெயராய் அவளால் குறிக்கப்படும் குறிக்காயிற்று. குறவஞ்சி என்று சிறப்பாகப் பெயர் பெற்றிருந்தாலும், [17] 'குறம்' [18]'குறவஞ்சித்தமிழ்,' [19]'குறவஞ்சி நாடகம், [20]'குறவஞ்சி நாட்டியம்,' [21]'குறவஞ்சிக் குழுவ நாடகம்' எனப் பல பெயர்களால் குறிக்கப்படுவதையும் அகச்சான்றுகளால் அறியலாம். ஒரு குறத்தி குறிகூறுவதாக அமையும் நூல் 'குறம்' எனப்படும். [22]'குறவஞ்சி' என்பதும் குறத்தி கூறுவதாக அமைவதே எனினும் 'குறம்' என்பதில் குறத்தியின் கூற்றுமட்டும் இருப்பக் 'குறவஞ்சி'

---

17. பீர்முகம்மது அப்பா, ஞானக்குறம் — 71
18. திரிகூடராசப்பக்கவிராயர், திருக்குற்ருலக் குறவஞ்சி, கடவுள் வணக்கம்.
    வேதநாயக சாஸ்திரிகள், பெத்லகேங் குறவஞ்சி–தோடயம்-5
19. திரிகூடராசப்பக்கவிராயர், திருக்குற்ருலக் குறவஞ்சி—6
20. அர்த்தநாரீசுரர் குறவஞ்சி.
21. வேதநாயக சாஸ்திரிகள், பெத்லகேங் குறவஞ்சி தோடையம்—3
22. பண்டித திரு. ச. சாம்பசிவன் சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள், (மூன்ருவது மாநாடு) பக்கம் 296.

யில் வேறு பலர் கூற்றுக்களும் இருக்கும் என்பதை உணரல் வேண்டும்.

பீர்முகம்மது அப்பாவின் 'ஞானக்குற'மும், குமரகுருபரரின் மீனாட்சியம்மை குறமும் மேலே சொன்ன மொழி பொருந்தும் என்பதைக் காட்டுகின்றன. இவ்விரண்டிலும் மட்டவிழ்க் கூந்தல் குறத்தியின் பட்டிதழ்ச் சொற்கள் மட்டுமே உள்ளன.

குறவஞ்சி நூல்கள் தலைவன் பெயராலும், தலைவி பெயராலும், தலப்பெயராலும், தலப்பெயரும் தலைவன் பெயரும் இணைந்த பெயராலும், தான் சொல்லும் பொருள் அடிப்படையாலும் பெயர் பெறுகின்றன. சரபேந்திர பூபாலக்குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி முதலியன தலைவன் பெயரால் பெயர் பெறுகின்றன. மீனாட்சி யம்மை குறம், மின்னொளியார் குறம் முதலியன தலைவியின் நாமம் பெறுகின்றன. திருக்குற்றாலக் குறவஞ்சி, சிதம்பரக் குறவஞ்சி, பெத்லகேம் குறவஞ்சி முதலியன தலப்பெயர் அடைகின்றன. சுவாமிமலை முருகன் குறவஞ்சி, சேற்றூர் முத்துசாமி துரை குறவஞ்சி முதலியன தலத்தோடு இணைந்த தலைவன் பெயர் பெறுவன. ஞானரத்தினக்குறவஞ்சி, ஞானக்குறம், தத்துவக் குறவஞ்சி, மெய்ஞ்ஞானக் குறவஞ்சி முதலியன தாம் சொல்கின்ற பொருளால் பெயர் அடைவன.

## ஞானக்குறம் — பெயர்க்காரணம்

பார் போற்றும் பீர்முகம்மது அப்பாவின் தேன் சிந்தும் ஞானக் குறமும் ஞானரத்னக் குறவஞ்சியும், திருவருள் அந்தாதி, ஞானவந்தாதி, ஞானவுலா, நீதிசதகம், வைராக்கிய சதம், பாச வதைப்பரணி, மோகவதைப்பரணி போன்று பொருள் அடிப் படையில் பெயர் பெற்றவை. வானினும் உயர்ந்த அப்பாவின் தேனினும் இனிய பாடல்கள் எல்லாம் ஊனை உருக்கி உள்ளொளி பெருக்கும் ஞானஒளி விளக்காய் விளங்குவதால், ஞானப்பால், ஞானப்பூட்டு, ஞானப் புகழ்ச்சி, ஞான ஆனந்தக்களிப்பு, ஞானக் குறம், ஞானரத்தினக்குறவஞ்சி......என்றே பெயர் பெறுகின்றன. அப்பா அவர்கள் பதினெண் சித்தர்களுள் ஒருவராய் விளங்கு வதால் இஸ்லாமியச் சித்தாந்தங்கள் அவர்கள் பார்வையில் பட்டுப் பட்டைதீட்டிய வைரங்களாய் ஒளிர்கின்றன. ஞானம் பிறக்கத் தவமிருந்தார்; பின்னால், அப்பாவிடம் ஞானம், தான் பிறக்கத் தவமிருந்தது.

அப்பா அவர்கள், தலை சிறந்த மெய்ஞ்ஞானி முகியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி) அவர்களைப் புகழ்ந்து பாடுவதாக

அமைந்துள்ளது ஞானக்குறம். முகியித்தீன் ஆண்டவர் மீது தமக்குள்ள ஈடுபாட்டை எடுத்துக்காட்டும் பக்திக்கனிகளான பாடல்களைக் குறத்தி கூறுவதாக அமைக்கின்றார். பக்தியின் முதிர்ந்த நிலையில் ஞானம் வருகிறது. ஞானமடைந்த ஞானி, ஞானியின் ஞானத்தைப் பாடியதால் இந்நூலுக்கு 'ஞானக்குறம்' என்று பெயரமைத்தது பொருத்தமாக விளங்குகிறது. குறத்தியின் கூற்றுமட்டுமிருப்பதால் 'குறவஞ்சி' என்று பெயர் அமைக்காமல் 'குறம்' என்ற பெயரையே இடுகின்றார். இதில் வரும் குறமகளும் ஞான தத்துவத்தைப் பாடுவதால் 'ஞானக்குறம்' என்ற பெயர் பொருந்துகிறது. ஆசிரியர் இதற்கிட்ட பெயர் குறமா, குறவஞ்சியா என்ற சந்தேகம் எழுவதற்கு இடமேயில்லாமல், இந்நூலின் இறைவாழ்த்தின் முடிவில்,

[23]"ஊற்றமுள கலிமாவி லுரையெடுத்
தோதினேன் குறம் பாடினேன்"

என்று கூறுவதால் 'குறம்' பாடியுள்ளார் என்பதை அவரது வாய்மொழியாகிய அகச்சான்றால் அறிகின்றோம். ஏனையக் குறவஞ்சி இலக்கியங்களைப்போல இங்கேயும் குறமகள் ஆடிப்பாடி மலை, வாசல், நாடு வளங்களைக்கூறி கைக்குறியும் கூறுவதால் இந்நூல் குறவஞ்சி இலக்கிய வரிசையில் தக்கதோர் இடத்தினைப் பெற்றுள்ளது. ஆனால் இந்த இடத்தில் 'குறவஞ்சி' என்று அப்பா அவர்களால் பெயர் சூட்டப்பட்ட 'ஞானரத்தினக் குறவஞ்சி'யில் ஞான ரத்தினங்களை மட்டுமே காணமுடிகிறதே தவிர மற்ற பகுதிகள் இல்லை என்பதை எண்ணல் வேண்டும். குறவஞ்சியின் கூறுகளாகிய நாடு, நகர், மலை, வாசல் வளம் கூறவில்லை. இன்னும் சொன்னால் இன்றியமையாத பகுதியாகிய குறத்தி குறிகூறும் பகுதியில்லை. இதோடு ஒப்பிட்டுப் பார்த்தால், குறவஞ்சி இலக்கியம், வளங்கூறுதல் போன்ற எந்தப்பகுதிகளும் இல்லாமல் குறத்தியால் சொல்லப்படுகிறது என்ற ஒரே காரணத்திற்காக மட்டுமே இப்பெயர் பெறக்கூடும் என்ற முடிவிற்கு நாம் வரவேண்டியதாகிறது. 'பெருங்காப்பியநிலை பேசுங்காலை ...... அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள் பயக்கும்' என்று தொடங்கி 'இவற்றினொன்று குறையினும் ஏற்புடைத்தாகும்' என்று சொல்லப்படுகிறதே அதைப்போல இங்கேயும் குறவஞ்சியின் பல உறுப்புக்கள் இல்லாவிட்டாலும் கூட, குறவஞ்சியாகிய பெண் இருப்பதைக்கொண்டே இவை 'குறவஞ்சி' என அழைக்கப்படுகின்றன என்று தான் எண்ண வேண்டியதிருக்கிறது.

23 பீர்முகம்மது அப்பா, ஞானக்குறம் — 18.

## ஞானக்குறம் - கதையமைப்பு

பக்தி இலக்கியங்களில் பிரமாதமான கதையமைப்பை நாம் பார்க்கமுடியாது. காரணம், கதைசொல்வது அவற்றின் தலையாய நோக்கமல்ல. நாயன்மார்களும், ஆழ்வார்களும் பாடிய பாடல் களில் சிறப்பான கதையம்சம் கிடையாது. சிலப்பதிகாரத்தில், காதைகளில் அமைந்து கிடக்கின்ற கதைச்சிறப்பினைவிடக் குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை என்பன போன்ற தெய் வங்களை வழிபடும் பகுதிகளில் கதையம்சம் குறைவு என்ற ஆராய்ச்சி யாளர் கருத்தும் ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கது. பக்திப்பாடல்கள் தனித்தனி உதிரிப் பாடல்களாகவே இருக்கின்றன. திருவருள் ஒன்று தான் பக்திப் பாடல்களின் பெரும் பொருள். இவ்வருளை வேண்டுகின்றபாடலே மீண்டும் மீண்டும் வரும். சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்வது பக்தி இலக்கியப் பண்புகளுள் ஒன்று. நன்னெறியின் மெய்ஞ்ஞான மாமேதை அப்பாவின் ஞானக்குறம் ஓர் பக்தி இலக்கியம். ஆகவே இதில் இறைவனை அடையும் வழிமுறைகளும் இறைத்தத்துவங்களுமே சொல்லப் படுகின்றன. குறமகளை அறிமுகப்படுத்தும்போதே, "ஞான தத்துவங்களைப்பாட" வருகிருள் என்று ஆசிரியர் கூறுவதி லிருந்தே அவரின் நோக்கம் கதை சொல்வதல்ல, தத்துவப்புகழ் பாடுவதென்று நமக்குத் தெரிகின்றது.

ஞானக்குறத்தின் உள்ளீடு இதுதான். மொத்தம் 137 பாடல்கள் இருக்கின்றன. இதை ஐந்து பகுதிகளாகப் பிரிக்கலாம். இறைத் தத்துவமும் பெருமையும் பதினெட்டுப் பாடல்களில் முதலில் போற்றப்படுகிறது. தலைசிறந்த மெய்ஞ்ஞானி முகியித்தீன் ஆண்ட வரது புகழ்பாடுவதாக அமைந்துள்ளது. அடுத்து, 'பொலிவு களும் நிகுமத்தும் பொருந்துமகு மூதுமலை'யின் வளமை, பழமை, எளிமை, கருணையெல்லாம் பழகுதமிழில் அழகாக இருபது பாடல் களில் இனிமையாக்கப்படுகிறது. பொன்னரிய மான் குறத்தி போற்றிய மாமலையின் வன்னமெலாஞ் சொல்லி வழுத்தி முடித்த பின்னர் பன்னரிய நலம்பெற்ற அண்ணலார் அப்துல் காதிருவின் மாசுமறுவற்ற வாசல்வளம் முப்பத்தொரு பாடல்களில் முறையாக் கப்படுகிறது. நான்காவதாக, அதி அற்புதங்கள் நடக்கின்ற, நன்னபிதம் மக்கவள நாட்டின் சிறப்புக்கள் சீர்மையாக்கப் படுகின்றன. முப்பத்தெட்டுப் பாடல்களில் மேலான நாட்டுவளம் காட்சிதருகிறது. இறுதியாக,

> [24]"செஞ்சொல்வளந் கொஞ்சுமலைத் திங்களுடன் சூரியனும்
> மிஞ்சிவருஞ் சங்கோசையும் மிகுந்துவரும்"

---

24. பீர்முகம்மதப்பா, ஞானக்குறம், மலைவளம்

மலையையுடைய,

[25]"வானு லாவிய மேகங் குடையிடு மக்கம் வாழுமு ஹம்மது நன்னபி
தீனு லாவிய நாட்டிலே"

[26]"சோதிஅபு பக்கருமர் துரையுதுமா னலியாரும்
நீதிபீவி பாத்திமாவு நெறிஹசனு ருசைனுருஞ்
சாதிஅப்துல் காதிறுவுஞ் சாகிபுமார்"

ஆதிதிருவாசலிலே அவதரித்த எளியோர்களை இரட்சிக்கும் கருணைத் திருக்காரணக் கையையுடைய முகியித்தீன் ஆண்டவரது கைபார்க்கப்படுகிறது. முப்பது பாடல்களில் முழுமையான இறைக் குணங்கள் முறையாகப் பேசப்படுகின்றன. கைக்குறி கூறுவதோடு ஞானக்குறம் நிறைவு பெறுகிறது.

## மலைவளம்

கண்ணுக்கு விருந்து வைக்கும் கருத்தைக் கவர்ந்திழுக்கும் வண்ணமிகு இயற்கைப்பெரும் வனப்புக்களையெல்லாம் கன்னித் தமிழ் மொழியின் காலந்தோறும் வந்தபுலவர் எண்ணி எண்ணிப் பாடுகின்றார்; இயற்கையோடு கூடுகின்றார். பொதுவான இலக்கியங்களே இத்தன்மையனவென்றால் மலைமகளை—குறமகளைப் பாடுகின்ற குறவஞ்சி இலக்கியத்தில் மலைவளம் குறைபடுமோ? எல்லாக் குறவஞ்சி இலக்கியங்களும் மலைவளம் பாடுகின்றன. குறவர்களுக்கும் குன்றங்களுக்கும் குறையாத உறவு இருப்பதே இதற்குக் காரணமாகும்.[27] 'குறவர் என்னும் சொல்லே குன்றவர் என்பதனின்று மருவியதாகலாம்' என்பர். [28]'குறிஞ்சிக் குன்றவர் மறங்கெழு வள்ளிதமர்' என்ற பரிபாடல் தொடர் இதற்கு வலுவூட்டும். குறிஞ்சி நிலத்திற்குரிய கருப்பொருளில் மக்களில் தாழ்ந்தோரைச் சொல்லுகின்றபோது [29]'குறவர் குறத்தியர்' என்கிறது தொல்காப்பியம். [30]'குன்றக் குறவர்' என்ற சிலப்பதிகாரத் தொடரும் ஈண்டு நினைக்கற்பாலது. மலையிலே பிறந்து எழில் மடியிலே தவழ்ந்து தேன் தினையிலே வளர்ந்து அதன் நிலையெலாம் அறிந்தவள் குறமகள். பிறந்த வீட்டின் பெருமை பேசுவதுதானே பெண்ணின் இயல்பு. குறவஞ்சி இலக்கிய

---

25. பீர்முகம்மதப்பா, ஞானக்குறம், நாட்டுவளம்
26. பீர்முகம்மதப்பா, ஞானக்குறம், வாசல்வளம்
27. பேராசிரியர் சூ. இன்னுசி, பத்துக்கட்டுரைகள் பக். 50
28. குன்றம் பூதனுர், பரிபாடல் 9:67
29. தொல்காப்பியர், தொல்காப்பியம், புறத்திணை.
30. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம், பதிகம்.

வகை தோன்றுதற்குக் கருவாக விளங்கிய குறுந்தொகைப் பாடலில், [31]'அகவன் மகளே அவர் குன்றத்தை இன்னும் பாடுவாயாக' என்ற செய்திதான் சொல்லப்படுகிறது. அதுமுதல் வளர்ந்த அனைத்துமே குன்றத்தைப் பாடுவதுதான் குறவஞ்சி இலக்கியக் கூறெனக் கருதிப் பாடின போலும். மலையைப் பாடுதற் கேற்றாற்போலத் தன்னுடைய களத்தை அமைத்துக் கொண்டு வற்றாவளஞ் சுரக்கும் முற்றாஎழில் குற்றால மலையின் வளத்தைத் திரிகூடராசப்பக் கவிராயர்பாட அவரைத் தடங் கொண்டே மற்றவரும் பாடியிருக்கின்றார்கள். [32]'மலைகடல் நாடு வளநகர் பருவஞ்' சொல்வதும் இலக்கியப் பண்புதானே. ஆகவே குறத்தி தன் மலைவளத்தைப் பாடுகிறாள். அது இலக்கியத்திற்கு அணிசெய்கிறது. அதுமட்டுமல்ல, அவள் கூறுகின்ற மலைவளத்தைக் கேட்டு மற்றவர்கள் சிந்தையைப் பறிகொடுத்து அதன் அழகிலே மூழ்கிக் குறத்தியைப் பெருமையோடு பார்க்கிறார்கள்; அவள் வந்தகாரியம் கைகூட இது வசதியளிக்கிறது.

ஞானக் குறத்தில் மகுமூது மலையின் அருள்கூடும் வளங்கள் மெருகோடு தீட்டப்படுகின்றன. மயிலாடிக் கொண்டிருக்கும் குயில் கூவிக்கொண்டிருக்கும் மகுமூது மலையில் செஞ்சொல் வளர்ந்திருக்கும். கொஞ்சு மலைத் திங்களுடன் சூரியனும் பஞ்சவன்னக் கிளியன்னமும் படிந்திருக்கும். எழுகலையும் எழுவகையும் எழுசுடரும் எழும்பிநிற்கும். பழுதறவே தொழுதுநின்று துய்ய ஸுஜீதானதிலே விழைவுதருங் கிருபையுள்ளோன் வேண்டுகின்ற மலை. ஆண்பிள்ளையும் பெண்பிள்ளையும் அரவுப்பிள்ளையும் கலந் தொன்றாய் வாழ்கின்ற மலையைக்காட்டி அதன்மூலம் எல்லாம் கலந்தொன்றாய் வாழுகின்ற ஏற்ற இறக்கமற்ற, போற்றும் இரக்கம் பெற்ற சமுதாயத்தைக் காட்டுகின்றார்.

### வாசல் வளம்

கோனெழுந்து நேர்மகிழ்ந்த கோமான் தன் வாசலின் சீர் ஆர்ந்த பெருமைகள் சிறப்பிக்கப்படுகின்றன.

---

31. ஔவையார், குறுந்தொகை 23.
32. தண்டியாசிரியர், தண்டியலங்காரம் 8:6

[33]"பாழ்கடந்து பதிகடந்து பவக்கட லெல்லாங் கடந்து
வீழ்வினை யெல் லாங்கடந்து வெறிகடந்து மெலிகடந்து
நாள்கடந்து நகர்கடந்து நாமந்திரு நாமமெல்லாம்
வாழுநன்றாய் வாழ்ந் திருக்கும் வல்லவைதன் வாசலிதே"

என்று வாசலின் முழு அழகையும் மொய்ம்பாகக் காட்டுகின்றார். எத்தனை எத்தனை பெருமைக்குரியவர்கள் இத்திரு வாசலில் வித்தானார்கள் என்பதை,

[33]"ஆதிதிரு வாசலிது அஹ்மதனார் வாசலிது
சோதிஅபு பக்கருமர் துரையுது மானலியாரும்
நீதிபீவி பாத்திமாவு நெறிஹசனாரு சைனாருஞ்
சாதிஅப்துல் காதிறுவுஞ் சாகிபுமார் வாசலிதே"

என்று பட்டியல் போட்டுப் 'பாங்கோடு' கூறுகின்றார். இப்படிப் பட்டோர் அவதரித்த வாசல் எப்படி இருக்கும்? பக்திமணம் கமழும் என்பதைப் பகரவும் வேண்டுமோ! இதோ பக்திநெஞ்சம் பாடுவதைக் கேளுங்கள்! தலைவன் திருவாசலில்,

[33]"ஒருவர் தவுபாவோத வொருவர் தசுபீஹோத
ஒருவர் சலாவாத்வோத வொருவர் திருவாங்கோத
ஒருவர் காமத்தோதியபின் னொருவர் தக்குபீறுகட்ட
ஒருவன்றனை வணங்குந்தீன்தீ னேசை"

யோடு வணங்குகின்றார்கள். அருள்பெருகும் திருவாசலிலே வருவோர்க்கெல்லாம் பெரும் பொருளைத் திரள் திரளாக வாரி வாரிக்கொடுக்கின்றார்கள்.

[34]"அருள்என்னும் அன்பு ஈன்குழவி பொருள் என்னும்
செல்வச் செவிலியால் உண்டு"

என்னும் திருவள்ளுவத்திற்கேற்ப அருள்வளரப் பொருளினை அள்ளிக்கொடுக்கின்ற நிலையினைப் பார்க்கின்றோம். ஆறுகடந்து இடையூறுகளுக்கிடையே தேடிய பொருளை, ஆறு பெருங்கூறு வைத்து அதிலொன்றை ஊறு நேர்ந்தார்க்கு உதவுதலே திருமறை கூறுகின்ற நெறியாகும்.

---

33. பீர்முகம்மது அப்பா, ஞானக்குறம், வாசல்வளம்.

34. திருவள்ளுவர், திருக்குறள் 757.

[35]"கருணைபுரி வாசலிது கமலமலர் வாசலிது
இரணமருள் வாசலிதா மிறைவனருள் வாசலிது
தீர்க்கமுள்ள சீர்தழைத்த திருக்காதிர் வாசலிதே"

என்று இல்லோர்க்கு இரணமளிக்கின்ற நல்வாசலின் வள்ளல் தன்மை சொல்லப்படுகிறது. இதிலே அமைந்திருக்கும் நயத்தை நாம் குறிப்பிட்டாகவேண்டும். இரணமருள் வாசலிலே சீர்தழைக்கிறது என்கிறார். அள்ளி அள்ளிக் கொடுக்கக் கொடுக்கப் பொருள் குறையாமல் மேலும் மேலும் தழைப்பதாக ஆசிரியர் காட்டுவது, 'இறைக்கிற ஊற்றே சுரக்கும்' என்ற பழமொழியையும், 'வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம்' என்ற முதுமொழியையும் அரண்செய்வதாக அமைகிறது. ஏழை எளியோர்க்குக்கொடுப்பதால் பொருள் குறைந்துவிடுமே என்று அஞ்சுகிறவர்களுக்கு இன்பமொழியாம் ஈகைமொழி கூறுகின்றார்.

## நாட்டு வளம்

'எல்லாம் அவன் செயலே' என்று அல்லா பேர் சொல்லா நாள் இல்லாமல் வாழுகின்ற மக்கள் வாழும்துய்ய மாமக்க நாட்டில் எல்லாமே அற்புதங்கள்; எதனைத்தான் இங்கு சொல்ல. மக்கமா நாட்டில் அருட்செயல்களும் அறச்செயல்களும் நிறைந்திருக்கின்றன. வானுலாவிய மேகங் குடையிட்டு இயற்கை வளத்தைக் கூட்டுகிறது. செண்பகம் செழித்து வளர்ந்து அருள்மணத்தோடு வீசுந்தென்றலுக்கு மலர்மணம் ஊட்டுகிறது.

இந்த நாட்டு மக்களுக்கு எதுவுமே தேவையில்லை. அவர்கள் எதுவுமில்லாமல் எதையும் பெற்றிருப்பார்கள். ஊமை பேசுவர், முடவர் நடப்பர், குருடர் காண்பர், செவிடர் கேட்பர், கையில்லாதவர் தக்குபீறு கட்டிடுவர், கோலில்லாதவர் ஊன்றிவருவர், பால் இல்லாதவர் பிள்ளை வளர்ப்பர். ஆம்; இறைவனருள் நிறைந்த திருநாட்டில் எதுதான் நடக்காது? மக்கள்மட்டுந்தான் இப்படி வாழ்கிறார்கள் என்பதில்லை, மாக்களும் இப்படித்தான். மூன்று கால்கொண்டு யானை நடந்திடும். படமில்லாது எழுநாகம் நின்றாடிடும்.

[36]"...............
சினையில் லாப்பசு பெற்றகி டாரியே
தடமில் லாத்தனந் தானுமில் லாமலே
தன்கன் றுக்கது பாலைக் கொடுப்பது"

---

35. பீர்முகம்மது அப்பா, ஞானக்குறம்—வாசல்வளம்.
36. பீர்முகம்மது அப்பா, ஞானக்குறம்—நாட்டுவளம்.

இறைவன் பேரிலங்கு பெருநாட்டில் அல்லாமல் வேறெங்கு நடக்கும்?

ஆறறிவுயிரில் தொடங்கி ஐயறிவுயிரைச் சொல்லி அதன்பின் ஓரறிவுயிருக்கும் அதே நிலையைக் கூறும் பேரருளின் பாங்கோசை நம்மைப் பக்தியின் எல்லைக்கே 'வாங்கோ' வெனவழைக்கிறது. ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குகின்ற பண்பு அருள் உள்ளத்தின் வளர்ச்சி நிலையைக் காட்டுவதாகும். மக்கமா நாட்டு மரங்களும் அருள்நிறைந்த அற்புதங்கள் வாய்ந்தவை. மக்கமா நாட்டில், பண்டில்லா மரம் இன்று முளைத்திடும்; இலையில்லா மரம் பூத்தது காய்த்திடும்; எட்டிக்காய்கனி நன்றாய் இனித்திடும், இது மட்டுமா! சுட்ட மரக்கரி எட்டி முளைத்திடும்; பட்ட மாமரம் விட்டுத் தளிர்த்திடும். இதற்கு மேலும் அருள்நிறைந்த நாட்டின் வளத்தை வேறெப்படிச் சொல்லமுடியும். இறைவனோடு ஒன்றுங்கள்; எல்லாமே நீங்கள் அடைவீர்கள் என்று அப்பா அவர்கள் நாட்டு வளத்தைப் பாடுகின்ற முகத்தால் கூறுகின்றார்கள்.

தீயைப் பின் தொடர்ந்த விறகு எரிந்து சாம்பலாவதைப் போல் ஆசையிலகப்பட்ட பிறவும் எரிந்து சாம்பலாகி இருந்த சுவடே தெரியாமல் பிரபஞ்ச வெளியில் கலந்துவிடுகின்றன. இதை,

> மீனைக் கண்டெழு பூனைம டிந்தது
> வீசக் கண்டெழு திங்கள்பொ திந்தது
> ஊனைக் கண்டெழு நாய்கண்ம டிந்தது
> ஊரைக் கண்டெழு கூவன்ம டிந்தது
> தேனைக் கண்டெழு வீச்சைம டிந்தது
> ஷெய்கைக் கண்டெழு ஞாலம டிந்தது

என்று ஆசையால் எழுவது அனைத்துமே அழிவதைக் காட்டி, அழியாத நிலையான பரம்பொருளில் ஆசைவைக்க வேண்டுகின்றார்.

## கைக்குறி கூறல்

இறுதியாக விருக்கின்ற இப்பகுதியில் இருளோட்டு நற்குறத்தி மருளோட்டி அருளூட்டும் குறி சொல்கிறாள். முகியித்தீன் ஆண்டவரின் முழுப் பெருமைகளும் துறைத்தீந்தமிழால் குறத்தி பாடுகின்றாள். நரகேழ் விழுந்தவரை மன்றாடிச் சொர்க்கக்கரை சேர்க்க இரவேழு வான்கடந்த செய்தியும், நீர்யாரெனக் கேட்ட வரை யோட்டிய செய்தியும் இன்னபிற அருட் செய்திகளும் அவர்தம் சிறப்பும் ஈண்டு புகழப்படுகின்றன.

## ஞானக்குறத்தில் பிற கருத்துக்கள்

ஞானத்தில் முதிர்ந்தோர் பார்வை வானத்துப் பார்வையாகும். இம்மேலான பார்வையில் கீழான வேறுபாடுகள் தெரிவதில்லை.

அன்பெனும் பேரொளியைத் தேடித்தானே அனைத்து மதங்களும் நடக்கின்றன. சைவம் தழைத்த இத்தமிழ்த் திருநாட்டில் வாழ்ந்த பீர்முகம்மது அப்பா அவர்கள் தங்களது சமயத்தைச் சிறப்பிக்கும் போது சைவ, வைணவச் சொற்றொடர்களை ஆங்காங்கே பெய்கின்றார்கள். இஸ்லாமியப் பிறைவானிலே இந்து விண்மீன்களும் தலைகாட்டுகின்றன. இஸ்லாமிய இனிய வசந்தத்திலே இந்திளந் தென்றலும் வீசுகிறது.

[37]. "எதிரறுங் கதிரொளி விலங்கிட வெங்குநின்ற பராபரா" என்று பராபரத்தைப் போற்றித்தான் ஞானக்குறமே ஆரம்பமாகிறது. சொல்லுக்குச் சொல் தொடருக்குத் தொடர் பராபரத்தையே பாடிநிற்கும் தாயுமானவரின் வாய் நிறைந்த வார்த்தை இங்கு பாய்ந்துவரப் பார்க்கின்றோம்.

இறைவன் பெருமைகளைச் சொல்லுகின்றபோது [38] 'நாதமீதில் எழுந்தது' என்கிறார். 'ஏழிசையாய் இசைப்பயனாய்' இறைவனைக் கண்ட சமயக் குரவர்களின் கருத்து ஈண்டு நினைவுகூரத்தக்கது. மலைவளங் கூறுகின்ற பகுதியில்,

[39] "கயிலாச மலையெனவும் கருணைபுரி மலையெனவும்"

மகுமூதுமலை விளங்குவதாகக் கூறுகின்றார். இமயமலை இந்து மதத்தோடு இரண்டறக் கலந்துவிட்ட மலை. இருந்தாலும் இது இவர்களுக்கே உரியதல்ல. ஆனால் இஸ்லாமியம் செழித்துவளர்கின்ற மகுமூது மலையின் இறைத்தன்மையைப் பாட வருகின்றபோது அப்பாவின் கண்முன் கயிலாச மலைக் காட்சி தோன்றுகிறது.

[40] "தானிலுந் திருமீமிலும் ஒருசங்கு சக்கரமானதைச்
சாரவேயலை மீறவேயது தாமரைக்குள் விழைந்தது,"
"கமலமாகிய பூவிலே,
கருணைநாதனும் வருணைநாதனும் காரணப்
பொருளாகியே,"

என்ற அப்பாவின் பாடல் அடிகள் வைணவச் சமயக் கருத்தோடு ஒப்பு நோக்கத்தக்கவை.

[41] "பொங்கறுத்து மங்கறுத்துப் பொங்கு திருப்பாற்கடலில்
தங்குந்திருவும்"

---

37. பீர்முகம்மது அப்பா, ஞானக்குறம்-1
38. " "
39. " "
40. பீர்முகம்மது அப்பா, ஞானக்குறம்
41. "

என்ற தொடர் பிற மதத்தோடு பெரிதும் தொடர்புடையது போல் தோன்றுகிறது. அப்பா அவர்களிடம் பிற மதக் காழ்ப்பு கிஞ்சித் தேனும் இல்லை என்பதற்கு இவை எடுத்துக்காட்டுக்கள். [42] "திருக் குற்றாலக் குறவஞ்சியில் சமணம் தாக்கப்படுகிறது. [43] "பெத்லகேங் குறவஞ்சியில் பிற சமயங்கள் அனைத்துமே கடுந்தாக்குதலுக் குள்ளாகின்றன. ஆனால் அப்பா அவர்களோ ஒன்றாகக் காணு கின்ற உயரிய நோக்குடையவர்களாக விளங்குகின்றார்கள்.

## ஞானக்குறம் ஓர் ஒப்புப்பார்வை

இந்த இடத்தில், இது உயர்ந்தது அது தாழ்ந்தது என்று நான் ஏற்றத் தாழ்வைக் கற்பிக்கப் போவதில்லை. அதில் அமைந்து கிடக்கின்ற சில வேறுபட்ட தன்மைகளை மட்டுமே சுட்டிக் காட்டுகின்றேன். ஒவ்வொன்றையும் எழுதிய ஆசிரியரின் நோக்கங்கள் வெவ்வேறாக இருக்கும் போது அவர்களின் படைப் புக்கள் மாறுபட்டிருப்பது இயல்பே.

பொதுவாகக் குறவஞ்சி இலக்கியங்களின் கதைப் போக்கு ஒரே வார்ப்புச் சட்டத்திற்குள் அடக்கப்படுகின்றது. இருந்தாலும் சில குறவஞ்சிகளின் சில நிகழ்ச்சிகளின் வைப்பு முறை மாறுபடு வதும், சில உறுப்புகள் இல்லாமல் போவதும் உண்டு. காப்பு, இறைவாழ்த்துப் பாடலையடுத்து ஆசிரியர் கட்டியங்காரனை அறி முகப்படுத்துகின்றார்; கட்டியங்காரன் தலைவன் உலாவருதலை அறி முகப்படுத்துகின்றான். திருக்குற்றாலக் குறவஞ்சியிலும் அதற்குப் போட்டியாக எழுந்த பெத்லேங் குறவஞ்சியிலும், சரபேந்திர பூபால குறவஞ்சியிலும் மேலே சொன்ன அமைப்பு உண்டு. இதற்கு மாறாகக் கும்பேசர் குறவஞ்சியில், அதன் தலைவியாகிய செகன்மோகினியின் வரவுக்குப் பராக்கு சொல்கிறான்; குறவஞ்சி யின் முடிவில் கும்பேசரின் உலா காட்டப்படுகிறது. பெரும்பாலான

---

42. "சைவர் மேலிடச் சமணர் கீழிடச் சகல சமயமும் ஏற்கவே"

திருக்குற்றாலக் குறவஞ்சி [கழகப் பதிப்பு] பக். 12

"கூடுஞ் சமணரை நீடுங் கழுவேற்ற
ஏடெதிர் ஏற்றிய சம்பந்த மூர்த்தி"

திருக்குற்றாலக் குறவஞ்சி [ அழகப்பதிப்பு ] பக் 103

43. "கடவுளொன்றை யறியாமற் பல தெய்வத்தைக் கருதி வழி காணாத கவிஞர் கூட்டம், அடம்புரியும் பொய்த் தேவர்களின் மேல் வீணி லனேகவித புராணகா வியங் களாக்கி நடம்புரியும் குறவஞ்சித் தமிழுஞ் செய்தார்"

பெத்லகேங் குறவஞ்சி — பாயிரம்–3.

நூல்களில் உலா வரும் மன்னனைக் கண்டு பெண்டிரும், சிறப்பாகத் தலைவியும் மதிமயங்குகின்றனர். 'குறம்' என்னும் பெயர் பெறும் மீனாட்சியம்மை குறத்திலும், ஞானக்குறத்திலும் கட்டியங்காரன் அறிவிப்பில்லை, தலைவன் உலாவருதல் இல்லை, அவனைக் கண்டு பெண்டிர் மயங்கவில்லை. காப்புச் செய்யுளுக்கு அடுத்தபடியாகக் குறத்தி வந்து மலைவளங் கூறிக் குறிகூற ஆரம்பித்து விடுகின்றாள். மீனாட்சியம்மை குறத்தில் மீனாட்சியின் கையைப் பார்த்துக் குறிகூறும் குறத்தியின் ஒரு தொடரிலே தலைவனின் உலாவை நடத்தியிருப்பது சற்று மாறுபட்டுள்ளது. பெரும்பாலான குறவஞ்சிகளிலும் தலைவியின் கையையே குறத்தி பார்க்கின்றாள். ஆனால் ஞானக்குறத்தில் தலைவனது கையைப் பார்க்கின்றாள். தையலின் மையலைக் கையிலே பாடியவள், தோன்றலின் சான்றாண்மைகளை, பெருமைகளை, அருமையாகப் பாடுகின்றாள். குறங்கண்ட குறமகள் கரங்களின் திறங்களைப் பாடுகின்றாள். மீனாட்சியம்மை குறத்தில் தேவியின் பெருமை ஓவியங்கள் தீட்டப்படுவதைப் போல் ஞானக்குறத்திலும் முகியித்தீன் ஆண்டவரது அருமை பெருமைகள் பேசப்படுகின்றன.

குறவஞ்சியிலக்கியத் தலைவியர், தலைவனைக் கூடக்கருதிய எண்ணம் கைகூடுமோ கூடாதோவென அறிய மணலிலே கூடலிழைத்துப் பார்ப்பர். இது பழங்காலந்தொட்டே இருந்து வரும் பழக்கம். [44]குணமாலை கூடல் இழைத்துப் பார்த்ததைச் சீவக சிந்தாமணி குறிப்பிடும். [45]எழுதுவார் மழைக்கண் அகநானூற்றுத் தலைவியும் கூடலிழைத்துப் பார்க்கிறாள். ஆனால் ஞானக் குறத்திலோ தலைவியில்லை. தலைவன் கூடலிழைத்தல் பொருந்தாது. அதனால் குறவஞ்சியே, 'தீனுக்குப் பயிராக விளங்குகின்றார்' என்ற மாசாங்கில்லாத குறியை மணற்குவித்துப் பார்க்கின்றாள்.

தலைவி கேட்கத் தலைவிக்குப் பதில் சொல்வதாக வளங்கள் அமையும். ஞானக் குறத்தில் வரும் ஞானக்குறத்திதானே பஞ்சவன்னக் கிளியனமும் பயின்று வரும் மலைவளத்தைக் கொஞ்சு தமிழால் கூறுகின்றாள். வளம் பாடுகின்ற போதும் மலை, நாடு,

---

44. திருத்தக்கத்தேவர், சீவகசிந்தாமணி 1037.

45. "மறுதர வுள்ளமொடு குறுகத் தோற்றிய
செய்குறி ஆழி வைகலும் வைகறூ றெண்ணி
எழுதுசுவர் நினைந்த அழுதுவார் மழைக்கண்"
பொருந்தில் இளங்கீரனார்—அகம் 351 : 19-21

நகர், நதி வைப்புமுறை மாறுபடுகின்றது. முன்பின் கூறுவதால் தனித்துவமும் ஏற்படுவதில்லை; தனித்தன்மையும் கெட்டுப் போவதில்லை. குறவஞ்சிகளில் நிறைய வளங்கள் பேசப்பட ஞானக்குறத்தில் மலை, வாசல், நாடு ஆகிய மூன்றின் வளம் மட்டுமே பேசப்படுகிறது. கைக்குறி கூறுதல் பகுதியோடு ஞானக் குறம் நிறைவு பெறுகிறது ஏனையவற்றில் கைக்குறிகூறல் செம்பாதி யாகி, சிங்கன் வரவுமுதல மறுபாதி ஆரம்பமாகிறது.

ஞானக்குறத்தில் குறத்தியைப்பற்றிய வர்ணனையே இல்லை யென்று தான் சொல்லவேண்டும். 'கோலமாகிய பெண்ணவள்' 'கொண்ட மையற் கொண்டதுபோற் கொண்ட குறமகள்' என்ற தொடர்களால் மட்டுமே அவள் அழகு பேசப்படுகிறது. [46] மாறாக மற்றக் குறவஞ்சிகளில் அவள் விரிவாக அலங்கரிக்கப்படுகிறாள். ஆற்றுப்படை நூல்களில் விறலி வர்ணனையைப்போல் அவசிய மான ஒன்று இது. ஞானக்குறத்தில் குறத்தியின் ஒப்பனைப் புனைவுகள் காட்டப்படாததற்குக் காரணம், இதில் சிற்றின்ப நுகர்ச்சிகளுக்கு இடமேயில்லை என்ற அப்பாவின் எண்ணம் போலும். அழியாத பேரழகைப் பாடுகின்ற நூலில் பொய்யான அழகைப் பாடவில்லை போலும். என்றாலும், 'கோலம் ஆகிய

---

46. "கூடல்வளைக் கரம்அசைய மாத்திரைக்கோல்
ஏந்திமணிக் கூடைதாங்கி,
இலகுநீ றணிந்து திலகமும் எழுதி
குலமணிப் பாசியும் குன்றியும் புனைந்து
.....................................................
விழிக்கொரு சிமிட்டும் வெளிக்கொரு பகட்டுமாய்
உருவசி அரம்பை கருவமும் அடங்க
முறுவலின் குறும்பால் முனிவரும் அடங்க,"
"..............இல்லை எனும் இடை
வில்லை அனநுதல் முல்லை பொருநகை
ஆடும் இருகுழைத் தோடும் ஒருகுழற்
காடும் இணைவிழி சாடவே
தோடி முரளி வராளி பயிரவி
மோடி பெறஇசை பாடியே,"
"சோலையில் வசந்தகாலம் வாலகோ கிலம்வந்தாற்போல்
வஞ்சி வந்தனளே மலைக்குற வஞ்சி வந்தனளே"
— திருக்குற்றாலக்குறவஞ்சி பக். 55, 56, 59, 60.

வேதநாயக சாஸ்திரியார் 'குறவஞ்சிவளம் என்ற ஒரு தனிப் பகுதியே அமைத்துக் குறமகள் அழகை நாற்பது அடிகளில் அலங்காரம் செய்கின்றார்.

பெண்ணவள்' என்ற ஒரு தொடரே அவள் எல்லா விதமான அழகுக் கோலங்களையும் செய்திருக்கின்ருள் என்பதைக் குறிப்பாகக் காட்டுகிறது. கோலம் என்பதே அழகு தானே! அப்படி அவள் கோலம் செய்யாவிட்டால் அவள் கோலங்கண்டார் மையல் கொள்ள முடியுமா என்ன!

[47] "வடிவைப் பெருஞ்சுடரைத் — திரு
வல்லமை யாகிய இல்லல்லாவை
யடியார் பிழைபொறுப்போன் — அல்
ஹம் துலில்லா ஹிறப்பில் ஆலமின்
முடியாத பூமுடிக்கு — முத
லானவனை நிதமானவனைச்
செடியான தையறிந்து — சிறப்
பான தீனத் தினங்கைக் கொள்ளுங்கள்"

என்று ஆதிமுதலாய் சோதிவிளக்காய் நின்ற இறைவனைப் பாடுவதற்காகவே எழுதிய நூலில்,

[48] "உதிரமோ டென்புந்தோலும் ரோமமுந் தசை நரம்பும்
திதிவரி தாகிநின்ற" சீவனின் நிலையற்ற அழகைப்பாட அப்பாவின் மனம் ஒப்பாதது பொருத்தமே.

எல்லாக்குறவஞ்சி இலக்கியங்களும் இறைவன் புகழ் — தலைவன் புகழ் பாடுகின்றன. ஞானக்குறத்தின் கருவும் இதுவே. சமயச் சார்பில் அமைந்த குறவஞ்சி இலக்கியங்கள் ஒன்றையொன்று ஏசிக்கொள்ள, அப்பாவின் ஞானக்குறமோ பிறசமயக் காழ்ப்பின்றி இன்பந் தருகிறது.

## முடிவுரை

ஞானக்குறத்தின் சில தன்மைகளை மட்டுமே பார்த்தோம். இதில் அமைந்திருக்கின்ற சொல்நயம், பொருள்நயம், உவமை நயம் ஆகியனவும் சிறந்து விளங்குகின்றன. 'செந்தாமரை வளர்ந்து செங்குவளை வாய்திறந்து பந்து விளையாடும்' 'கொண்டல் வீசியுலாவிய செண்பகங் கோவு மந்தவி லாசமுநேசமுந் தென்றல் வீசும்' என்ற அடிகளில் ஆசிரியரின் இயற்கை ஈடுபாட்டைக் காண்கின்றோம். கோதாவரியைக் — கோசலையைப்

47. பீர்முகம்மது அப்பா, ஞானக்குறம்
48. பீர்முகம்மது அப்பா, ஞானப்புகழ்ச்சி.

பாடும்போது கம்பர்கண்ட காவிரியும் சோழநாடும் அவர் முன் தோன்றுவதைப்போல மக்கமா நாட்டில், அப்பா கண்ட தமிழ் நாட்டுச் செண்பகமும், தாமரையும், செங்குவளையும், மாமரமும், சங்கும் சக்கரமும் மாவும், கடுவாயும், மானும், யானைகளும் தெரிகின்றன. அப்பாவிடம் பிறந்த மண்ணின் சிறந்த பண்புகள் தெரிவதைப் பார்க்கலாம்.

குடத்திலிட்ட விளக்குப்போல் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் ஒளிரும் அப்பாவின் இலக்கியங்கள் குன்றிலிட்ட விளக்குப்போல் குவலயத்திற்கு ஒளிகாட்டும் காலம் விரைவில் உருவாகும் அறிகுறி இதோ தோன்றுகிறது. வாருங்கள், நாமும் இந்த அருள் ஒளியில் குளித்து மருள் இருளை நீக்குவோம்.

---

வடமசையு மேலே வழிநாலாம் வாசற்
றடமசையும் ஞானதத்து வத்தைக் — குடமசையுங்
கொண்டமையற் கொண்டதுபோற் கொண்ட குறமகளே
என்றுநின்று மாடினள் பாடி.

மேலூரி லுள்ளவரு மெய்யூரி லுள்ளவருங்
காலூரி லுள்ளவருங் காணுங்கள் — சீலூர்
வளைந்திருந்து பாருங்கள் வந்துநட னத்திற்
குழைந்து குழைந்தொக்குங் கூத்து.

— ஞானக்குறம் — மலைவளங்கூறுதல்.

# ஞானரத்தினக் குறவஞ்சி

*தக்கலை எம். எஸ். பஷீர்*

அரிதினும் அரிது மானிடராகப் பிறத்தல். பிறவிகளுள், மனிதப் பிறவி உயர்ந்தது, 'லகத் கலக்னல் இன்ஸான பீ அஹ்ஸனி தக்வீம்' 'மனிதனை மிகவும் மேலான, உயரிய படைப்பாகப் படைத்துள்ளேன்' என இறைவன் திருமறையின் கண் அருளியுள்ளான். 'மன்' என்ற பகுதியடியாகப் பிறந்த சொல் மனிதன். 'மன்' எனில் நினைத்தல், சிந்தித்தல், எண்ணல் என்பதாகும். நினைக்கின்ற, சிந்திக்கின்ற, எண்ணுகின்ற கருவி மனம் எனும் நன்முத்து. 'நப்ஸு' என்றும் 'கல்பு' என்றும் இது அரபு மொழியில் அழைக்கப்படுகின்றது. மனத்தை உடையவன் மனிதன். நினைப்பவன், சிந்திக்கின்றவன், எண்ணுகின்றவன் மனிதன். ஏனைய பிறவிகளுக்கு—உயிரினங்களுக்கு அமையப் பெறாத பெரும்பேறு பெற்ற மனிதப் பிறவிக்கு மட்டுமே இறைவனால் அளிக்கப்பெற்ற அருட்கொடை இது. இங்ஙனம் மனவளம் கொண்ட, சிந்தனைச் சிறப்புப் பெற்ற மனிதன் இறைச் சிந்தனையால் சிறப்பும் பீடும் பெருமையும் பேரின்பமும் பெறுகின்றான். மனிதப்பிறவி பெற்றதன் பயனைப் பெறுகின்றான். 'சிந்தித்தல்' என்பது அறிவு பெறுவதற்கான ஆராய்ச்சி செய்தல் ஆகும். சிந்தனைக்குரியவை மிகப்பரந்தவை, எல்லையற்றவை. ஆனால் சிந்தனைகளுள் இறைச்சிந்தனை உயர்ந்ததும் மேலானதுமாகும்; தேவையானதுமாகும். சிந்திப்பது அனைத்து நன்மைகளுக்கும் மூலாதாரமாக, திறவுகோலாக ஆணிவேராக இருக்கிறது. அறிவும் ஆற்றலும் பெற்ற மனிதன் பெறுகின்ற அறிவுகளுள் மஃரிபா—இறைவனை அறியும் ஞானம் (மெய்ஞ்ஞானம்)

சாலச் சிறப்பு வாய்ந்தது. சீரிய சிந்தனையின் விளைவால், ஐயங்கள் ஏற்படுகின்றன. மனத்தில் கேள்விகள் எழுகின்றன. தன்னை உணர்கின்ற நிலையில் இறைவனை உணர்கின்றான். நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன்? உடம்பு எப்படி வந்தது? எதற்காக இவ்வுடம்பு தரப்பட்டது? எதன் பொருட்டு வந்தேன்? எப்படி வந்தேன்? எங்கு போகவேண்டும் என்பன போன்ற பல வினாக்கள் எழுகின்றன. தன்னைப் பற்றியும் இறைவனைப் பற்றியும் அவனது படைப்புகளை, செயல்களைப் பற்றியும், ஆண்டவனுடைய உள்ளமை, கல்யாண குணங்களைப் பற்றியும் சிந்தித்துச் சிறப்புப் பெற்றவர்கள், எண்ணி, ஏற்றம் பெற்றவர்கள், நினைத்து நெஞ்சங்களை நிறை செய்தவர்கள் மனிதப்புனிதர்களாவர். ஆரிபீன்காளன மெய்ஞ்ஞானிகளாவர்; பெரும்மகான்களாவர். இங்ஙனம் இறைச்சிந்தனையில் எழுந்த, சிறந்த கேள்விகளுக்கு மெய்யறிவின்—அருளறிவின்—விளைவாகப் பதிலும் அவர்கள் வாயிலாகவே வெளிவந்தன. அவைகளை மக்கள் குலத்திற்கு இனிய பாடல்களாகப்பாடி அருளிச் சென்றுள்ளனர். மெய்ஞ்ஞான மாமேதை மகான் தக்கலைத் தவஞானி ஷேக்பீர் முஹம்மது சாஹிப் (வலீ) அவர்களின் "ஞான ரத்தினக் குறவஞ்சி" *சிங்கன் சிங்கி* மூலம், சிங்கன் கேள்வி கேட்க, சிங்கி பதிலுரைப்பது போன்று பாடப்பெற்ற விந்தைமிகு ஞான அருள் இலக்கியம். அறுபத்திமூன்று ஈரடிப்பாடல்களால் ஆன ஞானச் செறிவுடைய நூல்.

கேள்வியும் பதிலுமாக அமைந்த 'மசலா' என்ற புதுவகையான இலக்கியம் முஸ்லீம் தமிழ்ப் புலவர்களால் மட்டுமே படைக்கப் பெற்றதாகும். 'நூறுமசலா', 'ஆயிரம் மசலா' ஆகிய நூல்கள் வண்ணப்பரிமளப் புலவராலும் 'வெள்ளாட்டி மசலா' செய்கப்துல் காதிறு லெப்பை அவர்களாலும் இயற்றப் பெற்றவை. 'ஆயிரம் மசலா' நூலில் இசுலாத்தின் அரும்பெரும் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் வினு விடை வடிவில் கூறியுள்ளார்.

அல்லாமா இக்பாலின் "ஷிக்வா-வ-ஜவாபே ஷிக்வா"—'முறையீடும் முறையீட்டின் பதிலும்'—ஆறு அடிகளாலான அறுபத்தி ஏழு அழகுசால் உருதுக் கவிதைகளாம். அவை இசுலாமிய உலகின் குறைபாடுகள் குறித்து இறையோனிடம் முறையிடுவதும் அதற்குத் தகுந்தவாறு அம்முறையீட்டின் பதில் கிடைத்தலுமாகப் பாங்குறப்பாடப்பெற்ற பாடல்களாம்.

"பொன்னுலகு பொருந்து மனப் பொருளறியத் தனமறிய மின்னுலகில் மெய்ஞ்ஞானம் விளங்கக் குறவஞ்சிதனை" இறையின் நினைவாய்—உன்னுமத் தன்னினைவின்—உன்னி உதிப்பொருளை, உற்ற ஞானப்பொருளை உத்தியாய் உத்தமர் பீர்முஹம்மது உரைத்

துள்ளார். அவ்வுரைகள் ஞான ரத்தினங்கள்; 'இரத்தினச் சுருக்கம்' என்பார்களே, அதனைப் போன்று ஞானத்தினைக் கேள்வி பதில் மூலமாக குறவன் குறத்தி—சிங்கன் சிங்கி—வாயிலாகக் கூறியுள்ளார். ஞானக் கருத்துக்களை வினுவிடை மூலம் தரும் எளிய இனிய நூல் ஞான ரத்தினக் குறவஞ்சி.

தமிழ் நாட்டிலே 'பதினெண் சித்தர் பெரிய ஞானக்கோவை' என வழங்கும் சித்தர்களின் பாடல்கள் தொகுப்பு நூலின் கண், முஸ்லீம் புலவர் ஞானிகளில் சித்தர் பிரான் பீரப்பாவின் 'ஞான ரத்தினக் குறவஞ்சி' தனைச் சேர்த்து அமைத்துள்ள திறம் அறிந்துணரத்தக்கது.

முஸ்லீம் தமிழ் இலக்கியங்களுள் குறவஞ்சி நூற்கள் குறைவு. தமிழிலக்கியத்தில் இது நாடகவகையினைச் சார்ந்த நூல் என்பர். இதனைக் 'குறவஞ்சி நாட்டியம்' என்றும் கூறிவந்தனர். குறத்தி குறி சொல்லுதல் போன்று கூறப்படுவது. இதனைக் 'குறத்திப் பாட்டு' என்றும் குறவஞ்சி என்றும் கூறுவர். இது பண்ணும் இசையும் கலந்து கற்போர் கேட்போர் உள்ளங்கட்கு இலக்கிய விருந்து அளிக்கும் விழுமிய நூலாகும். 'குறம்' எனும் நாடக முறையில் அமைந்தது. திருக்குற்றாலக் குறவஞ்சி, கும்பேசர் குறவஞ்சி, சரபேந்திரபூபாலர் குறவஞ்சி, கொடுமாளூர்க் குறவஞ்சி முதலானவை சிறப்புடையன. மிகப்பழங்கால—சங்க நூல்கள்—வரிசையில் பத்துப்பாட்டு நூல்களில் 'குறிஞ்சிப் பாட்டும்' ஒன்று; அஃது அகத்திணை நூல் 261 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் அமைந்த நூல். இது 'பெருங் குறிஞ்சி' எனவும் கூறப்படும். குறிஞ்சி—மலையும் மலைசார்ந்த இடமும். குறவன், குறத்தி குறிஞ்சி நில மக்கள். சிங்கன் என்பான் ஒரு குறமகன். அவன் மனைவி சிங்கி என்பவள். சித்தர்பிரான் பீரப்பாவின் ஞானரத்தினக் குறவஞ்சி சிங்கன் சிங்கி ஆகியவர்களிடையே நடைபெறும் உரையாடல்கள் போன்று (வினுவிடையில்) அற்புதமான ஞானக் கருத்துக்களைக் கொண்டதாக பண்ணோடு இசைபெற அமைந்துள்ளதாகும். குறவஞ்சி என்ற குறி சொல்கிற பெண் அல்லது இவண் ஞானத்தினைச் சொல்லுகிறபெண் என்ற முறையில் அமைத்துப் பாடியிருக்கலாம். மலையும் மலைசார்ந்த இடமும் சித்தர்களுக்கு மிகச்சிறப்பான இடம். சித்தமிசைக் குடிகொண்ட சித்தனை, கத்தனை, நித்தனை வணங்குவதற்கு ஏற்ற இடமாகக் கொண்டிருந்தனர். தூய துறவியான மகான் பீர்முகம்மது சாஹிப் (வலீ) அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் ஓர் அரிய நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கது. இவண் ஆழ்ந்து ஆராய்தற்குரியது. முன்னாள்

திருவிதாங்கூர்—கொச்சி இராச்சியத்தில்—இன்றைய கேரளம் — ஒரு பகுதியான ஆணைமலையில் பல ஆண்டுகள் கடுந்தவம் புரிந்து வந்ததால் அப்பகுதி இன்றும் அம்மாமேதையின் பேரால் "பீர்மேடு" என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டு வருகிறது; செல்வச் சிறப்புற்றுத் திகழ்கிறது. அங்கிருந்துதான் மஃரிபத்து மாலை, ஞானரத்தினக் குறவஞ்சி, திருமெய்ஞ்ஞானச் சரநூல், ஞான உலகவுருளை, ஞானமணிமாலை, ஞானப்பூட்டு முதலான அரும்பெரும் ஞானச்செல்வங்களையெல்லாம் பாடினார்கள் என அறியப்படுகிறது.

இரத்தினம் நவமணிகளுள் ஒன்று. மிக மதிப்பு வாய்ந்தது. மணி, முத்து, மாணிக்கம் எனும் இலக்கியங்கள் மிக அதிக மாகவே காணப்படுகின்றன. இரத்தினம் எனும் அடைமொழி இலக்கியங்களும் அதிகமாகவே காணப்படுகின்றன. 'ஞானந்தரத் தினம்' — அப்துல்கனியவர்களாலும் 'பஞ்சரத்தினத் தாலாட்டு'- காளை அசனலிப் புலவராலும் பாடப்பெற்ற நூல்களாம். இரத்தினங் கள் கிடைத்தற்கு மிக அரிது. ஞானரத்தின நூல்களும் மிகக் குறைவே. இரத்தினங்களைப் பெறுவது பெரும் கடினம். அதற்கு அரிய உழைப்பும் தேவை. ஞானரத்தினங்களை அறிவதற்கும் அவற்றின் ஆழிய இரகசியங்களைப் பேணுவதற்கும் பெரும் சிரமமும் கடின உழைப்பும், அரிய முயற்சியும் வேண்டற்பாலவை. சிந்தனை சிறப்புறும்பொழுது ஐயங்கள் எழும்புகின்றன. வினாக்கள் பிறக்கின்றன. சந்தேகங்கள் தீர்க்கப்படுகின்றன. ஆதிக்கு முன் அநாதி என்ன? தன்னையறியுந்தலமேது? என்ன விதமாகத் தன்னை அறிவது? இறையை அறிவது எப்படி? எப்படி வணங்கு வது? போன்றவற்றிற்கு எல்லாம் சிங்கி மூலம் பதிலளிப்பதாகப் பாடியுள்ளார். தொடர் கேள்வி, ஒன்றோடு ஒன்று சங்கிலித் தொடர்போல், தொடர்புடையதாய் அரிய ஞானத்தினை வினா விடை வழி விள்ளும் தன்மையதாய் அமைந்துள்ளது. இரத்தினச் சுருக்கமாய் அமைந்த ஞானக் கருத்துக்களுக்குப் பீரப்பாவின் பிற ஞான நூல்களும் விளக்கம் தருகின்றன.

ஞானரத்தினங்களைத் தொடராக நயம்படச் செய்துள்ள ஞான ரத்தினக் குறவஞ்சிதனில் சார்ந்து ஒரு சில ஞானரத்தினங்களைப் பெறுவோமாக!

தமிழ்ச்சித்தர்கள் பாடிய ஆதியின் - அனாதியின் - வடிவம் 'ஒளிக்கு ஒளிதரும் இருள் உரு' எனப் பாராட்டப்பட்டது. 'இருளில் ஒளி நள்ளிருளில் நட்டம்' எனப் பிற பக்திப் புலவரும் இதனையே பாடுவர். பீரப்பா அதனை,

"ஆதிக்கு முன்ன ரநாதியு மென்னடி சிங்கி? — அது
அந்தக் கருக்குழி முந்த இருளறை சிங்கா!"

என்கிருர். இறைவன் தனக்கு வேறு எவரையும் ஆதியாகக் கொள்ளாதவன் — சோதியானவன் — என்பதனையும் கூறுகிருர்.

எப்படி இவ்வுலகில் நாம் உருவானேம் என்பதனை,
'எப்படி யுலகத்தில் இப்படி யுருவானேம் சிங்கி — அது
அப்பன் தன்னட்புக்கு ஒப்பிய தாயாலே சிங்கா!'

என்கிருர்.

இந்த உடலுக்குயிர் வந்தது எப்படி என்பதனை,
"இந்த உடலுக் குயிர்வந்த தெப்படி சிங்கி — அது
தொந்தி நடுக்குழி தொப்பூழ் வழியடா சிங்கா!"

எனவும், இந்த உடலுக்கு வேரென்ன? தூரென்ன? உடலுக்கு உயிரெங்கே? என்பனபோன்றவற்றிற்கு எல்லாம் சிங்கிமூலம் விடை பகர்கிருர் பீரப்பா. குறுகிய அடிகளில் இரத்தினச் சுருக்கமாகக்கூறிய கருத்துக்களுக்கு எண்ணற்ற அரிய பல விளக்கங்கள் அறிஞர்கள் பகர்வர். மேலும்,

'தன்னை அறியுந் தலமேது சொல்லடி சிங்கி! — அது
கண்ணிடை யான நடுநிலை யல்லவோ சிங்கா!

என்ன விதமாகத் தன்னை யறிவது சிங்கி! — அது
தன்னவன் ருய்தந்தை யாகிநா மானது சிங்கா!

இறையை அறிவது மெப்படிச் சொல்லடி சிங்கி! — அது
இறையெங்கு நின்ருடுந் தன்நினை வாகுமே சிங்கா!

தன்னுள் விளங்கும் தவமென்ன சொல்லடி சிங்கி! — அது
தன்னை மறந்து தவத்தி விருப்பது சிங்கா!

என்ன விதமாகத் தன்னை மறப்பது சிங்கி! — அது
ஒன்றைப் பொருந்தி யொடுங்கி யிருப்பது சிங்கா!

என்ன விதமாக ஒன்றைப் பொருந்தலாம் சிங்கி! — அது
எல்லா மறந்து மிருளா யிருப்பது சிங்கா!'

என்கிருர் பீரப்பா. ஞானச் செல்வர் குணங்குடியாரின் பொறைநிலை, காட்சிநிலை, தியானநிலை போன்ற பாடல்கள் இதனை நன்கனம் விரித்துரைக்கிறது எனலாம். மேலும்,

'எங்கும் பரந்த பெரும்பொரு ளென்னடி சிங்கி! — அது
அங்கிங்கு மெங்கு மகண்ட பெருவெளி சிங்கா'

என்றுரைக்கிருர். ஆங்கார உடலுக்கு ஆணியானது என்ன? ஆணியாய் வந்த அரும் பொருளென்ன? என்பன போன்றவற்றிற்கும் விடை கிடைக்கிறது. இன்னும்,

'எப்படிக் கண்டே இறையை வணங்கலாம் சிங்கி! — அது
நட்புடன் இரண்டு நடுநிலை காண்பது சிங்கா!
நடுநிலை யானதை நாடுவ தெப்படி சிங்கி! — அது
நாட்டந் தேட்ட மோட்ட மாட்டமொன்ருகிஞல் சிங்கா!'

என ஞான வகையினை வழங்குகிருர். இரவும் பகலும் ஒன்ருனது எவ்விடம்? இரவும் பகலும் பிறப்பிடம், எழுந்திடம், நின்ருடிய தெவ்விடம் என்பவற்றையும் சுருக்கமாகத் தருகிருர். இறுதியில் சரநூல் சாரத்தினை — வாசிதனை — இடகலை, பிங்கலை — சந்திர, சூரியகலை பற்றியும் குறிப்பாகக் கூறியுள்ளார். இந்நூல் அளவில் சிறியதாயமைந்திருப்பினும் (அறுபத்துமூன்று ஈரடிகளால்) ஞான ரத்தினங்களைப் பெறுதற்கு அரியமுறையில் ஆழமுறவைத்துப் பொதிந்து, பொருள்நயம் சிறக்கப் பாடியுள்ளார். இந்நூலில் சிந்தனைச் சிறப்பும், தன்னை உணர்ந்த நிலையும் இறைவனைப் பற்றிய உணர்வும் கற்போர் கேட்போர் உள்ளங்கட்கு விள்ளும் முறையில் அமைந்தது வியத்தற்குரியது. ஞானரத்தினக் குறவஞ்சி நூலின் நுண்பொருள் காண்பது பேரறிஞர் கடமையாகும்.

"ஒரு சிறிது நேரம் சிந்தனைசெய்வது ஒரு வருட வணக்கத்தைவிடச் சிறந்தது" என்பது பெருமானரின் பொன்மொழி. "வானங்களுடையவும் பூமியுடையவும் படைப்பிலும், இரவு பகல்களின் மாற்றங்களிலும் சிந்திக்கும் அறிவாளருக்குத் திண்ணமான அத்தாட்சிகள் உண்டு" — (திருக்குர்ஆன் அத். 3:130) எனத் திருமறை பகர்கின்றது. சிந்திக்கத் தக்கவைகளைச் சிந்திக்கவேண்டும். மனிதனை இறைவன் விளையாட்டுக்காகப் படைக்கவில்லை என்பதனை அறிதல் வேண்டும். மனிதன் தீட்டிய சித்திரத்தினைப் பாராட்டுகிருேம்; புகழ்கிருேம். சிற்பியினுல் செதுக்கப்பட்ட சீரிய சிலையினைச் சிறப்பித்துக் கூறுகிருேம். கவின்பெறு மாளிகையினைக் கண்டு களியின்பம்கொள்கிருேம். ஆனுல் இறைவனுடைய இல்லத்தில் வாழும் நாம் — அவனைப் புகழ்கின்ருேமா? எண்ணுகின்ருேமா? சிந்திக்கின்ருேமா? மனிதன் தன்னகத்தே ஓர் உலகத்தை உடையவனுய் இருக்கிருன். படைக்கப்பெற்ற படைப்புகளில் தான் உயர்ந்தவனுகப் படைக்கப்பெற்று இருப்பதை உணரவேண்டாமா? உணவைத் தேடுகின்ற நாம் உணர்வைத் தேடவேண்டாமா? பொருள் தேடுகின்ற நாம் இறையின்பம்பெற ஆவலுற வேண்டாமா? சிந்தனை சிறப்படையும்பொழுது மனநிலை உயர்நிலை பெறுகின்றது. தூய மார்க்கவழியில் இறைவனை அணுகவேண்டும். வாழ்வாங்கு வாழ வேண்டும். சிந்திக்க வேண்டியவைகளைச் சிந்திக்கப் பழக

வேண்டும். சிந்தித்துச் சிறப்புற்றோரின் அறவழிவாழ விழைதல் வேண்டும். மனிதகுலம் மாண்புறும்; வாழ்வு வளம்பெறும்; உலகம் உய்யும்; நினைத்தலில் இறையுணர்ச்சி, எண்ணங்களில் மறுமலர்ச்சி, சிந்தனையில் புத்துணர்ச்சி, செயலில் விழிப்புணர்ச்சி பெற்றுத்திகழ்வோமாக! சிந்தித்துச் சிறப்புறுவோமாக! நல்லன நினைத்து நெஞ்சங்களைத் தூய்மைபெறச்செய்வோமாக!

---

அஞ்செழுத் தாக வமைந்த வெழுத்தென்ன சிங்கி — அது
அஞ்சும் பொருந்திய வாகாய வட்டமே சிங்கா.

கற்பக வாசி கலந்திட மெய்விடஞ் சிங்கி — அது
உற்பன மூலத்தி னுள்ளொளி வல்லவோ சிங்கா.

சத்தம் பிறந்திடும் சற்குரு வேதடி சிங்கி — அது
உற்ற சுவாச முயிர்நிலை யல்லவோ சிங்கா.

கண்டு தொழுஞ்சிவ காரண மேதடி சிங்கி — நம்மை
உண்டு படுத்திய வுள்ளொளி வானதே சிங்கா.

எப்படிக் கண்டே யிறையை வணங்கலாம் சிங்கி — அது
நட்புடன் ரண்டு நடுநிலை காண்பது சிங்கா.

— ஞான ரத்தினக் குறவஞ்சி.

# மெய்ஞ்ஞான மார்க்க மேதை பீரப்பா வழங்கும் பிஸ்மில்குறமும் ஞான ஆனந்தக் களிப்பும்

கே. பீர்முகம்மது, பி. எஸ். சி.
நகராட்சி ஆணையாளர் (ஓய்வு)

உயிரினங்கள் மண்ணிடைத் தோன்றி அழிகின்றன. இவற்றையெல்லாம் தோற்றுவிக்கும் ஒரு பொருள் இருக்கத்தானே வேண்டும். அத்தோற்றுவிக்கும் பொருளும் அழியும்தன்மை வாய்ந்ததெனில், அதனையும் தோற்றுவிக்க மற்றொரு பொருள் வேண்டும். ஆதலின் ஆக்கும் தன்மையுள்ள அந்த ஆதிப் பொருளுக்கு அழிவு இருக்கமுடியாது. அழிவு இல்லாத காலத்து அதற்குப் பிறப்பும் இருக்கமுடியாது. எனவே பிறப் பிறப்பற்ற ஒரு பொருள்தான் என்றுமுள மெய்ப்பொருளாய் பிரபஞ்சம் அனைத்தையும் படைத்துக் காத்து அழித்து வருகிறது. இந்த மெய்ப்பொருள் யாது? இதற்கும் உயிரினங்களுக்கும் உள்ள தொடர்பு யாது என்று ஆய்வு செய்யவும், இவ்வாறு ஆயும் அறிவு ஏது என்று எண்ணிப் பார்க்கவும், மனிதன் தலைப்பட்டான்.

இஃதன்றி, பிறந்தவையாவும் ஆனந்த வாழ்வையே விழைகின்றன. புலன் வழி நுகர்ச்சி, புணர்ச்சிகளால், இவ்வின்பம் கிட்டுகிறது. ஆயினும் இவ்வின்பம் நிரந்தரமாய் நில்லாமல், நுகர்ச்சி புணர்ச்சிகளில் இந்திரியம் செலவாகி அதனால் இன்பத்திற்குப் பின், சோர்வும், துன்பமும், பிணிமூப்புச் சாக்காடும் நேர்கின்றன. இஃதன்றி, நிலையான இன்பத்தை எவ்வாறு எய்துவது? பிணிமூப்புச் சாக்காட்டை எவ்வாறு தவிர்ப்பது? என்பது பற்றியும் மனித அறிவு ஆராயத்துவங்கியது.

இவ்விரு ஆய்வுகளும்தான், மனுக்குலத்தை மெய்ஞ்ஞான மார்க்கத்துக்கு அழைத்துச் சென்றன. மனுக்குலத்தின் இத் தேவையினைப் பூர்த்தி செய்ய அப்பரம்பொருள் அவ்வப்போது தூதர்கள் வாயிலாக வேதங்களை அனுப்பி இந்த மனுக்குலத்தினை நல்வழிப்படுத்தியது; அல்லாஹுத்தஆலா திருக்குர்ஆனை இறுதி நபி எம்பெருமானார். முகம்மது (ஸல்) அவர்கள் மூலம் நமக்கு அனுப்பிவைத்தான். இவ்விறை வேதத்தின்படி உலகுடன் ஒத்து, மனைவி மக்களுடனும், சொத்து சுகத்துடனும் வாழ "ஷரீஅத்" என்ற முறையினைப் பெருமானார் நமக்கு வகுத்தளித்தனர். அதே போழ்து "நான் யார்? என் ரப்பு யாவன்?" என்று சிந்திக்கத் தொடங்கிய அறிவாளிகளுக்கு, மறை வகுத்த மெய்ஞ்ஞானத்தைப் போதித்தார்கள்; இது "மஃரிபா" வழியாகும். இம்மெய்ஞ் ஞான வழிக்கு நான்கு படிகள் உள்ளன. அவை ஏற்கனவே கூறிய "ஷரீஅத்" அடுத்து, "தரீக்கத்", "ஹக்கீக்கத்" முடிவில் "மஹரிபத்" ஆகும். உலகியல் நிலையான ஷரீஅத்துக்குப்பின் தரீக்கத் என்றது தவநிலை; இதில் புலனடக்கம் வாசியை வழிப் படுத்துதல், தன்னையறிதல் போன்ற கடுமையான உட்தொழுகைகள் உள்ளன. மூன்றாவது "ஹக்கீகத்"; இது சித்திநிலை, தரீக்கத்தின் தவப்பயனால் இறைவனை அறியும் நிலை இதுவாகும்; நான்காவது "மஃரிபா" நிலை. இது முத்திநிலை. இது தன்னை அழித்து அல்லாஹ்வுடன் ஒன்றுபட்ட நிலை.

"மஃரிபா" என்பது மாபெரும் சமுத்திரம்; இதனைக் கடந்து முத்திபெறத் துணைபுரியும் கப்பல் பெருமானார் அவர்கள்; இக் கப்பலினைப் பற்றுதற்குத் தோணிகள் வேண்டுமல்லவா? அத் தோணிகள் போன்றோர்தான் தொட்டுக்காட்டும் "ஷெய்குகள்", குருமார் இன்றியெய்தும் ஞானம், கவைக்குதவாதது "குருவிலான் கற்ற கல்வி குமரியைக் குமரி கூடி மருவிய இன்பமொக்கும்" எனக் கைவல்யம் கூறும்.

## பிஸ்மில்குறம்

இத்தகு ஞானாசிரியர்களிற் சிறந்து விளங்குபவர் மெய்ஞ்ஞான மேதை தற்கலை பீர்முகம்மது வலியுல்லா நாயகம் அவர்கள்; அவர் அருளிய நூல்களில் "பிஸ்மில்குறம்" என்ற நூலில் ஞான சித்தி மார்க்கங்களை உள்ளங்கை நெல்லிக்கனி போல், தெள்ளத் தெளிய எடுத்துக் கூறியுள்ளார் அப்பா அவர்கள். உடலுள் அமைந்த 'மக்காம்'கள் யாவை; மேற்கூறிய நான்கு நிலைகளிலும், எந்தெந்த மக்காமில் (ஸ்தலத்தில்) சிந்தையை நிறுத்தி எவ்வாறு திக்கீர் (தியானம்) செய்யவேண்டும்? அத்தகைய தியானங்களின் பயன் கள் யாவை என்று தெளிவாகக் கூறியுள்ளார்.

"ஷரீ அத்" திற்கு மக்காம் "நாசூத்"—இடதுபுற மார்பு; திக்ரு "ஜல்லி"யாகும். அவை, "லாஇலாஹ இல்லல்லாஹு", "ஆதம்", "முஹம்மது", "இல்" ஆகியவை. திக்ரின்மீது கவனம் வைத்து இரு விழிகளையும் கூர்மையாகப் புருவ மத்தியில் பதிக்கவேண்டும். அத்துடன் இடது மார்பைக் கூர்ந்து நோக்கி, ஏற்றி இறக்கி, திக்ரு செய்யவேண்டும். இதன் சித்தி சாகாமல் சாகும் அனுபவமும் இதய மலரைத் தரிசித்துக் களித்தலுமாம்.

இரண்டாவது நிலையான "தரீக்கத்" திற்கு மகாம் இரு நாசிகளுக்கும் இடையேயுள்ள "மலக்கூத்" ஆகும். இதன் திக்ரு, "கல்பி" எனப்படும். அவை "இல்", "அல்", "அல்லாஹு", "ஹக்கலில்லாஹ்" ஆகியவையாம். கண் பார்வைகளை அந்த மக்காமில் நிறுத்தி, நடு இருதயக் குழியில் தரிபடும்படியாகவும், இன்னும் அந்தப் பார்வையானது, தன் இரண்டு ஸ்தலங்களிலும் பொருந்தும்படியாகவும் செய்து சரீரத்தைத் தலைகீழாக மாற்றி விட்டு திக்ருகளில் உள்ளத்தைப் பொருத்தி இரு கண்களும் அசையாமல், கூசாமல் ஒரே வைராக்கியமாகப் பார்த்துவந்தால், அந்தப் பார்வைக்கு நடுவே குதறத்து மலர் நடமாடும் என்று கூறுகிறார்.

மூன்றுவது படியாகிய ஹகீக்கத்திற்கு மகாம் "ஜெபரூத்". இது இரு புருவங்களுக்கிடையே உள்ளது. இதன் "திக்ரு" "றூஹி"யாகும். அவை "யாகரீம்", "யாரஹீம்", "நிர்றஹீம்", "யாமகுபூப்" ஆகும். திக்ரு றூஹியுடன் மூன்றுவது மக்காமாகிய ஜெபரூத்தில் வந்து பார்வைகள் கூடவேண்டும். "உரூஜ்", "றுசூல்" என்ற ஏற்ற இறக்கங்கள் செய்யவேண்டும். முக்கோண வடிவாக நிஷ்டையில் இருக்கவேண்டும். இம்முறையில் மேற்சொன்னபடி கண்களைச் சுருட்டி நோக்க, அங்கு நீடொளியான அலீபைச் சந்திப்பாய்; அந்த "அலீபு" உள்ளத்திலேயே பொருந்திக்கொள்ளும். இதுவே ரப்பையும், முஹம்மதையும், ஆதத்தையும் அறியும் தவமாகும்.

நான்காவது நிலையாகிய "மஃரிபா"விற்கு மக்காம் "லாஹூத்" நின்றிலங்கும் நீடொளியாகிய "றப்பை"ப் பார்க்க, இரு கண்களையும் இறுக மூடிக்கொண்டு உற்றுப்பார்த்து, விழிகளைச் சுழற்றி அஞ்சாத தீரத்துடன் ஒன்றுபட்டு நின்றால் மூல அஸ்தியிலிருந்து முஹம்மதியாவின் பதினுன்கு நுபுவ்வத்துக்களில் ஒன்று பளீரென்று வெட்டி வெளியாகும். அந்த அநந்தானந்தக் காட்சிகளைக்கண்டு சொக்கி நின்று நிலைத்தால் உன் நினைவு "அல்லாஹ்" ஆக இருக்கும்; உன் காட்சி முஹம்மதியாவாக இருக்கும் என்று கூறுகிறார்.

இவ்வாறு எந்த நூலைப் படித்தாலும் தெளிவான விளக்கங் களைக் காணலாம்.

## ஞான ஆனந்தக் களிப்பு

"ஞான ஆனந்தக்களிப்பு" என்ற நூலில் சிறந்த பண் அமைந்த பாக்களைத் தந்துள்ளார். ஒன்றை இங்கு கூறலாம்.

"கொள்ளைக் குதிரைகள் கோடி—அவன்
கோட்டை யழிக்க வருகுமே ஓடி
வெள்ளைக் குதிரைமேல் ஏறி—வீதி
தப்பா மற்சுற்றிப் பரியை நிறுத்திக்
கள்ளனைக் காவலாய் வைத்துத்—தானும்
கள்ளனுக் குள்ளே கலந்தே இருந்து
உள்ளுற்றுக் கோட்டையை ஆளும்—நமக்
குற்ற பிரானையான் கண்டுகொண் டேனே".

"ரப்பின் கோட்டையாகிய இச்சரீரத்தை முத்தி நிலை எய்து முன் அழித்துவிடக் கோடி கோடி ஆசைகள் வந்து மோதுகின் றன. அப்போது இந்திரியத்தைக் கட்டுப்படுத்தி அவை புலன் வழி இச்சைகளிற் செல்லாவண்ணம் உறுதியாய் நின்று ஆசா பாசங்களைத் தடுத்து நிறுத்திவிடுகிறுன் இறைவன். மேலும் அந்த ஆசாபாசங்களுக்கே இடங்கொடுத்து சதாகாலமும் அலைந்து கொண்டே திரியும் திருட்டு உள்ளத்தை அடக்கிவிடுகிறுன். அவ் வாறு கட்டுப்பட்ட உள்ளத்தின் திறமையால் அந்த ஆசாபா சங்கள் அணுகாமல் காத்துவிடுகிறுன். அந்த உள்ளம் தெளிந்த தால், அவன் அதில் களங்கமின்றித் தெரிகிறுன். எனவே அவ் வுள்ளத்துடன் கலந்தே இருக்கிறுன். இந்த நிலையில் என்னுள்ளே இருந்து என் சரீரக் கோட்டையை ஆண்டுவரும் என் றப்பைக் கண்டுகொண்டேன்" என்று ஆனந்தக் களிப்பு புரிகிறுர் நம் பீர் முகம்மது வலீயுல்லா நாயகம் அவர்கள்.

அவர்களது நூலைக்கற்று நாமும் முக்தியடைய எல்லாம்வல்ல அல்லாஹ் அருள்பாலிப்பாஞக!

# பெருமானார் நெறிபாடும் பெருஞானியின் ஏட்டேற்ற மாலை

*தக்கலை சே. முகம்மது முஸ்தபா, சிங்கப்பூர்.*

திருமறையின் நிறைபொருளையும், திருநபியின் அருமொழியையும், திக்கும் இன்பத்தமிழில் அருள் ஞானப் பாக்களாக ஏற்றமுறப்பாடி 'யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பெருநிலையில் தமிழ் கூறும் நல்லுலகுக்குத் தந்தவர்கள் இறைநேசச்செல்வர் மகான் பீர்முஹம்மது வலியுல்லாஹ் (ரலி) அவர்கள்.

இன்பத்தமிழுக்கும் இஸ்லாமிய சமயத்திற்கும் ஒருசேரத் தொண்டு செய்து அனைவர் நெஞ்சங்களிலும் நிலைத்திருக்கும் பீர்முஹம்மது அப்பா அவர்கள் வாழ்ந்த காலம் பதினேழாவது நூற்றாண்டு. ஏறத்தாழ நானூறு வருடங்களுக்குமுன் தென்காசி நன்னகரில் சிறுமலுக்கர் செல்வராய்ப் பிறந்து — வேதநெறிகளை முறையே கற்றுணர்ந்து — இறைவனின் அருள்பெற விழைந்து அறநெறி முறையில் அகமெலாம் ஒன்றி பெரும்புலவராய்ச் — செந்நெறிச்செல்வராய் — இறையருள்பெற்ற வலிகள் மணியாய் மிளிர்ந்து — நற்கலைகள் மிக்க தக்கலையில் சொற்கலையில் வல்ல இம்மாதவத்தோர் சமாதிகொண்டார்கள்.

## காலத்தை வென்ற கவிஞர்!

வாழ்ந்த காலம் அறியமுடிந்தாலும் முழுமையான வரலாறு வகையாய் வரைந்து அளிக்கப்படவில்லை. நீணிலத்தில் நீண்ட காலம் வாழ்ந்ததுவும், அற்புதங்கள் பல நிகழ்ந்ததுவும் வழி வழி

வந்த வாய் மொழி வரலாறும் அநேக மனேகமிருப்பினும் அவை களுக்கெல்லாம் மேலாக ஆன்றோர்களும் அறிவியல் வாதிகளும், இவ்விஞ்ஞான யுகத்தில் ஏற்கும் தத்துவங்களும் புரட்சிக் கருத்துக்களும் நிறைந்த இக்கவிஞரின் கன்னல் ரசப் பாக்கள் காலத்தை வென்று காட்சி தருகின்றன.

ஞான மாமேதை அப்பா அவர்கள் வாழ்ந்த பதினேழாவது நூற்றாண்டைப் புலவர்களின் பொற்காலமென வரலாற்றாய்வாளர் கூறுவர். அன்றைய தமிழகம் குறுநில மன்னர்கள் கூறிட்டு ஆண்ட காலம். அந்நாளிலே பெரும் புலவர்களெல்லாம் இக் குறுநில மன்னர்களின் அரசவைகளிலே "ஆஸ்தான கவிகளாக கௌரவிக்கப்பட்டு மன்னர்களின் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரியவர்களாக வாழ்ந்தனர்.

## பொன்னையும் மணியையும் மதிக்கவில்லை

இப்படிச் சீருடனும் சிறப்புடனும் வாழ்ந்த போதிலும்கூட இத்தண்டமிழ்ப் புலவர்களெல்லாம் வறுமைப் பிணிக்கு ஆட்பட்டு அலைக்கழித்தனர். உலைந்த உள்ளத்தோடு உறுபசிக்கு ஆட்பட்ட புலவர்கள் தம் வறுமைப் பிணியை நீக்க செல்வர்களை அவர்கள் 'சிறுமைக்' குணம் கொண்டவராயினும் பெருமைப்படுத்தித் தண்டமிழால் அர்ச்சனைப் பா பாடி மகிழ்ந்திருக்கின்றனர். ஆனால் அதே சமகாலத்தில் வாழ்ந்த நமது ஞான மேதை பீரொலிநாதர் அவர்கள் பொன்னும் மணியும் மின்னுகின்ற வாழ்க்கையைக் கொண்டிருக்கவில்லை. அதற்காகச் சிறுமை கொண்டவர்களைப் பெருமைப்படுத்திப் புகழ்ச்சிப் பாக்கள் பாடி மகிழவில்லை. மாறாக,

> "நல்ல நாயகனே உனைப்
> புகழ்ந்திடும் நாவாற்
> புல்லரான வரையும் புகழ்வனே
> நான் புவியில்"

என்று தமது ஞானப் புகழ்ச்சியில் அழகுற இறையிடம் முறையிடுகிறார்கள்.

"அனைத்தும் படைத்துக் காக்கும் வல்லவனும் நல்லவனுமாகிய உன்னைப் புகழும் இந்நாவு அழிகின்ற பொருளுக்காய் இத் தொல்லுலக மாந்தரை ஒருபோழ்தும் புகழாது; பாடாது. மாறாக

> "இன்பம் நீ தருகிலும் துன்பமே வருகிலும் இகழிலும்
> அடியேன் நெஞ்சுனை மறந்தொழிவனே?"

என்று நன்மார்க்கத்தின் உன்னதக் கொள்கையைத் தெளிவுற அறிவுறுத்தி விளக்கிக் காட்டுகிறார்கள்.

## இன்பமும் துன்பமும்

இன்பத்தைக் கண்டு இன்புறுவதும் துன்பத்தைக் கண்டு துவண்டு விடுவதும் உண்மை முஸ்லிம்களுக்கு அழகல்ல. துன்பத்தில் இன்பத்தையும், இன்பத்தில் துன்பத்தையும் மறைத்து வைத்து அருள்புரியும் வல்லவனின் ஆற்றலை நாம் எப்படி உணருவது? ஆகவே 'இன்பமாயிருப்பினும் துன்பமாயிருப்பினும் அது உனது அருளன்றோ இறைவா! எதுவரினும் இந்த நெஞ்சம் மட்டும் உன் நினைவிலேயே திளைத்திருக்கும்' என்று அழுத்தமுறத் தெளிவுபடுத்துகிறார்கள்.

பாமரர்க்கும் புரியும் எளிய இனிய நடையிலும், பண்டிதரும் தயங்கும் மறை பொருளிலும் ஞானப்பாடல்கள் பாடுவதில் சித்தர்கள் பெரும் வித்தகர்களாக இருந்திருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் அகப்பொருளாய் அருட்பாக்கள் பாடி மாந்தர்களுக்கு அறிவுரை கூறியிருக்கின்றனர்.

இந்த ஞானிகளெல்லாம் 'நான்' என்ற ஆணவத்தை அகற்றி அனைவரும் இறையருள் பெற்றுப் பெருவாழ்வு வாழவேண்டுமென்று விழைந்திருக்கின்றனர். அப்பாவின் 'ஞானப்புகழ்ச்சி' இறைவன் துதிபாடி அகங்களிப்பதாகும். இன்னும் சொன்னால் தனது குறைகளை இறையிடம் முறையிட்டு, அருள்பெற விழைவதுமாகும். இந்தப் பாடல் தொடரிலே இறையிடம் அடைக்கலம் தேடிப் பாடும் பகுதியில் ஓரிடத்தில் "என்னை அடுத்தோர்க் கோரிழிவு வாராமல் ஏகனே யானுன் அடைக்கலமே" என்று இறைஞ்சி நிற்கிறார்கள் அப்பா அவர்கள்.

## மனிதப் போக்கு

"மனிதன் இறைவனுடைய ஏவல்களை எடுத்து நடக்காமல் உலகில் உன்னதமாய் வாழவேண்டுமென்ற பேரவாவினால் மனம் போனபோக்கில் அலைகிறான். நாடிய இன்பத்தைத் தேடியடையப் பெரு விருப்பம் கொள்கிறான். இதனால் மாபெரும் ஆசைகளை மனதில் அடக்கி, தேக்கிவைத்து அலைகிறான். அதனால் அவனது இதயத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் பெரிய மலையைவிடப் பெரிதாக இருக்கிறது. அப்பா கூறுகிறார்கள்:

"மலை மேடு சிறிதெங்கள் மனமேடு பெரிதுன்னை
வணங்காத பெரும் பாவியென்று........"

அதோ தெரிகின்ற மலைகூடச் சிறிது; அதைவிடப் பெரிது இந்தக் கையளவுகொண்ட இதயம். அத்தனையும் ஆசாபாசங்களால்

உயர்ந்துவிட்டன. ஆனால் நாங்கள் எப்படிப்பட்டவர்கள் என்றால் உன்னை வணங்காத பெரும்பாவிகள் எப்படி இருக்கிறது உவமை!

உண்மைதான், மனிதன் அறிவைப்பற்றி, படைப்புகளைப் பற்றி, உலகியலைப்பற்றி எல்லாம் சிந்திப்பதில்லை. அவன் பணத்தைப்பற்றித்தான் சிந்திக்கிறான். அவனுக்கு எப்படியும் பொருளைத் தேடிக் குவித்திடவேண்டும்; செல்வத்தின் உச்சியில் திளைக்க வேண்டும். உலகத்தின் அத்தனை இன்பங்களையும் அணுவணு வாய்ச் சுவைத்து ரசிக்கவேண்டும். இதுதான் சிந்தனை, இதற்காக எதையும் செய்வான். மோசம்செய்வான்; நாசம் விளைவிப்பான்; வாக்குறுதி மாறுவான்; உயிர் நண்பர்களைக்கூட ஏமாற்றுவான்; உறவுமுறைகளைக்கூட வெறுப்பான்; நயவஞ்சகம்செய்து அதில் தனது வாழ்வை நிலைநிறுத்துவான்; பிறர் நலனைச் சிந்திக்க மாட்டான்; பசித்திருப்பவருக்கு ஈயமாட்டான்; அவனது சிந்தனை யும் செயலும் செல்வத்தைத் திரட்டவேண்டும் என்பதுதான்.

அதற்காக "எதுவும்" செய்வான். நல்லவைகளைச் சிந்திக்க நேரமில்லை. அவைகளை மறந்தும் நினைத்துப்பார்க்க அவனுக்கு நேரமில்லை. இறை எண்ணமே எழாது. ஆனால் தங்களையோ செய்கு என சொல்லித்திரிபவர்களையோ சுற்றி வலம் வருவான். அவர்களிடம் சுலபமானமுறையில் வழி தெரிந்துவிடலாம் என நம்புவான். அவர்களைச் சரணடைவான். இது ஒரு ரகம்.

"வட்டியிலே கொழுத்திருப்பர். விபச்சாரத்திலே திளைத் திருப்பர். மது இன்பத்திலேயே மயங்கிக்கிடப்பர்; உள்ளத்திலே - செயலிலே இஸ்லாமிருக்காது. தோற்றத்திலும் பெயரிலும் இஸ்லா மிருக்கும் — இது ஒரு ரகம்.

ஞானப் பாடங்களைக் கண்துஞ்சாது பாடுவான்! பொருளறி யான்; அறிந்திட முயலான்; மார்க்க நெறிமுறைகளைத் தானும் பிறரும் அறிந்திடவேண்டும்; அதற்கு வழிகாண வேண்டும் என்ற எண்ணமில்லை. எல்லாம் தெரிந்துவிட்டோமென மக்களை வழி கெடுப்பான் — இது ஒரு ரகம்.

இவர்களை அப்பா எப்படி உவமை காட்டி விளக்குகிறார்கள்? "கூத்தில் துலுக்கர் வேஷம் கொண்டாடி வந்தாப் போன்றவர்" என்று!

பாடல் இதோ:

உலகில் மனுக்குலமாய்ப் பிறந்து முஹம்மதுடைய
உம்மத்திலானேமென்று ஒருபேரை வைத்துக்கொண்டு
தலையைச் சிரைத்துத் தாடிவைத்துத் தண்டு தோலறுத்துத்
தானுஞ் சரிச்சரியாய் நானுமிஸ் லாமென்று
குலத்து வழக்கமென்றுக் கூடி நிக்காஹுஞ் செய்து
குட்டியும் குழந்தையுமாய்ப் பட்டணத்துப் பன்றிபோலப்
பெலத்த இஸ்லாத்துக்கிது போதுமென்று சொல்லி
பெரிய கிழவனுகி, நரையுந் திரையுமாகி
குலத்து வழக்கமான நிலைத்த ஷரஹை விட்டு
கூத்தில் துலுக்கர் வேஷங் கொண்டாடி வந்தாப்போல்

(ஏடேற்ற மாலை)

## பெயரளவில்

உலகில் மனிதனுய்ப் பிறந்து நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுகிறவன் என்று இஸ்லாமியப் பெயரையும் வைத்துக் கொண்டு தலையைச் சிரைத்து தாடியும் வைத்து, சுன்னத்தும் செய்து—இவ்வளவும் செய்தபின் உண்மை இஸ்லாத்திற்கு இவ்வளவும் போதுமெனத் திண்ணமாய் எண்ணியபின் குலவழக்குப்படி ஒரு பெண்ணையும் தேர்ந்தெடுத்து வாழ்க்கைத் துணையாக்கிக் கொள்வது—இதிலும் பெருமானுர் கூறிய நெறிமுறைகளிருக்காது.

அதிகமாகப் பணம் கிடைக்குமிடந்தேடி அலைந்து, பெருந்தொகைகளைப் பெற்றுக்கொண்டபின் மறை கூறும் ''மகர்'' பணம் கூடப் பெண்ணுக்குக் கொடுக்கப்படுவதில்லை. மகரைக் கொடாமலே திருமணமும் முடித்துக் கொள்வர். அதன்பின் குழந்தை குட்டி களோடு நரையுந் திரையுமாகி நிலையான ஷரஹைப் பேணுதவராகி வாழ்ந்து வருவர். இது எதனைப் போன்றது என்ருல்—அழகான உவமையுடன் அப்பா கூறுகிருர்கள். 'கூத்தில் வேடமிட்டு வந்தாப் போன்று' என்று.

## கூத்தில் வேடம்

கூத்தில் பலர் பலவேடமிட்டு வருவர். அந்த வேடத்திற்கும் அவருக்கும் எந்த உறவும், ஒட்டும் இருக்காது. அது போன்று தான் தோற்றத்திலே இஸ்லாமியமும், உள்ளமும் செயலும் நேர் மாறியும் இருக்கின்றனர் என அப்பா கூறுகிருர்கள்.

''இறைவன் உங்கள் ஆடைகளையோ, தோற்றங்களையோ கவனிப்பதில்லை. மாருக, உங்கள் உள்ளங்களையும் செயல்களையுமே கவனிக்கிருன்''—என்ற பெருமானுர் பொன்மொழி இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

இப்படித் திருமறை திருநபி ஆகிய வழிகாட்டும் வான்மறையும், அம் மாமறையை வையகத்திற் களித்த வள்ளல் திரு நபியும் காட்டிய எழிலார்ந்த தத்துவக் கருத்துக்களைத் தித்திக்கும் இன்பத் தமிழில் அருள் ஞானப் பாக்களாக ஏறத்தாழ பதினெண்ணுயிரம் பாக்கள் பாடித் தமிழ் கூறும் நல்லுலகுக்குத் தந்திருக்கிருர்கள். அதனை உணர்ந்து அவ்வழியில் வாழ நாம் முயலவில்லை என்ருல் அந்த ஆத்மீக மெய்ஞ்ஞானியை வலீகள் மணியை — ஞான நாதரை - நானிலம் போற்றும் ஞானப் பேரொளியைச் சித்தர்க்குச் சித்தரை - ஞானியர்க்கு ஞானியை - தென்னுட்டு ரூமியை; நாம் தெரிந்திடவில்லை; அகந்தெளிந்திடவில்லை என்றுதான் பொருள். இதைத் திருவைக் கவிஞர் கா. முஹம்மது பாரூக், எம். ஏ. அவர்கள் கேட்கிருர்கள்:

### பாரூக்கின் பாடல்

"தத்துவத்தைப் பொதுவாக்கித் தக்கலையில் உறைகின்ற
தமிழ்நாட்டு ரூமியைநீ தெரிவதற்கு முயன்றதுண்டா?
சித்தர்க்குச் சித்தராகி ஞானியர்க்கு ஞானியாகி
சிறுமலுக்கர் மைந்தர்பீர் முகம்மதென்னும் வலியுல்லா
வித்தகத்தை விளையாடும் துறையாக்கி வெளியிட்ட
மெய்ஞ்ஞானத் துறைசார்ந்த வீங்குதமிழ்ப் பாடல்கள்
பத்தெட்டு நூறினுள்மனம் பதிந்துள்ள பாடலெவை
பைந்தமிழில் உனக்கிருக்கும் பற்ருேடு பதில்தருவாய்."

பைந்தமிழில் இருக்கும் பற்றுடன் பதில் கேட்கும் கவிஞருக்கு என்ன பதில் கூறப் போகிருேம்? இன்றைக்கில்லாவிடினும் எதிர் காலம் நிச்சயம் பதிலளிக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு!

---

நற்கலை ஞானம்
நற்றவம் ஓங்கும்
தற்கலை நாதர்
தயவருள் அல்லாஹ்!

— இறையருட் கவிமணி.

# தமிழ் வளர்த்த மெய்ஞ்ஞானி

**ஹாபிஸ் எம். கே. சையிது அஹமது**
காயல்பட்டணம்

தமிழ் வளர்த்த செம்மல்கள் வரிசையில் முஸ்லிம் மெய்ஞ் ஞானிகள் சிறப்பான இடம் பெறுகின்றனர். தவஞானி தக்கலை பீர்முஹம்மது வலீயுல்லாஹ் அவர்களின் தமிழ்த்தொண்டு அளப் பரியது. ஞான வழி நின்று பலபல பொருள்களிலே 18,000 திருப் பாக்கள் பாடித் தமிழ்கூறும் நல்லுலகுக்கு இலக்கிய விருந்து வழங்கியவர்களில் பீரப்பா அவர்களுக்கு ஒப்பாரும் மிக்காரும் யாரும் இல்லை எனத் துணிந்து கூறலாம். இம்மாமேதை அவர் களைச் 'சூபியா'க்கள் வரிசையிலே வைத்துப் பேசப்படுகிறது. 'சூபியா'க்களிலே குணங்குடி மஸ்தான் சாஹிபு போன்ற துறவி களும் யோகிகளும் உளர். சற்குரு கௌதுல் அஃழம், மாசில்லா மணி மஹ்பூப் சுப்ஹானி முஹிய்யித்தீன் அப்துல் காதிறு ஜீலானி (றலி) அவர்களின் நெறியைப் பின்பற்றித் தவமாமணியாக — அதே சந்தர்ப்பத்தில் இல்லறத்தை நல்லறமாகவும் கொண்டு சீரிய வழி நடந்தவர்களில் பீரப்பா அவர்கள் சிரேஷ்டமானவர்கள். இத்தவசிரேஷ்டரைச் சித்தர் வரிசையிலும் சேர்த்துப் பேசப்படு கிறது. பீரப்பா அவர்களின் "ஞான ரத்தினக்குறவஞ்சி"யைப் பதினெண் சித்தர்கள் கோவையில் சேர்க்கப்பட்டிருப்பதிலிருந்து இவ்வுண்மை விளங்கும்.

முஸ்லிம்களிலும் இரண்டு சித்தர்கள் பற்றிப் பிரபலமாகக் கூறப்படுகிறது. ஒருவர் கமால் முனிவர்; மற்றவர் யாகூப் முனிவர். இராமதேவர் என்ற பெயரால் விளங்கிவந்த சித்தர் கெவுன குளிகையிட்டுக் ககன மார்க்கமாகத் திரு மக்கா நகர் சென்று

இஸ்லாத்தைத் தழுவி யாகூப் எனப் பெயர் கொண்டு யூனானி கலை கற்றுத் தமிழகம் திரும்பிச் சித்த வைத்தியத்துடன் யூனானி வைத்தியத்தையும் தமிழகத்திலே அறிமுகம் செய்தார். சதுரகிரி மலையில் அவர் வாழ்ந்ததால் அவர் வாழ்ந்த இடத்துக்குத் துலுக்கர் மொட்டை மலை என்றும் பெயர் வந்தது. அதே போன்றுதான் பீரப்பா அவர்கள் நிஷ்டையில் இருந்த தென்மலையிலுள்ள ஒரு பகுதிக்குப் 'பீர்மேடு' எனப் பெயர் வந்தது என்று கூறுவர். பீரப்பா அவர்கள் ஒரு சித்தர் மட்டுமன்றி ஒரு மெய்ஞ்ஞான சிரேஷ்டருமாவார்கள்.

அகத்தியர், போகர், கோரக்கர், கைலாசநாதர், சட்டைமுனி, திருமூலர், நந்தி, கூன்கண்ணர், கொங்கரை, மச்சமுனி, வாசமுனி, கூர்முகி, கமலமுனி, இடைக்காடர், புண்ணுவீசர், சுந்தரானந்தர், உரோமருஷி, பிரமமுனி ஆகிய பதினெண் சித்தர்களும் அட்டசித்தி பெற்றவர்கள். இந்தப் பதினெண் சித்தர்களில் பீரப்பா அவர்களை ஒருவராகக்காணுவிட்டாலும் பதினெண் சித்தர்களின் கோவையில் பீரப்பா அவர்களின் ஆக்கமான 'ஞானரத்தினக் குறவஞ்சி' இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். தன் வந்திரி, புலஸ்தியர், புகண்டர், கருவூரார், தேரையர், கபிலர் ஆகியோரும் சித்தர் வரிசையில் இடம் பெற்றிருப்பினும் பதினெண் சித்தர்களில் ஒருவராகக் கணிக்கப்படவில்லை.

அரபியர்களுடன் தமிழர்கள் கொண்டுள்ள வாணிப, கலாச்சாரத் தொடர்பின் காரணமாகவே சித்த மருத்துவ முறை தமிழகத்திலே ஓங்கி வளர்ந்தது என்றும் தக்கலை பீர்முஹம்மது வலீயுல்லா தமிழகத்திலே இஸ்லாமிய ஞான வழியைத் தமிழ் ஞான வழியோடு இணைத்துப் புகுத்திய பாங்கைப் போற்றியும் சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட கலைக்களஞ்சியத்தில் ஒரு குறிப்பு பின்வருமாறு காணப்படுகிறது.

> "அரபியாவிலிருந்து மேனாட்டிற்கு இரசாயனமும் இரசவாதமும் பரவி இந்நாளைய விஞ்ஞான முன்னேற்றத்திற்கு வழிகோலின. அரபியர் தமிழரோடு சேர்ந்து கப்பலோட்டிப் போர்த்துக்கீசியருடன் போராடினர். அரபிய நாட்டுத் தொடர்பு இங்குவளர்ந்த சித்தமருத்துவ முறையை மேலும் ஓங்கி வளரச் செய்தது. *காயற்பட்டினத்துத் தமிழ் முஸ்லிம்கள்* சித்தவைத்திய முறையைக்கூறும் நூல்களைக் கையாண்ட புலவர்களா யிருந்தனர். ரூமி (Rumi) முதலிய இஸ்லாமிய 'சூபி' (Sufi) சித்தர்கள் போக்கும் தமிழ்ச்சித்தர்களின் பாக்களில் புகுந்தது. *பீருமுகம்மது* என்ற இஸ்லாமியப் பெரியார் பாடிய *'ஞானரத்தினக் குறவஞ்சி'* சித்தர் ஞானக் கோவையில் சேர்ந்திருக்கிறது." —கலைக்களஞ்சியம் தொகுதி 4 பக்கம் 643.

காயல்பட்டணத்தில் சித்தர்கள் பெயரால் ஒரு தெருவே உண்டு. அதற்குப் பெயர் சித்தர் தெரு. சித்தராகவும் 'சூபி'யாகவும் போற்றிப் புகழப்படும் பீரப்பா அவர்கள் அனுபூதி ஞானம் பெற்றவர் (Mystic).

விஞ்ஞானம் வளர்ச்சியடைந்து வரும் காலம் இது. அணுயுகம் இது. விஞ்ஞான வளர்ச்சியுடன் மெய்ஞ்ஞானமும் வளர்ச்சியடைந்ததால் மனித சமுதாயத்தினருக்கு இவ்வுலகிலும் அவ்வுலகிலும் பேறுண்டு. விஞ்ஞானத்திற்கு அளவுகோல் உண்டு. அந்த அளவுகோலால் மெய்ஞ்ஞானத்தை அளக்க முடியாது. பகுத்தறிவும் அவரவர் சிந்தனைக் கேற்பக் கூடுதல் குறைவுதல் உண்டு. நாம் கற்றதெல்லாம் கைம்மண்ணளவுதான். மெய்ஞ்ஞானிகளின் செயல்கள் நமக்குச் சில சந்தர்ப்பங்களில் புரிவதில்லை. நமக்குப் புரியாதவைகள் குறைவுள்ளவை என்பதல்ல. பீரப்பா அவர்களின் செயல்களிலும் அக்காலத்தில் சிலர் கண்டனக்குரல் எழுப்பினர்.

அக்காலத்திலே காயல்பட்டணத்திலே சதக்கத்துல்லா அப்பா அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். கலைக்கு ஒரு மலை என மக்களால் போற்றப்பட்டவர்கள்; அறபு இலக்கிய வளர்ச்சிக்கு மாபெரும் தொண்டு செய்தவர்கள். இஸ்லாமியச் சட்டக் கலையில் வல்லவர்கள். மாவேந்தன் அவுரங்கசீபால் கௌரவிக்கப் பட்டவர்கள். வள்ளல் சீதக்காதிக்கு உற்ற தோழர். உமறுப் புலவரின் 'சீறாப் புராணத்திற்கு உரை வழங்கியவர். இம் மாமேதையின் பேரும் புகழும் தமிழ் முஸ்லிம் உலகெங்கும் ஒளி விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்த காலம் தக்கலையிலுள்ள முஸ்லிம் பிரமுகர்கள் சிலர் சதக்கத்துல்லா அப்பா அவர்களை அணுகி பீரப்பா அவர்களின் செயல்களை எடுத்துக்கூறி அவர்களின் தீர்ப்பை விரும்பினர். சதக்கத்துல்லா அப்பா அவர்கள் பீரப்பா அவர்களுடன் சிலகாலம் ஒன்றாகத் தங்கியிருந்து கவனித்து வந்தார்கள். உண்மையை அறிந்தார்கள். பீரப்பா அவர்கள் ஒரு மெய்ஞ்ஞானி என்பதைத் திட்டவட்டமாகக் கண்டு மக்களுக்கு எடுத்துக்கூறினார்கள். அத்துடன் பீரப்பா அவர்கள் மீது கொண்ட ஐயம் நீங்கியது. பீரப்பா அவர்களின் இலக்கியப் படைப்புக்களான 'திருநெறி நீதம்', 'பிஸ்மில் குறம்', 'ரோசு மீசாக்கு மாலை' ஆகிய நூல்களுக்குச் சதக்கத்துல்லா அப்பா அவர்களே உரைகளும் கொடுத்தார்கள்.

பீரப்பா அவர்கள் 300 வயதுவரை வாழ்ந்தார்கள் என்றும், 95 வருடங்கள் வனவாசத்திலும், 15 வருடங்கள் நிஷ்டையிலும் கழித்தார்கள் என்றும் கூறப்படுகிறது. சதக்கத்துல்லா அப்பா அவர்களிடம் உரைபெற்றுப் பாடிய "திருநெறி நீதம்"

ஹிஜ்ரி 1022 றபீஉல் ஆகிர் 20-ல் பாடி முடிக்கப்பட்டதாகத் தெரிகிறது. சதக்கத்துல்லா அப்பா அவர்கள் ஹிஜ்ரி 1115 ஸபர் 5-ல் காலமாகியிருக்கிறார்கள். அப்பா அவர்கள் மரணமாவதற்கு 62 வருடங்களுக்கு முன் "திருநெறி நீதம்" பாடி முடிக்கப்பட்டிருப்பதால் மிக இளமையில் உரை கொடுத்திருக்க வேண்டும். அது சமயம் பீரப்பா முதிர்ந்த வயதுடையவர்களாக இருந்திருக்கலாம். பீரப்பா அவர்கள் பிறந்த தேதி திட்டவட்டமாகத் தெரியவில்லை. நெல்லை மாவட்டத்திலே தென்காசி வட்டாரத்தைச் சேர்ந்த 'கணிகபுரம்' என்ற சிற்றூரில் வாவாஞ்சியின் மகன் சிறுமலுக்கருக்குப் புதல்வனாகப் பிறந்தார்கள். சையிது அஹமது கபீர் ரிபாயீ நாயகம் அவர்களின் வழித்தோன்றல் பீரப்பா அவர்கள். வனவாசத்திலும், நிஷ்டையிலும் கழித்த காலம்போக எஞ்சிய காலங்களில் இலக்கியச் சேவையில் ஈடுபட்டார்கள். பீரப்பா அவர்களின் இலக்கிய ஆக்கங்கள் அனைத்தும் ஓலைச்சுவடிகளிலே எழுதி வைக்கப்பட்டிருந்தன. அவற்றைக் காலங்குடியிருப்பு மீரான்கனி அண்ணாவியார், குலசேகரன்பட்டணம் காரியாப் புலவர், தக்கலை காஸிம் சாஹிபு—இம்மூவரும் தொகுத்துத் தந்துள்ளார்கள். சில நூல்களுக்குச் செவ்வல்மாநகர் நெய்னா முகம்மது பாவலர் உரைகள் எழுதியுள்ளார்.

பிரதி வருடமும் றஜப் 14-ல் தக்கலையில் பீரப்பா அவர்களின் நினைவு நாள் கொண்டாடப்படுகிறது. இரவு முழுதும் "ஞானப் புகழ்ச்சி" சந்தத்துடன் பாடப்படும் வரிசையை அங்கு காணலாம்.

பீரப்பா அவர்களின் பாடல்கள் கவி நயமும், பொருள் நயமும் அமைந்த அருள் கவிதைகளாக மிளிர்கின்றன.

"கல்லாத கயவரென்னை யெல்லாம லடியேன்
கத்தனே யானுன்னடைக்கலம்தானே"

என ஒரு இடத்தில் பாடுகிறார்கள். கல்லாதவர்களைக் கயவர்கள் என்று கூறி 'இக்கயவர்கள் என்னை வெல்லாமலிருக்க உன் அடைக்கலம்' என்று கூறுவதில் எவ்வளவு அர்த்தபுஷ்டி பொதிந்துள்ளது என்பதை இக்காலச் சம்பவங்களுடன் ஒப்புநோக்கின் உண்மை புலனாகும். இன்னொரு இடத்தில்,

"தொழுகாமற் செய்யு மிவர் வணக்க
முழு தெல்லாம் தோகையர்கள்
ஆளனில்லா தீன்றெடுத்த பாலன்"

என்று கூறுவதிலிருந்து தொழுகாமற் செய்கின்ற வணக்கத்தை விபசாரத்தின் மூலம் கிடைத்த பாலனுக்கு ஒப்பிடுவதில் எவ்வளவு ஆழமான கருத்து பொதிந்துள்ளது!

“தந்தையிலி தாரமிலி தானவனு நீயே
தண்மை கொடேவர்க்குமொரு தாபரமு நீயே
மைந்தரிலி யன்னையிலி மன்னவனு நீயே
மண்ணிலடியார்க் கிரணம் வழங்குவது நீயே
சிந்தை தனிலிடறுகளைத் தளர்த்தருள்வன் நீயே
தேட்டமறிந் தெனக்குதவி செய்பவனு நீயே
அந்தமிலி நீயெனக்கோ ரிழிவு வாராமல்
ஆதியே யானுன் னடைக்கலம தானேன்”.

எல்லாம்வல்ல இறைவனின் குணபாவங்களை எல்லாம் அழகு தமிழில் உருக்கமாகக் கூறி “ஆதியே! எனக்கு ஒரு இழிவும் வராமல் காத்தருள்வாய்” என்று பாடி முடிப்பதில் எவ்வளவு கருத்துப் பொதித்துள்ளது! இப்படியே பீரப்பா அவர்களின் ஞானப் பாடல்களைப் பாடப்பாட அருள் சுரக்கும் என்பதில் ஐய முண்டோ?

---

நான் ஒரு சிரிக்கும் தோட்டம். என்னைச் சுற்றியிருக்கும் சுவர்களில் கரடுமுரடான கற்கள் காட்சியளிக்கின்றன. இந்த வழியில் செல்கிறவர்கள் சுவர்களை மட்டுமே பார்க்கிறார்கள். அவற்றின் கொடூரத் தோற்றத்துக்கு விளக்கம் கொடுக்கிறார்கள். சுவர்களுள் அடைபட்டிருக்கும் தோட்டத்தைப்பற்றி அவர்களுக்கு ஒன்றும் தெரியாது. எனவே அவர்கள் தாராளமாக இகழட்டும். இதைப் பார்க்கும் தோட்டம் ஏன் கோபப்படவேண்டும்?

— ஜலாலுத்தீன் ரூமி.

*பிரப்பா பாராட்டிய*

# இமாம் ஷேக் சதக்கத்துல்லாஹ் (ரஹ்)

*அ. காஜா கமாலுதீன், எம். ஏ., பி. எல்.*

"நிதமிப்பார் உயரும்
நேர்நபி புகழும்
ஸதக்கப்பா உயர்வை
சார்த்துவாய் அல்லாஹ்"
(பேராசிரியர் கா. அப்துல்கபூர்)

தலைசிறந்த தமிழகத்தின் தகுதிவாய்ந்த பண்டைகாலப் பட்டினங்களில் காயலும் ஒன்று. ஒருபோது சீரும் சிறப்பும்பெற்ற தென்பாண்டி நாட்டின் துறைமுகப்பட்டினமாகவும் அது விளங்கியது. அப்பட்டினம் 'திரைகடல் ஓடியும் திரவியம் தேடி' வாரி வழங்கிய வள்ளல்களையும், மெய்ஞ்ஞானிகளையும், மார்க்க அறிஞர்களையும் உருவாக்கிய உன்னதப் பட்டினம். காயல்பட்டினத்தைக் காலமெல்லாம் நினைக்கின்ற முறையில் அம்மாண் பகுதியில் தோன்றி, வையகத்து வாழ்வாங்கு வாழ்ந்து கீழக்கரையில் காலமான மெய்ஞ்ஞானி, மாதிஹுர் ரசூல் சதக்கத்துல்லாஹ் அப்பா அவர்களை வையகம் நன்கு அறியும். 'அப்பா' என அருளோடு அப்பகுதி மக்களும், எப்பகுதி மக்களும் குறிப்பிடுவது அவர்பால் கொண்ட ஈடுபாட்டை எடுத்துக்காட்டும்.

'ஸதக்காஹ்' என்பது இமாம் அவர்களுக்குப் பெற்றோர் இட்ட பெயர். அந்த அரபிச் சொல் 'கொடை' எனப்பொருள்படும்.

மக்கமா நகரில் மார்க்க அறிஞர்கள் ஒரு புனித நூலிலுள்ள ஒரு சொல்லின் பிழையறியாது, அதன் பொருள் புரியாது, கருத்து மாறுபாடும் வேறுபாடும் கொண்டிருந்தவேளையில் இமாம் அவர்கள் அச்சொல்லின் பிழைதிருத்தி அரபியர்களை இன்புறச் செய்தார்கள். அகமகிழ்ந்த அரபு மக்கள் இமாம் அவர்களை அவ்வேளையில் அவர்களுக்கு 'இறைவன் அருளிய கொடை' எனும் பொருள்பட ஸதக்கத்துல்லாஹ் எனப் பெயரிட்டுப் போற்றினர். [ஆதாரம்: இறைநேசச் செல்வர் இமாம் ஷேக் சதக்கத்துல்லாஹ் (ரஹ்) — மு. செ. மு. முகம்மது அப்துல்காதிர்]

எல்லாம் வல்ல இறைவன் உயிரினங்களின் மணிமுடியாக மக்களைப் படைத்து, அவர்கள் வாழ்வதற்குரிய வழியைக் காட்டுவதற்கு நபிமார்களைத் தேர்ந்து அவர்கள் வாயிலாக மறைநூல்களையும் அருளினான். மண், விண், அனல், புனல், காற்று ஆகிய ஐம்பூதங்களையும், உயிருள்ள, உயிரற்ற பொருட்களையும் மனிதனுக்காகவே படைத்து மனிதனைச் சிறப்பித்துள்ளான். இறைவன் அருளிய திருமறையில்,

"மெய்யாக நாம் ஆதமுடைய மக்களைக் கண்ணியமாக்கினோம். கரையிலும் கடலிலும் அவர்களைச் சுமந்துசென்று அவர்களுக்கு நல்ல உணவுகளையும் அளித்தோம். மேலும் நாம் படைத்த படைப்புக்களிலெல்லாம் உயர்வாக உருவாக்கினோம்."
(17-70 திருமறை)

எனக் கூறுப்பட்டுள்ளது. அப்படைப்புக்களில் மனிதனைத் தன்னை வணங்குவதற்கென்றும், சிலவற்றை மனிதனுக்கு உதவுவதற்கென்றும் பலவற்றை உண்பதற்கென்றும் படைத்தருளியுள்ளதாக இறைவனே கூறுகின்றான். காணும் பொருள்களில் எல்லாம் இறைத்தன்மையை உணர்வதற்கன்றி, தன் அறிவை இவ்வுலகில் பறிகொடுத்துப் பேயனைப்போல் திரிவதற்காக மனிதன் படைக்கப் படவில்லை. மண், பெண், பொன் ஆகியவற்றிற்கு அடிபணியாமல் நற்செய்கைகளை நோக்கி அடியெடுத்து வைக்கவேண்டும்.

"பேயனைப் போலேயாகாமலே
பெரியோர்கள் குணம் கொள்வீர்களே"

எனத் தைக்கா சாகிபு வலீயுல்லாஹ் நாயகம் (ரஹ்) அவர்கள் கூறியதைப்போலக், கருத்தை ஏக இறையின்பால் நிறுத்தி, மார்க்க வரம்பை மீறாமல், இவ்வுலகில், கல்விஒழுக்க நலங்களுடன் வாழ்ந்து மனிதன் பிறவிப் பெருங்கடலைக் கடந்து பயனை அடைய வேண்டும். இவ்வாறு வாழ்ந்து பெருமைபெற்ற சிலருள் இமாம் ஷேக் சதக்கத்துல்லாஹ் அவர்களும் ஒருவராவர்.

இமாம் சதக்கத்துல்லாஹ் அவர்களின் தந்தை சுலைமான் வலீயுல்லா அவர்கள் காயல்பட்டினத்தில் பிறந்து 'குதுபு' என்னும் இறையொளி பெற்றவர். இமாம் அவர்களுக்கு அஷ்ஷெய்கு ஷம்சுத்தீன் வலீ (ரஹ்) அஷ்ஷெய்கு அஹ்மது வலீ (ரஹ்) அஷ்ஷெய்கு ஷிஹாபுத்தீன் வலீ (ரஹ்) அஷ்ஷெய்கு ஸலாஹுத்தீன் வலீ (ரஹ்) என உடன்பிறந்தோர் நால்வர் ஆவர். சுலைமான் வலீயுல்லா அவர்களுக்கு மூன்றுவது முத்தாக இமாம் சதக்கத்துல்லா அவர்கள் தோன்றினர்கள். ஐந்து செல்வருமே இறையருள் பெற்ற அறிஞர்களாகவும், மெய்ஞ்ஞானிகளாகவும் விளங்கினலும், அவ்வைவரில் இமாம் சதக்கத்துல்லா அவர்கள் பேரிடத்தைப் பெற்றிருந்தார்கள். இதனை,

"மனிதர்களுக்கு மத்தியில், (அவர்) அறிவுச்சமுத்திரம். கல்வி நிறைந்த எமது வீட்டில் எங்கள் சகோதரர்களிடையே நிறைந்த அறிவொளி"

என இமாம் அவர்களின் இளவல் ஷிஹாபுத்தீன் வலீ (ரஹ்) அவர்கள் "ஸலாஹுத்தீனி மாதா" என்று தொடங்கும் பைத்துக் கோவையில் கூறியிருப்பதே சான்று பகர்கின்றது.

இறையொளி பெற்ற இமாம் அவர்களின் புகழும், பெருமையும் ஞாயிற்றின் ஒளிபோல் இவ்வகிலம் அடங்கலும் பரவிற்று. இவர்களின் பெரும்பேற்றைக் கேள்வியுற்ற அக்கால முகலாய மன்னர் ஔரங்கசீப் இமாம் அவர்களை நேரில் காண அழைத்தார். பின்னர் அரச பிரதிநிதியாக அமர்த்த விரும்பினர். பதவி ஆசையில்லா இமாம் அவர்கள் அப்பொறுப்பையும் ஏற்க மறுத்தார்கள். அம்மன்னர் விரும்பி வேண்டியதால் அப்பதவியைத் தங்கள் மைந்தர் அல்லாமா முஹம்மது லெப்பை காஜி (ரஹ்) அவர்களை ஏற்றுக்கொள்ளுமாறு ஏவினர்.

புவியரசர் பாராட்டிய இமாம் அவர்களைக் கவியரசர்களும் பாராட்டினர். மாருப் புகழுடைய சீருவை இயற்றிய புலவரேறு உமறுக்கு அருமை நபியின் அழகிய வரலாற்றைச் செப்பிய பெரியார் இமாம் சதக்கத்துல்லா அவர்களே எனத் தமிழ் கூறும் நல்லுலகம் கூறும். தெள்ளு தமிழில் அள்ளும் கருத்துக்களைக் கவினுற வடித்தெடுத்த உமறுப்புலவர் இமாம் அவர்களை,

"நம்மையா ளுடையோன்வேத நபிதிரு வசனந் தீனேர்
சம்மதித்திடப் பாரெல்லாம் தழைக்கவே விளக்கஞ் செய்தோர்
இம்மையும் மறுமையும்பே றிலங்கிய ஸதக்கத் துல்லாஹ்
செம்மல ரடியிரண்டும் சிந்தையுள் ளிருத்தி னேனே"

என உடலும் உள்ளமும் குளிரப்போற்றியுள்ளார்.

கவியரசர்களால் பாராட்டப்பெற்ற இமாம் அவர்களும் கருவிலே திருவுடைய கவியரசராய் விளங்கினர்கள். மறை தந்த மா நபியை மனமுவந்து பாராட்டிய புகழ்க்கவிதைகள் மங்காத ஒளியுடைய மாணிக்கங்களாக மிளிர்கின்றன. அவற்றுள் உலகில் ஈடு இணையற்ற நந்தா விளக்கமாய் எங்கும் விளங்குவது ''கஸீதாயே வித்ரிய்யா''வேயாகும்.

'வித்ரிய்யா' என்னும் மூலநூல் அல் இமாம் அஷ்ஷெய்கு முஹம்மது இப்னு அபூபக்கர் அவர்களால் இயற்றப்பெற்றது. இரண்டடிச் செய்யுள்களால் ஆக்கப்பட்டது. அரபு எழுத்துக்கள் 29இல், ஒவ்வொரு எழுத்துக்கும் 21 பைத்துக்களாக வித்ரிய்யாவை அவர்கள் இயற்றினர்கள். அந்தந்த எழுத்திலும் அடங்கிய 21 பைத்துக்களை அதன் தொடக்கத்திலும் முடிவிலும் அதே எழுத்தமைய இயற்றியிருப்பது இமாம் அபூபக்கர் அவர்களின் சிறப்பாகும். ஒவ்வொரு பைத்தும் இரண்டு அடிகளைக் கொண்டது. எனவே மூல நூலான அபூபக்கர் அவர்களின் வித்ரிய்யா 609 (29 × 21) பைத்துக்களைக் கொண்ட 1218 அடிகளாகக் கோவையாக்கப்பட்டுள்ளது.

இமாம் அவர்கள் இவ்வித்ரிய்யாவை 'தக்மீஸ்' செய்தார்கள். 'தக்மீஸ்' என்பது 'ஐந்தடிப்பதம்' எனப் பொருள்படும். அதாவது மூல நூலின் ஒவ்வொரு பைத்தின் இரண்டு அடிகளுக்கும் முன்னல் 3 அடிகளை இயற்றி இணைத்தார்கள். ஒவ்வொரு அரபிய எழுத்துக்கும் 21 கண்ணிகளாக மூல நூலில் அமைந்திருந்ததை 29 கண்ணிகளாக இமாம் அவர்கள் மாற்றியமைத்துள்ளார்கள். நபிகள் நாயகத்தின் திருநாமம் 'முஹம்மது' என மீம் எழுத்தில் தொடங்குவதால் அதற்கு மட்டும் 30 பைத்துக்களை அமைத்தார்கள். இமாம் அவர்கள் இயற்றி இணைத்த 2992 அடிகளுடன் வித்ரிய்யாவின் பாடல்கள் 4210 அடிகளைக் கொண்டது. உலகிலேயே புகழ்வாய்ந்த மிகப்பெரிய கஸீதா வித்ரிய்யாவே ஆகும்.

இவ்வித்ரிய்யா என்னும் ஆழ்கடலினுள் அறிஞர் பெருமக்கள் நாளும் மூழ்கி முத்துக்களை எடுத்தவண்ணமிருக்கின்றனர். அது நுண்ணறிவும், அன்பும், பண்பும், ஒழுக்கமும் நிறைந்த நிறை பொற்குடம்; முத்துக்களும் மாணிக்கங்களும் நிறைந்த பெட்டகம்; நபிகள் நாயகத்தின் புகழ்பாட வந்த பாக்களுள் மணிமுடியாக ஒளிரும் ஒளிவிளக்கு. அது சொற்சுவையும், பொருட்சுவையும், அழகிய அணிகளும், சீர் தளை முதலிய செய்யுள் இலக்கணங்களும் இணைந்து விளங்கும் 'பசும்பொன்' என ஷிஹாபுத்தீன் வலீ (ரஹ்) அவர்கள் பாராட்டுகிருர்கள். புர்தா, பானத்ஸுஆத்,

துக்ருல்மஆத், தப்ரீஜுல்குரப் முதலிய கஸீதாக்களுக்கும் இமாம் அவர்கள் தக்மீஸ் செய்திருக்கின்றார்கள்.

மேலும் முஸ்லிம் இல்லங்களில் நாளும் ஒலிக்கின்ற முகைதீன் ஆண்டவர்மீது பாடிய "யாகுத்ப அஹ்லிஸ்ஸமா" என்னும் கஸீதா, சாகுல்ஹமீது ஆண்டவர்கள் மீது பாடிய "யாஸெய்யிதீ செய்கீ" என்னும் கஸீதா, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்மீது "அலாகுல்லு ஹம்தின்லிரப்பிஸ்ஸமா" எனத்துவங்கும் கஸீதா ஆகியவை இமாம் அவர்கள் இயற்றியவை.

முஸ்லிம்களிடையே செல்வாக்குப் பெற்ற 'ஸுப்ஹான' மவ்லிதை அரபியாவிலிருந்து நம்நாட்டிற்கு முதன் முதலில் கொண்டு வந்தது இமாம் அவர்களே. பல எழுத்துப் பிரதிகளை எடுத்தெழுத உதவியதோடு பல ஊர்களில் அதனை ஓதவும் ஏற்பாடு செய்தார்கள். அம்மவுலுதில் சில பைத்துக்களையும் இயற்றி இணைத்துச் சிறப்பித்தார்கள். அவற்றுள்

1. யாமுஸ்தபா பைத்தின் இறுதியில், "வகுல்லு இத்ரத்தின் வயிர்ஸிஹி" என்ற இவ்விரு அடிகளும்,

2. குல்லுஸ்ஸுரூரி பைத்தில் "மிம்மாயி ஜம்ஜம்" என்ற ஒரு பைத்தும்

3. ஹுப்புன்னபீ பைத்தில் "வலாஸயிதன் வஸஃதன்" என்ற ஒரு பைத்தும், குறிப்பிடத்தக்கன.

4. ஹுப்புன்னபீ பைத்துக்கள் பூராவுக்கும் தஷ்த்தீரும் செய்திருக்கிறார்கள். ('தஷ்த்தீர்' என்றால் 2 அடிச் செய்யுளை 4 அடிச் செய்யுளாக்குதல் எனப் பொருள்படும்')

5. முகலாய மன்னர் ஔரங்கசீப்பின் நற்பண்பு, ஈகை, ஒழுக்கம், எளிமை, இறைப்பற்று, நல்லாட்சி ஆகியவை பற்றிப் புகழ்ந்து அரபியில் பாடியுள்ளார்கள்.

இமாம் அவர்கள் இத்தகைய 'தக்மீஸ்'களையும், கஸீதாக்களையும், முனுஜாத்துக்களையும் எழுதி முஸ்லிம்களின் உள்ளங்களிலும் இல்லங்களிலும், இடம் பெற்றுள்ளார்கள். இவர்களால் கோவை செய்யப்பட்ட நூல்களை விரிப்பின் அகலும்; தொகுப்பின் எஞ்சும். இத்தகைய பெருமாமணி—இமாம் ஷேக் சதக்கத்துல்லாஹ் (ரஹ்) அவர்களையே பீரப்பா தமது நூலில் பாராட்டியுள்ளார்கள்.

# அவையடக்கம்

M. K. E. மவ்லாஞ

காலம் என்பது இறைவனின் கருவி! அதுவே இரட்சிக்க வேண்டியதை இரட்சித்து, சிட்சிக்க வேண்டியதைச் சிட்சித்து, சமன் செய்யும் துலாவாகச் செயல்படுகிறது!

ஒவ்வொரு காலத்தில் ஏற்படும் நிகழ்வுகளால் மனிதகுலம் மகிழ்வும், பெருமையும் பெறுவது உண்டு. அதுபோலவே, சிறுமையைச் சந்திக்கவேண்டிய கால நிகழ்வுகளும் ஏற்படுவதும் உண்டு.

இந்த நூற்ருண்டுகளில் வாழும் மனிதன் காலத்தால் பெருமை அடைகிருன்!

மனித இனம் தோன்றியது முதல், இதுவரை சந்திக்காத ஒரு சாதனையைக், கனத்தில் வெற்றி பெற்று, மனிதன் சாதிப்பதற்கு இந்தக் காலம் துணை செய்திருக்கிறது!

மனித வாழ்வுக்கு—அவசியமானதோ அல்லவோ—அவன் சௌகர்யமாக வாழுதற்குப் பல சாதனங்களைச் சமைத்துக் கொள்ள, காலம் அவனை அனுமதித்துவிட்டது!

ஆகையால், இன்னும் ஆயிரமாயிரம் காலங்களுக்குப் பிறகும் இந்தக் காலத்து மனிதகுலம் கௌரவிக்கப்படும்!

அதேசமயம், அத்தனைச் சாதன சௌகர்யங்களையும் பெற்றுப், பெருமிதத்துடன் வாழும் மனிதன், 'மன நிறைவைப் பெற்றுக் கொண்டாஞ' என்பது மட்டும் ஒரு கேள்விக் குறியாகத் தொக்கி நின்று கொண்டிருக்கிறது.

சௌகர்யங்கள் பெருகப் பெருக விரக்தியும் வளர்ந்து கொண்டே வருகிறது.

இதற்கு விடுதலை எங்கே கிடைக்கும்?

விடைகாண முயலும் பொழுது, கவனம் வேறு ஒரு திசையில் ஈர்க்கப்படுகிறது.

ஈர்க்கப்படும் திசையில், பெருமிதத்துடன் கொலுவிருக்கும் சிலரைக் காண முடிகிறது! அவர்கள் எதையும் இலட்சியம் செய்யாத காலத்தைக் கண்டு சிரித்துக் கொண்டிருக்கிறார்கள்!

காலத்தால் மனிதன் பெருமையையும், சிறுமையையும் சந்திக்கிறான் என்றோம்; அதற்கு மாறாக, காலம் சிலரால் பெருமையையும், சிலரால் சிறுமையையும் சந்தித்து விடுகிறது!

தான் பெருமைபெற வாய்ப்பைத் தந்தவர்களைக், காலம், நன்றிப் பெருக்கோடு, பெருமைப் படுத்துவதைத் தன் கடமையாகக் கொண்டுவிடுகிறது! அப்படிப் பட்டவர்களின் பாதங்களுக்கு அடியிலேயே, மனித குலம் பிரச்சினைகளுக்கு விடை காண முடிகிறது. அந்த விடையைத் தெளிவாகத் தெரிந்து கொள்பவர்கள் மட்டுமே, காலத்தையும் கடந்து, தங்கள் வாழ்வை மகிழ்ச்சிக்கு உரியதாக ஆக்கிக்கொள்ள முடிகிறது!

காலம் பெருமை தேடிக் கொள்வதற்குக் காரணமாக இருக்கும் அந்த மஹாத்மாக்களின் அந்தரங்கங்களை, அலசிக்காணுவது ஆகுமானதல்ல; எனினும், அவர்களைப் புரிந்து கொள்ள முயலுவது நமது விரக்திக்கு விடுதலை தருவதாக அமையலாம்!

கொலு வீற்றிருக்கும் பெரியவர்களின் வரிசையில், ஞானியர் கோமான் பீரப்பா அவர்களைக் காண்கிறோம்! அவர்களைக் காணும் பொழுதே நெஞ்சங்கள் விரக்தி நீங்கி வாழ்வடைகின்றன!

மாதிஹுர்ரஸூல் ஷய்குனா ஸதக்கதுல்லா அப்பா அவர்களைக் காண்கிறோம்! நெஞ்செலாம் இனிக்கிறது!

அவ்விருவரும் வாழ்ந்த அக்காலம், உண்மையிலேயே இரு மடங்கு பெருமை தேடிக் கொண்டு விட்டது!

மாதிஹுர்ரஸூல் அப்பா அவர்களையும், ஞானியர் கோமானையும் சம்பந்தப்படுத்திக், கதைகள் பல வழக்கில் இருப்பதைக் கேட்கிறோம். கதைகளில் மிகையும், கதையைவிட மிகைப்பும் இருக்கலாம். கதைகள் எப்படி இருந்தாலும், இரு பெருங்கடல்களுக்கும் இடையில், நெருக்கமான தொடர்பு இருந்தது என்பதை மட்டும் உணரமுடிகிறது.

மாதிஹுர்ரஸூல் அப்பா அவர்களை, ஞானியர் கோமான், தங்கள் காப்பியத்தில் ஏற்றிப் பாடி இருக்கிறார்கள்:

"வாரையும் பலமுறை வகையையு மறிந்து
வரைந்திடும் முறையதின் வளமையு மறிந்தோர்
தேறிய கலைநெறி முறையொ ருவனை
யேத்தியே பலவகை தெளிந்தோர்
கூறிய விசளம் குதாயிர சூலும்
கோர்வையி மாமொடு கொலுவையு மறிந்தோர்
பாரினு லுரைப்படி ஹுக்குங் கொடுத்தார்
பகர் சதக்கதுல்லா வொலி குருவே"

என்பது பீரப்பா அவர்களின் வாழ்த்து!

மாதிஹுர்ரஸூலுக்கு மாபெரும் மதிப்பளித்து, பீரப்பா பாடியிருப்பதிலிருந்தே, இரு பெரும் சக்திகள் இணைந்து நிற்பதைக் காணமுடிகிறது!

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் திருவடிகளைப் பற்றிக் காலத்தைக் கடந்து நிற்பவர்கள் பீரப்பா அவர்கள்!

ஸதக்கதுல்லா அப்பாவோ, அந்த வல்லவனின் திருத்தூதராகிய நபிகள் கோமானைத், தங்கள் என்பு தோலெல்லாம் நிறைத்துக் கொண்டு, அவர்கள் மீது கொண்ட காதலையே ஊணாகவும், உடையாகவும், தேனாகவும், திருவாகவும் கொண்டு, தங்கள் வாழ்வை அமைத்துக் கொண்டிருப்பவர்கள்!

ஆகவேதான், பிரதிமையும், பிம்பமும் ஒன்றை ஒன்று நோக்கிக் களிக்கிறது!

இப்படித்தான் நமது சிற்றறிவுகள் காண முயலுகின்றன! அதற்கு அப்பால் என்னென்ன அந்தரங்கங்களோ.........?

'வித்ரிய்யா' பெருங்காப்பியத்தில் நபிகள் கோமானைப் பாடும் அப்பா அவர்கள், நபிகளாரிடம் கூறுகிறார்கள்:

"எனது நாயகமே! தங்கள்பால் நான் கொண்டிருக்கும் உவப்பு, எனது என்பு தோல் எங்கணும் புகுந்து நிறைந்து விட்டது! ஆகையால், சாத்தான் குடிபுகுவதற்கு என் உடம்பில் ஓர் இடங்கூட இல்லை" என்று.

நம்மைப் பார்த்துக் கூறுகிறார்கள்:

"என் தோழர்களே! நபிகள் கோமானின் திருப்புகழை 'இவ்வளவுதான்' என்று, எவரால் மட்டுப்படுத்த முடியும்? எனவேதான்,

நான் அவர்களது புகழையே இரசமாகப் பிழிந்து, எனது நெஞ்சத்தில் நிறைத்துக் கொண்டு, அந்தப் புகழாலேயே பொன்னுருக்கி, அணிகலன்கள் படைத்து, அவர்களுக்குச் சூட்டி மகிழ்வேன்" என்று கூறிவிட்டு, மீண்டும் அழைத்து,

> "நண்பனே! நெஞ்சங்கள் ஒளி இழந்து கறைப்பட்டிடும் பொழுது, அவர்கள்மீது புகழ்பாடுவது மட்டுமே, கறையைப் போக்கிப் பிரகாசப்படுத்த முடியும்! ஆகையால், அவர்கள்மீது புகழ்பாடுவதைத் திருப்பிக் கொண்டே இருப்பாயாக!" என்று.

அல்லாஹ்வையும் அவனது திருத்தூதரையும் பிரதிமையாகவும், பிம்பமாகவும் கண்டு களிப்பர் ஞானவான்கள்! அந்தக் கருத்துக் கடலில் தொட்டுச் சுவைப்பவர்கள் நம் போன்ற சாமானியர்.

காலத்தைக் கடந்து நிற்பவர்களாகிய இவர்களில் யார் பிரதிமை? யார் பிம்பம்? என்று நாம் கணித்துக் காணுவதோ, காட்டுவதோ இயலாத ஒன்று.

ஆக, இவர்கள் கருத்துக் குருடர்களை விழித்துச் சாடிவிட்டு, தங்கள் அறவழித் துறையின் பெருவழிப் பாதையில் சென்று கொண்டிருப்பவர்கள்!

அப்படிச் சென்று கொண்டிருப்பவர்கள் இறைவனுக்கன்றி வேறு எவருக்கு அடங்குவர்?

நபிகளையன்றி வேறு எவரைப் புகழ்வர்?

தங்களை மறந்து, நபிகளாரின் தாள் போற்றி, அதிலேயே முழுக்க முழுக்க மூழ்கிக்கிடந்தவர்கள் மாதிஹுர் ரஸூல் அப்பா அவர்கள்!

நபிகளாரின் மீதுள்ள பாசம் மிகுத்து, அதிலேயே லயித்துக் கிடப்பவர்களின் பேரின்பப் பெருவாருதியைப் புரிந்து கொள்ளாதவர்களைச் சாடி, அப்பா அவர்கள் தங்கள் கூட்டத்தவர்களுக்காகப் பேசுகிறார்கள்:

"எங்களைப் பழிப்பவனே! எங்களை நீ யாரென்று எண்ணுகிறாய்? எங்கள் அறிவுகள் எங்கள் நாயகருடன் ஒன்றித்துவிடும் அளவுக்கு, நாங்கள் அவர்களுடன் அன்பால் பிணைக்கப்பட்டு

விடுகிறோம்! நீ நாடுகிறபடி எங்கள் நெஞ்சம் அவர்களை விட்டுப் பிரிவதுமில்லை, எங்கள் ஆவல் அடங்குவதுமில்லை!'' என்று அவர்கள் கூறும்பொழுது, இறை நேசச் செல்வர்களைப் பழிப்பவர்கள் தங்களுக்குத் தாங்களே கேள்விக்குறியாகி விடுகிறார்கள்.

அப்பா அவர்களின் 'வித்ரிய்யா' பெருங்காப்பியம், அள்ளிப் பருகப் பருக வற்றாத ஜீவ ஊற்று!

அதில் பிரவேசித்து அனுபவிக்கத் துவங்கினாலோ, ஒவ்வொரு சொல்லும் ஓராயிரம் தேவகானம்!

அந்தப் பெருங்காப்பியத்தை உலகுக்குத் தந்த அப்பா அவர்களின் அரபி ஞானம், வர்ணனை வளம், அரபிகளையே திகைக்கும் படிச் செய்த வரலாறுகள் பல உண்டு.

அவர்களுக்கிருந்த கலா ஞானத்தை அவர்களின் சொற் கருத்துக்களிலேயே காணுவது சுவையானது!

காப்பியங்கள் யாப்பவர்கள் அவை யடக்கமாகச் சில கூறுவது மரபு. அத்தியாயம் ஒன்றுக்கு 29 சூத்திரங்கள் வீதம், 29 அத்தியாயங்கள் படைத்து, நபிகளார் திருநாமத்தின் முதல் எழுத்தாக நிற்கும் சிறப்புக்காக மீமுக்கு ஒரு சூத்திரம் அதிகப் படுத்தி, ஆக 842 சூத்திரங்களைத் தாங்கி நிற்கும் 'வித்ரிய்யா' பெருங்காப்பியத்துக்கு அவையடக்கம் வேண்டுமல்லவா?

இங்கு, அப்பா அவர்களுக்குப் பிரச்சினை ஒன்று உருவாகி விட்டதுபோலும்! 'எந்த அளவுக்கு அடக்கம் தெரிவிப்பது' என்று.

அவர்கள் எடுத்துக்கொண்ட காப்பிய நாயகரைவிடச் சிறந்த ஒருவர் அன்றும், இன்றும், இனி என்றும் உலகில் இல்லை!

அந்த நாயகரைப் பாடும் அப்பா அவர்களுக்கு நிகரான ஒரு பண்டிதர் இல்லை!

அப்படியிருக்க எந்த அளவுக்கு அடங்குவது? ஆகையால் தான் அப்பா அவர்களின் கோவை இவ்வளவு தன்மையில் அமைந்திருக்கிறது போலும்!

''நான் இலக்கண இலக்கிய வரம்புகளுக்கும் அப்பால் தேவைக்கும் அதிகமான கல்வியைக் கற்றுத் தேர்ந்தேன்''. 5–19.

''என்னைத் 'தீட்சண்யம் உடையவன்' என்று கருதும் சிறந்த அறிஞர் பலர் எனக்குச் சீடர்களாக இருக்கக்கூடிய சிறப்பை நான் பெற்றிருக்கிறேன்''. 9–23.

''பக்தர்களின் உள்ளங்களில் சலனம் ஏற்படும்போது, ''சலன நிலை மாறித் திடம் அடைவோம்'' என்ற நம்பிக்கையில், அஹ்மது (ஸல்) அவர்கள் மீது புகழ்பாடுவோர் மிகைத்துவிட்டனர்''. 3-1.

“நான் அவர்கள்மீது துதி பாடுகிறேன். எந்த மடையனுவது என் நிலை கண்டு, சாடை சைக்கினையாகவேனும்—என்னைப் பழிப்பாறுனல், எனக்கு இடையூறு பண்ணக்கூடிய கோட்சொல்பவன், புறம் பேசுபவன் ஆகியோரின் தலைகளை எல்லாம் நான் பாடும் துதிப்பாடல்களைக் கொண்டே உடைத்து, சுக்கு நூருகச் சிதைத்துவிடுவேன்”. 4-23.

“முஹம்மது (ஸல்) அவர்களது பெருமையை வரையறுத்து, வரம்பு கட்டி, ஒரு எல்லைக்குள் கொண்டுவர எண்ணும் எவனுக்கும்—அவன் நிச்சயமாக அவ்வாறு நாடுவானுனல்—அவனது அறிவு சூனியமாகி, வெறும் கரித்துண்டைப்போல் இருளடைந்து போம்”. 3-1.

இப்படிப்பட்ட சில சொற்கோவைகளையே அப்பா அவர்களின் அவையடக்கப் பகுதியாகக் கொள்ளலாம் போலும்!

“நான் இலக்கண வரம்புக்கும் அப்பால் கல்வி கற்றவன். பல அறிஞர்கள் எனது சிஷ்யர்களாக இருக்கிருர்கள். பக்தர்கள் சலனம் நீங்கித் திடமடைய அஹ்மது (ஸல்) அவர்கள்மீது புகழ் பாடுவதைத் தொடர்ந்து, நானும் பாடுகிறேன்; மிக்க அலங்காரமாகப் பாடுகிறேன்! என்னைப் பழித்துக் கோட்சொல்பவனின்—புறம் பேசுபவனின்—தலைகளை உடைத்துவிடும் அளவுக்கு, என் பாடல்கள் வைரத்தன்மை உடையவை! அத்தனைத் திறமையும் எனக்கு இருக்கின்ற காரணத்தால், நபிகளாரின் புகழுக்கு வரம்பு கட்ட எண்ணினேன்; அங்கு எனது அறிவு கரித்துண்டைப் போல் இருளடைந்துவிட்டதையே கண்டேன்”.

இந்தக் கடைசிச் சொற்களையே அப்பா அவர்களின் அவையடக்கமாகக் கொள்ளலாமா?

---

## நடிப்புக்கலை

உனது ஜெபமாலையிலுள்ள நூல் பாசாங்கு என்னும் வலை நூலாக இருக்கிறது. அதிலுள்ள மணிகள் ஆகாயத்தில் பறக்கும் பறவைகளை ஏய்க்கும் தானிய மணியாக இருக்கின்றன. பறவையின் நெஞ்சைப் பிளந்து அதைப் புசித்து விடுவதற்கு வேண்டியே வலையை விரித்து மணியையும் தூவுகின்ருய்.

— ஜாமீ (ரஹ்)

# மெய்ஞ்ஞானி குணங்குடியார்

கா. மு. பா.

குணங்குடிமஸ்தான் சாஹிபு வலீயுல்லா அவர்களின் இயற் பெயர் சுல்தான் அப்துல்காதிர் என்பது. அவர்கள் பிறந்த ஆண்டு ஹிஜ்ரி 1207. அவர்கள் பிறந்த ஊர் இராமநாதபுரம் மாவட்டத் தில் உள்ள குணங்குடி என்பது. அவர்கள் பெயரோடு இணைந் துள்ள 'மஸ்தான்' என்னும் பார்ஸி மொழிச் சொல்லுக்கு மைய லுடையவர் என்பது பொருள். உலகெலாம் படைத்து உயர்வோடு காக்கும் பெரியோன் இறைவனின் மீது அடங்கா 'மையல் கொண்டு' ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்கிய உத்தமக் கவிஞர் 'மஸ்தான்' என அழைக்கப்பட்டது பொருத்தமேயாகும். குணங்குடியாரின் தாய்வழிப் பரம்பரை தாஹா நபிகள் கோமான் (ஸல்) அவர்கள் தம் பரம்பரையைத் தழுவுகின்றது என்பர். பொன்னுன கவிகள் பாடிய மின்னு நூருத்தீன் புலவரின் ஐந்தாம் தலைமுறையைச் சார்ந்தவர் இவ்வருமைப்புலவர். தந்தையார் பெயரோ ஷைகு நயினார்முகம்மது என்பது. தக்க ஆலிம்களின் தலைமாமணியாகத் திகழ்ந்த தைக்கா சாகிபு அவர்கள் கீழக்கரை யில் கீர்த்தியோடு நடத்திய கல்விக் கூடம் குணங்குடியாரின் வாழ்வில் குறைவில்லா இறைஞானம் குடியேறக் காரணமாயிருந் தது. சமுதாயக் கண்மணிகள் சீரோடும் செழிப்போடும் சேர்ந்து வாழ்ந்த காயற்பட்டினக் கவிச் செல்வர் — புலவர் நாயகம் — ஷேகனுப் புலவர் அவர்கள் குணங்குடி மஸ்தான் சாகிபு அவர் களின் வித்தையில் தோழனுக விளங்கக் காரணமாக அமைந்த ஆத்மீகச் சாலையது. தைக்கா சாகிபின் தலைமைப் பாதுகாப்பில் புடம் போடப்பட்ட பொன்னுன செல்வர் 'ஆலிம்' பட்டத்தைப்

பெற்று அழகு சேர்த்தார். கருவிலே திருவுடைய கவிக் கோமான், ஆலிமாகவும் அமைந்தது கிடைத்தற்கரிய பெரும் பேருகும். சமயக் கல்வி நன்கு அமையப் பெற்ற சான்ருேர் தலைவர் குணங்குடியார் ஆன்மீகப் பயிற்சிகளை அடைய எண்ணி ஆசான் அவர்களின் அனுமதியோடு பயணத்தைத் தொடங்கினுர்கள். திரிசிரபுரம் மகான் ஷாம் சாகிபு அவர்கள் குணங்குடியாருக்கு ஞான பாதை காட்டினுர்கள். பகலெல்லாம் புசியாது பசித்திருந்து பழகினுர்கள் குணங்குடியார். இரவெல்லாம் விழித்திருந்து இறைவனை வணங்கினுர்கள். நாடு நகர்களைத் துறந்தார்கள். காடு மலைகளைக் கடந்தார்கள். முட்காடுகள் அவர்கள் பாதங்களை முத்தமிட்டன. விலங்கடர்ந்த கானகங்கள் அவர்களின் ஆத்மீகப் பயிற்சிக்கு வியப்பூட்டும் களங்களாக அமைந்தன. இருள் செறிந்த பகுதிகளில் குணங்குடியார் ஒளிமயமான வாழ்க்கையை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். கானகத்தில் கிடைத்த சருகும், குழையும், கிழங்கும், தழையும், காயும், கனியும் அவர்களின் உயிர் வாழ்க்கைக்கு உறுதுணை புரிந்து கொண்டிருந்தன. சிக்கந்தர் மலை, தொண்டி வாழைத் தோப்பு, மரக்காயர் தோப்பு முதலிய பல்வேறு இடங்களில் தனித்திருந்து தவமிருந்த அவர்கள் மகத்தான படித்தரங்களை மலர்ச்சியோடு கடந்து வந்தார்கள். 'அஞ்ஞான வேரறுத்திட்ட மெய்ஞ்ஞானியர் அணைந்து அருகு நிற்கும்' நாகூர் ஆண்டகையின் தர்கா ஷரீப் சென்று சற்குணங்குடி கொண்ட ஷாகுல்ஹமீதரசரைப் பாமலர்களால் பாராட்டினுர்கள். காரைக்காலிலும் சில காலம் மேலைத் தவநிலையினை மேவி நீங்கினுர்கள். பல்வேறு ஊர்களுக்குப் பயணம் மேற்கொண்டார்கள். தலைகீழும் கால்மேலுமாக கடுமையான தவநிலையைக் கைக்கொண்டார்கள். மரக்கிளைகளில் வாவல்களைப் போன்று கூடத் தொங்கி வல்லான் இறைவனுக்கு வணக்கம் செலுத்தி வந்தார்கள். வாழ்வியலின் ஈற்றுப் பகுதியில் சிறப்போடு சென்னை நகர் சென்றனர். பக்தி வழியின் படித்தரங்கள் பல அங்கும் காட்சி நல்கின. அற்புத வாழ்க்கையைக் கண்டு பலரும் அதிசயித்துப் போயினர். நாடாண்ட நவாபுக்கும் நல்லார் செய்தி எட்டியது. குணங்குடியார் — நவாபு சந்திப்பு நிகழ்ந்தது. அருள்ஞானி குணங்குடியாரின் ஆற்றலைக் கண்டு அதிசயித்துப் போன ஆற்காடு நவாபு தவச் செல்வரிடம் தீட்சை பெற்றுச் சிறந்தார். குணங்குடியார் புகழ் தலைநகராம் சென்னையில் தலைமை நிலையினைப் பெற்றது. உழைப்பின் உயர்வினை உணர்த்த விரும்பிய குணங்குடியார் தச்சு வேலை செய்ததாகவும் அதில் பெற்ற வருமானத்தை ஏழை எளியவர்க்கு நல்கி ஏற்றம் பெற்றதாகவும் கூறப்படுகிறது. குணங்குடி மஸ்தான் தங்கித் தவம் புரிந்த இடம் ராயபுரம் பகுதியாகும்.

அங்கு ஹிஜ்ரி 1254-ஆம் ஆண்டு ஜமாதிலவ்வல் பிறை 14-ஆம் நாள் திங்கட்கிழமை காலையில் அவர்கள் மண்ணுலக வாழ்வை நீத்தார்கள். குணங்குடி மஸ்தான் அவர்களின் அடக்க இடம் ராயபுரத்தில் உள்ளது. கல்வித் தோழர் செய்கப்தில்காதிர் நயினுர் லெப்பை ஆலிம் புலவர் அவர்களின் சமாதியும் அங்குதான் உள்ளது.

தவஞானி சுல்தான் அப்துல்காதிர் ஆலிம் என்ற குணங்குடி மஸ்தான் அவர்களின் பாடல்களில் மெய்ஞ்ஞானப் பெருமணம் கமழக் காணலாம். எளிமையும் இனிமையும் கூடிக் குலவுகின்ற அவர்களின் அருட்பாடல்களில் உயரிய தத்துவக் கருத்துக்கள் உன்னதமான ஆட்சியைப் பெற்றுத் திகழ்கின்றன.

'காணுத காட்சியைக் கண்டு அடிமைஉள்ளம்
களித்திடற்கு அருள் புரியவும்
கண்கொண்டு காணப் படாநின்ற எவையும்
கனு வென்று உனருள்புரியவும்'

வேண்டும் அவரது மெய்ஞ்ஞானப் பாடல்களில் குடிகொண்டுள்ள எளிய சொற்கள் இதயத்தில் ஆழமாகப் பதிந்து விடுகின்றன.

மெய்ஞ்ஞானி குணங்குடியார், ஜீலானில் பிறந்து பகுதாதில் உறைகின்ற வலீகள் கோமான் முஹியித்தீன் ஆண்டகையை ஆன்மீகக் குருவாகக் கொண்டு பாவமுதம் பொழிகின்றுர்கள். குத்பு நாயகம் முஹியித்தீன் ஷேகை முன்னிறுத்திப் பாடும் அவர்களின் பாடல்களிலிருந்து, அவர்களின் ஆர்வ நெஞ்சை அறிந்து கொள்ள இயலுகின்றது.

"இணங்கு மெய்ஞ்ஞானப் பேரின்பக் கடலின்
இன்னமுது எடுத்து எமக்களிப்போன்
பிணங்கிய கோச பாசமா மாயைப்
பின்னலைப் பேர்த்து எறிந்திடுவோன்
வணங்கிய தவத்திேனார்க்கு அருள்புரிய
வள்ளலாய் வந்த மாதவத்தோன்
குணங்குடி வாழும் முகியித் தீனும்என்
குருபதம் சிரத்தின் மேற்கொள்வாம்"

நற்குணம் குடிகொண்ட நாதரைக் 'குணங்குடி' வாழும் எனக் குறிக்கும் தொடரில் புலவர் பெருந்தகையின் ஊர்ப்பெயரும் வந்து உறவு கொண்டாடுவது சுவைத்தின்புறத்தக்கது. மெய்ஞ்ஞானத் துறையில் தமக்கு வழிகாட்டும் ஆன்மீக குருவை முன்னிறுத்திப் பாடுகின்ற பாடல்களில் 'யான்' 'எனது' என்னும் செருக்கறுக்கும் கருத்துக்களும் சேர்ந்து விடுகின்றன.

'தான் செத்திருந்து உலக முழுதும் அரசாளும்
தத்துவம் எனக்கருள் புரியவும்
நான் சாமுன் நான் சாவ நாடினேன்
நான் சாமுன் நான் சாவ அருள்புரியவும்'

இறைவனை இறைஞ்சுகின்ற இதயம், அடக்கத்தின் சின்னமாக நமது இதயத்தில் எதிரொலிக்கின்றது. ஓட்டையும் செம் பொன்னையும் ஒக்க நோக்கும் மெய்ஞ்ஞானத்தில் தன்னைத் தாழ்த்தி எண்ணி வேண்டுவது தலையாய பண்பல்லவா? இஸ்லாமிய நெறி காட்டும் தத்துவப் பாடல்களில் இனிய தமிழ் நாட்டில் நெடுங்காலமாகப் பேசப்பட்டுவரும் ராஜயோகக் கருத்துக்களும் கலந்து வருகின்றன.

'சிவராஜ யோகம் தெளிந்த திறத்தினர்க்கு
எவரைச் சரியிடுவது எந்தாய் நிராமயமே'

எனப் பாடுகின்றார் குணங்குடியார். முகியித்தீன் சதகத்தில் 'பொங்கு சிவஞான முன்னிற்கவே' எனப் பாடுகின்றார் அம் மெய்ஞ்ஞானியார். எனவே தமிழகத் தத்துவத் தொடர்களும் இஸ்லாமிய நெறியுணர்த்தும் பாடல்களில் நிறைந்து நிற்கின்றன. பக்தி மார்க்கத்தை பரப்பவந்த "பைந்தமிழ் நாட்டுப் புலவர்கள் இறைவனையும்—மன்னுயிர்களையும், தலைவி—தலைவராகப்" பாடும் மரபினை ஏற்படுத்தியுள்ளனர். அம்மரபு குணங்குடியாரின் மனோன்மணிக் கண்ணியில் பிரதிபலிக்கின்றது.

எளிமையும் இனிமையும் கூடி ஏற்றம் செய்யும் குணங்குடி யாரின் பாடல்களில் காணப்படும் வேகமான சொல்லாட்சி புலவருக்கு மாபெரும் வெற்றியை நல்கிவிடுகிறது.

"மண்டிசையும் விண்டிசையும் எண்டிசையும் நின்றசையும்
வாசனும் போஜ னீயே"

என்ற தொடர் நினைவில் நிலைத்துவிடுகின்றது.

'வானுதி பூதமும் தானுகி நின்ற பெருமான்' எனும் தொடரில் ஓசை நமது இலக்கிய ஆசையைக் கிளறுகின்றது.

"நோக்கு நோக்கொண்ணுத நோக்கு நோக்கா நின்ற
நோக்கெனது முன்னிற்கவே"—

இத்தொடரில் இடம் பெறும் 'நோக்கு' சொற்பின் வருநிலையணி யையும் நினைவு படுத்துகின்றது.

குணங்குடியார் பாடல்களில் பேச்சு வழக்குச் சொற்கள் நன்கு கலந்து வருகின்றன. மினுக் கெண்ணெய், தங்கக் கொலுசு, சாம்ப்ராணி, நாவு, பல்லைக்குத்தி முகர்தல் முதலிய சொற்கள் மனோன்மணிக் கண்ணியில் இடம் பெறுகின்றன.

'பச்சைப் பருப்பு முதல் பருப்பில் பத்துவகை கடைவேன்
வச்ச நறு நெய்யுருக்கி வார்ப்பேன் மனோன்மணியே!'

'முட்டை பொரிப்பேன் முழுக்கோழி தான் பொரிப்பேன்
தட்டைப் பீங்கானில் வைத்துத் தருவேன் மனோன்மணியே'

'குட்டிக் கறிதானும் குழம்பு பண்ணித் தாளித்தோர்
சட்டிக் கறியேனும்தருவேன் மனோன்மணியே'—

இக்கண்ணிகளில் பேச்சுவழக்குச் சொற்கள் கலந்து பண்டிதர்க்குச் சொந்தமான இலக்கியத்தைப் பாமரரும் உரிமை பாராட்ட வைத்துவிடுகின்றன. இத்தகைய சொல்லாட்சிகளால் குணங்குடியார் 'குடிமக்கள் கவிஞராக' உயருகின்றார்.

மஸ்தான் சாகிப் பாடிய கீர்த்தனைகள் சாதாரண மக்களைப் பெரிதும் கவரும் ஆற்றலுடையவை. அக்கீர்த்தனைகளிலுள்ள சந்தநயம் இனிமையானது. அவற்றின் பதங்களும் எளிமையானவை. அப்பகுதியில்

'சூத்திரப் பாவை கயிறற்று வீழுமுன்
சூக்ஷக் கயிற்றினைப் பாரடா — அதி
சூக்ஷக் கயிற்றினைப் பாரடா'

எனும் பல்லவி நமது சிந்தனையில் சிறப்பிடம் பெறுகின்றது. பாவையாகிய உடல் இறந்துபடுமுன் சூட்சக் கயிறான இறைவனை ஆராயச் செல்லும்முறை அற்புதமானது. அதன் கீழுள்ள சரணங்களிலொன்று இப்படி அமைந்துள்ளது:

''உற்றுற வின்முறை யார்சூழ்ந் திருந்தென்ன
ஊருடன் சனங்களெல் லாரும் பணிந்தென்ன
பெற்றோரும் பெண்டீரும் பிள்ளை யிருந்தென்ன
பேணும் பெருஞ்செல்வ ஆணவத் தாலென்ன
கத்தன் பிரிந்திடச் செத்த சவமாச்சு
காணாது காணாது கண்டதெல் லாம்போச்சு
எத்தனை பேர்நின்று கூக்குர லிட்டாலும்
எட்டாமற் போய்விடுங் கட்டையல்லோ''.

உளங்கவர்ந்த உவமைகளும் மஸ்தான் சாகிப் பாடல்களில் மிகுந்துள்ளன.

'ஏகப்பெரு வெளியில் இருட்கடலில் கம்பமற்ற
காக மதுவானேன்'

என்ற தொடர் விரித்துப் பொருள்காண உரித்தானது.

'நாயினும் மிக்காங் கடையேன்' என்ற உவமை, சமயக் குரவர் உவமையை நினைவுபடுத்துவது.

'பவக்கடல் தொலைக்குமொரு கவிழா மரக்கலம்'—சிந்தனைக்கு விருந்து பயப்பது.

'அரிசி விலையுலை யறியுமோ' என்ற உவமை இன்றைய அரிசி விலை ஏற்ற அடிப்படையில் பார்த்தால் காலத்திற்கேற்ற கவினார்ந்த உவமை.

மஸ்தான் சாகிப் அவர்கள் இன்பத்தமிழ் மொழியில் மட்டுமின்றி எழிலார்ந்த அரபு மொழியிலும் பாடலியற்றத் தெரிந்தவர்கள்.

"மஹ்லியத் தானதாத் துல்கிபுரி யாவில்
மறைந்தகன் சுல்ம குபியாம்
மஸ்கூத்து அன்ஹீல் கதீமுல் அமாவான
மவுஜூதெனும்சி ருபுலே"

எனத்தொடங்கும் பாடலும் அடுத்த பாடலும் அவர்களின் அரபுப் புலமையை அறிவிக்கும் அற்புதமான படைப்புக்கள். மஸ்தான் சாகிப் பாடல்கள் இறையருளில் தோய எண்ணும் இதயங்களுக்கு குறைவில்லாத கொள்கை முழக்கங்கள்; நிலையில்லாத உலகில் நமக்குக் கிடைக்கும் நிலைபெற்ற அருங்கனிகள்.

---

உன்னுடைய முகம் கண்ணுடியின் தெளிவுக்குத் தக்கபடியே அழகைப் பிரதிபலித்துக் காட்டும். அந்தோ! எங்கள் இருதயமாகிய கண்ணுடி கறையால் மூடப் பட்டிருக்கிறதே. — மௌலானு ஜாமீ (ரஹ்)

திவ்விய தெய்வ லோகத்தின் திறந்த வெளிகளில் யான் எவ்வாறு சஞ்சரித்தல் கூடும்? எனது சரீரம் பூதப்பொருள் களின் ஆக்கம் என்ற கட்டிடத்திற்குள் கட்டுப்பட்டுக் கிடக்கிறதே. — காஜா ஹாபிஸ் (ரஹ்)

# பீரப்பாவும் குணங்குடியாரும் - படையல் மாண்பு

திருமலர் எம். எம். மீரான் பிள்ளை,
பி. எஸ். சி., எம். ஏ.
சான்றிதழ் மொழியியல்; காந்திய சிந்தனை.

I. *முகவுரை :* பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே தமிழர்கள் வாழ்வு இறை நம்பிக்கையில் தொடர்பு பெற்றமைந்திருந்தது. சங்க காலத் தமிழர் வாழ்விலும் சமயச்சுவடுகள் தாக்கம் பெற்றிருந்தமை பழந்தமிழ் இலக்கியம் வழி அறியக்கிடக்கின்றது. பல்லவர், சோழர், நாயக்கர் காலத்தில் தோன்றிய நாயன்மார்கள், ஆழ்வார்கள், சித்தர்கள் போன்ற பல்சமயப் புலவர்கள் தமிழில் பக்தி இலக்கியத்துறையைப் பெருமளவில் வளர்க்க ஆரம்பித்தனர். மொழி இலக்கியம் சமயத்துவங்களால் ஆட்கொள்ளப்பட்டு, மக்கள் சமய மேல்நிலைப் பிரக்ஞை பெற்றமைந்த இக்காலத்தில், மொழியிலும் சமயத்திலும், புலமையும் ஆற்றலும் பெற்றமைந்த எண்ணற்ற இஸ்லாமியப் புலவர்கள் தோன்றி, சொல்வளமும் பொருள்நலமும் நிறைந்த அரிய பல [1]சிற்றிலக்கியங்களையும் காவியங்களையும் படைத்தளிக்கத் தொடங்கினர். திருக்குர் விளக்கமும், திருநபி வாழ்வும் வாக்கும் இஸ்லாமிய இறையியல் இலக்கியத்தின் முதன்மைக் கவிதைப் பொருளாக அமைந்து இடைக்காலப் பக்தி இலக்கிய வரலாற்றில் புதியதோர்

---

1. பல அரிய நூல்கள் பாதுகாப்பாரற்று அழிந்து போயின; சில சுவடி அளவில் உள்ளன. பதிப்பிக்கப்பெற்ற சிலவற்றிற்கு உரையுடன் அமைந்த ஆய்வுப் பதிப்புக்கள் வெளிவரவில்லை. இவைகள் பற்றிய ஆய்வும் முஸ்லீம் தமிழறிஞர்களால் மேற்கொள்ளப்படவில்லை. இந்நிலையிலும் இஸ்லாமியபுரவலர்களும், அறிஞர்களும் வாளாவிருப்பது ஏனோ?

திருப்பத்தை ஏற்படுத்த முனைந்தது. பல தெய்வ வணக்கத்தையும், அறிவுக்கு அப்பாற்பட்ட அதீதக் கற்பனைகளையும் கேட்டறிந்த மக்கள் இஸ்லாமியப் புலவர்களின் ஏக தெய்வக் கொள்கையையும் அறிவுக்குகந்த வாழ்வியல் நெறியையும் கற்றுணர ஆரம்பித்தனர். இத்தன்மைத்த இஸ்லாமிய இலக்கிய வரலாற்றில், சூபிகள் எனும் ஆன்மீகப் புலவர்கள் பரம்பரையில் தோன்றி பல அரிய படைப்புக்களைப் படைத்தளித்துச் சிறந்தவர்களே தக்கலைத் தவஞானி பீர்முஹம்மது சாகிபும் குணங்குடி மஸ்தான் சாகிபும் ஆவர். துறவ நிலையின் ஒப்புயர்வுற்ற இவர்கள் [2]திருப்பாடல்களின் உறவு நிலைகளையும் தனித்துவ சிறப்புக்களையும் அறிய, பொது நிலையில் ஒப்பு நோக்குவது இன்றியமையாததாகின்றது.

II. *சூபித்வம்:* இறை நெருக்கங் கொண்ட இஸ்லாமிய மெய்ஞ்ஞானத் துறவிகளும், புலவர்களும் [3]சூபியாக்கள்என அழைக்கப்படுகின்றனர். இறைஞான போதம் பெற்று இறைவனை அறிந்து அவனிடம் அணுகி இரண்டறக் கலந்து இன்பம் பெறுதலே இவர்கள் இலட்சியம். இந்த இலட்சியத்தை அடைய அவர்கள் நடாத்தும் வாழ்வினை 'இறைப்பயணம்' எனக் குறிப்பர். இத்தகைய வாழ்வுப் பயணத்தின் பாதைகளில் ஆங்காங்கே அதிசயங்கள் பல நிகழ்வதுண்டு. நபிகள் பெருமானின் உயரிய போதனைகளின் உண்மைக் கருத்துக்களை அறிந்துணர்ந்து இறைவழி நிற்கும் நேரடி வழித் தோன்றல்களே இவர்கள். சூபித்துவக் கொள்கையின் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்தவர் நபிகள் பெருமானின் தோழர்களுள் கி. பி. 648-ல் மாயமாய் மறைந்த உவைசுல் கர்னி எனக் கருதப்படுவர். காதிரியாத்தரீக்காவை நிறுவிய கௌஃதுல் அஃலம் முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி, சூபியாக்கள் பரம்பரையில் தலைமையிடத்தையும் பெரும் புகழையும் ஆற்றலையும் பெற்றவராகக் கருதப்படுகின்றார்கள். ஆதலின் சூபியாக்கள் அவர்களைத் தம் ஆத்மீகக் குருவாகக் கொண்டு ஒழுகுகின்றனர். இத்தன்மைத்த இறைஞானச் சித்தர் பரம்பரையில் தமிழ் நாட்டிலும் பலர் தோன்றி எண்ணற்ற ஞானப் பனுவல்களை அருளியுள்ளனர். இவ்வகையில் அமைந்து சிறந்தவர்களே பீரப்பாவும் குணங்குடியாரும்.

---

2. விரிவு கருதி பீரப்பாவின் ஞானப்பால், ஞானப்பூட்டு, ஞானப்புகழ்ச்சி இவைகளுடன் குணங்குடியாரின் முஹிய்யதீன் சதகம், அகத்தீசர் சதகம், முஹிய்யதீன் வாழ்த்து ஆகியவை பொதுநிலையில் ஒப்பிடப்படுகின்றன.
3. முற்கால ஞானிகளும் துறவிகளும் கம்பளியைப் போர்த்தியிருந்ததால் இப்பெயர் பெற்றனர். சுப்=கம்பளி—அபூநஸ்றுல் ஸருஜ்.

III. *பெருவாழ்வு:* பீரப்பாவும் குணங்குடியாரும் இரு வேறு காலத்தவர்; முன்னவர் பதினேழாம் நூற்றுண்டினராகவும் பின்னவர் பதினெட்டாம் நூற்றுண்டினராகவும் கருதப்படுவர். பட்டப் பெயர்களால் பாராட்டப் பெறும் இந்த இருபெரும் தத்துவ ஞானிகளின் வாழ்வை ஒப்பு நோக்கும்போது பல ஒற்றுமைகளை அறியலாம். இருவரும் இறை ஞானத்திலும் மொழியிலக்கியத்திலும் ஆழ்ந்த அறிவு பெற்ற புலவர்களாக உள்ளனர். இளமையிலேயே இருவரும் உறவைத் துறந்து துறவு வாழ்க்கை பூண்டு சூபித்துவ நெறிபற்றியொழுகியுள்ளது குறிப்பிடத்தக்கது. உழைத்துப் பிழைக்கும் பரம்பரையில் தோன்றிய இவர்கள் வாழ்வில் பல அதிசயங்கள் நிகழ்த்தப் பெற்றுள்ளன. துறவின் முன்நிலையில் எதிரிகளால் பல இன்னல் விளைக்க, அவற்றைத் தாங்கிப் பின்நிலையில் மக்களும் அரசரும் போற்ற வாழ்வை மேற்கொண்டுள்ளனர். இருவருமே ஓரிடத்தில் பிறந்து பல்வேறிடங்களில் அலைந்துதிரிந்து பிறிதோரிடத்தில் உறைந்து இறையடி சார்ந்துள்ளனர்.

நெல்லை மாவட்டத்திலுள்ள தென்காசியில் சிறுமலுக்கர் என்ற மாலிக் முஹம்மதுவுக்கு மகனாகச் சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு பிறந்தவர் பீரப்பா என்ற பீர்முஹம்மது சாகிபு. நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வந்த பீரப்பா இறைஞான அருள் வேண்டி இளமையிலேயே பாசவாழ்வை விட்டுப் பற்றற்ற வாழ்வினை மேற்கொண்டார். ஆனைமலையின் கானகங்களில் அலைந்து திரிந்து தேவிகுளம் எனும் இடத்தில் தவத்திலாழ்ந்தார். பீடுயர் பீரப்பா தவமியற்றிய இடமாதலின் கேரளாவின் அத்தவத்தலம் பீருமேடு என வழங்கப்படுதலாயிற்று. இறுதிக் காலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தக்கலையில் உறைந்து மறைஞானம் பரப்பி அங்கேயே இறைவனடி சார்ந்தார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் குணங்குடி யெனும் குக்கிராமத்தில் செய்கு நயினர் முஹம்மது — பாத்திமா தம்பதியர்க்கு மகனாக 1787-ல் பிறந்தவர் சுல்த்தான் அப்துல் காதிர் என்ற இயற்பெயர் கொண்ட 'குணங்குடி மஸ்த்தான்

---

4. திருநபி மீது 'பொன்னரியா மாலை' பாடிய மின்னு நூறுத்தீன் புலவர் பரம்பரையில் வந்தவர். மஸ்த்தான் = இறை மயக்கம் கொண்டவர். சாகிபு = தோழர். காயற் பட்டினத்தில் பிறந்ததாக இட்டா கன்னையா நாயுடுவின் திருபாடற்றிரட்டு முன்னுரை கூறுகின்றது.

சாகிபு. இளமையில் வாசனைத் திரவிய வியாபாரத்தில் ஈடுபட்டுவந்தவர் மாமனர் மகளை மணம்புரிய மறுத்து பதினேழாம் வயதிலேயே துறவு பூண்டோடினர். காடு, மலை கடந்து கீழக்கரை ஹலரத் தைக்கா சாகிபு, திரிசிபுரம் ஹலரத் ஷாம் ஆலிம் சாகிபு ஆகியோரிடம் இறைஞான தீட்சைபெற்றுத் தவமியற்றி அறஞானம் பரப்பிவந்தார். இறுதியில் சென்னை ராயபுரத்தில் பாவா லெப்பை என்பவரின் தோட்டத்தில் தங்கி 1834-ல் மரணமடைந்தார்.

IV. *படைப்புக்கள்* : பீரப்பாவின் படைப்புக்கள் குறிப்பிட்ட பெயர்களைப்பெருது பொதுநோக்கில் 'ஞானம்' என்ற சொல்லை அடியாகக்கொண்டு அமைகின்றன. ஞானப்பால், ஞானப்புகழ்ச்சி, ஞானப்பூட்டு, ஞானரகசியம், மெய்ஞ்ஞானச் சர நூல், பிஸ்மில்குறம் முதலியவை பீரப்பாவின் திருப்பாடல்களாகும். இசைஞானத்திலெழுந்த கீர்த்தனைப் பாடல்களும் கையாளப்பட்டுள்ளன. குணங்குடியாரின் பனுவல்கள் யாவும் இறைவன், முன்னிலைகுரு முஹியித்தீன், நபிபெருமான் இவர்களைப் போற்றுமுகத்தான் பெயர்பெற்றுள்ளன. முஹியித்தீன் சதகம், அகத்தீசர் சதகம், மஹமூது நபி துதி, நிராமயக் கண்ணி, பராபரக் கண்ணி, ரஹ்மான் கண்ணி, நந்தீஸ்வரக் கண்ணி, மனோன்மணிக் கண்ணி, ஆனந்தக்களிப்பு முதலியவை குணங்குடியாரின் படையல்களாகும். காலச் சூழ்நிலை கருதி பல்வேறு இசைக் கீர்த்தனைகளையும் கையாண்டு வென்றுள்ளார். குணங்குடியார் படையல்களில் பல கண்ணிப் பாடல்களாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

V. *பொருள் வளம்* : பீரப்பா — குணங்குடியார் பாடல்களில் இறைவழுத்தல், இறையாற்றல், இறைவேட்டல், மறைவிளக்கம், தத்துவம், நடப்பியல் ஆகியவை உள்ளீட்டுப் பொருளாக அமைந்துள்ளன. அவரவர் உளப்பாங்கிற்கும் காலச் சூழ்நிலைக்கும் ஏற்ப இவை அழுத்தமும் நோக்கும் பெற்றுள்ளன. பொதுக்கூறுகளுடன் அவரவர் தனித்துவங்களைச் சுட்டும் சில சிறப்பியல்கள் அமையும் பாங்கினையும் காணலாம்.

(1) *இறைவழுத்தல்* : இறைவனின் திருப்பெயர்களும் திருக்குணங்களும் இறைவழுத்தலில் கருப்பொருளாக இடம் பெறுகின்றன. பீரப்பா இறையன்பு மேலீட்டால் அருள் தளதளக்கும் குரலில் எல்லார்க்கும் பொதுவான இறைவனை ஏற்றிப்பாடக் குணங்குடியார் இறைவனுடன் திருநபியையும் ஞான குருவான் முஹியித்தீனையும் குறிப்பிட்டு வாழ்த்திச் செல்கின்றதைக் காணலாம்.

இறைவனை முதல்வன், பெரியோன், துய்யோன், புண்ணியன், மெய்யன், வள்ளல், உரியோன், அத்தன், நித்தன், சீமான், தனியன், மன்னவன், தென்னவன், முன்னவன், அன்பன் என்றெல்லாம் உயிர்நிலையில் வாழ்த்தும் பீரப்பா, சோதி, நீதி, அருள், அமுது, மதி, தேன், வான், சொல், பொருள், சுவை, போன்ற பொருட்களாகவும்கண்டு ஏத்துகின்றார். பல இடங்களில் இறைவனை மூலப்பொருளாக, ஞானப்பொருளாக, வேதப்பொருளாக அடையாளங் காண்கின்றார்.

"ஆதியோ டாதியாகி யறிவதிற் சொரூப மாகிச்
சோதியாய் மதியுமாய் சொல்லொணுப் பொருளுமாகி"
— (ஞானப்பால்)

என்று இறையியல்பு சாற்றி,

"மன்னவனே வழுவாதவனே
வடிவாம் நல நபிக்கரசே
தென்னவனே தெளிவானவனே
தெளியார் அறியாதவனே
முன்னவனே முதலானவனே
எழு முச் சுடரானவனே" - (ஞானப்புகழ்ச்சி) என

அன்புடன் அழைத்துப் போற்றும் பாங்கு பல இடங்களில் காணக் கிடக்கின்றது. "புகழில் நிறைந்தவனே! புகழும் பல புகழ்ச்சிக் குரியவனே!" என இறைப் புகழ் துதிக்கும் பீரப்பா, "எம்மைத் திருநபியின் உம்மத்தாக்கியதற்குப், பாதங்கள் மேலும் சிரம் கீழுமாய்ப் பத்து நூருயிரமாண்டு ஓதித் தவஞ்செய்தாலும் போதாது" என்று இறையேத்தலுக்கு எல்லையில்லை என்பதை உணர்த்துகின்றார்.

குணங்குடியாரும் பீரப்பாவைப் போல் இறைவனைத் தூயனுக, அன்பனுக, உத்தமனுக, மன்னனுக, நாதனுகக்காண்பதோடு ஆதி, ஒளி, போதம், மணி, பொருள்—இவையாகவும் பாடிச் செல்கின்றார். இறைவன் இவ்வுலகில் எல்லாமாக அமைவதை,

"ஊனுகி யுயிராகி யூனுயிர்க் குயிரான
உண்மையாகி"
"உள்ளாகி வெளியாகி ஒளியாகி இருளாகி
ஊருடன் பேருமாகி"
— (முஹியித்தீன் சதகம்)

போன்ற பகுதிகளில் பாடிச் செல்கின்றார். உணர்ச்சி மேலீட்டால் இறைவனை "ஜெய ஜெயா ஜெய ஜெயா" என்று வாழ்த்தும் பாங்கும் காணப்படுகின்றது.

(2) *இறையாற்றல்:* இறையாற்றல்களை விளக்க வந்த பீரப்பா இறைவனுடன் நெருக்கமுற 'நீயே' என ஒருமையில் அழைத்துக் கூறுகின்ற பாங்கினைச்,

"சற்றுங்கெதி யற்றவர்க்கு முற்ற துணை நீயே"
"உலகிலுயிர்க் கிரணமளித் துதவு துணை நீயே" —
(ஞானப்புகழ்ச்சி)

போன்ற பல பகுதிகளில் காணலாம். இறையாற்றலை அடுக்கிச் செல்லும் முறையில், "எல்லோர் சங்கடங்களும் அறிந்தவன், அழிவு காலம் அணுகாதவன், இரவு பகலாய் என்றும் இயங்கு பவன், மது விரும்பிகளையும் இறைவிரும்பிகளாகச் செய்பவன், வேதியர்கள் யாரும் அறியாதவன்" எனப் பட்டியலிடுகின்றார்.

குணங்குடியாரும் பீரப்பா நோக்கில் இறையாற்றலை எடுத்துக் கூறும் வகையில்,

"முடியடியாய் நின்றநடு
மூல மணிவிளக்கே
அடிமுடியாய் நின்றநடு
வணையே" எனவும்,

"எல்லார்க் கமுதளிக்கு
மியல்புபோற் றேரைகட்கும்
கல்லுள் ளமுதளிக்கும்
கண்ணே"

எனவும் பாடிச் செல்கின்றார். இருவர் பாடல்களிலும் இறைவன் ஓதிப் புகழினும் நிஷ்டைக்கு எட்டாத ஆற்றலினனாகவே சித்திரிக்கப்பட்டுள்ளான்.

(3) *இறைவேட்டல்:* பீரப்பாவும், குணங்குடியாரும் இறை யருள் வேண்டி அவனிடம் அடைக்கலம் புகுகின்றனர். இவர்கள் இறைஞ்சுதலில் ஏக்கமும், இரக்கமும், உருக்கமும் இழையோடு கின்றன. உணர்வு வழிவந்த உயர் அற ஞானிகளாதலின் அகத் தெழுச்சியில் முகிழ்த்த அறிவின் உணர்வின் பரிபக்குவ கலப்புக் கூறுகளாக இவை அமைந்திருக்கின்றன.

கல்லாத, கருதாத, நினையாத, சொல்லாத, துதியாத, தொழாத எல்லாப் பிழைகளையும் பொறுக்க உருக்கமாக முறை யிடும் பீரப்பா, "உந்தனை மிகவும் நம்பியுன் திருமுன் வந்தேன்" என நம்பிக்கை தொனிக்க இறைஞ்சுகின்றார். தன்னைப் பிணை யாகக் கருதிப் பல்வேறிடங்களில் இறைவனிடம் அடைக்கலம் புகு பவர், "படைத்தோனே யானுன் அடைக்கலம் ஆனேன்" என இறைமுன் உறுதி சாட்சியம் நல்கி நிற்கின்றார். "உதவி தா எங்கள் ஒருவனே" என்று உரிமையுடன் மன்றுடுவதோடு, "சோதியே நின்னோடு இரப்பேன்; துணை செய் என் உத்தமனே" என நொந்து, கசிந்து இரந்தும் வேண்டுகின்றார்.

குணங்குடியாரின் முஹியித்தீன் சதகம், அகத்தீசர் சதகம் ஆகியவை அருள்வேண்டி இரக்கும் பாடல்களேயே நிரம்பப்பெற்றுள்ளன. உலக ஆசைகள் விட்டொழிந்து அறிவு நல்கி ஆட்கொள்ளவும், அருண்மடை திறக்கவும் வேண்டி நிற்கின்றார். பீரப்பாவைப்போல் நம்பிக்கை தொனிக்க இறைவனிடம் சரண் புகுந்து அருள் வேண்டி, அழுதிறைஞ்சும் பகுதிகளும் உள. "அருளும் உனைத்தேடியே அழுதேன் சிலகாலம்" என்றிறைஞ்சிய பீரப்பா வழிநின்று, "கடவுளைத் தேடி இரு கண் நீர் ததும்பிக் கரஞ்சென்னி வைத்தழுவேனோ?" என்று பாட ஆரம்பிக்கின்றார் குணங்குடியார். "தஞ்சமது அற்ற அடியேன் மனம் நொந்து தயங்கி உன்னோடு இரப்பேன்" என இரக்கத்துணிந்த பீரப்பா ஒப்பக் குணங்குடியாரும் பல்வேறிடங்களில் தன்னிலை கூறி இரந்து நிற்கின்ற காட்சியைக் காணலாம்.

(4) *திருமறை விளக்கம்:* பீரப்பாவின் பாடல்களில் திருமறை விளக்கம் நேரடியாகப் பல இடங்களில் விளக்கப்பெறுகின்றது. திருக்குர்ஆன் தொடர்கள் அப்படியே கையாளப்பட்டுள்ளன. நான்மறைகளையும் கூறி இறைவனுடன் இறைத்தூதர்கள், வலிமார்கள், இறையதிசயங்கள், மறை விளக்கங்கள் முதலியவற்றைப் போற்றியும் விளக்கியும் செல்கின்றார். ஆதம் நபி, சுலைமான் நபி, யூசுப் நபி, தாவூத் நபி, முகம்மது நபி, ஹஸ்ரத் ஹஸன், உசைன், பாத்திமா நாயகி, இமாம் அலி, முஹியித்தின் அப்துல்காதிர் ஜீலானி முதலியோரின் வாழ்வு சுட்டிச் சொல்லப்படுகின்றது.

"வேத நபி மிஃராஜிலுன்னை
விளங்கத் தெரிசித்தங் கிருந்தபேறும்
நாதன் முஹியித்தீன் திருவுளமும்
நல்ல வலிமார்கள் பெறுங்கீர்த்தியும்"
(ஞானப்புகழ்ச்சி)

போன்ற பல்வேறு பகுதிகளில் இறைத்தூதர், தோழர்-சிறப்பு படம் பிடிக்கப்படுகின்றது. இறுதித் தூதரை நம்புவதின் இன்றியமையாமை, இறை வணக்கம், குர்ஆன் ஓதுதல், மறைவழி நடத்தல், கலிமா, இறுதி நாள் முதலியவை பற்றிய விளக்கங்களும் அமைகின்றன. இறுதி நாளில் மண்ணறையில் இரு மலக்குகள் இறங்கி நாதனையும், நபியையும்பற்றி வினவும் மறைச்செய்தியும் இடம் பெற்றுள்ளது.

குணங்குடியார் பாடல்களில் திருமறைக் கருத்துக்கள் ஆங்காங்கே சுட்டிச் சொல்லப்படுகின்றன. திருநபி, முஹியித்தீன், வலிமார்கள் பற்றிய செய்திகளும் சில இடங்களில் குறிப்பிடப்

படுகின்றன. திருக்குர்ஆன் தொடர்கள் பீரப்பாவைப்போல் கையாளப்படவில்லை. பிற்காலச் சமய இலக்கியத் தாக்கமே இவற்றிற்குக் காரணமாக அமைந்திருக்கலாம்.

(5) *தத்துவம்:* பீரப்பாவின் படையல்களில் ஆழமான எண் முறைத் தத்துவம், துறவுநிலை, பிறப்பு, நடப்பியல் நிலை போன்றவை விளக்கம் பெறுகின்றன.

> "இல்லல்லா நாலிலொன்றை
> இருத்தியே யெட்டின் மீதே
> சொல்லெல்லா மிரண்டுங் கூட்டி
> சுருதியோர் வழியினின்று" —(ஞானப்பால்)

போன்று பல்வேறிடங்களில் ஆழ்ந்த எண்முறை இறையியல் தத்துவ விளக்கங்களை அமைத்துச் செல்கின்றார். "கெற்பமதில் அற்ப ஜல மிற்றெழுகு நீரைக் கீர்த்தியொடு கீர்த்துவதாக்கினது" என்று பல பகுதிகளில் பிறப்பின் வளர்ச்சித் தத்துவத்தைக் குறிப்பிடுகின்றார். உடம்பின் நிலையாமையைக் கருத்திற்கொண்டு, "கள்ள நினைவுதருமிந்தக் காயம்" "நிலையா உடம்பை இழந்தே உயிர்செல்லும் நேரம்" என்று சில இடங்களில் பாடிச் செல்கின்ற பாங்கும் அமைகின்றது. துறவு நிலைத் தத்துவத்தைக் கூறவந்த பீரப்பா, சரியை, கிரியை, யோகம், ஞானம், பதி, பசு, பாசம் போன்ற துறவுத்துறைகள், பக்தி விளக்கங்கள் பற்றிய தத்துவத்தையும் சில பாடல்களில் எடுத்துக் காட்டியுள்ளார். ஷரீஅத், தரீகத், ஹகீகத், மஃரிபத் முதலிய சூபித்வ நிலைத் தொடர்புகளையும் பீரப்பாவின் பாடல்கள் சுட்டிச் செல்கின்றன. நடப்பியல் உண்மையைக் கூறவந்த பீரப்பா, இறைவனை வணங்காத பாவிகளை, இறுமாப்புடன் திரியும் மூடர்களை, பெண்ணாசை கொண்ட பித்தர்களை, பேராசை பிடித்த பாவிகளைப் படம் பிடித்துச் செல்கின்ற பாங்கு சிறந்தோங்குகின்றது.

எண்முறைத் தத்துவமும் பிறவித்தத்துவமும் குணங்குடியார் பாடல்களில் விளக்கப் பெறவில்லை. "நித்திரைதனிற் செத்த பொய்யான மெய்யுடல்", "நிலையாதகாயம்", "பீற்றுருத்தி", "நாசச் சரீரம்", "நீர்க்குமிழியொத்த காயம்" என்று அழுத்தமாக உடம்பின் நிலையாமையை அறிவுறுத்துகின்றார். "இன்றுள்ளோன் நாளைக்கிருப்பது பொய்", "அலையுலகும் கானல்நீர்" என்று வாழ்வின் நிலையாமையைப் பற்றியும் வரையறுத்துக் கூறுகின்றார். பீரப்பா வழிநின்று துறவுநிலைத் தத்துவத்தை விளக்கவந்த குணங்குடியார் சரியை, கிரியை, யோகம், ஞானம்; பதி, பசு, பாசம்; தற்பரம், சிற்பரம், பராபரம்; ஆன்மம், கன்மம், மாயை; சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம் என்று துறவு

நிலைகளை முழுமையாகச் சித்திரித்துள்ளார். அகத்தீசர் சதகம் துறவு நிலைகளை இலக்கண வழிநின்று விளக்கும் பாங்கில் அமைகின்றது. ஆகமகங்கள், நாடிகள், தாதுக்கள், கலைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. பொய், கொலை, களவு, குடி, காமம், குரோதம் பற்றிய நடப்பியல் தத்துவ விளக்கமும் சில இடங்களில் அமைந்துள்ளன. "மாருத புண்ணுன அல்குலாம் படுகுழி" "மங்கைக் கொங்கை மண்கட்டி" என்று பெண்ணாசைத் தீமை பற்றியும் எச்சரிக்கின்றூர்.

VI. *அணுகல்நெறி:* பீரப்பாவும் குணங்குடியாரும் பாச நெறி, மாணவநெறி இவற்றின் மூலம் இறைவனை அணுகுகின்றனர். தம்மைச் சேயாகவும், கன்ருகவுங் கொண்டு இறைவனைத் தாயாக, தந்தையாக அணுகும் நெறியே மிகுந்துள்ளது. பீரப்பா, "தாயென்றும் வாவென்றும் தவருமல் நல்லுதவி தருவாய்", "அன்னையிலும் அன்பாய் உவந்த கோவே" என்று இறைவன் முன் அருள்வேண்டி நிற்கின்றூர். "மாதாவும் பிதாவும் நீ", "எனைப்பெற்ற தந்தையாய் வந்தகுரு", "தாய்க்கை குழந்தையென அருள்புரிய" எனப் பாசநெறியில் நெருங்குகிருர் குணங்குடியார். பீரப்பா, "ஆவென்றும் தாயென்றும்" அணுக அவ்வழியிலேயே குணங்குடியாரும் "தாய்தாயே என்றே, கன்றினுக்கே இரங்கும் காலியென" அணுகும் பாங்கு உயர்ந்தமைகின்றது.

மாணவ நெறியில் பீரப்பாவும், குணங்குடியாரும் இறைவனைச் சற்குருவாய் கொண்டு அறிவு நல்கியருள சிரம் பணிந்து நிற்கும் காட்சி அமைகின்றது. பீரப்பா பாடல்களில் இறைவனை ஞான முதல்வனுய்க் கொள்ளும் பாங்கிலேயே படையல்கள் யாவும் 'ஞானம்' எனும் சொல்லினை அடியாகக் கொண்டு பெயர் பெற்றுள்ளன. இறைவனை சொல்லாக, பொருளாக, சுவையாகக் காணும்போதும், கருப்பொருளாக, மூலமந்திரமாக அறியும்போதும் மாணவ நெறியே ஒழுகப்படுகின்றது. ஞானப்புகழ்ச்சியில், "நீயெனக்குப் போதந்தருவாயே", "பாலன் தலைமேல் நின்று பாடந்தருவாயே" என்று அறிவுக்காக வேண்டும்போதும், பணிவுடன், "எவர்க்கும் முன்னிருக்கும் ஒரெழுத்தறியும் நீயே" என்று உயர்த்தும்போதும் மாணவனுகவே காட்சிதருகின்றூர் குணங்குடியார் இறைவனைச் சற்குருவாகவும், முஹியித்தீனை ஞான குருவாகவும் கொண்டொழுகுகின்ற நெறி எல்லாப் பாடல்களிலும் அமைகின்றது. ஞான சூரியன், அறிவுப்பெருக்கு, ஞானேதயம், நந்த குரு, மௌன குரு, ஞான குரு, அருட்தரும் குருவாகி, மெய்ஞ்ஞானத்தான், கல்விக்களஞ்சியம் போன்ற மாணவ நெறித்

தொடர்கள் கையாளப்படுகின்றன. "குருபதஞ் சிரத்தின் மேற் கொள்வாம்", "கற்பவரைத் தேடியலையாதபடி கற்பமுறை கைக் கொடுத்தருள்புரிய"—என்று குணங்குடியார் மாணவ நெறியில் அணுகும் காட்சி அமைகின்றது.

VII. *சுய ஆய்வு :* உலக நெருப்பில் வெந்து வென்ற வைரம் பாய்ந்த உள்ளங்களை உடைய உயர் மனிதப் புனிதர்கள் பீரப்பாவும், குணங்குடியாரும். ஆதலின் இருவரும் இறைமுன் அகவாராய்ச்சியில் மூழ்கித் தன்னிலையைப் பணிவுடன் எடுத்துரைக்கின்றனர். இந்தத் தன்னாய்வில் அனுபவம் தழும்பேறிய அவர்கள் வாழ்வின் சுவடுகள் பணிவுடன் சித்திரிக்கப் படுகின்றன. முந்தைய வாழ்வில் இருந்த நிலையை நினைந்து,

"வன் பிழைகள் செய்தடியேன்
வந்தேன் மன்னன் றிருமுன்
என் பிழையை நீ பொறுப்பாயே" (ஞானப்புகழ்ச்சி)

"முன்னுமெனது தீவினையால்
முதல்வா முதல்வா வென்று நித்தம்
உன்னும் பொழுதெல்லா முறையிட்டு
ஓயாதபடியே அழுத சத்தம்" (ஞானப்புகழ்ச்சி)

என்று இறைமுன் ஆட்கொண்டருள வேண்டி நிற்கும் காட்சிகள் பீரப்பா பாடல்களில் மலிந்துள்ளன. துறவுக்கு முற்பட்ட உலகியல் வாழ்வைத் தீவினை, வன்பிழை, நஞ்சு—எனக் கூறிக் குறையிரந்து பணியும் பாங்கு உருக்கமாக அமைகின்றது. வீணர், ஈனர், பொய்யர், குபிர் அணுகாமல் பற்றற்ற நல்வாழ்வைத் தந்தருளப் பீரப்பா சிரம்தாழ்த்தி வேண்டுகின்றார். இறைவன் முன் எவரும் துச்சமெனும் கருத்திற்கிணங்கத் தன்னைப் பையன், எளியேன், சிறியேன், பெரும்பாவி, அனாதை, ஈனன், நாய் — என்றெல்லாம் தாழ்த்திக் கூறுகின்றார்.

"பையன் எளியேன் உரைத்த பால்"
"பைதல் இறையைப் புகலக் கேண்மோ"
"நாய் போலொதுங்கி உன்வாயில் வந்தேன்"
"பாவிக்கெனப் பலனும் பான்மையும் உண்டோ"
"ஈனன்யான் ஒன்றைக் காண்பனோ"

என்று அடுக்கடுக்காக இறைவன்முன் பணிந்திரங்கி, கழிவிரக்கம் சுரக்க இறைஞ்சும் முறைமை உயர்ந்தோங்குகின்றது.

குணங்குடியார் தன்னாய்வில் மூழ்கும்போது முந்தைய நிலை களை இறைவனிடம் ஒளிவுமறைவின்றி வெளிச்சமாக்குகின்றார். முஹியித்தீன் சதகம், அகத்தீசர் சதகம் போன்ற படையல்களில்

தன்னிலையுரைத்துக் குறையிரக்கும் பகுதிகள் மிகுந்து காணப்படு கின்றன. பொல்லார் தொடர்பு, விழிமாயை, பாழாசை, காசாசை, பெண்ணாசை, சாதித் தொடர்பு — இவற்றால் கெட்டலைந்த நாட்களை நினைவுகூர்கின்றார். பன்னாட்களாக இறையருள் வேண்டாது நின்றதால் தம்மை, மாபாவி, தீபாவி, பாழ் மனத்தன், கொலைபாவி, கொடிய வம்பன், மூடன், மடையன், துட்டன், ஏழை, கன்னெஞ்சன் — என்றெல்லாம் இகழ்கிறார்.

"தீபாவி தீபாவி தீபாவி தீபாவி
திவ்விய குணமற்ற பாவி"

"நாயினுங் கடைகெட்ட நாயினுங் கடைகெட்ட
நாய்போ லலைந்த மூவனே"
— (முஹியித்தீன் சதகம்)

என்று அழுத்தமாகவும் உருக்கமாகவும் இறைமுன் தன்னைப் பழித்துரைக்கும் பாங்கு சிறந்தமைகின்றது.

VIII. *பாநலன் :* பீரப்பா ஆசிரியம், விருத்தம், வெண்பா போன்றவற்றின் வகைகளைப் பலவாறாகக் கலந்து கையாண்டுள்ளார். குணங்குடியார் ஆசிரியம், விருத்தம், வெண்பா முதலிய வற்றின் சிலவகைகளைக் கையாண்டுள்ளார். பீரப்பா, குணங்குடி யாரின் பாடல்களில் நடைநயம் ஒலி, சந்தம், யாப்புபெற்றுச் சிறந்தமைகின்றது. தக்க இடங்களில் எதுகை, மோனை, இயைபு ஒன்றிச் சிறக்கின்றது.

"வழியான பிரிவஞ்சு வடிவஞ்சு
வகையஞ்சு வாயுவானதில்
தெளிவான சுற்றஞ்சு சுழியஞ்சு
தேயு வானதில்" — (ஞானப்பூட்டு)

போன்று பீரப்பாவின் பெரும்பாலான பாடல்களில் எதுகை அமைந்தும், பல இடங்களில்,

"இருட்டு மிருட்டும் இருட்டினிற் கூடி இருட்டதனில்
இருட்டுபிறந்த வகையேது சொல்லவிருட்டது"
— (ஞானப்பால்)

போன்று மோனை அமைந்தும் சிறக்கின்றது. பீரப்பாவின் பாடல் களில் வடமொழி குறைந்தும் அரபுச் சொற்கள் மிகுந்தும் காணப் படுகின்றன. வில், விசை, சித்தி, பத்தி, முத்தி, மருவி, வெருவி உருகி, பைதல், குடிலி, பயில், துயில், பயல், துரவு, கொழுந்து போன்ற சொற்கள் ஒலிநயத்துடன் அமைந்து உணர்ச்சிநலன் அளிக்கின்றன. காஃப், லாம், ஹபீப், ஹக், அஹது, தறஜத்,

குபிர், கல்பு, சுஜூத், ஷஹாதத், தௌஹீது, ஷபாஅத் - போன்ற பெரும்பான்மையான, பொருள் கருக்கொண்ட அரபிச் சொற்கள் நடைநயஞ் சிறக்கக் கையாளப்பட்டுள்ளன.

குணங்குடியார் பாடல்களில் பெரும்பாலான இடங்களில் மோனை நயஞ் சிறந்தமைவதைக் காணலாம்.

"நல்லவர்க ணல்லவர்க ணல்லவர்க ளென்றைக்கு
நானும் நல்லவனுவனே"
"நோக்கு நோக் கொண்ணுத
நோக்கு நோக்கா நின்ற
நோக்கெனது முன்னிற்கவே" — (முஹியித்தீன்சதகம்)

போன்ற பகுதிகளிலெல்லாம் மோனைநயம் ஒலிநயத்துடன் இணைந்து உணர்ச்சியழுத்தம் தருவதைக் காணலாம். வடமொழிச் சொற்கள் மிகுந்து அரபிச் சொற்கள் குறைந்து காணப்படுகின்றன. மருமலர், கொழுந்தன், கங்குல், கவிதல், மடலவிழ் மலர்ப்பாதம் — போன்ற செவ்விய சொல்லாட்சிகள் பலவிடங்களில் கையாளப்படுகின்றன.

IX. *உவமைநலன்* : பீரப்பா உவமைகளை அதிகம் கையாளாமலேயே கருத்தை வலியுறுத்திச் செல்கின்ற பாங்கு அக்கால இலக்கிய முறையாக அமைந்திருந்தது போலும். எனினும் சில இடங்களில் கையாண்டுள்ள உவமைகள் மிக்க பொருத்தமாகப் பொருள் நயஞ் சிறக்க அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

"வானரமானது போலுனைக் கெஞ்சி
வருந்தி நின்றேடிரப்பேன்"

"ஏகமா மதிபோல் நின்றே
எழுந்திடும் வாசிதன்னை"

"குருடன் வனத்தில் கோலிழந்த
குறிபோல் முறையிட்டு"

போன்ற உவமைப் பகுதிகள் பீரப்பாவின் உவமை நலப்பாங்கினைத் தெளிவாக்குகின்றன.

குணங்குடியார் பாடல்களில் எண்ணற்ற உவமைகள் கையாளப்பட்டுள்ளன. தன்னைக், கடலில் கவிழ்ந்த கப்பலாக, உலையிலிட்ட மெழுகாக, கதறும் காகமாக, அலைவாய்த் துரும்பாக,

சேற்றில் நாட்டிய கம்பாக உவமித்துக் கூறும் இடங்கள் மிகுந்துள்ளன. கடல்மடை திறந்தென, கன்னலின் இன்னமுதமென, தாய்க்கை குழந்தையென அருண்மடை திறக்க வேண்டுகின்றார். பல்வேறிடங்களில் வழக்கில் அமையும் பழமொழிகளும் கையாளப் படுகின்றன. இருவர் பாடல்களிலும் பொருள் பொதிந்த உருவகங்கள் கையாளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

X. *தனித்துவம்* : பீரப்பாவும் குணங்குடியாரும் வெவ் வேறு காலத்தவராதலின் அவர்கள் ஆளுமையும் பின்னணியும் வேறு பட்டமைகின்றன. காலத்தாக்கம், சூழ்நிலைக்கேற்பவும் உளப் பாங்கிற்கேற்பவும் அவரவர்களிடத்தில் பல்வேறு சிறப்பியல்கள் அறியக்கிடக்கின்றன. பீரப்பாவின் பாடல்கள் பல்வகை யாப்பில் அமைவதோடு செறிவும் ஆழமும் தெளிவும் கொண்டு இலங்கு கின்றன. வடமொழிச் சொற்கள் மிகவும் குறைவாகக் கையாளப் படுவதோடு செவ்விய தமிழ்ச்சொல்லாட்சிகள் நிறுவப்பட்டுள்ளன. எண்ணற்ற அரபிமொழிச்சொற்கள் தக்க இடங்களில் அமைவதால் பொருள் சிதைவு ஏற்படாமல் பாதுகாக்கப்படுகின்றது. இஸ்லாமிய இலக்கிய மணங்கமழும் பாங்கில் திருக்குர்ஆன் விளக்கங்களும், தொடர்களும் பல்வேறிடங்களில் சிறந்தமைகின்றன. இறைவனை அணுகும் போது மிகுந்த அன்பு பூண்டொழுகி ஒருமையில் அழைத்துப் போற்றுவதால் உரிமையும் உறவும் அதிகரித்துக் காணப்படுகின்றது. இறைவனை ஏற்றிப் போற்றுமுகத்தான், திரு நபியின் உம்மத் தாக்கியதற்குப்பாதங்கள் மேலும் சிரம் கீழுமாகப் பத்து நூறுயிரம் ஆண்டுகள் ஓதித் தவஞ்செய்தாலும் போதாது என்றுருகும்இடம் சிகரமாகச் சிறந்தமைவது குறிப்பிடத்தக்கது. உலகியல் வாழ்வை நடப்பியல் நோக்கில் விசாரணை செய்யும் பீரப்பா இறையருள் வேண்ட வழிகாட்டி, ஏக இறைவனையும் தூதரையும் நம்புவதால் ஏற்படும் அருட்பயன்களையும் சித்திரிக்கும் பாங்கில் தனக்கே உரித்தான தகைமையில் சிறந்தோங்குவதைக் காண முடிகின்றது. பீரப்பாவால் கையாளப்பட்டுள்ள எண்முறை இறைத்தத்துவம் மிகுந்த பொருளாழம் பெற்றமைவதோடு இஸ் லாமிய இறையியல் இலக்கியத்தில் ஈடிணையற்ற வகையிலும் அமைந்துள்ளது. கெற்பமதில் அற்பமனிதன் உருவாகும் பிறவித் தத்துவத்தைக் கூறுமிடங்களிலும் பீரப்பாவின் தனித்துவம் வெளி யாகின்றது.

குணங்குடியாரின் பாடல்கள் பிற்காலத்தில் எழுந்தவையாத லின் அரபிச்சொற்கள் அதிகமாகக் கையாளப்படவில்லை. பாவகை யில் கண்ணிகள் ஏராளம் குணங்குடியார் படையல்களாயின. இசைக்கீர்த்தனைகள் பலவும் மிகுந்த இலக்கணச் செறிவோடு

எழுந்துள்ளன. குணங்குடியார் சைவ சித்தாந்த நோக்கில் இறைவனைக் காதலியாகக் கொண்டு அகப்பொருள் நோக்கில் பாடிப் புதுமையை ஏற்படுத்தியுள்ளார். துறவு நிலைகளை அதன் இலக்கண வரம்பு முறைப்படி விளக்கிச்செல்லும் பாங்கு குறிப்பிடத் தக்கது. இறைவனுடன் இறைத்தூதர் நபி பெருமானையும், ஆத்மீக குரு முஹியித்தீனையும் குறிப்பிட்டுப் பல பாடல்கள், படையல்கள் படைத்தளித்துள்ளது இன்றியமையாத சிறப்பியல்புகளில் ஒன்றாகும். உலகம், உடல், வாழ்வு நிலையாமைத் தத்துவத்தைத் தகுந்த சொல்லாட்சிகளால் விளக்கிச்செல்வது சிறந்தமைகின்றது. எண்ணற்ற உவமைகளையும், வழக்கில் வழங்கப்படுகின்ற பழமொழிகளையும் தக்க இடங்களில் கையாளுவது குணங்குடியாருக்குக் கைவந்த கலையாக அமைகின்றது. குணங்குடியாரின் பாடல்களில் பல்வேறு சைவ சித்தாந்த சொல்லாட்சிகள் குறிப்புப் பொருளில் கையாளப்பட்டுள்ளன. உண்மைப்பொருள் நோக்கில் இவையாவும் இஸ்லாமிய இலக்கிய நெறிக்குட்பட்டே அமைகின்றன.

XI. *முடிவுரை :* “உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே” என்று கூறும் தொல்காப்பியம். அந்த உயர்ந்தோர்களின் வாழ்வு, வாக்கு இவையே உலக மக்களுக்கு அறிவுரையாகின்றன. கடலை விட, வானத்தைவிட அகன்ற மனித மனச் சீரழிவுக்கு மருந்தாக, “யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்” எனத் தம் படையல்களை வாரி வழங்குகின்றனர் மனிதப் புனிதர்கள். நேரிய சீரிய நோக்கில் ஆன்மீக அறிஞர்களின் ஆத்மாவின் ராகங்களாக எழுந்த இறையியல் இலக்கியங்களுக்கு ஆன்ம சக்தியை எழுப்புவதற்கும், இதய சுத்தியை நல்குவதற்குமுரிய ஆற்றல் உண்டு. கற்பவர் நெஞ்சில் நிறைந்து மனமேம்பாட்டை வளர்ப்பதோடு மனத்துயரோடு உலகியல் வாழ்வில் போராடவும் ஆற்றல் நல்கும் அத்தகைய திருவருட் பனுவல்களே பீரப்பா — குணங்குடியாரின் படையல்கள், கால வெள்ளத்தின் கன ஓட்டத்தில் ஆண்டாண்டு காலமாக எதிர் நீச்சல் போட்டு நிலைபெற்று நிற்கும் இப்படையல்களின் மாண்பு போற்றற்குரியது. துளசியின் வேர், தண்டு, கிளை, இலை, தளிர், பூ எல்லாம் மணப்பது போன்று பொருள், வடிவம், அணி இவை யாவற்றிலும் சிறந்தோங்கி நிற்பவை பீரப்பா — குணங்குடியாரின் பாடல்கள் என்று கூறினல் மிகையாகாது.

———

## உடனுதவிய நூற்பட்டியல்


1. ஞானப்புகழ்ச்சி :
பீர்முஹம்மது சாகிபு, ஹாஜி ஷாஹுல் ஹமீது அன் சன்ஸ், சென்னை. 1966

2. திருப்பாடற்றிரட்டு :
மஸ்தான் சாகிபு, ஹாஜி ஷாஹுல் ஹமீது அன் சன்ஸ், சென்னை. 1972

3. ஞானச் செல்வர் குணங்குடியார் :
ம. மு. உவைஸ், யுனிவர்ஸல் பப்ளிஷர்ஸ், சென்னை. 1965

4. கவிதையனுபவம் : ந. சுப்பு ரெட்டியார், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை. 1961

5. சாஹிப் பைத் :
பதிப்பாசிரியர் : N. S. முஹம்மது, தக்கலை. 1971

6. இரண்டாவது ஆண்டுமலர் :
தமிழ்வட்டம், சென்னை. 1969


---

என்னுடைய வரலாற்றைக் காதால் கேட்கச் சிரமப்பட வேண்டியதில்லை. இங்கு மௌனத்தின் மூலமே உரையாடல். நாவால் மொழியப்படாத சாடைகளாம் சொற்களே எனது மொழி. — இக்பால் (ரஹ்)

ஒரு துளி நீர், கடல் முழுவதிலும் எவ்வாறு வியாபிக்க முடியும் ? இறைவனது ஆற்றலை யோசனை யாற்றலால் எட்டுவது இயலாத செயல். —ஸாயிப் (ரஹ்

# மௌலானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்)

*எம். ஹபீப் முகம்மது, பி. எஸ். சி., பி. டி.,*
சென்னை.

ஸுபித்துவத்தில் முதன்மைச் சிறப்பினைப் பெற்றுத் திகழ்பவர் 'தீனெனும் பயிர்க்கோர் செழுமழை' யெனலாய்த் தோன்றிய செம்மல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே. தனித்திருந்து தானவன் இறையைத் தியானம் செய்து ஆன்மீகப் பயிற்சிகளை ஆழிய முறையில் பெற்றவர்களே அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். அண்ணலார் காலம் முதற்கொண்டு எண்ணிலா ஸுபி ஞானிகள் தோன்றியுள்ளனர். அவர்களில் ஜுனைதுல் பகுதாதி (ரலி), அபூ யஸீதுல் பிஸ்தாமி (ரலி), இமாம் கஸ்ஸாலி (ரலி), குதுபுல் அக்தாப் கவ்துல் அஃலம் செய்யிதுனா முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி), செய்யிதுனா முஹ்யித்தீன் இப்னு அரபி (ரலி), சுல்தானுல் ஆரிபீன் செய்யிது அஹ்மதுல் கபீருர் ரிபாயி (ரலி), ஹிந்துல் வலி காஜா முயீனுத் தீனுல் சிஷ்தீ (ரலி), செய்யிதுனா ஸிந்தா ஷாஹெ மதாருல் ஹலபீ (ரலி), செய்யிதுனா அபுல் ஹசன் அலிய்யுஷ்ஷாதுலீ (ரலி), ஷம்ஸுத் தபுரேஸ் (ரலி), ஹஸரத் பாதுஷா ஷாகுல்ஹமீதுன் நாஹுரி (ரலி) முதலியோர் குறிக்கத் தகுந்த பெரியோர்களாவர். இறைவனின் மெய்யடியார்களாம் இப்பெருமக்கள் ஸுபிமார்க்கத் தால் புகழ்பெற்றோர். பக்தியும் யோக சித்தியும் கூட்டும் எளிய மார்க்க நடைமுறைகளால் இஸ்லாம் பெருஞ்சிறப்போடு விளங்கு கின்றது. இஸ்லாமிய நெறியின் எளிய கொள்கைகளை நிறை வாகப் பின் பற்றும்போது அனைத்துவித மானிடக் குறிக்கோள் களும் மலர்ந்துவிடுகின்றன. மனிதனுக்கு வழங்கப்பட்டுள்ள

மன ஆற்றலின் நோக்கம் பேரருளாளன் இறைவனைப் பெரிதும் அறிந்து அவனது அன்பு மார்க்கத்தில் அடியெடுத்து வைப்பதுதான்.

இவ்வுண்மைகளை உணர்த்தி வாழ்ந்த ஸூபி ஞானிகள் அருமையான நூல்கள் பல யாத்துள்ளனர். அவை எல்லா வாழ்க்கைத் தரத்தினர்க்கும் வழிகோலுவன. அத்தகைய நூல்களில் மிகச் சிறந்து விளங்குவது, மவுலானா ஜலாலுத்தீன் ரூமி (ரஹ்) அவர்களால் பாரசீக மொழியில் இயற்றப்பட்ட 'மஸ்னவீ ஷரீப்' என்னும் நூலாகும். இஸ்லாம் இவ்வுலகில் இருக்கும் காலமெல்லாம் அந்நூல் நிலைத்திருக்கும் தகுதி சான்றது. பாரசீக மொழியில் அந்நூலைப்போல இன்றுவரை வேறெந்த நூலும் சிறப்படையவில்லை. புனிதத் திருக்குர்ஆனின் மணிமொழிகளும், பூமான் நபிகள் கோமானின் பொன்மொழிகளும் மாமேதைகளின் மகத்தான கருத்துக்களும் செறிந்திலங்கும் மஸ்னவீ ஷரீபுக்கு நிகராக—திருமறைக்கும் நபிமொழிக்கும் அடுத்தபடியாக—இவ்வுலகில் வேறெந்த நூலும் வெளிவரவில்லை என்பது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

''மஸ்னவீய்யெ மௌலவீய்யெ மஃனவி
ஹஸ்த் குர்ஆன் தர் ஸபானெ பஹ்லவீ''

[ஞானக்கடல் மௌலானா அவர்களால் இயற்றப்பட்ட 'மஸ்னவீ ஷரீபு' பாரசீக மொழியில் பெயர்க்கப்பட்ட ஒரு குர்ஆனாகும்]

எனப் பெரியாரொருவர் குறிப்பிட்டுள்ளார். மஸ்னவீ ஷரீபு ஆறு பாகங்களாலானது; 26660 செய்யுட்களால் செறிவது.

சீரிய மஸ்னவீ ஷரீபின் ஆசிரியர் மௌலானா அவர்கள் பெயர் 'முஹம்மது' என்பது. 'ஜலாலுத்தீன் ரூமி' (ரஹ்) என்பது அவர்களின் காரணப் பெயர். அவர்கள் இஸ்லாத்தின் முதல் ஆட்சியாளர் ஹலரத் அபுபக்கர் சித்தீக் (ரலி) அவர்களின் வழித்தோன்றல். ஹிஜ்ரி 604-ல் 'பல்க்' நகரில் பிறந்தவர்கள். அவர்கள் தந்தையார் ஷெய்கு பஹாவுத்தீன் முஹம்மது (ரஹ்), பாட்டனார் ஹுஸைனுல் பல்கீ (ரஹ்) என்பார். அவ்விருவருமே சமகாலச் சான்றோரால் நன்கு மதிக்கப்பட்ட ஸூபிகள். ஆட்சித்துறையை அலங்கரித்த அரசர்களாலும் மாட்சியோடு அவர்கள் மதிக்கப்பட்டார்கள். பாட்டனார் ஹுசைனுல் பல்கீ (ரஹ்) அவர்கள் குராஸான் நாட்டை ஆண்டு வந்த முஹம்மது கார் ஜம் ஷா (ரஹ்)வின் மகளை மணம்புரிந்தவர். இப்பெருமக்களின் செல்வ வாரிசாக மவ்லானா ரூமியின் தந்தையார் ஷெய்கு பகாவுத்தீன் முஹம்மது (ரஹ்) அவர்கள் பிறந்தார்கள்.

மௌலானா அவர்களின் சிற்றிளமைப் பருவத்தில் அவர்களின் தந்தையாருக்கு அரசினரால் சோதனையொன்று ஏற்பட்டது. அதனால் தந்தையார் சொந்த ஊரில் இருக்க மனமில்லாது மைந்தரோடு நைஷாபூர், பக்தாத், ஹிஜாஸ், ஷாம் முதலிய ஊர்கட்குப் பயணம்சென்று இறுதியில் 'கூதிய்யா' என்னும் இடத்தில் வந்து குடியேறினார்கள். அவ்வூரில்தான் மௌலானா வின் தந்தையார் ஹிஜ்ரி 628-ல் காலமானார்கள்.

மௌலானாவின் தொடக்கக் கல்வியைத் தந்தையாரும், தந்தையார் முரீதுகளில் முதன்மையான செய்யித் புர்ஹானுத்தீன் (ரஹ்) அவர்களும் வழங்கினர். மௌலானா தமது 25-வது ஆண்டில் 'ஷாம்' நாட்டின் கல்விக் கூடமென்றில் இணைந்து உயர்தரக் கல்வி கற்றுப் பல்துறை அறிஞராகப் பரிணமித் தார்கள். கல்வி கற்பித்தலும், உபதேசம் புரிதலும், மார்க்கத் தீர்ப்பு வழங்குதலும் மௌலானாவின் நற்பணிகளாகத் திகழ்ந்தன. அப்போதெல்லாம் அவர்களுக்கு ஆத்ம ஞானத் தொடர்பான செய்திகளில் ஆர்வம் குறைவாகவே இருந்தது.

'தபுரேஸ்' என்ற ஊரில் வாழ்ந்து வந்த ஷம்சுத்தீன் முகம்மது (ரஹ்) என்பார் 'கூதிய்யா' வந்தபோது மௌலானா, அம் மகானைச் சந்தித்தார். அச்சந்திப்பு மௌலானாவின் வரலாற்றில் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்தியது. இருவர் நடுவண் நேசமும் இடையீடின்றி இலங்கியது. அப்பெரியாரின் தொடர்பை விட்டு விடாமல் உணவை மறந்து, உறக்கத்தைத் துறந்து, அப்பெரி யாரின் சமுகத்தில் உறைந்து ஆத்மப் பயிற்சிகளை மௌலானா அடுத்தடுத்து மேற்கொண்டார்கள். அதனால் மௌலானா உபதே சம் புரிவதையும் விடவேண்டியதாயிற்று. ஈராண்டுகள் இவ்வாறு மௌலானாவின் உபதேசத்தை இழந்த பொதுமக்கள் ஆத்திர மடைந்தனர். அவர்கள் 'ஷம்ஸுத் தபுரேஸ்' (ரஹ்) அவர் களைத் துரத்திவிடக்கூட முயன்றனர். இதையறியலுற்ற ஷம்ஸுத் தபுரேஸ் (ரஹ்) ஒருநாள் கூதிய்யாவை விட்டு மறைந்துவிட்டனர். பிரிவாற்றுமையால் பெருந்துயருற்ற மௌலானா அவர்கள் மக்கள் தொடர்பை மறுத்து, ஒதுங்கியிருந்து சோகப் பாடல்களைத் தாகத்தோடு பாடினார்கள். இதனைச் செவி யேற்ற மக்கள் சித்தம் கலங்கி, வெட்கமும் வேதனையும் அடைந்து மௌலானா அவர்களிடம் வந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டனர். மௌலானா (ரஹ்) அனைத்து நலவாழ்வையும் மறுத்து பயபக்தியோடு எளிமையான வாழ்க்கையில் ஈடுபட முற்பட்டனர். மௌலானா அவர்கள்மீது மதிப்புகொண்ட மன்னர்களும் உயர்பதவியினரும் மௌலானா அவர்களுக்கு

அடிக்கடி வெகுமதிகளை அனுப்பிக் கொண்டிருப்பர். அவைகளை யெல்லாம் மௌலானா பிறருக்குப் பகிர்ந்து கொடுத்து விடுவார்கள். நள்ளிரவெல்லாம் விழித்திருந்த மௌலானா அவர்கள் வெகுநேரம் வரை தியானத்தில் ஈடுபட்டு இருப்பார்கள். இறைவணக்கத்தின் போது மெய்மறந்திருப்பர். அவர்கள் வீதிகளில் வெளிப்படும் போது, சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைத்த சிறுவர்களும் பெரியோர் களும் அவர்களின் கரங்களை முத்தமிட்டுக் கண்ணியம் செலுத் துவர். மௌலானா அவர்கள் அவ்வாறு எதிர்ப்பட்டோரை அன்புடன் தழுவி முத்தமிடுவார்கள். பரவசமான நிலைபெறும் பண்பாளர் மௌலானா அடிக்கடி ஆடியும் பாடியும் அகங்களித் தார்கள். இசையைக் கேட்கும்போதெல்லாம் இதயம் பூரித்து, பக்திப் பேராற்றில் மிதந்த வண்ணம் நெடுநேரம் உணர் வற்றிருந்துவிடுவார்கள்.

'ஷெய்கு ஸலாஹுத்தீன்' (ரஹ்) என்பார், ஒருபோது தமது கடையில் வெள்ளித் தகடு ஒன்றைச் சுத்தியலால் அடித்துக் கொண்டிருந்தார்கள். மௌலானா அவர்கள் அவ் வொலியைக் கேட்டதும் பரவச நிலையடைந்துவிட்டனர். இந் நிலையைக் கடையிலிருந்தே கவனித்துக் கொண்டிருந்த அப் பெரியார் மௌலானாவின்பால் ஈர்க்கப்பட்டார்கள். அந்நிகழ்ச்சி முதலே அப்பெரியார் மௌலானாவின்மேல் ஆழிய ஆர்வங் கொண்டு தாங்கள் வாழ்ந்த காலம் முழுவதும் மௌலானா அவர் களோடு இணைபிரியாத நேசங்கொண்டு இருந்தார்கள். அத் தொடர்பால் மௌலானா அவர்கள் 'ஷம்ஸுத் தபுரேஸ்' (ரஹ்) அவர்களைப் பிரிந்துவாழ்ந்த துயரத்தை ஓரளவுக்குத் தணித்துக் கொண்டார்கள்.

மௌலானா அவர்கள் தமது முரீதுகளில் (தீட்சை பெற்றோர்) மிகவும் தெளிவும் திடமும் வாய்ந்த 'ஹுஸாமுத்தீன்' (ரஹ்) அவர்களிடம் மிக நேசங்கொண்டு மெய்ஞ்ஞானத் தொடர்பான நுண்ணிய கருத்துக்களை நவின்று கொண்டிருந்தனர். அந்நேசம் மௌலானாவின் பிந்திய காலத்தில் மனதுக்குப் பெரிதும் ஆறுதலைத் தந்தது. அந்நாட்களில் தான் மௌலானா அவர்கள் சிறந்த நூலான 'மஸ்னவீ ஷரீபும்' பிற இசைத் தொடர்பான நூல்களும் இயற்ற முற்பட்டனர். இப்பணிகளில் ஈடுபட்ட வண்ணம் 10 ஆண்டுகள் சென்றன. ஹிஜ்ரி 672-ல், தமது 68-வது ஆண்டில் மௌலானா அவர்கள் மரணமடைந்தார்கள்.

அவர்கள் மரணமடைந்தபோது பிஞ்சுமனச் சிறுவரும், பெரியோரும், எளியோரும், வலியோரும், அலுவலரும், அரசரும் ஆழ்ந்த துக்கம் கொண்டு அணியணியாகப் புறப்பட்டு வந்து நல்லடக்கம் செய்தனர்.

உடலை அடக்கம் செய்ய எடுத்துச்சென்ற முஸ்லிம் பெருமக்கள் முன்னர் கிறிஸ்தவரும் யூதரும் சென்று தத்தம் வேதங்களை ஓதித் தத்தம் அனுதாபத்தை அறிவித்தனர். கூட்டத்தின் நடுவண் இருந்த அன்றைய சுல்தான், அக்கிறிஸ்தவரையும் யூதரையும் நோக்கி, 'உங்களுக்கும் மௌலானாவுக்கும் என்ன தொடர்பு?' என்று கேட்டபோது "உங்களுக்கு இவர்கள் முஹம்மதை நினைவுபடுத்துகிறார்கள் என்றால், எங்களுக்கு ஈஸாவும் மூஸாவும் நினைவுபடுத்தப்படுகின்றனர்" என்று அவர்கள் பதில் கூறினர். இன்றுகூட மௌலானா ரூமி (ரஹ்) அவர்களின் சமாதியிடம் பெரும்பாலான மக்களின் புண்ணிய இடமாகப் புகழ் பெற்றுத் திகழ்கிறது.

---

ஒரு விளை நிலத்தில் விழுந்த மாடு ஊரில் உள்ள மாடுகள் எல்லாவற்றிற்கும் தீங்கிழைத்துவிடுவதை நீ பார்க்கவில்லையா?

— ஷெய்கு ஸஅதீ ஷீராஸீ (ரஹ்)

"நான் ஆண்பிள்ளை" என்று நீ பெருமை பாராட்டுவாயானால் கஷ்டங்களையும், தொந்தரவுகளையும் தாங்கிக்கொள். அவற்றைப் பிறருக்குக் கொடுத்துவிட வேண்டுமாயின் நீ உனது பெண் தன்மையை ஒப்புக்கொள். —அமீர் குஸ்ரு (ரஹ்)

நரகம் என்பது என்னவென்று திட்டமாய் அறிய விரும்புவையேல், உலகில் தகுதியற்றவருடைய நட்பே நரகம் என்றறிக.

— உமர் கையாம்

# அப்பாவின் அருள் உள்ளம்

பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்,
எம். ஏ., பி. ஓ. எல்., எம். லிட்.

உலகம் மண்புக்கு மாயாது இன்றளவும் வாழ்கின்றது என்றால் அதற்குக் காரணம் நாட்டிலும் உலகிலும் இன்னும் நல்லவர் பொன்றிவிடவில்லை என்பதே பொருள். வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து, உடன்வாழும் எண்ணற்ற மக்களுக்கு — ஏன்? உயிர்களுக்கு—உள்ளுணர்வைத் தூண்டி உள்ளத்து ஒளியை ஓம்பும் ஒளிவிளக்கங்களாக நல்லவர்கள் அவ்வப்போது தோன்றித் தவறு செய்பவர்களைத் திருத்தி உலகை நேரிய வழியில் திருப்ப முற்படுகின்றனர். வரலாறு காணாத காலத்துக்கு முன்பிருந்தே உலகை நடத்திச்செல்லும் நல்லவர் பலர் அறிவுரைகளையும், அறவுரைகளையும், ஆன்மநெறிக் கொள்கைகளையும் வடித்துத் தந்துள்ளனர். அவர் தம் கொள்கைகளும், வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறிகளும் உணர்த்திய உணர்வுகளுமே நம்மை இன்று, இன்னும் நிலைகெடாமல் வாழவைக்கின்றன. அத்தகை நல்லவர் வரிசையில் —அருளாளர் வரிசையில்—ஒளி விளக்கங்கள் வரிசையில்—வந்து தோன்றிய மெய்ஞ்ஞான மேதை பீர்முகம்மது அப்பா அவர்களும் சிறந்த இடத்தைப் பெறுவதோடு, நம் உள்ளங்களிலெல்லாம் நிறைந்தும் உள்ளனர்.

மனிதன் உலகில் வாழப்பிறந்தவன்; அத்துடன் உலக உயிர்களுடன் கலந்து அவர்தம்—அவ்வுயிர்களின்–இன்பதுன்பங்களில் பங்குகொள்ளக் கடமைப்பட்டவன். அந்தக் கடமை உணர்ச்சி

நாட்டில் வற்றுதவரையில் சமுதாயத்துக்கு வாட்டமில்லை. ஆனல் வற்றிவிடுமானல்? ஆம்! வற்றுதிருக்கவே நல்லடியார்கள் நாட்டிற்கு வாழ்ந்து வழிகாட்டி என்றும் வாடாத பாடல்களாம் மலர்களையும் தந்துள்ளனர். அப்பாடல்கள் சமுதாயத்தை வாழவைக்க உதவுவன.

மனிதனை மனிதனுக வாழவிடாமல் தடுக்கும் ஆணவம் முதலிய கொடுமைகள் அகற்றப்பெறுதல் உலக வாழ்வுக்கு இன்றியமையாதது. 'யான் எனது என்னும் செருக்கு' என வள்ளுவர் கூறிய அகங்கார மனநிலைகள் மனிதனைப் படுகுழியில் ஆழ்த்துவதோடு, அவன் செயல் வழியே சமுதாயத்தையும் அல்லல்வழி ஆட்டிப்படைக்கின்றன. உலகம் தோன்றிய நாள்தொட்டு இந்த ஆணவ மனப்பான்மை கொண்டவர் வாழ—அதே வேளையில் அம்மனப்பான்மை அகலவேண்டிய இன்றியமையாப் பெருநெறியை நல்லடியவர் வற்புறுத்தி வந்துள்ளனர். ஆணவம் அகல முதற்படி, நமக்குமேல் இறைவன் உள்ளான் என்ற உணர்வைப் பெறுதலே. அவ்வுணர்வினைப் பெற்ருல் 'நாம்' என்ற ஆணவ நிலை கெட்டு, நம்மை அவனுக்கு அடிமையாக்கிக் கொள்வோம். நாம் அவனுக்கு அடைக்கலமாகிவிடுவோம். அந்த அடைக்கல நிலையிலேதான் வையத்தை வாழவைக்கும் வற்ருஊற்றுக் கேணிகள் தோண்டப்பெற்று, அவற்றின் நல்ல நீர் ஊற்றுக்களால் உயிர்கள் உண்ணப் பயன் பெறும். நாம் இறைவனுக்கு அடைக்கலமாகிவிட்டால், நம் செயலென ஒன்றின்றி, விருப்பு வெறுப்பு இன்றி, இன்னர் இனியார் இன்றி நம்மால் வாழமுடியும். விருப்பு வெறுப்பில்லாத மனித வாழ்வில் காழ்ப்புக்கு இடமில்லை. எனவே பேராட்டங்களும், போர்களும், மாருட்டங்களும் நாட்டிலும், உலகிலும் நிகழா. நாடு நாடாகும்; நல்லுயிர்கள் தழைக்கும். இந்த அடைக்கல நிலையினையும், இறையருட்டன்மையினையும் அப்பா அவர்கள் பல பாடல்களில் விளக்கிக் காட்டுகிருர்களெனினும் ஈண்டு ஒன்றைமட்டும் உங்கள் முன் வைக்க நினைக்கிறேன்.

உலகில் மக்கள் யார் யாரையோ அடைக்கலமாகக் கொண்டு தம் வாழ்வைப் பெருக்கிக்கொள்ள நினைக்கின்றனர். தம்மிற் கீழ் உள்ளாரையும் கூடச் சிலவேளைகளில் தம் கொழுகொம்பாகக் கொள்ளுகின்றனர். பட்டத்தாலும் பதவியாலும் பணத்தாலும் அதிகாரம் முதலியவற்ருலும் உயர்ந்தாரே தமக்குக் கதி என எண்ணிக் கொள்கைகளையும் காற்றில்விட்டு, அவர் காலால் இட்ட பணியைத் தலையால் செய்யக் காத்து நின்றவர்களையும் பார்க்கிருேம். ஆயினும் அவர்தம் வாழ்வோ அவர்கள் பற்றி நிற்பார் வாழ்வோ நிலைத்து நிற்கவில்லை என்பதைப் பண்டை

வரலாறு மட்டுமன்றி இன்றைய வாழ்க்கையும் நமக்குக் காட்டிக் கொண்டே நிற்கின்றன. எனவே அப்பா போன்ற நல்லவர்கள் என்றும் நிலைத்துள்ள இறைவனை அடைக்கலமாகச் சார்கின்றனர். 'கொடுக்கிலா தனைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை' என்று குறித்துக்காட்டி, எனவே இறைவனைப் பாடுங்கள் என ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சுந்தரர் நமக்கு அறிவுறுத்திச் சென்றுள்ளார். அந்த அடிப்படையில் அவ்விறைவனிடம் தம்மை அடைக்கலமாகத் தந்த அடியவர் வரிசையில் 'அப்பா' அவர்கள் பெறும் இடம் சிறந்தது.

தான் தேர்ந்தெடுத்த இறைவன் தன்மைகளையெல்லாம் சுட்டிக்காட்டி உலகுக்கு உணர்த்தி, அத்தகைய இறைவனைத் தான் அடைக்கலமடைந்த காரணத்தையும் நமக்கு அப்பா அவர்கள் உணர்த்துகிறார்கள். 'பழி மலிந்து ஆக்கம் எய்தும்' பல கோடி மக்களைக் கண்டு வருத்தமுற்ற அவர்கள் பழிவராமல் இருக்கலே—இழிவு வாராமல் இருக்கவே—அவனை அடைக்கலமடைந்ததாகக் கூறுகின்றார். ஆம் — 'வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார்' என வள்ளுவர் வாழ்வாரை நமக்கு உணர்த்தவில்லையா? இந்த நிலைபெற யாரை வேண்டுகிறார்? தன் நிலையறிந்து தானே வந்து தலையளித்து ஆட்கொள்ளும் தயாளனை வேண்டுகிறார். அந்தத் தலைவர் உடற்றுன்பம் உயிர்த்துன்பம்–அகத்துன்பம், புறத்துன்பம் — நீக்க வல்லஇரண்டினையும் அருள்வடிவான தத்துவன் எனக் காட்டுகின்றார். மேலும் அவன் முடிவிலாற்றலுடைமையினையும், அப்பாலுக்கப்பாலாகி யாண்டும் நீக்கமற நிறைந்து நிற்கும் அவனே, அடியவர் அனைவருக்கும் தாயாகி நின்று தாங்கும் நிலையினையும் சுட்டுகிறார். அப்பா அவர்கள் பாடிய பாடல்கள் பலப்பல. அவற்றுள் ஒன்று இப்பாடல்.

அப்பா அவர் தம் பாடல்கள் அனைத்தும் மக்களை ஆற்றுப் படுத்தும் அருட்பாடல்களாகவே அமைகின்றன. மக்கள் உள்ளத்தைச் சமய வேறுபாடு கடந்து சமரச நிலையில் ஈர்க்கும் தன்மை பல பாடல்களில் சிறக்கின்றன. 'எல்லா உயிர்க்கும் இன்பநெறி காட்டலே நல்லார் செயல்' என்ற அடிப்படையிலேயே அப்பா அவர் தம் சொல்லும் தொண்டும் அமைகின்றன எனக் காண்கின்றேன். அவர்கள் இறைவனைச் சுட்டிக்காட்டும் தொடர்கள் அங்கிங்கெனாதபடி யாண்டும் யார் உளத்தும் நீக்கமற நிறையும் இறைவனையே குறிப்பிடுகின்றன. அப்படியே அவர்தம் வேண்டுகோளும் உலக சமுதாயத்துக்கென அமைந்த ஒப்பற்ற வேண்டுகோளாக அமைகின்றது. அந்த வேண்டுகோளுக்கிடையில், இறையருள் பெற உயிர்கள் தம்மை எப்படித் தயார் செய்து கொள்ளவேண்டும் என்ற குறிப்பும் சுட்டப் பெறுகின்றது.

இப்படி இலக்கியமாய் — தத்துவமாய் — சமரச சன்மார்க்கமாய் — தரணி வாழ்வில் ஒளிவிளக்காய் அமைந்த அப்பாவின் அருட் பாடல்கள் பல! அவற்றை அனைவரும் ஓதி உணர்ந்து வாழ்வின் உற்ற பயன்பெறவேண்டும் என அனைவரையும் வேண்டி மேலே சுட்டிய என் உள்ளத்தினைத்தொட்ட அந்த அருட்பாடலை உங்கள் முன் வைத்து வணங்குகிறேன்.

“தந்தையிலி தாரமிலி தானவனு நீயே
தண்மைகொ டெவர்க்குமொரு தாபரமு நீயே

மைந்தரிலி அன்னையிலி மன்னவனு நீயே
மண்ணிலடியார்க் கிரணம் வழங்குவது நீயே

சிந்தைதனில் இடறுதனைத் தீர்த்தருள்வை நீயே
தேட்டமறிக் தெனக்குதவி செய்பவனும் நீயே

அந்தமிலி நீயெனக்கோர் இழிவு வாராமல்
ஆதியே யானுன் அடைக்கலம் தானேன்”

நாம் அனைவரும் அப்பாவின் அருள் உள்ளம் காட்டியபடி அந்த ஆதியைச்சார்ந்து நலம்பெற்று நன்கு வாழ்ந்து வையத்தை யும் வாழவைப்போமாக!

———

பொருட்செல்வம் இல்லாதாரை — அஃதாவது ஆண்டவனைத் தவிர வேறு கைப்பொருள் ஒன்றுமில்லாதாரை — யாசகர் என்று செப்பாதே. ஏனெனில், அரசன் அவரிடம் யாசிப்பவனுயிருக்கிருன்.

— ஷெய்குஸஅதீ (ரஹ்)

பொறுமை முதலில் கசப்பாயிருக்கும். ஆனுல் இறுதியில் குணம் மிகுந்த மதுரமான கனியைத் தருகின்றது.

— ஒரு பெரியார்

# பெருக உண்ணுமல்...

**என். சின்னராசு, எம். ஏ.,**
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

"நீபெருகத் தின்றக்கால் நித்திரையும் கோபமுமாம்
நீசுவர்க்கத் தேகாம லேநிறுத்தும் நீபெருக
வுண்ணும லுண்டு முறங்கா திறையைமனக்
கண்ணூரக் காண்பாய் களித்து"

இப்பாடலின்கண் ஆசிரியர் உண்டியே பெரிதென எண்ணி அளவிறந்து உண்டு அதனுல் அவதியுறும் மக்களைத் தெருட்டுகின்ருர். மனிதனுகப் பிறந்த ஒவ்வொருவனும் இறைவனை உணர்ந்து அவன் இணையடியாம் தோணியைப் பற்றிப் பிறவிக் கடலைக் கடக்க முயலுவதே மானிடப் பிறவியின் நோக்கம். அஃதன்றி உண்டியும் பெண்டிரும் பெரிதாகக் கொள்வோர் அடையும் துன்பம் பலவாகும்.

"இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்கும்
கழிபே ரிரையான்க ணேய்"

என வள்ளுவர் குறிக்கின்ருர். தனக்குச் "செரிக்கும் அளவறிந்து உண்பவனிடத்து உண்டாகிய இன்பம்போல், இடைவிடாது நிற்கும், செரிக்கும் அளவறியாது மிகப் பெரிய இரையை விழுங்குவானிடத்து நோய்களும்" என்பது இக்குறளின் பொருள். எனவே ஒருவன் பெருந்தீனி (உணவு) தின்பானேல் அவன் உடல் பருத்து

மூளையின் ஆற்றல் குறைந்து, உறக்கம் பெருகி வாழ்வின் பயனை அடைய இயலாது. அதனோடு உடலில் பெருவலி இருப்பதால் இரத்த நாளங்கள் கொதிப்பேறிக் கோபம் பெருகும். இக்கோபம் தீயைப் போன்றது. அது தான் சேர்ந்தவரைக் கொல்லக்கூடியது. அந்தக் கோபம் வருவதற்குக் காரணம் உடல் பருத்து அறிவு செயல்படாமையாகும். கோபத்தினால் நாடியில் அதிர்ச்சி ஏற்படும். அதனால் உயிருக்கு ஆபத்து எனப் பாரதியார் கூறுகின்றார். அதற்கேற்பப் பெருகத் தின்பதால் உடற்பெருத்து சினமுண்டாகும். தீவினை காரணமாக நாம் வீடுபேற்றை அடைய இயலாது. எனவே மக்கள் யாவரும் உடல் நிலைபேற்றுக்கான அளவு உண்டு மனம் மயங்கிக் கிடக்காமல் விழித்திருந்து இறைவனை மனக் கண்ணால் கண்டு மகிழவேண்டும் எனக் கூறுகின்றார் ஆசிரியர் பீரப்பா அவர்கள். 'உண்ணுமலுண்டு' என்னும் தொடர் 'தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவதெக்காலம்' என்னும் சித்தர் பாடலோடு ஒத்திருத்தலைக் காணலாம். தூங்காமல் தூங்குவது இறை நிலையை எண்ணியெண்ணி இன்புறுவது. இறைவனைக் கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலராதலின் 'மனக் கண்ணாரக் கண்டு' என்று குறிப்பிடுகின்றார். இறைநிலையை மனக் கண்முன் கண்ட சான்றோராதலின் அதனால் ஏற்பட்ட இன்பத்தை நாமும் கண்டு களிப்படையவேண்டும் என இப்பாடலில் ஆசிரியர் அறிவுறுத்துகின்றார்.

---

ஒரு மகாசபையில் பௌதிகப் பொருட்களில் மிகப்பெரிய சூரியனே ஓர் அணுவின் ஸ்தானத்தில் இருக்கும்போது நீ உன்னை மட்டும் உயர்வாகப் பாவித்தல் ஒழுங்காகுமா?

— காஜா ஹாபிஸ் (ரஹ்)

மூன்று குணங்கள் இறைவனுடைய கோபத்தின் அறிகுறியாகும். அதிக விளையாட்டு, கிண்டல் செய்தல், புறம் பேசுதல்.

— ஸிர்ரியுஸ் ஸித்திய்யி (ரஹ்)

# அந்த வெகு நன்றிக்கு...

*புலவர் கா. மு. நூர்முகம்மது, மேலப்பாளையம்.*

எல்லாம் வல்ல இறைவன் தன்னுடைய பிரதிநிதியாக நபிமார்களைப் படைத்தான். படைக்கப்பெற்ற நபிமார் அனைவரும் ஒரே தரத்தினர் அல்லர். அவ்வாறே மனிதர்களும் நபிமார்களுக்கு இணையாகமாட்டார்கள். ஆனாலும் மனிதர்களே நபிமார்களாக அனுப்பப்பெற்றார்கள். இறைவனும் தன் அருள்மறையாம் திருமறையில் தெளிவாகக்கூறுகிறான்:

“(நம்மால் அனுப்பப்பட்ட) தூதர்கள் (யாவரும் ஒரே பதவியுடையவர்களன்று). அவர்களில் சிலரைச் சிலரைவிட நாம் மேன்மையாக்கி இருக்கின்றோம்.” (திருக்குர்ஆன் அத்தியாயம்-2, வசனம் 253). இதுமட்டுமல்ல. இன்னும் திருமறை தெரிவிக்கின்றது: “நபிமார்களில் சிலரைச் சிலர்மீது மெய்யாகவே நாம் மேன்மையாக்கிவைத்து, தாவூது (நபி)க்கு ஸபூர் என்னும் வேதத்தைக்கொடுத்தோம்.” (அத். 17—வச. 55).

இவ்விதமாக நபிமார்களைப் படைத்து மனித இனத்திற்கு வழிகாட்ட — வாழ்ந்துகாட்ட — இறைவன் அனுப்பினான். அவர்களிலும் சிலரைச் சிலரைவிட மேன்மையுடையவர்களாக்கி, அந்த நபிமார்களில் எல்லாம் சிறந்தவர்களாக — சிறப்புக்குரியவர்களாக — உலகத்தார் யாவருக்கும் ஓர் அருளாக — நபிகள் பெருமானார் முகம்மது நபி (சல்) அவர்களை அனுப்பிவைத்தான்.

இந்தத் திருமறையின் — இறைவசனங்களின் — சிந்தனை ஓட்டத்தில் மனிதர்களையும் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

### மனிதர்களில் சிறந்தோர்

மனிதர்கள் ஒரேவிதமாகத்தான் தோன்றுகின்றார்கள். பிறப்பால் ஒரேவிதமாக இருந்தாலும், சிறப்பால், அறிவால், மெய்ஞ்ஞானப் போதனையால் சில மனிதர்கள் சில மனிதர்களை விட உயர்ந்தவர்களாக, தெளிவுடையவர்களாக, இறைவனின் இன்னருளால் சிறப்புறுகின்றார்கள்.

### அன்புடையோனின் அருள்மாரி

ஆண்டவனின் அருள்மாரியாகப் பூமியில் ஒரே மாதிரியாக மழைபொழிகிறது. மண்ணின் தன்மைக்கு ஏற்பச் சகலவித கனி வர்க்கங்களும் தோன்றுகின்றன. இதுபோன்றே மனிதர்களு மாவர்.

எல்லா மனிதர்களும் எல்லாவித அறிவாற்றல்களையும் பெறுவதில்லை. சிலர் சில திறன்கள் பெற்றவர்களாக இருக்கிறார்கள். இன்னும் சிலர் நுட்பமான பேரறிவு படைத்தவர்களாக இருக்கின்றார்கள். அதிலும் சிலர்தான் பேரின்பஞானம் பெற்றவர்களாகச் சிறந்து விளங்குகின்றார்கள். அத்தகு ஞானம் பெற்றவர்கள்தான் இறைவனின் பேரன்புக்குப் பாத்திரர்கள் ஆவார்கள். இறைவனின் விருப்பத்திற்குரிய ஞானவான்கள், மனித குலத்தின் அகவிருளை நீக்கி, அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானம் போதிக்கும் ஆசான்கள். இவர்கள்தாம் நாதாக்கள் என்றும் ஷுஹதாக்கள் என்றும், அவ்வுலியாக்கள் என்றும், சித்திக்கீன்கள் என்றும், சாலிகீன்கள் என்றும் போற்றப்பெறும் ஞானவான்கள் ஆவார்கள்.

### கல்வி ஞானம் பெறுவோர்

தாயும், தந்தையுமாகித் தாரணி காக்கின்ற காவலன் கருணையாளன் இறைவனும் திருமறை மூலம் தெளிவுபடுத்துகின்றான்: "அல்லாஹ் தான் விரும்பியவர்களுக்கே கல்வி ஞானத்தைக் கொடுக்கிறான். ஆதலால் எவர் கல்வி ஞானம் கொடுக்கப்பெறுகின்றாரோ அவர் நிச்சயமாக அநேக நன்மைகளைப் பெற்றுவிடுவார்கள். ஆயினும் இந்த ஞானக்கல்வியைக் கொண்டு அறிவாளிகளைத் தவிர மற்றெவரும் உணர்ச்சி பெறமாட்டார்கள்."

(அத்.—53—வச.—269)

இறைமறையின் இக்கூற்றுப்படி, இறைவனால் விரும்பப்பெற்றவர்களாகவும், இறைவனை உவந்தவர்களாகவும், அவனால் கல்வி ஞானம் பெற்றவர்களாகவும், எண்ணற்ற நலன்கள் கொண்டவர்களாகவும் சிறந்து விளங்கியவர்கள்தான் பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த—தக்கலையில் விளங்கும் தவசீலர்—

அல்ஆரிபு—பில்லா, முத்தமிழ்ப்புலமை சான்ற ஞானி பீர்முகம்மது அப்பா வலியுல்லா அவர்கள்.

## உள்ளிருள் நீக்கும் ஒளி

இறையருளும், கல்வி ஞானமும் கைவரப்பெற்றதனுல் மெய்ஞ் ஞானத் தகைமை சான்ற எண்ணிலா ஞானப்பாடல்கள் பாடி எண்ணுவோர் எண்ணத்தில் நிலைத்திருக்கும் நற்பேறு பெற்ருர்கள் பீர்முகம்மது அப்பா அவர்கள். உருவத்தால் மனிதர்களாக இருப்பவர்கள் உள்ளத்தால், உயர் எண்ணத்தால் மனிதர்களாக வாழவும், அவர்களின் அகப்புறக் குற்றங்குறை நீங்கவும் தமது மெய்ஞ்ஞானப் பாக்களால் அறிவுறுத்துகின்ருர்கள். குறை இரந்து பாடும் பாடலானுலும், இறைப்புகழ்ச்சியானுலும், ஞானக் குறமானுலும், ஞானப்பாலானுலும், ஞானமணிமாலையானுலும் அவையனைத்திலும் பொதிந்து கிடக்கும் நற்கருத்துக்கள் மனிதனிடம் குவிந்து கிடக்கும் பொருமை, பேராசை, தான் எனும் அகந்தை இவைகளை நீக்கவே பயன்படுகின்றன.

## முத்தமிழ்க் கவிக் கொண்டல்

அரபியிலும், அருந்தமிழ் மொழியிலும் அளவிலாப் புலமை பெற்றிருந்தார்கள் பேரிறையன்பு பெரிதும் கனிந்த பீர்முகம்மது அப்பா அவர்கள். பாவிலும், பாவினத்திலும் இசையுடன் கடல் மடை திறந்தாற்போன்று பாடும் பேராற்றல் பெற்ற அப்பா அவர்கள் பதினெட்டாயிரம் பாடல்கள் பாடிக்களித்திருக்கிருர்கள். சிந்தையள்ளும் செந்தமிழ் மொழியில் பீர்முகம்மது அப்பா அவர்கள் பெற்றிருந்த புலமைத் திறத்தை அவர்கள் பாடல்களில் பரக்கக் காணலாம். அவர்கள் வாழ்ந்த காலத்தில் இருந்த நிலையை ஒட்டியே சித்தர் வழியில் பாடல்கள் பாடிச் சிறந்தார்கள். அன்னுர் பாடல்களில் சொற்சுவை, பொருட்சுவை, கருத்துச் செறிவு, ஞானவிளக்கம், நுண்மாண் நுழைபுல மாண்பு, இன்ன பிற திறத்தையெல்லாம் காணலாம். அவர்களின் பாடல்களில் தோய்ந்து தோய்ந்து, ஆய்ந்து ஆய்ந்து, சுவைத்துச் சுவைத்து நெஞ்சம் நெக்குருகிய—மொழித் திறத்தின் முட்டறுத்த—முழு மதியாளர்கள் அறுபத்து மூன்று ஈரடிப் பாடல்களான ஞானரத்தினக் குறவஞ்சியைப் பதினெண் சித்தர்களின் பாடல் தொகுப்பான ஞானக்கோவையில் இடம்பெறச் செய்திருக்கிருர்கள் என்ருல் பீர்முகம்மது அப்பா அவர்களின் திறமான புலமைக்கும், திட்பமான அறிவுக்கும், நுட்பமான ஞானத்தெளிவிற்கும் வேறு சான்றுகள் வேண்டுமோ? இந்த ஞானரத்தினக் குறவஞ்சி, வினு—விடை முறையில் அமைந்ததாகும். இதிலிருந்து பீர்முகம்மது

அப்பா அவர்கள் தமிழ்நாட்டுச் சித்தர்களில் ஒருவராக மதிக்கப் பெற்ருர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஞானப்புகழ்ச்சியும் நன்றி பாராட்டலும்

பீர்முகம்மது அப்பா அவர்கள் இயற்றிய ஞான நூற்களுள் ஞானப்புகழ்ச்சியும் ஒன்ருகும். அதில் ஞானமெனும் பேரறிவைத் தரும் இறைவனைப் புகழ்ந்து, அந்த இறைவன் மனித சமுதாயத் திற்குச் செய்த அளப்பரிய அருள்தனை நினைந்து நினைந்து நன்றி பாராட்டுகின்ருர்கள். செய்ந்நன்றி மறந்து திரிகின்ற மனிதனுக்கு அறிவுறுத்தவே இறைவனுக்கு நன்றி நவில்கின்ருர் நன்னெறிச் செல்வர் பீர்முகம்மது அப்பா அவர்கள்.

மரபு வழுவா விழுப்புகழ்ச் செல்வர் பீர்முகம்மது அப்பா அவர்கள் தமது ஞானப்புகழ்ச்சியில் எல்லாம் வல்ல இறைவனை ஞானமாகக் கண்டு புகழ்ந்தேத்துகின்ருர்கள்.

## உமறு அப்பாவும், பீர் அப்பாவும்

இங்கு நாம் இன்னென்றையும் எண்ணிப்பார்க்க வேண்டும். செம்மல் நபியின் (வரலாரும்) சீறத்தைச் செந்தமிழில் சிந்தை யள்ளும் சீருவாகப் பாடி மகிழ்ந்த புலவரேறு உமறு அப்பா அவர்களும் தக்கலைவாழ் தவஞானச் செல்வர் பீர்முகம்மது அப்பா அவர்களும் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் என்று செவிவழிச் செய்தியாகத் தெரிய வருகிறது. இருவரும் இறைவனை ஞான மாகக் காண்பதில் ஒன்றுபடுகின்ருர்கள். பீர்முகம்மது அப்பா அவர்கள் ஞானப்புகழ்ச்சியில் இறைவனையே ஞானப்பேரறிவாகக் கண்டு புகழ்கின்ருர்கள். உமறு அப்பா அவர்களும் இறைவனை ஞானப்பேரறிவாகக் கண்டு பாடுகின்ருர்கள். சீருவில் இறைவனைப் புகழ்ந்தேத்துகின்றபோது உமறு அப்பா அவர்கள்,

> "வானவர்க்கும் நின்னுடைய தூதர்க்கும்
> மறைதெளித்த மற்றை யோர்க்கும்
> ஊனுடைய பல்லுயிர்க்கும் உணர்வரிய
> பேரொளியாய் ஓங்கி நின்ற
> ஞானமெனும் பரம்பொருளே யழியாத
> பெரும் பேறே நடுநின் றென்றும்
> ஊனமற விளையாடி எவ்விடத்தும்
> எந்நாளும் உறையும் கோவே!"

என்னும் பாடலில் ஞானமெனும் பரம்பொருளே என்று விளிக் கின்றபோது இறைவனையே ஞானமெனும் பரம்பொருளாகக் காணுகின்ருர்கள். இதில் இருவரும் ஒத்த கருத்துடையவர்களாக

விளங்குகின்ருர்கள். இதுபோல் இன்னும் எத்தனையோ உள. விரிவஞ்சி இத்தோடு விடுக்கின்றேன்.

## நன்றிகூறும் நற்பாடல்

"ஆதமுடைய சந்ததியை நிச்சயமாக நாம் கண்ணியப் படுத்திஞேம்" என்று திருமறை வழங்கிய இறைவன் திருக் குர்ஆன் 17-வது அத்தியாயம் 70-வது திருவசனத்தில் நம்மைப் பெருமை படுத்தியதைப் பற்றிச் சிறப்பித்துரைக்கின்ருன். நல்லொழுக்கத்திற்கு வித்தாகும் இந்நன்றியை வியந்து போற்றி இறைவனைப் புகழ்கின்ருர்கள் மெய்ஞ்ஞானப் போதகர் பீர்முகம்மது அப்பா அவர்கள் தமது ஞானப் புகழ்ச்சியில். நற்றமிழில் அமைந்த அந்த நன்றிபாராட்டும் பாடலைப் பார்ப்போம்.

"ஆதம் பெறுமக் களெல்லா ரிலும்நம் மையுன்புகொண்டே
வேத நபியி ரசூலும்மத் தாக்கிஞ னந்தவெகு நன்றிக்குப்
பாதங் கள்மேலும் சிரங்கீழு மாய்ப்பத்து நூருயிரமாண்
டோதித் தவஞ்செய் தாலும் போதாதிறை வனன்று
கந்ததுக்கே"

இறைவனும் நன்றியைப் பற்றிக் கூறும்போது "நீங்கள் நன்றி செலுத்துவீர்கள் என்று இதற்குப் பின்னும் நாம் உங்களை மன்னித்தோம்" என்று கூறுகிருன். (அத். 2; வச. 52.)

இந்தப் பாடலில்தான் பீர்முகம்மது அப்பா அவர்கள் தம் உணர்வைப் புலப்படுத்துகின்ருர்கள். ஆதம் பெறும் சந்ததிகளி லும், நம்மையெல்லாம் பெருமாஞர் இரசூல் (சல்) அவர்களின் உம்மத்தாக்கிப் பெருமைப் படுத்திஞனே அந்தப் பெறற் கரும் பேற்றிற்குப் பாதங்கள் மேலும் தலைகீழுமாய் நூருயிரம் ஆண்டு கள் ஓதித் தவஞ்செய்தாலும் போதாது என்று உணர்ச்சிப் பெருக் கெடுக்க வியந்து ஓதுகின்ருர்கள். சொற்சுவை நிறைந்து பொருட்சுவை மலிந்து காணப்படும் இந்தப் பாடல் படித்துப் படித்துப் பயன் பெறத்தக்கதாகும்.

மேலும் சீருவில் உமறு அப்பா அவர்கள் கூறுகின்ருர்களே இறைவனின் கூற்ருக:

"கலைமறை முகம்ம தென்னுங் காரண மில்லையாகில்
உலகுவிண் ணிரவி திங்க ளொளிருடுக் கணஞ்சு வர்க்கம்
மலைகடல் னதிபா தாளம் வானவர் முதலா யும்மை
நிலையுறப் படைப்ப தில்லை யெனவிறை நிகழ்த்திஞனே"

இந்தத் திருப்பாடலுக்குப் பதில்போல் அமைந்திருக்கும் பாங்கும் எண்ணி எண்ணி மகிழத் தக்கதாகும்.

"கண்ணில் லாமலுன் கற்பனை கடந்தன னடியேன்
விண்ணி லாசையை வெறுத்துமண் ணுசையில்
வீழ்ந்தேன்
பெண்ணி னுயகன் பிரளயத் துனருள் புகட்டி
யெண்ணெ ணுப்பல வரிசைதந் தருளென திறையே"
[ஞானப் புகழ்ச்சி]

---

மனமே! மாலை நேரமென்று வருந்தாதே. ஏனெனின் அதற் கடுத்தாற்போல் காலைப்பொழுதும் வந்துகொண்டேயிருக்கிறது.

— ஹாஜா ஹாபிஸ் (ரஹ்)

பொறுமை, வெற்றி இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று பன்னெடுங்காலத்துக் கூட்டாளிகள். பொறுமையின் தவணை கழிந்த பின்னர் அதன் பயனாய் வெற்றியின் தவணை வருகிறது.

— காஜா ஹாபிஸ் (ரஹ்)

எனது கண்ணிமை உரோமங்களே எனது மனோநிகழ்ச்சிகளை மஞ்சள் முகமாகிய கடுதாசியில் சிவப்பு மையால் எழுதிக்கொண் டிருக்கும்போது அதைப்பற்றி யான் எடுத்துக்கூற வேண்டிய அவசியமேயில்லை.

— ஷெய்கு ஸஅதி (ரஹ்)

# இறைநேசச் செல்வர்கள்

*மௌலவி அல்ஹாஜ் V. U. A. யூசுப் அன்சாரி*

"ரூஹு" என்பது தெய்வீகப் பேரொளித் திவலை. அவ்வொளித் திவலை அறிவு, ஆற்றல், உயிர்த்துடிப்புடையது. மனித அறிவால் புரிந்துகொள்ள முடியாத மிகநுட்பமானது. அதன் இயக்கங்கள் இறைத் தொடர்புள்ளவை" — இப்படி மெய்ஞ் ஞானிகள் பலர் விளக்கம் தந்துள்ளனர். இவ்விளக்கத்தை அறிவுலகப் பேரொளி இமாம் கஸ்ஸாலீ (ரஹ்) அவர்கள் உறுதிப் படுத்தி "யஹ்யா" என்ற தமது நூலில் எழுதியிருக்கின்றார்கள். வேறுசிலர் "ரூஹு" என்பது உயிர்த்துடிப்புடைய ஆவிப்பொருள்" என்று கூறுகின்றனர். மேதைகளுக்கிடையே இப்படி முரண்பாடு இருப்பினும் ரூஹின் உண்மையான பொருளையும், அதன் இயக் கங்களையும் அல்லாஹ்வே மிக்க அறிந்தவன் என்பதில் அனைவரும் ஒருமித்துள்ளனர்.

"ரூஹு" குறித்து உம்மிடம் அவர்கள் வினவுகின்றனர். "அது என் இரட்சகனுடைய விஷயத்தைச் சார்ந்தது. இது குறித்து நீங்கள் மிகக்குறைவாகவே அறிவு கொடுக்கப் பெற்றுள் ளீர்கள்" என்று நபியே நீர் கூறுவீராக!" என இறைவன் கூறு கின்ருன்.

தெய்வீக இரகசியத்தைச் சார்ந்த அவ்வொளித் திவலை மனித உடலில் இணைந்து உள்ளத்தை மையமாகக் கொண்டிருக் கின்றது. ஆன்மா என்கிற ஒளித்திவலையையும், அது உடலில் தொடர்புகொண்டிருக்கிற விதத்தையும், அதன் இயக்கங்களையும் முழுமையாக அறிந்து அவ்வறிவின் வாயிலாக அல்லாஹ்வை அண்டுகின்றவர்களே "வலி"மார்களாவர்: அவர்கள் தமது

உள்ளப்பொய்கையில் பொங்கி எழுகின்ற மெய்யறிவால் இறைவனை அறிகின்றனர். இயற்கைப் பொருட்களில் பொதிந்து கிடக்கின்ற இறைத்தத்துவங்களை அறிகின்றனர். இத்தரணியையும், இதிலுள்ளவற்றையும் எப்படி இறைவன் இயக்கி வருகின்றான் என்கிற பேருண்மைகளையும் அறிகின்றனர். இப்படி அவர்கள் பெறுகின்ற மெய்யறிவின் காரணமாக இயற்கைப் பொருட்கள் ஒவ்வொன்றிலும், இறைவனின் பேரழகைக்கண்டு இன்புறுகின்றனர். பருகப் பருகத் தெவிட்டாத இப்பேரின்பத் தேனமுதைப் பருகி மெய் மறக்கின்றார்கள். "இயற்கைப் பொருட்களில் இறையின் பேருண்மையையும், பேரெழிலையும் கண்டு ஆனந்தமடையும் பக்குவத்தைப் பெற்றவனே ஞானி ஆவான்" — என ஞான மேதைகளில் ஒருவர் கூறுகின்றார். இறையின்பங்களைப்பெற்று மெய்மறந்து இறையோடு ஒன்றிடும் பெரும்பாக்கியம் கிடைப்பதற்கரிதானது. அல்லும்பகல் இறைவனை நினைந்து, நினைந்து மெய்யுருகி இம்மாபெரும் பாக்கியத்தை *அவுலியாக்கள்* அடையப் பெறுகின்றனர். மாண்புமிக்க இந்நிலையை அடையும் பொருட்டு அவர்கள் மனோ இச்சை, கோபம், அகந்தை போன்ற தீய சக்திகளுடன் ஓயாது போரிடுகின்றனர்.

மனோ இச்சை, கோபம் — இவை மனித உள்ளத்தில் ஒளிர்ந்து கொண்டிருக்கிற ஆன்மீக ஒளியை மறைத்திடும் திரைகளாகும். கோபத்தை அடக்கி ஆசையை வென்று உள்ளத்தைத் தூய்மைப் படுத்துவது ஆன்மீக நெறியில் முக்கியத்துவம் வகிக்கிறது. மனோ ஆசை மனிதனை மாபெரும் பாக்கியத்திலிருந்து அகற்றி விடுகின்றது; ஹஸ்ரத் ஆதம் (அலை) அவர்கள் போர்த்தியிருந்த ஆன்மீக உடையைக் கிழித்தெறிந்து, அவர்களை இத்தரணிக்கு இறக்கிவிடக் காரணமாக இருந்தது. ஆசைக்கு அடிபணிந்ததின் காரணமாக அரியணையில் அமர்ந்திருந்த ஹஸ்ரத் சுலைகா (அலை) அவர்கள் அப்பதவியை இழந்து தவிக்கலானார்கள். ஆசையை அடக்கித் தனது உள்ளத்தைத் தூய்மையாக்கிக் கொண்ட ஹஸ்ரத் யூசுப் (அலை) அவர்கள் அரச பதவிக்கு உயர்ந்தார்கள். ஹஸ்ரத் மஹ்பூப் சுபுஹானி முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் தமது உள்ளத்தில் எழுகின்ற தீய ஆசைகளை அடக்கி அதனை இறைவழியில் துணையாக்கிக் கொள்ளும் பொருட்டு 25 ஆண்டுகள் இராக் பாலைவனங்களில் கடும் தவம் புரிந்தார்கள்.

இறைவன் கூறுகின்றான்: "மனோ ஆசையைத் தனது கடவுளாக ஆக்கிக் கொண்டானே அவனை நபியே நீர் பார்த்தீரா?"

இவ்வசனம் ஆசையின் பயங்கர விளைவுகளை எடுத்துரைக்கப் போதுமானதாக இருக்கின்றது. இப்படித்தான் இழிந்த பண்பு ஒவ்வொன்றும் ஆன்மீக முன்னேற்றத்தைத் தடுக்கும் வன்மை மிக்க கருவியாகும். இப்பண்புகள் மானிட உயர்வின் பரம வைரிகள். மனித உள்ளத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற தெய்வீக ஒளியை மறைத்திடும் திரைகள். எனவே வலிமார்கள் இழிந்த பண்புகளோடு போரிடுவதைத் தமது குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றனர். தமது கடுந்தவம் என்கிற நெருப்பால் இழிவான பண்புகள் என்கிற பயிர்களை எரித்துச் சாம்பலாக்கி அதையே ஆன்மீக நெறி வளர்ந்தோங்குவதற்கு உரமாக்கிக் கொள்கின்றனர். இத்தரணி வாழ்க்கையின்போது மனிதன் எண்ணிறந்த தீமைகளுக்கும் இலக்காகி விடுகின்றான். செல்வம், மனைவி, மக்கள், அழகிய இல்லம், வாழ்க்கைச் சாதனங்கள், இன்ப மளிக்கின்ற பொருட்கள் — இவைகளின் பால் பேராசை கொள் கின்றான். அவ்வாசை அவனது உள்ளத்தில் கொஞ்சம் கொஞ்ச மாக வளர்ந்து எண்ணிறந்த தீமைகளைச் செய்யத் தூண்டி விடுகின்றது. பெருகி வருகின்ற தீமைகளின் காரணத்தால் அவனது உள்ளம் கறைபடிந்து, இருள்படிந்து தனது இயற்கை யான சக்திகள் யாவற்றையும் இழந்து விடுகிறது. மானிடக் குறிக்கோளை அடையப் பெருது ஷைத்தானுடைய வலுவான விலங்குகளில் மாட்டிக்கொண்டு விடுகிறது. இப்படிப்பட்ட இருண்ட உள்ளத்தினரைத் தெய்வீக ஒளி பொருந்திய நெறி வாழ்வுக்கு இட்டுச்சென்றிட அவுலியாக்கள் அரும்பாடுபடு கின்றனர். அவர்கள் அனைத்துலக மக்களுக்கும் ஏற்றமிக்க இறை நெறியைப் புகட்டுகின்றனர். ஏகத்துவம், அரிய பண்புகள், அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்களை முற்ற முற்றப் பின் பற்றிச் செல்வது — இவற்றை அனைத்துலகிலும் பரப்பிடப் பெரும் முயற்சி எடுக்கின்றனர். அவர்கள் செய்கின்ற ஒவ்வொரு செயலி லும், இறைபணியும், மக்கள் பணியும் இழைந்திருக்கின்றன. மக்கள் பணியே அவர்களுடைய இலட்சியம். எத்துணைத் துன்பங்கள் நேரிடினும் மக்கள் பணிபுரிய அவர்கள் தவறியதே இல்லை.

அபூபக்கர் ஷிப்லி என்ற ஞானியவர்கள் ஒரு வீதியின் ஓர மாகச் சென்று கொண்டிருந்தார்கள். அப்போது அருகிலிருந்த ஒரு மரம், "ஏ ஷிப்லி! கொஞ்சம் நில். என்னைக் கவனி. என்னை மனிதர்கள் கல்கொண்டு எறிகின்றனர். அதற்காக நான் அவர்கள்பால் கோபம் கொள்ளவில்லை. அவர்கள் மீது அனுதாபம் கொண்டு என் வயிற்றில் விளைந்த அருங்கனிகளை அள்ளி அள்ளி வழங்குகின்றேன். கடும் வெயிலில் தவிப்பவருக்கு

நிழலேயும், இனிய காற்றையும் அளிக்கின்றேன். இப்படி நீயும் ஆகிவிடு. சாதாரண மக்கள் உனக்குத் துன்பங்கள் தந்திடினும் அவற்றைப் பொருட்படுத்தாது அவர்களுக்கு நன்மைகள் என்ற பேரின்பக் கனிகளை வழங்குவாயாக'' என்று கூறியது. இதைக் கேட்ட ஞானி அபூபக்கர் அவர்கள் பேராச்சரியமுற்றுர்கள். அதே நேரத்தில், 'கனி வழங்கும் இம்மரம் போன்று மக்கள் பணிபுரி கின்றவனுக நானில்லையே' என்று ஏங்கினுர்கள்.

ராபியத்துல் அதவியா என்கிற பெண்கள் திலகமவர்களேச் சந்திக்கும் பொருட்டுப் பல மேதைகள் வந்திருந்தனர். அவர் களே நோக்கி அப்பெண்கள் திலகமவர்கள் "நீங்கள் விளக்கைப் போலவும், ஊசியைப் போலவும் ஆகி விடுங்களேன்'' என்று கூறினுர்கள். அதற்கவர்கள் "நீங்கள் கொஞ்சம் விளக்கிக் கூறுங்கள்'' எனக் கேட்டுக் கொண்டார்கள். அதற்கு அம் மேதையவர்கள் "இதோ இந்த விளக்கைப் பாருங்கள் இது எரிந்து, எரிந்து நமக்கெல்லாம் ஒளிதருகின்றது. இப்படி நீங்கள் இருள்படிந்த மக்களுக்கு ஒளிதரும் விளக்கைப்போல் ஆகி விடுங்கள். இந்த ஊசியைக் கவனியுங்கள் இது நிர்வாணியாக இருந்து கொண்டு கிழிந்த ஆடைகளேத் தைத்து மனிதர் களுடைய மானத்தை மறைக்க உதவுகிறது. இது போல மனிதர் களின் குறைகளே மறைத்து அவர்களுக்குக் கண்ணியமான வாழ் வளிக்க உதவுங்கள்'' எனக் கூறினுர்கள்.

மனிதர்களுக்கு ஆற்றுகின்ற பணிகளில் மிக்க மேலான பணி இருள்படிந்த உள்ளங்களே ஒளிபெறச் செய்வதேயாகும். இது மாண்பு மிக்க பணி. நபிமார்கள் ஆற்றிவந்த மாபெரும்பணி. இப்பணியை வலிமார்கள் செவ்வனம் ஆற்றியுள்ளனர். தன் உடல், பொருள் ஆவி யாவற்றையும் இப்பணிக்காக அர்ப்பணித் திருக்கின்றனர். முஹ்யித்தீன் ஆண்டகை அவர்கள் தமது பிந்திய 40 ஆண்டுகளே இப்பணிக்கே அர்ப்பணித்தார்கள். அவர்களுடைய இறையொளி நிறைந்த இருதய உலேயிலிருந்து பிறந்த அருள் மொழிகளினுல் எண்ணிறந்தோர் ஒளி பெற்றனர். மேதகு ஷாதுலி நாயகம் அவர்கள் நாடுகள் பல கடந்து பலப்பல எதிர்ப்புகளிடையே இப்பணியினே ஆற்றியுள்ளார். இப்படியே வலிமார்கள் மக்களே ஆன்மீக நெறியிலும், ஷரீஅத் நெறியிலும் பக்குவப்படுத்திவந்தனர்.

வலிமார்கள் இத் தாழுலகையும் இதில் பெறுகின்ற இன்பங்களே யும் துச்சமாகக் கருதினர். இதிலிருந்து கொண்டே இறையின்பத் தைப் பெறப் பெருமுயற்சி எடுத்திருக்கின்றனர். திரண்ட பொற் குவியலேயும் மா மன்னர்களேயும் துச்சமாகக் கருதித் தூக்கி எறிந் தனர். அப்துல்லா இப்னு துஷ்தர் என்ற மேதை இராக் நாட்டிற்கு

வந்திருந்தார்கள். அந்நாட்டு மன்னர் குஷ்ட நோயால் அவதியுற்று நலிந்து கொண்டிருந்தார். மருத்துவ நிபுணர்கள் பலர் அற்புதமான சிகிட்சைகள் அளித்தும் எப்பயனும் பெருததினல் அவர் வேதனையால் விம்மிக் கொண்டிருந்தார். மெய்ஞ்ஞானி அப்துல்லா அவர்களின் வருகையைக் குறித்து மன்னருக்குக் கூறப்பட்டது. உடனே "அவரை அழைத்து வாருங்கள். அந்த நல்லவரின் பிரார்த்தனையினுல் என் பிணியகலும்; அழைத்து வாருங்கள்" என்று மன்னர் துரிதப்படுத்தினுர். அப்துல்லா இப்னு துஷ்தர் அவர்கள் வரவழைக்கப்பட்டார்கள். அம்மேதையவர்கள் மன்னரைக் கூர்ந்து நோக்கினுர்கள். மன்னர் அம்மேதையைப் பார்த்து "இறைநேசச் செல்வரே! என் பிணி என்னை உருக் குலைத்துவிட்டது. அணுவணுவாய்ச் செத்து மடிந்து கொண்டிருக் கிறேன். என்மீது கருணை கூர்ந்து என் பிணியகற்ற இறைவனிடம் வேண்டுவீர்களாக" என ஈனமான குரலில் வேண்டினுர். அதற்கு அம்மேதையவர்கள் சிறிது நேரம் மௌனமாக நின்று விட்டு, "மன்னரே! உம் பிணியகற்ற இறைவனிடம் நான் பிரார்த் திக்கிறேன். ஆனுல் உம் கொடுமையின் காரணமாகக் குற்றமற்ற நிரபராதிகள் உம் சிறைக் கூடத்தில் கிடந்து தவிக்கின்றனர். இதனை எண்ணுகின்றபோது என்னுள்ளம் பதைபதைக்கின்றது. இந்நிலையில் நான் எப்படிப் பிரார்த்தனை புரிவேன். எனவே முதலில் அவர்களை விடுதலை செய்துவிடும். எஞ்சிய உமது வாழ்க்கையில் முற்ற முற்ற நபியவர்களின் வாழ்க்கையைப் பற்றி நடப்பேன் என்று உறுதி கூறும்" என்று ஆணையிட்டார். உடனே அவர்கள் அனைவரையும் விடுதலை செய்யும்படி மன்னர் உத்திரவிட்டார். 'நபியவர்களின் பொன்னுன வாழ்வை முற்றிலும் பின்பற்றி நடப்பேன்' என்று வாக்களித்தார். அக்கணமே அப்துல்லா இப்னு துஷ்தர் என்ற மேதையவர்கள் தமது இரு கரங்களையும் விண்ணேக்கி உயர்த்தி 'இறைவனே உனதடியாரின் பிழைகளைப் பொறுத்து அவருக்குற்ற பிணியை அகற்றுவாயாக" எனக் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டார். என்ன ஆச்சரியம்! அவர் ஏந்திய கரம் கீழே தாழவில்லை. அதற்குள் மன்னரின் பிணியகன்று முழு ஆரோக்கியம் பெற்ருர். விஞடிப் பொழுதில் தனக்கு ஆரோக்கியம் கிடைத்தது பற்றி மன்னர் எண்ணி எண்ணி மகிழ்ந்து மேதையின் காலடியில் விழுந்து "எமக்குச் சுகமளித்த உத்தமரே உமக்கு நான் என்ன கைமாறு செய்வேன். இதோ என் நாட்டின் பொற்குவியல் திறந்து கிடக்கிறது. அதில் தாங்கள் விரும்பிய அளவு அள்ளிச் செல்லுங்கள்" என்று நன்றியுடன் கூறினுர். இதைக்கேட்ட மாமேதையவர்கள் "அரசரே! பொற்குவியல் என்ன? உலகமே என் காலடியில் விழுந்திடினும் அதை நான் ஏறிட்டும் பாரேன். இத்தரணியில்

பற்றற்று வாழ்கின்ற எம்போன்ற துறவிகள் இறையின்பத்தில் திளைப்பவர்கள். உன்போன்ற இருள்படிந்த உள்ளத்தவர்களை ஒளிபெறச் செய்பவர்கள். அவர்களுக்கு இயற்கைப் பொருட்கள் அடங்கி நடக்கின்றன'' — என்று கூறிவிட்டு எதிரிலிருந்த பரந்தவெளியை நோக்கித் தன் கரத்தால் சுட்டினார்கள். அடுத்த கணம் அப்பகுதியாவும் தங்கக்குவியலாக மாறியிருந்தன. இதைக் கண்ட மன்னரும், மற்றையோரும் பேரதிசயம்கொண்டனர். கண்களை அகல விரித்துக்கொண்டு பார்த்தனர். உடனே மாமேதையவர்கள் ''இயற்கைப் பொருட்களின்மீது ஆதிக்கம் செலுத்துகின்ற இறைநேசச் செல்வர்கள் தங்கக் குவியல்கள் மீதா பற்றுக்கொள்ளப் போகின்றனர்? மனித உள்ளங்களைப் பொற்கம்பி யாக ஒளிரச்செய்யும் அவர்கள் இறையின் முன் பணிந்து அவனது பேரின்பத்தை அடைய ஏங்கி நிற்பார்கள். எனவே உன் பொற்குவியலிலுள்ள தங்கங்களை ஏழை எளியவர்களின் அற வாழ்வுக்கு அர்ப்பணிப்பீராக'' என்று அறிவுரை பகர்ந்துவிட்டுச் சென்றார்கள்.

மாமன்னர் ஹாரூன்ரஷீத் அவர்களும், தலைமை நீதிபதி அபூ யூசுப் ரஹ்மத்துல்லா அவர்களும் தாவூத்துத்தாய் என்ற இறைநேசச் செல்வரைச் சந்திக்கச் சென்றனர். தாவூத்துத்தாய் அவர்கள் ''உங்கள் இருவரையும் சந்தித்து உரையாட எனக்கு நேரமில்லை. உலகை எல்லாம் படைத்து இரட்சிக்கின்ற மாமன்னன் அல்லாஹ்விடம் உரையாடிக்கொண்டிருக்கும்போது உங்களிடம் உரையாட எனக்கேது அவகாசம். இங்கிருந்து சென்றுவிடுங்கள்'' என்றுரைத்தார். இதைக்கேட்ட அபூயூசுப் ரஹ்மத்துல்லாஹ் அவர்கள் ''இந்நாட்டின் பேரரசரல்லவா உமது இல்லத்திற்கு வந்திருக்கின்றார். அவரை எப்படிப் புறக்கணிக்க முடியும்?'' எனக்கேட்டார். ''தனது குடிமக்களுக்குத் தீங்கு செய்து அவர்களை வழிகெடுக்கும் உன்மத்தர்கள் எங்கே? உலகுக்கு எல்லாம் அருள்புரிந்து இரட்சித்துக் காப்பாற்றும் வல்லவனாகிய அல்லாஹ் எங்கே? அவன் முன்னே பணிந்து அவனது அருளைவேண்டி இறைஞ்சிக்கொண்டிருக்கும் என் போன்றோர் இவர்களைப் புறக்கணிப்பது எப்படிக் குற்றமாகும்? சென்றிடுங்கள், எனது நேரத்தை வீண்படுத்திவிடாதீர்கள்'' என்று கடிந்துரைத்தார் தாவூத்துத்தாய் அவர்கள்.

இப்படி வணக்கத்துக்கும், நேரிய நடைமுறைகளுக்கும் குறுக் கீடாக இருப்பவர்களை — அவர்கள் மன்னராக இருப்பினும் சரி — உயர் அதிகாரிகளாக இருப்பினும் சரி — வலிமார்கள் கண்டிக்கத் தவறியதில்லை. தீமைகளை எதிர்த்துப் போராடுவதில் மாபெரும் வீரர்களாகவே அவர்கள் திகழ்ந்துள்ளார்கள். அதே நேரத்தில்

அல்லாஹ்வுக்கு அடிபணிவதில் மெய்சோர்ந்து காணப்படு வார்கள். இழி பண்புகளை வேரறுத்து, உயர் பண்புகளை இயல் பாக்கிக் கொள்கின்றனர். அல்லும் பகலும் இறைவணக்கத்தில் அமிழ்ந்து, அமிழ்ந்து தம்மையும், சுற்றுசார்புகளையும் மறந்து கிடக்கின்றனர். இயற்கைப் பொருட்களில் ஆராய்ந்து, ஆராய்ந்து இறையின் பேருண்மைகளைக் கண்டு களிக்கின்றனர். படைப்பு களனைத்தையும் ஓர் குடும்பமாகக் கருதி அவைகள் பால் அன்பும் பரிவும் காட்டுகின்றனர். கதிரவனொளி உலகுக்குப் பொதுவாக இருப்பது போல அவர்களுடைய பணி, யாவருக்கும் பொதுவாக அமைகிறது. மானிட வர்க்கம் இறை நெறி பெற்று உயர்வடையும் பொருட்டு ஓயாது உழைக்கின்றனர். இறை நம்பிக்கை, தூய வணக்கம், அன்பு, அருள், பரோபகாரம், நீதி, நேர்மை, சத் தொழுக்கம், தீமை ஒழிப்பு — இவை போன்ற அகமியப் பண்பு களில் மக்களைப் பண்படுத்தி இறையருள் பெறுவதற்கு அவர்களைத் தகுதி உள்ளவர்களாக்குகின்றனர். மனோ இச்சையை வெல்லு கின்றனர். வணக்கங்களினால் உள்ளங்களை ஒளிமயமாக்குகின்ற னர். 'ருபூபியத்' என்கிற நீரூற்றிலிருந்து ஒலித்தோடுகின்ற இனிமையான நறுமணம் கமழுகின்ற தெய்வீக நீரைப் பருகிப் பருகிப் பரமானந்தமடைகின்றனர். அப்பரமானந்தம் முதிர்கின்ற போது அவர்களுடைய கண்களாகவும், காதுகளாகவும், கரங் களாகவும், கால்களாகவும் அல்லாஹ் ஆகிவிடுகின்றான். இந்நிலை யில் அவர்கள் மனித நிலைகளை முற்றாய் இழந்து அமர நிலைகளை யும் கடந்து, தெய்வீக நிலை பெறுகின்றனர். இப்படிப்பட்ட தெய் வீக 'தஜல்லி' ஏற்பட்ட பொழுது மெய்ஞ்ஞான மேதை ரிபாயி ஆண்டகை அவர்கள் நீராக உருக்கித் தன்னையே இழந்த நிலை பெறுகின்றார். அபூ யஜீதுல் பிஸ்தாமி என்ற மெய்ஞ்ஞானி அவர் கள் பரமார்த்திக நிலையில் பரவசமடைந்த போது, "விண்டுரைக்க முடியாத என் மகத்துவம்தான் என்ன? என்னையன்றோ தூய்மைப் படுத்திடும் நிலை நேர்ந்து விட்டது" என்று மெய் மறந்து கூறினார். இம் மகானு பாவர்கள் மீது அல்லாஹ் கருணையைச் சொரிகின்றான் அவர்கள் பேரற்புதங்களைக் காட்டுகின்றனர். உலகம் அவர்களுக் குக் கட்டுண்டுவிடுகிறது. எண்ணியதைச் செய்கின்றனர். ஏற்றம் பெறுகின்றனர். இறைப் பண்புகளோடு ஒன்றிவிடுகின்றனர். அவர்களுக்கும், இறைவனுக்கும் எண்ணிறந்த இரகசியங் களுண்டு. அவற்றையெல்லாம் மனிதர்கள் அறிய முடியாவிடினும் அவற்றை நம்பிவிடுவது சிறப்புடையது. புற அறிவு கொண்டு அவற்றை ஆராய முயல்வது வழிகேட்டில் இட்டுச் செல்லும் மனித அறிவு வரையறைக்குட்பட்டது. அதன் வாயிலாக இறையருள் பெற்ற மெய்ஞ்ஞானிகளை ஆராய முற்படுவது அறிவுடைமை யாகாது. ஏனெனில் அறிவு கண்போன்றது. அக்கண் ஒளி

பெற்றிருப்பினும், பிற பொருளைப் பார்த்துப் புரிய வேண்டுமாயின் ஆகாய ஒளி தேவைப்படுகிறது. ஆகாய ஒளியில்லையாயின் கண்ணொளி பயன்படாது. இப்படித்தான் உள்ளத்தின் கண்ணாக அறிவு அமைந்திருக்கிறது. அவ்வறிவு ஒளிரவேண்டுமாயின் இறையின் அருளொளி தேவைப்படுகிறது. அவ்வருளொளி அறிவுடன் சங்கமமாகும் போதுதான் அறிவு பூரணப் பொலிவடைகின்றது. அருளொளியில்லையாயின் அறிவொளி பயன்படாது. எனவே இறையொளிபெற்ற அவுலியாக்களின் செயல்களுடைய இரகசியங்கள் குறித்து நமக்குத் தெளிவு கிடைக்காவிடினும் நம்பி விடுவது மிக்கமேலானது. நம்பிக்கை, தெளிவு பெற மிகச் சிறந்த வழியாகும். நமது அறிவுக்குப் புலப்படவில்லை என்பதற்காக எதையும் மறுப்பது இயற்கையின் நியதிக்கு அப்பாற்பட்டதாகும். இது குறித்து அறிவுலகப் பேரொளி இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள் தமது யஹ்யாவில் இப்படி எழுதுகிறார்கள்:

“வணிகர் ஒருவர் மலை முகட்டின் சமபகுதியில் அழகியதோர் தோட்டத்தைப் பெற்றிருந்தார். அத்தோட்டத்தைச் சுற்றிலும் பேரீச்ச மரங்கள் வளர்ந்திருந்தன. கோதுமைப் பயிர்கள் சூல் கொண்டு தலை கவிழ்ந்திருந்தன. மலர்கள் நிறைந்த பூச்செடிகள் ஏராளமிருந்தன. கனி செறிந்த மரங்கள் நிறைந்திருந்தன. இடையிடையே நீரருவிகள் சலசலவென ஓடிக்கொண்டிருந்தன. இப்படிப்பட்ட எழில் குலுங்கும் தோட்டத்தை விட்டுவிட்டு அவர் இறந்துவிடுகின்றார். அவருடைய சொத்துக்கள் அனைத்துக்கும் முழு உரிமை பெற்ற அவருடைய ஒரே மகன் அத்தோட்டத்தை மேற்பார்க்கும் பொறுப்பை மேற்கொள்கின்றான். ஒரு தினம் அவன் தன் தோட்டத்தைச் சுற்றிப்பார்க்கிறான். அதிலிருக்கின்ற ஒவ்வொன்றும் பயனுடையதாக இருக்கின்றது. சில கனிகள் தருகின்றன; சில உணவுதானியங்கள் தருகின்றன; இன்னும் சில நறுமணம் தருகின்றன; வேறு சில நிழலும், இன் காற்றும் தருகின்றன. இப்படி அழகிய தோட்டத்தை அமைத்துத் தந்த தந்தையின் பேரறிவை எண்ணி மகிழ்வடைகின்றான். அதே நேரத்தில் அத்தோட்டத்தின் விளிம்பில் எப்பயனுமற்ற சிறியானங்கைச் செடிகள் இருப்பதைக் கண்டு அதிருப்தி அடைகின்றான். இச்செடிகள், கனிகள், தானியங்கள், காற்று, மணம் எதுவுமே தருவதில்லையே. எழில்மிக்க இத்தோட்டத்தை அமைத்த தனது தந்தை பயனற்ற இச்செடியினை இங்கு ஏன் நட்டார் எனச் சிந்தித்தான். அவனுடைய அறிவுக்கு எதுவுமே புலப்படவில்லை. எனவே அவைகளை அகற்றிட எண்ணினான். அத்தருணத்தில் அவனுடைய தந்தையின் உற்ற நண்பர் அங்கு வந்தார். அவரிடம் இச்செடிகளை அகற்றும் தனது திட்டத்தை

அவன் எடுத்துரைத்தான். அப்போது அவர், ''மகனே! உன் தந்தை ஆழ்ந்த அறிவுடன் இவற்றை இங்கு நட்டிருக்கின்றார். நீ பக்குவமடையாத காரணத்தினால் இவற்றின் உண்மையைப் புரிந்துகொள்ளாமல் உன் தந்தையைக் குறைகூறத் துணிகின்றாய். இப்பகுதி விஷ ஜந்துக்கள் மிகுந்தது இங்கு அழகிய தோர் தோட்டத்தை அமைத்து அதன் இன்பங்களை அடையப் பெறுகின்றவருக்கு விஷ ஜந்துக்களிடமிருந்து பாதுகாப்புப் பெறுவது இன்றியமையாதது. இச்செடிகள் இங்கிருப்பதினால் விஷ ஜந்துக்கள் இவற்றினருகிலும் வரமாட்டா. விஷ ஜந்துக்களின் கொல்லியான இச்செடிகளை உனது தந்தை இங்கு நட்டது அனுபவமிக்க அறிவுக்குச் சான்றாகும்'' என்று கூறினார். தனது தந்தையின் நண்பருடைய கூற்றைச் செவியேற்றுத் தன் அறிவின்மையை உணர்ந்தான். தன் தந்தையைக் குறை கூறியது குறித்து மனம் வருந்தினான். தன் அறிவுக்குப் படாதவற்றைக் குறித்து எதிர்க்கலானேனே என்று எண்ணி ஏங்கலானான்.

எனவே அவுலியாக்களின் செயல்கள் குறித்து நமக்குத் தெளிவு ஏற்படவில்லையாயின் அவற்றை எதிர்ப்பது ஏற்றமுடையதாகாது. அவற்றை அல்லாஹ்விடம் ஒப்படைத்துவிட்டு அவனுடைய நேயர்களான இறைநேசச் செல்வர்களை நம்பிவிடுவது நலமிக்கது; நன்மைகளுக்கு வழிகோலுகின்றது. அன்னவர்கள் குறித்து வான்மறை இப்படிக் கூறுகிறது:

''திண்ணமாக அல்லாஹ்வினுடைய வலிமார்களுக்கு அச்சமென்பதே இல்லை. எது குறித்தும் அவர்கள் கவலையடையவும் மாட்டார்கள்''.

எனவே அவுலியாக்கள்மீது உண்மையான பற்று நமக்கு இருக்குமாயின் அவர்களை முற்றிலும் பின்பற்றி நடப்பதே ஏற்றமிக்கது. அவர்கள்மீது நாம் கொண்ட பற்றை எடுத்துக்காட்ட வல்லது இஃதன்றி வெறும் சடங்குகளில் ஈடுபடுவது அவர்களின் பற்றுதலை எடுத்துக்காட்டாது. எல்லாம்வல்ல அல்லாஹ் அருளொளி பெற்ற இறைநேசச் செல்வர்களின் வழியில் நம்மை எல்லாம் நடத்திவைப்பானாக.

---

# உறவு

ரா. திருவேங்கடம் எம். ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர்
மன்னர் திருமலைக் கல்லூரி, மதுரை.

"மன்னு உலகத்து மன்னுதல் குறித்துத்
தம்புகழ் நிறீஇத் தாம் மாய்ந் தனரே — புறம்"

என்பதற்கிணங்க இவ்வுலகில் வாழ்ந்து மறைந்த அருளாளர்களில் சீரியர் *பீர்முகம்மது அப்பா வலியுல்லாஹ்* என்னும் கவிஞர் ஆவர். இவர் பிறப்பால் இஸ்லாமிய சமயத்தவர். எனினும் பிற சமயத்தவரும் பின்பற்றக்கூடிய வகையில் அருங்கருத்துக்களை வழங்கியுள்ளார்.

மேலை நாட்டுக் கவிஞர் *தாமஸ்கிரே* என்பார் தன்னுடைய கையறு நிலைப்பாடலில் *"நல்ல ஒளியுள்ள நன்முத்துக்கள் ஆழங்காண முடியாத ஆழியுள் ஆழ்ந்து கிடக்கின்றன. நறுமணமுள்ள நல்ல மலர்கள் வெகுதூரக் காடுகளில் பயனற்று மலர்ந்து வாடிவிடுகின்றன"* என்றார். இக்கருத்துக்கள் நம் கவிஞருக்கும், அவர் தம் பாடலுக்கும் பெரும்பாலும் பொருத்தமாகும் எனலாம். இஸ்லாமியப் பெருங்கவிஞர் வரிசையில் சிறப்பிடம் பெறவேண்டிய இவர் பூமியில் புதைந்து கிடக்கும் புதையலைப் போன்றவர். எனவே இவரது சிறப்புக்களையும் இவர் தம் பாடல்களின் சிறப்பியல்புகளையும் எடுத்துக்கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இவர் நெல்லை மாவட்டத்துத் தென்காசியில் எளிய குடும்பத்தில் தோன்றியவர். எனினும் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த தக்கலை

என்னும் பகுதியில் மறைந்தவர். இவர் காலம் கி. பி. 17-ஆம் நூற்றுண்டு எனலாம். 95 ஆண்டுகள் இவ்வுலகில் வாழ்ந்தார். இதில் பெரும்பகுதியைக் காடுகளிலே அலைந்தும் நிட்டையிலே ஈடுபட்டும் கழித்தார்.

இவர் பாடிய பாடல்கள் பதினெட்டாயிரத்துக்கும் மேற்பட்டனவாகும். அவை ஏறத்தாழ இருபது நூல்களில் அடங்கியுள்ளன. இவரது பாடல்கள் தாயுமானவர், வள்ளலார், குணங்குடி மஸ்தான் சாகிபு ஆகியோருடைய பாடல்களின் நடையையும் போக்கையும் பின்பற்றிச் செல்கின்றன எனலாம்.

இப்பாடல்கள் சில *"ஞானரத்தினக் குறவஞ்சி"* என்னும் பெயரில் பதினெண் சித்தர் பாடல் வரிசையில் இடம் பெற்றுஉள்ளன.

இவர் இறைவனைப் பற்றியும் அவனது சிறப்பியல்புகளைப் பற்றியும் பல பாடல்களில் விரிவாகப் பல கருத்துக்களை வழங்கியுள்ளார். அக்கருத்துக்கள் வாழையடி வாழையென வந்த திருக்கூட்டமாகிய நாயன்மார்கள் ஆழ்வார்கள் பாடல்களைப் பெரிதும் ஒத்திருப்பதைக் காணலாம். அவற்றை ஈண்டு விரிப்பின் பெருகும். இங்கு ஒரு பாடலை மட்டும் எடுத்துக்கொள்வோம்.

"உற்ருரும் இல்லை உறவாரும் இல்லை இங்குன்னை யன்றி
மற்ருரும் என்னை வளர்ப்பதுண்டோ மறைதன்னைமிகக்
கற்ருலும் பாவம் கசந்தாலும் கேடு உன்னைக் காண்பதற்கு
வித்தார வாழ்வு தருவாய் எமக்கென்று மேலவனே"

—ஞானப்புகழ்ச்சி.

இப்பாடலில் 'தனக்கு வேண்டியவர்களோ உறவினர்களோ இவ்வுலகில் இல்லை; இறைவன் ஒருவனே தனக்கு எல்லா உறவுமாவான். வேறு எவரும் தன்னைக் காத்தருள முடியாது. அவன் ஒருவனே உயர்ந்த வாழ்வை அருளக்கூடியவன். பிறரை உறவாகக் கொண்டு துன்பமடைதல் கூடாது' என்கிருர்.

இவர் அருளிச்செய்த இச்சுருக்கமான கருத்துக்கள் விளக்கமாக நம்மாழ்வார் அருளிச்செய்த பாடல்கள் பலவற்றுள் இடம்பெறுவதைக் காணலாம். வைணவ சமயத்தின் ரகசிய நூல்களில் ஒன்ருன *முமுட்சுப்படியில்*

"ஈச்வரனை யொழிந்தவர்கள் ரக்ஷகரல்லர் என்னுமிடம்
பரபந்த பரித்ராணத்திலே சொன்னேம்"

என்னும் வாக்கியம் இங்கு நோக்குதற்குரியது. இறைவனே எக்காலத்தும் நம்மைக் காக்கும் உறவினன் (நிருபாதிக பந்து)

மற்ற தாய் தந்தையர் முதலானோர் இடையிலே வந்த உறவினர் (ஔபாதிக பந்து). அவனுடைய உறவு உயிரோடு ஒட்டியது *(ஆத்மபந்து)*. இவர்களுடைய உறவு உடலோடு ஒட்டியது *(தேகபந்து)*. சகோதரர்கள் உறவினர்களல்லார் என்பதை வாலி இராவணன் வரலாற்றால் உணரலாம். பெற்றோர்கள் உறவினர்கள் அல்லர் என்பதைக் கைகேயி, இரணியன் வரலாற்றால் அறியலாம். பெண்களுக்குக் கணவர்கள் உறவினர்கள் அல்லர் என்பதைத் தருமன், நளன் வரலாற்றால் உணரலாம்.

"சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வமும் நன்மக்களும்
மேலாத் தாய்தந்தையும் அவரேயினி யாவாரே"

திருவாய்மொழி 5-1-8

இராமபிரானைப் பின்தொடர்ந்த இலக்குவன் *'ப்ராதா, பர்த்தாச பந்துச்ச பிதா சமம ராகவ'* என்று இராமனையே எல்லா வுறவாகக் கொண்டான் என வால்மீகி இராமாயணம் கூறுகின்றது. ஆழ்வாரும் இறைவனையே எல்லாவித உறவாகக் கொண்டதாக இவ்வடிகளால் குறிப்பிடுகிறார்.

மேலும் தம் திருவாய்மொழியில் *'கொண்ட பெண்டிர்'* எனத் தொடங்கும் 9 ஆம் பத்தில் முதல் பதிகத்தில் பல பாடல்களில் இக்கருத்தினையே வலியுறுத்தியுள்ளார். கீழ்த் திருவாய்மொழியில் *'நெடுமாற்கடிமை'* எனத் தொடங்கும் பதிகத்தில் அடியார்களே எல்லா உறவு மென்று பாடியுள்ளார். இது முரண்பாடானதன்று. ஏனெனில் ஒரு பொருளினிடத்துக் கொண்ட தொடர்பு அதனைச் சார்ந்த பிற பொருள்களினிடத்தும் கொள்வது ஏற்புடையதே. அழிந்து போகிற ஆபாச பந்துக்களை நம்பியிருப்பாருடைய மயக்கம் நீங்கும் வண்ணம் பல கருத்துக்களைக் கூறியுள்ளார்.

"கொண்டபெண்டிர் மக்களுற்றார் சுற்றத்தவர் பிறரும்
கண்டதோடு பட்டதல்லால் காதல் மற்றுயாதுமில்லை"

(9-1-1)

உயர்ந்தவுறவாகக் கொள்ளப்பட்ட மனைவி, மக்கள், பிறப்பின் காரணமாக வந்த உற்றாரும், இடையிலே திருமணத் தொடர்பால் வந்த சுற்றத்தாரும் பிறரெனப்படும் நண்பரும் பொருளிருந்த போது அன்பு பாராட்டுபவர்கள். அல்லது நேரில் காணுகின்ற போதே அன்பு கொள்வார்கள். இறைவன் அப்படிப்பட்டவனல்லன். நாம் அவனை விரும்பாவிட்டாலும் நம்மை எக்காலத்தும் காத்தருளுதலால் அவனே *நிருபாதிக பந்து* ஆவன்.

"துணையும் சார்வுமாகுவார் போல் சுற்றத்தவர் பிறரும்
அணையவந்த வாக்கமுண்டேல் அட்டைகள் போல்
சுவைப்பர்" (9-1-2)

இறைவனல்லாத வுறவினர்கள் உதவி செய்வாரைப் போலே யிருந்து தங்களுக்கு வேண்டிய பயன்களை நிறைவேற்றிக் கொள்வார்கள். *துணையாவது* இன்பதுன்பங்களைப் பகிர்ந்து கொள்வது. *சார்வாவது* வேறு புகலில்லாதபோது தாங்களே புகலானது. இத்தகைய தன்மை உலகில் உள்ள உறவினர் ஒருவரிடத்திலும் இல்லை. இப்படி நடிப்பவர்கள்தான் உலகில் உள்ளனர் என்பது '*ஆகுவார் போல்*' என்ற சொல்லாட்சியினல் விளங்கும். அவர்கள் அன்புடையவர்போல் நடித்துப் பொருள் கிடைக்குமளவில் பசையறக் குருதியைக் கவர்ந்து குடிக்கும் *அட்டைகள்* போல் அவற்றைக் கவர்ந்துகொள்வர். எனவே நம்பிக்கைத் துரோகிகளாகிய இவர்களை விடப் பற்றுக்கோடாக இருக்கும் இறைவனையே துணையாகக் கொள்ளவேண்டும்.

அடியார்களுக்கு அவன் அன்பில் ஐயம் பிறந்தாலும் அதையும் நீக்கிக் காத்தருளும் உறவினன். இவனை இராமாயணத்தில் இராமனிடம் சுக்ரீவனுக்கு ஏழுமராமரங்களைக் கணையொன்ருலே கொய்து அரியசெய்து காப்பாற்றியதன் வாயிலாக நன்கறியலாம்.

"பொருள்கை யுண்டாய்ச் செல்லக்காணில் போற்றி
யென்றேற்றே
இருள்கொள் துன்பத்தின்மைகாணில் என்னே
யென்பாருமில்லை'' (9-1-3)

ஒருவன் கையில் பொருள் இருப்பதாகத் தெரிந்தால் அதை எவ்வாறேனும் பறித்துவிட உறவு சொல்லிப் பலர்வருவர். பலவாறு வாழ்த்துவர். இவர் இதைக்கேட்டு மயங்கினவுடன் பொருளைக் கறந்துவிடுவர். பின்னர் உடன் நீங்கிவிடுவர். கையில் உள்ள பொருள் நீங்கி வறுமையுற்ற பின்னர் *ஐயோ பாவம்* (என்னே) என்று உபசாரத்திற்காகவாவது ஒருவார்த்தை கூடப் பரிந்து பேசமாட்டார்கள். அப்படிப் பரிந்து பேசினல் அவன் பிழைத்துக் கொள்வானே என்று எண்ணிச் சொல்லமாட்டார்கள் எனப் *பிள்ளைத் திருநறையூரர்* என்னும் பெரியார் பணிப்பர்.

இறைவனே நம்முடைய கைம்முதலற்றநிலை (ஆகிஞ்சந்யம்) பற்றுசாகக் கொண்டு காக்கின்றவனுகையாலே அவனே ஆபத்தில் காப்பாற்றும் உறவினனுகக் கொள்ளத்தக்கவன். எனவே நாம் அவனை வழி படவேண்டும் என்று எதிர்பார்ப்பவனல்லன். அவன் அருள்சுரக்கும்போது அதை விலக்காமையே அவன் நம்மிடம் எதிர்பார்ப்பது. அப்படிப்பட்டவர்களுக்கு '*அருள் கொள்ளாளாய்*' என்று பெயர். இறைவன் எதையும் தனக்கென்று விரும்பாத பரந்த செல்வமுடையவன்.

"அரணமா வரற்ற காலேக்கு என்றென்றமைக்கப் பட்டார்
சிரணங்கொண்ட தெப்பராவர் இன்றியிட்டாலுமஃதே"
(9-1-4)

வறுமையுறும்போது நமக்கு உதவுவர் என்று நம்பிச் சிலரிடத்தே பொருளைக்கொடுத்து வைப்பர் செல்வர். பொருளைப் பெறுபவர்கள் தங்களுக்கு ஏதோ கடன் செலுத்த வேண்டியிருந்து அதனைச் செலுத்தினதாக நினைத்துக் கிடப்பார் களே தவிரச் சிறிதளவும் உதவி புரியமாட்டார்கள்.

மேலும் இவன் இந்நிலையிலும் நம்மைப் போற்றுமலிருக் கின்ருனே என்று வெறுப்பர். தெப்பர் என்னும் வடசொல் புல்லியர் என்னும் பொருளுடையது.

தங்களுக்கு இன்பத்தையளித்துவரும் மாதரும் வயதும் பொருளும் கழிந்த நிலையில் வெறுத்தொதுக்கிவிடுவர். இறைவன் ஒருவனே என்றும் நமக்கு இன்பத்தை அளிப்பவன். *ஆசார்ய இருதயத்தில்* நாலாம் பிரகருணத்தில் ஒன்பதாம் கருத்தில்

"இம்மடவுலகர் கண்டதோடுபட்ட அபாந்தவ அரக்ஷக
அபோக்ய
அஸீக அநுபாய ப்ரதிஸம்பந்தியைக் காட்டி"

என்றருளிச்செய்தது நோக்குதற்குரியது. அவனுடைய அவதாரத்தின் நோக்கம் என்னெனில் தன்னை நம்பாதவர்களையும் நம்புமாறு செய்துகாத்து அருள்வதேயாகும். பெண்ணுறவால்வரும் இன்பம் இன்பமன்று. அது படமெடுத்தாடுகின்ற பாம்பின் நிழலை அடைந்தவன் அது தன்னைக் கொன்றுவிடுமென்றறியாது வெயிலின் விருந்து தப்பினேம் என்று ஒருவன் மகிழ்வதை யொக்கும் என கட்டுரை ஆசிரியர் கூறுவது சிந்திக்கத்தக்கது.

"இல்லை கண்டீரின்பமந்தோ உள்ளது நினையாதே
தொல்லையார்களெத்தனைவர் தோன்றிக் கழிந்தொழிந்தார்"
9-1-6

துன்பமயமானது இவ்வுலகம். உண்மையான இன்பம் எங்கேயுள்ளது? என்றும் அழியாததும் இன்பமுமாயிருப்பதும் இறை ஒன்றுதானே! அத்தகைய இறைவனைப் பற்றுவது எளிமையும் உடையது என்கிருர் அடுத்த பாட்டில்.

"மற்ருென்றில்லை சுருங்கச் சொன்னேம் மாநிலத்
தெவ்வுயிர்க்கும்
சிற்ற வேண்டா சிந்திப்பேயமையும் கண்டீர்களந்தோ" 9-1-7

இறைவனைப் பற்றுதற்குப் பெருமுயற்சிகளில் ஈடுபடவேண்டியதில்லை. காத்தருள்க என்று அவனை வணங்கத் தேவையுமில்லை

மனத்தாலே அவனை எண்ணுதலே போதுமானது. இதை உணராது எத்துணையோ பேர் வீணுக வாழ்நாளைக் கழிக்கின்றூர் களே எனக் கழிவிரக்கம்கொள்கின்றூர்.

"யாதுமில்லை மிக்கதனில் என்றென்று கருதிக்
காதுசெய்வான் கூதைசெய்து கடைமுறை வாழ்க்கையும்
போம்" (9-1-9)

பற்றவேண்டிய இறைவனைவிட்டு மற்ற உறவினர்களைத் தஞ்சமாகப் பற்றுமளவில் வரும் துன்பத்திற்கு ஓர் அழகிய உவமை கூறியுள்ளார் இப்பாட்டில். கனங்குழையிடக்காது பெருக்கப் புகுந்து பண்டுள்ளதையும் போக்கிக் கூதைசெய்யுமாப் போலே கடைகெட்ட சம்சார வாழ்க்கையும் இழந்து விடுவார்கள்.

இதுகாறும் கூறியவற்றுல் பல்வகை உறவினர்கள் எனக் கருதப்படும் உலகர்கள் உண்மையான உறவினர்கள் அல்லர். அவர்களால் யாதொரு பயனுமில்லை. இறைவன் ஒருவனே எல்லா வகையான உறவும் ஆவன். அவன்தான் நமக்கு எக்காலத்தும் நமக்குத் துணையாவான் என நம்மாழ்வார் விளக்கமாகக் கூறிய கருத்துக்களைத் தம் சிறந்த அனுபவத்தால் பீர்முகம்மது என்னும் கவிஞர் இப்பாடலில் சுருக்கி வரைந்துள்ளது படித்து இன்புறத் தக்கது.

---

இறைவன் ஒருவனுக்கு நன்மை செய்ய நாடினுல் நன்னடத்தையின் வாயிலைத் திறந்து விட்டு, விதண்டாவாதத்தின் வாயிலை அடைத்து விடுவான். இறைவன் ஒருவனுக்கு கெடுதியை நாடிவிட்டால் நன்னடத்தையின் வாயிலை அடைத்து விட்டு, விதண்டாவாதத்தின் வாயிலைத் திறந்து விடுவான்.

— மஃரூபுல் கர்கீ (ரஹ்)

இறைவன் அடியார்கள் மீது சன்மானங்களை வழங்குகிருன் - அதனுல் அவர்கள் அவன் பக்கல் மீளுவதற்காக. (ஆனுல்) அவர்களோ அவனை விட்டு விட்டு அச்சன்மானங்களைக் கொண்டே ஈடுபட்டு விடுகின்றனர்.

— அபூ யஸீதுல் புஸ்தாமி (ரஹ்)

# நற்பரர் பீர்முகம்மது வலீயுல்லாஹ்

*அதிராம்பட்டணம், அல்ஹாஜ் A. M. சம்சுதீன்,* B. A.,

(தலைவர் அரிமா சங்கம், தூத்துக்குடி)

இறைநேசச் செல்வர், இனிய தமிழ்ப்புலவர்—மறைபோற்றும் மாநபியின் மாண்புரைத்த மாஞானி, தக்கலையில் உறைந்துள்ள மிக்குயர் அப்பாவாம் செய்குபீர் முகம்மது வலீயுல்லாஹ் அவர்களின் அருமையும், பெருமையும் நிறைந்துள்ள தத்துவார்த்தப் பாடல்களில் காணப்படும் உயர்ந்த கருத்துக்களை விளக்கிடு முகமாக அறிஞர் பெருமக்களின் நெஞ்சங்களிலிருந்து பீறிட்டுக் கிளம்பும் உணர்ச்சியலைகளைத் தேக்கி, ஆய்வுக்கோவை என்ற பெயரில் நூலொன்றினை வெளியிடவிருப்பது குறித்து அளவற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

"பாடிப் பாடிக் களித்தாராம்—ஞானப்
பாலைக் கறந்து அளித்தாராம்
நாடி நரம்புத் தசையெல்லாம்—திரு
நடனம் புரியச் செய்தாராம்"

என்ற பெருமைக்குரிய சித்தரான வலீயுல்லாஹ் அவர்கள் தீன் குலத்துக்குச் செய்துள்ள அரும்பெரும் பணிக்கு நன்றி கூறவேண்டியதும், அவர்களைப் போற்றிப் புகழ்ந்து கொண்டிருப்பதும் நமது கடமைகளில் ஒன்றாகக் கருதிட வேண்டும்!

தென்காசி நன்னுடைந்த தெய்வீகத் திருமகனான வலீயுல்லாஹ் அவர்கள் தவத்தால் சிறந்த ஞானியாகவும்—ஒப்பற்ற மேதையாகவும்—தமிழாய்ந்த பெரும் புலவராகவும்—விளங்கியதால், அக் காலத்தில் திருவிதாங்கூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி

செய்து வந்த முத்துசாமித் தம்பிரானின் அன்பைப் பெற்று, அரண்மனையில் உள்ள அனைவராலும் "பாட்டாத் தம்பிரான்" என்று அன்பொழுகவும், செல்லமாகவும் அழைக்கப்பட்டுப் பெருமைப் படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இத்தகைய சிறப்புக்குரிய நமது அப்பா அவர்கள், இஸ்லாத்திற்கும், தமிழ் மொழிக்கும்—தீன் குலத்து மக்களுக்கும் ஆற்றியுள்ள அரும் பணியை நினைத்துப்பார்த்தால்—அவர்களின் பணி மகத்தானதாக விளங்குவதை அறிய முடியும்!

எத்தனையோ தமிழ்ப்புலவர்களும்—சித்தர்களும்—ஞானிகளும் நம் தமிழகத்தில் தோன்றி வாழ்ந்து மறைந்தபோதிலும், "நினைப் போரின் நெஞ்சமெல்லாம்" அப்பா அவர்கள் நிறைந்திருக்கின்றார்கள். காரணம் என்ன?

"ஆராரோ பாட்டுரைத்தார்
அவர் பசியைத் தீர்ப்பதற்கு
சீரார மெங்களப்பா
செந்தமிழின் பெட்டகமாய்
நேராளர் நெஞ்சமெல்லாம்
நிறைந் தொலிக்கும் புகழ்ச்சிதனை
ஆரமுதாயாத் தளித்தார்
ஆண்டவன்பால் கையேந்தி".

ஆம்! ஆண்டவனை நோக்கிக் கையேந்தி, அவர்கள் பாடியுள்ள 'ஞானப்புகழ்ச்சி' மிகச் சிறந்த பாடல் தொகுப்பு என்பதை அறிஞர்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள்.

ஞானப் புகழ்ச்சியைப் பாடும்போது,

கல்லும் கரையும்
கயவர் மனமும் உருகும்;
கொல்லும் விலங்கினமும்
கூத்தாடும்!

அத்தகைய நிலையில் உருக்கமாகவும்—பெருக்கமுள்ள வாழ்வு வேண்டியும்—நெருக்கமுள்ள உறவு வேண்டியும்—இறைவனை நோக்கி முறையீடு செய்திருப்பதை அறியும்போது தமிழ் இலக்கியத் துறையில் மெய்ஞ்ஞானிகளின் வரிசையில் அப்பா அவர்கள் முதலிடத்தைப் பெறுகிறார்கள்.

ஞானப்புகழ்ச்சியால் ஞாலத்தில் சிறந்து நிற்கும் அப்பா அவர்களை நோக்கிய கவிஞர்,

"சீரும் சிறப்பும் நிறைந்திடவே
சிந்தனை வளமும் உறைந்திடவே
பீரு முகம்மது வலியுல்லாஹ்
பெரியோன் புகழ்ச்சியுரைத்தாரே"

என்று சிறப்பித்துப் பாடுகிறார்.

ஞானப் புகழ்ச்சியைத் தந்த ஞானியர்க்கோன் அப்பா அவர்கள் "பிஸ்மில் குறம்" என்ற பாடல் தொகுப்பையும் தீன் குலத்து மக்களுக்கு வானமுதம்போல் வழங்கியுள்ளார்கள்.

பிஸ்மில் குறத்தில் கலிமாவின் தத்துவங்களை விளக்குவதுடன் இஸ்லாமிய அறநெறிகளையும் அழகுற விளக்கிச் சமுதாயத்தில் நடமாடும் போலிகளையும் அடையாளம் காட்டி விழிப்புறச் செய்கிறார்கள்.

கலிமாவின் தத்துவத்தை விளக்கும் போது அப்பா அவர்கள் "திருடமட்டும் திருடட்டும் திருக்கலிமாவை! திருடவலுவில்லாதவர் தெளிந்த வலீயாகார்" என்று கூறியிருப்பதிலிருந்து கலிமாவைத் திருடிய கள்வர்களில் அப்பா அவர்களும் ஒருவர் என்பது மட்டுமல்ல, திருக்கலிமாவைத் திருடமட்டும் திருடிக் கொண்டு தெளிந்த வலீ என்பதையும் அறிய முடிகிறது.

திருநெறி நீதம், ஞானமணிமாலை, ஞான ஆனந்தக்களிப்பு, குறம், குறவஞ்சி – என ஏராளமான பாடல்களையும் பாடியிருக்கிறார்கள் அவர்கள்.

ஞானிகளின் பாடல்களில் பக்திதான் இருக்கும் என்பார்கள். பக்தியும் உண்டு; அப்பா பாடலில் சக்தியும் உண்டு; கருத்துச் செறிவும் உண்டு; கற்பனை வளமும் உண்டு; கருத்துச் செறிவுக்கு அப்பா அவர்கள் பாடிய ஞானமணிமாலையைக் கூறலாம்.

மண்ணுலகில் பிறந்துவிட்ட மானிடன் தன்னையும் அறியாமல் தன்னைப்படைத்த தலைவனையும் அறியாமல் தாறுமாறான வாழ்வை மேற்கொண்டு கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்றலைந்து எதுவும் தெரியாத நிலையிலே எல்லாந் தெரிந்தவன்போல் நடிக்கின்றான். நடிப்புலகில் வாழ்கின்ற மானிடன் உண்மையுலகிற்கு வரவேண்டும். அவன் வரும் போது தான் தன்னையறியவும் தன்னைப்படைத்த தலைவனையறியவும் முடிகிறது. இருளிலோர் பொருளிருந்தால் யாவரும் காணார். ஆனால், இருளிலோர் பொருளிருப்பதை எவ்வாறு காணமுடியும்? காணவேண்டும்? அதன் பின்னர் என்னின்ன காணலாம்? என்று வினவும் மானிடனுக்கு மாமேதை பீரப்பா தமது ஞானமணிமாலைக் கவிதை உலகிற்கு அழைத்துச் செல்கிறார்கள். வாருங்கள் போய்ப் பார்ப்போம்.

"இருளிலோர் பொருளி ருந்தால்
யாவரும் காணார் கண்ணி
லுருகுமெய் விளக்க தாக்கி றூஹினை
நெய்ய தாக்கிப்
பொருளினைக் கனலாய்ப் பற்றிப் புத்தியைத்
சிறிய தாக்கி
யருளின்மேற் கொளுத்திப் பார்த்தா
லனைத்தையும் காண லாமே"

முதல் கேள்விக்கு விடை கிடைத்து விட்டது. அடுத்த கேள்விக்கு மானிடனுக்கு விடை கிடைக்கிறது.

"முகந்தெரியும் நந்நபிமெய் முற்றுந் தெரியு
மகந்தெரியும் ஞானவடி தெரியுஞ்-செகந்தெரியும்
விண்ணாடிக் குள்ளிறைவன் வீற்றிருக்கு முட்கமலக்
கண்ணாடி யைக்கண்டக் கால்"

கருத்துச் செறிவுள்ள விடை கண்டு கொள்கிறான் மானிடன்! மண்ணுலகின் ஏன் பிறந்தோம்? எதற்காகப் பிறந்தோம்? என்பதையறிந்து கொள்ளாமலே இவ்வுலக வாழ்வே சதமென்றெண்ணி அற்ப சந்தோஷத்தில் அலைந்து திரிந்து ஆர்ப்பாட்டம் செய்யும் மானிடனுக்கு முடிவு என்பது உண்டு. அது மரணம் என்ற வார்த்தையாகவும், சாவு-மவுத்து என்ற வார்த்தைகளாகவும் அவனது செவிகளில் ஒலித்திருப்பதைத் தவிர, அந்த நாளின் தன்மையையுணராமலே வாழ்கிறான். அப்படி வாழ்கின்ற மானிடன் சூழ வளத்திலிருக்கத் திடீர் என்று அவன் எதிர்பாராமலே அவனது உயிரைப் பறிக்கக் கொடும்பசி கொண்ட வேங்கையொன்று வந்து துரத்துகிறது.

சாவு என்றதும் சுண்ணும்பைப்போல் வெளுத்து விடுகின்ற கோழை மானிடன் வேங்கையை எதிர்க்கவா முடியும்? தப்பித்தோம் பிழைத்தோம் என்று தலைகால் தெரியாமல் ஓடுகிறான். ஓடி ஓடி அலுத்த அவனுக்குப் புகலிடமாக மெய்யானதோர் கிணறு தென்படுகிறது. தன் உயிரைக் காபாற்றிக்கொள்ளவும், வேங்கையின் விரட்டலிலிருந்து தப்பி விடவும் அந்தக்கிணற்றிலே குதிக்கின்றான். கானலின் கொடுமையால் நீரற்றுக் கிணற்றுச் சுவர்கள் வெடிப்புற்று, அந்த வெடிப்புகளின் வழியாகப் படர்ந்துள்ள கொடியை (விழுதை)ப் பற்றுக்கோடாகப் பற்றிக்கொண்டு அந்தரத்தில் தொங்குகின்றான்! மேலே விரட்டி வந்த வேங்கை. கீழே அக்கினியும் தேளும் மரவு. மறக்காய்ந்த சக்கரக் கோடாலி தான் மழுங்கிடும் காட்சியையும் கண்டு அதிர்ச்சியும் — பயமும்

ஏககாலத்தில் அவன் நெஞ்சைப் பிளந்து கொண்டிருக்கும் இந்தப் பரிதாபமான வேளையில் அவனுக்குக் கிடைத்த பற்றுக்கோடான கொடியை இரண்டு எலிகள் நறுக்கிக் கொண்டிருக்கின்றன!

இந்தக் காட்சியை கண்ட அவன் உள்ளம் என்னபாடு பட்டிருக்கும்? ஏன் நீங்களும் இப்படி ஒரு நிலைக்குள்ளானால்?

இதனை ஞானக்குரவர் செய்கு பீர்முகம்மது வலியுல்லாஹ் அவர்கள் தமது ஞானமணி மாலையில் கம்பீரமான நடையில் கலிவெண்பாவாகத் தருகிறார்கள்.

"இலங்கும் பொருளதனை யெல்லவரும் காண்கில்
நலங்குதுனி யாவதனை நாடார் - விலங்கினங்கள்
பத்தாறு டீர்பத்து நான்குநா றுயிரத்தில்
வற்றுமல் நிற்கும் மறைப்பொருளைக் கற்றூர்கள்
காட்டினர் பாரெனவே காதைவளைத் துட்பொருளைப்
பூட்டினு ரொன்றெனவே போதமுற-வாட்டமது
சூழ வனத்திலொரு சோம்பியிருந் தாற்போல
மாள விருக்கு மனிதர்காள்-ஏழைதனை
ஐவாய் வெருட்டி அவனோடிப் போயிளைத்து
மெய்யான வோர்கிணற்றி லேவீழ்ந்து — பொய்யான
வேர்பிடித்துத் தூங்கிடவே வேங்கையதன் மேலிருக்க
ஏர்பிடித்த வஃதீ ரெலிநறுக்கக் — காலதன்கீழ்
அக்கினியும் தேளும் மரவு மறக்காய்ந்த
சக்கரக் கோடாலி தான்மழுங்க — நெக்குமிதில்
வந்திருப்ப தெண்ணுமல் மானிடரே யுங்கள்மனச்
சந்தோஷத் தாலேன் றழும்புகிறீர் — முந்தவரும்
வேங்கை மவுத்தாம் விழுங்கிணறு மேதினியா
மேங்கிப் பிடித்தகொடி இந்நாளாந் — தூங்க
நறுக்கல் கதிர்மதியாம் நான்றதன் கீழ்வந்
துறுக்குமொளி தாங்கபுறுக் குட்படுதல் — பெருக்கமீது
பார்த்துணரும் போதுமக்குப்பாருண்டோ—வாழ்வுண்டோ?
தோத்திர முண்டோ? துணையுண்டோ—வேற்றுமையொன்
றில்லானை நெஞ்சே யிரவுபக லற்றிடத்தில்
நல்லானைத் தேடாய் நயந்து"

ஆம் இரவு பகலற்றவிடம் என்று அப்பா அவர்கள் கூறும் அல்லிராப் பட்டணமாகிய நெஞ்சுக்குள்ளேயே நல்லானை நாயகனை வல்லானைத் தேடு என்று நயமாகக் கூறுகிறார்கள்.

இந்தக் கலிவெண்பா அப்பா அவர்களின் வளமான கற்பனைக்கு ஒரு எடுத்துக் காட்டாகும்.

# ஆரூருக்கப்பால்

*மௌலவி எஸ். எம். அலவி சாகிப் (அல் மதனி),*
கோட்டாறு.

அப்பா என்று அனைவராலும் அன்பொழுக அழைக்கப் படுகின்ற தக்கலை ஞானமேதை அவர்களைத் தமிழ்கூறும் நல்லுலகம் நன்கறியும். முஸ்லிம் பெருங்குடிமக்கள் மாத்திர மன்றிப் பிறமத அன்பர்களும், பக்தி ததும்பப் பாராட்டிப் புகழ்ந்து வருவதைப் பார்க்கின்றோம். அவர்களுடைய எழில்மிகு சமாதியைத் தன்னகத்தே தாங்கி ஒளிதருகின்ற காரணத்தால், 'தக்கலை அப்பா' என்று பக்தர்கள் அழைப்பதுண்டு. அவர் களுடைய இயற்பெயரின் முற்பகுதியை இணைத்துப் 'பீரப்பா' என்று பிரியமுடன் சொல்பவருமுண்டு. 'செய்க்' என்ற சிறப்புப் பெயரும் அவர்களின் ஆத்மீகப் பதவியைக் குறிக்கும். 'ஒலியுல்லாஹ்' என்ற புனிதப் பெயரையும் சேர்த்து "செய்கு பீர்முகம்மது சாகிபு ஒலியுல்லாஹ்" என முழுப் பெயரையும் மிக்க மரியாதையாகக்கூறி மகிழ்வாரும் உள்ளனர்.

தமிழ் வளர்த்த முஸ்லிம் முனிவர்கள் பலர். புலவர்கள், பாவலர்கள், நாவலர்கள், இன்னோரன்ன பல பட்டங்களைப் பெற்று, முத்தமிழ் வளர்த்த பாரம்பரியம் முஸ்லிம்களுக்கும் உண்டு. அவர்களில் ஞானிகள் வரிசையில் வந்துதித்த மேதை களில் 'அப்பா' அவர்கள் முதலிடத்தைப் பெற்றுள்ளார்கள். இற்றைக்கு நானூறு ஆண்டுகட்கு முன்னர், முந்நூறு ஆண்டுகள் உயிர்வாழ்ந்த நம் ஞானமேதையவர்களைச் சித்தர்கள் வரிசையில் வைத்து எண்ணுவோருமுண்டு. இவற்றிற்கெல்லாம் மேலாக

ஆத்மஞான சக்தியால் அவர்கள் வாழ்ந்த காலத்தும், இன்றளவும் விளைவித்துவருகின்ற அற்புதங்கள் அவர்களுடைய பெருமைக்குச் சான்று பகர்வனவாக விளங்கிவருகின்றன.

நம் அப்பா அவர்கள் இஸ்லாமிய இலக்கியச் சோலையில் பூத்துக் காய்த்துக் கனிந்து, குலுங்கி, வேண்டுவோர்க்குக்கால மெல்லாம் பலன் தரும் கற்பகதருவாக வளர்ந்தோங்கி, தனி இடத்தைப்பெற்றுள்ளார்கள். இஸ்லாமிய வேதாந்தத் தத்துவங்களின் கருத்துக் கருவூலங்களாக விளங்கும் அவர்கள் தம் பாடல்கள் தித்திக்கும் தேன் மதுர அமுத சுரபிகளாகவும், வற்றாத, பேரின்ப ஊற்றுச் சுனைகளாகவும் நிலவிவருகின்றன. பண்டிதரும் பாமரரும் படித்துப் பயன்பெறும்வண்ணம் அழகிய பழகுதமிழ் மொழிகளால் பனுவல்கள் பல இயற்றித் தனிப்புகழ்பெற்று விளங்குகின்றார்கள் அவர்கள்.

அப்பா அவர்கள் ஆக்கிய அருட்கவிகள், பல தலைப்புகளில் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 'ஞானப்புகழ்ச்சிப் பாடல்கள்' பிரபலமானவை. அப்பா அவர்களின் நினைவு நாளைத்தாங்கித் திகழும் மாண்புமிகு 'ரஜப்' மாதம் முழுவதும் தனியார் இல்லங்களிலும் தைக்காக்கள் போன்ற பொது இடங்களிலும் இப் பாடல்களைப் பக்தர்கள் பாடிமகிழ்வர். குறிப்பாக இம்மாதத்தின் பதினான்காம் நாள் இரவு அப்பா அவர்களின் சமாதியின் முன்னர் பண்ணோடும், பக்தியோடும் பாடப்படுவதை ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் கேட்டுப் பரவசமெய்திப் பலன்பெற்று வருகின்றனர்.

ஞானப்புகழ்ச்சியில் வருகின்ற ஒரு பாட்டில் அப்பா அவர்கள் தங்களுடைய அரிய பெயரை உலகுக்கு அறிமுகம் செய்கின் றார்கள்.

பாருலகும் வானுலகும்
பார அருஷும் குருசும்
தாருலகும் ஒன்றுய்ச்சமைத்தநாள்
பீருமுஹம்மது என்றழைத்துப் பேசிய
வாறிருதயத்தில் உன்னொளி வைக்கண்டு
வரச் சொன்னாய் என்காவலனே

என்பதுதான் அந்தப் பாட்டு.

மனிதன் படைக்கப்படுவதற்குப் பன்னெடுங் காலங்களுக்கு முன்பே பதினெண்ணாயிரம் உலகங்கள் படைக்கப்பட்டன என்பது அப்பாவின் பாடலொன்றின் கருத்து. அவ்வாறு எல்லா உலகங்களும் படைக்கப்பட்ட பின்னர், மனித ஆத்மாக்களும் படைக்கப்பட்டன. ஆத்மாக்கள் அனைத்தும் படைக்கப்பட்டதும்,

ஆண்டவன் அவைகளின்முன், ஒரு வாக்குறுதியை எடுத்துக் கொண்டான். 'நான் உங்களுடைய இறைவன் அல்லவா?' எனக்கேட்க, 'ஆம்' என அவையாவும் மறுமொழி பகர்ந்தன. இந் நிகழ்ச்சி நடைபெற்ற நாளை "ரோசமீதாக்" என்று கூறுவர் ஆன்றோர். அவ்வாறு வாக்குறுதி எடுத்துக்கொண்ட நிகழ்ச்சியை இவ்வுலகில் வாழ்கின்ற நல்லோர் ஆத்மாக்கள் நினைவுபடுத்திக் கொள்கின்றன. அதற்கிணங்க அப்பா அவர்களும் அந்த உம்பர் உலக நிகழ்ச்சியை இம்பர் உலகத்தும் நினைவுகூர்கின்றார்கள்.

பீர்முகம்மது என்ற அரிய பெயரை அவர்களுடைய அன்புசால் தந்தை சிறுமலுக்கர் என்னும் பெரியார் அவர்களுக்கு இட்டழைத்தனர். எனினும் இறைவனே ஆன்ம உலகில் இப்பெயரைக் கூறித் தன்னையழைத்ததாக அப்பா அவர்கள் குறிப்பிடுவது, அவர்களின் ஆத்மீக உயர்நிலையைச் சுட்டிக்காட்டுவதாகும். அன்றியும், ஆன்ம உலகிலிருந்து ஜட உலகத்திற்கு அனுப்பப் படுகின்ற ஆத்மாக்கள் ஒரு லட்சியத்தின் நிமித்தமேயாம் என்பதனை 'உன்னொளியைக்கண்டு வரச்சொன்னாய்' என்ற சொற்களால் விளக்கம் தருகின்றார்கள். உலகில் உடலெடுத்த ஆத்மாக்கள் இறையொளியை இருதயத்தில் தரிசித்தல் ஒன்றே பிறவிப்பயன் எனவும் கூறுதல் ஏற்புடையதாகும்.

இக்கவியில் ஆன்ம உலகிற்கும் ஜட உலகுக்குமுள்ள தொடர்புகளும், உடலுக்கும் உயிருக்குமுள்ள உறவுகளும் விளக்கப்படுவது காணலாம்.

மரணம் விதிக்கப்பட்ட வேளையில், இறைவன் ஆன்மாக்களை மரணிக்கச் செய்கிறான். மரணம் விதிக்கப்படாத ஆன்மாக்களை நித்திரையில் (மரணிக்க) ஆக்குகிறான். மரணம் விதிக்கப்பட்ட ஆன்மாக்களைத் தடுத்து (ஆன்ம உலகில்) தங்க வைக்கிறான். மற்றவைகளைக் குறிப்பிட்ட தவணைகள் வரும் வரை உடல் உலகிற்கு அனுப்புகிறான். 'சிந்திப்பவர்களுக்கு இதில் பல ஆதாரங்கள் இருக்கின்றன' என்னும் திருமறை வசனங்களின் தாத்பரியங்கள் இப்பாடலில் தெளிவாக விளக்கப்படுகின்றன. ஆத்மாக்கள் மரணத்தால் — அல்லது தூக்கத்தால் — ஆன்ம உலகில் தொடர்பு கொள்கின்றன. மரணத்தை அனுபவித்த ஆன்மாக்கள் மீண்டும் இந்த உலகத்திற்கு அனுப்பப்படுவதில்லை. ஜட உலகில் வாழ்கின்ற ஆத்மாக்கள் தூக்கத்தில் மற்ற உயிர்களுடன் தொடர்பு கொள்கின்றன. எனவேதான் 'மரணத்திற்கு முன் மரணத்தை அனுபவியுங்கள்' என்ற நாயக வாக்கின் கருத்திற்கேற்ப இயற்கை மரணத்திற்கு முன்னால் செயற்கை மரணத்தையனுபவித்தவர்கள் ஆத்ம உலகத் தொடர்பு உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

தூங்காமல் தூங்கிச் சுகம் பெற்ற நல்லவர்கட்கு இவை கைவரப் பெற்ற சாதனைகளாகும். இத்தகைய ஆழ்ந்த தத்துவங்களை அப்பா அவர்கள் மிக அழகாக எடுத்துக் கூறும் பாங்கு அவர்களுடைய ஆத்மீக ஞான நிலைக்கு எடுத்துக்காட்டாக விளங்குவதாகும்.

ஞானப் புகழ்ச்சியின் பாட்டுக்கள் பெரும்பாலும் முன் இரு அடிகளும் இறைவனைப் புகழ்வதாகவும், பின்னைய வரிகள் இறைஞ்சி பிரார்த்தனை புரிவதாகவும் அமைந்திருப்பது அவற்றிற்குரிய தனிச் சிறப்புக்களாகும். ஞானப் புகழ்ச்சியின் காப்புச் செய்யுட்களாக வருவன மூன்று வெண்பாக்கள். முதல் வெண்பா,

"ஆறுறுக் கப்பால் அணுவணுவாய் வந்துலகில்
வேறுரும் ஒப்பில்லா மேலோனே — வீருன
புகழ்ச்சி துவா அடியேன் புகலுதற்கு நீமனதுள்
மகிழ்ச்சி தருவாயே மகிழ்ந்து"

என்பதுவாகும். இவ்வெண்பாவிலும் முன் ஈரடிகள் இறைவனைப் புகழ்வதாகவும், ஈற்றடிகள் இறைவனை இறைஞ்சி வேண்டுவதாகவும் காணப்படுகின்றன.

"புகழ்ச்சி துவா அடியேன் புகலுதற்கு நீ மனதுள் மகிழ்ச்சி தருவாயே" என்பது அப்பாவின் வேண்டுதல். இங்கு இறையுள்ளமும், தன்னுள்ளமும் ஒன்ருக மகிழ்ந்து இப்பனுவலைப் புகல உதவி தரவேண்டுமென்று பிரார்த்திக்கின்ருர்கள். ஆண்டான் அடிமை என்றும் இரு வழக்கிலும், துவிதாத் துவிதத் தத்துவங்களைத் தெள்ளத்தெளிய விளக்கம் தந்து ஆண்டான் ஆண்டானே; அடியான் அடியானே என்பதனை அடியேன் புகலுதற்கு என்ற சொற்களால் நயம்படக் கூறும் பாங்கு விள்ளற்கு அரிதேயாம். அவரன்றி மற்றவர்க்குச் சொல்லற்கும் எளிதாமோ.

இப்பாட்டின் ஆரம்பமாக வருகின்ற "ஆறுறுக் கப்பால்" என்னும் சொற்ருெடர்கள் இஸ்லாமிய ஞான மார்க்கத்தின் தத்துவப் புதையல்களாகவும், அறிவுக் களஞ்சியங்களாகவும் ஏற்கத்தக்கனவாகும்.

'ஆறு ஆறு' என்பன இரண்டு எண்கள். இவ்விரண்டையும் அடுத்தடுத்து வைத்துத் தொடுத்துக் கூறின் அறுபத்தாறு எண்ணாகும். இந்த எண் ஆண்டவன் திருநாமமான அல்லாஹு என்னும் பெயரைக் குறிக்கும். இரண்டு லாம் — முப்பது முப்பது; ஒரு ஹே – ஐந்து; அலிபு - ஒன்று; ஆக அறுபத்தாறு ஒப்பில்லா மேலோனும்! அல்லாஹு இப்பெயரைப் பெறுவதற்கு முன்னர்

ஆயிருந்த அநாதியான அந்த நிலையை 'அப்பால்' என்ற ஒரே சொல்லால் சுட்டிக் காட்டிய பெருமை அப்பா அவர்களுக்கே தகும். தன்னில் தானுய்த் தன்மயமாய், இன்ன வண்ணம் இன்ன நிறம் எனச் சொல்லவொண்ணு அந்தக (அமா) நிலையை விளக்கிய விதம் வியக்கத்தக்கதாகும். இதனை இன்மை என்று கூறுவர். ஆனுல் சூன்யம் அன்று. இருள் நிலை என்பர். ஆனுல் அதுவே ஒளி நிலையுமாகும். இன்மையினில் இவ்வுண்மையினை வெளிக்கொணர முன்னணுவாய், முதல் ஒளியாய்ப் பின்னர் அணுவணுவாய், வானங்கள் பூமியினை அளாவிப் பூரணமாய், ஒப்பற்ற ஓரிறையாய், விளங்குகின்ற வல்லோனைப் புகழ்வாம் என இறைவனை இறைஞ்சி வேண்டுகின்ற அப்பா அவர்கள் நம்மை எல்லாம் அழைத்துப் பீர்முஹம்மது எனும் அரிய பெயருடைய பைதல் இறையைப் புகழ்தல் கேண்மோ எனக் கூறும் சொல்லழகும் கருத்தழகும் என்னே! என்னே!!

———

மக்கள் எல்லோரும் தூக்கத்திலிருக்கின்றனர். அவர்கள் மரணமடைந்தால் விழித்துக் கொள்வர். விழித்துக் கொண்டால் வருத்தப்படுவர். அவர்கள் வருத்தப்படும்போது அவர்கட்கு அது எந்தப் பயனையும் அளிக்காது.

— ஸஹ்லுத் துஸ்தரி (ரஹ்)

எவர் மூன்று (குணங்கள்) இல்லாது மூன்று இருப்பதாகக் கூறுகிருரோ அவர் பொய்யராகும். பேணுதல் இல்லாது இறைவனின் அச்சமிருப்பதாகக் கூறுபவர்; வறுமையைப் பிரியப் படாமல் நபிகள் நாயகத்தைப் பிரியப்படுவதாகக் கூறுபவர்; இறைவனின் பாதையில் பொருளைத் தியாகம் செய்யாது சுவர்க்கத்தைப் பிரியம் வைப்பதாகக் கூறுபவர்.

— ஹாத்தமுல் அஸம்மு (ரஹ்)

உலகத்தைப் பற்றி அவர்களிடம் கேட்கப்பட்டபோது, 'நீ அதை உன் உள்ளத்திலிருந்து உன் கைக்கு வெளியாக்கிவிடு. அது உனக்குத் தொல்லை தராது, எனக் கூறினுர்கள்.

— முஹ்யித்தீன் ஜீலானி (ரலி)

# நமது நூற்குவியல்கள் எங்கே?

—தோப்பில் முகம்மது மீரான்

அன்று வேற்றுமொழிக் கலப்பற்ற தமிழிலும், மலையாளத்திலும், நம்மவரால் நூல்கள் பல இயற்றப்பட்டன. அன்று அவ்வாறு தமிழிலும் மலையாளத்திலும் நூல்கள் இயற்றியவர்கட்குச் சில தருணங்களில் சில எதிர்ப்புக்களும் ஏற்பட்டிருக்கக் கூடும். ஒவ்வொரு அறிஞர் தம் வாழ்க்கை வரலாற்றிலும் ஆழ்ந்து நோக்கின், அவர்களெல்லாம் பழிப்புரைகளுக்கும் ஏச்சு மொழிகட்கும் இலக்கானவர்கள் என அறிய முடியும். அவர்களின் ஆயுட்காலத்தில் அவர்களின் படைப்புக்களைச் சிறப்பிக்கவோ, அவற்றின் உயர்ந்த தன்மையைப் புரிந்து கொள்ளவோ இயலாது போயிற்று. அதற்குக் காரணம் தமிழும், மலையாளமும் அன்றைய மக்கள் மனத்தில் போதிய செல்வாக்கைப் பெருத ஒரு சூழ்நிலை உருவாயிருந்தது. அந்தச் சூழலைத் தகர்த்தெறிந்துவிட்டுத் தாய்மொழியில் எழுதியவர்களைப் புரட்சிக்காரர்கள் என்றுதான் குறிப்பிடவேண்டும்.

அச்சு இயந்திரமும், பேனவும், காகிதமும் இல்லாத அந்தக் காலத்தில் மனதில் முட்டிமோதி வெளிப்பட்ட கருத்துக் கருவூலங்களை, முனைந்திருந்து எழுத்தாணியின் துணைகொண்டு பனையோலையில் பொறிக்கும் போது—இவைகளெல்லாம் அச்சுவடிவத்தில் ஒரு போது வெளிவருமென்று அவர்களெல்லாம் கற்பனைகூடச் செய்திருக்கமாட்டார்கள். எனினும் அவர்களெல்லாம் ஏன் அப்படிப் பொறித்து வைக்க முற்பட்டனர்? ஏன் நேரத்தை முறியடித்தனர்? அவர்களது காலம் மிகவும் விலையுயர்ந்ததாகத்தானே அமைந்திருந்தது! ஒவ்வொரு நிமிடமும் அவர்கட்கு விலை உயரியதாகவே இருந்தது. ஒரு நிமிடத்தில் ஒரு லட்சத்தில் ஒரு பகுதியைக்கூட விலையில்லா நேரமென அவர்கள் கருதவில்லை. எல்லா நேரமும்

இறைவனைப்பற்றிய இணையற்ற சிந்தனையில் மூழ்கியிருந்த அவர்கள் ஏன் அதிகமான நேரத்தை விரயமாக்கி நூல்களைப் படைத்திருக்க வேண்டும் என்ற கேள்வி சிறப்போடு ஆராயத் தகுந்தது. அவ்வாறு படைப்பிலக்கியத்தில் மூழ்கியிருக்கும் ஒவ்வொரு நிமிடத்தினூடேயும், ஒவ்வொரு அசைவினூடேயும் அவர்கள் இறைவன் அருகில் நெருங்கிக் கொண்டேயிருந்தனர்.

தக்கலை செய்கு பீர்முகம்மதுசாகிப் (வலீ) அவர்களின் படைப்பிலக்கியங்களில் இறைவனோடு அவர்கள் இதயத்தால் நெருங்கும் நெருக்கத்தை மிகத் தெளிவாக அறியமுடியும். நல்ல தமிழில் பொருட் சுரங்கம் பொலியும் சொற்களால், எழுதப்பட்ட அந்நூல்கள் கருத்துக்கடலாகி நம்முன்னர் பரந்து விரிந்து காட்சிதருகிறது. அக்கடலில் மூழ்கி முத்தெடுத்து மகிழலாம். முத்தெடுத்து மகிழும் வித்தகர்கள் இன்று நமது மத்தியில் வாழ்கின்றார்களா என்பது ஐயத்திற்குரியதே.

வேதபுராணம், ஞானப்புகழ்ச்சி போன்ற பேரறிவுப் பெட்டகங்கள், பாரசீக நூல்களில் மூழ்கித் தளைத்த ஆங்கில அறிஞர்களின் கூரிய நோக்கிற் படாது போனது வேதனைக்குரிய செய்தியாகும் என்பதை வெட்கப்படாது ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும். நமது அறிஞர்களின் சோம்பலின் காரணமாக இன்று அவைகள் போதிய கவனத்தை ஈர்க்காமல் பாழடைந்த கட்டிடங்களின் பழுதுபட்ட மேல்தளங்களில் புழுதிபடிந்து கிடக்கின்றன. வயது முதிர்ந்த சிலரின் — குறிப்பாகத் தக்கலையைச் சுற்றியுள்ள ஊர் மக்கள் சிலரின்—உதடுகளிலிருந்து எதிர்பாராமல் எழும்பும் சில 'அப்பா பாடல் வரிகளை'க் கேட்க முடிகிறதே தவிர, அவைகளை அதிகமாக அறியவோ, புரிந்து கொள்ளவோ வழிவகுக்கும் வாய்ப்புக்கள் நம்மிடம் இல்லையே என்னும் துக்ககரமான உண்மையை இங்கு மனந்திறந்து குறிப்பிட வேதனையாகத்தானிருக்கிறது. சிலவேளை நாளைய தலைமுறை, இந்த நூல்களை மறந்து விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஒருக்கால், தக்கலையில் இனிப் பிறக்கப் போகும் குழந்தை 'ஞானப்புகழ்ச்சி' என்றால் என்ன என்று கேட்டாலும் வியப்படைவதற்கில்லை. அவர் எந்த மண்ணில் பிறந்து தளிர்காலால் குறுகுறுவென நடந்தாரோ அந்த மண்ணில் வாழும் மக்களுக்கு இன்று அவர் யாரெனத் தெரியாத அவலநிலை ஏற்பட்டிருப்பதையும் நாம் ஏற்றுக்கொண்டு தான் ஆகவேண்டும். இவைகளுக்குரிய காரணம் என்னவென்று நாம் யாரேனும் சிந்தித்ததுண்டா? நமக்குள்ளே விளம்பர சாதனங்கள் போதிய அளவுக்கு வெளிப்படாததும், நமது பத்திரிகையாளர்களின்

குறுகிய நோக்கும், வியாபாரக் கண்ணோட்டமுமே இதற்கு முக்கியக் காரணம்.

மறைந்துபோன மாமேதைகளும், இறைநேசச் செல்வர்களும் நமக்கு வழங்கிச்சென்ற இத்தகைய விலைமதிப்பற்ற செல்வங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு, அவ்வக் காலத் தலைமுறையினர் தம் கடமையாக அமைந்துள்ளது. கணக்கற்ற கண்ணியம் நிறைந்த நூல்கள் நமக்குக் கிடைக்காமல் போய்விட்டன. பல அழிந்து விட்டன. பெரும்பாலானவை பணியோலைகளில் சிறைப் பட்டுப், பார்வைகுன்றி வெளிறிப்போய் எழுத்துக்கள் தேய்ந்து மாய்ந்து வருகின்றன. அனைத்திற்கும் நமது கவனக் குறை வையும் சோம்பலையுமே காரணமாகக் கூறவேண்டும்.

குஞ்சுமூசாப் புலவர் (குஞ்சுமூசுப் புலவர்), அவரது மைத்துனர் பாலகவி—ஆகியோர் தம் படைப்புக்களெல்லாம் இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை. தேங்காய்ப்பட்டின வாசியான பாலகவியின் படைப்புக்கள் ஒன்றும் தமிழ் மக்களுக்குக் கிடைக்காதுபோயிற்று. அவர் கணக்கற்ற நூல்கள் படைத்துள்ளார் என்று சொல்லப்படு கின்றது அதற்கான ஆதாரங்களும் உள்ளன. 'சனியெண்ணெய்' என்ற பெயரில் நெடுங்கவிதையொன்றை அவர் பாடியிருக்கிறார். அப்பாடல் பதித்த ஏடு இன்று இங்கு-யாரிடம் — உள்ளது என்று தெரியவில்லை. அதனை மனனம் செய்திருந்த பலரும் மறைந்துவிட்டனர். இன்று உயிர்வாழ்வோருக்குச் சில வரிகளே நினைவிலுள்ளது — அதுவும் முழுமையில்லாமல்! இவ்வாறு பல நூல்களும் அழிந்துவிட்டன.

ரூமி, ஸஅதி முதலியோரின் படைப்புக்களைக் கடந்து நிற்கும் கவிதைச் சரங்களைத் தமிழில் நம்மவர் படைக்கவில்லையா என்ன? படைத்தார்கள்! பாரசீக ஆத்மீகப் படைப்புக்கள் (Persian Mystical Creation) உலகப்புகழ் அடைந்தபோது நமது இலக்கி யங்கள் நான்கு சுவர்களுக்குள் ஒதுங்கித் தூசி படிந்துகிடக்கும் மிக இழிந்த நிலையை நாம் காணுகின்றோம்.

இத்தகைய விலைமதிப்பற்ற படைப்புக்களின் மாண்பினைப் பாமர மக்கட்கு அறிவுறுத்தும் சீரிய முயற்சிகள் வாழ்த்தப்பட வேண்டும். ஒளி ஊடுருவாத இருட்டறையில், எழுத்து மறைந்து கொண்டிருக்கும் கையேட்டுப் பிரதிகளைத் தேடிப்பிடித்து வெளிச் சத்தில் கொண்டுவரவும், அதன் தனித்தன்மையைப் பாமரர் களுக்கு விளக்கிக்கொடுக்கவும், அவர்களை அறிவுமிக்கவர்களாக ஆக்கும் நன்முயற்சியில் நாம் இறங்கவேண்டிய காலம் நெருங்கி விட்டது. இனியும் காலம் தாழ்த்துவதும், ஒதுங்கி மறைந்து வாழ்வதும், எதிர்காலத் தலைமுறைக்கு நாம் செய்யும் மிகப் பெரிய

யாதகமாகும். நமது வசதியற்ற அறிஞருக்குப் பொருளுதவி புரிந்து அவர்களுக்கு இத்தகைய பணியில் ஈடுபட ஊக்கமளிப்பது செல்வர் தம் தலையாய கடமையாகும்.

நமது உரிமை வேட்கையின் ஆவேசம் நம்மில் பெரும்பாலோரையும் எழுத்தறிவற்றவர்களாக ஆக்கிவிட்டது. சமையலறைப் பெண்கள் முதற்கொண்டு பள்ளிவாயிலை நாடும் மவுலவிகள்வரை வெள்ளையர்க்கு எதிராகப் போரிட்டு இறந்தகாலம். வெள்ளைக்காரரைப் பாரத மண்ணிலிருந்து துரத்தி ஓட்டவேண்டுமெனில், அவர்களின் கலாச்சாரத்தைப் பூரணமாக நிராகரிப்பதும், பிறந்த மண்ணின் மணம் நிறைந்த தூய கலாச்சாரத்தை வார்த்தெடுப்பதும் தேவையென வாதிட்டனர் நம்மவர். அதன்பொருட்டு வெள்ளையர் மொழி ஆங்கிலத்தைக் கற்கக்கூடாதென்ற முடிவுக்கு வந்தனர். அதனால் மத அறிஞர்கள் சிலர் ஆங்கிலம் படிப்பது இஸ்லாத்திற்குப் புறம்பானதென மேடைகளில் முழங்கினர். பாமரர், மவ்லவிகள் மொழிகட்கு மதிப்புக் கொடுத்தனர். ஆங்கிலக் கல்வி கற்பதிலிருந்து பின்வாங்கி நின்றனர். அவ்வாறு, கல்வியறிவற்ற சமுதாயமொன்று நம்மில் முகிழ்த்தது. இந்நெருக்கடியில் அறிவுக் கருவூலங்களை அப்படியே மறந்துவிட்டனர். அவைகள் மறதியின் ஆழச்சேற்றில் புதைந்துகிடந்தன. தலைமுறைகளின் கணக்கற்ற மேல்தோடுகள் இளகிச்சென்ற பின்னரும் புதைந்த பொருட்களைக் கண்டெடுக்கும் முயற்சியில் எவருமே இறங்கவில்லை. அது தேவையற்ற பணியென அறிஞர்கள் ஒதுங்கிவிட்டனர்.

நபிமொழிகள் தொடக்கநிலையில் குறிப்பேடுகளில் கொலுவீற்றிருக்கவில்லை. கேள்வி ஞானத்தில் நிலைத்து நின்றவை அவைகள். நபிமொழிகளை நினைவிற்கொண்ட நேரியர்கள் உலகின் நாலுபக்கங்களிலும் சிதறிக்கிடந்தனர். அவர்களைத் தேடிப்பிடிக்கும் பொருட்டு, ஆண்டுக் கணக்காகக் கால்நடையாகவும் ஒட்டகை முதுகிலும் பயணம் மேற்கொண்டு ஒரு ஆயுட்காலத்தை ஆய்வுக்காலமாக அர்ப்பணம் செய்த இமாம் புகாரி (ரலி) அவர்கள் ஹதீதுகளைத் தொகுத்தார்கள். தியாக மனப்பான்மை அன்று அப்பெரியாரிடம் இல்லாமலிருந்திருப்பின் இஸ்லாத்தின் விலா எலும்புகளாகிய நபிமொழிகளில் விலைமதிப்பான பலவும் நமக்குக் கிடைக்காமல் வீணாகியிருக்கும். அந்த ஆய்வுச் செல்வர்களின் வாரிசுகளாகிய நாம் நமது ஆராய்ச்சிக்குரித்தான நூற்களைக் கண்டெடுக்கும் முயற்சியிலிருந்து ஒதுங்கியிருப்பது நமது தலைமுறையோடும், இன்றைய காலத்தோடும் செய்யும் கொடுமையாக இருக்கும்.

சமுதாயத்திற் காணப்படும் வீண் செலவுகளில் நூறில் ஒரு பங்கினை ஒதுக்கினால்கூட இத்தகைய ஆய்வு முயற்சிகளில் ஈடுபடு

வோரை ஊக்குவிக்கவும், இதுவரை அச்சில் வராத நூல்களை அச்சிடவும், ஏற்கனவே வெளிவந்து மறுபதிப்பினைக்காண மறந்திருக்கும் நூல்களை மீண்டும் பதிப்பிக்கவும், போதுமானது.

மகான்களின் அடக்கத் தலங்களில் கொடியேற்றிக் கொட்டும் வெடியும் முழக்கிச் சோறு விளம்பி அவர்களிடம் நன்றி காட்டுவதற்கோ, அன்றேல் அவரின் ஞாபகத்தை நிலைநிறுத்தவோ நாம் முயலும் முயற்சிகளெல்லாம் வீணானவை. ஆண்டுக்கொரு முறைதான் அப்பெரியார்களை நினைவு மேடையில் ஏற்றி வைக்கின்றோம்.

நாம் செய்யும் செலவுகளில் சிறு பகுதியை அம்மகான்கள் நமக்காக விட்டுச்சென்ற நூல்களைக் கற்பதற்கும், கருத்தரங்குகள் நடத்துவதற்கும், வெளியிடுவதற்கும் செலவாக்கினால் அம்மகான்கள் காலத்தை வென்று நிற்பார்கள். அந்த நினைவுகள் என்றும் பசுமையாகவே இருக்கும். இதுதான் அறிவுத்தாகங் கொண்ட அவர்களுக்கு நாமாற்றும் நன்றி. அவர்கள்தம் படைப்பிலக்கியப் பணிக்குப்பின் எவ்வித லாபநோக்கும் இருந்ததில்லை. அவர்கள் அறிஞர்களாக இருந்தனர். அவர்களின் அறிவுகளை நமக்குப் பங்கிட்டு வழங்குவதற்காகத்தான் ஆண்டுக் கணக்காக முனைந்திருந்து பனையோலைகளில் எழுத்தாணியைப் பொறித்தனர். அத்தகைய நூல்களுக்கு மதிப்பு கொடாதிருப்பது பாவச் செயலாகும். அவைகளை நாம் பாதுகாப்பதும் எதிர்காலத் தலைமுறைகளின் கரங்களில் பகிர்ந்து வழங்குவதும் அவர்கட்குத் திருப்திகரமான செயலாயிருக்கும். வான்மீகியும், ஹோமரும், மில்டனும், ஷேக்ஸ்பியரும் இன்றும் நினைவில் நிலைத்து நிற்கின்றார்கள் என்றால் அது அவர்களின் நூல்களின் மூலமாகத்தான்.

அறிவு தேடுவதன் பொருட்டும், கல்விப் பிரச்சாரத்தின் பொருட்டும் செலவு செய்யும் ஒவ்வொரு நிமிடமும் ஒவ்வொரு காசும் அறிவற்ற மக்களையும்கூடப் பாதுகாக்கும் இறைவனின் வழியில் செலவுசெய்யும் ஒவ்வொரு நிமிடமாகவும் காசாகவும் இருக்கும்.

இறைநேசச் செல்வர்களையும் அறிஞர்களையும் அவர்களின் அடக்க இடங்களில் கொட்டும் வெடியும் முழக்கி அவர்களை ஏளனம் செய்யாமல், அவர்கள் நம்மிடம் 'அமானமாகத்' தந்து சென்ற நூல்குவியல்களில் படிந்திருக்கும் கறையானையும் தூசியையும் போக்கி, அவற்றில் சூரிய வெளிச்சம் காட்டி, இளைய தலைமுறையின் பிஞ்சுக் கரங்களில் ஒப்படைத்து, அந்த நூலாசிரியர்களைக் கண்ணியப்படுத்தி ஆதரிக்கவேண்டுமென்பதே எனது பேரவா.

மனிதன் அழியக்கூடியவன். உருக்குக் கோட்டைகள்கூட தகர்க்கப்பட்டு உடைந்துவிடலாம். அரண்மனைகள் இடிந்து வீழலாம். பேரரசுகள் வீழும். சொத்தும் சுகங்களும் இல்லாமல் போய்விடலாம். ஒன்றுமட்டும்தான் அழிந்துவிடாமல் காலத்தைக் கடந்து நிற்கும். அதுதான் அறிவுக்கருவூலமான பெருநூல். அத்தகைய பெருநூல்களின் வரிசையில் தலைநிமிர்ந்து நிற்பதற்குரிய தகுதிவாய்ந்த இலக்கியமே தக்கலைப் பீரப்பாவின் திருநாமொழியும் ஞானப் புகழ்ச்சி!

---

நான் இப்லீஸ் கடைத் தெருவில் நிர்வாணமாகச் செல்வதைக் கண்டேன். அவன் கையில் ஒரு ரொட்டித்துண்டு வைத்துத் தின்று கொண்டிருந்தான். நான் அவனிடம், "மனிதர்களுக்கு வெட்கப்பட மாட்டாயா?" என்றேன். அவன் கூறினான்: "அபுல்காஸிமே! பூமியின் மீது நான் வெட்கப்படுவதற்குத் தகுதியானவர்கள் யாரும் உள்ளனரோ? வெட்கப்படுவதற்குத் தகுதியானவர்கள் மண்ணுக்குக் கீழே சென்றுவிட்டனர்."

— ஜுனைதுல் பக்தாதி (ரஹ்)

ஞானம் நபிமார்களின் எட்டுக் குணங்களின் மீது அமைக்கப் பட்டதாகும். (1) இப்ருஹீம் (அலை) அவர்களுக்குள்ள தயாளம், (2) இஸ்ஹாக் (அலை) அவர்களுக்குள்ள திருப்தி, (3) அய்யூப் (அலை) அவர்களுக்குள்ள பொறுமை, (4) ஸகரிய்யா (அலை) அவர்களுக்குள்ள சமிக்ஞை, (5) யஹ்யா (அலை) அவர்களுக்குள்ள தனிமை, (6) மூஸா (அலை) அவர்களுக்குள்ள கம்பளி ஆடை அணிதல், (7) ஈஸா (அலை) அவர்களுக்குள்ள துறவறம், (8) முஹம்மது (ஸல்) அவர்களுக்குள்ள வறுமை.

— ஜுனைதுல் பக்தாதி (ரஹ்)

# ஞானச் சரவிளக்கு

*டாக்டர் அ. மா. பரிமணம்*, எம். ஏ., எம். லிட்., பிஎச். டி.,
தமிழ்ப் பேராசிரியர்,
திரு. புட்பம் கல்லூரி,
பூண்டி, தஞ்சை.

இந்திய நாட்டின் சிறப்புக்களைப் பாடிப்போற்ற நினைத்த பாரதியார் அதன் முதற்பெருமையாக ''ஞானத்திலே பரமோனத்திலே உயர் நாடு'' என்று கூறுகின்றார். தவமுனிவர்களும் அருட்சான்றோர்களும் அவ்வப்போது தோன்றி இந்த நாட்டை ஞான ஒளியும் அருள்மணமும் திகழும் பூமியாகச்செய்துள்ளனர். இதனால் இந்நாட்டை ஞானபூமி என்று போற்றுவர். மக்களை உய்விக்கும் உயர்நோக்கில் மெய்ஞ்ஞான அருட்சான்றோர்கள் தோன்றி அறஞ்சான்ற சமயவாழ்வில் அவர்களை நெறிப்படுத்தினர். மெய்ஞ்ஞான அடிப்படையில் சமயங்கள் தோன்றிச் செழிக்கலாயின. தான் தோற்றுவித்த மெய்ஞ்ஞானக் கோட்பாடுகளை வெளியுலகிற்கு வழங்கிப் புகழ்பெற்ற இப்புண்ணியபூமி, வெளிநாடுகளில் தோன்றிப்பரவிய மெய்ஞ்ஞான நெறிகளை வரவேற்பதில் என்றும் பின்வாங்கவில்லை. மெய்ஞ்ஞானக் கோட்பாடுகளைக் கொடுத்தும்கொண்டும் பெற்றசிறப்பு இந்தியாவுக்குண்டு.

இந்தியா தந்த சமயக்கோட்பாடுகளும், இந்தியா வந்த சமயக்கோட்பாடுகளும் இங்குச் செழித்து வளரலாயின. பல்வேறு சமயங்களின் மெய்ஞ்ஞானக் கோட்பாடுகள் இணைந்தும் பிணைந்தும் நிற்கச்செய்து இந்நாட்டு மக்களை நெறிப்படுத்திப் பயன் எய்துவிக்கும் சிறப்பில் பெரும்பங்கு தமிழகத்திற்குண்டு. தமிழகத்துப் பரங்கிமலைகளும், பீர்மேடுகளும் இந்த உண்மையைப் பறைசாற்றி நிற்கின்றன. நாகூர்களும், வேளாங்கண்ணிகளும்

பேதமற்றுப் பல சமயமக்களும் ஒன்றுகூடிப் பயன்எய்தும் ஞானப் பண்ணைகளாகவன்றே திகழ்கின்றன.

தமிழகத்தில் விளங்கும் பல சமயங்களிலும் அவ்வப்போது மெய்ஞ்ஞானிகள் தோன்றித் தமிழ்மக்களைச்சமயம்கடந்த மெய்ஞ் ஞான நிலையில் — ஒருமைப்பாட்டுணர்வில் — திளைக்கச்செய்து உள்ளனர். அவர்களனைவரும் இந்நாட்டின் ஞானச் சரவிளக்கு களாக அமைந்து இடையறாத மெய்ஞ்ஞான ஒளியைப் பரப்பி வந்துள்ளனர். அந்த ஞானிகள் தாங்கள் பிறந்து வளர்ந்த சமயங்களால் வேறுபட்டவர்களாக விளங்கினாலும், அவர்கள் எய்திய மெய்ஞ்ஞான உணர்வினால் ஒன்றுபட்டவர்களாகத் திகழ்கின்றனர்.

நெடிய குன்றிலமைந்த பல வழிகள் வழியாகவும் சென்று மக்கள் அதன் சிகரத்தை அடையலாம். சிகரத்தை அடைவதற்கு முன்புவரை ஒவ்வொருவரும் வந்த வழி இயல்புகளும், வழி நடைக்காட்சிகளும் வேறுபட்டே இருக்கும். சில சமயங்களில் மாறுபட்டும் இருத்தல்கூடும். ஆனால் சிகரத்தை அடைந்த பின்னர் அவர்கள் காணும் காட்சியும் உணரும் உணர்ச்சியும் வேறுபடுவதில்லை. ஞானச் சிகரமெய் திய மெய்ஞ்ஞானிகள் வந்த வழியும், வழிக்காட்சியும் வேறுபட்டிருப்பினும், வந்தடைந்த பின்னர் அவர்கள் காணும் காட்சியிலும், காட்டும் கோட்பாடுகளி லும் வேற்றுமை காணப்படுவதில்லை. மெய்ஞ்ஞான உலகு அவர்கள் அனைவரையும் ஒரு தன்மையராகவே ஏற்றுப்போற்று கின்றது.

தமிழகம் போந்து சிறப்புற்றிலங்கும் இஸ்லாம் சமயம் பல மெய்ஞ்ஞானியர்களைத் தமிழகத்தில் தோற்றுவித்துள்ளது. அவர் கள் எய்திய மெய்ஞ்ஞானம் சமயநோக்கில், வேறுபட்டது போலக் காணப்பட்டாலும், வேற்றுமை இன்றித் தமிழ்மக்கள் அனைவரை யும் கவர்ந்து நல்வாழ்வெய்துவிக்கும் தன்மையதாக உள்ளது. அவர்கள் வழங்கிய ஞானம் இஸ்லாம் வழியமைந்த தமிழ் மெய்ஞ் ஞானமாகத் தழைத்துத் திகழ்கின்றது. அவர்கள் காட்டிய நெறி தமிழ்மக்களைப் பேதமின்றி இணைத்தும் அணைத்தும் செல்லும் தமிழ் மெய்ந்நெறியாகத் திகழ்கின்றது.

மிக்கோர் புகழும் தக்கலை தந்த தவச் செம்மலாம் பீர்முகம்மது சாகிபு ஒலியுல்லாஹ் அவர்கள் தமிழகம் தரணிக்களித்த சிறந்த மெய்ஞ்ஞானியும் அருளாளருமாவர்; அப்பகுதி மக்கள் அனைவரா லும் அப்பா என அன்பொழுக அழைத்துப் போற்றப் பெற்ற அருந்தமிழ்ச் சான்றோராவர். “ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்” என்று அப்பரடிகள் கூறியது போல முழு ஞானம்

எய்தி, ஞானத்தால் தொழுது, ஞானத்தின் திருவுருவாய்த் திகழ்ந்து நலம் பாவித்த ஞானமாமேதை. அவர் தமிழ்மக்களுக்கு வழங்கிய அருள் ஞானம் ஆரா அமுதப் பாக்களாகத் திகழ்கின்றன. தமக்கு வேருன சமயத்தைச்சார்ந்தது என்றெண்ணித்தமிழுலகம் அவற்றைப் புறக்கணிக்காது போற்றி வருகின்றது. தமிழ் நெடுங் கணக்கில் வழங்கும் மெய் எழுத்துக்களைப் போலத் தமிழகத்தில் விளங்கிய பதினெண்சித்தர்களில் ஒருவராக அவரைத் தமிழகம் ஏற்றது. அவர் தம் ஞானரத்தினக் குறவஞ்சியைப் பதினெண் சித்தர் ஞானக் கோவையின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொண்டுள்ளது.

முன்னூருண்டுகட்கு மேலாக மண்ணுலகில் வாழ்ந்தவராக மதிக்கப்படும் பீர்முகம்மது அப்பா என்னும் மெய்ஞ்ஞானச்சித்தர் பல்லாயிரம் ஞானப்பாக்களைப் பாடித்தந்துள்ளார். அவையனைத்தும் தமிழ் மண்ணில் இஸ்லாம் தோற்றுவித்த ஞானமாமலர்களாகும். ஞானமணிமாலை, ஞானப்புகழ்ச்சி, ஞானப்பால், ஞானக் குறம், ஞானரத்தினக் குறவஞ்சி என்றிவ்வாறு அமைந்துள்ள அவர் தம் நூல்கள் இறை இன்பச் சுவையும், அருள் ஞான மணமும் ஒருங்கே விளங்கும் ஞானத்தடாகங்களாகும். ஆம். அவை தமிழ் மண்ணில் செழித்திலங்கும் இஸ்லாமியப் பூஞ்சோலையில் இனிது திகழும் அருள் ஞானத்தடாகங்களேயாகும்.

பீர்அப்பாவின் நூற்காட்சியும் அதன் மேலோடியான பொருளும் இஸ்லாமிய அடிப்படையிலமைந்திருந்தாலும் ஆழ்ந்து நோக்கும் போது, தமிழகத்தில் தோன்றிய அவரனைய பிற சமய ஞானிகளின் கருத்துக்களோடு பொருந்தி வேற்றுமை இன்றித் திகழ்கின்றன. முற்றத் துறந்த பட்டினத்தடிகள் போன்ற மெய்ஞ் ஞானிகளின் பாடல்களைப் போலவே அவர் தம் பாடல்களும் திகழ் கின்றன. இரண்டொரு சொற்கள் அல்லது தொடர்களின் மாற்ற மன்றி முழுதும் அப்படியே ஒத்துக்காணும் பாடல்கள் கற்போரை வியப்பில் ஆழ்த்தும். சரியை முதல் ஞானம் ஈருக உள்ள ஞானப் படிகள் வழியாகச் சென்று இறையுணர்வென்னும் மெய்ஞ்ஞான மடைந்த இத்தகைய புனித ஞானியர்கள் மெய்ம்மையுணர மேற் கொண்ட வழிகள் — சமய நெறிகள் வேறுபட்டாலும் இறுதியிற் சென்று கண்டடைந்த முடிவு ஒன்றேயாக உள்ளது. அதனுல் அத்தகையோர் பாடல்களின் உள்ளுறை ஒன்ருய் அமையக் காண்பது இயல்பே. சமய அடிப்படையிலமைந்த சில சொற் களாலும், தொடர்களாலும், செய்திகளாலும் அமைந்த வேறு பாடுகள் அதனை உருவாக்கிய ஞானிகள் மேற்கொண்டொழுகிய நெறிகளின் வழிநடைக் காட்சி வேறுபாடுகளால் எழுந்தனவே யாகும். இத்தகைய ஞானிகளின் தோற்றமும் இவர்கள் வழங்கிய

அருட்செல்வமும் வாழையடி வாழையாகத் தமிழகத்தை அருள் வளம் நிறைந்ததாகச் செய்து, பல சமய மக்களும் பிணக்கமின்றி இணக்கமுற்று வாழ வழிகாட்டும் கைகாட்டிகள் போல் அமைந் துள்ளன.

தம் விருப்பு வெறுப்பகற்றி முற்றும் துறந்த மெய்ஞ்ஞானி களாகிய இம்மேதைகள் தம்மளவில் மாசற்ற ஆன்ம ஞான இன்பத்தில் திளைப்பவர்களாயினும் உலக மக்கள் அனைவரும் துன்பத்தின் நீங்கி இன்பம் எய்தல் வேண்டுமென்னும் கருத்தால் அம்மக்களின் குற்றங் குறைகளைத் தங்கள் குற்றங்களாக ஏற்றுக் கொண்டு, பல பாடல்களைப் பாடியுள்ளனர். அப்பாடல்கள் பயில் வோர்களைத் தங்கள் குறைகளை உணரச்செய்து, தூய்மைப்படுத்தி நன்னெறிக்கண் செலுத்தும் நலஞ்சான்றனவாகத் திகழ்கின்றன. ஆண்டவனை ஏற்றுக்கொண்டு, அவன்பால் கொள்ளும் பக்தியே பிறவிப்பிணியகற்ற அமைந்த பெருவழியாகும் எனவுணர்ந்த சமய ஞானிகள் பலரும் மற்ற மக்களின் ஆன்ம நலத்திற்காக அவர்களின் பிழையைத் தங்கள் மேல் இயைத்துப்பாடி வழி காட்டியுள்ளனர். தேவார திருவாசகம் பாடிய அருளாளர்கள் பலரும் உலக மக்கள் பிழையைத் தம் பிழையாகக் கொண்டு பாடிய பாடல்கள் பலவாகும். அவ்வாறே பீர் அப்பா அவர்களும் பாமரமக்களின் குறைகளையும் குற்றங்களையும் தம்முடையனவாகக் கொண்டு இரங்கி ஏங்கி இறைவனிடம் மன்றுடிப் பாடிய பாக்கள் பல உள்ளன. அத்தகைய பாடல்கள் அஞ்ஞானப் பிணியில் உழலும் பாமரர்களுக்கு அப்பா அருளொடு அளித்த ஞானக் குளிகைகளாகும்.

பீர் அப்பா அவர்கள் தொடுத்த ''ஞானப்புகழ்ச்சி'' என்னும் நறுமணப் பாமாலையில் அமைந்துள்ள ஒரு மலர் வருமாறு:—

''கல்லாப் பிழையும் கருதாப்பிழையும் கசிந்துநிலை
நில்லாப்பிழையும் நினையாப்பிழையும் நேர்ந்து அஞ்சி
லொன்றைச்
சொல்லாப்பிழையும் துதியாப்பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப்பிழையும் நீதான்பொறுப்பாய் எம் இறையவனே''

பொதுவாக மக்கள் செய்யும் பிழைகள் அனைத்தையும் வகைப் படுத்தி அவற்றைத் தாம் செய்வதாகவும், அவற்றை அருளாள னும் அன்புடையோனுமாகிய ஆண்டவனே பொறுத்தருள வேண்டுமென்றும் இரங்கி வேண்டுகின்றார். இங்குச் சுட்டியுள்ள வகைகளில் அடங்காத பிழைகள் இருக்குமாயின் அவையும் அடங்குமாறு எல்லாப் பிழையும் என்று குறிப்பிட்டுள்ளார். சமய நிலையில் கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிற்றல் என்னும் ஞான

நெறிகளைப் பின்பற்றுவது இன்றியமையாததாகும். அவற்றில் ஒன்றையும் தாம் செய்யவில்லையே என்று அப்பா அவர்கள் ஏங்குகின்றார்கள். உள்ளம், உரை, உடல் (மனம், வாக்கு, காயம்) ஆகிய மூன்றாலும் இறைவனை வழிபடுதல் என்பது தமிழ்ச் சமய ஞானியர் பலரும் காட்டும் வழியாகும். இதனைத் திரிகரண வழிபாடு என்பர். நினைத்தல், சொல்லுதல், தொழுதல் என்னும் செயல்களால், முக்கரணத் தொழில்களைக் குறிப்பிட்டு அவற்றைத் தாம் செய்யவில்லையே என்று இரங்கும் இரக்கப் பாடலில் புலனாகின்றது. பீர் ஞானிக்கு முன்னர் தமிழ்நாட்டில் விளங்கிய பட்டினத்தடிகளின் திருப்பாடல்களில் ஒன்றினைக் காண்போம்.

"கல்லாப்பிழையும் கருதாப்பிழையும் கசிந்துருகி
நில்லாப்பிழையும் நினையாப்பிழையும் நின் அஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையும் துதியாப்பிழையும் தொழாப்பிழையும்
எல்லாப்பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியே கம்பனே"

இவ்விரு ஞானியர் வாக்கிலும் அஞ்செழுத்து, கச்சியே கம்பன், அஞ்சிலொன்று என்னும் தொடர் வேறுபாடுகளைத்தவிர வேறெந்த வேறுபாடுங் காணுமாறில்லை. இந்த வேறுபாடுகள் அவர்கள் மேற்கொண்ட சமய வழிகாட்சியிலமைந்தனவேயாகும். ஐந்தெழுத்து என்பது சைவர்கள் இறைவன் திருப்பெயரால் அவனை நினைந்து போற்றும் மந்திரமாகும். பீர் அப்பா குறிப்பிட்ட ஐந்திலொன்று என்பதும், முஸ்லிம்கள் தவறாது மேற்கொண்டொழுகவேண்டிய ஐந்து கோட்பாடுகளில் ஒன்றாகிய கலிமா என்னும் நம்பிக்கை மொழியேயாகும்; இறைவன் திருப்புகழே. 'இறைவனே' என்ற விளி ஆண்டவனைப் பொதுச்சொல்லால் விளித்ததாகும். ஏகம்பனே என்பது ஓரிடஞ் சுட்டி இறைவனை விளித்த விளியாகும்.

பட்டினத்தடிகளின் திருவேகம்பமாலையில் அமைந்துள்ள பிறிதொரு அருட்பாடல் வருமாறு:—

"பொல்லாதவன் நெறிநில்லாதவன் ஐம்புலன்கள் தமை
வெல்லாதவன் கல்விகல்லாதவன் மெய்யடியவர் பால்
செல்லாதவன் உண்மை சொல்லாதவன் நின் திருவடிக்கன்பு
இல்லாதவன் மண்ணில் ஏன்பிறந்தேன் கச்சி ஏகம்பனே".

இங்கு "குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும் பொல்லேன் குற்றமே பெரிதுடையேன்" என்று அப்பர்சுவாமிகள் தம்மைத் தாழ்த்தி உலகத்தவர் தவறுகளைத் தம்மேல் ஏறட்டு இரங்குவதுபோல, அடிகள் இத்தகைய குற்றங்களையுடைய நான் 'ஏன் பிறந்தேன்' என்று ஏங்குகின்றார். பீர்முகம்மது அப்பாவும்

இவ்வாறே ஏங்குமாற்றை அவர்தம் ஞானப்புகழ்ச்சியிலமைந்துள்ள மற்றொரு பாடல் அழகுறக் காட்டுகின்றது.

"பொல்லாதவன் உண்மை சொல்லாதவன் ஐம்புலன் தமை
வெல்லாதவன் தவம் வேண்டாதவன் மெய்யடியவர்பின்
செல்லாதவன் சிந்தை செய்யாதவன் நின் திருவடிக் கன்பு
இல்லாதவன் தனை ஏதுக்கு நீ படைத்தாய்
எம் இறையவனே".

பட்டினத்து ஞானி இக்குறைகளைத் தம்மேலிட்டுத் தன்மை வாசகத்தில் வைத்து இத்தகைய நான் 'ஏன் பிறந்தேன்' என்று இறைவன்பால் வினவுகிறார். தக்கலை ஞானியோ இக்குறைகளைக் கொண்டிருப்பவன் என்று படர்க்கை வாசகத்தில் வைத்து இறைவனை வினவுகின்றார். வாசக அமைப்பு மாற்றம் தவிர இருவர் கருத்திலும் வேறுபாடில்லை.

மனித குலத்தை இறைவன் எல்லா நலங்களோடும் படைத்திருப்பது, அருள்வடிவாகிய அவனை அனைவரும் துதித்து உய்தல் வேண்டும் என்பதற்காகவேயாகும். இதனைப் பீர் அடிகள்,

"படைத்தான் படைப்பெல்லாம் மனுவுக்காக
மனுவைப் படைத்தான் தனை வணங்க" என்று பாடுகின்றார்.
தமிழ் ஞானியாகத் திகழும் திருமூலரும்,
"என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே" என்று கூறுகின்றார்.

இவ்விரு பகுதிகளையும் ஒருங்கு நோக்குவார் வாசக வேறுபாடன்றிக் கருத்து வேறுபாடின்மையைக் காணலாம்.

ஞானியர்கள் காலத்தாலும், இடத்தாலும், சமயத்தாலும் வேறுபட்டவர்களாய் விளங்கினாலும் அவர்கள் வழங்கிய செய்தியால்—மெய்ஞ்ஞான விளக்கத்தால் ஒன்றுபட்டவர்களாகவே திகழ்கின்றனர். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்னும் பெருநோக்கில் அவர்கள் தம் இறையனுபவங்களை—மெய்ஞ்ஞான உணர்வுகளைப் பாக்களில் வடித்து நமக்கு வழங்கிச் சென்றுள்ளார்கள். அவை ஞான ஒளி பரப்பி, எண்ண இனிக்கும் வண்ண விளக்குகளாக அமைந்து காலந்தோறும் மனித குலத்தின் அஞ்ஞான இருளகற்றி அதற்கு மெய்ஞ்ஞான வழிகாட்டிகளாக அமைகின்றன. தமிழகத்தில் தோன்றி ஞான ஒளி பரப்பும் சரவிளக்கு வரிசையில் ஓர் ஒப்பற்ற ஒளி விளக்காகத் திகழ்பவர் பீர்முகம்மது சாகிபு வலியுல்லாஹ் அவர்களாவர். வலியுல்லா வழங்கிய ஞான ஒளி தமிழ் மக்கட்கு என்றும் நன்னெறி காட்டுவதாக!

# மிக்குயர்ந்த மேதை

கவிஞர் பி. மு. அலியார், ஏர்வாடி

"ஓராயிரம் கவலைகள் மனதில்
ஓங்கித் தினம் வளர்ந்தாலும்
பேராளப் பெருந்தகையாம்
பெருமைமிகு அப்பாவின்
ஆராய்வு நிறைந்திட்ட
அமுதப்பாப் பாடின்
தீராத துன்பமெல்லாம்
தீருவது திண்ணமாமே!"

தெருப்பாடகன் வாயிலிருந்து வரும் கீதம் அல்ல இது; திருப் பாடகன் ஒருவன் பாடும் பாட்டு இது.

"உருப்படியில்லாத பாட்டு
துருப்பிடித்த சீட்டு".

மனித வர்க்கத்தின் ஆன்மீக வளர்ச்சிக்கு உதவும் அருள் நிறைந்த அமுதப் பாக்களைப் பாடிப்பாடிப் பரவசம் கொண்ட மாமேதை செய்கு பீர்முகம்மது வலியுல்லாஹ் (ரலி) அவர்களின் ஈடு இணையற்ற பீடுநடை போடும் கம்பீரம் நிறைந்த கவிதை உலகிற்குச் சென்றால், அனந்தங்கோடி இரத்தின மாலைகளைக் காணலாம்!

இரத்தின மாலைகளைத் திருடிக்கொள்ள ஆசை கொண்டவர் களும் அங்கு வரலாம்—வாழலாம்!—திருடமட்டும் திருக்கலி மாவைத் திருடிக்கொள்ளட்டும். திருட மனமில்லாதவர் தெளிந்த வலியாகார் என முரசு கொட்டி அப்பா அவர்கள் அழைப்பு விடுத்து நம்மையெல்லாம் அன்புடன் அழைக்கின்றார்கள்.

அவர்களின் அன்பழைப்பை ஏற்று, அப்பாவின் கவிதைப் பூங்காவின் வாசலில் நுழைகிறோம்! முதற்படியாக, "பிசுமில் குறம்" ஓதி அப்பா அவர்கள் நம்மை வரவேற்று உபசாரம் செய்கிறார்கள்!

மேதை சதக்கத்துல்லா அப்பா அவர்கள் மேன்மையுற மன மறிந்து மகிழ்ந்து வாழ்த்திட "பிசுமில் குறம்" ஓதுகிறார்கள் அப்பா அவர்கள். அப்பாவின் கவிதையுலகில் நுழைந்துவிட்டோம்; வர வேற்பும் கிடைத்துவிட்டது என்ற பெருமிதத்தில் மிதக்கும் நமக்கு ஒரே ஒரு கவலை மட்டும் மனத்தை வாட்டுகிறது. நம்மிலே பலர் தொழாதவர்களும் இருக்கிறோம். தலையில் குட்டிவிடுவார்களோ என்ற அச்சம் மேலிட்ட நிலையிலிருக்கும்போது,

"வழியான குருவில்லா வணக்க முழுதெல்லாம்
வையகத்திற்புரு டனில்லாள் வாழ்ந்த சுகமொக்கும்"

என்ற புரட்சிக்குரல் நம் செவிகளைத் துளைக்கிறது. இனி என்ன கேட்குமோ? எப்படி இருக்குமோ? என்ற ஐயப்பாடுகள் ஒருபுறம் எழுந்தாலும் நம்மை நாமே ஒருவாறு சமாளித்துக்கொண்டு அப்பாவின் அருள்மணக்கும் வாயிலிருந்துவரும் வார்த்தைகளை ஆவலுடன் நோக்குகின்றோம்!

"சரியான குருவில்லாத வணக்கமுள தெல்லாம்
சாவலில்லாக் கோழி முட்டையிட்டது போலுவமை"

என்று மீண்டும் போர்க்கொடி உயர்த்தும் உவமையுடன் பாடுகின்றார்கள். ஞானியர்கோன் அப்பாவின் கவிதைப் பூங்காவில் நுழைந்துவிட்ட நாம் சரியான குருவில்லாத நிலையில் வளர்க்கப் படுவதையும், பழக்கப்படுத்துவதையும் அறிந்து தெளிந்து நம்மிலே உள் வணக்கமென்று கூறி ஊரை ஏமாற்றும் கலையைச் செய்கிறவர்களையும், ஞானக்கண்ணால் நோக்கி நாம் செல்ல வேண்டிய வழிமுறைகளையும், அறிய வேண்டிய விதிகளையும் வகுத்துக் கூறிப் பகுத்துப்பாடித் தொகுத்தளிக்கும் பாடலின் மூலம் நம்மை விழிப்புறச் செய்கிறார்கள்.

அடுத்துப் பல காட்சிகளை நமக்குக் காட்டும் அப்பா அவர்கள் தேர்ந்த மெய்ஞ்ஞானி என்பதை ஒப்புக்கொண்டு, அவர்கள் முன் செல்ல, அவர்களின் பின்னால் நாம செல்கிறோம்!

அங்கு ஞானப்புகழ்ச்சி என்ற கடலைக் காட்டுகிறார்கள் அப்பா அவர்கள்; கடலைக்கண்ட நமது மனம் நம்மையும் அறியாமலே,

"கோனின் புகழினையும்
கொஞ்சும் தமிழ் மொழியில்
தேனின் சுவையது போல்
தெள்ள முதின் மாமணமாய்த்
தீனின் நெறி யுரைத்துத்
தித்திக்கும் முக்கனியாய்
வானின் வரவது போல்
வழங்கினர் புகழ்ச்சியும்"

என்று பாடுகின்றது! இந்த நமது புகழ்ச்சிக்குரல் அப்பாவின் செவிகளில் சென்று ஒலிக்கின்றதோ—இல்லையோ, அவர்களின் ஒலியை அல்லவா நாம் கேட்கப்போயிருக்கிறோம்!

ஞானப்புகழ்ச்சியைப் பற்றிடும்முன் ஞானப்பால் என்ற பாலத்தையும் நாம் கடந்துசெல்கிறோம் என்பதை நான் நினைவு படுத்த மறந்தமைக்கு மன்னிக்க.

ஞானப்பால் என்ற பாலத்திலேறியதும் நமது பிறப்பு பற்றிய ஒரு உண்மையை அப்பா அவர்கள், நமது பார்வையில் படும்படியாக வைத்திருப்பதைப் படித்துக்கொண்டே போகிறோம். அது என்ன?

"எச்சில் தான் சொல்லக் கேளுமிருட்டினிற்றந்தை—தாயும்
உச்சிதமாகக் கூடி யோடிய குருவினுலே
மெச்சதோர் சிவப்பைக்கட்டி விளைந்ததோர் திங்கள் பத்திற்
பச்சமா மெச்சில் தன்னிற் பாண்டமுஞ் சமைந்தவாறே"

அடுத்தும் ஒன்று அதுதான் குன்று. ஞானப்பூட்டு என்ற அந்தக் குன்றையும் நாம் வழியில் கடந்து தான் சென்றோம் என்றாலும் ஞானப்பூட்டு என்ற குன்றின்மீது நின்று அப்பா அவர்கள் என்ன செய்தார்கள் என்பதைக் கூறவேண்டுமல்லவா?

"அருளும்படி பொருள் தந்தெனையாளும் மிறையோனே
அருளும்படியுனைத் தேடியே யழுதேன் சில காலம்
அருள் தந்தெனை யாளும்படியாடுங் குழிகண்டேன்
பொருள் தந்தெனையாளும் மிறை போதந்தருவாயே".

அப்பா அவர்கள் தனக்கும், இறைவனுக்குமுள்ள ஒட்டு-உறவு-பற்று-பாசம் பற்றி விளக்கியிருப்பதையும் அறிந்துகொள்கிறோம். வழி நிலையில் உள்ள காட்சிகளைக்கூறிய நான் இனி "ஞானப்புகழ்ச்சி" என்ற அழகிய கடலின் மகிமையைப் பற்றிக் கூறவேண்டுமல்லவா?

மண்ணை மண் என்றும் நீரைத் தண்ணீர் — ஜலம் என்றும் நெருப்பைத் தீ — தணல் என்றும் — காற்றை வாயு என்றும் — ஆகாயத்தை வானம் என்றும் கூறிக்கொள்கிறவர்கள் நாம். 'ஞானப் புகழ்ச்சி' என்ற தேனினுமினிய அமுதக் கவியின் முதல் கவியாக அப்பா அவர்கள் ஆருறுக்கப்பாலெனும் அருளுலகிற்கு அழைத்துசென்று அன்பொழுக இறைவனின் ஆசியைப் பெறு வதையும் காண்கிறோம். இறை துதியில் 4-வது பாடலின் அடிகளை நாம் பாடும்போது *முத்தொடு பவளம் பச்சை முதலொளி புவனுங்கூட்டி* என்று ஞானியர்கோன் தொடங்கி யிருப்பதால் முத்து எது? பவளம் எது? பச்சை எது? முதலொளி என்ன? என்றெல்லாம் பொருள் புரியாமல் விழிக்கிறோம்! அப்பா அவர்கள் இந்த மண்தான் முத்து, தண்ணீர்தான் பவளம், காற்றுதான் பச்சை முதலொளி என்பது நெருப்பு, புவனம் ஆகாயம் என்று விளக்கந்தந்து தொடர்ந்து நம்மை அழைக் கிறார்கள்!

அற்புதங்கள் பல நிகழ்த்தியதாக அறியப்படும் அற்புதர் நம் மெய்ஞ்ஞானி — அல்லாவிடம் மன்றாடும் காட்சிகளையும், அழுது புலம்பிக் கண்ணீர் சிந்துவதையும் நமக்கு விளக்குகிறார்கள்!

"ஆதாரமாக வெங்கு மானவனே யானுமுன்தன்
பாதார விந்தம் பணியாமல் — ஏராத
வன்பிழைகள் செய்தடியேன் வந்தேன்மன்னனின் றிருமுன்
என்பிழையை நீ பொறுப்பாயே"

மன்றாடும் காட்சிக்கு அடுத்து நம்மை ஞானப் புகழ்ச்சியாம் கடலில் மூழ்கச் செய்கிறார்கள்.

நாம் மனிதர்கள் எப்படியோ ஞானப் புகழ்ச்சிக் கடலிலிருந்து நீந்திக் கரைசேர நினைக்கிறோம்; எல்லோரும் நீந்துகிறோம்.

"மாராயமான முகம்மதெனும் முத்துப்பற்றித் தெரிந்து கொள்ளாமல் கரைசேர்ந்துவிட்டால், மீண்டும் கடலில் குதிக்க முடியாது தேடுங்கள் முத்தை" என்று ஒருவர் நினைவுப்படுத்து கிறார்.

சரி என்றுகூறி நீந்தியவர்கள் அனைவரும் மிதப்பில் கிடக்கி றோம்.

"முன்னையெனைப் படைத்த முதல்வா முகம்மதரை
இன்னேர மெனுளத்தி லெழுந்தருளச் சொல்லாயோ
மன்னேநான் காணேனே வருமோசைக் கேளேனே
பொன்னேநீ யுதவிசெய்வா யென்புண்ணியனே"

என்ற அப்பாவின் அருளிசைக் கடல் ஓசையுடன் நம் செவிகளில் ஒலிக்கின்றது.

மாராயமான முகம்மதரைப்பற்றி அப்பா அவர்களின் ஆசையைப் — பேராசையைத் தெரிந்துகொண்டு மீண்டும் நீந்துகிறோம்.

அருமையுடனும் பெருமையுடனும் அப்பா அவர்கள் தேடுகின்ற, உலகத்தின் ஒளி முகம்மது நபி (ஸல்) அவர்களின் மரபினர்களாக வாழ்கின்ற பேறுபெற்றுள்ள நாம் அதற்காக என்ன செய்தால் தகும்? என்று நண்பர் ஒருவர் கேட்கின்றார். என்ன செய்யமுடியும்? என்று இன்னொருவர் கேட்கிறார். "நமக்குள் ஏன் சர்ச்சை. அப்பா அவர்கள்—சமய நீதி கண்ட மேதை அவர்கள்—என்ன சொல்கிறார்கள் என்று பார்ப்போம்" என்று அப்பா அவர்களின் திருமுகத்தை நோக்கினேன்.

"ஆதம் பெறு மக்களெல்லாரிலும் நம்மையன்பு கொண்டே
வேத நபியிரசூலும் மத்தாக்கும் வெகுநன்றிக்குப்
பாதங்கள் மேலும் சிரங் கீழுமாய்ப் பத்துநூறுபிரமாண்
டோதித்தவம் செய்தாலும் போதாதா மன்றுகந்ததுக்கே"

எனக் கணீர் என்ற குரலில் பாடினார்கள்!

மேதையருள் மேதை மெய்ஞ்ஞானம் கண்ட ஞானி அப்பா அவர்களின் இன்ப இசையைக் கேட்டவர்கள் மீண்டும் நீந்துகிறோம்.

மேலும் ஞானக்கடலில் உள்ள அதியற்புதமான பொருள்களையும் அறிந்துகொள்ள — தெரிந்துகொள்ள — உணர்ந்துகொள்ள அவா நமக்கிருந்தாலும் அவகாசம் குறைவாக இருந்தமையால், தொடர்ந்து நீந்துகிறோம்; நீந்திவரும்போது திடீர் என்று ஒருவர், 'எல்லாஞ்சரிதான் அப்பாவின் இலட்சியம் என்ன?' என்று வினவுகிறார்.

'முற்றும் துறந்த முனிவர்களின் இலட்சியம் என்ன?' என்று நான் மெதுவாக மழுப்பித் தப்பிவிடலாம் என்றெண்ணினேன் — நண்பரோ விடுவதாயில்லை. இதற்கும் ஒரு பதிலைச் சொல்லிட நினைத்தேன். ஆனால், என்னால் சொல்லமுடியாமல் போய்விட்டதால் — நான் திணறுவதுகண்டு அப்பா அவர்கள் கம்பீரமான பார்வையுடன்,

"நல்ல நாயனேயுனைப் புகழ்ந்திடும் நாவாற்
புல்ல ரானவரையும் புகழ்வேனோ புவியில்?
அல்ல லானதையகற்றி நற்பதவி தந்தருள்வாய்
சொல்லும் வாய் மைகண்டிரங்கு நீயெவர்க்குநற்றுணையே"

என்று சொல்லாமல் சொல்லி அப்பா அவர்கள் பாடினார்கள்.

"இனி என்ன?" என்றேன் நான்.

"நமக்காக அப்பா என்ன செய்திருக்கிறார்கள்?", என்று மீண்டும் ஒரு கேள்வி. ஏககாலத்தில் மூன்று, நான்கு பேர்களாகச் சேர்ந்து கேட்டார்கள். ஏது இவர்கள் விடமாட்டார்கள் போலிருக்கிறதே என்றெண்ணி அப்பாவிடம் புகலிடம் தேடுகிறேன் நான். ஞானியர்கோன் — தென்காசி நன்னுடைந்த பொன்னுன தேசிகர்-திருவாய் மலர்கிறது; கவிவெள்ளம் காட்டாற்று வெள்ளம்போல் கரைபுரண்டோடுகிறது; மெல்லச் செவிமடுக்கிறோம்:

"ஏழையடியார்க் கிரங்கு மில்லல்லாவே யெங்கள்
வேளையறிந்து உதவும் மேலோனே" —

என்ற வெண்பாவைப் பாடுகிறார்கள். தொடர்ந்து,

"வழுவா நெறியீமான்றிரு மனமானது நிகுமத்
தொழுகானறு நானம் முயிருடலா முளத்தறிவின்
றெழுகா லொளிநபியாத முள்ளிடங் கஃ பத்துல்லாவின்
புழுகா நறைதருமாமலர் புகழீந்திடல்லாவே".

அடிகள் ஒலிப்பதையும் கேட்கிறோம். கரையை எல்லோரும் அண்முகிறோம் கைகால்கள் சோர்வுற்றாலும், கருத்துக்களை ஏற்ற உள்ளங்கள் சோர்வுகொள்ளாத நிலையில் அப்பாவை நேரக்குகிறோம். முடிமன்னன் முத்துசாமித் தம்பிரான் அப்பாவின் அடிதொட்டு முத்தமிட்டுப் பெருமைப்படுத்தினுன். அந்தச் செல்வர் பீருமுகம்மதர் அப்பா இடமிருந்து விடைபெறும் கட்டத்தில் நாங்கள் இருக்கிறோம்! கரையை அடைந்ததும் அப்பா அவர்கள் ஆட்காட்டி விரலையசைத்துக் காட்டிய திசையை எல்லோரும் நோக்குகிறோம்! *ஞானமணி மாலை* என்ற அழகிய மலர்த் தோட்டம் தெரிகிறது, ஆசைப்பெருக்கால் அத்தனை பேரும் தோட்டத்துள் சென்று விடுகிறோம். அங்கேதான் மணிமணியான வாசகங்களைக் கொண்ட மணி மந்திராலய அறையிருப்பதை யுணர்கிறோம்.

தோட்டத்துக்குள் சென்றதும் ஜில்லென்ற தென்றல் காற்றும் ஜம் என்ற மலர்களின் நறு மணமும் நமது உடலையும்-உள்ளத்தையும்—சுக உலகிற்கு அழைத்துச் செல்கின்றன.

---

பொறுமையுள்ள ஏழை, இறைவனிடம் நன்றியுள்ள செல்வந்தனை விடச் சிறந்தவர். நன்றியுள்ள ஏழை அவ்விருவரையும் விடவும் சிறந்தவர். நன்றியும், பொறுமையுமுள்ள ஏழை அம்மூவரை விடவும் சிறந்தவர்.

— மஹபூப் சுப்ஹானி (கத்)

# வாழ்க்கைக்கு வழிகாட்டும் இஸ்லாமிய நெறி

பேராசிரியர் கா. அப்துல் கபூர், எம். ஏ.

இறையின் அருளிலே பிறந்து, மறையின் உரையிலே உறைந்து, மக்களின் நெஞ்சிலே நிறைந்து, மாநில வரலாற்றிலே சிறந்துள்ள சமயங்களின் வரிசையிலே இஸ்லாமிய நெறியும் ஒன்றாகும். பல்வேறு நாட்டவர் மட்டுமின்றிப் பல்வேறு இனத்தவரும் பல்வேறு நிறத்தவரும் பல்வேறு தரத்தவரும் பின்பற்றும் பெருநெறியாக அமைந்துள்ளது இஸ்லாம். உலக மக்களின் சிந்தனையை உருவாக்கிய பெரு மதங்களின் வரிசையிலே, இளமை வாய்ந்ததாகக் காட்சியளிப்பது இஸ்லாம். இவ்வாறு காலத்தாற் பிற்பட்டதன் காரணமாக அது, ஞாலத்திலே முற்பட்ட சமயநெறிகளின் சீரிய கருத்துக்களையெல்லாம் தன்னகத்தே கொண்டு திகழ்வதில் வியப்பில்லை. தெளிவான வரலாற்றையும், தெளிவான கொள்கைகளையும், உறுதியான செயல் திட்டங்களையும் பெற்றுச் சிறப்படைந்தும், இஸ்லாமிய நெறியை உலகம் உரிய முறையிலே புரிந்துகொள்ளவில்லை. இஸ்லாம் வாளால் பரப்பப் பட்டது; வன்முறையை விரும்புவது; அதைப் பின்பற்றுவோர் முரடர்கள்; வெறிபிடித்தவர்கள்; சிற்றின்ப வேட்கை மிக்கவர்கள்; வீட்டுக்குள்ளே பெண்களைப் பூட்டி வைப்பவர்கள் என்பன போன்ற தவறான கருத்துக்கள் மக்கள் மனத்திலே இடம் பெற்றிருக்கின்றன. உண்மைக்குப் புறம்பான இக்கருத்துக்கள் பிஞ்சு

நெஞ்சுகளிலே கூடப் பதிந்து விடுகின்றன. ஒரு சமயத்தின் அடிப்படைக் கருத்துக்களை அடுத்தவர் அறிந்து கொள்வது இன்றைய உலகுக்கு மிகத் தேவையானது; ஒருமைப் பாட்டிற்கும் நல்வாழ்வுக்கும் வழி வகுப்பது.

“இஸ்லாம்” என்னும் அறபு மொழிச் சொல்லுக்குச் சாந்தி, சமாதானம், அமைதி, வழிப்படுதல், கீழ்ப்படிதல் ஆகிய பல பொருட்கள் உள்ளன. இஸ்லாம் நெறியைப் பின்பற்றுவோர் முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுகின்றனர். இஸ்லாம், முஸ்லிம், ஸலாம், ஸலீம், தஸ்லீம், ஆகிய சொற்கள் ஒரே வேர்ச்சொல்லிருந்து தோன்றியவை. இஸ்லாம் நெறியை, ‘முகம்மது மதம்’ என்றும், முஸ்லிம்களை ‘முகமதியர்’ என்றும் வழங்குவது பொருத்தமானதல்ல. ஏனெனில், இஸ்லாமியக் கோட்பாட்டின்படி, உலகில் தோன்றிய ஆதி மனிதர் ஆதம் (அலை) அவர்கள் முதற்கொண்டு, அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஈருக வந்த இறை தூதர்கள் அனைவரும், இஸ்லாமிய நெறியைப் பின்பற்றிய முஸ்லிம்களாவார்கள். உலகத் தொடக்கம் முதற்கொண்டு ஒவ்வொரு நாட்டிற்கும், ஒவ்வொரு மொழிக்கும் இறையருள் பெற்ற தூதர்கள் வந்துள்ளனர். மனித வாழ்விலே, குழந்தைப் பருவம், சிற்றிளமைப் பருவம், முற்றிளமைப் பருவம் எனப் பல பருவங்கள் அமைந்திருப்பதைப் போல உலக வரலாற்றிலும், பழங்கற்காலம், புதுக்கற்காலம் போன்ற பல பருவங்கள் அமைந்துள்ளன. நாற்பது வயது நிரம்பப் பெற்ற ஒரு மனிதனின் பக்குவமடைந்த நிலையை, ஓடியாடித்திரியும் ஒரு சிறுவனிடம் எதிர்பார்க்க முடியாததைப் போல, உலகத் தொடக்கத்தில் வாழ்ந்த மக்களுக்கு, அரசியல், பொருளாதார, சமூக, ஆத்மீக அறிவுரைகளையெல்லாம் புரிந்து கொள்வதற்குரிய ஆற்றல் இருந்திருக்காது. கி. பி. ஏழாம் நூற்றுண்டை ஒட்டிய காலத்தில், உலகம் பரிபக்குவ நிலையை எட்டிப் பிடித்திருந்தது; உயரிய தத்துவங்களைப் புரிந்து கொள்ளக் கூடிய நிலையை அடைந்திருந்தது. ஆகவே அருளாளனுகிய இறைவன் அத்தருணத்தில் மாநிலத்தின் மார்பிடமாகிய மக்கமா நகரத்தில் அருமைத் திருத்தூதர் அண்ணல் முகம்மது (ஸல்) அவர்களைத் தோற்றுவித்தான். அவர்களுக்கு வானவர்கோன் ஜிப்ரீல் (அலை) அவர்கள் வழியாக அணைத்துலக நபிப்பட்டத்தை வழங்கினுன். எல்லா நாடுகளுக்கும், எல்லாக் காலங்களுக்கும் எல்லா இனத்தாருக்கும் பொருந்துகின்ற கருத்துக் களஞ்சியமாகிய திருக்குர்ஆனை இறுதித் திரு மறையாக அருளி, இஸ்லாமிய நெறியை நிறைவு படுத்தினுன். அண்ணல் பெருமானுர் அவர்கள் இறுதியாக ஆற்றிய புனிதப் பயணமாகிய ஹஜ்ஜின் போது, வெளியான திருமறைத் தொடர் இக்கருத்தை வலியுறுத்துவதாகும்:

"இந்த நாளில் உங்களுடைய நெறியை நான் நிறைவுபடுத்தி விட்டேன்; உங்கள்மீது என் அருட்கொடைகளைப் பொழிந்து விட்டேன். இஸ்லாத்தை நிறைவான நெறியாக ஏற்றுக் கொண்டேன்" என்பது திருமறை. ஆகவே இஸ்லாமிய நெறி நபிகள் நாயகமவர்களால் புதுவதாகத் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றல்லவென்பதும், அவர்களுக்கு முன்னல், பாருலகின் பல்வேறு பகுதிகளிலும் பல்வேறு காலங்களிலும் தோன்றிய தீர்க்க தரிசிகள், அவ்வக் காலங்களுக்கும் அவ்வந் நாட்டிற்கும் ஏற்பக் கூறிய அறிவுரைகளுக்கு, அனைத்துலக அடிப்படையில் முறையான முழுவடிவம் கொடுப்பதே அண்ணல் பெருமானுர் (ஸல்) அவர்கள் ஆற்றிய பணியென்பதும், ஆகவே இஸ்லாமிய நெறியை 'முகம்மது மத'மென்றும், முஸ்லிம்களை 'முகம்மதியர்' என்றும் கூறுவது பொருந்தாதென்பதும் முதற்கண் அனைவரும் உணரத் தக்கவையாகும்.

பொதுவாக, மதம் என்னும் சொல்லினல் சுட்டப்படுகின்ற பொருளுக்கு அப்பாற்பட்டதாக இஸ்லாம் இலங்கக் காணலாம். முத்திநிலை பெறுவதற்குரிய சில தத்துவங்களை உள்ளடக்குவதாகவும் பரம்பொருளை அடைவதற்குரிய சில சடங்குகளைக் கொண்டதாகவும், ஆத்மீக உயர்வுக்குரிய சில ஒழுக்கங்களை உடையதாகவும் மதம் மதிக்கப்படுகின்றது. ஆனல் இஸ்லாமிய நெறி, ஆத்மீக உயர்வுக்குரிய அரிய தத்துவங்களை விளக்குவதோடு மட்டுமன்றி, இம்மையிலும் மறுமையிலும் செம்மையாக வாழ்வதற்குரிய வழிகள் அனைத்தையும் வகுத்துத் தந்துள்ளது. நாம் பயன்படுத்துகின்ற தண்ணீர் எப்படி இருக்கவேண்டும், நாம் எத்தகைய உணவுகளை உட்கொள்ளவேண்டும், எப்படி உட்கொள்ளவேண்டும், எவ்வாறு ஆடை அணிதல் வேண்டும், பெற்ருேரிடத்திலும் மற்ருேரிடத்திலும் எப்படி நடந்துகொள்ளவேண்டும், யார் யாரைத் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்பவற்றையெல்லாம் இஸ்லாமியநெறி எடுத்துக் காட்டுகின்றது. சுருங்கக் கூறின் வாழ்வியலுக்கும், பொருளியலுக்கும், அரசியலுக்கும், அறிவியலுக்கும், அனைத்துத் துறைக்கும் வழிகாட்டுகின்றது வளமார் இஸ்லாமிய நெறி.

இஸ்லாமியத் திருமறையாகிய திருக்குர்ஆன் "மதம்" என்னும் சொல்லுக்கே மாண்புமிக்க விளக்கம் தருகிறது:

"நபியே! மதத்தைப் பொய்யாக்குவோன் யாரென்பதை நீர் பார்க்கவில்லையா? அவன்தான் அனுதைகளை வெருட்டுபவன்; அவன் ஏழைகளுக்கு உணவளிக்கப் பிறரைத் தூண்டுவதுமில்லை. மேலும் தொழுகையில் பாராமுகமாயிருக்கும் தொழுகையாளிக்கும் கேடுதான். அவர்கள் பிறருக்குக் காண்பிக்கவே தொழுவார்கள்.

சிறு பொருளையும் பிறருக்குக் கொடுக்காமல் தடுத்துக் கொள்வார்கள்'' (அத். 107) மதம் என்றால் என்ன? அதனைப் பொய்யாக்குவோர் யாவர்? தொழுகையின் நோக்கம் என்ன? தொழுகையின் பயனை இழப்போர் யாவர்? என்பனவற்றையெல்லாம் இத்திருமறைப் பகுதித் தெளிவாகக் காட்டுகின்றது. அனாதைகளை ஆதரிக்காமல் விரட்டுவோரும் ஏழைகளுக்கு எவ்வித உதவியும் புரியாதவர்களும் மதத்தைப் பொய்யாக்குகின்றார்கள். பிறர் மெச்சுவதற்காகத் தொழுகின்றவர்களும், பிறருக்கு ஒரு சிறு பொருளைக் கொடுத்துதவுதற்குத் தயங்குகின்றவர்களும் எவ்வாறு தொழுதுவந்தபோதிலும் தொழுகையின் முழுப்பயனையும் அடைதல் இயலாது என்பதை இறைமறை அழுத்தந்திருத்தமாக எடுத்தியம்பக் காண்கின்றோம். இதுதான் சமயப் புரட்சி.

இத்தகைய இஸ்லாமிய நெறியின் ஐம்பெருங் கடமைகளை அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்கள் அழகிய முறையில் விளக்கியுள்ளார்கள்:

''இஸ்லாம் ஐந்தினால் கட்டப்பட்டுள்ளது. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் இல்லையென்றும், முகம்மது (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் திருத்தூதர் என்றும் ஒப்புக் கொள்வதும், தொழுகையை நிலைநிறுத்தி வருவதும், ஜகாத் கொடுப்பதும், ரமலான் மாதம் நோன்பு நோற்பதும், மக்காவுக்குச் சென்று ஹஜ்ஜு செய்யும் ஆற்றல் உள்ளோர் ஹஜ்ஜு செய்வதும், அவ்வைந்து. இந்நபி மொழியின் அடிப்படையில் இஸ்லாமிய நெறியை ஒரு கட்டடத்திற்கு ஒப்பிடலாம். நன்னம்பிக்கை இக்கட்டடத்தின் அடிப்படை; தொழுகை கட்டடத்தைத் தாங்கி நிற்கும் தூண். நோன்பு கட்டடத்தின் கூரை. உரிய முறையிலே ஒருவர் வாழ்வதற்கு, இம்மூன்று உறுப்புக்களால் அமைந்த இக்கட்டடமே பொதுவாகப் போதுமானதாகும். ஆனால், பொருள் வசதி உடையோர் இன்னும் இரு உறுப்புக்களால் இக்கட்டடத்தை அழகுபடுத்த முடியும். ஜகாத் என்னும் கடமைக் கொடையைப் பாதுகாப்புடைய சுவராகவும், ஹஜ்ஜு என்னும் புனிதப் பயணத்தை வான்வழி காட்டும் ஒளி விளக்காகவும் கொண்டு அந்த இல்லத்தை அழகு படுத்திக் கொள்ள முடியும். கட்டடத்தின் கவர்ச்சியைப் பெருக்க முடியும்.

ஒரு கட்டடத்தின் அடிப்படை எவ்வாறு புறத்தாரின் கண்ணுக்குப் புலப்படாமல், நிலத்திற்கு அடியிலே புதையுண்டு கிடக்கிறதோ அவ்வாறே இஸ்லாமிய இல்லத்தின் அடிப்படையான நம்பிக்கை, உயிருக்குள்ளே புதைந்து உள்ளத்திலே ஊறிக் கிடக்கின்றது.

"லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் றஸூலுல்லாஹ்" —அஃதாவது—'வணக்கத்திற்குரியோர் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமல்லர்; முஹம்மது அவனின் தூதராவார்'—இதுதான் இஸ்லாமிய நம்பிக்கையின் உயிர்நாடியாகிய கலிமாவாகும்.

உலக மொழிகளில் இறைவனைக் குறிக்கின்ற பல்வேறு சொற்களின் வரிசையிலே, 'அல்லாஹ்'—என்னும் அரபுமொழிச் சொல் திட்பமும் நுட்பமும் வாய்ந்து இணையற்றுத் திகழ்கின்றது; ஒப்பில்லா நயஞ்செறிந்து இன்பத்தேன் பொழிகின்றது. எல்லா வகை நிறைவுகளையும் உடையவனுய்த், தானுய்த் தனித்தியங்கும் சுயம்புவாகிய சுத்த சைதன்னியத்தையுடைய பராபரனுக்குச் சொந்தமான தனிப்பெயரே 'அல்லாஹ்' என்பதாகத் தாஜுல் உரூஸ் போன்ற அகராதிகள் பொருள் விளக்கம்தரக் காண்கின்ரேம். மிகப் பழங்காலத்திலிருந்தே இச்சொல்லை அரபு மொழியில் ஒரே பரம்பொருளைக் குறிப்பதற்காக மட்டுமே பயன்படுத்தி வந்துள்ளார்கள்.

இச்சொல்லில், எல்லா எழுத்துக்களுக்கும் அடிப்படையாகவும் எல்லா மொழிகளுக்கும் தொடக்கமாகவும் அமைந்த அகரம் முதலாவதாக அமைந்தது; ஒலிகளிலே மிகவும் இனிமை வாய்ந்த தாகிய இடையினமாகிய லகரம் இரட்டித்து இடையிலே நின்றது; ஆத்மீக அற்புதங்களை விளைக்கின்ற 'ஹு' என்னும்ஒசை இறுதியிலே அமைந்தது. இச்சொல்லை ஒலிக்கின்ற போது நெஞ்சமும் வாயும் நிறைவைக் காணவேண்டு மென்பதற்காக ஒரு தனி முறையிலே இசைத்தார்கள் போலும். தொடர்ந்து இச்சொல்லின் நயத்தை ஆய்கின்றபோது இன்னெரு சிறப்பைக் காண்கின்ரேம். இச்சொல்லின் எழுத்துக்கள் குறைந்தாலும், சிதைந்தாலும், முதற் பொருளையே உயர்வாகச் சுட்டுகின்ற உயர்வைக் காண்கின்ரேம். 'அல்லாஹ்' என்பதில் முதலெழுத்தை நீக்கினுல், 'லில்லாஹ்' — அல்லாஹ்வுக்காக—என்பது பொருள். முதல் இரண்டெழுத்துக் களை நீக்கிவிட்டால், 'லஹு' — அவனுக்காக என்பது பொருள். முதல் மூன்று எழுத்துக்களையும் நீக்கிவிட்டால், 'ஹு'—அவன்— என்பது பொருள். இவ்வாருகச் சிதைந்த நிலையிலும் முதற் பொருளைச் சிறப்பாகச் சுட்டுகின்ற இச்சொல்லை ஆராய்ந்த அறிஞர்கள், வியந்து போற்றியுள்ளனர். அடுத்தபடியாக, இச் சொல்லின் வரிவடிவமோ மூடிய கையைப் போல அமைந்து பல ஆழ்ந்த தத்துவங்களை வெளிக்காட்டி நிற்கிறது. தமிழகத்தின் தனிப்பெருஞ் செல்வமாகிய திருக்குறளின் முதற்குறள், "அகர முதல வெழுத்தெல்லா மாதி பகவன் முதற்றே யுலகு" என்பதாகும். இக்குறளின் முதலெழுத்தாகிய அகரத்தையும், நடுவெழுத்துக்

களாகிய 'ல்லா' என்பனவற்றையும், ஈற்றெழுத்தாகிய குகரத்தையும் இணைத்துப் பார்க்கின்றபோது, 'அல்லாகு' என்னும் சொல் பிறப்பது மிகுந்த சுவை பயப்பதாகும்.

"லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்" என்னும் கலிமாத் தொடரின், இருபத்து நான்கு எழுத்துக்கள் காட்டும் நுட்பமான கருத்துக்களையெல்லாம், மெய்ப்பொருள் மேதைகள் ஆராய்ந்து தனி நூல்களே வரைந்துள்ளனர். புள்ளியுள்ள எழுத்துக்களை மிகுதியாகப் பெற்றுள்ள அரபு மொழியில், இந்நீண்ட தொடர் முழுதுமே புள்ளியில்லா எழுத்துக்களாக அமைந்திருப்பது, அறிஞரொருவருக்குப் பெரு வியப்பூட்டவே, புள்ளியில்லா எழுத்துக்களாலேயே திருமறைக்கு ஒரு புதுமையான உரையை வகுத்தார். இருபத்து நான்கு மணி நேரத்தைக் கொண்டிருக்கும் நாள் வாழ்வுக்கு, நல்வழி காட்டும் இவ்விருபத்து நான்கு எழுத்துத் தொடரின் நேர்பாதியாகிய, 'லாயிலாஹ இல்லல்லாஹ்' என்னும் பகுதி இதழொட்டா நிரோகத் தொடராகவும் அமைந்திருப்பது பெரு வியப்பிற்குரியது. இதழ்கள் புண்பட்ட நிலையிலும், இதழ்கள் இயங்கா நிலையிலும் இறைவன் இத்தொடரை இவ்வாறு அமைத்தான் போலும்!

இவ்வளவு சிறப்புக்களைப் பெற்றுள்ள இத்தொடர், இறைவனின் ஒருமையையும் மனிதகுலத்தின் உரிமையையும் திறம்பட விளக்கி விடுகின்றது. "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்னும் தீந்தமிழ்த் தொடர் இத்துடன் ஒப்புநோக்கி மகிழத்தக்கது. இறைவனைத்தவிர வணக்கத்திற்கும், கீழ்ப்படிதலுக்கும் தகுதியுடையோர் யாருமல்லர் என்று கூறும்போது மாநிலத்தின் மக்கள் அனைவரும் ஆண்டவன் அடிமைகள் என்பதும், ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு அடிமையாக இருக்கத் தேவையில்லை என்பதும் பெறப்படுகின்றது. இதனை வலியுறுத்தவே முஸ்லிம்களின் பெயர்களில் பெரும்பாலானவை, 'அப்து'—அஃதாவது, அடிமை—என்பதை முதலிற்கொண்டு, இறைவனுக்குரிய அழகிய திருப்பெயர்களுள் ஒன்றை அடுத்துப்பெற்று அமைவதைப் பார்க்கின்றோம். அப்துர்ரஹ்மான் என்றால், அருளாளனின் அடிமை என்பது பொருள்; அப்துர்ரஹீம் என்றால், அன்பாளனின் அடிமை என்பது பொருள். அப்துஸ்ஸமது என்றால் தேவையற்றவனின் அடிமை என்பது பொருள்; அப்துல் கபூர் என்றால் மன்னிப்பாளனின் அடிமை என்பது பொருள். இறைவனுக்கே இவர்கள் அடிமை என்பதையும் வேறு யாருக்கும் அடிமைகள் அல்லர் என்பதையும் இஸ்லாமியப் பெயர்கள் எழில்பட விளக்கக் காண்கிறோம்.

பரந்து விரிந்து கிடக்கும் இவ்வுலகத்தை மட்டுமன்றி அண்ட கோளங்கள் அனைத்தையும் ஆக்கியளிக்கின்ற ஓரிறைவன் இருக்கின்றான் என்பது மட்டுமல்ல, அவ்விறைவன் மட்டுமே வணக்கத்திற்குரியவன் என்பது இஸ்லாமியக் கொள்கையாகும்.

"அனைத்துலகத்தையும் படைத்துக் காத்துப் பரிபக்குவப்படுத்துகின்ற இறைவனுக்கே புகழனைத்தும்" என்பது திருமறையின் அழகிய தொடக்கமாகும். நின்றாலும், இருந்தாலும், நடந்தாலும், கிடந்தாலும், மென்றாலும், துயின்றாலும் இறையுணர்வே மனிதனை இயக்கவேண்டுமென்பதை இஸ்லாம் வற்புறுத்திக் காட்டுகின்றது. முஸ்லிம் ஒருவர் எந்தச் செயலையும் தொடங்கும்போது, "பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர்ரஹீம்" (அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால் தொடங்குகின்றேன்) எனக் கூறுகின்றார். ஒரு செயலைச் செய்ய நாடும்போது, "இன்ஷா அல்லாஹ்" (அல்லாஹ் நாடினால்) எனச் சொல்கிறார். உள்ளத்தின் உணர்ச்சிப் பெருக்கில், "அல்லாஹு அக்பர்" (அல்லாஹ் மிகப்பெரியவன்) என தக்பீர் முழக்குகிறார். வியப்பளிக்கும் ஒரு நிகழ்ச்சியைக் காணின், "ஸுப்ஹானல்லாஹ்" (அல்லாஹ்வைத் தூய்மைப் படுத்துகிறேன்) என மொழிகின்றார். அவர் தும்மினால், "அல்ஹம்துலில்லாஹ்" (புகழனைத்தும் இறைவனுக்கே) என இயம்புகின்றார்; இன்னொருவர் தும்மக்கண்டால், "இர்ஹம்கல்லாஹ்" (அல்லாஹ் உங்களுக்கு அருள்புரிவானாக) என உரைக்கின்றார்: பாராட்டுரை பகரும்போது, "மாஷா அல்லாஹ்" (அல்லாஹ் நாடியது நடந்தது) என நவில்கின்றார்; நன்றி கூறும்போது "ஜஸாக்கல்லாஹ்" (நாயன் உங்களுக்கு நற்கூலி வழங்குவானாக) என்கின்றார்; பயணம் செல்வோர் விடைபெறும்போது, "ஃபீ அமானில்லாஹ்" (ஆண்டவன் காவலில்) எனக் கூறி வழியனுப்பி வைக்கின்றார்; பயணத் தொடக்கத்தில், "தவக்கல்து அல்லாஹ்" (இறைவன்மீது அடைக்கலம் வைத்தேன்) என விளம்புகின்றார்; கடியத்தக்க வொன்றைக் காணின், "நவூது பில்லாஹ்" (இறைகாவல் தேடுகின்றேன்) எனப் புகழ்கின்றார்; பாவமன்னிப்புத் தேடும்போது, "அஸ்தஃபிருல்லாஹ்" (இறைவனிடம் மன்னிப்புத் தேடுகிறேன்) என இயம்புகின்றார்; ஒருவர் இறந்த செய்தியைக் கேட்டால், "இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்" (நிச்சயமாக, நாம், இறைவனுக்காகவே; இறைவனிடமே திரும்புவோம்) எனக் கூறித் தேறுகிறார். ஐவேளைத் தொழுகை நேரங்களில் மட்டுமன்றி மனிதன் ஆற்றுகின்ற ஒவ்வொரு செயலின்போதும் இறைவனை நினைவு கூர்ந்து அவன் இன்னருளிலே திளைத்து அவன் ஆணைப்படி ஒழுகவேண்டுமென்பதே இவற்றின் உள் நோக்கமாகும்.

ஒரே இறையின்மீது குறையாத — அசையாத — நம்பிக்கை கொள்வதன் வாயிலாகத்தான், உலகத்தின் தீமைகள் அனைத்தையும் அகற்றமுடியுமென்பது, இஸ்லாமிய நெறி. பூவை நகையுறுத்திப் புல்லை வியப்பாக்க வருகின்ற கதிரவன், பொற்குடத்தில் பாலேந்திச் சொரிவதைப்போன்ற முழுநிலா, எல்லையற்றுக் கவிந்து நிற்கின்ற வான்வெளி, வானளாவி நிற்கின்ற மலைகள், நீண்டு விரிந்து கிடக்கின்ற நீலக்கடல், நட்ட நடுநிசியில் வானிலே மின்னுகின்ற விண்மீன்கள், நிலத்திற்கு உயிரூட்ட வருகின்ற மழை, நீலக்கடலின்மீது நிமிர்ந்து செல்லும் நாவாய்கள், பல்வேறு இடங்களிலும் பண்ணிசைத்துப் பறக்கின்ற பறவைகள், கொடிகளில் அசைந்தாடுகின்ற வண்ணமலர்கள்; அம்மலர்களைப் புன்னகையால் வென்றுவிடுகின்ற குழந்தைகள், நிலத்திலும் நீரிலும் வாழ்கின்ற கோடிக்கணக்கான உயிரினங்கள், அவற்றின் அமைப்புக்கள், வாழ்க்கை முறைகள், — ஆகியவற்றை ஆழ்ந்து நோக்குவோர் ஆண்டவனின் படைப்புத் திறனை வியந்துபோற்றாமலிருக்க முடியாது. "ஒட்டகம் எவ்வாறு படைக்கப்பட்டுள்ளது, வானம் எவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது, மலைகள் எவ்வாறு நாட்டப்பட்டுள்ளன, நிலம் எவ்வாறு விரிக்கப்பட்டுள்ளது. என்பதை அவர்கள் பார்க்கவேண்டாமா?" என வினவுகிறது, வல்லோனின் வான்மறை. சிற்றெறும்பு முதற்கொண்டு பெரும் பொருட்கள் ஈறாக, உயிரினங்களையும், உலகப் பொருட்களையும் நுட்பமாகப் படைத்துச் சற்றேனும் மாறுபாடின்றி, ஒழுங்கான முறையில் ஒரு விதிக்குட்பட்டு இயங்கச் செய்கின்ற இறைவனை உணராதார், உணராதாரே.

கண்ணால் காணமுடியாத இறைவனை—மக்கள் கற்பனையிலே இடம்பெற்ற கடவுளை—எவ்வாறு நம்ப முடியுமெனப் பகுத்தறிவாளர்கள் பல வினாக்களை எழுப்பலாம். மனிதனின் சிந்தனையையும் பகுத்தறிவையும் சிறப்பித்துப் பேசும் இஸ்லாம், மனிதனின் சிந்தனைக்கும் அறிவுக்கும் எட்டாத எத்தனையோ வகையான இயல்புகளும் பொருட்களும் இவ்வுலகிலுள்ளதை எடுத்துக் காட்டுகின்றது. "பூதப் பொருட்கே புலன் துணையன்றிப் போதப் பொருட்குப் போதும் போதம்" என்பது முற்றிலும் உண்மை. ஒரு மருந்து ஒரு நோயைப் போக்க வல்லது என்பதாக ஒரு மருத்துவர் கூறிவிட்டால், அவர் கூற்றைச் சோதித்தறியாமல் முற்றிலும் நம்பி, மருந்தை உட்கொண்டு, நோய் தீரக்கண்டு மகிழ்கின்றோம்; ஆனால் இறைவனின் இன்னருளைப்பெற்ற மனிதகுல மாணிக்கங்கள் எடுத்துரைத்த மறையுரைகளை மதிக்கத் தயங்குகின்றோம். கண்ணாற் காண முடியாததாய்க் கம்பிவழிச் சென்று கொண்டிருக்கும், மின்சாரத்தின் வியத்தகு விளைவுகளை

உணர்ந்து போற்றுகின்றோம். ஆனால் மாசற்ற இயல்புகளும் தேசுற்ற உள்ளமும் வாய்க்கப்பெற்ற இறைநேயச் செல்வர்கள் எடுத்துக்காட்டும் வழிச்செல்வதற்குக் கூசுகின்றோம். குணமென்னும் குன்றேறி நிற்கும் கூர்த்தமதி ஞானியரின் கூற்றுக் களைப் புறக்கணிக்கின்றோம். தமக்கு முன்னால் தோன்றிய முன்னவன் தூதர்கள் மொழிந்த கருத்துக்கள் அனைத்தையும் தாங்கி, இறைவனின் நிறைவான மறையை நெஞ்சத்திலே கொண்டு, அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்கள் வாய்மையான இறைப்பண்பை தூய்மையாக விளக்கி, இருண்ட நெஞ்சங்களிலே ஒளிவிளக்கை ஏற்றி வைத்தார்கள்.

அலகிலா அருளும் அளவிலா அன்பும்
இலகுமோ ரிறைவன் இனியபே ரிறைவன்
உலகெலாம் படைத்தே உயர்வுறக் காக்கும்
புலமையோ னவனே புகழுக்குரியோன்
முடிவுநா ளதனின் முழுமுத லரசன்
பெறுவோ னல்லன் பெறப்பட்டோனலன்.

இவ்வாறாக இறைப்பண்புகளையும் இயல்புகளையும் விளக்கிக் கூறும் திருமறைப் பகுதிகள் பெருமித நடையுடன் விளங்குவதைக் காணலாம். கடலினை மையாக்கி இறைபுகழை எடுத்தெழுவதற்கு முயன்றாலும், கடல்நீர் வற்றி விடுமேயன்றி முயற்சி முற்றுப் பெறாது. இத்தகைய இறைவனுக்கு இணைவைப்பதும், இயல்பிலோ வருணனையிலோ வேறுள்ளவற்றை அவனுக்கு ஒப்பிட்டுக் கூறுவதும் மன்னிக்க முடியாத பெருங்குற்றங்களாகக் கருதப்படும். அடியார்களின் பாவங்களை மன்னிக்கும் அளவற்ற அருளாளனாகிய இறைவன், அவனுடன் கிளர்ச்சி புரிவதற்கொப்பாகிய பெரும் பாவமாகிய "ஷிர்க்" எனப்படும் இணைவைத்தலை, மன்னிக்கவே மாட்டான் என்பது இஸ்லாமிய நெறியின் திடமான நம்பிக்கை. இதுதான் கலிமாவின் முற்பகுதி கற்பிக்கும் படிப்பினையாகும்.

அடுத்தபடியாக அமைந்துள்ள கலிமாவின் பிற்பகுதி, "முஹம்மதுர் ரசூலுல்லாஹ்" — அண்ணல் முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார் — என்பதாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைதூதரே யெனினும் மனித இயல்பு களையுடைய மானிடரே யாவார். முன்னால் தோன்றிய இறை தூதர்களை, அவர்களைப் பின்பற்றியோர், இறைநிலைக்கு உயர்த்தி விட்டது போன்று, நபிகள் நாயகம் (ஸல்) அவர்களையும் இறை நிலைக்கு உயர்த்தி விடுதல் கூடாது; அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அனைத்துலக மக்களுக்கும் ஒரு அருட்கொடையாக அமைந்துள்ளார்கள்; அவர்களின் வாழ்வும் வாக்கும் மனித

குலத்திற்கு அழகிய முன்மாதிரியாகும் — என்பன போன்ற கருத்துக்கள் கலிமாவின் பிற்பகுதி வழங்கும் படிப்பினையாகும். இக்கலிமாவை நெஞ்சிலே நிறுத்தி, நாவினால் மொழிந்து செலாற்றுவோர், அண்ணல் பெருமானார் அவர்களுக்கு முன்னர் தோன்றிய இறையருள்பெற்ற தீர்க்கதரிசிகள் அனைவரையும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

பிறமதத் தலைவர்களாகிய "ஜீஸஸ்" எனப்படும் ஈஸா நபியையும், "மோஸஸ்" எனப்படும் மூஸா நபியையும், "டேவிட்" எனப்படும் தாவூத் நபியையும், திருமறையில் பெயர் கூறப்பட்டுள்ள, ஆதம், இத்ரீஸ், இப்ராஹீம், நூஹ் போன்ற நபிமார்களையும், திருமறையில் பெயர் கூறப்படாத, உலகத்தின் பல்வேறு பகுதிகளில் தோன்றியுள்ள எல்லாத் தீர்க்கதரிசிகளையும் ஏற்றுப் போற்ற வேண்டும் என்னும் இஸ்லாமிய நெறி, மதங்களின் ஒற்றுமைக்கும் சமயங்களில் சமரசத்திற்கும் வழி வகுப்பதாக அமைந்துள்ளது. ஈஸா, மூஸா என்னும் பெயர்களைக் கேட்கும் கிறிஸ்தவரோ யூதரோ பேசாமலிருந்தாலும், அதைக் கேட்கும், முஸ்லிம், "அலைஹிஸ்ஸலாம்" — அவர்கள் மீது சாந்தியுண்டாகுக — என அவர்களை வாழ்த்துகின்றார்.

இறைவன் மீதும், அமரர்கள் மீதும், வேதங்களின் மீதும் தீர்க்கதரிசிகள் மீதும், இறுதி நாளின் மீதும், நன்மை தீமைகள் அனைத்தும் இறைவனிடமிருந்தே தோன்றுகின்றன என்பதன் மீதும், இறந்த பின் உயிர்ப்பித்து எழுப்பப்படுவதன் மீதும், நான் நம்பிக்கை கொண்டேன் என்பது முஸ்லிம்கள் மேற்கொள்ள வேண்டிய ஈமான் எனப்படும் நம்பிக்கையாகும்.

இறைவன் மறைகளை மட்டும் அனுப்பாமல் அவற்றை வாழ்விலே வாழ்ந்து காட்டுகின்ற தீர்க்கதரிசிகளையும் அனுப்பியுள்ளான். இறைவனின் பணியாளர்களாகிய மலக்குகள் எனப்படும் வானவர்கள், இறைவனுக்கு மாறு செய்யாமல் அவன் கட்டளைகளை நிறைவேற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வருகின்றார்கள். மனித வாழ்வு இவ்வுலகுடனே முடிவடைவதில்லை இவ்வுலகைவிட்டுப் பிரிந்தவுடன் மனிதனின் ஆத்மா இன்னொரு உலகிற்குள் நுழைகிறது. அவ்வமயம், நாம் செய்த நன்மை தீமைகள் தவிர வேறு யாதொன்றும் நம்முடன் வராது. உலகிலுள்ள அனைத்தும் ஒரு நாள் அழிந்தே தீரும். "யவ்முல் கியாம்" எனப்படும் கடை நாளிலே அனைத்து மக்களும் ஆண்டவன் திருமுன் கொண்டு வரப்பட்டு நீதி விசாரணை செய்யப்படுவர். நன்மைத் தட்டு கனத்துவிட்டால் நல்ல சொர்க்கம் கிடைத்துவிடும். தீமை

எடை கூடிவிட்டால் எரி நரகை எய்த வேண்டும். இவை இஸ்லாமிய நெறியின் நம்பிக்கை. இந்நம்பிக்கையின் பெயரே ஈமான். இந்நம்பிக்கையில் சிறு ஐயம் ஏற்படினும் அனைத்தும் பாழ்பட்டு விடும். இஸ்லாமியத் திருமறையின் தொடக்கமே இவ்வுண்மையை வலியுறுத்திக் காட்டுகின்றது:

"அலிஃப், லாம், மீம் —இது வேத நூல்; இதில் ஐயமேஇல்லை. இறையச்சம் உடையோர்க்கு இது நேர்வழியைக் காட்டும். அவர்கள் மறைவானவற்றை நம்புவார்கள். தொழுகையைக் கடைப்பிடித்து ஒழுகுவார்கள். நாம் அவர்களுக்குக் கொடுத்துள்ளவற்றிலிருந்து கொடையளிப்பார்கள். (நபியே) அவர்கள் உமக்கு அருளப்பெற்ற இத்திருமறையையும், உமக்கு முன்னர் இருந்த தீர்க்கதரிசிகளுக்கு அருளப்பெற்றவைகளையும் நம்புவார்கள். இறுதிநாளையும் உறுதியாக நம்புவார்கள். இத்தகையோர்தான் தங்கள் இறைவனின் நேரான வழியில் இருக்கிறார்கள். இவர்களே வெற்றி பெற்றவர்கள்."

இத்தகைய நம்பிக்கை என்னும் அடிப்படையின் மீது எழுப்பப்பட்டதே இஸ்லாத்தின் இரண்டாவது கடமையாகிய தொழுகை என்னும் தூண். —

"எம்மை வணங்குவதற்காகவே யன்றி ஜின்னையும் மனுவையும் நாம் படைக்கவில்லை" என்னும் இறையுரை மனித வாழ்வின் குறிக்கோளைத் திட்பமும் நுட்பமும் தோன்றக் கூறுகிறது. "இபாதத்" — வணங்குதல்-என்பதன் பொருள் மிக விரிவானது. இறைவனின் நிறைவைக் கருதி மனிதன் எவற்றையெல்லாம் செய்கின்றானோ அவை அனைத்துமே வணக்கமாகும். உண்ணுவதும், பருகுவதும், திருமணம் செய்து கொள்ளுவதும், வணிகம் புரிவதும், இறைவனின் அருளுரைக் கொப்பச் செய்தால், அவை வணக்கமாகி விடுகின்றன. இறையாணைக்கு இணங்க வகுத்துக் கொள்ளும் வாழ்க்கை அனைத்துமே வணக்கமாக இருப்பினும், இத்தகைய மனோநிலையை வளர்ப்பதற்கு, ஒவ்வொரு நாளும் சில குறிப்பிட்ட நேரங்களில், "ஸலாத்" எனப்படும் தொழுகையை நிறைவேற்றுவதற்கு இஸ்லாம் கட்டளையிட்டுள்ளது. வயிற்றுப் பசியை அடக்குவதற்காக நாளொன்றுக்குப் பல முறை சிற்றுண்டிகளும் பேருண்டிகளும் அருந்துகின்ற நாம், உயிரும் உள்ளமும் உரம் பெறுவதற்காக ஆத்மாவின் பசியைத் தணிப்பதற்காக நாளொன்றுக்கு ஐவேளை நாயகனைப் புகழ்ந்தேத்தித் துளாகும் வாழ்வுக்குத் துணிவூட்டுதல் பொருத்தந்தானே! அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்களை நோக்கி இறைவன் இயம்புகின்றான்.

"இத்திருமறையினின்று, உம்பால் அருளப்பட்டிருப்பதையோதி தொழுகையை நிலைநிறுத்தக்கடவீர். ஏனெனில், கண்டிப்பாகவே தொழுகையானது, மனிதனை மானக்கேடானவற்றிலிருந்தும், தீமையினின்றும் விலக்கி வைக்கின்றது. மேலும் நிச்சயமாகவே, அல்லாஹ்வை நினைவு கூர்வது, மிகப்பெருங் காரியமாகும். நீங்கள் செய்பவைகளை அவன் நன்கறிந்தவனாக இருக்கிறான்" தொழுகையினால் விளையும் வியத்தகு பயன்களை இத்திருமறைத் தொடர் தெளிவாகவும் சுருக்கமாகவும் கூறிவிடுகின்றது.

இல்லத்திற்கு முன்னால் இனிதே ஓடுகின்ற ஒரு ஆற்று நீரிலே நாளொன்றுக்கு ஐவேளை நீராடினால் எவ்வளவு தூய்மையைப் பெறுவோமோ அவ்வளவு தூய்மையை உடலுக்கும், உள்ளத்திற்கும் உயிருக்கும் தொழுகையானது வழங்குகின்றது. அடியான் மனத்தில் புதையுண்டு கிடக்கும் ஆர்வத்தையெல்லாம், இடையாளர் யாருமின்றி, இறைவன் முன்னிலையிலே இதயந் திறந்து வெளியிடுகின்றபோது, இறைவன் பேரருளைப் பொழிகின்றான்; நெக்கு நெக்கு நினைபவர் சிந்தையுள் புக்கு நிற்கும் பேரருளாளன், மாசுகளையகற்றி மன அமைதியை வழங்குகிறான். உட்பொருளறிந்து உள்ளச்சத்துடன் தொழுகையை முறைப்படி நிறைவேற்றி வருபவன், உலகத்தில் உயரிய வெற்றிகளைக் கண்டுகளிக்கிறான். சாலையில் நடந்து செல்வோன் எதிரே வருகின்ற ஊர்திகளையும், மனிதர்களையும் எச்சரிக்கையாகக் கடந்து செல்வது போன்று, தொழுகையின்போது வந்து குவிகின்ற ஏனைய எண்ணங்களைத் தவிர்த்து மனத்தை ஒருமுகப்படுத்த வேண்டும். சட்டிபானைகளை அடுக்கி வைத்திருக்கின்ற சமையலறைக்குள்ளே திருடன் நுழைவதில்லை; பொன்னும் மணியும் சேர்த்துவைத்திருக்கும் பேழையிருக்குமிடத்திலேயே அவன் சிந்தனை பதிகின்றது. அதைப் போன்றே தொழுவோர் நெஞ்சத்தில் சாத்தான் நுழைந்து குழப்பஞ்செய்வான். அதைத் தடுப்பதிலே மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தொழுகையை, மறுமை இன்பங்களை அனுபவிப்பதற்குரிய ஒரு வழி என்றும், நரக நெருப்பிலிருந்து பாதுகாக்கின்ற ஒரு கவசமென்றும் கருதுவதுடன், வாழ்வின் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியடைவதற்குரிய ஒரு பயிற்சி என்றும் கொள்வது சிறப்புடையதாகும்.

மனிதன் மதியிழக்காமல் வாழ்கின்ற காலமெல்லாம் தொழுகையை நிறைவேற்ற வேண்டுமென்றும், முறைப்படித் தொழுகையை நிறைவேற்ற இயலாதவர்கள், அமர்ந்தோ படுத்தோ இயலுமான முறையில் தொழ வேண்டுமென்றும், கடலில் கலமுடைந்து ஒரு புணையில் தொத்திக்கொண்டிருக்கின்ற நேரத்திலேகூட தொழுவது கடமையாம் என்றும் கூறுவதிலிருந்து

தொழுகையின் சிறப்பு மிகத் தெளிவாகத் தெரிகிறது. இரவு துயில்வதற்கு முன்னர்; வைகறையில் கதிரவன் தோன்றுவதற்கு முன்னர்; நண்பகலில்; மாலையில்; கதிரவன் மறைந்தவுடன் – ஆகிய ஐந்து நேரங்களிலும் தொழும் தொழுகைகளுக்கும் முறையே, இஷா, ஸுப்ஹ், லுஹர், அஸர், மக்ரிப் எனப்பெயரமையும். இப்பெயரை ஆங்கிலத்தில் எழுதும்போது தோன்றும் முதலெழுத்துக்கள், இஷா – ஸுப்ஹ் – லுஹர் – அஸர் – மக்ரிப் ஆகியவற்றை இணைத்து, (Isha-Subah-Luhar-Asar-Maghrib-ISLAM) இஸ்லாம் என்பதாகக் கொண்டு, இஸ்லாத்தின் இயக்கமே இத்தொழுகையில் அமைந்துள்ளதென ஆங்கில அறிஞரொருவர் அழகிய நயங்கண்டார். ஐந்து நேரங்களில் தொழுவது கடமையாக்கப்பட்டிருப்பினும், ஒவ்வொருவரும் விருப்பம்போல் தொழக்கூடிய தொழுகைகள் பல அமைந்திருக்கின்றன. அவற்றுள், இரவு நள்ளிரவுக்குப்பின் தூக்கத்தை விட்டெழுந்து நிறைவேற்றக்கூடிய தஹஜ்ஜுத் தொழுகை மிகச் சிறப்புடையது. அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்களும், மெய்ஞ்ஞான மேதைகளும், அறிஞர் பெருமக்களும் இத்தொழுகையில் மிகுந்த கருத்துச் செலுத்தி வந்துள்ளனர்.

“அல்லாஹு அக்பர்” — இறைவனே மிகப்பெரியவன் — எனத் தொடங்கி, “ஹய்யு அலஸ்ஸலாத்” — தொழுகைக்காக வாரீர், — “ஹய்யு அலல் ஃபலாஹ்” — வாகைசூட வாரீர், — என்பன போன்ற பொருள் பொதிந்த தொடர்களால், பள்ளிவாயில்களிலிருந்து தொழுகை அழைப்பு வெளிவருகின்றது. மணியோசைகளாலோ மேளதாளங்களாலோ மக்களை ஒன்றுகட்டுவதைவிட, உணர்ச்சியின் உறைவிடமான உள்ளத்திலிருந்து, வாய்மையின் வாயிலாகிய நாவின் வழியாக அவ்வழைப்பு வெளிவரவேண்டுமென்பதே நோக்கமாகும். அழைப்பொலி கேட்கும் அன்பர்கள், அணி அணியாக ஆர்வமுடன் பள்ளிவாயிலுக்குச் செல்கின்றனர். தூய்மையான இடத்திலெல்லாம் இறைவனைத் தொழுவதற்குரிய அனுமதி இருந்தபோதிலும், இஸ்லாமிய சமுதாயத்தின் கல்விக்கூடமாகவும், ஆத்மீகப் பீடமாகவும், நூல் நிலையமாகவும், சொற்பொழிவு மன்றமாகவும், பயிற்சிப் பாசறையாகவும், ஆதரவற்றோருக்குப் புகலிடமாகவும், பல்நோக்குப் பண்பாட்டு நிலையமாகவும் இலங்குகின்ற பள்ளிவாயில்களுக்குச் சென்று, பல்தரப்பட்ட, பல் வகைப்பட்ட தோழர்களுடன் தோளொடு தோள் தொட்டு நின்று கூட்டுத் தொழுகையை நிறைவேற்ற வேண்டுமென்பதே இஸ்லாமியக் கோட்பாடாகும். கூட்டுத் தொழுகையில் கூட்டுறவும்,

ஒருமைப்பாடும், சமத்துவமும், சகோதரத்துவமும் அமைந்திருப்ப தோடு மட்டுமன்றி, அதில் கலந்துகொள்கின்ற நல்லோர் பொருட் டால், எல்லோருக்கும் நன்மை கிடைக்கின்றதென்பதும் உணரத் தக்கதாகும். பள்ளிவாயிலுக்குச் செல்வோர், உடல், உடை, தூய்மைகளுடன், வாய் கொப்புளித்து முகம், கை, கால் கழுவி, 'உளு' என்னும் கடமையை நிறைவேற்றி, தொழுகைக்காக அணி வகுக்கின்றனர். ஒரே வரிசையில் நின்று, ஒன்ருகக் குனிந்து ஒன்ருக மண்டியிட்டு, ஒன்ருக அமர்ந்து, எண்ணுகின்ற எண்ண மும், மொழிகின்ற சொற்களும், செய்கின்ற செயல்களும், மனே வாக்கு காயங்களைத் தூய்மைப்படுத்தி உண்மையான திரிகரண சுத்தியை வழங்குகின்றன. தொழுகையின்போது மொழிகின்ற ஒவ்வொரு தொடரும், மனத்தூய்மைக்கும், இறையருளுக்கும் தூண்டுகோலாக அமைகின்றன. இறைவனுக்காக இத்தொழு கையை நிறைவேற்றுகின்றேன் என மனத்திலே உறுதியாக நினைத்து ஆண்டவனுக்காக அனைத்தையும் உதறித்தள்ளிவிட்டு அவனிடத்துச் சரணடைவதுபோன்று, இரு கைகளையும் இரு காதளவில் உயர்த்தி 'அல்லாஹு அக்பர்'—'இறைவனே மிகப் பெரியவன்' என மொழிந்து கைகளைக் கட்டுகின்றனர். "உலகெலாம் படைத்தே உயர்வுறக் காக்கும்" பேரிறையின் முன்னிலையில், அடக்கமாகக் கைகட்டி நிற்கும் காட்சி நெஞ்சை நெகிழச் செய்வதாகும்.

வல்லோனுகிய அல்லாஹ்வை வணங்கும் தொழுகையுடன் இணைத்துக் கூறப்படும் கடமையாக அமைவது, 'ஜகாத்' எனப் படும் கடமைக் கொடையாகும். 'ஜகாத்' என்னும் சொல்லுக்குத் தூய்மை என்பது பொருளாகும்.

"தொழுகையை நிலை நிறுத்தி ஜகாத்தும் கொடுத்து வாருங்கள்" என்பதாக இறைமறை நூற்றுக்கணக்கான இடங் களிலே நுவல்கின்றது. இறைவன் நமக்கு அளித்துள்ள செல்வம், ஒரு குறிப்பிட்ட அளவைவிட அதிகமாக இருந்தால், அப்பொருளி லிருந்து பொதுவாக நூற்றுக்கு இரண்டரை வீதம் கணக்கிட்டு, அத்தொகையை, ஏழை, எளியவர், கடன்பட்டோர், பயணிகள் போன்ற எண் சாராருக்கு வழங்கவேண்டுமென்பது விதியாகும். இக்கடமைக் கொடையை வழங்காதவரின் தொழுகை நிறை வடையாது எனக் கூறுவதிலிருந்து, இதன் சிறப்பு புலப்படும். அண்ணல் பெருமானுர் (ஸல்) அவர்களின் மறைவுக்குப் பின்னர், ஜகாத் கொடுக்க மறுத்தவர்களுக்கெதிராக, ஆட்சிப்பொறுப்பி லிருந்த ஹலரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் போர் தொடுக்க முனைந்ததை வரலாறு எடுத்துக்காட்டுகின்றது. இரண்டாவது

கலீபா ஹலரத் உமறு (ரலி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் எமன் நாட்டின் அதிபதியாகவிருந்த ஹலரத் மஆதிப்னு ஜபல் (ரலி) அவர்கள் தன் ஆட்சியின் கீழிருந்த மக்களிடமிருந்து, ஜகாத் தொகையை வசூலித்தார்கள். முதலாண்டில் வசூலித்த தொகையில் மூன்றிலொரு பகுதியையும், இரண்டாவதாண்டில் நேர் பாதியையும், மூன்ருவதாண்டில் வசூலித்த முழுத்தொகையையும் மத்திய அரசுக்கு அனுப்பிவைத்தார்கள். அதற்குரிய காரணம் வினவப்பட்டபோது, முதலிரு ஆண்டுகளிலும், தம் ஆட்சிக்குட்பட்டோருக்கு — தேவையானேருக்குக் கொடுத்தது போக எஞ்சிய தொகையை மத்திய அரசுக்கு அனுப்பியதாகவும், மூன்ருமாண்டில் பொருளாதார நெருக்கடிக்குட்பட்டு ஜகாத் பொருளைத் தேவைப்பட்டோர் யாருமே எமன் நாட்டில் இல்லாமையால் அத்தொகை முழுதுமே மத்திய அரசுக்கு அனுப்பட்டதாகவும் விளக்கம் தருகின்ருர். கடமைக் கொடையினுல், சமுதாயத்தில் ஏற்படுகின்ற நிறைவை, இந்நிகழ்ச்சியின் வாயிலாக உணர்கின்ரேம். ஜகாத் என்பது மேட்டிலிருந்து பள்ளம்நோக்கிப் பாயும் அன்பு வெள்ளமாக—இரு தரத்தினரை இணைத்துவைக்கும் பாலமாக—இலங்குகின்றது. தன் முயற்சியால் ஈட்டிய பொருளை, இவ்வாறு பிறருக்கு ஈந்துவிடுவதால் செல்வம் குறைந்துவிடுமோ என அஞ்சுவோருக்கு அருள்மறை ஓர் அறிவுரை பகர்கின்றது:

"இறைநெறியில் தங்கள் பொருளைச் செலவு செய்வோரின் எடுத்துக்காட்டு, ஒரு வித்தின் உவமையை ஒத்திருக்கிறது. அவ் வித்து ஏழு கதிர்களைத் தருகின்றது. ஒவ்வொரு கதிரிலும் நூறு வித்துக்களாக எழுநூறு வித்துக்கள் அந்த ஒரு வித்திலிருந்து விளைந்தன. இறைவன் தான் விரும்புவோருக்கு இரட்டிப்பாக்குகிருன். ஏனெனில், இறைவன் மிக விசாலமானவனும் அறிபவனுமாக இருக்கிருன்" (2:261) —இவ்வாறு அருள்மறை கூறும் அறிவுரையின் சிறப்பினையுணர்ந்து, ஜகாத் சரியாகச் செலுத்தப்பட்டு, முறையாக விநியோகிக்கப்பட்டு வருமாயின் சமுதாயத்தில் காணப்படும் பசியும், பட்டினியும், வாட்டமும், வறுமையும் இருக்குமிடந் தெரியாமல் மறைந்தொழியுமென்பது உறுதி.

இஸ்லாமிய நெறியின் அடுத்த கடமையாக அமைவது நோன்பு. வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு வளமார் வழியைக்காட்டுவதற்காகத் தோன்றிய இறுதித் திருமறையாகிய திருகுர்ஆன் அருளப்பட்ட தங்கத்திங்களாகிய ரமலான் மாதம் வைகறையில் இருந்து வான்மயங்கும் அந்திவரையிலே வயது வந்த முஸ்லிம்கள் அனைவர்களும் உண்ணுமலும் பருகாமலும் புலன்கள் வழி செல்லாமலும் நோன்பு நோற்கவேண்டும் என்பது

இறை ஆணையாகும். ''நன்னம்பிக்கையாளர்களே! உங்களுக்கு முன் இருந்தோர்மீது நோன்பு கடமையாக்கப்பட்டதுபோன்று உங்கள்மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டுள்ளது—நீங்கள் தூய்மை அடையும் பொருட்டு'' — இம்மறையுரை ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது. நோன்பின் நோக்கமும் பயனும் இத் தொடரில் நுட்பமும் திட்பமும் தோன்ற விளக்கப்பட்டுள்ளது. எத்தகைய நோக்கமும் இன்றிப் பெருமையினாலோ, ஆகாமையினாலோ, இயலாமையினாலோ, உணவு அருந்தாமல் இருப்பது பட்டினி. உண்ண உணவும், பருகப் பானமும், பெருகக்கிடைத்த போதும் ஒரு குறிக்கோளை முன்வைத்து உண்ணாமலும், பருகாமலும் இருப்பது நோன்பு. 'நான் இறைவனுக்காக நோற்கின்றேன்' என்னும் தெளிவான எண்ணத்தை அடிப்படையாகக்கொண்டு நோன்பு நோற்பவன் அற்புதமான ஆத்மீக சாதனைகளைப்பெற்று மகிழ்கின்றான். 'ஜகாத்', ஒருவன் ஈட்டிய பொருளை மாசுகள் நீக்கித் தூய்மைப்படுத்துவதுபோல, நோன்பு, நோற்பவனின் உடலையும் உள்ளத்தையும், உயிரையும் ஒட்டி இருக்கின்ற மாசுகளைத் துடைத்து அனைத்தையும் தூய்மைப்படுத்துகிறது. ஆகவேதான் அறிஞர்கள் நோன்பினை உடலுக்குரிய 'ஜகாத்' என்று மதிப்பிடுகின்றனர். ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி மனிதனைப் பண்பட்டவனாக மாற்றுவதே நோன்பின் நோக்கமும் பயனுமாகும்.

ஒரு மாத காலம் தொடர்ச்சியாக பசித்திருந்து, நோன்பு நோற்கின்ற பயிற்சி, பலநாள் அறிவுரைகளாலும் சொற்பொழிவுகளினாலும் ஆற்றமுடியாத அரியபயன்களை மனிதனுக்கு அளிக்கின்றது. வாழ்வில் துன்பம் நேர்கையில் துவண்டுவிடாமல் 'எதையும் தாங்க இதயம் உண்டு' என நினைக்கும் மனப்பக்குவத்தை வழங்குகின்றது; தீயனவற்றைத் தீயென வெறுக்கும் திடசித்தத்தைக்கொடுக்கின்றது; உணவுப் பழக்கங்களுக்கும் வழக்கங்களுக்கும் அடிமையாகாமல் அவற்றை விருப்பப்படி மாற்றியமைக்கும் ஆற்றலை வளர்க்கின்றது. ஓயாமல் இயங்கிக் கொண்டிருக்கும் உடலின் உறுப்புகளுக்கு ஒரு மாதம் ஓய்வளித்து உறுதியை ஊட்டுகின்றது; ஈகை உணர்வை வளர்க்கின்றது. இவ்வாறாக, உள்ளும் புறமும் சுடச்சுடரும் பொன்போல் அமைய, மனிதன் புனிதன் ஆகின்றான். 'இரவெல்லாம் விழித்திருந்து இறையவனை நினைந்துருகிப் பகலெல்லாம் புசியாது பசிப்பிணியின் பாங்கறிந்து கரந்துறையும் இச்சைகளைக் காதவழி யடித்தோட்டிக் கடந்தொளிரும் பரம்பொருளின் கவின்பண்பை உளத்திருத்தித் தருமத்தின் வழிநின்றும் தக்கவர்க்குத் துணைநின்றும் தகுதியுடன் ஒரு மாதத் தவநெறியாம் நோன்பினிலே அருமந்த அடியார்கள்

அடைந்ததொரு வெற்றியினை அவனிக்கு அறிவிக்க வருகின்ற திருநாளே, ஈதுல் பித்ர் எனப்படும் நோன்புப் பெருநாள்.

இஸ்லாத்தின் ஐந்தாவது கடமையாகிய ஹஜ் என்பதற்கு நாடுதல் என்பது பொருள். இக்கடமையை வலியுறுத்தித் திருமறை கூறுவதாவது: "மனிதர்களுக்கு அமைக்கப்பெற்ற ஆலயங்களில் முதன்மையானது, நிச்சயமாக பக்காவில் (அதாவது மக்காவில்) இருப்பது தான். அது மிகவும் பேறு பெற்றதாகவும், உலகத்தாருக்கு நேரான வழியை அறிவிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. அதில் தெளிவான ஆதாரங்களும் இருக்கின்றன. இப்ராகிம் நின்ற இடமும் இருக்கிறது. எவன் அதில் நுழைந்தானோ அவன் அச்சமற்றவனாகி விடுகின்றான். எனவே அங்குப் பயணம் செய்ய ஆற்றல் உடையோர் மீது அல்லாஹ்வுக்காக அவ்வாலயத்தை 'ஹஜ்' செய்வது கடமை ஆகும். எவரேனும் இதை நிராகரித்தால், நிச்சயமாக 'அல்லாஹ்' உலகத்தாரின் தேவைகள் அற்றவனாக இருக்கிறான்."

உலகின் மிகப்பழமையான இறை இல்லமாகிய 'கஃபத்துல்லா' இலங்கிக் கொண்டிருப்பதும், நகரங்களுக்குத் தாய் எனும் நற்சிறப்புப் பெற்றதும், அண்ணல் நபிகள் நாயகம் அவர்களின் பிறப்பிடமாக இலங்குவதும் மக்கமாநகர் ஆகும். அப்புனித நகர் வரைப் பயணம் செய்து திரும்புவதற்குரிய பொருள் வசதியும் உடல்நலமும் இருந்து, வழியும் அமைதியாக இருந்தால் வாழ்வில் ஒருமுறையேனும் அக்கடமையை நிறைவேற்ற வேண்டுமென்பது கட்டளையாகும். நிறத்தாலும் இனத்தாலும் நாட்டாலும் மொழியாலும் பல்வேறு வகைப்பட்ட மக்கள், ஆண்டுக்கொரு முறை 'துல்ஹஜ்ஜு'—ஹஜ் மாதம் எட்டாம் நாள் மாநிலத்தின் மார்பிடமாகிய மக்கமாநகரில் வந்து குழுமி ஒரே வகையான வெள்ளாடை அணிந்து ஒரே மொழியில் ஒரே சிந்தனையை வெளியிட்டு ஒருமை உணர்வைப் பெறுகின்ற காட்சி உலகிலேயே இணையற்ற ஒன்றாகும். அரபு நாட்டில் ஆண்டுதோறும் நிகழ்கின்ற சமத்துவ சகோதரத்துவ மன்றத்தின் அனைத்துலக அருள்நெறி அமைதி மாநாடென இதனைக் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். இணையில்லாச் சிறப்புக்கள் வாய்ந்த இறையில்லத்தைக் கண்ணால் கண்டு, புனிதப் பயணத்தின் பல்வேறு கடமைகளை நிறைவேற்றுவோர் உள்ளத்தில் ஓர் ஒப்பற்ற மின்னொளி பாய அவர்களின் நம்பிக்கை — ஈமான் — புத்துயிரும், புத்துணர்வும், புதுமணமும் பெற்று விடுகின்றது. அருமைப் புதல்வர் ஹலரத் இஸ்மாயில் (அலை) அவர்களை இறைவனுக்காக அர்ப்பணிக்க முன்வந்த ஹலரத் 'இப்ராஹீம்' (அலை) அவர்களின் தியாகத்தின்

சின்னமாக அமைந்த இந்நாளை அனைத்துலகமும் 'ஈதுல்அல்ஹா' எனப்படும் தியாகத் திருநாளாகக் கொண்டாடுகிறது.

இவ்வாறு ஐம்பெரும் கடமைகளால் ஆக்கப்பட்ட இஸ்லாமியக் கட்டிடத்தின் இனிய வாழ்வுக்கு வழிகாட்டப் பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. நிறத்தாலோ, மொழியாலோ, பணத்தாலோ, பகட்டாலோ, குலத்தாலோ, குடும்பத்தாலோ, பிற வகை ஆற்றல்களாலோ எத்தகைய உயர்வு தாழ்வும் கற்பித்தல் கூடாது என்பது இறை ஆணை. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் செந்தமிழ் நாட்டுச் சொல்லோவியத்திற்குச் சிந்தை குளிரும் விளக்கமாக அமைந்தது இஸ்லாமிய நெறி. "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என இலக்கணம் வகுத்த பொய்யில் புலவன் பொருளுரைக்கு மெய்யான இலக்கணமாய் விளங்குவது இஸ்லாமிய நெறி. "மனிதகுலம் அனைத்துமே ஓர் ஆணிலிருந்தும் ஒரு பெண்ணிலிருந்தும் தோன்றியது; மக்கள் ஒருவருக்கொருவர் உணர்ந்து கொள்ளுவதற்காகவே பல கோத்திரங்களாகவும், கிளைகளாகவும், பிரிக்கப்பட்டுள்ளனர்." "இன்ன அக்ரமக்கும் இந்தல்லாஹி அத்ஹாக்கும்" (இறையுணர்வுடையோரே உங்களில் மிக்குயர்ந்தோர்) என்பதாகத் திருமறை தீர்ப்பளிக்கின்றது. அண்ணல் பெருமானார் அவர்கள் இதற்கு விளக்கம் தருகின்றார்கள். "சீப்பின் பற்களைப் போல மக்கள் அனைவரும் ஒன்று. அரபியர் அல்லாதவரினும் அரபிகள் உயர்ந்தவர்களல்லர். அரபிகளினும் அரபியரல்லாதவர் உயர்ந்தவரல்லர்; இறையுணர்வொன்றைத் தவிர. அனைவரும் ஆதத்தின் மக்களே. ஆதமோ மண்ணால் படைக்கப்பட்டவர்." இவ்வாறு விளக்கம் தந்த அண்ணலார் அவர்களின் சொல்லும் செயலும் இணைந்திருக்கக் காண்கின்றோம். எடுத்துக்காட்டாக இருண்ட மேனியும், சுருண்ட முடியும், தடித்த உதடுகளும் கொண்டிருந்த அபிஸீனிய நாட்டு அடிமை பிலால் அவர்களை அருள்நெறியிலே அணைத்தெடுத்துத் தொழுகைக் கழைப்பு விடுக்கும் முதல் 'முஅத்தின்' ஆகும் சிறப்பளித்தார்கள். குறைஷிகுலத் தோன்றலாகிய ஹலரத் உமரே பாருக் அவர்கள், செய்யதினா பிலால் (எங்கள் தலைவர் பிலால்) எனப் போற்றும் உயர்நிலை உருவாயிற்று. பாரசீகராயிருந்த சல்மானும், அடிமையாக இருந்த 'செய்யதும்' பார்போற்றும் நிலை எய்தினர்.

இவ்வாறு மனிதகுல ஒருமையை நிலை நாட்டிய இஸ்லாமிய நெறி மனிதனின் அடிப்படைத் தேவைகளாகிய உண்டி, உடை, உறையுள் ஆகியவற்றைப் பெறுவதற்கு வழிசெய்கின்ற பொருளியலுயர்வுக்கும் பொருத்தமான வழியைக் காட்டுகின்றது. "இறைவா! இம்மையிலும் மறுமையிலும் செம்மையாக வாழ்

வதற்கு அருள்வாயாக'' என்பது தொழுகையின் போது இறைவன் பால் விடுக்கும் முறையீடாகும். அருளியலும் பொருளியலும் இணைந்ததே இஸ்லாமிய நெறியாகும். இவ்வுலக வாழ்வு நிலையற்றதென இஸ்லாம் கூறுகிறதேயொழிய துறவறத்தை மேற்கொள்வதற்கோ, குடும்பப் பொறுப்பை மறப்பதற்கோ, வாழ்க்கையை வெறுப்பதற்கோ கூறவில்லை. பகல் முழுதும் திருக்குர்ஆனை ஒரு முறை ஓதி முடிப்பதையும், இரவு முழுதும் தொழுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்த நாயகத் தோழர் அப்துல்லா இப்னு அம்ரிப்னுஆஸ் அவர்களை நோக்கித் திருநபி அவர்கள் கூறினர்கள்: ''நும் அருந்தவத்தின் வழியாக உடல் மெலியலாம், பார்வை பழுதாகலாம்; உம் உடம்பிற்கும், உம் மனைவி மக்களுக்கும் உம்மிடம் தொடர்பு கொள்ளும் ஏனையோர்க்கும் நீராற்ற வேண்டிய கடமைகளிருக்கின்றன'' என்பதாக ஏந்தல்நபி அவர்கள் எச்சரித்தார்கள். ஒருபோது அண்ணலார் அவர்கள் தம் பணியாளர் ஹலரத் அனஸ் அவர்களின் அன்னையார் தம் மகனுக்காக பிரார்த்திக்கும்படி சொல்லவே, அண்ணலார் அவர்கள், ''இறைவா அவருக்குச் செல்வமும், குழந்தைகளும், பெருகச் செய்து நற்பேறுகளை நயந்தருள்வாயாக'' என இறைவனிடத்து இறைஞ்சினர்கள்.

மனிதவாழ்வுக்குத் தேவையான அனைத்தையும் இறைவன் இவ்வுலகத்தே ஆக்கி அமைத்தபோதிலும் தேவைகளைத் தேடி அடைவதற்குரிய ஆற்றல் அனைவரிடத்தும் ஒரேவிதமாக அமையவில்லை. பொருள் தேடும் ஆற்றல் சிலரிடத்து மிகுதியாகவும், பலரிடத்தே குறைவாகவும், ஒருசிலரிடத்தே அறவே இல்லாமலிருக்கவும் காண்கின்றோம். மாற்றமுடியாத இவ்வியல்பு மாநிலத்தில் இருப்பது வரையில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இருந்தே தீரும். ஆகவே அன்பு, அருள், கனிவு, கருணை ஆகிய நல்லுணர்வுகளின் அடிப்படையில் ஆதரவற்றவர்கள் காப்பாற்றப்பட வேண்டும். சமுதாய ஏற்றத்தாழ்வுகளைச் சமன்செய்து சீர்படுத்துவதற்காக இஸ்லாமிய நெறி பல வழிகளை வகுத்துள்ளது. செல்வம் ஓரிடத்திலே குவிந்து பல சிக்கல்களைத் தோற்றுவிப்பதைத் தடுக்கவும், சமுதாய நலன் கருதி அச்செல்வம் சுற்றிச் சுழன்றுகொண்டிருப்பதற்கும் ஒருவனது உடைமைகளைப் பங்கிடும் மரபுரிமைச் சட்டங்கள் விசாலமாக்கப்பட்டுள்ளன. வட்டிமுறை விட்டொழிக்கப்பட்டுள்ளது. கடமைக் கொடையாகிய 'ஜகாத்' விருப்பக் கொடையாகிய 'சதக்கா' ஆகியவற்றின் வழி சமுதாய உடம்பின் உயிராற்றலுக்குக் காரணமான செல்வமாகிய உதிரம் செழிப்பாகப் பரவுதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. அதே நேரத்தில் முயற்சியின் உயர்ச்சியும், தொழிலின் உயர்வும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

"மேலேக்கை கீழேக்கையைவிட உயர்ந்ததாகும்" என்பது நபிமொழி. கையேந்தி வந்த தோழர் ஒருவருக்கு அவர் பொருளை விற்றே கோடரி ஒன்று வாங்கிக்கொடுத்து உழைத்துண்பதற்கு வழிகாட்டினார்கள் வள்ளல் நாயகம் அவர்கள். கடிய உழைப்பினால் காழ்ப்பேறியிருந்த தோழர் ஒருவரின் கையைத் தடவிப் பாராட்டினார்கள். வியர்வையது உலருமுன்னர் வேலை செய்வோர் கூலியினை நயமாகக் கொடுப்பதற்கு நவின்றுள்ளார்கள். மக்காவைத் துறந்து மதினாவுக்குச் சென்ற தோழர்களுக்குத் தங்கள் 'உடைமைகளில் உரிமை வழங்குவதற்கு முன்வந்த அன்சாரிகளின் ஆதரவை அம் முஹாஜிரீன்கள் மறுத்து, கடைத்தெருவுக்கு வழிகேட்டுச் சென்று வணிகத்தில் ஈடுபட்டு வளம் பெருக்கியதாக வரலாறு கூறுகிறது. தாவூது நபியவர்கள் கவசம் செய்து வாழ்ந்ததையும், சுலைமான் நபி அவர்கள் உழவுக்கும் தொழிலுக்கும் ஊக்கமூட்டி வாழ்ந்ததையும், மூஸா நபி அவர்கள் கூலிவேலை செய்ததையும், நூஹு நபி அவர்கள் தச்சுவேலை செய்ததையும் இஸ்லாமிய வரலாறு இனிது எடுத்து ஓதுகிறது.

ஈஸா நபியவர்களைக் கருவுற்றிருந்த அன்னை மரியம் அவர்கள் மலைமுகட்டிலிருந்து பசியினாலும், தாகத்தினாலும் வருந்தி இறைவனிடம் முறையிட்டபோது, முயற்சியினால் கனிமரங்களை உலுக்கிப் பழங்களை அருந்துவதற்கும் நடந்துசென்று நன்னீர் கண்டு தாகத்தைப் போக்குவதற்கும் இறைவன் பணிக்கின்றான். முயற்சிக்கும் தொழில்களுக்கும் இஸ்லாம் அளிக்கின்ற சிறப்பான இடத்தை இவற்றால் அறிகின்றோம். அனைத்துலகிற்கும் வழிகாட்டுகின்ற முறையில் இஸ்லாமியச் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

உலகின் பல்வேறு பகுதிகளில் வாழ்வோர் — முரண்பட்ட முறைகளைக் கொண்ட மக்கள் — இஸ்லாமியக் கயிற்றைப் பிடித்து இணைந்து வாழ்கின்ற நிலையைக் காண்கின்றோம். முஸ்லிம்களின் உள்ளமும் உரையும், உடலும், உறையுளும் பிறவும் எவ்வாறு தூய்மையுடன் இருக்கவேண்டும், நண்பர்களிடத்திலும், பகைவர்களிடத்திலும் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும், அண்டை அயலாரிடத்து எவ்வாறு பழகுதல் வேண்டும், மனைவி மக்களிடத்தும், பெற்றோர், மற்றோரிடத்தும் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என்பவற்றையெல்லாம் மிக நுட்பமாக ஆய்ந்து தெளிவான வழியைக் காட்டுகின்றது இஸ்லாமிய நெறி.

புனிதமான வித்திலிருந்து புனிதமான முளை வெளிப்படுவதைப் போன்று, தூய்மையான உணவிலிருந்தே தூய்மையான

செயல்கள் பிறக்கும் என்பது இஸ்லாமிய நெறி. காய்கறிகள் மட்டுமே புனிதமான உணவு, புலால் உணவு புனிதமற்றது எனச் சிலர் நினைக்கலாம். பாலைவனங்களுக்கும், பனி நாடுகளுக்கும் பொருத்தமான அனைத்துலக நெறியைப் புகலவந்த இஸ்லாம்-நடைமுறைக் கேற்ற நன்னெறியைக் காட்ட வந்த இஸ்லாம்-புலால் உணவைத் தடைசெய்ய முடியாது. ஆகவே புனிதமற்ற உணவுக்குத் திருமறை அளிக்கின்ற விளக்கம் வேறு.

"தானுகச் செத்தது, இரத்தம், பன்றியிறைச்சி, அல்லாஹ் அல்லாதவைகளின் பெயர் கூறப்பட்டவை முதலியவைகளும், அடிபட்டுச் செத்ததும், விழுந்து செத்ததும், கழுத்து நெரிந்து செத்ததும், கொம்பால் குத்தப்பட்டுச் செத்ததும், கொடிய வன விலங்குகள் கடித்துச் செத்ததும் தூய்மையற்ற உணவுகளாகத் தடுக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் பற்களால் கிழித்துண்ணும் விலங்குகளும், கால்களால் இடுக்கி உண்ணும் பறவைகளும், நீர் நிலைகளிலிருந்து கரையேறி உலவும் நீர்வாழ் உயிரினங்களும் உணவாகக் கொள்ளத்தக்கவையல்ல. இன்றைய விஞ்ஞான உலகு இவற்றிற்கு விளக்கம் தருகின்றது. தானுகச் செத்தவற்றிலும், இரத்தத்திலும் நச்சுக் கிருமிகள் இருக்கின்றனவென்றும் தூய்மையற்றஉணவருந்தித் தூய்மையற்றமுறைகளைக் கையாளும் பன்றியின் இறைச்சியை உட்கொள்வதால் "Trechnosis" எனும் நோய் தோன்றவும் ஒழுக்கம் கெடவும் காரணமாகலாமென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். உயிரினங்களை உணவுக்காக அறுப்பதிலேகூட ஒருமுறை இருக்கிறது. கூர்மையான கத்தியினுல் "பிஸ்மில்லாஹி அல்லாஹு அக்பர்" என இறைவன் பெயரைக் கூறி கழுத்தோரத்தில் அமைந்துள்ள இரத்த நாளம் துண்டிக்கப்படாமல் அறுக்கவேண்டும். இவ்வாறு அறுப்பதால் உடலிலும், தலையிலுமுள்ள இரத்தம் அனைத்தும் வெளியேறும் வரையில் இதயம் இயங்குகிறது. மயக்கம் தருகின்ற மதுபானங்களை அருந்துவது தீமைக்குத் திறவுகோலாகக் கருதப்படுகிறது. "எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" என்னும் அறிவுரை சட்டமாக்கப்பட்டுள்ளது. தடுக்கப்பட்ட மதுபானம் ஒரு துளியாக இருந்தபோதிலும் அதை அருந்துதல் விலக்கப்பட்டுள்ளது. தடை செய்யப்பட்ட உணவுகளும், பானங்களும் தங்கள் உடலுக்குள் புகுந்து விடாமல் சான்றோர்கள் மிகவும் கருத்து செலுத்தி வந்துள்ளார்கள்.

தடுக்கப்பட்ட ஹராமான உணவுகள் தீமைகளை வளர்த்து ஆத்மாவின் அழிவிற்கும் காரணமாவதால் நபிகள் நாயகமவர்கள் "தடுக்கப்பட்ட உணவினுல் வளர்க்கப்பட்ட உடம்பு சொர்க்கத்

தில் நுழையாது, நரகத்திற்கே தகுதியுள்ளது'' என நவின்றுள்ளார்கள். வீண்செலவும் ஆடம்பரமும் இல்லாமுறையில் உண்பதற்குக் கூறியுள்ளார்கள். ''தனித்துண்ண வேண்டாம்; அருகிலுள்ளோரையும் அழைத்து உண்ணுங்கள்'' எனக்கூறியுள்ளார்கள். ''மிதமிஞ்சிய உணவு அறிவைக்கெடுத்து உறுப்புக்களை உணர்விழக்கச் செய்து நரம்புகளுக்குத் தளர்ச்சியைக்கொடுத்து, கவலையை மிகுதியாக்கி இறைவனை மறக்கச்செய்யும்'' என்பதும், ''ஆராய்ந்து சிந்திப்பது பாதிவணக்கம், உணவைச் சுருக்குவது முழு வணக்கம்'' என்பதும் நபிமொழிகள்.

உணவை உட்கொள்வதற்கும் இஸ்லாமிய நெறி, சில முறைகளை வகுத்துள்ளது. உண்பதற்கு முன்பும் பின்பும் கை, வாய் கழுவுதல் வேண்டும். தரையில் அமர்ந்து யாதேனும் ஒரு துணி விரித்து அதன்மேல் உணவை வைத்து உண்பது உயர்வானது. நின்ற நிலையிலும், சாய்ந்துகொண்டும் உண்பது தவறானது. உண்ணத் தொடங்கும்போதும், உண்டு முடிந்த பின்னரும் ஓரிரு உப்புப்பரல்களை சுவைப்பது சிறப்பானது. உண்ணத்தொடங்கும் போது ''பிஸ்மில்லாஹி வஅலா பரக்கத்தில்லாஹி'' (இறைவனருளால்பெற்ற உணவை அவன் திருப்பெயரால் உண்ணுகின்றேன்) எனக் கூறவேண்டும். உணவருந்தி முடிந்தவுடன் ''அல்ஹம்து லில்லாஹில்லதி அத்அமனு வஸகானு, வஅஜஅலனு மினல் முஸ்லிமீன்'' (புகழ் அனைத்தும் அல்லாஹ்வுக்கே. அவன் நமக்கு உணவு அளித்தான், நீர் கொடுத்தான்; மேலும் நம்மை அவன் ஆணைக்குப் பணிந்து நடக்கும் முஸ்லிமாகவும் ஆக்கினான்) என இறைவனைப் போற்றவேண்டும். உணவுப் பொருட்களைக் கையால் எடுத்து விரல்களால்பற்றி நிதானமாகமென்று தின்பது நன்று. உணவை மோந்து பார்த்தலும், பழித்தலும் நன்றன்று. உண்ணும் போது உணவு கீழே விழாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். விழுந்த உணவை ஒதுக்கித் தள்ளுதல்கூடாது.

உணவருந்திய பாத்திரத்தை வழித்துண்டு கைவிரல்களைச் சூப்பிவிட்டுப் பின்னர் உண் கலத்தைக் கழுவுதல் உயர்வான முறை. உணவருந்தியபின் விரலைச் சூப்பும்போது வெளியாகும் ''Enzyme'' என்னும் நொதி உணவு விரைவாகச் செரிப்பதற்குக் காரணமாகுமென விஞ்ஞானம் இன்று விளக்கம் தருகின்றது. ''நாயின் உமிழ்நீர் உடையிலே பட்டுவிட்டால் ஏழுமுறை கழுவ வேண்டும்; ஒருமுறை மண்ணாலும் தேய்த்துக் கழுவவேண்டும்.'' நாயின் எச்சிலில் கொடுமையான நோய்க் கிருமிகள் அமைந்திருக்கின்றனவென்பதும், மண் ஒன்றே அதற்குமாற்று என்பதும் இன்றைய விஞ்ஞானத்தின் விளக்கம். உயர்தரமான ஆடைகள்

அணிவது அனுமதிக்கப்பட்ட போதிலும் ஆடம்பரமாக ஆடை அணிவது தடுக்கப்பட்டுள்ளது. பட்டும் பொன்னும் அணிவது ஆண்களுக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது; பெண்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. மறைக்கவேண்டிய பகுதிகளை மறைத்து முழங்காலுக்குமேல் செல்லாமலும் கணுக்காலுக்குக் கீழ்வராமலும் ஆடை அணிதல்வேண்டும். ஆடைகளில் அழுக்குப்படிந்து அதனுல் வணங்குமிடங்கள் தூய்மையற்றுப்போவதை இம்முறை காத்துக்கொள்கிறது. வள்ளல் நபி அவர்கள் வெண்ணிற ஆடைகளில் மிக விருப்பம் காட்டியுள்ளார்கள். இறுக்கமான உடைகளும், மிகமெல்லிய ஆடைகளும், உருவங்கள் பொறிக்கப்பட்ட ஆடைகளும் விரும்பத்தக்கவையல்ல. தலையணியும், காலணியும் மிகத்தேவையானவை. தொப்பி அணிவது தலையைப் பாதுகாப்பதுடன் தோற்றத்திற்கு ஒரு ஏற்றத்தையும் தருகிறது. தலைப்பாகை அறிஞர்களுக்குச் சிறந்த அணியாகும்.

வீட்டிலே நுழைவதற்கும், வீதியிலே நடப்பதற்கும்கூட ஒழுங்குமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. பிறரில்லத்திலே நுழையும்போது முகமன்கூறி அனுமதிபெற்று நுழையவேண்டும். வீதியில் நடக்கும்போது நிலத்தை இடிப்பதுபோன்றும், செருக்குடனும் கால்களை இழுத்துக்கொண்டும் நடப்பது முறையன்று. அறிஞர் லுக்மானுல் ஹகீம் தன் அன்புப் புதல்வருக்கு அளித்த அறிவுரை இவ்விடத்தில் நினைவுகூரத்தகுந்தது. "அருமை மகனே! நீ தொழுகையைக் கடைப்பிடித்தொழுகு. மனிதர்களுக்கு நன்மையை ஏவித் தீமையை விலக்கு. உனக்கு ஏற்படும் துன்பங்களைப் பொறுமையுடன் தாங்கிக் கொள். ஐயமின்றி இது அனைத்திலும் மிக்க வீர முடையதாகும். உன் முகத்தை மனிதர்களை விட்டுத் திருப்பி விடாதே. நிலத்தில் பெருமை அடித்துக் கொண்டு நடக்காதே. கண்டிப்பாகச் செருக்குடன் பெருமையடிக்கும் யாரையும் இறைவன் நேசிப்பதில்லை. உன் நடையில் நடுத்தரத்தை விரும்பு. உன் குரலையும் தாழ்த்திக் கொள். ஏனெனில் குரல்களிலெல்லாம் மிக வெறுக்கத்தக்கது கழுதையின்குரலே" இவ்வாறு அறிஞர் லுக்மான் அன்பு மகனுக்கு அளித்த அறிவுரை இளைஞர் உலகுக்கு என்றும் இன்றியமையாத கருத்துக்கருவூலமாகக் கவின் பெறும் என்பது உறுதி. உடம்பின் கழிவுப் பொருளாக வெளிப்படும் சிறுநீர் மிகவும் அசுத்தமானது. நாள்தோறும் நன்ருக நீராடிவிட்டு ஆடையிலோ, உடலிலோ சிறுநீர் படுவதற்கு இடமளிப்பது தூய்மையைக் காப்பதாகாது. ஆகவே இச்சிறுநீர் பற்றி மிகப்பெரும் எச்சரிக்கை தேவை. சிறுநீர் வெளியான பின் நீரை உறிஞ்சும் இயல்புடைய காய்ந்த மண்கட்டியினுலோ நீர் உறிஞ்சும் தாள்களினுலோ நீரை உலர்த்திப் பின்னர் தண்ணீரால் கழுவவேண்டும்.

மக்கள் நடமாடுமிடங்கள் நீர் நிலைகள், விளை நிலங்கள் போன்ற வற்றில் நீர், மலம் கழித்தல் தடுக்கப்பட்டுள்ளது. மிகச்சூடாகவோ குளிர்ந்ததாகவோ உள்ள உணவுப் பண்டங்களைப் புசித்தல் கூடாது. நறுமணம் பூசுதலும் கண்ணுக்குச் சுருமா தீட்டுவதும் விரும்பத்தக்கன. காணுமிடங்களிலெல்லாம் எச்சில் துப்பாமல் அதற்குரிய இடத்திலேயே உமிழ்தல் வேண்டும். கொட்டாவி விடுதல், மூக்குச்சிந்துதல் போன்றவற்றில் கூட பிறருக்கு அருவருப்பில்லா முறையை மேற்கொள்ள வேண்டும். உரிய காலத்தில் நகங்களைக் களைதல் வேண்டும். முஸ்லிம்கள் மேற்கொள்ளும் 'கத்னு' எனப்படும் விருத்த சேதன முறை ஆண் உறுப்பில் அழுக்குத் தேக்கத்தை நீக்குவதுடன் அவ்வுறுப்பின் வழியாகப் பரவும் பல கொடிய நோய்களையும் தடுத்து விடுகிறது. தாடி வைத்தல் முகத்தின் தோற்றத்தைச் சிறக்கச் செய்வதுடன் நோய்க்கிருமிகள் முகப்பரப்பைத் தாக்காமல் தடுக்கவும் செய்கிறது.

தூய்மையான உணவருந்தி தூய்மையான பழக்க வழக்கங்களை மேற்கொள்கின்ற மனிதன் பெறுகின்ற உடைமைகளில் மிக்க உயர்வானது, நற்குணமாகும். இம்மையின் இணையில்லா வெற்றியும் மறுமையின் பேரின்பமும் மனத்தூய்மையின் அடிப்படையில் அமைகின்ற நற்குணங்களாலேயே விளைகின்றன. "நிச்சயமாக இறைவன் நற்குண நற்செயல்களால் இஸ்லாத்தை நிறைவாக்கியுள்ளான்" என்பதும் "நற்குணங்களைக் கடைப்பிடிக்கும் நம்பிக்கையாளன் இரவெல்லாம் நின்று வணங்கிப் பகலெல்லாம் நோன்பிருக்கும் பதவியைப் பெறுவான்" என்பதும் நபிமொழியாகும். சூஃபி அப்துல்லா அன்சாரி கூறுகின்றார்: "நீரில் நடப்பது பெரிதல்ல; சருகும் அவ்வாறு செல்லும். வானில் பறப்பது பெரிதல்ல; கொசுவும் அவ்வாறு பறக்கும். மண்ணில் மனிதனாக நடப்பதே கடிதானதாகும்." ஒரு மனிதனைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு மூன்று வழிகளைக் காட்டுகின்றார்கள், ஹஸரத் உமரே பாரூக் (ரலி) அவர்கள். ஒருவனின் அண்டை வீட்டிலே வாழ்வதும் அவனுடன் பொருள் கொடுக்கல் வாங்கல் இருப்பதும், அவனுடன் ஒருநாள் பயணத்தில் ஈடுபடுவதும் ஆகிய மூன்று வழிகளால் மட்டுமே ஒரு மனிதனை அறிந்து கொள்ள முடியுமாம். 'புளித்த காடி தேனைக் கெடுப்பது போலத் தீக்குணங்கள் வணக்கத்தைக் கெடுத்து விடுகின்றன' என்பது நபிமொழி. நபிகள் நாயகம் அவர்கள் "இறைவா என் உருவத்தை அழகாக்கியது போல் என் குணத்தையும் அழகாக்கிவை" என்பதாக இறைஞ்சி வந்துள்ளார்கள். 'இறைவன் நம் தோற்றத்தையோ செல்வத்தையோ நோக்கவில்லை; உள்ளத்தையும் செயல்களையுமே நோக்குகின்றான்' என்பதாகக் கூறியுள்ளார்கள். ஆத்மாவின் அழகினையே நற்குணம்

என்று குறிக்கின்றோம். மனிதகுலத்தினிடத்து மட்டுமன்றி எல்லா உயிர்களிடத்தும் அன்புகாட்ட வேண்டுமென்பது இஸ்லாமிய நெறியாகும். ஊர்ந்து செல்லவும் பொதி சுமக்கவும் பயன்படுத்தும் விலங்குகளைப் பட்டினி போடுதல் அவற்றின் ஆற்றலுக்கு அப்பாற் பட்ட வேலைகளை வாங்குதல், துன்புறுத்தல், சூடுவைத்தல், பறவைகளைக் காரணமின்றிச் சிறைவைத்தல் ஆகியவை தடுக்கப்பட்டுள்ளன. காரணமின்றி மரங்களை வெட்டுவதும், தண்ணீரை வீணாக்குவதும் கூடத் தடை செய்யப்பட்டுள்ளன.

தாகத்துடன் ஓடிப்பறந்து வந்த ஈயொன்று மையை அருந்துவதற்காக எழுதுகோலை அசைக்காமல் வைத்திருந்த அறிஞர் ஒருவர் அரும் பயன் பெற்றார். தாகத்தால் வருந்தி வந்த நாயொன்றுக்கு நீரூட்டுவதற்காகக் காலணியை மேலாடையிலே கட்டி கிணற்றில் தண்ணீர் எடுத்துக் கொடுத்த பரத்தையொருத்தி பாவங்கள் மன்னிக்கப் பெற்றாள். நாய்க்கும், ஈக்கும் இரக்கம் காட்ட முன்வந்தோர்க்கு இவ்வளவு சிறப்பென்றால் அனாதைகட்கும் ஆதரவற்றோர்க்கும் அன்புகாட்டுவதன் உயர்வை விளக்கவும் வேண்டுமோ?

இஸ்லாமிய நெறி மாதர்களுக்கு வழங்குகின்ற மதிப்பையும் உரிமைகளையும் உலகம் உரிய முறையிலே உணர்ந்து கொள்ளவில்லையென்றே உரைத்தல் வேண்டும்.

"அன்னையின் பாதத்தடியில் அமைந்துள்ளது சுவர்க்கம்"
"வீட்டின் அரசியாக விளங்குபவள் பெண்ணே"
"உங்கள் பெண்களிடத்தில் நல்லோரே உங்களில் நல்லோர்"

என்பதாகப் பெருமானார் அவர்கள் பெண்ணின் பெருமையைப் பற்றிக் கூறியுள்ளார்கள். இஸ்லாமிய நெறியில் துறவறத்துக்கு இடமில்லை. திருமணம் செய்து இல்லறவாழ்வை மேற்கொள்ளுவது இறையாணையும் நபிவழியுமாகும். இஸ்லாமியப் பேரறிஞர்களும் இறைநேயச்செல்வர்களும் மெய்ஞ்ஞான மேதைகளும் இல்லறத்தை மேற்கொண்டு சுற்றமும் நட்பும் சூழ வாழ்ந்தவர்களாவர். சமுதாய அமைப்பிற்கும் மக்கள் தொடர்பிற்கும் குடும்ப வாழ்விற்கும் தேவையான உணவு, உடை, உறையுள் ஆகியவற்றைத் தேடுவது கணவனின் கடமை. கணவன் ஈட்டிய பொருளைக்கொண்டு வீட்டைப் பேணிக்காப்பதும் குழந்தைகளைப் பராமரிப்பதும் மனைவியின் கடமை. பெற்றோர்க்குக் கீழ்ப்படிவதும் அவர்களுக்குப் பணிபுரிவதும் மக்களின் கடமைகள். குடும்ப விளக்காக அமைந்திருக்கும் இல்லத்தரசி வீட்டிலிருந்து கொண்டே வீட்டு நிர்வாகத்தின் முழுப்பொறுப்பையும் ஏற்று

நடத்துகின்றுள். வீட்டைவிட்டு வெளியே செல்லக்கூடாது என்பது விதியல்ல. இவ்வாறு செல்லும்போது மேற்கொள்ள வேண்டிய சில ஒழுங்குமுறைகள் உள்ளன. நாகரீகத்தில் நனி சிறந்த மேலே நாடுகளிலுள்ள பெண்கள் பெருத பல உரிமைகளை இஸ்லாம் பெண்களுக்கு அளித்துள்ளது. சொத்துரிமை, மண விலக்குரிமை, மறுமணஉரிமை ஆகிய பல உரிமைகளை இஸ்லாமியப் பெண்கள் பெற்றுள்ளார்கள். தந்தையின் புதல்வியாக வாழ்ந்தாலும், தனித்து வாழ்ந்தாலும், பொருள் தேடுவதற்கும் அதை நிர்வகிப்பதற்கும் அவளுக்குரிமையுண்டு. மனிதகுலத்தின் ஒரு பகுதியாகிய பெண்ணினத்தை மட்டற்ற கொடுமைகளுக்கு ஆளாக்கி வந்த உலகுக்கு மாதர்களின் மதிப்பை எடுத்துரைத்தது திருமறை. கணவனுக்கும் மனைவிக்குமிடையே உள்ள உரிமைகளை அழகியதோர் உவமையினுல் திருமறை விளக்கிக் காட்டுகின்றது:

"ஹுன்னலீபாஸுலகும் அன்தும் லிபாசுன்லகுன்ன" (ஆண்கள் பெண்களினுடைகள், பெண்களும் ஆண்களுக்கவ்வாறே)

என்னும் உவமையில் பொதிந்துள்ள பொருள் ஆழ்ந்து சிந்தித்து உணரத்தக்கது. உடலுக்கு ஆடை அழகூட்டுவதைப்போல ஒருவருக்கொருவர் இல்லற வாழ்வின் எழிலுக்குக் காரணமாக அமைதல்வேண்டும். ஆடை உடலுடன் ஒட்டிக்கிடப்பதைப் போல இருவரின் உள்ளமும் இணைந்திருக்கவேண்டும். ஆடை குளிரையும் வெப்பத்தையும் தடுப்பதைப்போல இன்பதுன்பங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். ஆடை மானத்தைக் காத்தல் போல ஒருவொருக்கொருவர் குறைபாடுகளை மறைக்கவேண்டும் என்னும் கருத்தையெல்லாம் இவ்வுவமை விளக்கக் காணலாம். இஸ்லாமியத் திருமணம் ஒரு எளிய இனிய பொருள் பொதிந்த நிகழ்ச்சி. அந்நிகழ்ச்சியின்போது ஓதப்படுகின்ற மறையுரையின் ஒரு பகுதி:

"உலகத் தீரே உங்க ளிறையை
அஞ்சுக! அவனே அனைவர் தம்மையும்
ஆக்கினன் ஒன்ரும் ஆத்மாவி னின்றே!
அதனின்று அதற்கோர் துணையை ஆக்கினன்;
பின்னர் அம்முறையாகப் பரவச்செய்தான் பல
ஆண்பெண்களை ஆதலின் அந்தஆதியை அஞ்சுக!"

இம்மறையுரையைத் தொடர்ந்து மாநபியின் மொழிகள் இடம் பெறும்—"திருமணம் என் வழியாகும் அதை விடுபவன் என்னைச் சார்ந்தவனல்லன். என் வழியை நேசிப்பவன் என்னைப் பின் பற்றுக"–என்பன போன்ற கருத்துச் செறிந்த உரைகளைக் கூறிய பின்னர் பெண்ணின் உடன்பாட்டை இரு சாட்சிகள் எடுத்

துரைக்க ஈஜாப் கபூல் (ஈதல் — ஏற்றல்) முதலியவற்றை நிறைவேற்றி, மனைவியைக் கணவன் ஏற்றுக் கொள்கின்ற வாழ்க்கை ஒப்பந்தமே இஸ்லாமியத் திருமணமாகும். அதற்குப் பின்னர் மனிதகுலப் புனிதர்களாகிய நபிமார்களின் இல்லற வாழ்க்கையை உவமையாக்கி மணமக்களை வாழ்த்துவது இஸ்லாமிய மரபு.

இஸ்லாமிய நெறியில் அனுமதிக்கப்பட்டுள்ள பலதார மணத்தைக் குறித்து பல தவறான கருத்துக்கள் உலவுகின்றன. சமுதாய அமைப்பையும் மனித உணர்ச்சிகளையும் பெண்ணின் உடற்கூறுகளையும் கருத்திற் கொண்டே ஒன்றிற்கு மேற்பட்டு நான்கு மனைவிகள் வரைத் திருமணம் செய்து கொள்ளலாமெனக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறு ஒன்றிற்கு மேற்பட்ட மனைவியரை மணப்பவன் நடுவுநிலைத் தவறாமலும் ஒருபாற்கோடாமலும் மனைவியரிடம் நடந்து கொள்ளவேண்டுமென்றும், அதற்குடன்படாதவன் ஒன்றிற்கு மேற்பட்டோரைக் காப்பாற்ற இயலாதவன்; அவ்வாறு திருமணம் செய்தலாகாதென்றும் தெளிவான விதியுள்ளது. இவ்வாறு பலதார மணம் அனுமதிக்கப்பட்டதால் எல்லோரும் அதனை மேற்கொள்கின்றார்கள் என்பது கருத்தல்ல. மிக அரிதாகவே அவ்வாய்ப்பு பயன்படுத்தப்படுகிறது. "ஒருவனுக்கு ஒருத்தி" – என்னும் கொள்கையை எல்லோருக்கும் பொதுவாக விதித்து, அவ்விதிக்குக் கட்டுப்படாத—இயலாத-சிலர் ஒழுக்கம் தவறிப் பரத்தையர் இல்லத்தை நாடுவதற்கு இடங்கொடுப்பதைவிடப், பலதார மணத்திற்கு இடமளித்து "உயிரினும் ஓம்பப்படும்" ஒழுக்கத்தைக் காப்பாற்றுவது எவ்வளவு உயர்வானதென்பதை நன்னோக்குடன் நடுநிலையாக ஆய்வோர் விளங்கிக் கொள்ளமுடியும்.

வீட்டை ஆள்வோருக்கு மட்டுமன்றி நாட்டை ஆள்வோருக்கும் சீரிய நெறிகளைக் காட்டுகின்றது இஸ்லாம். நாட்டுப்பற்று நம்பிக்கையிற்பட்டது. "ஹுப்புல்லதனி மினல் ஈமான்" என்பது நபிமொழி. அண்ணல் நபியவர்களின் மறைவுக்குப்பின் ஆட்சிப் பொறுப்பினை மேற்கொண்ட நாற்பெரும் கலீபாக்கள் நடத்திக் காட்டிய இஸ்லாமியக் குடியரசு அறிஞர்கள் மனத்தைக் கவர்வதாக உள்ளது. முதற் கலீபாவாக விளங்கிய ஹஜரத் அபூபக்கர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றெடுத்ததும் ஆற்றிய உரை, சிந்தையள்ளும் சிறப்பினைக் கொண்டதாகும்: "நான் உங்களைவிட எவ்வகையாலும் மேம்பட்டவன் அல்லன்; அல்லாதிருக்க நீங்கள் என்னைத் தலைவனாக்கிவிட்டீர்கள். நான் நல்லதைச் செய்தால் எனக்குத் துணைபுரியுங்கள்; நான் தீயதைச் செய்தால் என்னைத் திருத்துங்கள். உங்களில் பலவீனனின் உரிமையை நான் அவனுக்கு அளிப்பேன். அவனே என்னிடம் பலவானாவான்.

உங்களில் பலவான் என்னிடம் பலவீனனுவான். அவன் பலவீனனுக்குக் கொடுக்கவேண்டிய உரிமைகளைக் கொடுத்துவிடும்படி நான் அவனைக் கட்டாயப்படுத்துவேன். இறைவனுக்கும் அவன் தூதருக்கும் நான் வழிப்பட்டு நடந்தால் நீங்கள் என்னைப் பின்பற்றுங்கள். இன்றேல் என்னை விட்டுவிடுங்கள்''—இதுதான் ஆட்சிப் பொறுப்பேற்ற கலீபா அவர்களின்முதற்பேச்சு. இவ்வுரை, இஸ்லாமிய அரசியலின் அடிப்படைக் கருத்தை மிகச் சிறப்பாக விளக்கி விடுகின்றது. ஆட்சித்தலைவர் காட்சிக்கு எளியராகக், கடுஞ்சொல்லற்றவராக இருக்கவேண்டுமென்பதும், தலைவரென்னும் பதவியைத்தவிர அவருக்கும் பிறருக்கும் எத்தகைய வேறுபாடும் இருத்தலாகாதென்பதும் அறியத் தக்கது. பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரங்களுடன் இஸ்லாமியச் சட்டத்திற்குட்பட்டு ஆட்சியை நடத்தவேண்டும்.

ஏழையும், செல்வந்தனும், முதலாளியும், தொழிலாளியும் சட்டத்திற்கு முன்னிலையில் சமமாக மதிக்கப்பட்டனர். சட்டத்தால் தண்டிக்கப்பட்டோரை மன்னிக்கும் உரிமை ஆட்சித்தலைவருக்குக் கூட இல்லாமலிருந்தது. ஆண்டவனுக்கு அஞ்சி அநீதியிலிருந்து குடிமக்களைக் காப்பதே ஆட்சியாளர்களின் பொறுப்பாக இருந்தது. இதுபற்றி வான்மறை வழங்கும் ஒரு கருத்தைக் காண்போம்: ''நன்னம்பிக்கையுடையவர்களே! உங்களுக்கோ உங்கள் பெற்றோர்களுக்கோ உங்கள் உறவினர்களுக்கோ மாருக இருப்பினும், நீங்கள் இறைவன் சாட்சியாக நீதியின் மேல் உறுதியாக நில்லுங்கள். அது செல்வந்தனுக்கு மாருகவோ, ஏழைகளுக்கு மாருகவோ இருப்பினும் சரியே. அல்லாஹ் அவ்விருவரையும் பெரிதும் பாதுகாப்பவனுக இருக்கிருன். ஆகையால் நீங்கள் இந் நெறியிலிருந்து வழுவி விடாமலிருக்கும் பொருட்டு உங்கள் கீழான இச்சைகளைப் பின்பற்றுதீர்கள். மேலும் நீங்கள் நீதியை வழங்க மறுத்தாலோ, நீதியில் நின்று வழுவினுலோ அல்லாஹ் நிச்சயமாகக் கூர்ந்து அறிபவனுக இருக்கிருன்''.—இத்திருமறைத் தொடர் இஸ்லாமிய நெறியில் நீதிக்கும் நேர்மைக்கும் அளிக்கப் பட்டிருக்கும் உயர்வான இடத்தை மிகத் தெளிவாகக் காட்டுகிறது. தன்னலம் கருதாது வாழ்கின்ற நீதிபதிகள், சில தருணங்களில் செல்வந்தர்களின் ஆதரவை நோக்கியோ, ஏழைகளுக்கு உதவவேண்டுமென்னும் நெகிழ்ச்சியினுலோ நேர்மையிலிருந்து வழுவிவிடக்கூடுமாகையால், இரு சாராருக்கும் காவலனுகிய இறைவனுக்கு அஞ்சி சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து, ஒருபாற் கோடாமல் நீதி வழங்கவேண்டுமென்பது கருத்தாகும். இறையுணர்வுடைய இஸ்லாமிய ஆட்சியாளர்கள் இம்மறையுரையை வழிகாட்டும் ஒளிவிளக்காகக் கொண்டிருந்தார்கள் என்பதற்குச் சான்றுகள் இஸ்லாமிய வரலாற்றில் மிகப்பல.

ஆட்சித்தலைவராக இருந்த ஹலரத் உமரவர்கள் குற்றம் சாட்டப்பட்டு நீதி மன்றத்தில் நுழைந்தபோது அவர்களுக்களிக்கப் பட்ட தனிமதிப்பிற்காக நீதிபதியைக் கடிந்து கொள்கின்றார். 'கலீபா' அவர்கள் உறுதிமொழி கூறத் தேவையில்லை எனக் கூறிய நீதிபதியைக் கண்டித்து எச்சரிக்கை விடுகின்றார். ஆட்சிப் பதவியில் அமைந்திருந்த ஹலரத் அலி அவர்களின் காணுமற்போன கேடயம் ஒன்று ஒரு யூதனிடத்தே இருக்க அதுபற்றிய வழக்கினை ஆய்ந்த நீதிபதி, கலீபா அவர்களுக்காக அவர் தம் புதல்வரும் பணியாளும் கூறிய சாட்சியங்கள் செல்லாதென நபிமொழியை ஆதாரமாகக் கொண்டு மறுத்திருக்கின்றார். வழக்குத் தொடுத்த யூதர் இஸ்லாமிய நெறியை வியந்து தழுவுகின்றார். ஆட்சித் தலைவர் உமர் இப்னு அப்துல் அஜீஸ் அரசாங்கச் செலவில் எரிகின்ற விளக்கு வெளிச்சத்தில் தன் சொந்த அலுவல் பார்ப்பதற் குத் தயங்கி நண்பருடன் உரையாடிக் கொண்டிருக்கும் போது விளக்கை அணைத்து விடுகின்றார்.

ஆட்சியில் இத்தகைய நேர்மையைக் கடைப்பிடித்து வருவதற்கு வழிகாட்டுகின்ற இஸ்லாம், பிறமதத்தாருடன் நட்பும் நல்லுணர்வும் கொண்டு வாழ்வதற்குக் கூறுகிறது. மதீனாவின் ஆட்சியை மேற்கொண்டிருந்த அண்ணலார் அவர்கள் அந்நகரில் வாழ்ந்த கிறிஸ்தவப் பெருங்குடி மக்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தமும், வெளிநாட்டுக் கிறிஸ்தவ நாடுகளுடன் போர் ஏற்பட்ட போது உள்நாட்டுக் கிறிஸ்தவர்களுக்கு அளித்த பாதுகாப்பும், நஜ்ரானின் கிறிஸ்தவத் தூதுக்குழுவினர் தம்மைப் பார்க்க வந்த போது அவர்களுக்குக் காட்டிய பரிவுணர்ச்சியும், பள்ளிவாயிலில் அவர்கள் வணக்கத்தை நிறைவேற்றுவதற்கு இடங்கொடுத்ததும் இவ்வுண்மையை விளக்குவனவாகும். (லாயிக்ராஹபித்தீன்) "மதத்தில் கட்டாயமென்பது கிடையாது" — "லகும் தீனுகும் வலியதீன்" (உங்கள் மதம் உங்களுக்கு எங்கள் மதம் எங்களுக்கு) என்பன மறையுரைகள். இறைநெறியின்பால் பிறருக்கு அழைப்பு விடுக்கும் போது எவ்வாறு நடந்து கொள்ளவேண்டுமென்பதற் கும் திருகுர்ஆன் வழிகாட்டுகின்றது. "உம் இறைவனின் நெறிக்கு யுக்தியுடனும் அழகிய அறவுரைகளாலும் மக்களை அழைப்பீராக; அவர்களுடன் விவாதிக்க முற்பட்டால் அதைவிட அழகிய முறையில் நடந்து கொள்வீராக" — என்பது கட்டளை. அடுத்து, இஸ்லாமிய நெறி அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பகுத்தறிவுக்கும் சிந்தனைக்கும் உயர்வான இடத்தை அளித்துள்ளது. இறைவனிட மிருந்து பெருமானார் பெற்ற முதல் தொடர் "ஓதுவீராக" என்பது தான். சிந்தனையற்றவர்கள் விலங்குகளிலும் இழிந்தோர் என்பது மறையுரை. "சீனம் சென்றும் ஞானம் பெறுவீர்" என்பது

போன்று அறிவின் உயர்வைக் கூறும் நபிமொழிகள் மிகப்பல. இவற்றின் விளைவாக எழுந்த அறிவுத்தாகத்தின் பயனாக எழுந்த ஆராய்ச்சிகளும் அரிய நூல்களும் இன்றைய நாகரிகத்திற்கே வித்திட்டுள்ளன.

இவ்வாறு பல்லாற்றானும் நிறைவு பெற்ற இஸ்லாமிய நெறியை வாழ்க்கையிலே மேற்கொண்டொழுகியவர்கள் எல்லாத் துறைகளிலும் உச்ச நிலையை எட்டிப்பிடித்தனர். அறிஞர்களும், அரசர்களும், நீதிபதிகளும், சட்டமேதைகளும், இளைஞர்களும், மாதர்களும், வீரர்களும், விஞ்ஞானிகளும், ஆட்சித்தலைவர்களும், ஞானமேதைகளும் அவரவர் துறைகளிலே புரட்சிகளையும் புதுமைகளையும் விளைத்தனர்.

"நிச்சயமாக நாம் மனிதனை மிக மேலான வடிவத்தில் படைத்திருக்கின்றோம்" என்பது இறைமறை. இவ்வாறு படைக்கப்பட்ட மனிதனின் உடம்பு, உயிரின் ஆற்றலை வெளிக்காட்டுவதற்குரிய கருவியாக அமைகிறது. உலகத்தில் வாழ்கின்ற பல கோடி மக்களில் ஒருவர் முகம் இன்னொருவர் முகத்தை ஒத்திருப்பதில்லை. ஓர் அங்குல அளவிலிருக்கின்ற ஒருவரின் பெருவிரல் அடையாளம் இன்னொருவரின் பெருவிரல் அடையாளத்தை ஒத்திருப்பதில்லை. கோடிக்கணக்கான மக்களில் ஒருவர் குரல் இன்னொருவர் குரலை ஒத்திருப்பதில்லை. இதுவே இறைவன் படைப்பின் இணையற்ற தன்மை. இத்தகைய படைப்பின் அற்புதத்தை ஆய்ந்து நோக்கிய மேதைகள் மனிதனின் உடலில் மாபெரும் உண்மைகளைக் கண்டனர். கதிரும் மதியும் போல் அமைந்த கண்கள், விண்மீன்கள் போல் மின்னும் அறிவு; பறவைகளைப்போல் பறக்கும் எண்ணங்கள்; மலைகளைப்போல் எலும்புகள்; ஆறுகளைப்போல் உமிழ்நீர்; அருவியைப்போல் கண்ணீர்; விலங்குகளைப்போல் நுண்ணுயிர்கள்; இடியைப்போல் வாயுவின் இயக்கம்; நிலநடுக்கம் போல் மெய்ச்சிலிர்ப்பு; புயலைப்போல் கொட்டாவி; மழையைப்போல் தும்மல்; உலகின் காற்பகுதி நிலமும் முக்காற்பகுதி நீரும் இருப்பதுபோல் மனித உடலிலும் அதே அளவு மண்ணும் நீரும்; கடல்நீரில் உப்புச்சத்து எத்தனை சதவிகிதம் இருக்கின்றதோ அதே அளவில் மனித உடம்பிலும் உப்புச்சத்து; அறுசுவை; ஐந்துவண்ணம். இவ்வுண்மைகளை ஆராய்ந்தறிந்த மெய்ஞ்ஞானமேதை 'முஹ்யித்தீன் இபுனுல் அரபி' பாடினார்கள், "சின்னஞ்சிறிய உன் உடலை எண்ணிப்பார்; உன்னில் ஒரு பெரிய உலகமே புதைந்திருக்கிறது" என்னும் பொருளில். இவ்வுடலுடன் மனிதன் இவ்வுலகுக்கு வரும்போது அழுது

கொண்டே பிறக்கிறான். பக்கத்தில் இருப்போர் மகிழ்கின்றனர். அவன் உலகத்தை விட்டுப் பிரியும்பொழுது பக்கத்தில் இருப்போர் நெஞ்சம் நெகிழ வேண்டும். பிரிந்து செல்வோன் வாழ்க்கையின் நிறைவை எண்ணி மகிழ்ந்து செல்லவேண்டும். நன்னம்பிக்கை உடையோன் ஆவி பிரியும்பொழுது அவன் முகத்திலே புன்னகை தவழ்ந்திருக்கும் என்பது அறிஞர் கருத்து. பிறக்கும் பொழுது மூடிய கைகளுடன் வந்த மனிதன், பிரியும்பொழுது திறந்த கைகளுடன் செல்கின்றான். வந்தபொழுது வாழ்வைக் கொண்டு வந்தான். பிரியும்பொழுது வாழ்வை விட்டுச் செல்கின்றான். இஸ்லாமிய இல்லங்களில் குழந்தை பிறந்தவுடன் ஆற்றப்படுகின்ற சடங்கு ஒன்று உண்டு. குழந்தையைத் தூய்மைப்படுத்திக் குழந்தையின் வலது காதிலே பாங்கு எனும் தொழுகைக்குரிய அழைப்பும், இடது காதிலே 'இகாமத்' எனும் தொழுகை ஆயத்த அழைப்பும் ஓதி ஊதுவார்கள்.

செல்வக் குழவியின் புறமனமாகிய சிந்தனை செயலற்று இருப்பினும் பிறந்தவுடனேயே உள்மனம் உணர்வு பெறத் தொடங்கிவிடுகிறது. 'அல்லாஹு அக்பர்' (இறைவனே மிகப் பெரியவன்) எனத்தொடங்கும் இஸ்லாமிய நெறியின் கருத்துச் சுருக்கமான கவினுர் உரைகள் குழந்தையின் (Sub-conscious mind) உள்மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்துவிடுகின்றன. இவ்வாறு பதிந்துவிடுகின்ற எண்ணம் வாழ்வின் இறுதிவரையிலே நெஞ்சத்தில் மாறுது நிலைத்துவிடுகின்றது. பிறந்தவுடன் கேட்ட தொழுகை அழைப்பிற்குரிய விடையைப்போன்று அவன் உலகை விட்டுப் பிரியும்பொழுது உயிர் பிரிந்த சடலத்தை முன்னுல் வைத்து அவனுக்கு மரணத் தொழுகை நடத்தப்படுகின்றது. உயிர் பிரிந்த சடலத்தைச் சுமந்துசென்று மண்ணறையிலே வைத்துவிட்டு நினைவுகூரப்படுகின்ற திருமறைத்தொடர் மனித வாழ்வின் குறிக்கோளை மாண்புடன் விளக்கும்.

"திருப்தியடைந்த ஆத்மாவே! உன் இறைவன் உன்னைக் கொண்டு திருப்தி அடைந்த நிலையிலும் நீ அவனைக்கொண்டு திருப்தி அடைந்த நிலையிலும் நீ உன் இறைவன்பால் மீள்வாயாக. நல்லடியாருடன் சேர்ந்து சுவனத்திலும் நுழைவாயாக" — இதுவே நிலையான வாழ்வுக்கு இஸ்லாம் காட்டுகின்ற நிறைவான உயர்வு. 'நப்ஸ் அம்மாரு' எனப்படும் விலங்கியல் நிலையில் இருக்கின்ற மனத்தை மனிதன் பல்வகை முயற்சிகளினுல் 'நப்ஸ் லவ்வாமா' எனப்படும் புரட்சிசெய்யும் மனமாக மாற்றிவிடுகின்றான். பலவகைப் பயிற்சிகளினுல் மனநிலை பின்னரும் மாண்பினைப் பெறுகின்றது. தீக்குணங்களைச் சுட்டெரித்து நற்

குணங்களின் நிலைக்களனுகி இறைவனை நினைவுகூரும் 'திக்கீர்' களிலே திளைத்து 'முராகபா' எனப்படும் தியான நிலையைத் தாண்டி 'முஷாஹதா' எனப்படும் காட்சி நிலையை அடைகின்றான்; கண்ணையும் கருத்தையும் மறைக்கின்ற திரைகள் அகல்கின்றன. சூத்திரப்பாவை கயிறற்று வீழுமுன் சூட்சக்கயிற்றினைப் பார்க்கின்றான்.

சாத்திரபேதம் சலாம் சலாமென்ன, ஜகஜோதி மின்னல் பளீர் பளீரென்ன, பரமுத்தன் குணங்குடித் தெருவில் வரும் பவனியைப் பார்த்து நெஞ்சம் நிறைகின்றான். இந்நிறைவே ஆத்ம சாந்தியளிக்கும் இறுதிநிலை; நப்ஸ்முத்மயின்ன நயந்தளிக்கும் உயர்நிலை. இறுதியில் இந்நிலையடைந்து மறுமையின் எல்லையிலாப் பேரின்பத்தை நுகர்வதற்காக மனிதனுக்கு வழி காட்டுவதே இஸ்லாமிய நெறி.

# ஸூஃபியாக்கள் வரலாறு

—அபூஜமால்—

வாழ்க்கையைப்பற்றிய ஆராய்ச்சியிலே ஈடுபட்டு ஆத்ம விசாரணையில் ஆழ்ந்து, ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி இறைவழிபாட்டிலே இன்பம் கண்ட மக்கள் உலக வரலாற்றிலே உயரிய இடங்களைப் பெற்றுள்ளனர். இத்தகைய மனிதப் புனிதர்கள் பண்டைக்காலந் தொடங்கி இன்றுவரை எல்லா நாடுகளிலும், எல்லா இனத்தாரிடையேயும் எழில் வீசிக்கொண்டிருக்கின்றனர். இஸ்லாமிய வழியிலே விழிவைத்து ஒழுகிய இத்தகைய மனிதகுல மாணிக்கங்கள்தாம் ஸூஃபியாக்கள் என்று குறிக்கப்படுகின்றனர்.

ஸூஃபி தத்துவத்தின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. அது நியோ பிளட்டோனிஸத்திலிருந்து பிறந்ததென்றும், ஆரிய நாகரிகத் தொடர்பால் ஆரம்பமாயிற்று என்றும், அவ்வாறு பிற நாகரிகங்களின் கலப்பாலன்றித் தன்னியல்பாகவே தோன்றிற்று என்றும் முக்கியமாக மூன்று கருத்துக்கள் நிலவுகின்றன. இவ்வாறே ஸூஃபி என்னும் சொல்லின் தோற்றத்தைக் குறித்தும் மூவேறு கருத்துக்கள் உள்ளன. மதினாவில் 'மஸ்ஜிதுன் நபவி' என்னும் பள்ளிவாயிலைச் சூழ தியானத்தில் ஈடுபட்டிருந்தோர்களாகிய 'அகலுஸ்ஸுபா' என்னும் தோழர்களைக் குறிக்கும் தொடரிலிருந்து அச்சொல் தோன்றிற்றென்றும், தூய்மை என்னும் பொருள் தரும் 'ஸாப்' என்னும் சொல்லிலிருந்து அது பிறந்த

தென்றும், கம்பளி என்பதன் பாரசீகச் சொல்லாகிய 'சூஃப்' என்பதிலிருந்து அது எழுந்ததென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். இத்தகைய வித்தகர்களாகிய தத்துவ ஞானிகள் ஆடம்பர வாழ்வில் ஆழ்ந்துவிடாமல் எளிய வாழ்வின் சின்னமாகக் கம்பளியைப் போர்த்தி வந்ததன் காரணமாக அப்பெயர் பெற்றனர் எனக் கருதுவது பொருந்துவதாக உள்ளது.

இஸ்லாமிய நெறியினை விளக்கிக் காட்டுகின்ற திருமறையாகிய குர்ஆன் ஷரீபின் பேருரைகள் சூஃபி தத்துவத்திற்குரிய அடிப்படைக் கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டு மிளிர்வதைக் காணலாம்: 'ஆதியுமவனே; அந்தமுமவனே; தோற்றுவதுமவனே; மறைந்திருப்பவனுமவனே; அவன் எல்லாப் பொருட்களையும் நன்கறிந்தோன்' (57 : 3). 'அல்லாஹ் மண்ணினுடையவும்; விண்ணினுடையவும் ஒளியாய் இருக்கிறான்' (24 : 35). 'நான் அவனை (மனிதனை) உருவாக்கி அதில் என் உயிரைப் புகுத்தினேன்' (15 : 29). 'அல்லாஹ் எவனுக்கொளி ஊட்டவில்லையோ அவனுக்கு எவ்வித ஒளியும் கிடைக்காது' (24:40).

திருமறையின் இத்தகைய உரைகளிலே சிந்தனையைச் செலுத்தியவர்கள், இறைவனின் இயல்புகளையும், பண்புகளையும் குறித்து ஆராயத் தலைப்பட்டனர். அன்பு, தியாகம், கொடை, எளிமை ஆகிய பண்புகளை அவர்கள் அணிகலன்களாகப் பூண்டனர். தெய்வக் காதலும், தெய்வ பக்தியுமேதான் சூஃபி தத்துவத்தின் அடிப்படை. நபிகள்நாயகம் அவர்களிடத்திலும், அவர்களின் தோழர்களிடத்திலும் இப்பண்புகள் இணையற்றுத் திகழ்வதைப் பார்க்கலாம்.

இறைவனை வணங்குதல், அவனை நேசித்தல், மனிதனை நேசித்தல், மக்கட்பணியாற்றுதல் ஆகிய பண்புகள் அவர்களது வாழ்க்கையில் அமைந்திருக்கக் காண்கிறோம். பெருமானார் பலமுறை தனித்திருந்து, விழித்திருந்து, பசித்திருந்து இறையருளெனும் இணையறு கடலிலே திளைத்திருந்தார்கள் என்பதை அவர்கள் தம் வரலாறு எடுத்துக் காட்டுகிறது. வாழ்வின் வழிகாட்டியாகிய வள்ளலார் இவ்வாறு உறைவது கண்டு அவர்களின் தோழர்களும் அம்முறையைப் பின்பற்றினர். உலக வாழ்க்கையிலிருந்து ஒதுங்கி ஆத்மீக வாழ்வின் ஆழிய இன்பத்தைப் பருகுவதற்கு விருப்புற்று அவர்கள் 'மஸ்ஜிதுன் நபவி' என்னும் பள்ளிவாயிலுக் கேகி எப்போதும் தியானத்தில் மூழ்கியிருந்தார்கள். இவர்களைத்தான் 'அகலுஸ் ஸஃப்பா' என்பதாக அழைக்கிறோம். நபிகள்நாயகம் அவர்களுக்குப் பின் மூன்றாவது கலீபா ஆட்சிக்

காலத்திலும் அதற்குப் பின்னரும் இஸ்லாமிய உலகிலே பல குழப்பங்களும் மாறுபாடுகளும் வந்து புகுந்தன. சமூக வாழ்விலே அமைதியின்மை இடம் பெறவே பெருமானுர் போதித்த தூய்மையான எளிய வாழ்வைப் பெரும்பாலோர் மறந்து ஆடம்பர வாழ்வை மேற்கொண்டனர். இக்காலத்தில் இச்சூழ்நிலைகளைக் கண்டு வருந்தி முஸ்லிம்களுள் ஒரு பிரிவினர் சமூக வாழ்விலிருந்து நீங்கி இறை வழிபாட்டில் ஈடுபடுவதற்கு ஆயத்தமாயினர். நாட்கள் செல்லச்செல்ல அவர்களின் எண்ணிக்கையும் பெருகலாயிற்று. இவ்வாறு இவ்வுலக வாழ்விலுள்ள இன்பங்களையெல்லாம் துறந்து இறையருள் மட்டுமே நாடிநின்ற பக்தர்களைத்தான் இஸ்லாத்தின் முதல் சூஃபியாக்களாகக் காண்கிறேம்.

அஹலுஸ்ஸுப் பாக்கள் இஸ்லாத்தின் மீதே இதயத்தைச் செலுத்தி திருமறையோதுவதிலும் மத சம்பந்தமான விவாதங்களிலும் தங்கள் காலத்தைக் கடத்தினர். பொதுவாக முஸ்லிம்கள் அணைவருடையவும் நன்மதிப்புக்கு உரியவர்களாய் விளங்கினர். பெருமானுர் அவர்களின் மருகராக விளங்கிய ஹலரத் அலியவர்கள் பிள்ளைப் பருவத்திலிருந்தே பெருமானுர் அவர்களுடன் உறவுகொண்டு பக்தியிலும் மெய்யறிவிலும் மேதையென விளங்கினுர்கள். எல்லா சூஃபிதரீகாக்களும் பெருமானுருக்குப் பின்னர் ஹலரத் அலி அவர்களையே தங்களின் ஞான குருவாகவும் வழிகாட்டியாகவும் கொண்டுள்ளன. அவர்கள்மீது பேரன்பு காட்டிய பெரியோர்களுள் உவைஸுல் கரனியும் ஒருவர். ஹலரத் அலி அவர்கள் ஒருபோது போருக்குப் புறப்படுகின்ருர்கள் என்றறிந்ததும் உவைஸுல் கரனி அவர்கள் அப்படையிலே சேர்ந்து களத்திலே மடிந்தார்கள். அவர்கள் போன்றே தொண்ணூறு வயதடைந்த பக்திச் சிகரம் அம்மார் யஸுர் அவர்கள் ஹலரத் அலி அவர்களுக்காகப் போர்க்களத்தில் உயிர் நீத்தார்கள். இவ்வாறு ஹலரத் அலியவர்களின் பக்தியினுல் ஈர்க்கப்பட்டு, அறிவினுல் ஆர்க்கப்பட்ட மனிதப் புனிதர்கள் பற்பலர். மாலிக் இப்னு-ஹாரித், குமயுல் இப்னு ஸியாத் ஆகியோர் அவர்களுள் குறிப்பிடத்தகுந்தோராவர். பெருமானுர் அவர்களுடன் ஹலரத் அலி அவர்கள் பூண்டிருந்த தொடர்பு அவர்களைச் சூஃபியாக்களின் ஞானகுருவாக அமைத்தது.

சூஃபியாக்களின் வரலாற்றில் பாரஸீகம் சிறந்ததோர் இடத்தைப் பெறுகின்றது. புராத் ஆற்றின் கரையிலே ஒரு மடம் அமைத்து வாழ்ந்த ஹபீப் அஜமி, ஹஸனுல் பஸரீ அவர்களின் சீடரும் நண்பருமாவர். கி. பி. ஒன்பதாம் நூற்ருண்டில் வாழ்ந்த அரசு துறந்த ஆத்மஞானி இப்ராஹிம் அத்ஹம் அவர்களும், மெர்வ் என்னுமிடத்தில் தோன்றிய புஜைல் இப்னு அயாஸ் அவர்களும்

பல்கு நகரத்தின் அஹமத் அபூ அலி ஸகிக், ஹாத்தம் ஆகியோர் களும் சிறந்த ஸூஃபிகளாக விளங்கினர்.

'இறைவனை அறிவதற்குரிய ஒரேவழி, அவனோடு ஒன்றி விடுவதே' என்ற துன்னூன்மிஸ்ரியின் பேச்சுக்கு பாஎஸீது பிஸ்தாமி நல்ல விளக்கம் தந்துள்ளனர். இறைவனை மகிழ்விப் பதற்குரிய ஒரேவழி ஆத்மார்ப்பணம் என்றும் அதன்வழி இறைவனோடு ஒன்றிவிட்ட பின்னர் மனிதன் இல்லாமலாகி விடுகிறான் என்றும் கூறப்பட்டது. இறைவனும் சிருஷ்டியும் இரண்டு என்னும் இஸ்லாமியக்கொள்கையிலிருந்து இவ்விடத்தில் தான் ஸூஃபிதத்துவம் சிறிது வேறுபடுகின்றது. ஆனால் பிற் காலத்தில் ஜுனைத் பக்தாதி போன்றோர் ஸூஃபி தத்துவங்களைச் சீர் திருத்தி ஷரீஅத்தும், ஹகீகத்தும் ஒரு கொள்கையின் இருபுறங்கள் என்பதை விளக்கினர். இவ்வாறு இஸ்லாத்தின் பௌதீக ஆத்மீகக் கொள்கைகளை இணைத்த இன்னொரு பெரியார் இமாம் கஸ்ஸாலி அவர்களாவர். புறவாழ்வு, அகவாழ்வு இவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற முறையில் பலவகைக் கருத்து வேறுபாடுகள் தோன்றின.

கி. பி. 1078ல் ஜீலான் நகரிலே பிறந்து பக்தாதிலே பயிற்சி பெற்று கௌதுல் அஃலம் என்னும் சிறப்புப்பெயர் தாங்கிய ஹஜ்ரத் முகிய்யித்தீன் அப்துல்காதர் ஜீலானி அவர்கள் காதிரீயா தரீகாவை நிறுவினார்கள். 1388ல் மறைந்த காஜா பகாவுத்தீன் முஹம்மத் அவர்களால் நக்ஷபந்தியா தரிகா நிறுவப்பட்டது. இவர்களைப் பின்பற்றுகின்றவர்களை சைனு, துருக்கிஸ்தானம் துருக்கி, ஜாவா போன்ற இடங்களில் காணலாம். தூனிஸ் என்னு மிடத்தில் தோன்றிய அலி ஷாதிலி அவர்களால் 'ஷாதிலியா தரிகா' வளர்ச்சியுற்றது. வட ஆப்ரிக்காவிலும், துருக்கியிலும், ருமேனியாவிலும் இவர்கள் வழியினோர் வாழ்கின்றனர். 1415-ல் அப்துல்லா சத்தார் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஷத்தாரியா தரீகா சுமத்ரா, ஜாவா, இந்தியா ஆகிய இடங்களில் காணப்படு கின்றது. அல்ஜீரியாவில் அஹமது திஜனி, 'திஜனீயா தரீகா' ஏற்படுத்தினார்கள். 1837-ல் அலியுஸ்ஸானூஸியின் மகனுன ஷெய்க் முஹம்மத் அவர்கள் காதிரிய்யா தரீகாவில் ஒரு கிளையாக பெனுஷ்ரியா தரிகாவை அமைத்தார்கள். இவற்றுடன் அஹ்மது ரிபாயி அவர்களின் ரிபாயி தரீகாவும் ஜலாலுத்தீன் ரூமி அவர் களின் மௌல்வி தரீகாவும் காஜா முயீனுத்தீன் ஷிஸ்தி அவர் களால் இந்தியாவில் பரப்பப்பட்ட ஷிஸ்தியா தரீகாவும் குறிப்பிடத் தக்கன. ஆகவே, ஸூஃபியாக்களிடத்தில் நாம் ஒரே பண்புடைய ஸூஃபித் தத்துவத்தைப் பார்க்க இயலாமல் போய்விடுகின்றது.

ஹல்லாஜ் இப்னுல் அரபி, ஜலாலுத்தீன் ரூமி, சஅதி, ஹாபீஸ், ஜாமி போன்றோர் சூஃபியாக்களின் வரிசையிலே உலகப்புகழ் பெற்றவர்கள். இவ்வாறே தமிழகத்தில் தோன்றி இஸ்லாமிய நெறியினைப் பின்பற்றித் தாங்கள் கொண்ட கொள்கைகளையும், கண்ட காட்சிகளையும் தமிழ்க்கவிதைத் தேனிலே வடித்தெடுத்த சூஃபியாக்கள் பலருள்ளனர். குணங்குடி மஸ்தான் சாகிபு, தக்கலை யின் மிக்க புகழ் மேதாவி பீர்முஹம்மது சாஹிபு வலியுல்லா, கோடை நகர மெய்ஞ்ஞானி ஷெய்கு முஹ்யித்தீன் மலுக்கு முதலியார், காலங்குடி இருப்பு மச்சரேகைச் சித்தர், ஐயம் பேட்டை அப்துல்கனி சாகிபு, காயல்பட்டணம் செய்யிது முஹம்ம துல் காதிரி, கணியாபுரம் ஷெய்கு அப்துல்காதர் வாலை மஸ்தான் ஆகியோர் அவர்களுள் குறிப்பிடத்தகுந்தவர்கள். இப்பெரியார் களின் பைந்தமிழ்ப் பாமாலைகளும், மௌலானா ஜலாலுத்தீன் ரூமியவர்களின் 'மஸ்னவீ' பரீதுத்தீன் அத்தர் அவர்களின் 'மன்தகுத்தைர்' ஸனுய் அவர்களின் 'ஹதீகா' ஷெப்ஷெத்ரி அவர்களின் 'குல்ஷனே றஷ்' போன்ற செய்யுள் நூல்களும் அபூநஸ்ர் அவர்களின் 'கிதாபுல்லுமா-பித்-தஸவ்வுப்' அபுல் காஸிம் குஷைரிய்யா அவர்களின் 'ரிஸாலயே குஷைரிய்யா' அலி இப்னு உத்மான் அவர்களின் கஷ்புல் மஹ்ஜூப், இமாம் கஸ்ஸாலி அவர்களின் இஹ்யாவுல் உலூம், இப்னுல் அரபி அவர்களின் புதுஹாத்தே மக்கீயா புஸூஸுல் ஹிகம், ஸுஹறவர்தீ அவர்களின் அலாரிபுல் ஆஸப் போன்ற உரை நடை உருவிலமைந்த கருத்துக் கருவூலங்களும் ஸூபி தத்துவத்தை ஆராய்ந்து கூறும் சுடர் விளக்குகளாக இலங்கி வருகின்றன.

குராசான் நாட்டைச் சார்ந்த அபுல்ஹூஸைன் நூரி அவர் கள் ஸூபி தத்துவத்தைக் குறித்துக் கூறும் ஓர் உரையுடன் இக் கட்டுரையை முடிப்போம்.

'இறைவன் வழியாகத்தான் நீங்கள் இறைவனை அறிய முடியும். அறிவு ஒரு வழிகாட்டியே யாகும். ஆனால் உண்மையை நோக்கி மனிதனுக்கு வழி காட்டுவதற்குரிய ஆற்றல் அதற்குக் கிடையாது. நான் அவனது (இறைவனது) ஒளியை நோக்கிக் கொண்டேயிருந்தேன். நானே ஒளியாவது வரையில் தொடர்ந்து நோக்கிக் கொண்டேயிருந்தேன். மானிட மாசுகளை யெல்லாம் விட்டொழிந்து தூய்மையான ஆத்மாக்களை யுடையவர்களே ஸூபியாக்கள். அவர்கள் உலகச் செல்வங்களுக்குத் தலைவர்களும் அல்ல; அவற்றின் அடிமையுமல்ல; எதனோடும் தொடர்பு கொண்ட வர்களுமல்ல; எதுவும் அவர்களோடு தொடர்பு கொள்ளவுமில்லை. ஸூபி தத்துவம் என்பது மதச் சடங்குகளைச் செய்து முடிப்பதில்

மட்டுமல்ல; அறிவியற்கலையையும் மெய்யறிவையும் குறித்த ஞானமுமல்ல; ஒழுக்க நிறைவும் தூய்மையுமாகும். உரிமை, ஆண்மை, பற்றில்லாமை, பெருந்தன்மை என்பன அதன் பொருள். உலகப் பொதுமை இறையோன் நட்பு-இதுவே அது.'

———

ஜாமீ சிறிது நேரத்திற்கே ஏகத்துவ போதனை செய்கின்றார் புல்லாங்குழல் எப்போதும் செய்கின்றது. அதன் பேச்சை ஊகித்தறிபவன் நல்வாழ்வுக்கு நேசனாகின்றான்.

— மௌலானா ஜாமீ (ரஹ்)

இரவின் நீளத்தையும், காதலர்களின் அவஸ்தையையும் எவன் விழித்திருக்கவில்லையோ அவனிடம் கூறுதற்கியலாது.

— ஷெய்கு ஸஅதீ (ரஹ்)

சன்மார்க்கத் தொண்டர்கள் சற்குணத்தைவிட்டு விலகியவனிடமிருந்து ஒரு சரிகைப் பட்டாடையினை அரைச் சவ்வரிசிக்குப் பகரமாய்க்கூட வாங்கமாட்டார்கள். —காஜாஹாபிஸ் (ரஹ்)

செம்மையுறாத மனத்தால் செய்யப்படும் பிரார்த்தனையால் பலன் கிடைக்குமென்று எதிர்பார்ப்பது பக்குவம் பெறாத முட்டையினின்று இறகு வெளியாகுமென்று எதிர்பார்ப்பதுபோலாம்.

— ஸாஹிப் (ரஹ்)

(சமாதி நிலையிலும், சச்சிதானந்த நிலையிலும் இருக்கும்) ஒவ்வோர் வலிமாரிடத்தும் இறைவனது ஜோதி பிரகாசிக்கின்றது. அதை நீங்கள் மாசற்ற மனத்தவராய் இருந்தால் நன்கு கண்டு கொள்வீர்கள். — ஒரு பெரியார்

ஸஅதி! உனது ஆயுள் என்ற வீட்டைத் தியாகம் என்ற வெள்ளப்பெருக்கு அழித்துவிட்டபோதினும் மனத்தைத் திடமாக வைத்துக்கொள். ஏனெனின், சாசுவதமான தெய்வீகத் தன்மையின் அஸ்திவாரம் அதனால் பலப்படுகின்றது.

— ஷெய்கு ஸஅதீ ஷீராஸீ (ரஹ்)

# யானுன் அடைக்கலம்!

*சினி. சௌமியநாராயணன், எம். ஏ.,*
தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரைக் கல்லூரி, மதுரை.

என்னைமனு வென்றுலகில் விண்டவனு நீயே
என்னினைவ டங்கலும றிந்தவனு நீயே
பின்னைமிடை தந்துவித னிப்பவனு நீயே
பேசுமிடி நாசமத றுப்பவுனு நீயே
மன்னையுனை யன்றியிறை மற்ரெருவ ரற்ற
வல்லோனே யெனக்கு னுதவியுருள் வாயே
உன்னை நினை வற்றவரென் ஞேடுபகை யாமல்
உத்தமனே யானுன் னடைக்கலம் தானேன்.

அடியருடல் நின்றடிமை கொள்பவனு நீயே
அனுதினமு முனை நினைவு தருபவனு நீயே
கடியவர்கள் குடிகள்பொடி படவருள்வை நீயே
கலக்கமறுத் தெனக்குதவி செய்தருள் வாயே
படியிலடி யேன்வினைப்பற் றறுப்பவனு நீயே
பாவங்கள் பலவிடருந் தீர்ப்பவனு நீயே
கொடியவர்கள் முடிகிவினை செய்யாம லடியேன்
கோமானே யுன்ற னடைக்கலம் தானேன்

பெரியோர்கள் அனைத்தும் அவன் செயல் என்றே கருதிச் செயல்படுவார்கள். 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்பதே அவர் தம் அசையாத நம்பிக்கை. எனவே தான் அவனை வழி

படுவதற்கும் கூட அவனே பற்றுக்கோடு என்பர். இதை அறி வுறுத்தவே மணிவாசகப் பெருந்தகையாரும் 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' என்று கூறுகின்றார். இதன் வழியே சான்றோர்களும், தாம் பாடிய பெரு நூல்களும் தம் அறிவின் திறத்தால் அமைந்தவை அல்ல, அவன் அருள் ஆற்றலாலேயே அமைந்தன என்பர்.

வைணவ சமயச் சான்றோர்களில் முதன்மை பெற்றவராகிய நம்மாழ்வாரை இறைவனின் அவதாரம் என்றே வைணவப் பெரு மக்கள் கருதுவர். 'அன்று அன்னமாகி' அருமறையை வடமொழி யில் அருளிய இறைவனே அதனை அமிழ்தினும் இனிய தமிழ் மொழியில் அருளுதற் பொருட்டு நம்மாழ்வாராக அவதரித்தனன் என்பர். ஆழ்வாரின் நான்கு நூல்களும் நான்கு வேதங்களின் சாரமாம். அத்தகைய பெருமை மிகுந்த ஆழ்வாரோ தாம் எதை யும் பாடவில்லை, நாரணனே என்நா முதல் வந்து பாடினன் என்பதைத் திருவாய்மொழி ஏழாம் பகுதி 9-ம் பாசுரத்தின் 3-ம் பாடலில்,

> "ஆம்முதல் வனிவ னென்றேதற் றேற்றிஎன்
> நாமுதல் வந்து புகுந்துநல் லின்கவி
> தூமுதல் பத்தர்க்குத் தான்தன்னைச் சொன்னஎன்
> வாய்முதல் அப்பனை என்றும் மறப்பனோ"

என்று பாடி அறிவிக்கிறார்.

அவர் திருவாய்மொழியின் முதல் பாசுரத்தில் இறைவனின் உயர்வை நிலை நாட்டி அத்தகையவனால் 'ஆன்மா' ஆட்கொள் ளப்படும் ஆற்றை விளக்குகிறார்.

> "உயர்வற உயர்நல முடையவன் எவனவன்
> மயர்வற மதிநலம் அருளினன் எவனவன்
> அயர்வறும் அமரர்கள் அதிபதி எவனவன்
> துயரறு சுடரடி தொழுதெழன் மனனே

"என் மனமே தனக்கு மேல் உயர்வில்லை என்னும் படியாக மேன் மைப் பண்புகளை உடைய இறைவன் எவனோ அவனேதான் என் மயக்கம் அறப் பத்தியோடு கூடிய ஞானத்தை அருளினன். அவ் வறிவைத் தந்தவனே சோர்வறியாத நித்யசூரிகளின் தலைவன். அந்நித்யசூரிகளின் தலைவனின் எல்லாத் துன்பங்களையும் போக்குகின்ற ஒளிபொருந்திய திருவடிகளை வணங்கிக் கடைத் தேறுவாய்"

(நித்திய சூரிகள் — இறைவனோடு இறைவனிடத்தில் உறையும் பேறு பெற்ற அடியவர்கள்)

இப்பாசுரத்தின் ஈற்றடிக்கும் விளக்கமாக வைணவப் பேராசான் இராமாநுசர் ஓர் புதிய பொருள் விளக்கம் அருளியுள்ளார். 'துயரறுசுடரடி' என்பதற்குத் 'துயரங்களைப் போக்கும் இறைவனின் ஒளி பொருந்திய அடிகள்' என்பது பொருள். அப்படியானால் இங்குத் 'துயரங்கள்' என்பன யாருடைய துயரங்கள்? என்ற வினவை எழுப்பி மற்றவர்கள் நினைப்பது போல் அவை அடியவர்களின் துயரங்கள் அல்ல, ஆண்டவனின் துயரங்கள் என்கிறார். 'ஆண்டவனின் துயரங்களா? மகிழ்வே வடிவான ஆண்டவனுக்குத் துயரங்கள் ஏது? என்பார்க்கு இயல்பாக இன்ப துன்பங்களைக் கடந்த இறைவனும் அடியவர்கள் தன்னைச் சரணடைந்த உடனேயே, அவர் தம் துன்பங்களைத் தனதாகக் கொண்டு, அவற்றைப் போக்கச் செயல்படுவதால் அவை அவன் துன்பமாகவே ஆகிவிடுகின்றன. அடியவனுக்கு இறைவன் திருவடியில் சரணடையும் வரைதான் தனக்கு என்று இன்ப துன்பங்கள் அமைகின்றன. இருள்சேர் இருவினையும் சேராதவனை அடைந்தபிறகு தன்னோடு சேர்த்து அவற்றையும் அவனுக்கே அர்ப்பணித்து விடுகிறான். எனவே இவனோடு அவையும் அவன் உடைமை ஆகிவிடுகின்றன என்கிறார். எனவே இறைவனை அடைக்கலம் புகுபவன் அனைத்தின்னல்களினின்றும் வீடு பெறல் கண்கூடு.

இம்மாபெரும் தத்துவக் கருத்தினைப் 'பீர்முகம்மது அப்பா' அவர்கள் மேற்குறித்த ஞானப்புகழ்ச்சி 58, 59-ம் பாடல்களில் எளிமை நலம் தோன்ற விளக்குகிறார். மணிவாசகரைப் போன்று இறைவனிடம் விண்ணப்பித்தவாறு விளக்குகிறார்.

"இறைவா! உயிர் இனங்களில் சிறந்த மனிதனாக என்னை வெளிக்காட்டியவன் நீ. நீயே என் அகத்துணர்வனைத்தும் அறிந்தவன்! எனக்கு ஏற்படும் அவதூறுகளை உண்டாக்கியவனும் நீ. அதற்காகத் துயருறுபவனும் நீ! பின் அம்மிடியைப் போக்கி அருளுபவனும் நீ! உயர்வற உயர்நலமுடைய எந்தாய் எனக்கு உதவியருள்வாய்! உன்னை நினையாதவர் என்னோடு பகையாமல் (என் அகப்பகைவர்களான ஐம்புலன் உணர்வுகளும் உன்னை நினையாது என்னோடு பகையாமல்) எனக்கடைக்கலமருளுவாய். உன் அடிவீழ்ந்தேன்."

"உளன் கண்டாய் நன்னெஞ்சே! உளன் கண்டாய்! உள்ளுவார் உள்ளத்து உளன் கண்டாய்!" என்றாற்போல் அடியார் உள்ளத்தில் உறைந்து அவர்களை அடிமை கொள்பவன் நீ! அவர்

தமக்கு மயர்வற மதிநலம் அருளி உன்னைத் துதிக்குமாறு செய்பவனும் நீ! உள்ளத்தில் குடிகொள்ளும் கடியவர்களை ஒறுத்து மனக்கலக்கத்தைப் போக்குபவனும் நீ! என் இருள்சேர் இருவினையும் போக்கிப் பாவ, துன்பங்களினின்றும் வீடு அருள்பவனும் நீ! இனி என் அகப்பகைவர்களான கொடியவர்கள் முடுகி வினை செய்ய வழியின்றி உன் திருவடிகளில் என்னை அடைக்கலப் பொருளாக்கிக் கொண்டு விட்டேன்! கோமானே நான் உய்ந்தேன்!'' என்ற இப்பாடல் பொருள் நமக்குக் கீதையில் இறைவன் அருளிய

''ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ
அஹம் த்வா சர்வ பாபேப்யோ மோக்ஷ யிஷ்யாமி; மா சுச:''

என்ற சுலோகத்தின் பொருளை நினைவூட்டுகிறது.

''அனைத்துச் செயல்களையும் துறந்து என்னையே அடைக்கலமாகக் கொள். நான் உனக்கு அனைத்துப் பாவங்களினின்றும் வீடருளிச் செய்கிறேன். வருந்தாதே;'' என்பது இதன் பொருளாம்.

இறைவன் அருளிய இதே அறவுரைக் கருத்தைப் பீர்முகம்மது அப்பா இப்பாடல்களில் இறைவனிடமே விண்ணப்பித்துத் தன்னை அவனுடைய அடைக்கலப் பொருளாக ஏற்கும்படி வேண்டுகிறார்.

---

சூரியன் மறையும் போது மஞ்சள் நிறமாகுவதெல்லாம் அது பூரணத்துவம் என்னும் ஸ்தானத்திலிருந்து அகற்றப் பட்டது என்பதற்காகத்தான். எனவே அது இறை சந்நதியைப் பயந்து மஞ்சளாகி விடுகிறது. அவ்வாறே ஒரு மூமின் உலகிலிருந்து வெளியாகுவதற்கு நெருங்கி விட்டால் இறை சந்ததியைப் பயந்து அவரது நிறமும் மஞ்சளாகிவிடும். சூரியன் மீண்டும் உதித்தால் ஒளிதரக்கூடியதாகவும், பிரகாசமானதாகவும் உதிக்கிறது. அவ்வாறே மூமினும் கப்ரிலிருந்து வெளியானல் அவரது முகமும் பிரகாசிக்கக் கூடியதாக வெளியாகுவார்.

— ஷிப்லீ (ரஹ்)

உலகத்தில் பயனளிக்காத ஒவ்வொரு சினேகிதனும் மறு உலகில் பயனளிக்க மாட்டான்.

— அஹ்மது கபீருர் ரிபாயி (ரஹ்)

# இறையே போற்றி

*அ. அப்துல்ரசாக்,* எம். ஏ., டி. ஜீ. டி.,
தமிழ்த்துணைப் பேராசிரியர்,
ஆதித்தனர் கல்லூரி, திருச்செந்தூர்.

உலகமென்னும் வயலில், பாடலென்னும் உரமிட்டுப் பக்தியென்னும் பயிர் வளர்த்த பாவலர்கள் பலரைக் கண்ட நாடு நம் நாடு. தத்தம் பக்தி நெறிகளைப் பரப்ப விரும்பிய விழுமியோர், மொழியினைக் கருவியாகக் கொண்டு பக்தி இயக்கத்தையும் வளர்த்தனர்; மொழியும் வளர்ந்தது. தமிழ் மொழியிலுள்ள பக்திப் பாடல்கள் இதற்குச் சான்ருய் அமையும்.

இஸ்லாம் மதக் கவிஞர்களும், தம் கோட்பாடுகளென்னும் மருந்தினைத் தமிழ்த் தேன் கலந்து தந்துள்ளனர். அக் கவிஞர் தம் வரிசையிலே தக்கலை ஞானி பீர்முகம்மது அப்பா அவர்கள் தலையான இடத்தைப் பெறுகின்ருர். எளிய, இனிய தமிழில், நெஞ்சை உருக வைக்கும் இசைச் செறிவோடு அவர் யாத்துள்ள பாடல்கள் இஸ்லாமியப் பக்தர்கள் பருகும் அருமருந்தாகும். ஆண்டுதோறும் பல்லாயிரக் கணக்கில்கூடி அவர்தம் பாடலில் கட்டுண்டு கிடக்கும் பக்தர்களின் காட்சியைக் காணக் கண் கோடிவேண்டும். அப்பா அவர்களின் அரும்படைப்பாம் ‘‘ஞானப்புகழ்ச்சி’’ என்னும் நற்றமிழ்ச் சோலைக்குள் சென்று நயமிகு கனிகள் சிலவற்றை உண்டுவைக்கலாம். எல்லாம் வல்ல இறைவனின் அளப்பருங் குணங்கள், செயற்கருஞ் செயல்கள், அருளுள்ளம் ஆகியவற்றை உணர வைக்கும் சில வரிகளில் நம் சிந்தனையைச் செலுத்துவோம்.

இறைவனின் ஆற்றல்கள் மனித சக்திக்கு அப்பாற்பட்டவை. அவனுக்கு நிகர் அவனுகவே விளங்குகிருன். ஆகவே வணக்கத்துக்குரியவன் அவனைத் தவிர வேறு யாருமில்லை. உலகமளாவிய புகழ் அனைத்தும் அவனுக்கே உரியன. இவற்றை உணர்ந்த அடியார்கள் இறைவனைப் போற்றிப் பெருமிதங் கொள்கின்றனர். தொழுது துயர் நீக்குகின்றனர். "எங்கள் இறைவனே! நாங்கள் உன்னிடம் உதவி கேட்கிருேம்; மன்னிப்புக் கேட்கிருேம். உன்மீது நம்பிக்கை கொள்கிருேம். நல்லவை அனைத்தையும் வைத்து உன்னைப் பாராட்டுகிருேம்"—என்றெல்லாம் இறையடியார்கள் அவனைப் போற்றிப் பரவுகின்றனர்.

இறைவன், என்னைப் படைத்தான்—தன்னை வணங்குதற்கே என்று உணர்ந்து, உருகி வழிபடும் தொண்டர்களை அவன் புறக்கணிப்பதில்லை. சோதனைகள் பலவற்றைக் கொடுப்பானே தவிர இறுதியில் அருள்புரிந்தே தீர்வான். தன் தொண்டனின் இதயத் தாமரையில் அமர்ந்துவிடுவான். உமறுப் புலவர் அவர்களும், "சிறந்த மெய்ப் பொருளை, அழிவிலா மணியைத், தெரிந்து முக்காலமு முணர்ந்து, துறந்தவ ரிதயா சனத்திருந் தவனை" என்று இதனையே விளக்கியமைகின்ருர்.

தூய்மை நிறைந்த இறைவன் அளக்கலாகாப் பெரியோனுமாய்ப் பரிமளிக்கிருன். திருமறை கூறுவது போல, அவன் அருட்கொடைகளை நாம் எண்ணத் தொடங்கினுல், நம்மால் வரம்பு காண முடியாது. ஒரு கொசுவை அல்லது ஈயை அவன் எவ்வாறு படைக்கிருன் என்பதை விண்ணக, மண்ணக மக்கள் ஒருங்குசேர்ந்து ஆய்ந்தாலும் அவர்களால் அணுவளவு பகுதியைக்கூடக் கண்டு கொள்ள முடியாது. அத்தகைய ஆற்றல் மிக்க பெரியவன் அவன். "வல்லவனே! நீ எப்படி இருக்கிருயோ அப்படி எங்களால் புகழ முடியவில்லையே" என்று நபி பெருமானுர் (ஸல்) அவர்களே வியந்து நிற்கின்றனர். இவ்வளவு ஆற்றலும் பெற்றுள்ள இறைவன் தனித்தவன்தான். ஆனுல் எதிர்ப்பில்லாத பேரரசன். எத்தகைய துன்பங்களும் அவனை அணுக முடியாது. உமறுப் புலவர் உரைப்பது போல அவன், "துடரின்ப துன்ப மற்றவன்".

உலகிலுள்ள எல்லாவற்றிலும் உயர்ந்தவன் இறைவனே. தன் வல்லமையால் உலக உயிர்கள் அனைத்தையும் படைத்துக் காக்கும் பெரும் பொறுப்பு அவனுடையது. கல்லினுட் டேரைக்கும் கருப்பையுயிர்க்கும் புல்லுணவே தந்து புரப்பவனல்லவா அவன். இத்தனைக்கும் எவ்வித நலத்தையும் பொருட்படுத்துவதில்லை. உலக உயிர்களிடமிருந்து எந்தக் கைமாற்றையும் எதிர்

பார்ப்பதில்லை. தன் அடியார்கட்குத் தக்கவேளை வருங்கால் தன் அருளைப் பொழியத் தவற மாட்டான். இறையருள் பெற்ற அடியார்கட்குப் பொறுமைப் பண்பு மேலோங்கி விடுகின்றது. பைபில்—புதிய ஏற்பாட்டில் கூறப்படுவது போலக் "காய்ந்து போன ரொட்டியைத் தின்பதும் மாட்டுக் கொட்டிலில் படுத் துறங்குவதும் அவர்கட்கு மிகச் சாதாரணமான காரியங் களாகும்".

இரவென்றும் பகலென்றுமில்லாமல், இறைவனின் பணிகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. ஓரறிவுயிர்கள் முதல் ஆறறிவுயிர்கள் வரைப் படைப்பதும் அவற்றைப் புரப்பதும் அவனுடைய இடையரு வேலைகள். இந்நிலையில் அவனுக்குத் தூக்கமேது? ஓய்வு ஏது? உலகத்துச் செல்வங்கட்கெல்லாம் அதிபதியான அவனுடைய கருணைக் கதிர்கள் உலகத்தின் எக் கோடியிலுமுள்ள அடியார்கள் மீதும் பொழியும். இவ்வுலக மென்ன, பாதாள உலகத்தும் உள்ளார் அவன் அருள் வேண்டி நிற்பராயின் அவர்கள் உய்யப் பெறுவர்.

இறைவனுக்கு அஞ்சி நடந்து, அழுது, தொழுது அவன் அருளைப்பெற வேண்டுமென்று சிலர் எண்ணுமல், கபட நெஞ்சோடு, அடியவர்கள் போல் போலிவேடந் தாங்கித் திரிவர். அவர்களை ஒருக்காலமும் இறைவன் ஏற்றுக்கொள்ள மாட்டான். அவனை அஞ்சி நடப்பவரையே அவன் ஏற்றுக் கொள்கிருன். நபி (ஸல்) அவர்கள், "அறிவுகளுக்கே தலைமையானது இறை யச்சம்; இறையச்சத்தின் உதவியாலேயே சகல ஞானங்களும் உண்டாகி விடும்" என்று கூறியுள்ளார்கள்.

எல்லா வகையான அறிவுத்துறைகளின் கொள்கலமாக மிளிரும் இறைவன்தான், உலகத்து உயிர்கட்கெல்லாம் அறிவுச் செல்வத்தைப் பகுத்து வழங்கும் வள்ளலாக விளங்குகிருன். அத் தகைய இறைவனைத் தவிர வேறெவருக்கும் அடி பணிய மாட்டேன் என்ற வைராக்கிய முடையவனே நல்லறிஞன். அந்த நல்லவனுக்கு என்றும் நல்லவனுகவே இருந்து நல்லருள் புரிவதைக் கடமையாகக் கொள்கிருன் இறைவன். தாயுள்ளம் கொண்ட அவன், தன் அடியார்கள் எத்திறத்தாராயினும், அவர்கள்பால் சீரான அன்பினைப் பொழிந்து அவர்கட்கு ஈடேற்றத்தைக் கொடுக்கிருன்.

இறைவனின் இத்தகைய இணையற்ற பெருமைகளை உள்ளடக் கிப் பீர்முகம்மது அப்பா அவர்கள் கீழ்வருமாறு பாடுகின்ருர்கள்:

"அண்டர்தொழு தேத்துமெங்கள் அல்லாவே அன்புறுநல்
தொண்டரிட மாகிநின்ற துல்லிபமே—நன்றிதரும்
துய்யபெரி யோனேபல் துக்கமணு காதவனே
வையமுழு தாளுமுயர் வான்பொருளே—பொய்யருளைக்
காணவரி தாகியொரு காலந்துயி லாதவனே
சேணிலடி யார்க்கிரங்கும் சீமானே—வீணர்
தவத்தை வெறுப்பவனே தற்பரனே யெவ்வுயிர்க்கும்
பகுத்தறி வீந்துதவும் பார்த்திபனே—செகத்தில்வரும்
நல்லார்க்கு நல்லவனே நாயகனே நின்னடியா
ரெல்லார்க்கு மொன்ரு யிருப்பவனே"

இறைவனின் ஆற்றல், அருள் புரியும் பாங்கு, ஆளுமைச் சிறப்பு, தூய்மைச் செறிவு, தாய்மைத் தன்மை ஆகியவற்றை அப்பா அவர்கள் எல்லார் மனமும் ஏற்கும் வண்ணம் எளிய தமிழில்பாடி இதயங்குளிர வைக்கின்ருர்.

———

"ஓ யஃகூபே! பேரீத்த மரத்தைப் பார். அது தன்னை உயர்த்திக் கொண்டதால் அதன் சுமையை அல்லாஹ் அதன் மீதே ஆக்கிவிட்டான். எவ்வளவு சுமையாக இருந்தாலும் அதுவே சுமக்கவேண்டும். சுரைக்கொடியைப் பார். அது தன்னைத் தாழ்த்திக்கொண்டு தன் கனத்தைப் பூமியுடன் சேர்த்துக் கொண்டதால் அதன் பாரத்தை அல்லாஹ் பூமியின்மீது போட்டு விட்டான். எவ்வளவு சுமையாக இருந்தாலும் அது உணருவதே யில்லை."

— சுல்தானுல் ஆரீபீன் (ரலி)

குறிப்பிட்ட நேரத்தில் உள்ள வணக்க வழிபாடுகளை அதன் நேரத்தை விட்டும் பிற்படுத்தாதே. அவ்வாறு பிற்படுத்தினுல் அதன் நேரத்தை வீணுக்கியதற்காக அக்காரியம் கைகூடாமல் போய்விடும். அல்லது வேருென்று விடுபடும். அல்லது அதுபோன்று கூலிஉள்ள ஒன்று தவறி விடும். ஒவ்வொரு நேரத்துக்கும் ஒரு பாக்கியம் உண்டு.

— ஷாதுலி நாயகம் (ரலி)

# இறைநேசச் செல்வர்கள் மாண்பு

மௌலவி, அல்ஹாஜ்,
எஸ். ஆர். ஷம்சுல் ஹுதா மிஸ்பாஹி - பாகவீ
(தஞ்சை மாவட்ட ஜமாஅத்துல் உலமா சபைத் தலைவர்)

"அறிந்து கொள்ளுங்கள்! அல்லாஹ்வின் நேசர்கள் — அவர்கள்மீது நிச்சயமாக எந்தப் பயமுமில்லை; அவர்கள் துக்கப் படவுமாட்டார்கள்."

— அல்குர்ஆன் 10:62

வலியுல்லாக்கள் இறைநேசச் செல்வர்கள். அவர்கள் இறைவனின் தனிப்பெரும் அருளைப் பெற்றவர்கள்; அவனின் பணிக்கே தங்களை அர்ப்பணித்து அவனின் நேசத்துக்கு உரித்தானவர்கள்; அவனுக்காகவே அனைத்தையும் துறந்து வாழ்ந்தவர்கள்; அவனது சந்நிதியில் அருள்வாயிலைத் திறந்து, ஒளித்திரையை அகற்றி, அகந்தெளிந்து பற்பல இரகசியங்களைத் தெரிந்தவர்கள்; அவர்கள் விண்மீன்களாக ஒளி வீசுகின்றனர்.

ஒளி வீசும் தாரகைகள், இருண்ட இரவு நேரங்களில் கடல்களிலும், கரைகளிலும் பிரயாணம் செய்பவர்களுக்கு வழிகாட்டுவதைப் போன்று ஞானமற்ற இருண்ட உள்ளங்களுக்கு அவ்லியாக்கள் என்னும் ஞானமேதைகள் வழிகாட்டுகின்றனர்.

சூரியனைவிட உருவத்திலும் ஒளியிலும் பன்மடங்கு பெரிதான நட்சத்திரங்கள், பூமியிலிருந்து வெகு தூரத்தில் இருப்பதால் மிகச் சிறியவையாகவும், குறைந்த பிரகாசமுள்ளவையாகவும் காட்சி தருகின்றன. அது போன்றே மாபெரும் மதிப்பையும், உயர்வையும், ஒளி உள்ளத்தையும் பெற்ற அவ்லியாக்கள், சாதாரண மக்களுக்கு மிகச் சிறியவர்களாகவும் வாழ்க்கை வளத்தில் குறைந்

தவர்களாகவும் காட்சி தருகின்றனர். பலர் இலைமறை காய்களாக மறைவாகவே வாழ்ந்து மறைந்து விடுகின்றனர்.

அவ்லியாக்களைப் புரியாத மக்கள், அவர்களைப் பார்த்து, பைத்தியக்காரர் — மதம் மாறியவர் — என்று கூறுவதும், அவர்களின் செயல்களைப் பழித்துரைத்துக் கிண்டல் செய்வதும் வழக்கம். மக்கள் தங்களைப் புரிந்து கொள்ளாது பற்பல இழிபெயர்கள் சூட்டி அழைப்பதையே அவர்களும் விரும்புகின்றனர்.

சுல்தானுல் ஆரிஃபீன் அஹ்மதுல் கபீருர் ரிஃபாயி (ரலி) அவர்கள் மாபெரும் ஞானமேதையாக, ஞான மகான்களுக்குப் பேரரசராகத் திகழ்ந்தார்கள். அவர்களுக்கு ஷெய்க் இப்ருஹீமுல் புஸ்தீ என்பவர் கடிதம் ஒன்று எழுதி ஆள் மூலம் அனுப்பிவைத்தார். அக்கடிதம் கொண்டு வந்தவரிடமே அதைத் தமக்குப் படித்துக் காட்டுமாறு கோரினுர்கள் ரிஃபாயீ நாயகம்.

அக்கடிதத்தில், 'ஏ' ஒற்றைக் கண்ணனே! ஏ, தஜ்ஜாலே! மார்க்கத்திற்குப் புறம்பாக நடப்பவனே! ஆண்களையும் பெண்களையும் ஒன்று கூட்டிக் கூட்டம் போடுபவனே! நாயே!' என்று மிகவும் கீழ்த்தரமான வார்த்தைகளைக் கொண்டு ஏசி எழுதியிருந்தார். அவர் படித்து முடித்தவுடன் தாமும் அக்கடிதத்தை வாங்கிப் படித்தார்கள். பிறகு, "அல்லாஹ் அவருக்கு நற்கூலி அளிப்பாளுக!" என்று கூறி, "நான் அல்லாஹ்விடத்தில் சந்தேகத்திற்குரியவளுக இல்லாதிருந்தால் என் காலத்தவர் சந்தேகிப்பதை நான் பொருட்படுத்துவதற்கில்லை" என்னும் பொருள்பட ஒரு கவிதை பாடினுர்கள். மேலும் கடிதம் கொண்டுவந்தவரிடமே கீழ்க்கண்டவாறு பதில் எழுதக் கூறினுர்கள்: "தலைவர் ஷெய்க் இப்ருஹீம் அவர்களுக்கு ஒன்றுமில்லாத அஹ்மத் எழுதும் நிருபம். தாங்கள் என் சம்பந்தமாகக் கூறிய வார்த்தைகளைப் புரிந்து கொண்டேன். அல்லாஹ் என்னை அவன் விரும்பியவாறு படைத்து வாழச் செய்துள்ளான். நான் தங்களிடம் விரும்புவதெல்லாம், எனக்காகத் தாங்கள் பெருமனது வைத்து துஆ செய்வதைத்தான். தங்கள் மன்னிப்பிலிருந்து என்னை அகற்றி விடாதீர்கள்."

இக்கடிதத்தைக் கண்ட ஷெய்க் இப்ருஹீம் புஸ்தீ நிலைகுலைந்து பதறிப் போனுர். இது போன்றுதான் ஒவ்வொரு காலத்திலும் வாழ்ந்த ஞான மேதைகளை, அக்காலத்தவர் புரிந்து கொள்ளாமலே இருந்தனர். அம்மேதைகளும் அப்படியே இருக்க விரும்பினர்.

ஞானமேதைகளைப் புரிந்து மரியாதை செய்யும் நல்லோர்களின் கூட்டத்தில் அல்லாஹ் நம்மை ஆக்குவாளுக!

## வலியுல்லாஹ் என்பவர் யார்?

அல்லாஹ் ஒளிமயமானவன். "அல்லாஹ் விண்ணுலகங்களுக்கும் பூவுலகிற்கும் ஒளியாகும்" எனத் தன் திருமறையில் அல்லாஹ் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கிறான். தனது உற்ற தோழர் முகம்மது முஸ்தபா (ஸல்) அவர்களையும், தனது திருவேதம் குர்ஆன் மஜீதையும் "நூர்" — ஒளி என்றே திருக்குர்ஆனில் கூறுகிறான்.

"அத்துடன் அனுப்பப்பட்ட ஒளியை (குர்ஆனை) அவர்கள் பின்பற்றினார்கள்."

— அல்குர்ஆன்: 7-157

"நபியே, உம்மை சாட்சியாளராகவும், நற்செய்தி கூறுபவராகவும், எச்சரிக்கை செய்பவராகவும், அல்லாஹ்வின் அனுமதி கொண்டே அவனின் பக்கம் அழைப்பவராகவும், ஒளிரும் தீபமாகவும் நாம் உம்மை அனுப்பி வைத்துள்ளோம்."

— அல்குர்ஆன்: 33-45, 46

அவ்வொளியை உள்ளத்தில் ஏற்றிருப்பவரே வலீ எனக் கூறப்படுவார். எனவே ஒவ்வொரு முஃமினின் உள்ளத்திலும் அந்த ஒளி இருப்பதால், ஒவ்வொரு முஃமினும் வலியாகுவார்.

"அல்லாஹ் ஈமான் கொண்டோர்களின் நேசனாகும். அவன் அவர்களை இருள்களிலிருந்து ஒளியின் பக்கம் வெளியாக்குகிறான்"

— அல்குர்ஆன் : 2-257

அந்த ஒளியை முஃமின்கள் எந்த அளவு பெற்றிருக்கின்றனரோ, அந்த அளவு அவர்களின் விலாயத் சிறப்படைகிறது. ஒளியின் அளவிற்கேற்ப, வலிமார்கள் நபிமார்களுக்கு ஒப்பாகின்றனர். இதைக்குறித்தே நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்,

"எனது தோழர்கள் நட்சத்திரங்கள் போன்றவர்கள். அவர்களில் யாரை நீங்கள் பின்பற்றினாலும் நேர்மை அடைவீர்கள்" என்றும்,

"அறிஞர்கள் நபிமார்களின் அனந்தரக்காரர் ஆவார்கள்" என்றும் கூறியுள்ளார்கள்.

திருக்குர்ஆனின் வழியையும், நபி வழியின் முறையையும் முழுக்க முழுக்கக் கடைப்பிடித்து நடப்பவர்களே விலாயத்தில் பூரணத்துவத்தை அடையமுடியும். அவ்விரு ஒளிகளையும் கடைப்பிடிக்காதவர்கள், ஒளிபெறவும் முடியாது; முக்தி பெறவும் முடியாது.

''சன்மார்க்க ஞானம், இறைபக்தி, நல்லொழுக்கம் முதலிய வற்றை முழுமையாகப் பெருமல் ஒருவர், தம்மை ஞானகுரு என்று கூறினுல், அவர் அல்லாஹ்வின் அருளுக்கு அப்பாற்பட்ட வராவார்'' என்று ஷாதுலி நாயகம் கூறியுள்ளதை நாம் இங்கு நினைவில் கொள்ளவேண்டும்.

நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்ருமல் மார்க்கக் கட்டளைகளுக்கு முரணுன முறையில் போதனை செய்கிற வன் ஏமாற்றுகிறவனுவான்.

வலியுல்லாஹ் என்பவர்கள் பர்லு, சுன்னத்து, முஹ்தஹப்பு மற்றும் நபிலான எல்லா முறைகளையும் முழுமையாகக் கடைப் பிடிப்பார்கள். அவற்றிற்கு மாருகச் சிறிதளவு பிசகினுலும், அதை விலாயத்திற்கு முரணுனதாகவே கருதுவார்கள்.

பெரிய ஞானமேதை ஒருவர் இருக்கிருர் என்று கேள்விப் பட்ட ஒரு பெரியார், அவரைச் சந்திக்கச் சென்ருர். அப்பொழுது அவர் முன்புறமாக —கிப்லாவின் திசையில்— எச்சில் உமிழ்ந்தார். இதைப்பார்த்த அப்பெரியார், 'சுன்னத்துக்கு மாற்ற மாக இவர் எச்சில் துப்புகிருர். இடப்புறமாகக் காலுக்குக் கீழே எச்சில் துப்பவேண்டும் என்று ரசூல் (ஸல்) அவர்கள் கூறியிருக் கிருர்கள். இத்தகைய சுன்னத்துக்கு மாருக நடக்கும் இவரிடம் ஞானம் முழுமை பெற்றிருக்காது' எனத் திரும்பி விட்டார். சீடராக நினைத்துச் சென்ற அப்பெரியார். இந்தச் சிறிய செயலில் சுன்னத் பேணப்படாத காரணத்தால் சீடராகாமலே திரும்பி விட்டார்.

அவ்லியாக்களின் தலைவர் ஜுனைதுல் பஃதாதியிடம் ஒருவர் பன்னிரண்டு வருடங்கள் சீடராகப் பணியாற்றினுர். இந்தப் பன்னிரண்டு வருடங்களிலும் அந்த மேதையிடம் எந்த ஓர் அற் புதக் காட்சியையும் காணுத அவர் சலிப்புற்று, நாம் தவருக இவர் களைப் பெரும் மகான் என எண்ணி விட்டோம். இனியும் இவர் களிடம் இருந்து கொண்டு காலத்தை வீணுக்கக் கூடாது' என நினைத்து ஜுனைது (ரஹ்) அவர்களிடம் சென்ருர். ''ஷெய்க் அவர் களே! தங்களை ஒரு பெரும் ஞானி என்று நம்பிப் பன்னிரண்டு வருடங்கள் தங்களுக்குச் சீடனுக இருந்தேன். ஆனுல் ஞானிகளில் பலரைப் போன்று தாங்கள் நீரில் நடக்கவோ, விண்ணில் பறக் கவோ, வேறு பல அற்புதங்கள் நிகழ்த்தவோ சக்தியற்றவராக இருக்கிறீர்கள். எனவே ஞானம் முற்றுப் பெருத தங்களிடம் இனி யும் நான் நாள் கடத்த விரும்பவில்லை. சென்று வருகிறேன்; அனுமதி கொடுங்கள்!'' என்று கூறினுர்.

அதற்கு ஜுனைது (ரஹ்) அவர்கள், "மாணவரே, என்னுடன் நீங்கள் இருந்த பன்னிரண்டு வருட காலத்தில் என்றாவது ஒரு வேளை தொழுகையாகிலும் ஜமா அத்துத் தவறி நான் தொழுததை நீர் பார்த்ததுண்டா?" என்று வினவினார்கள். "இல்லை. எப்பொழுதும் ஜமா அத்துடன்தான் தாங்கள் தொழுகிறீர்கள்" என்று பதில் கூறினார் சீடர்.

"ஜமாஅத்து நடக்கும் போது என்றாவது முதல் - ஸஃப் - அணியில் நிற்காது இரண்டாவது மூன்றாவது அணியில் நின்று நான் தொழுவதைப் பார்த்திருக்கின்றீரா?" என்று ஜுனைது (ரஹ்) அவர்கள் மீண்டும் கேள்வி கேட்க, "இல்லை. தாங்கள் எப்பொழுதும் முன் அணியில்தான் நின்று தொழுவதைப் பார்த்திருக்கிறேன்" என்று பதிலளித்தார் மாணவர்.

மூன்றாவது கேள்வியைத் தொடுத்தார்கள் ஜுனைது: "என்றாவது நான் ஜமா அத்தில் தக்பீர் தஹ்ரீமா (தொழுகை ஆரம்பிக்கும்போது கூறும் முதல் தக்பீர்) வில் இமாமுடன் சேராது, தாமதமாக வந்து சேர்ந்ததையாவது பார்த்திருக்கின்றீரா?"

"இல்லை, எப்பொழுதும் முதல் தக்பீரிலேயே தாங்கள் இமாமுடன் சேர்ந்து விடுகிறீர்கள்" என்ற பதில் சீடரிடமிருந்து வந்தது.

இறுதியில் சீடரை நோக்கி ஜுனைது அவர்கள்: "பறவைகளும் விண் வெளியில் பறக்கின்றன. மீன் இனங்களும் நீரில் மிதக்கின்றன. அவை செய்யும் செயல் போன்று ஒரு மனிதன் செய்வது மாபெரும் அற்புதமல்ல. மார்க்கத்தில் ஓரணுவும் பிசகாமல் நடப்பது தான் பெரும் அற்புதம்" என்று அழுத்தமாகக் கூறினார்கள்.

அவ்லியாக்கள், மார்க்கத்தின் எல்லா நடை முறைகளையும் முழுமையாக ஒழுகி, தங்களின் உள்ளங்களில் காமம், குரோதம், பொறாமை, அசூயை, மார்ச்சரியம், தீய குணங்கள், மற்றும் தீய எண்ணங்கள் ஆகியவை இடம் பெறாமல் பாதுகாத்து வருவதனால் அவர்களின் உள்ளங்கள் பட்டை தீட்டப்பட்ட வைரமாகத்—துடைக்கப்பட்ட கண்ணாடியாக — ஒளி வீசும் தீபமாகக் காட்சி தருகின்றன. சூரியன் மிகப் பிரகாசமுள்ளதாக, யாவற்றையும் பிரகாசமாக்கக் கூடியதாக இருந்தாலும், கண்ணொளி இல்லாதவன் தன்னையோ, தன் உடலுறுப்புக்களையோ, பிற பொருட்களையோ, ஒளி சிந்தும் சூரியனையோ காணமுடியாது. அவன் சதா இருளிலேயே உழலுகிறான். கண்ணொளி பெற்றவனோ, சூரிய ஒளியால் தன்னையும் சூரியனையும் பிற பொருட்களையும் தெளிவாகக் காணுகிறான்.

அது போன்றே திருக்குர்ஆன் என்னும் சூரியனும், சுன்னத் என்னும் ஒளியும் மிகப் பிரகாசமளித்துக் கொண்டு இருந்தாலும், உள்ளத் தூய்மை என்னும் பிரகாசமுள்ளவரே தன்னை உணர்ந்து, குர்ஆன் — ஹதீஸ்களை அறிந்து, அதனல் அல்லாஹ்வையும், மற்றும் உலகிலுள்ள எல்லாப் பொருள்களையும் அறிகிருர். இதைக் குறித்தே, "தன்னை அறிந்தோர் தன் நாயனை அறிந்தவராவார்" என்று கூறப்படுகிறது.

உள்ளத்தில் ஒளி இல்லாதவரோ, தன்னையுமறியாது, குர்ஆன் — ஹதீஸையும் புரியாது, அல்லாஹ்வையும் உணராது, ஏனைய பொருட்களையும் தெரியாதவராகிருர். "ஈமான் கொண்டோர்களே நீங்கள் அல்லாஹ்வை மறந்தவர்களைப் போன்று ஆகி விடாதீர்கள். அதனல் அல்லாஹ் அவர்களையே மறக்கும்படி ஆக்கிவிட்டான்" (59-19) என்ற திருமறையின் வசனமும் இதையே குறிக்கிறது.

எவர் அல்லாஹ்வை அறியாது, மற்ற எல்லாப் பொருட்களையும் விளங்கினலும், அவர் ஒன்றும் புரியாதவர் போன்ருவார். காரணம் அவர் இருளில் இருக்கிருர். எனவே எதையும் தெளிந்து தெரிந்தவராகார். உள்ளம் தெளிந்தோர் இறை சந்நதியில் அமர்ந்து அவனிடமே நேரடியாகப் பாடம் கேட்கின்றனர். அல்லாஹ்வே நேரடியாக அவர்களுக்குப் பாடம் கற்பிக்கின்ருன்.

"யார் அல்லாஹ்வை அஞ்சுகிருரோ அவருக்கு (சந்தேகமென்னும் இருளை விட்டும்) வெளியாகும் இடத்தை ஆக்குகிருன். மேலும் அவருக்கு அவர் எண்ணுத திசையிலிருந்து (அறிவு ஞானங்களை) அளிக்கிருன்"
— திருக்குர்ஆன் 65 : 2

"அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். அவன் உங்கட்குக் கற்றுத் தருவான்"
— அல்குர்ஆன் 2 : 282

"நாம் அவருக்கு (ஹில்ருக்கு)க் கல்வியைப் படித்துக் கொடுத்தோம்."
— அல்குர்ஆன் 18 : 65

அல்லாஹ் (ஜல்), தானே அவர்கட்கு ஆசிரியனக ஆகிவிடுவதால் சகல விஷயங்களையும் புரிந்தவர்களாக — பல்கலை தெரிந்தவர்களாக — பன்மொழிப் புலமை பெற்றவர்களாக — மனித மொழிகள் தவிர, மற்ற மிருக இன மொழிகளையும் கூடத் தெரிந்தவர்களாக — இருக்கின்றனர்.

மஹ்பூப் ஸுப்ஹானி முஹ்யித்தீன் ஜீலானி(கத்)பதின்மூன்று கலைகளில் மிகப் பெரும் தேர்ச்சி பெற்றிருந்தார்கள். தப்ஸீர், ஹதீஸ்,.பிக்ஹு, கிராஅத், உசூல், இலக்கணம், தர்க்க சாஸ்திரம் மற்றும் பல கலைகளில் முப்பத்திமூன்று வருடங்கள் போதனை செய்தார்கள். அவர்களின் பொன் மொழிகளைக் கேட்டு எழுதுவதற்காக எப்போதும் நானூறுக்கு மேற்பட்ட எழுத்தாளர்கள் காத்திருப்பார்கள்.

நாகூர்மீரான் வலி (ரஹ்) கீமியா (இரும்பைத் தங்கமாக்குதல்), ஹீமியா (பிறர் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விடுதல்), சீமியா (மறைபொருள் அறிவித்தல்), ரீமியா (பல உருவெடுத்தல்) ஆகிய நான்கு கலைகளிலும் தேர்ச்சி பெற்றுத் தமது சீடர்களுக்கும் படித்துக் கொடுத்தார்கள்.

முத்துப்பேட்டையில் உறைந்திருக்கும் ஷேக்தாவூத் வலியுல்லாஹ் பெரிய வைத்தியராக விளங்கினார்கள். தக்கலை ஞானமேதை பீர்முஹம்மது வலியுல்லாஹ் தமிழ் இலக்கண இலக்கியத்திலும், சர ஓட்டம், நாடி சாஸ்திரம், மற்றும் வைத்தியக் கலையிலும் மிகப் பெரும் தேர்ச்சி பெற்றுப் பல நூல்கள் எழுதியுள்ளார்கள். இது போன்று, இறை நேசச் செல்வர்கள் எல்லாக் கலைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தனர். இன்றும் அவர்களின் அறிவு மக்களுக்குப் பயன் படுகிறது.

ஞான மேதைகள் கல்வியில் எந்த அளவு கைதேர்ந்திருந்தார்கள் என்பதைத் திருக்குர்ஆன் தெளிவாகக் காட்டுகிறது. நபிமார்களில் சிறந்த நபியாகிய மூஸா (அலை) அவர்கள், வலியாகிய ஹில்ரு (அலை) அவர்களிடம் பாடம் கேட்குமாறு அல்லாஹ் உத்தரவிட்டான். அவ்வுத்தரவுக்கு ஏற்ப மூஸா (அலை) சிரமம் பாராது அவர்களிடம் சென்று பாடம் கற்றார்கள்.

ஒவ்வொரு காலத்திலும் வாழ்ந்த ஞான மேதைகளின் கல்வித் தரத்தை அந்தந்தக் காலத்தில் வாழ்ந்த இமாம்கள், சட்ட மேதைகள் மிகமிகச் சிலாகித்துப் பேசியுள்ளனர். இமாமுனா ஷாபியீ (ரஹ்), இமாமுனா அஹ்மது (ரஹ்) ஆகிய இரு சட்ட மேதைகளும் அக்காலத்தில் வாழ்ந்த ஷைபானுர்-ராஈ (ரஹ்) என்ற ஞானமேதையைப்பற்றிப் புகழ்ந்து கூறியுள்ளார்கள். அவர்களிடம் இமாம் அஹ்மது தமது பிள்ளைகளை அனுப்பி, "நாங்கள் பெறாத மனத்தெளிவை இவர்கள் பெற்றுள்ளனர். ஆகவே அவர்களிடம் நெருங்கி வாழுங்கள்" எனக் கூறுவார்கள்.

## அவ்லியாக்களின் பணிகள்

இறுதித் தூதர் முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள், இவ்வுலகை விட்டுப் பிரிந்தபின் பூமி அல்லாஹ்வினிடம் அழுது கேட்டது: "யா அல்லாஹ்! இதுவரை என் மீது நபிமார்கள் உலவி வந்தார்கள். இறுதித் தூதருக்குப்பின் எந்த நபியும் என்மீது உலவப்போவதில்லை. அந்தத் துர்ப்பாக்கிய நிலைக்கு என்னை ஆளாக்காது என்னை அழித்துவிடு" எனக்கேட்டது. அதற்கு அல்லாஹ் (ஜல்), "உன்மீது இனி எந்த நபியும் உலவா விட்டாலும், எனது நேசர்களான அவ்லியாக்கள் உன்மீது உலவு வார்கள். அவர்களில் சிலர் ஆதம் (அலை) அவர்களைப் போன்றும், சிலர் நூஹ் (அலை) அவர்களைப் போன்றும், சிலர் இபுருஹீம் (அலை), மூஸா (அலை), ஈஸா (அலை), முஹம்மது (ஸல்) போன்றும் பணியாற்றுவார்கள்" எனக் கூறினான். எனவே அவ்லியாக்கள் அல்லாஹ்வின் கலீபாவாக — பிரதிநிதியாக — இருந்து, அன்பியாக்களின் பணிகளை இவ்வுலகில் செய்து வருகின்றனர்.

ஒவ்வோர் இரவும் ஹிராக் குகையில் தஹஜ்ஜுது நேரத்தில் ஒன்றுகூடி அந்தக் காலத்து "குதுப்"பின் தலைமையின்கீழ் அகில உலகிலும் நடைபெறும் அன்றாட நிகழ்ச்சிகளைப் பரிசீலித்து யார் யார் எந்தெந்தப் பகுதியில், எந்தெந்தப் பணிகளைச் செய்ய வேண்டும் என்ற முடிவுகளைத் தீர்மானிக்கின்றனர். அக்குழுவில், உலகில் வாழும் அவ்லியாக்களும், உலகிலிருந்து மறைந்துவிட்ட அவ்லியாக்களும் அங்கத்தினர்களாக இருக்கின்றனர். வருடத்திற்கொருமுறை லைலத்துல் கத்ரு இரவில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தலைமையின்கீழ் ஒன்றுகூடி ஒரு வருடத்திற்குள்ள நிகழ்ச்சிகளை முடிவு செய்கின்றனர். அந்த முடிவிற்கேற்பவே உலகிலும், கடலிலும், கரையிலும், காடுகளிலும், வனந்தரங்களிலும், விண்ணிலும் நடைபெறும் அத்தனை நிகழ்ச்சிகளும் அந்தந்தப் பகுதியைப் பொறுப்பேற்றுக் கொண்ட அவ்லியாக்களின் மேற்பார்வையிலே நடைபெறுகின்றன. இதைக்குறித்தே மஹ்பூப் ஸுப்ஹானி முஹ்யித்தீன் ஜீலானி அவர்கள், "பூமியில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிகளையும் தினம் தினம் எனக்குப் பூமி அறிவிக்கின்றது. என் அனுமதிக்கேற்பவே சூரியன் உதிப்பதும் அஸ்தமிப்பதும் நடைபெறுகின்றன" எனக் கூறியுள்ளார்கள்.

இப்பரந்த உலகில் பொறுப்பேற்றிருக்கக் கூடிய அவ்லியாக்கள் மிகச் சிலரே இருப்பதால் விரும்புமிடத்திற்கு மிகமிகக் குறைந்த நேரத்தில்செல்வதற்குள்ள ஆற்றலையும், இருந்த இடத்திலிருந்தே ஆங்காங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளைக் காணும் ஆற்றலையும்

அல்லாஹ் (ஜல்) அவர்களுக்கு வழங்கியிருக்கிறான். அந்த ஆற்றலின் மாதிரியாகவே இன்றைய விஞ்ஞான சாதனைகள் அமைந்திருப்பதைக் காணலாம்.

டெலிவிஷன் மூலமாக உலகத்தில் எங்கோ நடக்கும் நிகழ்ச்சியை நம்வீட்டின் அறையில் இருந்துகொண்டே பார்க்கும் ஆற்றலை நாம் இன்று பெற்றிருக்கிறோம். ஒலிபெருக்கி, தொலைபேசி மூலமாக வெகுதூரத்திலிருந்து பேசக்கூடியவருடைய பேச்சையும், அவர் உருவத்தையும் கூடப்பார்க்கவும் கேட்கவும் நம்மால் முடிகிறது. அட்லாண்டிக் மகாசமுத்திரம்போன்ற ஆழ்கடலுக்குக் கீழ் உள்ளவைகளை மேலிருந்துகொண்டே பார்க்கும் ஆற்றலும் விண்ணில். கிரகங்களில் உள்ளவைகளைப் பூமியிலிருந்தவாறே பார்க்கும் ஆற்றலும் மனிதன் விஞ்ஞானத்தால் பெற்றுவிட்டான். இவை அனைத்தும் ஒளியின் சக்தியினாலேயே நடைபெறுகின்றன.

உள்ளத்தின் ஒளியை ஏற்று, அதனால் முழுவதுமே ஒளிமயமாக மாறிவிட்ட அவ்லியாக்களும், இதே சாதனைகளை, இவற்றை விடப் பன்மடங்கு உயர்ந்ததாகப் பெற்றிருக்கின்றனர். "தய்யுல் அர்லு", "தய்யுல் வக்து" என்று சொல்லப்படக்கூடிய இருபெரும் சாதனைகள் தாம் அவை.

விண் வெளிக் கப்பல் எவ்வளவுக் கெவ்வளவு வேகமாகச் செல்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அங்குக் காலம் மெல்ல இழையும் நிகழ்ச்சிகள் மெல்ல நடைபெறும். ஒளியின் வேகமாகிய வினாடிக்கு 3,00,000 கிலோ மீட்டர் வேகத்தைக் கப்பல் எட்டிவிட்டாலோ நிகழ்ச்சிகள் யாவும் அங்கு நிகழா நிலையை எய்திவிடும்! அதாவது காலம் என்ற ஒன்று அங்கு இல்லாமல் மறைந்து விடும். ஒளியின் வேகத்தில் பூமியிலிருந்து புறப்பட்டுத் தொலைவிலுள்ள ஒரு விண்மீனுக்குச் சென்று திரும்பிய ஒருவன் புறப்பட்ட நேரத்திலேயே மீண்டும் திரும்பிவிட்டதாக எண்ணுவான் என்ற இத்தத்துவத்தை விஞ்ஞானம் இன்று நமக்குக் கற்றுத்தருகிறது. ஆனால் அவ்லியாக்கள் இப்பெரும் சக்தியைத் தங்கள் வாழ்க்கையில் மிகச் சாதாரணமாகச் செய்து காட்டினார்கள். பல்லாயிரக்கணக்கான மைல்களுக்குச் சென்று விட்டு அதே நிமிடத்திலேயே திரும்பவும் வந்து விடுவார்கள்.

நாகூர் வலி ஷாஹுல் ஹமீது (ரஹ்) அவர்களிடத்தில் சில கிறிஸ்தவர்கள் வந்து, 'பச்சைக் கிராம்புச் செடி இப்போதே எங்களுக்கு வேண்டும்' என வேண்டினர். அது போது அச்செடி தென்னாப்பிரிக்காவில்தான் இருந்தது. உடனே அதே வினாடியில்

வலியுல்லாஹ் அவர்கள் தனது திருக்கரத்தை இடது கரத்திற்குக் கீழே வைத்து முதுகுக்குப் பின்னுல் கொண்டு சென்று உடனே கையை எடுத்து, 'இதோ பெற்றுக் கொள்ளுங்கள்' என்று கொடுத்தார்கள்.

ஒரு சமயம் கடலில் வந்துகொண்டிருந்த ஒரு கப்பல் ஓட்டை யாகி விட்டது. எவ்வளவு முயன்றும் அடைக்க முடியாமல் தண்ணீர் குபு குபு என்று கட்டலில் புக ஆரம்பித்தது. மக்கள் அஞ்சி நடுங்கினர். சவரம் செய்து கொண்டிருந்த நாகூர் நாதர் அவர்கள் நாவிதனின் கண்ணுடியைக் கடலில் எறிகின்ருர்கள். அக் கண்ணுடி கப்பலின் ஓட்டையை அடைத்து விட்டது. சில தினங் கட்குப் பின் எந்த வித விபத்துமில்லாது கப்பல் கரை சேர்ந்தது. அக் கப்பலில் வந்த பிரயாணிகள் அந்தக் கண்ணுடியையும், பல பரிசுப் பொருட்களையும் அன்னுரிடம் கொண்டு வந்து கொடுத்து து ஆ பெற்றுச் சென்றனர்.

வலிமார்களே ஆட்சிப்பொறுப் பேற்று உலகை நடத்தி வரு வதால் அவர்கட்கு எல்லா உயிரினங்களும் அடங்கி, ஒடுங்கிப் பணிந்து நடக்கின்றன. வன விலங்குகளும், கடலில் வாழும் மச்ச இனங்களும் கூட அவர்கட்குக் கட்டுப்பட்டு நடக்கின்றன. "எவர் அல்லாஹ்விற்கு அஞ்சுகிருரோ அவருக்குச் சகலமும் அஞ்சும்"

இபுருஹீமுல் கவ்வாஸ் என்ற ஒரு பெரியார் தலைசிறந்த ஞானியாவார்கள். அவர்களைச் சந்தித்து வருவதற்காக ஒரு மார்க்க அறிஞர் அவர் தங்கியிருக்கும் வனத்திற்குச் சென்ருர். மஃரிபு தொழுகை நேரம் வந்தது. இப்ருஹீம் கவ்வாஸ் அவர்கள் இமா மாக நின்று தொழுகை நடத்திஞர்கள். உச்சரிப்புக்கள் சரியாக இல்லை. அதைக் கண்ட மார்க்க அறிஞர், நாம் இவரைப் பெரிதாக எடை போட்டு விட்டோம். அல்ஹம்து சூருவைக்கூட ஒழுங்காக உச்சரிக்கத் தெரியாதவராக இருக்கிருர். நமது இந்தப் பிரயாணம் சரியானதாக இல்லை, என மனதுக்குள் நொந்து கொண்டார். பிறகு மலங்கழிப்பதற்காகக் கொஞ்சம் தூரம் சென்றவர் திரும்ப ஓடோடி வந்தார். அதைக் கண்ணுற்ற பெரியார் இப்ருஹீம் அவர் கள் "என்ன?" என்று விசாரித்தார். "புலி ஒன்று என்னைத் துரத்தி வருகிறது. அதுகண்டு ஓடி வந்தேன்" என விருந்தினர் பதிலளித் தார். உடனே இப்ருஹீம் (ரஹ்) வெளியில் வந்து, 'விலங்கினமே! நமது விருந்தினருக்குத் தொல்லை கொடுக்கக் கூடாது என நாம் உங்களுக்குச் சொன்னதில்லையா?" என ஒரு சப்தமிட்டார்கள். புலி திரும்பி ஓடி விட்டது. விருந்தினரைப் பார்த்து அவர்கள் கூறிஞர்கள்: "நீங்கள் நாவைச் சுத்தப்படுத்தியுள்ளீர்கள்; புலிக்

குப் பயப்படுகிறீர்கள். நாங்கள் உள்ளத்தைச் சுத்தப்படுத்தினேம், எங்களைக் கண்டு புலி பயப்படுகிறது'' எனக் கூறி அவரது உள்ளத்தில் தோன்றிய தப்பெண்ணத்தைச் சுட்டிக்காட்டினர்கள்.

பெரும் அரசு புரிந்து துறவியாக மாறிய இப்ருஹீம் — பின் — அத்ஹம் (ரஹ்) அவர்கள், ஒரு சமயம் கடற்கரை ஓரத்தில் உட்கார்ந்து தமது கிழிந்த ஆடைகளைத் தைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த வழியாகச் சென்ற நண்பர் ஒருவர் அவர்களைப் பார்த்து, "இராஜ பதவியிலிருந்து விலகி துறவியாக மாறி என்ன கண்டீர்கள்?'' என ஏளனமாக விளித்தார். உடனே தம் கையிலிருந்த ஊசியைக் கடலில் தூக்கி எறிந்து, "ஓ, மச்ச இனங்களே! எனது ஊசியை எடுத்துக்கொண்டு வாருங்கள்'' என்று உத்தரவிட்டார்கள் இப்ருஹீம் (ரஹ்). அக்கணமே ஆயிரக்கணக்கான மீன்கள் ஒவ்வொன்றும் ஓர் ஊசியைத் தனது வாயில் எடுத்துக்கொண்டு வந்தது. அவற்றையெல்லாம் பார்த்து விட்டு, "இது எனது ஊசியல்ல'' எனக் கூறிவிட்டார்கள். திரும்பவும் அம்மீன்கள் வேறு ஊசியைக் கொண்டுவந்தன. அவற்றில் தமது ஊசியை அடையாளம் கண்டு எடுத்துக்கொண்டு, "நண்பரே! நான் அரசனுக இருக்கும்போது எனது கட்டளைக்கு இம்மீன்கள் கட்டுப்படுவதில்லை. இப்போதோ இவை என் கட்டளையை நிறைவேற்றச் சித்தமாக இருக்கின்றன'' என்று கூறினர்கள். இதுபோன்றே சகல படைப்புக்களும் ஞான மேதைகட்குக் கட்டுப்பட்டு வாழ்கின்றன.

## அவ்லியாக்களின் அந்தஸ்து

இறைநேசச் செல்வர்களான அவ்லியாக்களுக்கு அல்லாஹ் அளித்த இம்மாபெரும் சக்திகளைச் சிலர் கண்டும் கேட்டும் உண்மை விளங்காது அல்லாஹ்வைவிடவும் அவ்லியாக்களைப் பெரிதாக மதித்து அஞ்சுகின்றனர். நபிமார்களைவிடவும் பெரும் அந்தஸ்து உள்ளவர்களாக வலிமார்களை மதிக்கின்றனர். நபிமார்கள் மனிதர்களிலேயே மிகச் சிறந்தவர்கள். ஈருலக நாதர் முஹம்மது (ஸல்) அவர்களே படைப்பினங்களில் மிகச் சிறந்தவர்கள். அவர்கட்குப் பிறகு மற்ற நபிமார்கள். நபிமார்கட்குப் பிறகு முஹம்மது(ஸல்)வின் ஸஹாபாக்கள்! அதற்குப்பின் தாபியீன்கள்; அதன்பின் தபஉத்தாபிஈன்கள்; இமாம்கள். இவர்களுக்கெல்லாம் அந்தஸ்தில் குறைந்தவர்களே வலிமார்கள். குத்புல் அக்தாபு முஹ்யித்தீன் ஜீலானி (கத்) அவர்கள், ஸாபிஈ மத்ஹபில் இருந்து, அதன்பின் ஹன்பலி மத்ஹபில் சேர்ந்து வாழ்ந்தார்கள். ஆகவே யார் யாரை எப்படி மதிக்கவேண்டும் என உணர்ந்து நடப்பது அறிவுடைமையாகும்.

## ஸியாரத்துல் - குபூர் :

நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள்:

"நான் உங்களை கப்ருகளை ஸியாரத்து செய்வதை விட்டும் தடுத்திருந்தேன். நீங்கள் கப்ருகளை ஸியாரத்து செய்யுங்கள். அது மரணத்தை நினைவுபடுத்தும்." நூல் : முஸ்லிம்

"யார் தன் தாய் தந்தையருடைய, அல்லது அவ்விருவரில் ஒருவருடைய கப்ரை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஸியாரத்து செய்கிறாரோ அவருக்கு மன்னிப்பளிக்கப்படுகிறது. அவர் தாய் தந்தையருக்குக் கட்டுப்பட்டவராக எழுதப்படுகிறார்."

நூல் : பைஹகீ

கப்ருகளை ஸியாரத்து செய்வது சுன்னத்தான ஓர் இபாதத் தாகும். ஆனால் இன்று மக்கள் அதில் இஸ்லாத்திற்குப் புறம்பான பல செயல்களைச் செய்வதன் மூலம் அதை ஒரு பாவமான காரியமாக மாற்றிக்கொண்டு விட்டார்கள். தவ்ஹீதிற்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்ட அவ்லியாக்களின் தர்ஹாக்களில் நெற்றியைத் தரையில் வைத்து சுஜூது செய்வதின் மூலமாக இஸ்லாத்தின் அடிப்படையையே தகர்த்தெறிகின்றனர்.

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் சுன்னத்தைத் தம் உயிரிலும் மேலாக மதித்த நாதாக்களின் மண்ணறைகளில் சுன்னத்திற்கே புறம்பான, பித்அத்தான காரியங்களை அளவின்றிச் செய்கின்றனர். சுவர்களையும், அங்குப் பதிக்கப்பட்டுள்ள கற்களையும், கதவுகளையும், நிலைகளையும் தடவித் தடவி முத்தமிட்டு அவற்றில் ஏதோ புண்ணியம் இருப்பதாகக் கருதிக்கொள்கின்றனர். ஆண்கள் மட்டுமல்லாமல் பெண்களும் அங்குச் சென்று மிக பக்திச் சிரத்தையுடன் நடந்து கொள்கின்றனர்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கப்ருகளைத் தரிசிக்கச் செல்லும் பெண்களைச் சபித்திருக்கிறார்கள். ஆதாரம் : திர்மிதீ

அன்னை ஆயிஷா (ரலி) அவர்களின் வீட்டிலேயே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், அவர்கட்குப் பின் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களும், அவர்கட்குப் பத்து வருடங்களுக்குப் பின் உமர் (ரலி) அவர்களும் அடக்கமானார்கள்.

அன்னை ஆயிஷா (ரலி) கூறுகிறார்கள்: "என் கணவரான நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் என் தந்தையான அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களும் அடக்கமாகி இருக்கும்போது

அவ்வறைக்குள் நான் சாதாரணமாகப் போவதுண்டு. ஆனால் உமர் (ரலி) அவர்கள் அடங்கியபின் கோஷா முறையுடனேயே அவ்வறைக்குள் செல்வேன்.''
ஆதாரம் : அஹ்மது

பெண்கள் தம் கணவர், அல்லது தான் திருமணம் முடித்துக் கொள்வதற்கு ஹராமான பந்துக்கள் அல்லாதவர்களின் கப்ரை தரிசிக்கச் செல்வதற்கு மார்க்கத்தில் அனுமதியில்லை. இஸ்லாத்தைக் கட்டிக் காப்பதற்காகத் தங்கள் வாழ்நாள் பூராவையும் அர்ப்பணித்துக் கொண்ட இறை நேசர்களான அவ்லியாக்கள், இவர்கள் வருவதைப் பற்றியும், இவர்கள் அங்கு நடந்துகொள்ளும் முறைகளைப் பற்றியும் மிகமிக வருந்துவர்.

கப்ருகளை ஸியாரத்துச் செய்யும் முறை என்னவென்றால், ''மூமின், முஸ்லிம்கள் வாழும் இடத்தில் வசிப்பவர்களே! உங்களின்மீது சாந்தி உண்டாகுக! அல்லாஹுத்தஆலா நம்மில் முந்திவிட்டவர்களுக்கும், பிந்தியவர்களுக்கும் அருள்புரிவானாக! நாங்களும் அல்லாஹ் நாடும்போது உங்களுடன் சேரக்கூடியவர்களாக இருப்போம்'' என்று கூறிவிட்டு, அல்லாஹ்வினிடத்தில் அங்கு அடங்கியிருப்பவர்களுக்கு மன்னிப்பையும், உயர் பதவியையும், தரும்படி வேண்டி, ''எல்லாம்வல்ல இறைவா! இவ்வலி நாதரின் பரக்கத்தைக் கொண்டு எனது இன்னின்ன தேவைகளை நிறைவேற்றித் தந்தருள்வாயாக!'' என்று பிரார்த்திக்க வேண்டும்.

பொருள் வேண்டுபவரும், அருள் வேண்டுபவரும், குழந்தை வேண்டுபவரும், உடல் நலம் வேண்டுபவரும், மற்றும் எந்தத் தேவைகளை வேண்டுபவரும் அல்லாஹ்வினிடமே கேட்க வேண்டுமே தவிர அவ்லியாக்களிடமல்ல. அவ்லியாக்களும் இறைவனிடம் கேட்டே நமக்குப் பெற்றுத் தருகின்றனர். தவ்ஹீதையும், சுன்னத்தையும் கடைபிடித்து வாழ்வோமாக! ஷிர்க்கையும், பித்அத்தையும் அழிப்போமாக!!

---

வறுமைக்கு ஓர் ஒளி உண்டு — நீ அதை மறைக்கும் காலமெல்லாம்; நீ அதை வெளியாக்கி விட்டால் அதன் ஒளி போய் விடுகிறது.
— அபூ மத்யனில் மக்ரிபீ (ரஹ்)

மறுமை நாளில் உனது கப்ரிலிருந்து ஒளிச்சுடருடன் நீ எழ விரும்பினால் இறைவனின் படைப்புகளில் எவருக்கும் எத்தீங்கும் செய்யாதே.
— அபுல் ஹஸன் அலி (ரஹ்)

# இறைநேசச் செல்வர்களும் தென்னாடும்

*எம். ஆர். எம். முஹம்மது முஸ்தபா, பி. ஏ.*

இன்று இந்தியாவில் ஏறத்தாழப் பத்துக்கோடி முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். இவர்களின் முன்னோர் அனைவரும் அரேபியாவிலிருந்து வந்தவர்கள் அல்லர். அப்படி வந்தவர்களாய்ச் சிலர் இருக்கலாம். ஆனால் இந்த மண்ணின் புதல்வர்களே பெரும்பாலானவர்கள் ஆவர். அவர்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள் என்பது பற்றித் தவறான கருத்து ஒன்று நிலவுகிறது. இந்தியாவை ஆண்டோராய் 800 ஆண்டுகளுக்குமேல் முஸ்லிம்கள் இருந்ததால் அரசு அதிகாரத்திற்கு அஞ்சியோ, அரசின் தயவை எதிர்பார்த்தோ அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டனர் என்பதே அந்தக் கருத்து. அப்படி ஒருசிலர் இருந்திருக்கலாம். ஆனால் பெரும்பாலானவற்றைப் பற்றி அப்படிக் கூறுவது அந்த மக்களை அவமதிப்பதாகும்.

உண்மையில் இந்தக் கருத்து எத்துணை அபத்தமானது என்பதை உணர்த்துவதற்கு உலகில் எத்தனையோ நாடுகள் இருக்கின்றன. முஸ்லிம் ஆட்சி இருந்திராத அந்நாடுகளில் முஸ்லிம்கள் பெருமளவில் வாழ்கிறார்கள். உதாரணத்திற்கு மலேசியா, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், சீனா, திபெத்து ஆகிய நாடுகளைக் குறிப்பிடலாம். இந்தோனேஷியா, மலேசியா ஆகிய நாடுகளில் இஸ்லாம் வருவதற்குமுன் இந்து மதத்திற்குத்தான் ஆதிக்கம் அதிகமிருந்தது. இந்நாடுகளின் சில பகுதிகளை இந்து மத அரசர்கள் தாம ஆண்டுகொண்டிருந்தனர். அவ்வாறாயின் இந்தியாவிலும் இந்நாடுகளிலும் இஸ்லாம் எப்படித்தான் பரவியது என்னும் கேள்வி எழலாம். அதற்கு அளிக்கத்தகுந்த பதில்,

"அமைதியான மார்க்கப் பிரச்சாரகர்கள் மூலம்தான்" என்பது தான். அத்துடன் ஏராளமான முஸ்லிம்களும் இங்கு வந்து இந்த மண்ணின் மைந்தரானுர்கள். இப்படி வந்து தங்கியவர்கள் வீரர்களும், வணிகர்களும் ஆவர். இந்தியா மீது படையெடுத்துவந்த அரசர்களுடன் பல்லாயிரக்கணக்கான வீரர்கள் வந்தனர். அவர்கள் இந்த நாட்டிலே தங்கி இந்த மண்ணிலேயே புதைந்தார்கள். சிந்து, பஞ்சாப் பகுதிகளில் இம்மாதிரி வந்து தங்கியவர்கள் அதிகம். இவர்கள் தரைவழியாக வந்தவர்கள். தென் இந்தியக் கடற்கரை ஊர்களுக்கு, அரபு அவனிக்கு இஸ்லாம் வருமுன்பே அரபிகள் வந்திருக்கிருர்கள். அவர்கள் வந்ததன் நோக்கம் வாணிபம். இவர்கள் கடல் மார்க்கமாய் வந்தவர்கள்.

தொலேவைப்பற்றிக் கவலேப்படாது கடலில் கலம் செலுத்திச் சீனுவரை சென்று அரபிகள் வாணிபம் செய்தனர். வணிகப் பொதி சுமந்த அரபிக்கப்பல் சீனுவரை சென்று திரும்பிக்கொண்டிருந்தது. அந்தப் பயணத்தில் அவர்கள் தென்னிந்தியாவிலிருக்கும் மேற்குக் கடற்கரை ஊர்களுக்கும், கிழக்குக் கடற்கரை ஊர்களுக்கும் வந்தார்கள். இங்கெல்லாம் பொருள் விற்ருர்கள்; பொருள் கொண்டார்கள்; இவர்கள் மக்களேயும் சந்தித்தார்கள்; மன்னர்களேயும் கண்டார்கள். அரபிகள் கொணரும் அரிய பொருட்களே வாங்கக்கூடியவர்களாய் அரசர்களே இருந்தனர். அத்துடன் அந்நியவர் எவரும் வரின் அவரைப்பற்றி அரசருக்கு அறிவிக்கவும்பட்டது. இந்தக் காரணங்களால் அரபிகள் தென் இந்தியக் கடற்கரைகளின் சொந்தக்காரர்களாகிய சேர, சோழ, பாண்டிய அரசர்களே அணுகவும், அவர்களின் அன்பைப் பெறவும் இயன்றது. அவர்கள் வந்து இறங்கும் வள நகரங்களாகக் கொற்கை, காயல், தொண்டி, மதுரை, காவிரிப்பூம்பட்டினம் ஆகியவை இருந்தன. மதுரையிலும், காவிரிப்பூம்பட்டினத்திலும் அரபிகள் வந்து தங்கும் தனிப்பகுதிகளும் இருந்தன. இவர்கள் அங்கெல்லாம் சோனகர், யவனர் என்று அழைக்கப்பட்டனர். கி. மு. 178-ஆம் ஆண்டு தென்னுடு வந்த கிரேக்கப் பயணி அகதார் சைட்ஸ் தமிழகத்தில் சபேயியா (Sabaea) என்னும் ஓர் ஊர் இருந்ததாயும், அங்கு அரபிகளுக்கு அதிகச் செல்வாக்கு இருந்ததாயும் கூறுகிருர்.

இப்படிப் பொருட்களேச் சுமந்துவந்த அரசர்கள் பிறகு போதனேகளேச் சுமந்து வரலானுர்கள். கண்டவற்றையெல்லாம் கடவுள் என்று நம்பிய மையிருள் வாழ்க்கை மாய்ந்திட, அரபுகள் புத்துயிர் பெற்ருர்கள். அடரிருளில் நல்வழி அறவே தெரியாது அவதிப்பட்ட அவர்கள் முன், புலர் கதிர்போல் அண்ணல் நபி

(ஸல்) அவர்கள் தோன்றி, "ஒருவன் இறை, அவன் உருவ மற்றவன்" என்னும் போதனையைப் புரிந்தனர். அதனை ஏற்றதும் புது மனிதர்களாயான அரபுகள், நம்மிடமுள்ள அரிய பொருளைப் பிறர்க்கு அளிக்கவேண்டுமென்ற ஆவலால் இஸ்லாத்தை இங்குள்ளவர்களுக்கும் கொண்டுவந்து வழங்கினர்கள். உருவ வழிபாட்டில் ஈடுபட்டிருந்தாலும் ஓர் இறை வழிபாடு இந்நாட்டு மக்களுக்கு உடன்பாடாயிருந்தது. எனவே, அவர்கள் அரபுகள் வழங்கியதை அந்நியப் பொருளாய்க் கருதாமல் அன்புடன் ஏற்றுக்கொண்டனர். இப்படித்தான் தென்னாட்டில் இஸ்லாம் பரவியது.

இந்தச் சமயத்தில் இந்தியாவின் சிந்துப் பகுதியில் முஸ்லிம்கள் சிலர் வருகை தந்து அரசுகள் ஏற்படுத்தினர். ஆனால் அவர்களின் நோக்கம் மதப்பிரச்சாரம் அன்று. ஏனெனில், அவர்கள் தங்களுடன் மதப்பிரச்சாரகர் எவரையும் கொண்டுவர வில்லை. அவர்களுக்குப் பிறகு முகலாய அரசர்கள் வந்தார்கள். அவர்கள் இந்துக் குடிமக்களை ஆண்ட முஸ்லிம் அரசர்களாயிருந் தனர். அவர்கள் மதமாற்றத்தில் அணுவளவும் ஆர்வம் கொள்ள வில்லை. அதனுல்தான் அவர்களின் தலைநகரங்களாயிருந்த டில்லி, ஆக்ரா ஆகிய ஊர்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மை யினராய் என்றும் இருந்ததில்லை. முஸ்லிம்கள் பெரும்பான்மை யினராய் இருந்த இடங்களெல்லாம், பெரும்பாலும் முஸ்லிம் அரசர் களின் ஆதிக்கம் செல்லாத இடங்கள்தாம். அதற்குரிய உதாரண மாய்த் தென்னாட்டையும், வங்காளத்தையும் குறிப்பிடலாம்.

இங்கு இஸ்லாத்தைப் பரப்பியவர்களெல்லாம் அரபு நாட்டி லிருந்து வந்த மதப்பிரச்சாரகர்கள்தாம். அவர்கள் இங்குப் பெருவெற்றிபெறக் காரணங்கள் சில இருந்தன. ஒன்று, இங்கி ருந்த மக்கள் இறை ஒன்று என்னும் நம்பிக்கை கொண்டிருந்தது. மற்ருென்று, பிறப்பால் ஏற்படுவது உயர்வு-தாழ்வு என்னும் கோட்பாடு இங்குக் குடிகொண்டிருந்தது. இவை இரண்டும் இஸ்லாமியப் பிரச்சாரகர்கள் தம் பணியை எளிதாக்கின. இவர்கள் போதனையுடன் இவர்களின் வாழ்க்கை முறைதான் மக்களை இஸ்லாத்தின்பால் அதிகம் ஈர்த்ததென்று சொல்லலாம். இத் தகைய உத்தமர்களின் பாதம்படாத ஊரே கிடையாது என்று கூடக் கூறமுடியும். ஊர், பேர் தெரியாத இவர்களில் எத்தனையோ பேரின் அடக்க இடங்கள் தென்னாட்டு மண்ணில் வானத்துத் தாரகைகள்போல் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன.

இப்படி வந்தவர்களில் முக்கியமானவர்கள்—ஏன் முதலா மவர்கள் என்றுகூடக் கூறலாம்—தமீம் அன்சாரியும், உக்காஸா

சாஹபியும் ஆவர். அவர்கள் இருவரும் அண்ணலெம் பெருமானரைக் கண்ணாரக் காணும்பேறு பெற்றவர்கள்; அவர்களின் தோழர்களாயிருந்தவர்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்களின் காலத்திலேயே இப்புண்ணிய பூமி போந்து, இஸ்லாமியப் பிரச்சாரத்தை அவர்கள் செய்தார்கள். மூச்சு இருக்கும்வரை இறைப் பணி செய்துவிட்டுத் தம் வாழ்வை அவர்களிருவரும் இங்கேயே முடித்துக்கொண்டார்கள். தமீம் அன்சாரி (ரலி) அவர்கள் அடக்க இடம் சஆதத் பந்தர் என்னும் கோவளத்திலும், உக்காஸா சஹாபி (ரலி) அவர்களின் அடக்க இடம் முகம்மது பந்தர் என்னும் பரங்கிப்பேட்டையிலும் இருக்கின்றன. ஒன்பதாம் நூற்ருண்டில் தமிழகம் வந்த பிரபல வரலாற்ருசிரியர்களான இப்னு குர்தாத் பாஹ்வும், மஸ்ஊதியும் அம்மான், பஸரா ஆகிய நகரங்களைச் சார்ந்த அரபிகளைத் தாங்கள் கண்டு அளாவளாவியதாக எழுதியுள்ளார்கள்.

அதே நூற்ருண்டில் இலங்கையிலிருக்கும் ஆதம் மலையைப் பார்க்க அரபிகள் சிலர் வந்தனர். வானுலகிலிருந்து வெளியேற்றப்பட்டு, இறை ஆணையால் பூமிக்கு வந்த ஆதம்(அலை)அவர்கள் சேர்ந்த இடமாக அந்த மலையை அரபிகள் நம்பினர். அவர்கள் இலங்கை செல்லும் வழியில் மலையாளக் கரையிலுள்ள கொடுங் கோளூர் வந்திறங்கினுர்கள். அந்நிய நாட்டவர் சிலர் தம் ஊரில் வந்து இறங்கியிருப்பதையறிந்த சேரமான் பெருமாள் என்னும் அப்பகுதி அரசர், அவர்களை அழைத்துவரும்படி ஆணையிட்டார். அந்த யாத்திரிகர் குழுவிற்குத் தலைவராய் ஷெய்க் ஷரப் இப்னு மாலிக் என்பவர் இருந்தார். அந்தக் குழுவில் அவரின் உறவினரான மாலிக் இப்னு தீனரும், சகோதரர் புதல்வர் மாலிக் இப்னு ஹபீபும் இருந்தனர். அவர்கள் அரசரைக் கண்டார்கள். அவரிடம் அவர்கள் தாங்கள் சார்ந்திருந்த மதத்தைப்பற்றி எடுத்துரைத்தார்கள். அந்த மதத்தைக் கொண்டுவந்த அண்ணல் நபி (ஸல்) அவர்களைப்பற்றி எடுத்துச் சொன்னுர்கள். அவர்களின் வருகைக்குமுன் தாங்கள், கண்டதையெல்லாம் கடவுள் என நம்பி வாழ்ந்ததையும், ஒழுக்கம் வாழ்வில் ஒரு சிறிதுமின்றி, விலங்கினும் இழிந்தவர்களாய் இருந்ததையும், சிறிய பிழை செய்ததற்காய்ப் பரம்பரையாகப் போரிட்டுப் பாழ்பட்டுக் கிடந்ததையும், பெற்ற பெண்குழந்தையைப் பிறனுக்கு மனைவியாக்குவதா என்னும் கர்வத்தில் அவர்களைக் கொன்றெழித்து வந்ததையும் உளம் உருகக் கூறினுர்கள். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வந்தபின் தாங்கள் மாக்கள் நிலையினின்றும் மாறி, மனிதர்களாய் ஆகிவிட்டதாயும் அவர்கள் உவகை பொங்க உரைத்தார்கள்.

அரசர், அரபிகள் கூறியவற்றையெல்லாம் இறும்பூதெய்திய வண்ணம் கேட்டார். அவர் அசையவில்லை; அவர் உள்ளம் அசைந்தது! அதுவும் இஸ்லாத்தின்பால் அசைந்தது! இறைவனின் உண்மை மார்க்கம் அதுதான் என உணர்ந்தார். அந்த மனிதப் புனிதர் பிறந்த மண்ணையும், அவர் கொண்டுவந்த மார்க்கம் வளரும் நாட்டையும் பார்க்க ஆவல் கொண்டார். ஆதம் மலையைப் பார்த்துவிட்டுத் திரும்பும்போது, தம்மையும் அவர்களுடன் அழைத்துச் செல்லவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். அவ்விதமே செய்வதாய் அவர்களும் ஒப்புக் கொண்டனர்.

அந்த அரபுகள் ஆதம் மலையைப் பார்த்துவிட்டுத் திரும்பினர்கள்; அரசரைக் கண்டார்கள். அவர்களுடன் அரசரும் கப்பல் ஏறிவிட்டார். அரபுநாடு சென்று, அங்குச் சிலகாலம் வாழ்ந்த பின் தாய்நாடு திரும்பி, இஸ்லாமியப் பிரச்சாரம் செய்யவேண்டும் என்பதுதான் அவர் விருப்பம். ஆனல் அவர் விரும்பியபடித் தாய்நாடு திரும்பவில்லை. அங்கேயே நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டார். அவரின் அடக்க இடம் அரேபியக் கடற்கரையில் 'ஸபர்' என்னும் இடத்தில் இருக்கிறது. அங்கிருக்கும் கல்லில் அப்துர் ரஹ்மான் அஸ்ஸாமிரீ ஹிஜ்ரி 212-ல் அங்கு வந்து 216-ல் இறந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர் இறக்குமுன், மலையாளத்திற்குச் சென்று, தம் அரசை ஆளுவோரிடம் தம் கடிதத்தைக் கொடுத்து உதவி பெற்றுக் கொள்ளுமாறு தம்மை அழைத்து வந்த அரபிகளிடம் கூறினர்.

அவ்விதமே அவர் எழுதிக் கொடுத்த கடிதத்துடன் ஷெய்க் ஷரப் இப்னு மாலிக்கும் அவரின் தோழர்களும் கொடுங்கோளூர் வந்த அரசப் பிரதிநிதியிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்தனர். அந்தக் கடிதம் அவர்களுக்கு அன்பான வரவேற்பைப் பெற்றுத் தந்தது அந்தப் பிரதிநிதி தந்த நிலத்தில் அவர்கள் ஒரு பள்ளிவாயிலைக் கட்டினர்கள். மாலிக் இப்னுதீனர் மலையாளத்திலேயே தங்கத் தீர்மானித்தார். மாலிக் இப்னு ஹபீப் மலையாளம் எங்கும் பள்ளிவாயில்கள் கட்டவேண்டும் என்னும் எண்ணத்துடன் அங்கிருந்து கிளம்பினர். தம் மனைவி மக்களுடன் கொல்லம் வந்து சேர்ந்த அவர், அங்கு ஒரு பள்ளிவாயிலை எழுப்பினர். அங்கேயே தம் மனைவியை இருக்கச் சொல்லிவிட்டு, அவர் ஹிலிமராவிற்குச் சென்று அங்கும் ஒரு பள்ளிவாயிலைக் கட்டினர். இவ்விதம் ஏழு இடங்களில் பள்ளிவாயில்களைக் கட்டிவிட்டு அவர் கொடுங்கோளூர் வந்துசேர்ந்தார். சில காலம் சென்றபின் அந்த ஏழு பள்ளிவாயில்களுக்கும் சென்று தொழுதுவிட்டுத் திரும்பினர். அவரைத் தொடர்ந்து பல அரபிக் குடும்பங்கள் மலையாளத்திற்கு வந்து

குடியேறின. அரேபியாவிலிருந்தும் வேறு இடங்களிலிருந்தும் வந்திருந்த இஸ்லாமிய பிரச்சாரகர்களைத் தாம் மலையாளக் கடற்கரையிலுள்ள பல இடங்களிலும் பார்த்ததாக உலகம் சுற்றிய முஸ்லிம் யாத்திரிகர் இப்னு பதூதா கூறுகிறார். அந்த அரபிகளின் வழிவந்தவர்களே மாப்பிள்ளை முஸ்லிம்கள் ஆவார்கள். அவர்கள் மலையாள மக்கள் எண்ணிக்கையில் ஒரு கணிசமான அளவு இருந்தனர். அவர்கள் தம்மை மற்ற மக்களிலிருந்து வேறுபடுத்திக் கொள்ளவில்லை. தாடிகளிலிருந்தும் தலைப்பாக்களிலிருந்துமே அவர்களை முஸ்லிம்கள் என்று அடையாளம் தெரிந்து கொள்ள இயன்றது.

அவர்களைப் போலவே ஒன்பதாம் நூற்றாண்டில் எகிப்தில் வாழ்ந்த சில அரபிக் குடும்பங்கள் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுபின் அக்கிரமங்களுக்கு அஞ்சி, பாண்டிய நாடுவந்து சேர்ந்தனர். அப்பொழுது பாண்டிய நாட்டை ஆண்ட அரசரும் அவர்களுக்கு அபயம் நல்கிப் பல்வேறு உரிமைகளும் சாசனங்களும் வழங்கினார். அவர் வழங்கிய தாமிரப் பட்டயம் ஒன்றில் பின்வருமாறு பொறிக்கப்பட்டுள்ளது: "அரபு நாட்டு மிஸ்று (எகிப்து) தேசாதிபதியின் கொடுங்கோலுக்கு அஞ்சி மரக்கல யாத்திரையாய் கர்த்தர்களின் தேசச் செம்பி நாட்டில் பாசறை வகுத்து கர்த்தர்களின் சமூகம் கொடுத்து, அந்நாட்டில் குடியேறி இருக்கத் தாமிரப்பட்டயம் கொடுக்கும்படிக் கேட்டுக் கொண்டவர்களின் வம்சமும் எண்ணிக்கையும்..." இப்படி வந்தவர்களின் தலைவராக முகம்மது கல்ஜி என்பவர் இருந்தார். அவர்களின் வழித்தோன்றல்கள் இன்றும் காயல் பட்டினத்தில் வாழ்கின்றனர். பதினொன்றும் நூற்றாண்டில் தென்னாடு வந்த மண்நூல் நிபுணரான அல்இத்ரீஸும், பதின்மூன்றும் நூற்றாண்டில் இந்நாடு வந்த திமிஷ்க்கைச் சேர்ந்த அபுல் பிதாவும், முஸ்லிம்கள் இங்கு செல்வாக்குடன் வாழ்கின்றனர் என்றும், தங்களின் கலைகளைத் தமிழர்களுக்குக் கற்றுக் கொடுத்துத், தமிழர்களின் கலைகளைத் தாங்கள் கற்றுக் கொண்டார்கள் என்றும் எழுதிவைத்துச் சென்றிருக்கின்றனர்.

தமிழ் நாட்டிற்கு வந்து இஸ்லாமியப் பிரச்சாரம் செய்தவர்களில் தமீம் அன்சாரி, உக்காஸா சஹாபி ஆகிய இருவருக்கும் அடுத்தபடியாக முக்கியமானவர்கள் சையித் நத்ஹர் ஷாஹ் ஆவார்கள். அவர்கள் கி. பி. 969 முதல் 1039 வரை உயிர் வாழ்ந்தவர்கள். அவர்கள் பாரசீகத்திலும் வடஇந்தியாவிலும் பல காலம் இஸ்லாமியப் பணிபுரிந்து விட்டுத் தென்னாடு வந்தார்கள். அவர்களின் போதனை கேட்டு ஏராளமானவர்கள் இஸ்லாத்தைத் தழுவினர். அவர்களின் அடக்கத்தலம் திருச்சிராப்பள்ளியில்

உள்ளது. பன்னிரண்டாம் நூற்றுண்டின் இறுதியில் சையித் இபுராஹீம் அவர்கள் மதீனுவிலிருந்து தமிழ் நாட்டிற்கு வந்தார் கள். அவர்கள் பிறந்த ஊர் மதீனுவுக்கருகில் உள்ளது. அவர்கள் 23,000 பேருடன் ஜித்தா துறைமுகத்தில் கப்பலேறி மேலைக் கடற் கரையில் இருந்த கண்ணனூர் வந்து சேர்ந்தனர். பெருங் கூட்டமாய் அவர்கள் வந்ததை அறிந்த ஊர் மக்கள், "நீங்கள் வந்ததன் நோக்கம் என்ன?" என வினவியபோது, "இஸ்லாமியப் பிரச்சாரத்தைத் தவிர்த்து வேறு ஒன்றுமில்லை" என்று அவர்கள் விடையிறுத்தனர். சையித் இபுராகீம் அவர்கள் தம்முடன் வந்தவர்களைப் பல பாகங்களுக்கும் இஸ்லாமியப் பிரச்சாரம் செய்ய அனுப்பிவைத்தனர். அவர்கள் வந்த சமயத்தில் பாண்டிய நாட்டு அரச குடும்பத்தில் குழப்பம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. அதில் ஒரு கட்சியினர் சையித் இபுராகீம் அவர்களின் உதவியை வேண்ட, அவர்களின் கட்சி நியாயமாக இருக்கக் கண்டு அவர் களுக்கு உதவி செய்தார்கள் சையித் இபுராகீம் அவர்கள். அதன் பயனுக, பாண்டிய நாட்டின் ஒரு பகுதியை ஆளும் வாய்ப்பு அவர்களை வந்தடைந்தது. அவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் இஸ்லாமிய ஆட்சி என்றுல் இப்படித்தான் இருக்கும் என்று கூறத் தக்கவிதம் ஆட்சிபுரிந்தனர். அதன் பின் ஏற்பட்ட சண்டை ஒன்றில் அவர்கள் ஷஹீதானுர்கள். அவர்களின் புனித உடல் ஏர்வாடியில் அடக்கம் செய்யப்பட்டது. சையித் இபுராகீம் அவர் களின் சிறப்பான ஆட்சியைப் பாராட்டி, பாண்டிய அரசர் அவர்கள் வழித்தோன்றல்களுக்கு மான்யங்கள் வழங்கினுர். மதுரை நகரில் உள்ள காஜிமார் குடும்பத்தினர் சையித் இபுராகீம் அவர்களின் வழி வந்தவர்களே. அவர்கள் தம் குழந்தைகளுக்குப் பெயரிடும் போது இபுராகீம் என்னும் பெயரையும் சேர்க்காமல் இடுவதில்லை.

இதன் பின் 13-ஆம் நூற்றுண்டில் சில அரபிக் குடும்பங்கள் சையித் ஜமாலுத்தீன் அவர்களின் தலைமையில் எகிப்திலிருந்து புறப்பட்டுக், காயல்பட்டினம் வந்துசேர்ந்து அங்கேயே குடியேறின. அப்பொழுது பாண்டிய நாட்டைச் சுந்தரபாண்டியர் ஆண்டு வந்தார். அவர் சையித் ஜமாலுத் தீன் அவர்களை ஆதரித்ததுடன், குதிரை வாணிபத்தின் தனிப்பெரும் உரிமையையும் வழங்கினுர். அவரின் சகோதரரான சையித் தகிய்யுத்தீனின் அறிவாற்றலைக் கண்டு, அவரைத் தம் அமைச்சராகவும் ஆக்கிக் கொண்டார். அவர் கி. பி. 1286-ல் சையித் ஜமாலுத்தீனைச் சீனப் பேரரசர் குப்லெய்கானின் அவைக் கும் தூதுவராக அனுப்பிவைத்தார். இலங்கைப் படையெடுப்பின் போது, தம் தானையின் தலைவராகவும் சையித் ஜமாலுத்தீனையே

நியமித்தார். சையித் ஜமாலுத்தீன் பாண்டிய நாட்டிற்குப் பல்வேறு முறைகளில் செய்த பணியைப் பாராட்டிக், காயல் கிராமத்தையும் சையித் ஜமாலுத்தீனுக்கு அன்பளிப்பும் செய்தார். அத்துடன் அவர் நின்றுவிடவில்லை. தமக்குப்பின் பாண்டிய நாட்டு அரசு கட்டிலில் அவரே ஏறவேண்டும் என்றும் ஏற்பாடுசெய்துவிட்டு உயிர்நீத்தார். அவ்வாறே சையித் ஜமாலுத்தீன் பாண்டிய நாட்டு அரியணை ஏறினர். அவர் அப்பொழுது மலிகுல் இஸ்லாம் சுல்தான் சையிது ஜமாலுத்தீன் என்று அழைக்கப்பட்டார். அவரின் வழிவந்தவர்களே "பிரபு" என்னும் பட்டம்தாங்கி காயல்பட்டினத்தில் வாழ்ந்துவருகின்றனர்.

பதினாறும் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் இஸ்லாமிய பிரச்சாரம் செய்தவர்கள் ஷாஹுல் ஹமீது ஆண்டகை ஆவர். அவர்கள் பிறந்தது வடஇந்தியாவிலுள்ள மாணிக்கப்பூர் ஆகும். அவர்கள் பல இடங்களுக்கும் சென்று இஸ்லாமியப் பிரச்சாரம் செய்துவிட்டு நாகூரில் வந்து தங்கினார்கள். அவர்கள் திருமணம் செய்துகொள்ளவில்லை. அவர்களின் வளர்ப்பு மகனார் முகம்மது யூசுப் அவர்களின் வழிவந்தவர்களே இன்று நாகூரில் வாழும் சாகிப்மார்கள் ஆவர். பாபா பக்ருத்தீன் என்பவர்கள் ஸீஸ்தான் நாட்டு அரசராயிருந்தவர்கள். அவர்கள் அரசைத் தம் தம்பியிடம் ஒப்படைத்துவிட்டு இஸ்லாமியப் பிரச்சாரம்செய்ய இந்தியாவிற்கு வந்தார்கள். அவர்கள் நத்ஹர்வலீ அவர்களைச் சந்தித்து அவர்களின் மாணவரானார். நத்ஹர் வலி அவர்கள் பாபா பக்ருத்தீன் அவர்களுடன் இஸ்லாமியப் பிரச்சாரகர்களை அனுப்பிவைத்தனர். பாபா பக்ருத்தீன் அவர்கள் இப்படிப் பிரச்சாரம் செய்துவரும்போது பேனுகொண்டாவில் இறந்தனர். அவர்களின் அடக்கத்தலம் இன்றும் அங்குள்ளது.

இஸ்லாமியக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு முஸ்லிம் ஆக முன்வருபவர்களுக்கு ஆதரவு அளித்த ஒரு நிலையம் பொன்னானியிலிருந்த மஊனத்துல் இஸ்லாம் சபையாகும். அது ஆரம்பிக்கப்பட்டு ஆண்டுகள் பல ஆகின்றன. அங்குசென்று இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்கள் எண்ணற்றவர்கள் ஆவர். அப்படி வந்தவர்களில் தீயர்கள் எனப்படும் கீழ்ச்சாதியினருடன் மேல்சாதியினர் எனக்கருதப்படும் நாயர்களும் இருந்தனர். கிறிஸ்தவர்கள் பலருங்கூட அங்குவந்து இஸ்லாத்தைத் தழுவிச்சென்றனர். இருபதாம் நூற்றாண்டின் முதல் மூன்று ஆண்டுகளில் மட்டும் சராசரி நாள் ஒன்றிற்கு 750 பேர் இஸ்லாத்தைத் தழுவிச் சென்றதாகக்கூறப்படுகிறது. அந்த நிறுவனம் இன்றும்

பொன்னுனியில் இருந்து பொன்னுன பணிசெய்து கொண்டிருக்கிறது. இத்தகைய பணியை அந்த அளவில் அல்லவாயினும், அடக்கமான முறையில் தமிழகத்தில் செய்துகொண்டிருப்பது தென்னிந்திய இஷாஅத்துல் இஸ்லாம் சபையாகும்.

இப்படி ஏராளமானவர்கள் இஸ்லாத்தை ஏற்கக் காரணம் இஸ்லாமியக்கொள்கை, முஸ்லிம்களின் வாழ்க்கை ஆகிய இரண்டும் ஆகும். உப்பிற்குத் துரோகம் செய்யா உத்தமர்களாயிருந்ததால், முஸ்லிம்களைச் சேர, சோழ, பாண்டிய அரசர்கள் தம் படைவீரர்களாயும் தம் மெய்க்காப்பாளர்களாயும் நியமித்துக்கொண்டனர். இந்த அரசர் வேட்டையாடச் செல்லும்போது தம்முடன் முஸ்லிம்களையே அழைத்துச்சென்றுர் என்றும், ஏதாவதொரு பிராணியை அறுக்க வேண்டியதிருந்தால் முஸ்லிம்களைக் கொண்டே அதை அறுப்பார் என்றும் மார்க்கோ போலோ எழுதியிருக்கிருர். முஸ்லிம்களின் விசுவாசத்திற்கு ஒரு சிறந்த உதாரணமாய் என்றும் ஒளிர்ந்துகொண்டிருக்கக் கூடிய நிகழ்ச்சி ஒன்று உள்ளது. மாலிக்காபூர் தென்னுட்டிற்குப் படையெடுத்து வந்திருந்த போது அவர் மதுரை வீரபாண்டியரிடம் பணிபுரிந்த முஸ்லிம்களைத் தமக்கு உதவுமாறு கேட்ட சமயம் அவர்கள் அளித்த பதில்: "தூதுவரே! நாங்கள் முஸ்லிம்களாயினும் பாண்டிய நாட்டு மக்கள். இந்த நாட்டின் வெற்றி எங்களின் வெற்றி. இந்த நாட்டின் தோல்வி எங்களின் தோல்வி. இஸ்லாம் எங்கள் நாட்டிற்குத் துரோகம்செய்யக் கற்றுக்கொடுக்கவில்லை. ஆதலின் இக்கணமே இவ்விடத்தைவிட்டு அகன்றுவிடும். நாளை நாம் போர்க்களத்தில் சந்திப்போம்".

இஸ்லாம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல; உலகின் எப்பகுதியிலாறுலும் தன் ஒளிச்சுடரைப் பரவவிடக்காரணமாயிருந்தோர் இறைநேசச் செல்வர்களான உண்மை முஸ்லிம்களே. அத்தகு நல்லார் இந்நிலுலகில் வாழும் காலமெல்லாம் தீனுல் இஸ்லாம் வளர்ந்துகொண்டேதான் இருக்கும்.

---

நீங்கள் உங்களது உள்ளங்களைப் பேராசை, மோசடி, குரோத எண்ணங்களிலிருந்து தூய்மைப்படுத்துங்கள். ஏனெனில் அக்குணங்கள் இருக்கும்போது மலக்குகளே பக்கத்தில் வர வெறுக்கின்றனர். அப்படியிருக்க அல்லாஹ் எவ்வாறு உங்களின் உள்ளங்களில் குடியிருப்பான்.

அல்லாஹ்வை வணங்குபவர்களாக இருங்கள். உங்களது பணங்காசுகளை வணங்குபவர்களாக இருக்காதீர்.

— அபுல் பர்லு (ரஹ்)

# சூஃபி மார்க்கமும் இஸ்லாமும்

— எஸ். எம். ரகுமான்

உலக மதங்களின் வரலாற்றை ஆராய முற்படுவோர், மதத் தலைவர்களும், தீர்க்கதரிசிகளும், சட்டங்களை வகுத்தோரும் சிரம மான சிக்கலொன்றுக்கு ஆட்படுவதனைத் தெளிவாகத் தெரிந்து கொள்வர். அச்சிக்கல் அறிவுக்கும் அறியாமைக்கும் இடையே ஏற்பட்ட போராட்டத்தால் — மூளைக்கும் நெஞ்சுக்கும் இடையே முகிழ்ந்த முரண்பாட்டால்—மூட நம்பிக்கைக்கும் விஞ்ஞானத்திற் கும் இடையே எழுந்த மோதலால்—விளைவது. சில தருணங்களில் இச்சிக்கலுக்கு விடை காண்பது அரிதாகிவிடுகிறது.

அறிஞர் பெருமக்கள், அவர்கள் வாழ வழிகாட்டும் சமய நெறியை உயரிய அறிவுப்பீடத்தில் அமர்த்த முற்பட்டு, அதற் கொரு மெய்ஞ்ஞானப் பின்னணியையும் வழங்க முயலுகின்றனர். ஆனால் கற்காத பாமரரோ, அதே விடாமுயற்சியுடன் பழைய— புராதன-நிலைக்குச் சமயத்தை தாழ்த்த முற்படுகின்றனர். வரலாறு காட்டும் எச்சமயமும் இத்தகைய 'உள்போராட்டத்தி'லிருந்து விடுதலை காண முடியவில்லை. கிறித்துவ, இந்து, பௌத்த சமயங்களின் மெய்ஞ்ஞான சிந்தனைக்குழுக்களைப்போலவே, சூஃபி மார்க்கமும், தனது தோற்றத்திற்குரிய மூலகாரணத்தை அனைத்துலக மனோநிலையின் அடிப்படையில் பெற்றுள்ளது. ஆர்வமும் அதிக முக்கியத்துவமும் வாய்ந்த இந்த இஸ்லாமியச் சிந்தனைக் குழுவின் தோற்றத்தைப்பற்றி ஆராய முற்படுவார்க்கு இவ்வுண்மை எளிதில் புலப்படும்.

சீரிய சிந்தனைகளெல்லாம் மேற்குத் திசையிலிருந்துதான் சிறப்பாக வெளிப்படுகின்றன என நிறுவ முற்படும் ஐரோப்பிய எழுத்தாளர்கள் சூஃபி (Sufi) என்ற சொல்லைச் 'சோபோஸ்'

(Sophos) என்னும் கிரேக்க அடிச்சொல்லுடன் அடையாளப் படுத்தி அதற்கு 'அறிவாளி' என்ற பொருளையும் கொடுக்க முயன்றுள்ளனர். தொடக்க நிலையில், இச்சொல் கம்பளியாடை (Ar. Sûf) அணிந்தவரையே குறித்தது. அரபுமொழியில் 'சூஃப்' என்றால் கரடுமுரடான ஆடை என்றே பொருள்படும். டாக்காவிலும் கோழிக்கோட்டிலும் தயாரிக்கப்பட்ட நூலாடைகள் ஏற்றம் பெற்ற உயர்குல மக்களின் ஏகபோக உரிமையாக அக்காலத்தில் இருந்ததால், ஆடம்பரத்தையும் அனைத்துவிதப் பகட்டையும் தவிர்த்துக்கொண்ட சூஃபிகள், மேற்கூறிய கரடுமுரடான ஆடைகளையே விரும்பி அணிந்து கொண்டனர். 'புஷ்மினுபோஷ்' (Pushminaposh) என்ற சொல் பாரசீகத்தில் வாழ்ந்த சூஃபிகளைக் குறிக்கும் பொருட்டு வழங்கப்பட்டது. இச்சொல் அஹ்லுல் ஸுப்பா (Ahl'ul Suffah) அதாவது பெருமானார் நபிகள் (ஸல்) காலத்தில் வாழ்ந்த 'திண்ணைத் தோழர்கள்' (People of the bench) என்னும் தொடரிலிருந்து மருவிவந்ததாகச் சிலர் கருதுகின்றனர். எனினும் மிகப்பெரும்பாலோர் கருத்துப்படி இச்சொல், தூய்மை என்னும் பொருள்படும் 'ஸஃபா' (Safa) என்ற சொல்லிலிருந்து வந்ததாகவே கொள்ளப்படுகின்றது.

இஸ்லாத்தின் இறுதிநபி (ஸல்) அவர்கள், தமது சமயக் கோட்பாடுகளைப் பாலைவனத்தில் பாமர மக்கட்கே போதித்தார்கள் என்னும் உண்மை நாம் அனைவரும் அறிந்ததே. அம்மக்களின் அறிவின் எல்லை பரந்தவெளியில் அங்குமிங்குமாகச் சிதறிக்கிடந்த பாலைவனச் சோலையோடுதான் கட்டுண்டு கிடந்தது. பாலைவெளி மக்கள் மிக எளியவர்கள்; இயற்கையின் உண்மையான குழந்தைகள். அம்மக்கள் அவ்வப்போது, வணிகப் பயணத்தின்போது பாலஸ்தீனம், சிரியா ஆகிய சமநிலங்களில் வாழ்ந்துவந்த கிறிஸ்தவ, யூத அறிஞர்தம் தொடர்பினைப் பெற்றுவந்தனர். இத்தொடர்பு அவர்களின் சமய நோக்கங்களில் மாற்றத்தை ஏற்படுத்தியது. அதன் காரணமாக 'லாத்' (Lat), 'மனாத்' (Manat) வழிபாட்டில் அவர்கள் நம்பிக்கை உறுதியாக்கப்பட்டது. அது மட்டுமன்று அந்தக்காலம் பலவிதத்திலும் தேசீய, சமூக, சமயப் பிரிவினைக் காலமாகவும் ஆகியிருந்தது. சொராஸ்டர் (Zoroaster) மூஸா (Moses), ஈஸா (Jesus) ஆகியோரால் தூண்டப்பட்ட புனிதச்சுடர் அன்றைய மனித இரத்தத்தால் தணிக்கப்பட்டிருந்தது. பல நூற்றாண்டுகாலமாக தனித்தன்மையிழந்து தவித்திருந்த சொராஸ்டிர சமயம், கிறிஸ்தவ சமயத்தோடு போராடிக்கொண்டிருந்தது. அதுமட்டுமன்று அது மனிதகுலத்தின் உரிமைக்குரலை அடக்கிவைத்திருந்தது. என்றுமே முடிவில்லாத போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்த முரண்பட்ட சமயக் கோட்பாடுகளும்,

சடங்குகளும், எளிய நம்பிக்கைகளை அழிவில்லாத — குழப்பம் நிறைந்த—குருவாதிக்கம் நிறைந்த கற்பனைப் படிவங்களாக மாற்றி விட்டன. உலக வரலாற்றில், என்றுமில்லாத அளவுக்கு, ஒரு எளிய மதத்தைப் பிரகடனப்படுத்த வேண்டிய தேவை மிக இன்றி யமையாததாக ஆகிவிட்டது.

அராபியப் பாலையில் தோன்றிய அண்ணல் நபிகள் (ஸல்) அவர்கள் தந்த தூதுச்செய்தி உயர்ந்தவனையும் தாழ்ந்தவனையும், அரசனையும் ஆண்டியையும், பண்டிதனையும் பாமரனையும் இணைக்கும் முறையில் ஒன்றாகவே அமைந்திருந்தது. அறியாமை இருளில் ஆழ்ந்தோரால் கூடப் புரியப்படுமளவுக்கு அச்செய்தி எளிய விதிகளைக் கொண்டிருந்தது. எந்தச் சமயமாயினும் மெய்ஞ்ஞானத் திருப்பமொன்றை அது கொடுக்கவில்லையாயின், அது அதன் அறிஞர் குழுவின் மதிப்பைப் பெறவியலாது போய்விடலாம் என்பதைப் பேருலகின் அருட்தூதர் பெருமானார் (ஸல்) அவர்கள் முழுமையாக உணர்ந்திருந்தார்கள். இவ்வுண்மையை உறுதி செய்யும் முறையில்தான் அறிஞர்களின் ஆர்வத்தை நிறை வேற்றும் முகமாக—சூஃபி மார்க்கம் உருவானது. பெருமானார் (ஸல்) அவர்கள் தம் பிரியத்திற்குரிய தோழர்கள் நடுவண் அறிவின் அடிப்படையில் பேரிடம்பெற்றுத் திகழ்ந்த ஹலரத் அலி(ரலி) அவர்கள் பூமான் நபிகளார் தம் பொன்னுன அறிவுப் போதனைகளை நேரடியாகவே பெற்றவர்களாவார்கள். சூஃபி மார்க்கத்தின் நான்கு முக்கிய நெறிகளுள் ஒன்றன் தோற்றம் ஹலரத் அபூபக்கர்(ரலி) அவர்களிடமிருந்தே தொடங்குகின்றது எனக் கூறப்படினும், இந்நான்கு நெறிகளின் ஏக ஸ்தாபகரும் ஹலரத் அலி (ரலி) அவர்களே ஆவார்கள் என்பதில் வரலாற்றடிப் படையிலான கருத்தொற்றுமை நிலவுகின்றது.

மேற்கண்ட கருத்துக்களிலிருந்து, சூஃபி மார்க்கம்இஸ்லாத் தின் ஓர் உட்பிரிவன்று; ஆஃது இஸ்லாமிய வாழ்வியலின் தத்துவ நோக்கமொன்றே யாகும் என்பதே மிகத் தெளிவாகப் புலப்படும் உண்மையாகும். இஸ்லாமிய வாழ்வியலின் கோட்பாடுகளை எளிய முறையில் விளக்கவே இந்த சூஃபி மார்க்கம் முயல்கின்றது; அம் முயற்சி வேறொன்றுமன்று; அதன் அறிவார்ந்த அடிப்படையே யாகும்.

அறிவும், அன்பும், உலகியல் ஆசைகளைத் துறத்தலுமே சூஃபி மார்க்கத்தின் சிறப்பு நோக்கங்கள். அதன் கொள்கைகளில் உட்கருத்து நிறைந்திருந்த காரணத்தால் சூஃபி மார்க்கப் போதனைகள் தனித்தன்மை வாய்ந்தவை. குரு—சீடஅமைப்பு

முறை, அதன் நிலையான தன்மையாயிற்று. இத்தகைய எச்சரிக்கையோடு அணுகினும் கூட, பொதுமக்கள் ஸூஃபி மார்க்கத்தின் சில முக்கியமான கோட்பாடுகளை எப்போதும் பழிதூற்றவே முயன்றுள்ளனர். ஸூஃபிகளைப் பொறுத்த மட்டிலும் ஒளியானது எப்போதும் அறிவோடு இணைந்து தான் வர இயலும்.

இறைவனைப் பற்றிய அறிவென்பது; உள்ளொளி நிலவும் இதயத்தின் உட்பகுதியில் ஊடுருவிப் பாய்வதையே குறிப்பிடுகின்றது. இறைவனுக்கு முற்றிலும் அடிபணிந்துவிடுதலும், இறைவனைப் பற்றிய ஞானத்தைத் தவிரப் பிற ஞானங்களையெல்லாம் அறவே விட்டுவிடுதலும், அவ்வறிவின் தாக்கமாகுமென்று ஸூஃபிகள் கருதுகின்றனர். இவ்வாறாகக் கவனம் செலுத்தி, மிகக் கடினமான பயிற்சிகளை மேற்கொண்டு, அதற்குப் பின்னர் தன்னை அழித்துக் கொள்வதிலும், இறைவன் ஒளியில் தன்னை ஒன்றச் செய்வதிலும் முடிவு காணுதல் வேண்டும். அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் நிறைந்து நிற்கும் இறைவன் மனிதர்களின் இதயாசனங்களில் நிலைத்திருப்போனுவான். இறைவனிடம் தன்னை முற்றிலும் ஃபனுவாக்கி விடுவதினுலேயே (Fana Filla) இந்நோக்கத்தை அடையமுடியும். முதலில் ஷெய்கிடமும் (Fana-fish-shaik) பின்னர் இறை தூதரிடமுமாகத் (Fana-fir-rasûl) தன்னை முற்றிலும் அர்ப்பணித்து விடுதல் வேண்டும்.

புறக்கண்ணை மூடி விட்டு அகக்கண்ணைத் திறப்பதுதான் ஸூஃபி வாழ்க்கையின் முடிந்த முடிபாக இருக்கவேண்டும். எங்கும் நிறைந்திருக்கும் ஏகப் பரம்பொருள்மீது கொள்ளும் நம்பிக்கை இயற்கையாகவே எல்லோர் மீதும் அன்பு செலுத்தும் அன்புக் கொள்கையைத் தோற்றுவிக்கிறது. இறைவன் எங்கும் நிறைந்திருப்பவனுதலின், உலகின் எல்லாப் பொருட்களும் அவனையே எண்பிக்கின்றன. எனவே படைக்கப்பட்ட பொருள் படைத்தோனை அடையாளம் காட்டவேண்டும். அத்தகைய நிலையில் அன்பு மட்டுமே படைப்புக்களில் ஆட்சி செலுத்தவேண்டும். உலகின் ஒவ்வொரு படைப்பும் நேசிக்கப்பட வேண்டும். இறைவனின் படைப்பை நேசிப்பதன் மூலம் இறைவனையே நம்மால் நேசிக்க முடியும். தன்னையே ஃபனுவாக்கி அர்ப்பணித்துக் கொள்வதென்பது அனைத்துப் பொருள்கள் மீதும் கொள்ளும் அன்பேயாகும்.

உலகில் அன்பே தலைமையானதாக இருக்க வேண்டுமென ஸூஃபிகள் வாதிடுகின்றனர். அன்பைத் தவிர பிற அனைத்தும் பொய்யானவையாகவும், கனவுபோன்றும் புலப்படுவதால் அன்பால்தான் நிலை பேறடைய முடியுமென்பது அவர்கள் கருத்

தாகும். "இறைவா! உன்னை வெளிப்படையாக அழைக்கும் போது மேலான இரட்சகனை அழைப்பது போன்று அழைக்கின்றேன். ஆனால் அந்தரங்கமாக அழைக்கும்போது மானசீக அன்பரை மனங்குளிர அழைப்பதுபோல அழைக்கின்றேன். வெளிப்படையாக 'என் இரட்சகனே' என அழைப்பேன். ஆனால் அந்தரங்கமாக 'என் அன்பே!' என அழைப்பேன்" என்பதாக சூஃபிக் கவிஞர் ஒருவர், பேரானந்த நிலையில் இறைவனை உவந்து பாராட்டுகின்றார்.

இக்கொள்கை வேரூன்றியபோது, பிரிவினை வாதத்திற்கு எதிர்மாறாக, எல்லாச் சமயங்களிலும் உண்மை உள்ளது என்றும், உண்மை ஒன்றேயாதலின் எல்லாச் சமயங்களும் மூல நிலையில் ஒன்றே என்றும் சூஃபிகள் நம்ப முற்பட்டனர். உண்மைகள் சுய நல வேட்கை கொண்ட மானிடரால் அவர்தம் நோக்கங்கட்கேற்ப மாற்றம் செய்யப்பட்டன. இத்தகைய மனோநிலை, உலகத்தின் வேறுபட்ட சமயங்களைப்பற்றிய பரிவான படிப்பினை மேற்கொள்ளக் காரணமாயிற்று. அச்சமயங்களில் நிலைபெற்றிருந்த தத்துவப் போதனைகளைச் செவிட்டுக் காதுகள் ஏற்க மறுத்தன. சூஃபிகள் தமது செயல்களுக்குரிய அங்கீகாரத்தை இறைநூலாம் திருக்குர்ஆனிலிருந்தும், நபிமொழிகளாம் ஹதீதுகளிலிருந்தும் தேடிப் பெறுவதற்கு முற்பட்டனர் என்பதையும் இங்கு நினைவு கூர வேண்டும். அதன் முடிவு துறவிலும், மெய்ஞ்ஞானத்திலும் கொண்டு சேர்த்தது. தன்னை வதைத்துத் தன்னலத்தை அர்ப்பணித்துவிடுவது சூஃபி மார்க்கத்தின் தலையாய கொள்கையாயிற்று.

'உலமாக்கள்' என்னும் அறிஞர்கள் வெளித்தோற்றத்திலும், வெளிச் செயற்பாடுகளிலும் ஆழ்ந்திருந்தனர். முஸ்லிம்கள் மத்திய கிழக்கிலும், பாரசீகத்திலும் அடைந்த மகத்தான வெற்றிகள், கைசர்களின் (Kaisars) கருவூலக் கதவுகளை அவர்களுக்குத் திறந்துகாட்டின. அளவிடமுடியாத செல்வம் அரபகத்தில் குவிந்துகிடந்தது. செல்வக் குவியல், எடுத்துரைக்க இயலாத தீங்குகளையும் தன்னோடு எழுப்பிக் கொண்டிருந்தது. அண்ணலார் நபிகள் (ஸல்) அவர்களும், அவர்களை அடுத்த அவர்கள்தம் அன்பர்களாம் ஸஹாபாக்களும் மிக எளிய வாழ்க்கை வாழ்ந்தவர்கள். எனவே, துறவுநிலை சூஃபி மார்க்கத்தில் வேகமாக வேரூன்றியது. பெருமானார் (ஸல்) குடும்ப அங்கத்தவர்கள் (Ahlu'l-Bait) துறவு வாழ்வில் தூய்மையைக் கண்டனர். ஆட்சித் தலைவர் ஹலரத்அலி (ரலி) அவர்கள் வாழ்வாலும், வாக்காலும் தன்னலத்தை மறுக்கும் துறவுநிலையைக் கற்றுக்கொடுத்தார்கள்; அதனைத்தவிர மீட்பு கிடைக்க வழியில்லையென ஆயிற்று.

அவர்களின் போதனைகள் இமாம் ஷரீப் ரஜா (Imâm Sharîf Razâ) என்பவரால் நஹ்ஜுல் பலாகத் (Nahju'l-BalaGhat) என்பதாகத் தொகுப்பட்டன. அப்போதனைகள் மூலம் உண்மையான அறிவு, அன்பு ஆகியவற்றின் முடிவு, தன்னிடமுள்ள ஆசைகளைத் துறத்தல் எனத் தெளிவாக்கப்பட்டது.

தூய்மையும் உன்னதமுமான இத்தத்துவம் பின்னர் இமாம் கஸ்ஸாலி (Imâm Ghazzâli), இப்னு துபைல் (Ibnu Tufail), மவ்லானா ஜலாலுத்தீன் ரூமி (Maulâna Jalaluddin Rûmi), பரீதுத்தீன் அத்தார் (Farid-uddin-Attâr) முதலிய ஸூஃபி ஞானிகளால் விரிவடைந்தது. காலப்போக்கில் ஆத்மீகத் தொடர்பும் அத்தத்துவத்தில் இரண்டறக் கலந்துவிட்டது. பரிணமக் கொள்கைகளும், முன்னேற்ற முயற்சிகளும் வாய்மையுடன் பின்பற்றப்பட்டன. அக்கொள்கைகளைக் கீழ்க்கண்ட முறையில் சுருங்கக் கூறலாம்:

"உலகில் நிலைத்திருக்கும் பொருட் தொகுதியில் தாதுப் பொருட்கள் கீழ்நிலையிலுள்ளன. அதற்கடுத்த மேல்நிலையில் அமைவது தாவர இனம். அடுத்து விலங்கினம்; அதற்கடுத்து மனித இனம். மனிதனுக்கு மேல் இருப்பவன் இறைவன். அடிமட்டப் பொருள் உச்சநிலைப் படைப்போடு முன்னேற்றச் சங்கிலியொன்றால் இணைக்கப்படுகிறது. மனித ஆத்மாவனது உலகக் கட்டினை அறுத்தெறியும் முயற்சியில் தொடர்ந்து முயலுகின்றது. விடுதலையடைந்தவுடன், மேலே எழுந்து, எங்கிருந்து வந்ததோ அந்த இறையின் பக்கம் வேகமாகச் செல்கின்றது" — இக்கொள்கை உலகப் புகழ்வாய்ந்த மத்னவியில் உள்ளது. அது மௌலானா ரூமி அவர்களால் இயற்றப்பட்டது. தர்வேஷ்கள் பரமானந்த நிலையில் இருக்கும்போது 'மத்னவிப்' பாடல்களைப் பாடிக்களிக்கின்றனர். பாரசீகத்தின் குர்ஆனுகப் பரிணமிப்பதாக 'மத்னவியைப்' பாராட்டுவர். ஸூஃபி மார்க்கத்தின் வரலாற்றில் 'மத்னவி' — ஒரு மைல்கல்லேயாகும்.

ஸூஃபி மார்க்கத்தையும் வேதாந்தத்தையும் ஒப்புமைசெய்து பயிலுதல், பல கருத்துக்களை இணைத்துக்காட்டும்பெற்றியுடையது. அதன் காரணமாக உலமாக்களிற் சிலர் சூஃபி மார்க்கத்திற் குற்றம்கண்டு அஃது இஸ்லாத்தின் தேவையற்ற மாற்றம் எனச் சாடுகின்றனர். பிரசித்திபெற்ற சில ஒற்றுமைக்கூறுகளால் வேதாந்தத்திலிருந்துதான் சூஃபி நெறி வெளிப்பட்டதென அவர்கள் முடிவுசெய்கின்றனர். உலக சமயங்களுக்கிடையே ஒருமைக்கூறுகள் ஒளிவீசுவதை யாராலும் மறுக்க முடியாது.

ஸுஃபி மார்க்கத்திலும் வேதாந்தத்திலும் விரிவாக உணர்த்தப்படும் கருத்தொன்று, 'மனிதனின் ஆத்மா, ஆழ்ந்த சிந்தனையாலும், சமய ஆர்வத்தாலும், அன்பாலும் தூய்மைப்படுத்தப்படும்போது, அஃது எங்கிருந்து வந்ததோ, அந்த இறைவனின் பக்கமே சார்கின்றது' என்பதாகும். மதவியலைப் பற்றிய ஆழ்ந்த கல்விப் பயிற்சி பெற்று, இறைவனோடு ஆத்மீக வழியில் ஒன்ற விரும்புவோர் வேதாந்தம் வெளிப்படுத்தும் 'சந்நியாசி' யாகவும், சூஃபி மார்க்கம் காட்டும் 'தர்வேஷா'கவும் ஆகிவிடுகின்றனர். பிராமணனின் 'போதம்' (Bodh) ஸுஃபியின் 'இல்ம்' (Ilm — அறிவு) ஆகிவிடுகின்றது. இரு சாராரும் அறிவின் துணையோடன்றி, ஆத்மாவானது விடுதலை காண இயலாது என அழுத்தமாகக் குறிப்பிடுவர். ஆத்மாவானது கூடுவிட்டுக் கூடு பாய்வது 'அவகாவன்' (Avagawan) கொள்கையாகும். 'உப்பதி' (Uppadhi) 'நப்ஸ்' (Nafs) என்பதே தவிர வேறொன்றுமில்லை. 'ஆலமே மீஸால்' (Alam — I — Misal) வேதாந்தத் தத்துவத்திலுள்ள 'மாயா' (Maya) வோடு ஒப்பிடத்தக்கது.

செமித்திய, ஆரியப் பிரிவு சிந்தனையோட்டங்களைச் சந்திக்க வைக்க முயலும் போது மனித மனத்தின் பரந்த போக்கிற்குப் பயன் தரும் பல படிவங்களைப் பார்க்க முடிகின்றது. கால வேறுபாடுகளாலும், நாட்டு எல்லைகளாலும், இனப்பிரிவுகளாலும் பிரிவுண்டு கிடக்கும் மனித உள்ளங்களுக்கு இப்படிப்பு கவர்ச்சியைத் தருகின்றது.

சூஃபி மார்க்கம் அண்ணல் பெருமானார் (ஸல்) அவர்கள் தம் அருமை மருகர் ஹலரத் அலி (ரலி) அவர்களால் தோற்றம் கண்டது. மெய்ஞ்ஞான மேதைகளான இமாம் கஸ்ஸாலி, மவ்லானா ரூமி, பரியாபி (Faryabi) இப்னு சீனா (Ibn Sina) ஹலரத் அப்துல் காதிர் ஜீலானி (Hazrat Abdul Qadir Jilani) ஹலரத் காஜா மொயினுத்தீன் சிஷ்தீ அஜ்மீரி (Hazrat Khwaja Moinuddin Chishti of Ajmir) ஹலரத் நிஜாமுத்தீன் (Hazrat Niza Muddin) முதலியோரால் முழுமையாக வளர்ச்சியடைந்தது; சுயநல எண்ணங் கொண்டோர் சிலரால் அம்மார்க்கவும் பின்னடையவும் முற்பட்டது.

இஸ்லாத்தின் தத்துவ நெறியாம் ஸுஃபி மார்க்கம், ஆயிரம் ஆயிரம் பக்தியுள்ளம் கொண்ட முஸ்லீம்களின் வாழ்வினை நலப்படுத்தி, அவர்களின் மத நம்பிக்கையைக் கூர்மைபடுத்தியுள்ளது என்னும் உண்மையை—ஸுஃபி மார்க்கத்தைக்குறை கூறுவோராலும் மறுக்கவியலாது. பேரருளாளன் இறைவனின் சாதாரண

படைப்பிலிருந்து, உயர்மட்டப் படைப்புவரை ஊடுருவியிருக்கும் தெய்வீக அன்பு பற்றிய வருணனைகளை மவ்லானா ஜலாலுத்தீன் ரூமி (Rumi) அத்தார் (Attar) ஆகியோர் படைத்த பாவடிகளால் பாடும்போது அவைகள், அண்ணலார் (ஸல்) அவர்கள் வழிவந்தோர் தம் அழகுப் படைப்புக்களாக ஆட்சி செலுத்துகின்றன.

---

அநியாயக்காரனைச் சந்திக்க விரும்புபவனும் அநியாயக்காரனாகும்.

உப்பையும், தண்ணீரையும் உணவாகக் கருதுகின்றாய். ஆனால் உண்மையில் ஈமானும், ஹிதாயத்துமே உணவாகும்.

— அபுல் அப்பாஸில் மிர்ஸீ (ரஹ்)

இப்லீஸ், ஆதம் (அலை) அவர்களுக்கு ஒரு ஸஜ்தாவை விட்டதற்காக காபிரானபோது மனிதன் இப்லீஸுக்குத் திரும்பத் திரும்ப ஸஜ்தா செய்வதால் எந்த அளவு காபிராக ஆகின்றான்!

பாக்கியம் பெற்றவர்களைப் பார்த்து நீ பொறுமை கொள்ளாதே. அது உன்னை அல்லாஹ்வின் அருளை விட்டும் மாற்றிவிடும். இப்லீஸ் ஆதம் (அலை) அவர்களைப் பார்த்து பொறாமை கொண்டதால்தான் மலக்கு என்ற உருவிலிருந்து ஷைத்தான் எனும் உருவத்திற்கு மாற்றப்பட்டான். — அலிய்யுன் வலதுஹு (ரஹ்)

# ஞான மரபு

ஜே. எம். சாலி, எம். ஏ.

இஸ்லாமிய ஞான, தத்துவப் பூங்காவின் மதுமலர்த் தும்பி களாய் இசையெழுப்பி இறையன்பின் திறம் உணர்ந்த எண்ணற்ற ஞானச் செல்வர்களைத் தமிழகம் கண்டிருக்கிறது. அரிய தத்துவச் செல்வங்களை, ஞானக் கருவூலங்களை வாரிவழங்கிய வள்ளல்கள் அவர்கள். "தமிழோடு இசைபாடல் மறந்தறியேன்" என்று பாடினார் பக்திப் பழமான ஓர் அடியார். முஸ்லிம் ஞானப் புலவர் கள் இசையோடு இனிய ஞான தத்துவச் சாரங்களையும் இழைத்து இழைத்துப் பாடியிருக்கின்றனர்.

கோட்டாற்று ஞானியார் சாகிப், தற்கலை தவமேதை பீர் முகம்மது ஞானியார் ஆகிய ஞானச் செல்வர்கள் தோற்றுவித்த தமிழ் ஞான, தத்துவ மரபு பழுமரமாய்ச் செழித்திருக்கிறது. குணங்குடி மஸ்தான் சாகிப், காலங்குடி மச்சரேகைச் சித்தர், வாலை மஸ்தான், அப்துல்கனி சாகிப், செய்கு முஸ்தபா, செய்கு அப்துல்காதிர், செய்குமுகம்மது அப்துல்லா சாகிப் போன்ற ஞானச் சித்தர்கள் இந்த நெறியைப் பின் தொடர்ந்தவர்கள். இஸ்லாமிய தத்துவ, ஞான வெளியில் நின்று தமிழில் பாடிப் பரவசமடைந்த புலவர் திருக்கூட்டத்திற்குச் சுமார் நானூறு ஆண்டு கால வரலாறு உண்டு.

ஞான, தத்துவப் புலவர் திருக்கூட்டத்தில் முச்சுடராய் விளங்கும் பெருமை மூவருக்கு உண்டு. கோட்டாற்று ஞானியார் சாகிப், தற்கலை ஞானியார் பீர்முகம்மது அப்பா, குணங்குடி மஸ்தான் சாகிப் ஆகிய மூவருமே அவர்கள். இம்மூன்று ஞான மேதைகளை ஆராய்வது அரும்பெரும் ஆராய்ச்சியாக அமையும். எனினும், இவர்கள் காட்டிய நெறியின் பின்விளைவுகள் நம் காலத்தில் எப்படி அமைந்துள்ளன என்பதை மதிப்பிடுவதுகூடத் தேவையான ஒன்றுதான். இஸ்லாமியத் தத்துவ வித்தகம் எங்கேயிருந்தாலும் அவற்றையெல்லாம் நம் ஞானியரும் பாவலரும் தமிழில் கொண்டுவரத் தவறவில்லை.

இவ்வகையில், மேற்குறிப்பிட்ட ஞானியர்களை இங்கே அழைக்கவேண்டும் என்பதில்லை. அவர்களின் அடியொற்றி வளர்ந்த அண்மைய நெறிகளை உணர முற்படலாம். பிறமொழி

ஞானியரும், தத்துவ மேதைகளும் தமிழகத்திற்கு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கின்றனர். பீர் முகம்மது அப்பா போன்ரேர் துவக்கி வைத்த பணியின் பின்விளேவே இது என்று பெருமை யோடு சொல்லலாம்.

இமாம் கஸ்ஸாலி மட்டுமல்லர், மவுலானு ரூமியும், இமாம் சாஅதியும், அல்லாமா இக்பாலும் ஏனேய புலவரும் நம்மிடையே ஞானக்குரல் எழுப்பிக் கொண்டிருக்கின்றனர். எந்த மொழி யானுலும் தத்துவ ஞானங்கள் பொதுவானவை. அடிப்படை எண்ணங்கள் அன்றும் இன்றும் ஒன்றுதான். அவை மேற் கொள்ளும் கோலத்தையொட்டியே வளர்ச்சியும் மலர்ச்சியும் அமைகின்றன. மற்ற மொழிகளிலிருந்து அண்மைக் காலத்தில் தமிழாக்கம் செய்யப்பட்ட நூல்கள் இஸ்லாமியத் தமிழ் ஞான, தத்துவ நெறியையும் மரபையும் வளப்படுத்தியிருக்கின்றன.

ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சித்தி லெப்பை (முகம்மது காசிம் மரைக்காயர்) புலவர் இந்தத் துறையில் காட்டிய கருத்தையும், கவனத்தையும் வியக்காமல் இருக்க முடியவில்லை. முதன் முதலாகத் தமிழில் முஸ்லிம் பத்திரிகையை வெளியிட்ட பெருமை இவரையே சாரும். சித்தி லெப்பையவர்களின் தத்துவ நூல்கள் பல வெளிவந்திருக்கின்றன.

சத்தின் ஞானுர்த்தம், தத்துவ பரகண்டனம், நிஷ்கார தண்டனம், தத்துவப் பரகண்டன நிராகரணம், சிதடமதவாய் ஆப்பு, சிதடர் பரமறுப்பு, சிதடர் பரமறுப்பு பார்ப்பது அருவருப்பு, சிதட மத குடாரம், கபட மத நிக்கிரகம் போன்ற பல்வேறு தத்துவ, கண்டன நூல்களே எழுதிய பெருமை அவருக்கு உண்டு. 'அஸ்ருருல் ஆலம்' என்பது சித்தி லெப்பையின் சிறந்த தத்துவ நூல். தெளிவும் எளிமையும் பொருந்திய நூல் இது. குருவும் சீடனும் உரையாடும் போக்கில் அமைந்தது. இறைவனின் இயல்பு, இஸ்லாமிய ஒழுக்கம், உயர்நெறி, மெய்ஞ்ஞான விளக்கம் ஆகியவை தெளிவாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. சுமார் 75 ஆண்டுகளுக்கு முன்னர் 'அஸ்ருருல் ஆலம்' எழுதப் பட்டது.

தமிழில் இஸ்லாமியத் தத்துவ, ஞான இலக்கிய வளர்ச்சி பற்றி எண்ணும்போது நெல்லிக்குப்பம் மவுலானு மவுலவி அப்துல் ரஹ்மான் சாகிபின் அரும்பணியை மறக்கவியலாது. இமாம் கஸ்ஸாலியைத் தமிழகத்திற்கு அறிமுகப்படுத்திய அறிஞர் அவர். இமாம் கஸ்ஸாலியின் 'கீமியாயே-ஸஆதத்து' எனும் ஞானப் பெருநூலே நல்ல தமிழில் தந்த பெருமகன் அவர்.

இமாம் கஸ்ஸாலியின் மற்ருெரு நூலான 'இஹ்யாவு உலூமித்தீன்' தமிழகத்தில் பெற்ற செல்வாக்கு மிக உயர்ந்தது.

இதன் பெரும்பகுதியை தமிழுக்குக் கொண்டு வந்திருக்கிறுர் மவுலவி எஸ். அப்துல் வஹாப். இறைதிருப்தி, இறைசிந்தனை, இறையச்சம், இறைநம்பிக்கை, இம்மையும் மறுமையும், ஏகத்துவம், உள்ளத்தின் விந்தைகள், உளத்தூய்மை, நாவின் விபரீதங்கள், திருமணம், பொறுமையாயிரு, பொருமைகொள்ளாதே, பொருளீட்டும் முறை, பதவி மோகம், பாவமன்னிப்பு, கோபம் வேண்டாம், நாயகத்தின் நற்பண்புகள் என்றவாறு 'இஹ்யா'வைப் பல்வேறு நூல்களாகத் தந்திருக்கிறுர் எஸ். அப்துல் வஹாப் பாகவி. இமாம் கஸ்ஸாலியின் கடிதங்கள், இறையருள்ஞானம் ஆகிய நூல்களை மு. முகம்மது கவுஸ் எழுதியுள்ளார். மவுலவி ஒ. எம். ஜெயினுத்தீன் 'அன்புச் செல்வனே' என்ற நூலை எழுதியிருக்கிறுர். இவற்றை வெளியிட்ட பெருமை எம். ஆர். எம். அப்துற்ரஹீம் அவர்களைச் சாரும்.

இமாம் கஸ்ஸாலியின் ஞான தத்துவ நெறிகளை முஸ்லிம் தமிழ்ப் பத்திரிகைகளும் சிறப்பான முறையில் அறிமுகப்படுத்தி வந்திருக்கின்றன. 'கீமியாயெ ஸஆதத்து' கருத்துக்களைச் சில எழுத்தாளர்கள் தொடர் கட்டுரைகளாக முஸ்லிம் முரசு, மணிவிளக்குபோன்ற இதழ்களில் எழுதிவந்தனர். இந்தப் பணியைச் செய்தவர்களில் மவுலவி எம். அப்துல்வஹாப், மவுலவி எஸ். அப்துல்வஹாப், மவுலவி ஜி. எம். எஸ். சிராஜ் பாகவி, அ. அப்துல்ரஹீம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பல தத்துவ நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்த பெருமை நூலாசிரியர் ஆர். பி. எம். கனி அவர்களுக்கு உண்டு. கஷ்புல் கஸ்ஸாலி, பிழையிலிருந்து விடுதலை, குலாஸதுத் தஸானீப், மிஷ்காத்துல் அன்வார், பேரின்பரஸவாதம் ஆகியவற்றைச் சிறப்பாகச் சொல்லலாம். ஆசிரியரின் 'கௌதுல் அஃலம்', மகான் முகியித்தீன் ஆண்டகையவர்களின் ஆத்மஞான வரலாறும் உபதேசங்களும் அடங்கிய நூல்.

தத்துவ வித்தகர் மவுலானு ரூமியின் நூல்களும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவர்தம் 'கிதாபுல் மஸ்னவி' ஆத்மஞானத்தின் மெய்ந்நிலையுணர்த்தும் அரும்பெரும் இலக்கியம். ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு முன் இதனைத் தமிழில் கொண்டு வந்தவர் கோட்டாறு இ. எஸ். பீர்முகம்மது சாகிப். 'மஸ்னவி ஷரீப்' என்ற பெயரில் சுமார் 2000 பாடல்கள்வரை மொழிபெயர்த்து இருபாகங்களாக வெளியிட்டுள்ளார்.

அடுத்து, இந்த நூலை வெளியிட்டவர் ஆர். பி. எம். கனி. இரண்டு பாகங்களாக வெளியிட்டுள்ளார். ஆசிரியரின் 'பாரசீகப் பெருங்கவிஞர்கள்' என்ற நூலையும் இங்கே குறிப்பிடலாம்.

கவிஞர் இக்பாலின் தத்துவங்களும் தமிழுக்குக் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. ஆர். பி. எம். கனி அவர்களின் மூன்று நூல் களில் (இக்பாலைப் பற்றியவை) தத்துவச் சிதறல்களைக் காணலாம். ‘ஷிக்வா-வ-ஜவாபெ ஷிக்வா’ என்ற ‘முறையீடும், முறையீட்டின் மறுமொழியும்’ பலரால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மௌலவி எம். அப்துல் வஹ்ஹாப், ஜே. எம். ஹுசைன், சையத் இப்ராஹீம் ஆகியோர் வெவ்வேறு சமயங்களில் இதனை மொழிபெயர்த்து வெளியிட்டனர். ‘இக்பால் யார்?’ என்ற தமது நூலில் இந்தப் பகுதியைச் சேர்த்திருக்கிறார் ஜே. எம். ஹுசைன்.

அறிஞர் பா. தாவூத்ஷா சாகிப் எழுதிய ‘ஞானபோதம்’ என்ற நூலை இங்கே குறிப்பிட வேண்டும். அறிஞர் கரீம் கனியின் ஜோதி, சந்நிதானம், பிரளய சகாப்தம், சன்மார்க்கத் தத்து வார்த்தம் ஆகிய நூல்கள் நினைவுகூரத்தக்கவை.

இஸ்லாமியத் தத்துவங்கள் — கோட்பாடுகள் குறித்து எழுதப் பட்ட தமிழ் நூல்கள் அவ்வப்போது எழுதப்பட்டுவந்திருக் கின்றன. பா. தாவூத்ஷா எழுதிய இஸ்லாம், ஈமான், இஸ்லாம் இணையில்லாச் சாந்தி, தீனுல் இஸ்லாம், பிரார்த்தனைகள் ஆகிய நூல்களைக் குறிப்பிடலாம். மவுலவி எஸ். எஸ். பாகவி ‘இஸ்லாம் மதவிளக்கம்’ என்ற நூலையும் எழுதினர். ஆங்கில முஸ்லிம் அறிஞரான பிக்தாலின் நூலை ‘இஸ்லாமியக் கலைப்பண்பு’ எனும் பெயரில் ஆர். பி. எம். கனி வெளியிட்டார். ஹுசைன் மாலிம் அவர்களின் ‘இஸ்லாம் அழைக்கிறது’ என்ற நூலும் நினைவு கொள்ளத்தக்கது.

முஸ்லிம் ஞான, தத்துவப் புலவர்கள் பாடிய அளவுக்கு, தற்காலத்தில் உரைநடையில் பெருமளவுக்கு இஸ்லாமிய ஞான தத்துவ நூல்கள் எழுதப்படவில்லை. மொழிபெயர்ப்புப் பணியே செய்யப்பட்டுவருகிறது. கோட்டாற்று ஞானியார், பீர்முகம்மது அப்பா, குணங்குடியார் ஆகிய ஞான மேதைகளின் நூல்களுக்கு விளக்கமும் விரிவுரையும் எழுதப்பட வேண்டிய பெரும்பணி காத்திருக்கிறது. எல்லோரும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய இனிய விரிவுரை நூல்கள் வெளிவரவேண்டும். மொழிபெயர்ப்பு களில் செலுத்தப்படும் கவனம் இவர்தம் ஞான, தத்துவ இலக்கியங்களின் பக்கம் திரும்பவேண்டும்.

## அப்பா வழங்கும் சர நூல்

கொழும்பு—எப். எம். இபுருஹீம்

இஸ்லாமியத் தமிழ் மெய்ஞ்ஞான மேதைகளுள் இரவியாய் விளங்குபவர் தக்கலை பீர்முஹம்மது ஸாஹிபு (ரலி) ஆவர். கண்டாலும் கருதினுலும் உள்ளம் நிறைவுபட உண்டாலும் தெவிட்டாத அமிழ்தனைய ஞானப்பாக்களை அள்ளி வழங்கிய எம்மான் பீர்முஹம்மது அப்பா அவர்களின் "திருமெய்ஞ்ஞான சரநூலும்" அதிசிறப்புடைத்தாம்.

காசினியில் தோன்றிக் காலவெள்ளத்தில் கரைந்து போகாமல் நிலைத்து நிற்கும் நம்பிக்கைகள் எண்ணற்றவை. அவற்றுள் பல, கல்லார் நெஞ்சங்களிலும், சில கற்ருர் உள்ளங்களிலும் உறைந்து நிற்கின்றன. இத்தகையவற்றுள் சரம் பார்த்தல் ஒரு பிரமாண மாகக் கொள்ளப்பட்டு நீண்ட நெடுங்காலமாக மெய்யறிஞர்களால் போற்றப்பட்டு வந்துள்ளது.

சர ஓட்டத்தை முப்பது விருத்தங்களாக விளக்கியிருப்பதைப் பீர் அப்பா அவர்கள்,

"ஓதுகின்ற சரமதனை யுலகத் தோர்க்கு
மொளியாம லுரைத்தவித முவந்த பேர்க்கு
வேதகுல வாவாஞ்சி·பேர ஞன
வேந்தரெனும் சிறுமலுக்க ரீன்ற பாலன்
நீதமிலா திந்நூலைப் பொய்யென் ஞமல்
நிலைநிறுத்தப் பீர்முகம்ம தென்போன் யானே
வேதமெனு மெய்ஞ்ஞான சரநூ லென்றே
விளம்பினேன் கவிமுப்ப தாக முற்றே"

என்னும் இறுதிப்பாவால் அறியத்தருகின்ருர்கள்.

சரம் என்பது சுவாசம். சரநூலானது சுவாச நடையைக் கொண்டு பலா பலன்கள் அறியும் முறை. இறை நம்பிக்கையுடன் சரம்பார்த்து சற்காரியங்கள் புரிபவர் வெற்றி பெறுவரென்பது எண்ணம். இது மூடநம்பிக்கையன்று. இதுவும் ஒரு கலை ஞானமே.

நாளிகை தானும் ஓய்ந்திராது ஓடிக்கொண்டேயிருக்கும் இச் சரமானது நாளொன்றுக்கு எவ்வளவு கூடுதலாக ஓடுகின்ற தென்பது கூர்ந்து ஆராய்ந்து கூறப்பெற்றுள்ளது.

"நாழிகைதா னென்றரையாய்ப் பூமியோடு
நலமான கீழ்த்திசையே நளின மாக
நாழிகைதா னென்றேகால் மூக்கந் தண்டின்
நடுவாக வோடுமது வப்புத் தானே
நாழிகைமுக் காற்பக்க விளிம்பு பற்றி
நன்ருக வோடுமது தேயு வாகும்
நாழிகையா காசமரை நடுவ தாக
நாடாம லோடுமடா நாளிற் பாரே"

சரம் ஓட்டம் பற்றிச் சாகிபு அப்பா அவர்கள் எத்துணை நுணுக்கமாக நோக்கியுள்ளார்கள் என்பதனை இது விளக்கிக் கூறுகின்றது. மேலும் பீர்அப்பாவின் நுண்மாண் நுழைபுலம் எந்த எந்த நாட்களில் சரம் எங்கு எங்கு நிற்கும் என்பதனையும் ஆய்ந்து தெரிந்துள்ளதென்பதைக் கீழ் வரும் பாடல், படம்பிடித் தாற்போல் எடுத்துக் காட்டுகின்றது.

"பாரப்பா திங்கள்வெள்ளி புதனே மூன்றும்
பக்குவமாய் விடிகாலஞ் சந்திர னோடும்
சேரப்பா ஞாயிறொடு சனிசெவ் வாயுஞ்
செங்கதிரோ னோடுமடா விடியுங் காலம்
வாரப்பா வினியொருநாள் வியாழன் மட்டும்
வளர்பிறைக்குச் சந்திரனே வளர்ந்தங் கோடும்
கூரப்பா தேய்பிறைக்குச் சூரி யன்றன்
குதிகொண்டே யோடுமடா கோணந் தானே"

இவ்வாறு சரத்தின் சம்பூர்ண நிலைதெரிந்த, தெளிந்த ஞான மேதை அவர்கள் சரத்தின் பலனை ஆய்ந்தும் கூறுகின்றார்கள். அடுத்துவரும் அடிகள் இதனை இனிதெடுத்து இயம்புகின்றன.

"தானான வாரமது வேழுஞ் சொன்னேன்
தப்பிவருஞ் சரத்துடைய பயனைக் கேளாய்
வேனான ஞாயிறிலே சரமே தப்பில்
வியாதியது மெய்தனிலே வளரும் பாராய்
ஆனான திங்களிலே சரமே தப்பில்
அறுதியினா லவர்காலம் முடிவு மாகும்
கானுலவுஞ் செவ்வாயிற் சரமே தப்பிற்
கலக்கமுறும் பெரியவொரு கலகமாச்சே."

"ஆச்சப்பா புதனதிலே சரமே தப்பில்
அபாயமடா தொடுத்தவகை பலியா தப்பா
நீச்சப்பா குருவாரஞ் சரமே தப்பில்
நிலையாது பொருட்சேதம் நினைந்த வெல்லாம்
சூட்சுமமாய்ச் சுக்கிரனிற் சரமே தப்பிற்
சொல்லுகிறேன் மக்களுக்குச் சேத மாகும்
தாழ்ச்சியடா சனிவாரஞ் சரமே தப்பில்
தனக்குமொரு தத்துவந்து தப்புந் தானே."

"தப்பாக விருகலையுந் தவறி யோடிற்
றனக்கு வருஞ் சனிதோஷந் தடையில் லாமல்
ஒப்பாக வொருபுறத்தி லொருநா ளோடில்
ஒருமூன்று வருடத்தி லிறந்து போவான்
அப்படியே யொருபுறத்தி னுளா றோடில்
ஆறுகு மாதமடா வறுதிக் காலம்
செப்புகிறேன் சந்திரனி லிரவே யொன்றுஞ்
செங்கதிரோன் பகலொன்று மியங்கிற் றானால்."

இங்ஙனம் பொதுவாகப் பயன்கூறிய அப்பா, அடுத்துத் தனித்தனியே சந்திர, சூரிய கலையின் பயனைப் பகர்கின்றார்கள். முதலில் சந்திரகலை இயங்கும்போது எவ்வெக் காரியங்களைச் செய்யலாம் என்பதனை,

"அறிந்துகொள்ளச் சொல்லுகிறே னின்னுங் கேளா
யப்பப்பா சந்திரன்றா னியங்கும் போது
சிறந்தமனை குடிபுகுதத் தனம்பு தைக்கச்
சேராம லிருந்தவரைச் சேர்த்து வைக்க
விரைந்தேறும் விஷமிறக்க விதைவி தைக்க
வேந்தர்களைத் தரிசிக்கக் கேள்வி செய்யப்
பிறந்தபிள்ளைப் பேர்குறிக்கப் பிணியுந் தீர்க்கப்
பிரியமுடன் வியாபாரம் பலவுங் கொள்ள"

"கொள்ளமணங் கோதயரை நாட்கு றிக்கக்
கொடிதான பகைவரிடங் கொழுகிச் செல்ல
வெள்ளமடா கீழ்க்கிணறு வெட்டிக் காண
வேந்தர்முத லமைச்சருக்குத் தூதனுப்ப
அள்ளியிரு கையாலு மைய மீய
வாகுமடா வித்தனையுஞ் சந்திரன் மீது
தெள்ளியதோர் சூரியன்று னியங்கும் போது
தீர்க்கமாய்ச் செய்வகையைச் செப்பக் கேளே"

என்று விளக்கிய விரதர் சூரியகலை இயங்கும்போது செய்யக் கூடியவற்றைச் சொல்லிவைக்கிறார். பின்னர்ச் சூல்கொண்ட தாயின் சூல் ஆணு பெண்ணு என்பதனையும் அறியலாம் என்பதனைச்

"சொல்லக்கேள் கெற்பனியாள் கெற்பந் தன்னிற்
சூலாணோ பெண்ணோவென் றுன்னைக் கேட்டால்
வல்லகலை சூரியனில் வலமே கேட்கில்
வளர்ந்திருக்கும் பாலகன்று ணே யாகும்
அல்லவவன் சூனியத்தி னின்று கேட்கி
லாணுகு மதன்கால மற்றுப் போகும்
நல்லகலை சந்திரனிற் பூர ணந்தான்
நாரியின்சூல் பெண்ணென்று நாட்டு வாயே"

என்று விபரித்து அடுத்த பாடலில் சூல் உண்டா இல்லையா என்பதனையும் தெளிவுபடுத்துகின்றார்.

இவ்வாறெல்லாம், நாளில் நாழிகையில், வளர்பிறையில் தேய் பிறையில் சரஓட்டநிலை எழிலாக எடுத்துக்கூறப்பெற்றிருப்பதால் தகைமைசால் தமிழறிஞர், வைத்தியர், சோதிடரும் வாழ்த்திப் போற்றுகின்றனர் சரநூலை.

"........................................
மூச்சப்பா நாதவிந்து ஆதி நாட்டம்
முறையறிந்தோர் வர்மாணி முழுதும் காண்பார்"

என்று வர்மசாத்திரத்தில் கண்டிருப்பதும் கவனிக்கத்தக்கது.

சரம் பார்த்தல் ஒரு கலையேயன்றிச் சுக துக்கத்துக்கு இதுவே காரணமென்பதன்று. நன்மை, தீமை நாயன்புறம் என்னும் நன்னம்பிக்கை நமக்கு அதிமுக்கியம்.

அறிவும் அனுபவமும் மார்க்கப் பற்றுமுள்ள பெரியார்கள், சாபல்லிய சரநூலுக்கு நூலமைப்பில் விரிவான விளக்கவுரை தருதல் பயன்மிகத் தருவதாகும்.

# "வீட்டிலே தேடாய் விரைந்து"

மௌலவி டி. ஹாமீம் ஆலிம் காதிரி,
தக்கலை.

தமிழென்னும் வானிலே தண்மதியாய், ஞானமெனும் கடலிலே நல்முத்தாய் வாழ்ந்து—வாழவைக்கும்—மாமேதை ஷெய்கு பீர்முகம்மது சாகிப் ஒலியுல்லா (ரலி) அவர்களின் பீடுயர்ந்த புகழை, நாடுகூற நாம் அறிவோம். தேனனைய தமிழில், கோனுரையின் சான்றினைப் பாகாக்கிப் பாவாக்கித் தந்த, அவர்களின் புலமை பெருமைக்குமப்பால் பரந்து, நினைவுக்குமப்பால் நிறைந்து நிற்கின்றது. அவர்களின் கவினுறு நெறி கொண்ட வாழ்க்கையும், நவில்தொறும் நயம் பயக்கும் பாக்களும், ஊறுகொண்ட உள்ளங்களுக்கு உதவுகின்ற ஔடதங்களே. பரமனின் அருள் பெற்றுப் பல்கலையும் பயின்று, நாடாளும் மன்னர்களும் நாடிப் போற்றும் நிலையிலே, அவர்கள் மிக்குயர்ந்த வாழ்க்கை வாழ்ந்தார்களென்று வரலாறு விளம்புகிறது.

அவர்கள் கலைகண்ட கவிஞர் மட்டுமல்ல; கரைகண்ட ஞானியும்கூட! ஆண்டவனைப் பற்றி அவர்கள் பாடிய அருந்தமிழ்ப் பாக்களை நினைத்தாலும் போதும் நெஞ்சினிக்கும். 'இறைவன் எங்கே?' என்ற கேள்விக்கு ஆயிரமாயிரம் விளக்கங்களை அறிஞர்களால் கொடுக்கமுடியும். ஆனால், அப்பா அவர்கள் தருகின்ற விளக்கம் அரிதானது, அழகானது. ஆழ்ந்து நோக்கின், நம்மைப் புனிதர்களாக்கும் பொருளைக் கொண்டது.

"வன்ன மின்னபடி யென்று கண்டொருவ
    ராலும் நின்வடி வறிந்திலார்
மின்னு மென்னிரு கண்ணிலுன் னொளி
    விளங்க நின்றருளும் வேந்தனே
பின்னுமென்னுளிருந் துன்னு முன்னுணரும்
    பிறவி பேதக மிலானே யான்
மன்னுமுன்னை மறந்தென்ன வன்பிழைசெய்
    தாலும்நீ பொறு வல்ல ஆதியே"

(ஞானப்புகழ்ச்சி)

கண்ணினால் இறைவனைக் காணமுடிவதில்லை; உண்மை தான். காரணம், அவன் வடிவமில்லாதவன். ஆனால் இறைவனே கண்ணின் ஒளியாக இருக்கிறான் என்கின்றார்கள் ஒலியுல்லா அவர்கள். யாரும் பார்க்கவில்லை, இறைவனும் பார்க்கவில்லை என்ற எண்ணத்தால் துணிந்து பாவங்கள் செய்வோர் உலகில் ஏராளம். அந்தப் பாவிகள் எவ்வளவு அப்பாவிகள்! கண்ணின் ஒளியாக இறைவன் இருக்கிறான் என்பதை மனிதன் எண்ணிப் பார்த்தால் மறைவான பாவங்கள் இத்தொல்லுலகில் மலியுமா?

இவ்வாறு, பார்வையிலும் இறைவனென்றுகூறி நம் பகுத்தறிவைத் தட்டியெழுப்பும் அப்பா அவர்கள் அடுத்து தரும் விளக்கத்தால் நம்மை வியப்பிலாழ்த்தி விடுகின்றார்கள். பாவச் செயல்களுக்கெல்லாம் ஆதாரம் பண்பற்றமனம்தான். நாம் பார்ப்பதை இறைவன் பார்க்கிறான் என்பது இருக்கட்டும். நாம் எண்ணுவதை எண்ணுவதற்கு முன்பே அவன் அறிந்து விடுகின்றான் என்கின்றார்கள் அப்பா அவர்கள். எவ்வளவு எழிலான விளக்கம்! தாய்க்கொளித்த சூலிருக்கலாம்; நாயனுக்கொளித்த சூதிருக்க முடியுமா? அப்பா அவர்கள் தரும் விளக்கத்தால் நம் அறிவுக் கண் திறக்கிறது; ஆண்டவனைப் பற்றிய அச்சம் பிறக்கிறது. புனிதர்களாகும் பேறினை நாம் பெறுகின்றோம்.

ஆண்டவனின் தன்மை பற்றி மேற்கூறியவாறு மொழிந்த அவர்கள் அவனைத்தேடும் முறையிலும் நமக்கு வழிகாட்டி இருக்கின்றார்கள்: 'இஸ்லாத்தின் சன்னியாசமே இல்லை' என்றார்கள் எம்பெருமான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள். முற்றும் துறந்த முனிவர்களால்தான் முதலவனைக் காணமுடியும் என்பதில்லை. இதைத்தான் ஒலியுல்லா அவர்கள்கூட வலியுறுத்துகின்றார்கள். அவர்கள் இளையோராய் இருந்தபோதே இறைநாட்டம் அவர்கள் இதயத்தில் வேரோடிவிட்டது. அமைதியை நாடிக் கானகமெங்கும் அலைந்தார்கள். உயர்ந்து நின்ற குன்றிலும் ஓங்கி நின்ற நெஞ்சிலே நினைவை ஏற்றி வைத்து நீதனைத் தேடினார்கள். வெற்றி கிடைத்தது. அவர்கள் கூறுகின்றார்கள்:

“மனத்துக்கும் நாவிலுற்ற வாக்குக்கு மிடையோ
ரினத்துக்கு மெட்டா திருப்போனை — நினைத்துப்போய்
காட்டிலே தேடினால் காணாது காணுமுடல்
வீட்டிலே தேடாய் விரைந்து” — என்று.

('ஞானமணிமாலை')

இறைவனில்லாத எந்த இயக்கமும் இல்லை. அருவியின் ஓசையிலும் அவன்; ஆற்றின் ஒழுக்கிலும் அவன். அவன் — காற்றிலும் இருக்கிறான்; காட்டிலும் இருக்கின்றான். ஆனால் அவை களிலெல்லாம் ஆண்டவனை உணருகின்ற ஆற்றல் எல்லாருக்கும் இல்லை. எனவேதான் காட்டிலே தேடினால் இறைவனைக் காண இயலாது எனக்கூறாமல் காணுதல் அரிது எனக் கூறினார்கள் அவர்கள். ஊரைத் துறந்து, உறவைத் துறந்து காட்டில்சென்று கடுந்தவமியற்றுவது எல்லாருக்கும் எளிதல்ல. ஆனால் எல்லாரும் ஆண்டவனை உணரவேண்டியவர்கள்; அவனது அருளைப் பெற வேண்டியவர்கள். எனவே உடலென்ற வீட்டில் இறைவனை விரைந்து தேட அப்பா அவர்கள் கூறுகின்றார்கள். இங்கு 'விரைந்து' எனக் குறிப்பிடுவதனால் அவர்கள் கூறுகின்ற வழி யிலுள்ள எளிமையையும் ஏற்றத்தையும் நமக்கு உணரச்செய்வ தோடு அதில் ஆவலையும் உருவாக்கி விடுகின்றார்கள்.

எலும்பு தோல் போர்த்த எண்சாண் உடம்பிலே எண்ணற்ற இரகசியங்கள் மறைந்துகிடக்கின்றன. அதன் ஒவ்வோர் அமைப்பும் ஒவ்வோர் அசைவும் இறைவனின் வல்லமையைத் தான் நமக்குச் சொல்லிக்கொண்டிருக்கின்றது. சிந்தையும் மனமும் செயலாற்றும் விந்தை நம் உடலில்தான் நடைபெறு கின்றது. இவற்றையெல்லாம் உணர்ந்து உடலை நாம் பார்க்கின்ற போது நம்மிலே உறைகின்ற நாயனை அங்குக் காணமுடியும். அப்போது — 'நான்' என்ற அகந்தை அழியும்; நாம் யார் என்ற விந்தையும் புரியும்.

இவற்றைப்போல் இறைவனின் தன்மை பற்றியும் அவனை உணருகின்ற முறைமை பற்றியும் கூறும் இத்தமிழ்ப்பாக்கள் பல வற்றை அப்பா அவர்கள் அருளியிருக்கின்றார்கள். 'தன்னை அறிந்தாலே தானவனைக் காணமுடியும்' என்ற தத்துவம்தான் அவைகளிலெல்லாம் இழைந்தோடுகின்றது.

எங்கும் நிறைந்த இறைவனை மனிதர்கள் எங்கெங்கோ தேடு கின்றார்கள். நூற்களைக் கற்று நொந்து விடுகின்றார்கள். சாத்திரங் களை ஓதி சலித்து விடுகின்றார்கள். அங்கெல்லாம் அவர்கள் தேடும் ஆதியை அவர்களால் காணமுடியவில்லை. அத்தகையோரின் நிலைமையை ஓர் அழகான உவமையின் மூலம் அப்பா அவர்கள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றார்கள்.

"பேய்த்தேரை மெய்யென்று பேதலித்த மான்போலச்
சாத்திரங்க ளோதித் தளராதே — சாத்திரத்தைக்
கற்றறிந்து விட்டாற் கதியாகா தப்பொருளைச்
சற்றறிந்து பாராய் தரித்து." ('ஞானமணிமாலை')

கானல் நீரைக்கண்டு ஓடுகின்றது ஒரு மான் — தாகத்தைத் தணித்துக்கொள்ள! பக்கத்தில் சென்று பார்த்ததும் அது தண்ணீர் இல்லை என்பது தெரிகிறது. ஏமாற்றமடைந்த மான் இன்னும் ஓடுகிறது. பாலை எங்கும் ஓடுகிறது. தேடி ஓடிய தண்ணீர் அதற்குத் தென்படவில்லை. களைத்துவிட்ட மான் ஏமாற்றத்தின் எல்லையில்போய் நின்றுகொண்டு பேதலித்து விழிக்கிறது. பாரநூல் சாத்திரங்களையெல்லாம் படித்துச் சலிப்போடு களைத்துவிட்ட மானின் கதியைத்தான் அடைகின்றார்கள். 'தளராதே' என்று அவர்கள் தயவுடன் கூறும்போது ஓதி ஒய்ந்தோரின் நிலைமையை ஓடி ஓய்ந்த மானோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்கின்றோம். நம் நெஞ்சம் நெகிழ்கிறது. அப்போது அவர்கள் அடுத்துக் கூறுகின்ற அறிவுரையை நினைக்கின்றோம். இறைவனை உள்ளத்தில் தரித்து சற்றே சிந்தித்தாலும்போதும் அவனை உணர முடியும் என்கின்றார்கள் அப்பா அவர்கள். இங்குச் 'சற்று' என்று முதலில் கூறி அவர்கள் சொல்லும் வழியின் சிறப்பையும் 'தரித்து' என்று இறுதியில் கூறி அவ்வழியின் தன்மையையும் இலக்கிய நயத்தோடு அவர்கள் நமக்கு அறிவுறுத்துகின்றார்கள். அவர்களின் புலமையை எண்ணி வியக்கின்றோம்; பாவின் பொருளை உணர்ந்து பயனுறுகின்றோம்.

---

பாவங்களைச் செய்துவிட்டு இப்லீஸ் என்னைக் கெடுத்து விட்டான் எனக் கூறுதீர்கள். கியாமத்து நாளையில் அவன், தான் கெடுக்கவில்லை என்று நிரபராதியாகி விடுவான்.

உணவு மனிதனைத் தேடிச் சுற்றிக் கொண்டிருக்கிறது. அவன் உணவைத் தேடித் திண்டாடிக் கொண்டிருக்கிறான். இரண்டில் ஒன்று அமைதி அடைந்து விட்டால் மற்றது வந்தடைந்து விடும்.

— அலிய்யுல் கவ்வாஸ் (ரஹ்)

# பெரும் புதையல்

டி. எம். பீர்முகம்மது

கல்லிடைக்குறிச்சி

தவஞானப் பேரொளி தக்கலைப் பீரொலி தரணி போற்றும் தனிப்பெரும் ஆத்மீக ஞானி பீர்முகம்மது சாகிப் வலியுல்லாஹ் அவர்கள், 17-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவர்கள் என ஆய்வு நடத்திய அறிஞர் பெருமக்கள் அறுதியிட்டு உறுதிகூறியிருக்கின்றனர். அதே நூற்றுண்டில்தான் கவிக்கடல் உமறுப் புலவர் அவர்களின் சீறுப்புராணமும், பெஸ்கி என்ற வீரமா முனிவர் அவர்களின் தேம்பாவணியும் எழுந்தன என அறிகிறோம்.

சீறு என்ற அரபுச் சொல்லுக்கு வரலாறு எனப் 'பொருள். மூன்று காண்டங்களையும் தொண்ணூற்று மூன்று படலங்களையும் ஐயாயிரத்து இருபத்தேழு செய்யுட்களையும் கொண்ட செந்தமிழ்ச் சீறு, ஒரு பெரும் காப்பியமாகக் காட்சியளித்து உயர்ந்து நிற்கிறது.

தேம்பாவணி, இயேசுநாதரின் வளர்ப்புத் தந்தையான சூசை முனிவரது வரலாறு. மூன்று காண்டங்கள், முப்பத்தாறு படலங்கள், மூவாயிரத்து அறுநூற்றுப் பதினைந்து பாடல்களைக் கொண்டு, தேன் போன்ற பாக்களாலாகிய மாலை என்னும் பொருளில் விளங்குவது தான் தேம்பாவணி!

சீறுவும் தேம்பாவணியும், "வரலாறு" என்ற முறையில் வெளிவந்து தமிழுக்கும் சமுதாயத்திற்கும் ஆக்கமும் ஊக்கமும் தந்து சிறந்து விளங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் அதே

சம காலத்தில் தோன்றியதாகக் கூறப்படும் ஞானமேதை அப்பா அவர்களோ, எந்த வரலாற்றுக்குள்ளும் தம்மை முற்றாக ஈடு படுத்திக் கொள்ளாமல், ஞானப் பெருவெளியில் தீனக்கரம் பிடித்துப் பீடுநடை போட்டுப் பெரும் சிறப்புப் பெற்றார்கள். தெவிட்டாத தேன் தமிழில் தெளிவான ஆத்மீகத்தை ஏறத்தாழ பதினெண்ணாயிரம் பாக்களில் வடித்துத் தந்துள்ளார்கள். ஆத்மீக ஞான வெள்ளத்தை ஆயிரக்கணக்கான பாடல்களில் ஓடவிட்டிருப்பது மாத்திரமின்றிக், கவிதை வகைகளில் எத்தனை விதங்கள் உண்டோ அத்தனை வகைகளிலும் அழகாக மரபு கெடா மல் பாடி நம்மையெல்லாம் பரவசமூட்டிச் சென்ற அற்புதத்தை எவராலும் போற்றாதிருக்க முடியாது.

அவர்களின் ஞானப்புகழ்ச்சிப் பாடல்கள், மிகச்சிறந்த அழகு தவழும் ஆழ்ந்த கருத்துக் கொண்ட அற்புதமான பாடல்களாகும். அருமையும் பெருமையுமிக்க ஞானப் புகழ்ச்சி, 460 பாடல்களும் அதனையொட்டிய (துஆ இரப்பு) 227 கண்ணிகளும் இணையக் கண்ணின் கருமணிகள்போல் காப்பாற்றப்பட வேண்டிய பெரும் பெட்டகமாகும். அதன் அழகு நடைக்காக ஒரு தடவை, ஆழ்ந்த சிறந்த கருத்துக் கருவூலத்திற்காக ஒரு தடவை, அருமையான அற்புத ஆத்மீக ஞானப் பெரு வெள்ளத்தில் மூழ்குவதற்காக ஒரு தடவை, இப்படிப் பல தடவைப் படித்துப் பயன்பெற வேண்டிய பெரும் புதையலாகும் ஞானப் புகழ்ச்சி!

அப்பாடல்களை ஆய்வுகாண விழைந்தால், ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு நூலாக அமையும்! அத்தகைய ஆழிய கருத்துக் குவியல்களான அற்புதமான பாடல்களை எவ்வாறு ஆய்வு கண்டு அள்ளிக் கொடுத்துவிட முடியும்?

அப்பா அவர்கள் எழிலார்ந்த தங்களின் சந்தக் கவிதைகளால் இறைவனை இறைஞ்சிக் கெஞ்சி வேண்டி உருக்கமாகப் பாடி இருக்கும் பாடல்களினூடே இலெளகீகத்தையும் உள்ளடக்கி ஆங்காங்கே வற்புறுத்திக் கூறியிருக்கும் பகுதிகள் மிகவும் போற்றத்தக்க முறையில் அமைந்து கிடக்கின்றன. உருக்கமாக உளம் நெகிழ்ந்து இறைவனிடம் வேண்டுதல்விடுக்கும் பாணியே அலாதியாக மிளர்கிறது. அந்த உருக்கத்தினூடேயும் கொஞ்சம் உரத்த குரலும் கொடுத்திருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

சிறந்த உயர்ந்த செந்தமிழ்ச் சொற்களால் பாடிய பாடல் களில், சில சுடு சொற்களும் நயமாக விழுந்திருக்கின்றன.

அதுவும், யாரை அந்தச் சுடு சொற்களால் சாடவேண்டுமோ" அவர்களையே சாடி, சாட்டையடி கொடுப்பதுபோல் கூறியிருப்பது மிகவும் விரும்பத்தக்கதாக அமைந்து கிடக்கின்றன. குறிப்பாக,

"பசித்தவர்க் கொன்றீயாத லுத்தரையும் படைத்தாயெம்
மிறையவனே"
"உன்னை வணங்காத லுத்தரையும் படைத்தாயெம்
மிறையவனே"
கல்லாத கயவரெனை வெல்லாமடியேன் கத்தனே
யுன்றனடைக்கலம் தானேன்"

முதலான பாடல்களின் மூலம் தங்களின் வருத்தத்தையும் அதே நேரத்தில் அவர்களின்மீது வெறுப்பையும் காட்டியிருக்கின்றார்கள். பசித்தவர்க்கு ஒன்றும் கொடுக்காத இரக்கமற்றவனை, "உலுத்தன்", என்றும், இறைவனுக்கஞ்சி அவனை வணங்காதவனையும் "உலுத்தன்" என்றும், கல்வி கற்காதவனைக் கயவனென்றும் கூறியதுடன் நில்லாது, "அந்தக் கயவன் வேறு ஏதாவது குறுக்குவழிகளில் என்னை வென்று வெற்றி கொண்டு விடாமல் நீ காப்பாற்று இறைவா! அதற்காக உன்னிடம் அடைக்கலமாகின்றேன்" என்று அழகு நடையில் அருமையாக அறிவுரை தரும் அப்பா அவர்களின் அன்புத் தமிழ் ஆத்மீகப் பாடல்கள் அனைத்துமே அள்ள அள்ளக் குறையாத அதியற்புத அறிவுச் சுரங்கமாகும். இது எந்தக் கவிஞனும் ஞானியும் பின்பற்றாத பெரும் சாதனையாகும்.

"சென்ற காலம் நம்மை விட்டுச் சென்றுவிட வில்லை; நூல் உருவில் நம் கைகளில் உலவுகின்றது. அறிஞர்களின் நூல்களைப் படிப்பவர்கள் அவர்களுடன் உரையாடுகின்றனர்." இந்த ஆராய்ச்சி மொழிக்கு எடுத்துக்காட்டாக ஞானமேதை பீர் முகம்மது சாகிப் வலியுல்லா அவர்களின் பாடல்கள் சிறந்து உயர்ந்து விளங்குகின்றன என்பது மிகையல்ல.

அப்பா அவர்களின் ஆத்மீக ஞானம் வளர்க!

அவர்களின் அன்புப் பாடல்கள் வாழ்க!!

# உதவிதா எங்கள் ஒருவனே!

: எம். அப்துஸ் ஸலாம், எம். ஏ.,
அ. அ. அரசினர் கல்லூரி,
வடசென்னிமலை.

"அன்னை கெற்பமதி லென்னை யற்பஜல
மாக வைத்துருவ தாக்கியே
என்னை மெய்ப்பொடுயிர் தன்னை விட்டுணவ
தீந்து புவியினில்வ ருத்திநீ
முன்னை நட் பொடெனையே வளர்த்துதவு
முதலவா வெனது வறுமையால்
உன்னை நித்தலுமே யுன்னிக் கேட்பனதுக்
குதவி தாவெங்க ளொருவனே"

(ஞானப்புகழ்ச்சி 36)

ஞானம் என்பது பேரறிவு. ஞானமே வாழ்க்கைத் துன்பங்களை ஒழிப்பதால் அதுவே மறுமைப் பேற்றுக்குச் சாதனம். மண்ணில் உள்ள பொருட்களிடம் பற்றில்லாத் தன்மையுடையவரும், தமக்குரிய கடமைகளைத் தவறாது செய்பவரும், பக்தி உடையவரும், நிலையாமையை நன்கு உணர்பவருந்தான் ஞானத்தை அடைய முடியும். ஆழிசூழ் உலகில் ஆண்டவன் படைத்த உயிர்களில் மேம்பட்டு இருப்பவர் மனிதரே. அவர்களில் ஐம்பொறிகளையும்

அடக்கிக் கசடறக் கற்றுக் கற்றவழி நின்று ஒழுகுபவரே மெய்யறிவு அல்லது நல்லறிவுடையவர். அவர் எல்லாம் உடையார் என எப்பாலரும் இயையும் முப்பால் மொழியுடையார் மொழிகின்றார்.

இறைவன் அறிவு மயமானவன். அவன் அகிலமெங்கும் அருவம், உருவம், அருவுருவம் ஆகிய தன்மைகளைக் கடந்தவன். அத்தகையோன் உளதாகவும், இலதாகவும், மருவாகவும், மலராகவும், ஒளியாகவும், உயிராகவும், கருவாகவும் இருப்பவன்.

செஞ்சொற் காவியமாம் சிறப்புமிகு சீறாவில் கவிவலவர் உமறுப் புலவர் சிந்தையாலும் மொழியாலும் வருணித்துக் காட்ட முடியாத இறைத்தத்துவத்தினை எல்லாமாய் எங்குமாய், வியாபித்திருக்கும் இறைவனின் தத்துவத்தை—

"திருவினுந் திருவாய்ப் பொருளிலும் பொருளாய்த்
தெளிவினுந் தெளிவதாய்ச் சிறந்த
மருவினு மருவா யணுவினுக் கணுவாய் மதித்திடாப்
பேரொளி யனைத்தும்
பொருவினும் பொருவா வடிவினும் வடிவாய்ப்
பூதலத் துறைந்த பல்லுயிரின்
கருவினுங் கருவாய்ப் பெருந்தலம் புரந்த
கருத்தனைப் பொருத்துதல் கருத்தே"

என்ற பாடலில் வடித்துக் காட்ட முற்பட்டுள்ளார்.

ஆண்டவன் மெய்யறிவாளர்களின் தனித் தலைவன்; அவன் வாலறிவன். அறிவு மயமாக விளங்கும் அறிதற்கரிய அடியார்களின் தலைவன். ஞான மயமாக உள்ளான். அவனைப் போற்றிப் புகழ் பாடுதலினால், அந்நீக்கமற நிறைந்தோனை, நினைவில் கொள்ள வேண்டும் என்ற அறிவுரையை அடியார்கள் தம் வாயிலாக உலகுக்கு உணர்த்துதலே ஞானப் புகழ்ச்சியாகும். இத்தகு சீர்மையுடைய சிந்தை துலக்கும் நேரிய கருத்துக்களை, நிலையான வாழ்வுக்கு வழிகளை, நினைவைப் பசுமையாக்கும் மொழிகளில், இசுலாமியச் சமுதாயம் இனிய நிலை எய்திட, தக்கலைப் பீரப்பா அவர்கள் பல ஞானப் பாடல்களை வழங்கியுள்ளார்கள். ஆண்டவனின் அருள் வேண்டி அவர் பாடிய பாடல்கள் அமுத மழையாக உள்ளன.

ஆதி தன் தூதாக, பேரின்ப விளக்காக, அமருலகினுக்கும் நல்லரசாக, எவர்க்கும் பவக்கடல் கடப்ப வருமொரு திருமரக்கலமாக, பூதலத் துறைந்த முழுமணிச் சுடராக, புண்ணியந்

திரண்ட மெய்ப்பொருளாக, உயர்ந்தவர் நம் அண்ணல் நபிகள். தீனெனும் பயிரைக் காத்துச் செழும்புகழ் விளைத்த செம்மலா வார் அவர். மின்னொளி கரக்கும் சோதி மெய்யெழில் உடையவர். செழுமழை முகிலென அமுதஞ் சிந்திட வழிகதிர் நபியென வகுத்த பேரொளியானவர். அருமறையின் பொருளாக, மாநிலந் தனக்கோர் மணிவிளக்காக, இந்த வையத்தை வாழ்விக்க வந்த நபிகள் பெருமானை நல்லதோர் வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும். அவர்தம் அரும்பெரும் அறவுரைகளை நம்பிக்கையுடன் கைக்கொண்டு, நாள்தோறும் தூயமனத்தாலும், தேர்ந்து தெளிந்த சொற்களாலும், நெஞ்சினிக்க நிறைவு ததும்ப எல்லாம் வல்ல இறைவனை வணங்குவோமாக.

இறைவன் இவ்வுலகங்களையும், பிறவற்றையும் படைப்பதற்கு முன் அண்ணல் முகம்மதை ஒளியால் இருலோகங்களுக்கும் பெரும் பேறு எனலாய்ப் படைத்து வைத்திருந்தான். ஒளி வடிவாய் ஒளிர்ந்து கொண்டிருந்த இறைவனின் அம் முதற் படைப்பே நபியாகும். இந் நிலவுலகத்தையும், உயிரினங்களையும், அண்ட சராசரங்களையும் முகம்மதெங்கள் நபிகள் கோமானின் பொருட்டால் படைத்துத் தந்ததாக இறைவன் தனது திருமறையில் எடுத்துக்காட்டியிருக்கிறான்.

இவ்வுலகத்தில் காணப்படும் இறைவனால் படைக்கப்பட்ட எல்லாப் பொருட்களும் — அவை உயிருள்ளவையாயினும், உயிரற்றவையாயினும் — உயிரும் உடலும் சேர்ந்து இறைவனை எண்ணத் தூண்டும் கருவிகளாக அமைந்துள்ளன. நபிகளுக்காகப் படைக்கப்பட்ட படைப்புக்கள் மானிட சமுதாயம் மாண்பு பெறத் துணை புரிவதால், இப்படைப்பின் நாயகனை உணராத நெஞ்சென்ன நெஞ்சு? காணாத கண் என்ன கண்? கேளாத செவி என்ன செவி? மண்ணுலக வாழ்வை நீத்து மறுமையுலகம் செல்லும்போது ஊரும், உறவும், உற்றாரும், பெற்றோரும் உறு துணையாக வருவதில்லை. எங்கும் நீக்கமற நிறைந்த நிறையுடையோனும் அல்லாவின் அருளே துணையாகும். 'இறையருள் ஒன்றே உண்மை எனத் தேர்ந்து தெளிந்து கொள்வாய் மனமே!' எனத் தன்நெஞ்சுக்குக் கூறுவதுபோன்று மக்கள் மாண்புற இறைவனின் இன்னருளை அண்ணல் நபி வழி பெற்றிட வேண்டுகிறார் தக்கலை அப்பா அவர்கள்.

எல்லாம் வல்ல இறைவன் எல்லா உலகுக்கும், உயிர்களுக்கும் மூலமாய் நிற்கும் ஆதியாக உள்ளவன்! இவ்வுலக உயிர்களின் வாழ்வினை இயக்கி, நடத்திச்சென்று நெறியாக, முறையாக முடிக்கும் அந்தமாகவும் உள்ளவன். ஆக்குவதும், அழிப்பதும்

தொழிலாகக் கொண்டவனுக்கு அழிவும் இல்லை; தோற்றமுமில்லை. இந்த ஆற்றலில் அவனுக்கு ஈடு, இணைகொண்ட எவரும், எதுவும் இல்லை. சொல்லுக்குள் அடங்கா இறை இலக்கணங்கள் அனைத்தும் கொண்டவன்.

"காணாத பெரியவனே காண்பதற்கு மெளியவனே
கவினு மேனி
ஆணாக அலியாகப் பெண்ணாக வமைந்தவனே
வவையு மென்றும்
பூணாத காட்சியனே புணர்வு உணர்வு உண்டு
இல்லவனே புகலா நின்ற
வாணாளும் முடையவனே வல்லவனே உன்பெருமை
மதிப்பார் யாரே"

என்ற பாடலில் இறைவன் ஆணுமல்லாது, பெண்ணுமல்லாது, அலியுமல்லாது உண்மையாக இன்மையாக இருக்கின்றவன்; சேய்மைக்குச் சேய்மையனாய் அண்மைக்கு அண்மையனாய் ஞான அனுபூதியினாலே உணர்தற்கரிய பெரியனாய் என்றுமாய் இறைவன் இருக்கின்றான் எனக்கூறுகிறார் கவி வலவர் உமறுப் புலவர்.

இத்தகு பெரியோன் சர்வ உலகங்களையும் அடக்கி ஆண்டு கொண்டு உலகத்துப் பொருட்கள் அனைத்திற்கும் அருட்கொடை வழங்குபவனாக உள்ளான். இப்படி உலகத்து மக்களை அவரவர் புண்ணிய பாவங்களுக்கு ஏற்ப நீதி நெறி தவறாது படைக்கின்றான். நம்முள்ளே இருக்கும் அவனை ஐம்புலன்களாலும், தினமும் ஐவேளைகளில் நெஞ்சுருக நினைந்து வழிபடவேண்டும். "ஐயனே! நிறைந்த மனமுடையார் மண்ணிலே வாழும் மறை மொழி மாந்தரிடம் விருப்பம் கொண்டு நட்புப் பூண்டவனே! பிரபஞ்ச வெளி (ஆகாயம்) எல்லா அணுக்களிலும் பரவி வெளி வடிவாக இருக்கும் பெருமை பூண்ட உத்தமனே! ஒளிப் பிழம்பே! நின்னை இறைஞ்சுகின்றேன்; அருள்மழை பொழிந்து துணை செய்வாய் தூயவனே! என ஞானியார் பீரப்பா ஆண்டவனிடம் அருள் வேண்டிப் பாடுகிறார்.

அன்னையின் மணி வயிற்றில் அணுவடிவாய் நாம் இருந்த போது எதனாலும் அழியாது காத்து மெல்லக் கருவளர்த்து உருவாக்கி, குழவி வடிவம் கொடுத்தவன் இறைவன். பின்னாளில் இம்மண்ணில் பிறப்புத்தந்து பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து பேணி வளர்த்த பெருமையுடையவன் இறைவன்.

உலகின் இழி செயலால் இடுக்கணே, இன்னலோ, இடையூறோ ஏற்படாது நம்மைப் பேணி வளர்த்த பெரும் பொருளாவான். “என்னைப் படைத்துக் காத்து ஆளாக்கி விட்டதை எண்ணி எண்ணி உன்னை வணங்குகிறேன். மகிழ்ந்து மனமுருக உன்னையே பற்றுக் கோடாகக் கொண்டு இந்த மண்ணில் இருக்கின்றேன். என்னை உன் திருவருளால் காத்து உலகத் துன்பங்கள் தொடராதவாறு ஈடேற்றி உன்னுடைய பேரருள் இன்பம் கிடைக்குமாறு பெரிதும் துணை செய்” என வேண்டுகிறார் அருள்ஞானி.

---

நீ தலை வணங்கப்படுவதற்காக வணங்காதே. பதவிக்காக நெற்றியைக் கருப்படையச் செய்யாதே. எனினும் எந்த நோக்கமுமன்றி இறைவனை வணங்கு.

தான் நல்ல மனிதன் என வாதிடுபவன் எறும்புக்குக் கூட இடரளிக்கமாட்டான்.

— அபுல் மவாஹிப் (ரஹ்)

# ஞானக் கலைக்கூடம்

உ. அப்துல் ஹமீது,
கடையநல்லூர்.

தென்காசியில் பிறந்து, தக்கலையில் மறைந்துள்ள மெய்வழி கண்ட ஞானி பீர்முஹம்மது (வலியுல்லா) அவர்கள் 17-வது நூற்றுண்டின் அண்மைக் காலத்தில் நடமாடி வந்த ஞானக் கலைக் கூடம்; மெய்ஞ்ஞானக் கருவூலம்; வேத வல்லுநர்; சாதனைச் செம்மல்; அப்பா அவர்கள் தன்னிலும், எதிர்பட்ட அத்தனைப் பொருள்களிலும் இறைவனைக் கண்ட மாமேதை. பேதமற வாழ்ந்து, சன்மார்க்க நெறி வகுத்துக் கொடுத்த பெருந்தகை.

அறிவை அறிந்தவர்கள் ஆயிரத்தில் ஒருவர்; அருளை அறிந்தவர்கள் லட்சத்தில் ஒருவர்; குருவை அறிந்தவர்கள் கோடியில் ஒருவர்; கருவை அறிந்தவர்களைக் காண்பதே அரிது. பீர்முஹம்மதப்பா அவர்கள், தம் காலத்தில் கருவை அறிந்து, தமக்கு ஒப்பாரோ மிக்காரோ இல்லாத தனிப்பெரும் மேதையாகக், காண்பதற்கே அரிதான நிலைமையில் ஒதுங்கி வாழ்ந்துள்ளார்கள். அவர்களின் அறிவும், நெஞ்சும் ஞானத்தால் நிறைவடைய, மிகவும் அடக்கத்துடன் தவ வாழ்வு நடத்தினர்கள். அப்பா அவர்களின் ஆத்ம ஞான வளர்ச்சியின் முதிர்ச்சி அவர்களைச் சம்பூரண மனிதராக உருவாக்கியது. ஆகவே அவர்கள் தமக்குள்ளே மரணித்து இறைவனை நெருங்கி வாழ்வதற்கான நிலை எய்தினர்கள்.

பீரப்பா அவர்கள் பதினெட்டாயிரம் ஞானப்பாக்கள் இயற்றியுள்ளார்கள். தமிழ் நாட்டில் இதுவரை வேறு எந்த மேதையும் இவ்வளவு அதிகமான அருட்பாக்கள் இயற்றவில்லை. அவர்களது தவ வாழ்விற்கும், ஞான உச்சத்திற்கும், அவர்களது உள்ள உலையிலிருந்து வடித்தெடுத்த ஞானப்பாக்கள் கட்டியம் கூறுவதுடன், அவர்களது மேதா விலாசத்திற்கு உகந்த எடுத்துக்காட்டுகளாகவும், இன்றும் நின்று இலங்கிக் கொண்டிருக்கின்றன. அவர்கள் இயற்றிய ஞானப்பாக்களின் வாயிலாக அவர்தம் உள்ளொளி பொங்கி வழிகின்றது. அந்த வேதாந்த வீணையின் இன்னிசையில் ஞானம் கொப்பளிக்க—பல்துறை விளக்கங்கள் பொங்க—இலக்கியம் முழங்க—சிற்சில அரபுமொழி ஆபரணங்களுடன் தமிழ் களிநடனம் ஆடுகிறது.

தத்துவம் என்ற சொல்லுக்கு உண்மை என்று பொருள். எனவே தத்துவ ஞானம் என்பது உண்மையை அறிவது ஆகும்.

உண்மை என்பது 'உள்ளது' எனப்படும். அது எப்பொழுதும் நிலையாக இருப்பது. பொருள்கள் அத்தனையும் என்றும் உள்ளவை அல்ல. என்றுமே உள்ள பொருள் ஏதாவது உண்டா? உண்டாயின் அது எது? அதன் இயல்புகள் எவை? என்பன போன்றவற்றைப் பீரப்பா அவர்கள் நுண்மாண் நுழைபுலத்தோடு ஆய்ந்து முடிவு கண்டார்கள். சகல வரம்புகளையும், தொடர்புகளையும் கடந்த இறைவன்பால் நெருங்குவதையே குறிக்கோளாகக் கொண்டு, படிப்படியாக அந்தப் பக்குவத்தை அடைய அலைந்து திரியும் ஆத்மாவை நேர் வழியில் செலுத்த வழிமுறை வகுத்துத் தந்துள்ளார்கள். தேக நிலை மறந்து—தேகி நிலை தெரிந்து—பாவ நிலை விட்டு—யோக நிலை தெளிந்து—ஏக நிலையில் நின்று—நிலைபெற்று—பரமானந்த நிலை பெறுவதே பிறவியின் பயன் என்பதைத் தெளிவு படுத்தியுள்ளார்கள்.

அப்பா அவர்கள், அடக்கம் நிறைந்த இறைவணக்கத்தின் மூலம் தான் ஆன்மாவின் ஒளி விளக்கை ஏற்றி வைக்க வியலும் என்பதைத் தமது ஞானப்பாக்கள் மூலம் வலியுறுத்தியுள்ளார்கள். இஸ்லாத்தின் விதிப்படி ஒவ்வொரு மனிதனும் தினந்தோறும் ஐந்து நேரமும் இறைவனைத் தொழ வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளார்கள். சில போலித் துறவிகள், "மனதுக்குள்ளேயே தொழுதுகொள்கிறேன்" என்று கூறிவருவதை வன்மையாகக் கண்டித்துள்ளார்கள். எளிமையும் இனிமையும் நிறைந்த வார்த்தைகள் மூலம் அப்பா அவர்கள் அந்தப் போலிகளுக்கு அடியிற் கண்டபடி இடித்துரைக்கிறார்கள்.

"உள்வணக்கம் என்றோதும் கள்வர்களே கேளும்:
உள்ளுக்குள்ளே நினைவாலே உன்மனைவி யோடே
ஒன்றுபடச் சேர்ந்ததினால் உனக்குப்பிள்ளை உண்டோ?
அள்ளிக்கையாலே அசனம் உண்டாற் போலே
அனுதினமும் நினைத்துப்பசி அடங்குவதும் உண்டா?
வெள்ளாமை செய்வதுபோல் நினைந்து முடியாது;
கொள்வகையும், கொடுவகையும், கொடுக்கல் வாங்கலில்லை
உள்ளுக்குள்ளே நினைத்ததினால் ஒன்றும் முடியாது."

பீரப்பா அவர்களின் ஞானப் பாக்களில், நிச்சய ஞான மர்மத்தின் விளக்கங்கள் மலிந்து காணப்படுகின்றன. அப்பா அவர்கள் புறப்புலன்களை ஒடுக்கி, அக அழுக்கைக் கழுவ எந்தெந்தப்படித்தரங்களில் எந்தெந்த 'திக்று' (ஜபம்)களைச் செய்யவேண்டும் என்பதை வகைப்படுத்தியுள்ளார்கள். தன்னை மறந்து, இறைவனின் நினைப்பிலே தன்னை மூழ்கடித்துக் கொள்ளும் தவமே மேலான தவம் என்பதைப் பீரப்பா அவர்கள் தமது ஞானக் குறவஞ்சியில் கீழ்க்கண்டபடி விளக்கியுள்ளார்கள்.

"தன்னுள் விளங்கும் தவமென்ன சொல்லடி சிங்கி — அது
தன்னை மறந்து தவத்தில் இருப்பது சிங்கா
என்ன விதமாகத் தன்னை மறப்பது சிங்கி — அது
ஒன்றைப் பொருந்தி ஒதுங்கி இருப்பது சிங்கா
என்ன விதமாக ஒன்றைப் பொருந்தலாம் சிங்கி — அது
எல்லாம் மறந்து இருளாய் இருப்பது சிங்கா"

இந்த 'ஞானக் குறவஞ்சி' தமிழகத்தில் பதினெண் சித்தர் பாடல் எனப் புகழுடன் விளங்கிவரும் 'பெரிய ஞானக்கோவை' என்ற நூலில் இடம் பெற்றுள்ளது என்பதானது பீரப்பா அவர்களும் சித்தர்கள் வரிசையில் உள்ளவர்கள் என்பதைக் குறிப்பாக எடுத்துக் காட்டுகிறது.

மனிதன் சிந்திக்ககூடிய அத்தனையும் அழியக் கூடியன. ஆகவே சிந்தனைக்கே எட்டாதவன் இறைவன். சர்வ வல்லமையும் உள்ள அந்த இறைவனின் திருமுன் நின்று தம் பிழைகளையும், குறைகளையும் கூறி, உள்ளம் உருகி, உடல் நெக்குருகி அவனிடமே அடைக்கலம் தேடி மன்றுடும் முறை பற்றி அப்பா அவர்கள் கூறியுள்ளதை, அவர்களது ஞானப்பாக்கள் மோன சாட்சியம் பகர்ந்து கொண்டிருக்கின்றன.

பீர்முஹம்மது அப்பா அவர்கள் சரியை — (ஷரீஅத்து), கிரியை (தரீகத்து), யோகம் (ஹக்கீகத்து), ஞானம் (மஃரிபத்து) என்னும் நான்கும் கைவரப் பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். அப்பா அவர்கள் தமது நாட்டத்தை இறைவனிடம் மட்டுமே கேட்டார்கள். அதற்கு இறைவனுடைய பதிலை மட்டுமே எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இறுதியில் அப்பா அவர்கள் எச்செயலும் வேண்டுதலும் அற்றும், எந்தத் தேவையையும் விரும்பித் தெரியப்படுத்தாமலும், அல்லாவின் மீது மட்டும் நோட்டமாக இருந்து, அவ்விறைவனால் அளிக்கப்படும் அருட்கொடையை மட்டும் ஏற்றுக் கொள்ளும் உச்ச நிலையை எய்தினார்கள். ஆகவே பீரப்பா அவர்கள் பக்தியில் சக்தியைக் கண்டார்கள். சக்தியால் சித்தி பெற்றார்கள். சித்தியின்மூலம் முக்தியடைந்தார்கள். முக்தி அவர்களுக்கு மகத்தான பேறுகளைக் கொடுத்து பேரானந்த நிலைக்கு உயர்த்தியது. அப்பா அவர்கள் இறைவனை அறிவால் அறிந்து, எண்ணத்தால் உறுதி செய்து, ஞானத்தால் உண்மை நிலைகண்டு, யோகத்தால் அவன் பால் நெருங்கி விட்டார்கள்.

பீரப்பா அவர்களிடம் வெளிரங்க அனுஷ்டானங்களுடன், அதன் அகமிய அந்தரங்க அனுஷ்டானங்களும் குடிகொண்டிருந்தன. "தன்னை அறிந்தவன், தன் இறைவனை அறிவான்"

என்ற நபிகள் பெருமானுர் அவர்களது திருவாக்குப்படி, பீரப்பா அவர்கள் தன்னைவிடத் தனக்குச் சமீபமாக உள்ளது வேறெதுவு மல்ல என்பதை உணர்ந்து, தன்னைப்பற்றித் தனக்குள்ளே, ஆய்ந்து விசாரித்துத் தன்னை அறிந்து கொண்டார்கள். அதன் காரணமாக இறைவனையும் அறிந்து கொண்டார்கள்.

“மரிப்பதற்கு முன்பே மரித்து விடுங்கள்” என்ற நபிகள் பெருமானுர் அவர்களின் உபதேசத்தின்படி இவ்வுலகில் இருக்கும் போதே, இவ்வுலகப் பற்றைத் துறந்து, தான் என்பதிலிருந்து விடுதலையடைய வேண்டும், என்ற கருத்தை அப்பா அவர்கள் தமது ஞானப்பாக்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்கள். மரணத்திற்குமுன் மரணத்தை ஏற்றவன், நித்திய வாழ்வில் நிலை பெற்றவனுவான் என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

இறப்பதற்குமுன் இறந்து பட்ட நிலையில் இருந்து, ‘கலிமா’ என்ற இஸ்லாமிய மூலமந்திரத்தில் “ஹூ” (இறை நாமம்) என்ற பேரெழுத்தை ஏற்று உள்ளத்தில் தரிபடுத்தி, அதையே போதத்தில் ஏற்றி நிலை கொண்டிருப்பவன் பேரானந்தத்தை அடைவான் என்பதை தமது ஞானப்பாடல்களில் தெளிவாக அப்பா அவர்கள் எடுத்தியம்பியுள்ளார்கள். இறைவனேடு ஒன்றிப் பேரானந்த நிலையடைவதற்குச், சதா, அந்தப் பரம் பொருளை எண்ணத்தில் ஏற்றி மெய்ம்மறந்து பேசாமல் மோன நிலையில் ஒடுங்கி இருக்கும்படித் தமது ஞானமணி மாலையில் அடியிற்கண்டபடி சொல்லியுள்ளார்கள்.

> “வேதநூல் சாஸ்திரங்கள் மெய்யிதனையன்றி வெகு
> பாரநூல் கற்றுற் பலனில்லை—யேதொன்று
> மில்லானைத் தேடியிரவு பகலாக வொன்றுஞ்
> சொல்லாமல் சும்மா விரு”.

———

உனக்கு வாய்க்கின்ற ஒவ்வோர் அருமையான நேரத்தையும் உடனே வேலை கொள்ளத்தக்க அருந்தனம் என்று உணர்க. பின்னுற் செய்ய வேண்டிவரும் வேலை என்னவென்று யாருமே அறிய மாட்டார்.

— காஜா ஹாபிஸ் (ரஹ்)

# ஞானப்புகழ்ச்சிப் பாடல்களிற் சிலவற்றிற்குப் பொருள் விளக்கம்

ஹக்கீம் M. S. அப் துல்கா திர்,
தத்துவ ஞானப் பாடல் திரட்டு விளக்க விரிவுரையாளர்,
கொழும்பு.

1. ஆருறுக் கப்பால் அணுவணுவாய் வந்துலகில்
வேருரு மொப்பில்லா மேலோனே — வீருன
புகழ்ச்சி துஆவடியேன் புகலுதற்கு நீ மனதுள்
மகிழ்ச்சி தருவாயே மகிழ்ந்து.

*ஆருறுக்கப்பால்:* ஆறும் ஆறும் பன்னிரண்டு. பன்னிரண்டு என்று சொல்லப்பெறுவது 'லாயிலாஹ இல்லல்லாஹு' என்னும் தொடரில் அடங்கியுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை. இப் பன்னிரண்டு எழுத்துக்களில் எல்லாத் திக்ருகளும், தியானங் களும், தஸ்பீஹ்களும், நிஷ்டைகளும் அடங்கியுள்ளன. இல்லல்லாஹு என்பதும், அல்லாஹு என்பதும், ஹ என்பதும், ஹி என்பதும் ஹீ என்பதும் இப்பன்னிரண்டு எழுத்துக்களில் உட்படுவனவே. இப்பன்னிரண்டு எழுத்தைத்தான் இறைவன் விரும்பியுள்ளான். அவ்வாறு இருந்தபோதிலும் இப்பன்னிரண்டு எழுத்தில் இறைவன் அடங்கிவிட்டான் என்று மட்டுமல்ல; அதற் கப்பாலும் ஆண்டவன் இருக்கிறுன் என்பதையே 'ஆருறுக்கப்பால்' என்ற தொடர் விளக்குகின்றது.

*அணுவணுவாய் வந்து :* மேற்கண்ட ஆருறு பன்னிரண்டு எனக் குறிக்கப்பெறும் 'லாயிலாஹ இல்லல்லாஹு' என்ற தியா னத்தைத் தவமாகவோ, தஸ்பீகாகவோ, ஜபமாகவோ எவர் நடத்திவருகின்றனரோ அவர்பக்கமாக இறைவன் அணுவணுவாய் நெருங்கி வருகின்ருன் என்று இத்தொடர் பொருள்படுகின்றது.

*வேருரு மொப்பில்லா மேலோனே :* இவ்வுலகில் வேறு எவருக்குமே சமமில்லாமல் இருக்கப்பெறும் மாபெரியோனே!

*வீருன :* விவேகமான.

*புகழ்ச்சி துஆ அடியேன் புகலுதற்கு நீ மனதுள் மகிழ்ச்சி தருவாயே மகிழ்ந்து :* ஞானப்புகழ்ச்சி எனப்படும் இந்தப் பிரார்த்தனைப் பாடல் தொகுதியை உனது அடிமையாகிய யான் பாடிட எனது மனதகத்தே மகிழ்ச்சியைத் தந்தருள்வாயாக இறைவனே நீ மகிழ்ச்சியுற்று!

2. அஞ்சும் அறியாமல் ஐபேரும் காணுமல்
நெஞ்சுதனி லேயிருக்கும் நித்தனே — உன்செயல்கொண்(டு)
ஓதும் புகழ்ச்சியைநான் உரைப்பதற்கு நீயெனக்குன்
போதம் தருவாயே புரிந்து.

*அஞ்சும் அறியாமல் :* உடலிலுள்ள ஈரல், பித்து, நுரை, மண்ணீரல், தாமரைக்காய் ஆகியவற்றின் சார்புகளுக்குக் காரண மான நீர், நெருப்பு, காற்று, மண், ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களாலும் முழுமையாக அறியப்படாமலும்,

**ஐபேரும் காணுமல் :** கண், காது, நாசி, வாய், மனம் என்னும் ஐம்பொறி புலன்களாலும் தெளிவாகக்காணப்படாமலும்,

**நெஞ்சுதனிலேயிருக்கும் நித்தனே உன்செயல் கொண்டு :** இதயத்திற்குள் என்றும் அழியாமல் இருக்கும் இறைவா! உன் உதவியைக்கொண்டு,

**ஓதும் புகழ்ச்சியைநான் உரைப்பதற்கு நீயெனக்குன் போதம் தருவாயே புரிந்து :** 'ஞானப்புகழ்ச்சி' என்னும் இப் பாடல் தொகுதியால் நான் உன்னைப் புகழ்ந்து பாடுவதற்கு நீ எனக்கு நினைவாற்றல் நிறைந்த அறிவை விளக்கமுறத் தருவாயாக!

3. அற்பஜலம் அக்கினியால் அழியாமற் காவல்செய்து
கெற்பமதில் வைத்துருவாய்க் கிளர்ந்ததற்பின் மெய்ப்புடனே
தாரணியில் ஆக்கியென்னைத் தான்வளர்த்துக் காத்தவொரு
காரணனே நீயிதற்குக் காப்பு.

**அற்பஜலம் அக்கினியால் அழியாமல் காவல்செய்து :** அற்பநீர் எனச் சொல்லப்படும் சிறுதுளியாம் இந்திரியத்தை அன்னையின் கர்ப்ப அறையென்று சொல்லப்படும் நெருப் பறைக்குள் வைத்து அழியாமல் பாதுகாத்து,

**கெற்பமதில் வைத்துருவாய்க் கிளர்ந்ததற்பின் மெய்ப் புடனே :** அதன்பிறகு அந்தக் கருவறையுள் என்னையொரு வடிவமாக அமைத்து, உயிரையும் கொடுத்து, நேர்மையான முறையில்,

**தாரணியில் ஆக்கியென்னைத் தான்வளர்த்துக் காத்த வொரு காரணனே :** இவ்வுலகில் என்னைப் பிறக்கச்செய்து என்னைப் பாதுகாத்துக் கொண்டிருக்கும் இறைவா!

**நீ யிதற்குக் காப்பு :** இந்த ஞானப்புகழ்ச்சியை நான் பாடப் பாதுகாப்பாயிருப்பாயாக!

5. உதிரமோ(டு) என்புந் தோலும் ரோமமும் தசைநரம்பும்
திதிவரி தாகி நின்ற சீவனுஞ் சிவனுங் கூட்டி
மதுரமோ(டு) உருவா யென்னை வகுத்தவா வுனையான் பாட
விதுரமோ(டு) எவரும் போற்றும் வேந்தனே
துணைசெய் வாயே.

விதுரமோடு எவரும் போற்றும் வேந்தனே : விருப்பத்தோடு உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தாலும் போற்றப்படும் இறைவா!

உதிரமோடு என்புந் தோலும் ரோமமும் தசை நரம்பும் திதிவரிதாகி நின்ற சீவனும் சிவனும் கூட்டி : இரத்தம், எலும்பு, தோல், உரோமம், தசை, நரம்பு என்னும் பொருட்களால் பிணைத்து, உயிரையும் கொடுத்து நீயும் அதிற்கலந்து,

மதுரமோடு உருவாய் என்னை வகுத்தவா உனையான் பாட, துணைசெய்வாயே : இனிய வடிவில் என்னை உருவாக்கிய இறைவா! உன் புகழை நான் பாடுவதற்கு எனக்குத் துணையாக இருப்பாயாக!

6. ஆலம்பதி னெண்ணுயிரம் முன்னுகம கிழ்ந்தே
மூலமறு நான்கொன்றினில் மோகந்தரு முதல்வா
காலன்வரு நேரங்கலி மாவென்றதென் னுவில்
பாலன்தலை மேல்நின்றுயர் பாடந்தரு வாயே.

ஆலம் பதினெண்ணுயிரம் முன் ஆகம் மகிழ்ந்தே : இறைவா! பதினெண்ணுயிரம் உலகங்களையும் படைப்பதற்கு முன்னர் உன் உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்பட்டது.

மூலம் அறுநான்கொன்றினில் மோகந்தரு முதல்வா: அவ்வாறு நீ மகிழ்வதற்கு மூல காரணம், அறுநான்கு - இருபத்து நான்கு எழுத்தாக இருக்கக்கூடிய 'லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி' என்னும் கலிமாவிலும், அதில் ஓரெழுத்தாக இருக்கக்கூடிய 'ஹூ' என்ற எழுத்திலும் உனது மோகத்தைக் கொடுத்துள்ளதேயாகும்.

காலன் வருநேரம் கலிமா வென்ற தென்னுவில்: எமதூதர் என மொழியப்படும் இஸ்ராயில் (அலை) அவர்கள் வந்து என் உயிரைப் பிரிக்கக்கூடிய நேரத்தில், (உலகெலாம் படைப்பதற்குமுன் நீ உவகையோடு அருளிய) அந்தக் கலிமாவை எனது நாவில் (அருளி)

பாலன் தலைமேல் நின்று உயர் பாடந்தருவாயே: பாலகன் எனச் சொல்லத்தகுந்த இவ்வடிமையின் சிரசில் நீ வீற்றிருந்து அக்கலிமாவை எனக்கு உயரிய பாடமாக ஆக்கித் தருக.

7. ஆருமின பேரென்றுனே யறியாமலே நெஞ்சுள்
சேரும்புகழ் தேடும்படி தெரியுமிறை யேநீ
ஒருமுப தேசமொரு நாளுமென துள்ளம்
பாரில்மற வாமலுயர் பாடந்தரு வாயே.

**ஆருமின பேரென்று உனே அறியாமலே நெஞ்சுள்:** இறைவா! உன்னை எனக்கு யாரென்றும் தெரியாது; உன்னுடைய பேரும் எனக்குத் தெரியாது; உன்னுடைய வடிவையும் நான் காணவில்லை. அவ்விதமிருந்தும் நீ எனது இருதயத்துக்குள் இருந்துகொண்டு,

**சேரும்புகழ் தேடும்படி தெரியும் இறையே நீ:** உன்னைச் சேரவும், உன்னைப் புகழவும், உன்னைத் தொழவும், உன்னை யாரென்று அறியவும் செய்துகொண்டிருக்கிறாய்.

**ஒரும் உபதேசம் ஒருநாளும் எனது உள்ளம்:** நீ ஓதித் தந்த உபதேசமாகிய 'லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹி' என்ற கலிமாவை எந்தக் காலத்திலும் எனது இருதயத்துக்குள்ளே (நிலைபெறச்செய்து)

**பாரில் மறவாமல் உயர்பாடம் தருவாயே:** இவ்வுலகில் அக்கலிமாவை நான் மறந்திடா முறையில், அதை எனக்கு உயர் தரமான பாடமாக்கித்தருவாயாக.

8. செய்காலும் வன்னியும் தானுமொன் ருய்நம்மைச்
செய்திடுநாள்
மெய்யாக வேதுங் கொடுவந்த தில்லை வினைதொலைந்தால்
பொய்யாம லேதுங் கொடுபோவதில்லையென் றெண்ணிகைரு
ஈயாத லுத்தரை யும்படைத் தாயெம் மிறையவனே.

**செய்காலும் வன்னியும் தானும் ஒன்ருய் நம்மைச் செய்திடுநாள்:** இந்த உடலை உருவாக்குவதற்குக் காலாக இருக்கக்கூடிய மண்ணும், நீரும், நெருப்பும், காற்றும், ஆகாயமும் என்னும் பஞ்சபூதத்தோடு இறைவா நீயும் கலந்து இவ்வுடலை உற்பத்திசெய்து எம்மை உருவாக்கிய நாளில்,

**மெய்யாக ஏதும் கொடுவந்தது இல்லை; வினைதொலைந்தால்:** உண்மையில் அன்னையின் கருவறையிலிருந்து வெளியான போது யாம் எதனையும் கொண்டு வந்தோமா? ஒன்றையும் கொண்டுவரவில்லை. ஆனல் இப்பூவுலகில் பிறந்தவுடன் பாவமென்று சொல்லக்கூடிய வினையானது எம்மைச் சூழ்ந்துவிடுகின்றது. இந்தப் பாவச்சுவை எம்மைவிட்டு அகன்ருல்,

**பொய்யாமல் ஏதும் கொடுபோவது இல்லை என்றெண்ணி கைர் ஈயாத லுத்தரையும் படைத்தாய் எம் இறையவனே:**

உண்மையாக, இவ்வுலகிலிருந்து போகும்போது வேருென்றும் யாம் கொண்டுபோவதில்லை. இதையறிந்து உலகிலிருக்கும் வரை 'கைரான'-தான, தருமம் முதலிய நன்மையைச் செய்யாது, ஏழைகளுக்கு ஈயாத கெட்டவர்களை ஏன்படைத்தாய் இறைவா?

9. ஐயா வெழுந்திடு முன்னு ருதித்ததென் ருய்ந்துளத்தில்
மெய்யாக நோக்கி வணங்காத பாவிகள் வெந்நரகில்
பொய்யாம லேகுவ ரென்றே புவிக்குள் பசித்தவர்க்கொன்
றீயாத லுத்தரை யும்படைத் தாயெம் மிறையவனே.

*ஐயா வெழுந்திடு முன்னுர் உதித்ததென்று ஆய்ந்து உளத்தில்:* இறைவன் இவ்வுலகை எவ்வாறு படைத்திருக்கின்ருன்? மானிட வர்க்கத்தை எந்நிலையில் நிறுத்தியுள்ளான்? 'ஆகிரத்தை' எந்த விதத்தில் அலங்காரம் செய்திருக்கின்ருன்? அந்த இறைவனை யாம் அடையக்கூடிய மார்க்கம் எப்படி? என்பவற்றையெல்லாம் முன்னுர் என்று சொல்லக்கூடிய நமது நாயகம் ரசூலேகரீம் (ஸல்) அவர்கள் சொல்லின்வழி ஆராய்ந்து இதயத்துக்குள்ளே,

*மெய்யாக நோக்கி வணங்காத பாவிகள் வெந்நரகில் பொய்யாமல் ஏகுவர் என்றே:* உண்மையாக சிந்தித்து வணங்காத பாவிகளெல்லாம் கொடிய நரகிற்குத் தவருமல் செல்வர் என்று நன்ருகத் தெரிந்திருந்தும்,

*புவிக்குள் பசித்தவர்க்கு ஒன்று ஈயாத லுத்தரையும் படைத்தாயெம் இறையவனே:* உலகில் பசியால் பரிதவிக்கும் ஏழையர்க்கு அவர்தம் பசித்துயரை நீக்க ஒரு பொருளையும் கொடாத கெட்டவர்களையெல்லாம் ஏன் படைத்தாய் இறைவா?

10. கணங்காத தந்தைக்கு முன்பிறந் துந்திக் கமலமதில்
புணங்காம லந்தித்த தேதென்று நோக்கிப் புகழ்ந்துதொழா
ரிணங்கா நரகுக் கிரையாவ ரென்றுள்ளத் தெண்ணியுன்னை
வணங்காத லுத்தரை யும்படைத் தாயெம் மிறையவனே.

*கணங்காத தந்தைக்கு முன்பிறந் துந்திக் கமலமதில்:* உலகின் மானிடவர்க்கத்தினர் அனைவரும் சற்றேனும் சந்தேகமின்றி ஆதிபிதா ஆதம் (அலை) அவர்கள்தானே என்ருல் ஆம் என்று ஒத்துக் கொள்வார்கள். அத்தகைய ஆதம் (அலை) அவர்களுடைய தானம் இவ்வுடலில் எங்குளது என்று கேட்டால் அது உந்திக் கமலமாகும். (உந்திக்கமலத்தின் தானம் நமது உடலில் தொப்பூழுக்கு நான்கு விரலுக்குக் கீழ் அமைந்துள்ளது. அதனையே மூலாதாரம் என மொழிவர்.)

*புணங்காமல் அந்தித்தது ஏதென்று நோக்கிப் புகழ்ந்து தொழார்:* அந்த உந்திக் கமலத்தைப் பற்றிய

சிந்தனையில் ஈடுபடாமல் இருக்கக்கூடியவர்க்கு அவர்கள் செய்யும் 'இபாதத்து' சம்பூர்ணமாகத் திருப்தியளிக்காது. அச்சிந்தனையில் ஈடுபடுகையில், வாயினால் சொல்லக்கூடிய 'திக்ரை' நீக்கி இதயத்தினால் நினைக்கக்கூடிய நினைப்பே சுவாசத்தில் மாறி நமது உடலில் எழுபத்தீராயிரம் நரம்புகளில் ஓடக்கூடிய இரத்தத்தை ஒட்டிக் கொண்டிருக்கிறது. அதனால் ஒருமுறை 'அல்லாஹு' என்பது எழுபத்தீராயிரம் முறை சொல்வதற்குச் சமமாகி விடுகின்றது. அவ்விதம் இதயத்தால் நினைந்து புகழ்ந்து தொழாதார்,

*இணங்கா நரகுக்கு இரையாவர் என்று உள்ளத்து எண்ணி, உன்னை வணங்காத வுத்தரையும் படைத்தாய் எம் இறையவனே:* இணங்காத நரகத்துக்கே செல்வர். அவ்வாறு போவோமென்று தெரிந்திருந்தும் அந்தத் தானத்தில் நின்று வணங்காத கெட்டவர்களை உலகத்தில் ஏன் படைத்தாய் இறைவா?

11. முந்தக் கிருபை பெருகிமுத் தான முகம்மதைநீ
யெந்தக் கிருபைசெய் திங்கழைத் தாயிறை நீயெனவும்
வந்தக் குருவிடஞ் சேராம லுன்னை வணங்குதற்கோ
இந்த வுலுத்தரை யும்படைத் தாயெம் மிறையவனே.

*முந்தக் கிருபை பெருகி முத்தான முகம்மதை நீ:* இறைவா, நீ ஆரம்பத்தில் நூர்முகம்மதியா எனப்படும் ஒளியைப் படைத்து, உன்னுடைய கருணை, அன்பு, ஆசை, பாசம், நேசம், கண்ணியம் அத்தனையும் பெருகி அந்த ஒளியை ஒரு முத்தாக அமைத்து உன்னுடைய 'அர்ஷு' எனப்படும் தானத்தில் நிறுத்திவைத்தாய்.

*எந்தக்கிருபை செய்து இங்கு அழைத்தாய் இறை நீயெனவும்:* எங்கள் பேரில் உனக்கு ஏற்பட்ட கிருபையால் நீ அவ்வுயரிய முத்தை இப்பூவுலகிற்கு ஒரு நபியாக அழைத்து எங்களுக்கெல்லாம் உபதேசம் வழங்கும்படியாக அனுப்பி வைத்தாய்.

*வந்தக் குருவிடம் சேராமல் உன்னை வணங்குதற்கோ:*

[இறைவா, நீ ஆரம்பத்தில் ஆதம் (அலை) அவர்களை மண்ணால் உருவாக்கி 'ரூகை' ஊதினாய்; மாதாவின் கருவறையிலிருந்து பிறக்கும் யானும் மண்ணே. யான் உண்பது, உடுப்பது, உலாவருவது, சரசம், சல்லாபம், உல்லாசம் அத்தனையும் இந்த மண்ணே. இறுதியாக யான் மரணிப்பதும் இந்த மண்ணாக இருக்கின்றது. ஆகையால்,] மண்ணானது எனக்குக் குருவாகத் தென்படுகின்றது. அவ்விதமிருப்பினும் மண்ணை வணங்காமல் உன்னை வணங்கவே நபிகள் உபதேசித்தார்கள்.

*இந்தவுலுத்தரையும் படைத்தாயெம் இறையவனே:* அவ்விதம் அவர்கள் சொன்னபடி உன்னை வணங்காத கெட்டவர்களையெல்லாம் இவ்வுலகில் ஏன் படைத்தாய் எம் இறையவனே?

12. பொல்லா தவனுண்மை சொல்லா தவனைம் புலன்கள் தம்மை
வெல்லா தவன்றவம் வேண்டா தவன்மெய் யடியவர்பின்
செல்லா தவன்சிந்தை செய்யா தவனின் றிருவடிக்கன்
பில்லானை யேதுக்கு நீபடைத் தாயெம் மிறையவனே.

*பொல்லாதவன் :* கொடூரமான கோபமுடையவனும், அடுத்தவர்க்குத் தீங்கு செய்யக்கூடியவனும், அநியாயம் புரிபவனும், இறைவன் கட்டளைகளைப் புறக்கணிக்கக்கூடியவனும், இறைவனின் மறுமையமைப்புக்களை நிராகரித்துப் பேசுவோனுமாகிய பொல்லாதவன்,

*உண்மை சொல்லாதவன் :* பொய் பேசுதல், புறம் பேசுதல், கோளுரைத்தல் முதலியவற்றில் ஊறிய, உண்மை பேசாதவன்,

*ஐம்புலன்கள் தம்மை வெல்லாதவன் —* மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து பொறி அடக்கத்தை வேண்டாதவன்,

*தவம் வேண்டாதவன் :* தவ நெறியைப் பேணுதவன்,

*மெய்யடியவர் பின் செல்லாதவன் :* இறைவனது பாசத்தை அடுத்திருக்கும் பெரியவர்கள் சொல்லக்கூடிய அறிவுரையின் பக்கம் செல்லாதவன்,

*சிந்தை செய்யாதவன் :* இறைவனது சிந்தனையே யற்றவன், *நின் திருவடிக்கு அன்பில்லானை :* ஆண்டவனுக்கு 'சுஜூது' செய்யாதவன், முதலிய கூட்டத்தை, *ஏதுக்கு நீ படைத்தாய் எம் இறையவனே :* நீ ஏன் படைத்தாய் இறையவனே?

13. கல்லாப் பிழையுங் கருதாப் பிழையுங் கசிந்துநிலை
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நேர்ந்
தஞ்சிலொன்றைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும்நீ தான்பொறுப் பாயெம் மிறையவனே.

*கல்லாப் பிழையும் :* மார்க்க அறிவைக் கல்லாத குற்றமும்,

*கருதாப் பிழையும் :* இறைவனை நினையாத குற்றமும்,

*கசிந்துநிலை நில்லாப்பிழையும் :* கண்ணீர் சிந்த உருகி நின்று பிரார்த்தனை புரியாத குற்றமும்,

*நினையாப் பிழையும்:* இறைவனை நினையாத குற்றமும்,

**நேர்ந்தஞ்சிலொன்றைச் சொல்லாப்பிழையும்** — ஐந்து கலிமாவில் 'முதல் கலிமா'வாகிய 'லாயிலாஹ இல்லல்லாஹு முகம்மதுர் ரஸூலில்லாஹி' என்னும் கலிமாவைச் சொல்லாத குற்றமும்,

**துதியாப் பிழையும்:** இறைவனைப் புகழாத குற்றமும்,

**தொழாப் பிழையும்:** நாளும் ஐந்து நேரம் இறைவனைத் தொழாத குற்றமும்,

**எல்லாப் பிழையும் நீதான் பொறுப்பாய் எம் இறையவனே:** இன்னும் செய்யக்கூடிய எல்லாப் பிழைகளையும் இறையவனே நீதான் பொறுப்பாயாக.

---

ஒருவனுடைய காலில் முள் தைத்துவிட்டால் அவன் தனது காலைத் தொடையின்மேல் தூக்கி வைக்கின்றான். ஓர் ஊசி முனையால் அந்த முள்ளின் தலைப்பைத் தேடுகின்றான். அஃது அகப்படவில்லையென்றால் உதட்டால் காலை நனைக்கின்றான்.

காலில் தைத்த முள்ளைத் தேடிப் பிடிக்க இவ்வளவு சிரமப்பட வேண்டுமென்றால் மனத்திற்குள் தைத்த முள் அகப்படுவதற்கு எவ்வளவு சிரமப்பட வேண்டும்? — மஸனவீ ஷரீப்

ஈக்கள் இனிய கற்கண்டையும் விளக்குப் பூச்சி வெந்தணலையும் விரும்புகின்றன. முதல்நிலை இச்சை; ஏனையது காதல். இச்சைவேறு; காதல் வேறு. — அமீர் குஸ்ரு

குளவி, தேனீ ஆகிய இருவகை வண்டினங்களும் ஒரே இடத்தில்தான் உண்ணுகின்றன. எனினும் ஒன்றிலிருந்து விடமும் அடுத்ததிலிருந்து தேனும் உற்பத்தியாகவில்லையா?

இருவகை மான்கள் ஒரே இடத்தில் புல் மேய்கின்றன; ஒரே நீர்த்துறையில் நீர் உண்ணுகின்றன. எனினும் ஒன்றிலிருந்து வெறும் விட்டையும் அடுத்ததிலிருந்து கஸ்தூரியும் உண்டாகவில்லையா?

இரு வகையான மூங்கிலினம் ஒரே நீர்த்துறையில் நின்றுதான் தண்ணீரை உட்கொள்கின்றன. எனினும் ஒன்று காலியாகக் காட்சி தர ஏனையது [கரும்பு] இனிய ரசத்தால் நிறையப் பெறவில்லையா? — மஸ்னவீ ஷரீப்

# DIVINE GRACE IN SUFISM

M. Shamsunnahar, M. A.

With the help of Divine Grace, the souls reach the world of Divine Light. In Sufism, great stress is laid on the experience of Divine Grace. Men seek God, only because God seeks man. "The seeker is in reality the sought," says Kalabadhi, and the sought the seeker; for the man who seeks God only seeks him because God first sought him".[1]

Intuitive knowledge of God is a divine gift. Man's acquisition has no place in it. The early Muslim mystics of India, like Shaikh Nizamud-din believed in the absolute freedom of God. "He confess honour on whom so ever. He wants and inflicts disgrace on whom so ever he wants."[2]

The sufis, on the whole, believe that the real power of bestowing anything on human beings lies in the Supreme being. As R. C. Zaehner says in his book, "Hindu and Muslim Mysticism", this fellowship of God cannot be achieved by man's unaided efforts, for it is God who chooses his lovers from pre-eternity.

"Special souls has he chosen from for his love;
These did he choose before fine ever was
He chose them before he brought forth his creation,
And they are depositors of wisdom and manifestation"[3]

Ibn Sina , an eminent Muslim philosopher says that there are two paths that lead a man to God. One is the path of Grace (Tariq-i-Fade) and the second path of exertion [Tariq-i-Mujahada]. The former can be achieved through this help of a perfect divine.

"It is the Grace" says Abdul Muid Khan, "when the Lord takes the seeks to a perfect divine, he observes, who by his magic touch of spiritual attainments, rouses him

from the sleep of worldliness and indifference and without any effort, pain, austerity and penance makes him visualise the Eternal Beloved."[4]

Dara Shukuh also igneses the stages of hard discipline and physical renunciation. He observes the path of Grace. God is not the tormentor but the comforter of his creatures.. As saint Peer Mohammed sings in his Tiruppadal Thirattu,

> "He extends His boundless Grace,
> according to their wish"

God hears the requests of the devotees.

He is the loving refuge for all people."[5] The Allah [God] of Islam is so good and just that if anyone does evil in ignorance and later on turns away from it in repentance and acts a right, then He is forgiving and merciful. It is even said that, "the lovable Lord comes to help us, wherever we are."[6] God is gracious to every creature of this universe but mercy is a special characteristic reserved for the true believer. Saint Peer Mohammed points out that,

> "God is truthful towards the sincere devotees
> and for the insincere, He is ever an unreality."[7]

Any way we should certainly strive because it is one of the Almighty's ways that He helps those who help themselves. "Thus you get a thing only if you strive for it, but you don't get it by striving alone."[8] The meaning is that we should not consider that striving is the definite cause of achieving our desire, for the result is dependent on God's Grace and Mercy. Elsewhere in the Quran, we are told that every godly act of man is preceded by an act of God's favour towards man.

Love of God is one of God's gifts and comes of His Grace, which is infinite. It is said in the Holy Quran thus,

"If you lend into Allah a goodly loan He will double it for you and will forgive you for Allah is Responsive, Clement."[9]

Saint Peer Mohammed went to the extreme of saying that God comes to Hell to lament over there.[10] Masthan Sahib says, that God's Grace excels, even mother's mercy[11] and for it is generally stated that a mother's love is greater than any other love in the world and according to one Egyptian proverb, "God could not be everywhere so he sent mother." Masthan Sahib compares God to a ocean of Grace and to a graceful cloud.[12]

The Quran makes clear that God's mercy exceeds His justice. God is not only forgiving and merciful for the penitents but even loves them. Punishment for the sins is perhaps because they become obstacles in the way of human progress, which is the eternal scheme of God. The God of Islam is not a revengeful God, who is always prompt in punishing human beings who are his own creation. On the contrary, He is named as Wahuud [lover] in the Quran.

The sufis say that only by God's grace man turns towards God. E. H. Palmer in "Nafasi" points out "attraction is the act of God, who draws man towards himself. Man sets his face towards this world and is entangled in the love of wealth and dignity, until the grace of God steps in and turns his heart towards God. The tendency proceeding from God is called attraction; that which proceeds from man is called Inclination, Desire and Love."[13] A true devotee feels that his praying is not his own effort, but comes down from above. Saint Peer Mohammed brings out the idea.[14]

---

1. Mysticism in world Religion—Sidney Spencer p. 308
2. Islamic culture vol. xxxix No. 4. Oct 1965: The conception of God as understood by the early Muslim Mystics of India.-Mohammed Noor Nabi, p. 290

3. Hindu and Muslim Mysticism —R. C. Zaehner p. 91

4. Islamic culture vol. xxv. 1951. Some aspects of the Arabic writings of the philosopher. —Ibu Sina
-Abdul Muid Khan, p. 59.

5. Tiruppadal Thirattu—Peer Mohammed p. 34, 25

"கேட்டோ ரவரவர் நினைவின்படி
கிருபை மிகச் செய்யும் பொருளே"
"செவியொ டெழுந்துரை பலது கேட்பவனா நீயே
அன்பு கொடெ வர்க்குமொரு தஞ்சமுறு நீயே"

6. Tiruppadal Thirattu—Masthan Sahib p. 68

"எங்கே யிருக்கினும் மங்குவந் துதவி தரு
மெங்கள் மகுமூது மாகி"

7. Tiruppadal Thirattu—Peer Mohammed p. 95

"மெய்யடியார்க் கென்றுமுள்ள மெய்யனே
மெய்மறந்த
பொய்யடியார்க் கென்றுமுள்ள பொய்யனே."

8. Islamic culture vol. 30. 1956. The conception of worship in Islam—Mir Valiuddin p. 149

9. The meaning of the Glorious Quran — Translated by M. M. Pickthall p. 402

10. Tiruppadal Thirattu—Peer Mohammed p. 24

"நரக மதி லுருக வரும் நாயகனும் நீயே."

11. Tiruppadal Thirattu—Masthan Sahib p. 54, 56

மாதாவினுங் கருணை யுள்ள நீர் பின்றொடர
வள்ள லிறகுல் வருகவே!

12. "காரா றெனப்பே ரருட்கடலி நீருண்டு
கவிகின்ற கருணை முகிலை."

13. The Sufi path of love—Mir Valiuddin p. 141

14. Tiruppadal Thirattu—Peer Mohammed p. 2

"விண்ணொளி காண வேண்டின் மெய்யிறை யருளினாலே
கண்ணொளி யுருகச் சேர்த்துக் கருத்தொளி நடுவில்
நோக்கி
பொன்னொளி மேவும் வாலைப் பொருள் ரசமருந்தி மேலாந்
தன்னொளி கண்டு ஞானத் தான வனாக லாமே"

# பிஸ்மில் குறம்

*அல்ஹாஜ் கலாநிதி ம. மு. உவைஸ்,* M. A., Ph. D., J. P.
*இலங்கை*

குறம் என்பதைக் குறத்திப்பாட்டு என்று வழங்குவர். தமிழிலே உள்ள தொண்ணூற்ருறு வகைப் பிரபந்தங்களுள் குறத்திப் பாட்டும் ஒன்று. இது குறத்தியர் பாட்டு என்றும் வழங்கப்படுவதுண்டு. தொன்னூல் விளக்கத்தில் தலைவிக்கு அவளது காதல் முதலியவற்றைப்பற்றிக் குறத்தி குறி சொல்வதைக் கூறும் ஒரு பிரபந்தம் எனக் குறத்திப் பாட்டுக்கு வரைவிலக்கணம் கூறப்படுகின்றது. பன்னிரு பாட்டியலிலும் குறத்தியர் பாட்டுக்கும், குறத்திப் பாட்டுக்கும் வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ளது.

> 'இறப்பு நிகழ்வெதிர் வென்னுமுக் காலமுந்
> திறப்பட வுரைப்பது குறத்தியர் பாட்டே' (336)
>
> 'குறத்திப் பாட்டு மதனே ரற்றே' (337)

எனக் குறத்தியர் பாட்டுக்கும் குறத்திப்பாட்டுக்கும் ஒரேவிதமாக வரைவிலக்கணம் பன்னிரு பாட்டியலில் கூறப்பட்டுள்ளது. மீனுட்சியம்மை குறம் என்பதுவும் குறத்திப் பாட்டாகவே அமைந்துள்ளது.

தக்கலை மெய்ஞ்ஞானி பீர்முகம்மது சாகிபு அவர்களால் இயற்றப்பட்ட ஞான நூல்களுள் ஒன்று பிஸ்மில் குறம் என அழைக்கப்பட்டுள்ளது. தமிழிலே உள்ள ஏனைய குறத்திப் பாட்டுகள் போலல்லாது 'பிஸ்மில் குறம்' பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர் றஹீம் என்னும் அரபுச் சொற்ருெடரின் தாத்பரியத்தை விவரிக்கின்றது. நபிகள் பெருமானுர் (ஸல்) அவர்கள் இச்சொற்ருெடரைப்பற்றி விவரித்துள்ளார்கள். இவற்றை ஆதாரமாகக் கொண்டு அஹதியத்திலே மௌலானு ரூமி அவர்கள் விளக்கியுள்ளார்கள். இவ் விளக்கங்களை ஸகத்துல்லா அப்பா அவர்கள் பீரப்பா அவர்களுக்கு விளக்கியுள்ளார்கள். இவ்விவரங்களே இவ்வாறு ஒரு விருத்தத்தில் இடம் பெற்றுள்ளன.

'நினைவுடன் பொருளு நிறைந்திடும் வகையும்
நீதியும் பிஸ்மிலோடும்
அனந்தமுந் தெரிய அஹமத ருரைக்க
ஆதிதன் கிருபையாலே
கனஜய மாரும் மவுலானு றூமி கழறினர் அஹதியத் திலே
மனமது மகிழ அறிவையு மறிந்து வழுத்தினர்
சதக்கத்துல்லாவே'.

பிஸ்மில் குறத்தைப் பாடுவதற்குப் பீடிகையாக அதனைத் தமிழில் உரைக்க எல்லோரையும் அடிபணிந்து—நபிகள் பெருமானாரையும், நான்கு கலிபாக்களையும், குத்துபுமார் ஒலிமார்களையும் அடிபணிந்து ஆரம்பிப்பதாக இவ்வாறு பாடியுள்ளார்:

"பேர்பெருகும் பிஸ்மில் குறம் பெறனு லணைவோர்க்கும்
பீருமுகம் மதென்போன் பிரியமன முற்று
ஆதியருள் தூதரையும் யார்கள் குத்துபொலியும்
அணைவோரின் அடிபணிந்து அடியேன்
றமிழுரைத்தேன்".

எவருக்கும் பிஸ்மிலைப் பற்றிய அறிவு இன்றியமையாதது. தீனவருக்கு அது மிக முக்கியமானது. பிஸ்மிலைப்பற்றிய விவரங்களை அறிந்தால் திருக்கலிமாவைப் பற்றிய விவரங்களை அறியலாம் என்பது பீரப்பா அவர்களின் கருத்தாகும். பிஸ்மிலைப் பற்றி அறிந்தால் திருக்கலிமாவில் உள்ள அரபு எழுத்துக்கள் இருபத்துநான்கினதும் தாத்பரியத்தை அறிய முடிகின்றது என்பது புலவர் அப்பா அவர்களின் கருத்தாகும். இதனையே பீர் முகம்மது சாகிபு ஒலியுல்லாஹ் அவர்கள் இவ்வாறு பாடியுள்ளார்:

"தீனவரே பிஸ்மிலதின் செய்தி அறிவீரேல்
திருக்கலிமா அறுநான்கு ஜெயஎழுத் தையறிவீர்"

இவற்றின் தாத்பரியங்களை அறிந்தால் 'துஷ்மன்' என்று அரபில் வழங்கும் பகைவனை இப்லீஸின் தோஷமணுகாது என்று

"துசும னென்னும் இபுலீசின் தோஷ மணுகாது"—இவ்வாறு பாடியுள்ளார்.

'அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால், எனப் பொருள்படும் பிஸ்மில்லாஹிர் றஹ்மானிர்றஹீம் என்னும் அரபுச் சொற்றொடரின் உள்ளடக்கம் அல்லாஹ்வின் திருநாமத்தை உச்சரிப்பதாகும் என்றும் இந்த அரபுச் சொற்றொடரிலே பத்தொன்பது அரபு எழுத்துக்கள் உண்டென்றும் இவ்வெழுத்துக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் அறிவு உண்டு என்றும் இவ்வாறு கூறியுள்ளார்.

"பிஸ்மில்லா ஹிர்றஹ் மானிர்றஹீம் எனப்பேசி
இயம்புவது இறைநாமம் பத்தொன்ப தெழுத்தாம்
உயர்வான வோரெழுத்துக் கோரறி வுண்டு."

பின்னர் பத்தொன்பது அறிவும் விவரிக்கப்படுகின்றது. ஷரீ அத், தரீக்கத், அகீகத், மஹரிபத், முஹப்பத், முகுத்தியாத் என்னும் ஏறுகின்ற பாதை நிலைகளும் நாசூத்து, மலக்கூத்து, ஜபறூத்து, லாகூத்து, ஜெம்கூத்து, பாகூத்து, ஆகூத்து, தம்கூத்து ஆகிய மக்காம்களாகிய எட்டு வணக்க நிலைகளும் திக்று ஜல்லி, திக்று கல்பி, திக்று றூஹி, திக்று சிர்ரி, திக்று கபீயுமாகிய ஐந்து வகை திக்று முறைகளும் சேர்ந்து பத்தொன்பது எழுத்துக்களில் பொதிந்துள்ளன. வணக்க நிலை ஐந்தும் பாதை ஆறும் மக்காம் எட்டும் சேர்ந்து பத்தொன்பது அறிவுகளாகும் என்பதைப் புலவர் அப்பா அவர்கள் விவரித்துள்ளார்கள். இக்கருத்துக்களையே பீர் முகம்மது சாகிபு அவர்கள்

"ஐந்துமிது வணக்க நிலையாகும் சொன்ன பாதை
அழகு மக்காம் சொன்னதெட்டும் பத்தொன்பது
அறிவாம்."

இதன் பின்னர் கவிஞர் இவற்றின் பிரிவுகளை விரிவாக விளக்கிக் கொண்டு போகிறார்கள். முந்தின பாதை ஷரீ அத்துக்கு, முந்தின மக்காம் நாசூத்துக்கு முந்தின வணக்கம் திக்று ஜல்லி என்று இவ்வாறு ஒவ்வொரு பாதையையும் அதற்குரிய பிரிவுகளையும் விவரிக்கிறார். வசனப் பகுதியும் பாடற் கண்ணிகளும் உடைத்தாய் பிஸ்மில் குறம் அமைந்துள்ளது. ஒவ்வொரு பாதையையும் அதன் பிரிவுகளையும் விளக்கச் சில வசனங்களை உபயோகப்படுத்துகிறார். பின்னர் கண்ணிகளிலே அவற்றை விளக்குகிறார். குருமாருடைய இலக்கணங்கள், அடையாளங்கள் அடுத்தடுத்து விவரிக்கப் படுகின்றன. இவற்றையெல்லாம் கூறிவிட்டு பிஸ்மிலின் விபரங் களைப் பல கண்ணிகளால் விளக்குகிறார்.

பிஸ்மிலில் உள்ள ஓர் எழுத்துக்கு ஓர் அறிவாய் உள்ளவற்றை எல்லாம் அறிந்தால் அகில உலகத்தையும் பற்றிய அறிவுகள் அனைத்தையுமே அறிய முடியும் என்று பீரப்பா அவர்கள் கூறியுள்ளார்.

"விந்தைபெறும் பிஸ்மிலதின் எழுத்து முதற்கடையும்
விளம்பியது ஒருபத்து ஒன்பதுமே சரியாய்
அந்தெழுத் துக்கோ ரெழுத்துக் கோரறிவு மாக
ஆலமெல்லா மறியவென்று அழகாகச் சொன்னேன்."

அதேபோன்று இக்கருத்துக்களை ஆலம்-முழு உலகிலும் உள்ளவர்கள் அறிவதற்காகச் சொன்னேன் என்று பொருள் சொல்லக்கூடிய விதத்தில் அமைந்துள்ளதைக் காணலாம். இதனைத் தொடர்ந்து பிஸ்மியை வேருகவும் இச்சொற்ருெடரில் உள்ள அல்லாஹ்வை வேருகவும் அர்றஹ்மானை வேருகவும் அர்றஹீமை வேருகவும் கூறி ஒவ்வொரு எழுத்திலும் பொதிந்துள்ள அகமியமான கருத்துக்களை விளக்கிக்கொண்டே போகிருர் ஆசிரியர்.

முதலில் நூற்றுமுப்பது சுஹ்புகள் அல்லாஹ்வால் பல நபிமாருக்கு அருளப்பட்டன. பின்னர் அந்த சுஹ்புகள் அனைத்தையும் ஐயம் என்றும் பொருந்தாது என்றும் மாற்றி தௌருத் வேதத்தை முதல் வேதமாக அல்லாஹ் அருளினுன். அந்த வேதத்தையும் மாற்றி சபூர் வேதத்தை அல்லாஹ் இறக்கிவைத்தான். சபூர் வேதத்தையும் மாற்றிய அல்லாஹ் அதற்குப் பதிலாக இஞ்சீல் வேதத்தை அருளினுன். அப்பால் அந்த சுஹ்புகளையும் மூன்று வேதங்களையும் மாற்றி முத்து முகம்மது நபி (ஸல்) அவர்களுக்கு மேலான புறுக்கான் வேதத்தை அல்லாகுத்தஆலா அருளினுன். இந்த விவரங்களைப் பல கண்ணிகளில் பீரப்பா அவர்கள் நுணுக்கமாக விவரித்துள்ளார் தமது பிஸ்மில் குறம் என்னும் ஞான நூலிலே. அவற்றுள் சில கண்ணிகளை ஈண்டு எடுத்துக்கொள்வோம்.

"நாயனிறை நானிலத்தில் நால்மறையும் வகுத்தான்
நல்ல சுகுபொரு நூற்றிமுப் பதையும் விடுத்தான்
செய்யுமுறை பலஞானங் சிதருமற் கோத்து
செகத்தி விறைபிருக்கும் வேதம் சுகுபுமுழுதெல்லாம்
ஐயமென்று மாற்றிதவு ருத்துமுதல் வேதம்
அதைமாற்றி மறுதரமு மழகுசபூர் வேதம்
வையகத் திலிறக்கியதை மாற்றி மறுதரமும்
வரிசைபெறும் இஞ்சீல்மறை வந்தது மூன்ருமே
இஞ்சீல் சபூர் தவருத்து ஏகன் மறைமூன்றும்
இதற்கு முதலொரு நூற்றி முப்பது சுஃபும்
.........................................................
அத்தனையி லுள்ளபொரு ளனைத்துமொன்ரு யொடுக்கி
அணுவுக்குள்ளே கடல்மலையு மடைத்த வதிஜயமாம்
முத்துமுகம்மதுர் றசூல்நபிக்கு வேண்டி
முன்னவன்தன் கிருபையினுல் விண்ணு மண்ணும் புகழ
வெற்றியுள்ள புறுக்கானுல் மேலான மறையாய்
விசளத்துக்குள் ளடங்காத வெகுகோடி தலமாம்
இத்தலத்தி லிருக்கும் புறுக்கான் மறை மேலாகும்."

தக்கலை பீர் முகம்மது சாகிபு ஒலியுல்லாஹ் அவர்கள் தமது கருத்துக்களை விளக்க பல உவமைகளைக் கையாண்டுள்ளார்கள். தொடர்ந்து தொழாதவர்கள் தொழுவதால் பயனில்லை என்பதை விளக்க மலடிகளாகப் பெண்கள் வாழ்வதை உவமையாகக் கூறியுள்ளார். அதனால் எவ்விதப் பயனும் இல்லை என்பதை உணர்த்தவே இவ்வாறு பாடியுள்ளார்.

"தொழுது வந்தார் வணக்கமவர் செய்துவந் தாரில்லை
தோகையர்கள் வாழ்ந்து மலடிருப்பது போலுவமை"

தொடர்ந்து தொழுது வராதவர்கள் சோலையில் வளராத கனி யருந்திப் பசி தீர்த்தவர்களுக்கு ஒப்பாவார் என்பதனைத்

"தோப்பில்லாக் கனியருந்தித் தீர்ந்த பசியாகும்"

என்றும், சோலையிலே கனிகளில்லாத வெற்று மரத்துக்கு ஒப்பாவர் என்பதனைத்

"தோப்புக்குள்ளே கனிகளில்லாத் துருமரம் போலே"

என்றும், உள்ளத்திலே பற்றில்லாமல் கள்ளமாக மக்களை ஏமாற்றச் செய்யும் வணக்கமானது தசையில்லாத எலும்பை நாய் கடித்துப் பயனற்றுப் போகின்ற தன்மைக்கு ஒப்பாகும் என்பதனை

"உள்ளன்பில்லாதுற்ற கள்ளாற் செய்யும் வணக்கம்
வெள்ளெலும்பை நாய்கடித்த விதத்திலும் அதிகம்"

என்றும், நேர்வழியைப் போதிக்கத் தவறும் குருமாரைப் பின்பற்றிச் செய்யும் வணக்கம் எல்லாம் உலகத்திலே புருஷன் இல்லாமல் வாழும் பெண்ணின் சுகத்திற்கு ஒப்பாகும் என்பதனை

"வழியான குருவில்லாத வணக்கம் முழுதெல்லாம்
வையகத்திற் புருடனில்லாள் வாழ்ந்த சுகமொக்கும்"

என்றும் பல்வேறு உவமைகளை எளிதிற் புரிந்து கொள்ளும் முறையில் அமைத்துப் பாடியுள்ளார் அப்பா. பிஸ்மில் குறத்தை இவ்வாறு முடிக்கிறார்:

"குற்றமெல்லாம் விலகி தீனோர் குலங்க ளொளியாகக்
குவலயத்தில் பிஸ்மில் குறங் கொஞ்சத் தமிழாக
..............................................................
பாடிப்பாடி யறிவை யெல்லாம் பங்குபங்காய்ச் சொன்னேன்
பையல்பீர் முஹம்மதென்போன் பகர்பிஸ்மில் குறமே
மெய்யான அறிவுதனை மேதினியிற் படிப்போர்
மெத்தமனங் கொண்டுபுத்தி மேவியிதைக் கேட்போர்
..............................................................
ஐயமற சொர்க்கத்தி லரசு கொலுவாக
அல்லாஹ் கொடுத்தருள்வானே ஆமீன் ஆமீன்"

# கூடிக்கலந்திருக்கும் கோமான்!

புலவர் அ. பகதூர்ஷா
அமைப்பாளர் : சீதக்காதி செந்தமிழ்க் கழகம்.

இறைவனை உணர்வதே ஞானம்; உணர்ந்தவரே ஞானியர்; உணர்த்தி நிற்பதே ஞானப்பாடல்.

ஞானியருள் தனி சிறந்தவர், நற்கலையின் நன்னர், சொற் கலையின் மன்னர், தற்கலையில் வதியும் தத்துவச் செம்மல் மகான் பீர்முகம்மது அப்பா அவர்களாவர்.

எப்போதும் இறைவனையே பணிந்து, முப்போதும் இறைவனையே நினைந்து, தப்பாது தற்பரனை வாழ்த்திப் பாடிய ஞானப் பாடல்களுள் அப்பாவின் ஞானப் புகழ்ச்சியும் ஒன்று.

நல்லற ஏற்றத்திற்கு ஞானப்பாக்களே சிகரம் எனலாம். பாரதியும், 'ஞானத்திலே பரமோனத்திலே....உயர்நாடு' என்று இதனை உறுதிப்படுத்திப் போந்தார்.

ஞானத்தின் பிறப்பிடமான நாயனைப் போற்றிப் பரசுதலே ஞானப் புகழ்ச்சி. 'ஆண்டவன் ஆண்டவனைப் புகழ்தலும், ஆண்டவன் அடியானைப் புகழ்தலும்; அடியான் ஆண்டவனைப் புகழ்தலும், அடியான் அடியானைப் புகழ்தலும்' எனப் புகழ்ச்சி நான்கு வகைத் தென்பர் வான்மறையிற்றோய்ந்த வல்லுநர்.

அறுநூற்று எண்பத்தேழு ஆணி முத்துகளால் ஆக்கப்பெற்ற ஞானப்புகழ்ச்சியில், அடியான் ஆண்டவனிடம் அகங்கசிந்துருகி, அவனருள் வேண்டி, அடிபணிந்து நிற்கும் அன்புறு காட்சிகளைப் பரக்கக் காணலாம்.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தழித்துக் காக்கின்ற இறைவன் மேலானவன். அளப்பரிய அன்புக்கும் அறுதியிலா அருளுக்கும் அவனே அதிபதி. "அரிதாம் மானுடனை அவனே குருதிக் கட்டியினின்றும் தோற்றுவித்தான். ஆளும் அறிவால் உயர்ந்து நிற்கும் அடியவனுக்கு அவனே எழுதுகோல் கொண்டு கற்றுக் கொடுத்தான்".

அவனுற் படைக்கப் பெற்ற மனிதன் மண்ணைப் பொன்னுக்குகிருன்; மாநதியைத்தடுத்து மலர் நிறை சோலையாக்குகிருன்; கல்விலே கலையும், வில்லிலேவீரமும் காட்டுகிருன்; வானவெளியையும் தன் மதியால் வெற்றி கொள்ளப் பார்க்கிருன்.

மனிதனுக்கு இத்துணையாற்றலென்ருல், மனிதனைப்படைத்த மாபெரியோனின் ஆற்றல் எத்துணைப் பெரியது! வலியது! மிகைத்தது! மேலானது! சிறந்தது! சீர்மையது! என்பதனை உரைத்தலுங் கூடுமோ?

"விண்ணுலுகத்திலுள்ளனவும் மண்ணுலுகத்திலுள்ளனவும் இவற்றின் நடுவண் உள்ளனவும் அவன் ஆளுகைக்குட்பட்டவை" என்பது அல்புறுக்கான்.

ஆகையினுல், ஆண்டவனுகிய அவன் மேலானவன்; அவனே மேலானவன். அவன் பெரியவன். அவனே பெரியவன். அதனுலன்ருே இறைவணக்கத்திற்கு அழைக்கப்பெறும் பாங்கின் முதல் தொடர், "அல்லாஹு அக்பர்" எனவமைந்து அவன் மேன்மையை உரைக்கும் தொடராக, உணர்த்தும் தொடராகச் சிறந்து மிளிர்கிறது. அனைத்தினும் மேலானவனுய் இருக்கும் 'அலீய்யு' அவனே! அவனுக்கிணை யுண்டோ! இல்லையென்பது தேற்றமாதலால் இணை வைத்தல் கூடாது என்பது இதனுற் பெறப்படுகிறது.

அவன் யாவன்? ஆணலன்; பெண்ணுமல்லன்; அஃறிணையலன். 'அல்லாஹ்' எனப் பெறும் அவனுக்கு மயக்கம் பற்றி வருகின்ற இரு வினைகளும் இல்லை. எவ்வினையும் அணுகாத இறைவனைச் சேர்ந்தார்க்கு 'இருள் சேர் இருவினையும் சேரா' என்பது வள்ளுவம். வினைகள் அணுகாதவனை அகத்தில் ஏற்றினுல் வெல்லரிய வினைப்பகையை வெல்லலாம்; சொல்லரிய சுகப்பயனைப் பெறலாம்.

பேராற் பெரிய பெரும் பொருளே இறைவன். பரம்பொருளாகிய அவனைப் பத்திமிகு மெய்யடியார்களே உணர்வர். அவனே கதியென்று கிடப்பர்; அவனே கதியென்று போற்றுவர்.

'நற்றலைமையாம் உன் நாமம் நவில்கின்றேன், கற்றவனே, என்றன்னைக் கைவிடில் என் செய்குவேனே' எனக் காதலாற் கசிந்துருகுவர். 'உணர்வுருவாயுள்ள' அவனை மெய்யோர் அனைவரும் போற்றப் பரமானவன்; பரமானந்தத்தைத் தரவல்லவன். குணங்குடி மஸ்தான் சாகிபு அவர்களும்,

"சுத்த பரிபூரணச் சுகவாரி தன்னிலோர், சொட்டாகிலும் தொட்டபேர்
நல்லவர்கள் நல்லவர்கள் என்றைக்கு நானும் நல்லவனுவனே"

என்று போற்றுகிருர்.

கற்பூரமும் கடலுப்பும் தோற்றத்தில் ஒன்ருயிலும் குணத்தால் வேறுபடும். மனிதர் வடிவால் ஒன்ருயினும் குணத்தால் புண்ணியராயும் புல்லியராயும் வேறுபடுதல் உண்டு. 'இன்பமோடெழிலும் அன்புடன் அருளும் நண்ணிய நாதனைப், புண்ணிய முதலை எண்ணுவதும் ஏத்துவதும் புண்ணியமே'. அப்பரும், 'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியர்' என விளித்து வழுவா திருக்க வரம் வேண்டி நின்ருர். பாலொடு சேர் நீர் பாற்றன்மை பெறற் போலப் புண்ணியனுகிய இறைவனைப் பற்றி நிற்பவர் புண்ணியராகுவர்.

இறைவன் சிறந்த மெய்ப்பொருள்; செம்பொருள்; என்றும் எல்லாம் தானுகி இலங்குபொருள், சாத்திரத்தால் அளவுபடாத் தனிப் பொருள்; வார்த்தையுள் அடங்கா வண்பொருள். இறைவனின் தன்மையை எடுத்துரைத்தல் இயலாது. ஏனெனில், அவன் இல்லாமையில் உள்ளதாம் தன்மையைத் தோற்றுவிக்கும் உண்மைப் பொருள். காசிம் புலவரும்,

"பகரும் உருவிலி அருவிலி வெருவிலி சிறிதுமொருதலை
பயிலிலி துயிலிலி பருவிணர்விலி துணையிலி இணையிலி"

என விரித்துரைப்பார்.

இல்லாமையில் ஏற்றமிகும் பேராற்றலைக் கொண்டொளிரும் பேரிறையை மறவாதவர்களே புத்தியுள்ளவர்கள். உமறுப் புலவரும், "மறந்தவர் சுவர்க்கப் பதியையும் மறந்து மண்ணினில் மதிமறந்தவரே" என்பார்.

இறைவன் ஒருவனையே எண்ணி, ஏகனையே மறவாது போற்றி வந்த அபீசினிய அடிமை பிலாலின் ஓரிறைவன் கொள்கையை

வெறுத்த எசமானன், அவரை அடித்தான், மிதித்தான், அனல் மணலிற் கிடத்தி அவர் மார்பில் பாராங்கல்லை ஏற்றித் துன்புறுத்தினன். அப்போதும் புத்தியுள்ள பிலாலின் மனம் ஏகனையே எண்ணியது, ஏற்றித் துதித்தது. புத்தியுள்ளவர்க்கு ஏற்றமுற விரும்பிவந்து கருணை பொழியும் கருத்தன் பிலாலைக் காக்கக் கருதினன். அதன் பயனுய் ஹலரத் அபூபக்கர் சித்தீக் அவர்கள் பிலாலை விலை கொடுத்து வாங்கி விடுவித்தார்கள் என்பது வரலாறு.

பரம்பொருளாகிய படைத்தவனே முன்னவன்; மூத்தவன், முதலவன். 'அவ்வல் அகதானமரம்' என்று அவன் தோற்றத்தை அப்பாவே வேருர் இடத்தில் இயம்புவார். திருமூலரும், 'ஆதியாய் அருவமாகி அகண்ட பூரணமாய், ஞானச் சோதியாய் நின்ற மாயன் என்பார். ஆதிமட்டுமல்ல; அந்தமும் அவனே. 'ஆற்றல் நிலையொன்றே தோற்றவொடுக்கத் தொன்மை இயற்கைத் தொழிலதாம்' என்பாருமுளர். அவ்வலும் ஆகிறும் அவனுய் இருத்தலால் அவனன்றி அணுவுமில்லை என்பது விளங்கும்.

உயிரின ஆற்றல்களின் கூறுபாடுகளைச் சுருக்கி உணவு, உறக்கம் ஆகிய இரண்டனுள் அடக்கலாம். 'ஆசைக்கோர் அளவில்லை, எல்லாம் யோசிக்கும் வேளையில் உண்பதும், உறங்குவதுமாக முடியும்' என்பது முதுமொழி. உறக்கத்தால் வரும் ஊறும், உணவால் வரும் ஊறும் சிந்திக்கத்தக்கவை.

"அற்ருல் அளவறிந்துண்க அஃதுடம்பு
பெற்ருன் நெடிதுய்க்கு மாறு"

"உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

இவ்விரண்டு குறட்பாக்களும் உறக்கம், உணவு ஆகியவற்றின் இடுக்கணை எடுத்தியம்ப வல்லன. வினைகள் அணுகாத இறைவனை மெய்ப்பாட்டுத் துன்பங்களாகிய ஊண், உறக்கம் முதலான எத் துன்பங்களும் அணுகா.

மெய்ப்பொருளாகிய நாயன் நீங்கலாகவுள்ள பிறபொருட்கள் எல்லாம் பொய்ப் பொருட்களே. 'காயமே இது பொய்யடா, வெறும் காற்றடைத்த பையடா' என்பது சித்தாந்தம். பொய்ப் பொருட்கள் அனைத்திற்கும் இறப்புண்டு, பழுதுண்டு, வினை

யாற்றலால் இடையூறு உண்டு; ஆணவம், மாயை, கன்மம் ஆகிய மும்மல வயப்பட்டு இழிதலும் உண்டு.

நடுங்க வைக்கும் இவ்விடையூறுகள் எக்காலும் இறைவனுக்கு இல்லை. ஏனெனில், 'அவன் பெறவுமில்லை, பெறப்படவுமில்லை'. இதனால் இறைவனுக்கு உருவமில்லை என்ற உண்மை புலப்படும். எவ்வகை இடையூறும் இல்லாத இறைவனை, எவ்வகை இடுக்கணும் அணுகாதென்பதனால் ஏற்றமிக்க இறைவனுக்கு எக்காலமும் அழிவில்லை என்பது தேற்றம்.

ஞானியரின் நல்லறிவைக் கொடுப்பது அவாவோடு வரும் மயக்கம். மெய்ஞ்ஞானிகட்கு அசைவிலாப் பத்திமையில்லையேல் ஞானமொருகாலம் நழுவலும் கூடும். விசுவாமித்திர ஞானியை இங்கே உன்னுக.

அஞ்ஞான வேரறுத்திட்ட மெய்ஞ்ஞானிகட்கு மேலான மெய்ஞ்ஞானி இறைவனே! ஞானத்தின் நங்கூரம் அவனே! அவனிற் சிறந்த மெய்ஞ்ஞானி எங்குமில்லை. இணையிலா ஞானியை ஏத்தல் வேண்டும். ஆண்டவனை, அமரர்கள் நாடிப் புகழ்வர். அவர் நாவில் அகலாது வீற்றிருக்கும் அழகு நாமம் (ஜலால்) இறைநாமம். வானவர்கள் போற்றும் அளவிற்கு வானளாவிய புகழ், வல்லான் ஒருவனுக்கே வுரிய உயர்வு.

நிகழ்வாழ்விலும் ஒருவரை உயர்ந்தவரே புகழ்தல் ஏற்பு. ஓர் ஆசிரியரை அவரிடம் பயின்ற ஆயிரம் மாணாக்கர் புகழ்வதினும் அவர் சார்ந்திருக்கும் கல்வித்துறைத் தலைவரோ, அதிகாரியோ பாராட்டுவதுதான் நற்புடையது, ஏற்றமுடையது.

'ஆதியானை அமரர் தொழப்படும் நீதியானை' என்பது தேவாரம். 'புகழுவார் புகழும் புகழுக்குரிய நின்னைப் புகழ்ந் திடற்கு அருள்புரியவும்' என்பார் குணங்குடியார்.

புகழுவார் புகழும் புகழுக்குரிய பேரிறைவன் அனைவருக்கும் தலைவன். அத்தலைவன் 'மருவுருவாய்' எல்லாப் பொருள்களிலும் இரண்டறப் பொருந்தியிருக்கிறன். அடியார்களுடன் கூடிக் கலந்திருக்கிறன்.

இப்படியொரு இணைப்பும் பிணைப்பும் அடியானுக்கும் ஆண்டவனுக்கும் மட்டுமே உண்டு. ஏனெனிற், மனித வாழ்க்கையில் ஏற்படும் கலப்பும் நட்பும் புல்நுனி பனித்துளி போன்றது. எப்போது விலகும் எனச் சொல்ல வியலாதது.

கோனுகிய கோமான் அடியவர்களுடன் கூடிக் கலப்பதையே பெரிதும் விரும்புகிருன். கோமானை நெஞ்சால் நினைந்தால் அவன் விளங்குவான். ஆடியின் முன்னின்ருல் நம்முரு அங்கு விளங்குவதைப்போல, அவன் நம்முடன் உறைந்திருப்பதை உணர்ந்து, பணிந்துள்ளி வாழ்த்தினுல் பெறற்கரிய பேரின்பம் பெறலாம்.

விண்ணுக்கொரு மருந்தை, வேத விழுப்பொருளைக், கண்ணுக்கினியானைப் பாடிக், கசிந்துள்ளம் உண்ணெக்கு நின்றுருகி உயர்வினைப்பெற, ஓதியுணர்ந்த உயர்மகான் பீர்முகம்மது வலியுல்லாஹ் அழைக்கிருர். இதோ அவர் ஞான அழைப்பை உட்கொண்டு அவன் மோனம்பெற்று உயர முயலுங்கள்:

''வினைகளனு காதவனே; மேபலோனே; மெய்யோர்
அணைவருநீ தானுயடுத்தே — யுணையெவரும்
போற்றப்பர மானவனே; புண்ணியனே; புத்தியுள்ளார்க்
கேற்றமுற நச்சித்திரங் கும்பொருளே; — தோற்ற
மொடுக்க முள்ளோனே; யுனக் கூனுறக்க மற்ருேர்
யிடுக்கமணு காதவிறையே — நடுக்க முடன்
ஈனப் பழுதுபல விடையூறில் லானே; மெய்ஞ்
ஞானமொரு காலநழுவா தவனே — வானவர்கள்
நாடிப் புகழுமவர் நாவிலெழுந் தெங்களுடன்
கூடிக் கலந்திருக்கும் கோமானே''.

— ஞானப்புகழ்ச்சி.

# அடைக்கலப் பகுதிப் பாடல்

## —ஓர் ஒப்புமை ஆய்வு

நகோமி ஜாண்சன், எம்.ஏ., பி. டி.,
தமிழ்த் துணைப் பேராசிரியர்:
சாராள்தக்கர் கல்லூரி, பாளையங்கோட்டை

மனித உள்ளத்தைப் புனிதப்படுத்தும் மாண்புமிக்க எண்ணற்ற பக்தி இலக்கியங்கள் தமிழ் மொழியில் சிறந்து காணப் படுவதுபோல் பிற மொழிகளில் இல்லை. "வணிகத்தின் மொழி ஆங்கிலம் என்றால், தூதின் மொழி பிரஞ்சு என்றால், காதலின் மொழி இத்தாலியம் என்றால், தத்துவத்தின் மொழி ஜெர்மானியம் என்றால், உலகிலே பக்தியின் மொழிதமிழாகும்" எனப்பறைசாற்று கிறார் தமிழ்த் தூதுவர் தனி நாயகம் அடிகளார்.

சைவர்களும், வைணவர்களும், சமணர்களும், பௌத்தர்களும் கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களுமாகத் தத்தம் சமய இலக்கியங் களைப் படைத்து மகிழ்ந்த உலக மொழி, தமிழ் மொழி ஒன்றே யாகும்.

இறைவனை உள்ளம் நெகிழ்ந்து, ஒன்றித் தொழுது, பேரின்பப் பெருவாழ்வை, வாழும் காலமெல்லாம் பெற விழைந்த சான்றோர்களே மெய்யறிவு கண்ட மேதைகள். தென்னகந் தந்த தவஞானிகளுள் பீர்முகம்மது அப்பா அவர்கள் குறிப்பிடத் தக்கவர்; தமிழகந் தந்த பதினெண் சித்தர்களில் ஒருவர்.

அப்பெரியார் அகவிருள் நீக்கி அறிவொளி வீசச் செய்யும் மெய்ஞ்ஞானப் பாடல்கள் பல இயற்றியுள்ளார். செவிக்கும் சிந்தைக்கும் விருந்தளிக்கும் அவரது பாடல்கள் மெய்ஞ்ஞானக் கருவூலங்கள். அவர் பதினெண்ணாயிரம் பைந்தமிழ்ப் பாக்களைப் பொழிந்துள்ளார்; ஞானப் புகழ்ச்சி, ஞானமணிமாலை, ஞானப் பால், ஞானப்பூட்டு முதலான பல ஞான நூற்களைப் படைத் துள்ளார். ஞானப் புகழ்ச்சி இவைகளுள் அரிய ஞானக் கருவூல மாய் அமைவது.

ஞானப் புகழ்ச்சி என்னும் இந்நூல் பல உச்சநிலைப் பகுதி களைக் கொண்டது. காப்பு, அவையடக்கம், அடைக்கலம், துவா இரப்பு முதலான பல பகுதிகள் இந்நூலில் உண்டு.

உலகெலாம் படைத்து உயிரெலாம் சமைத்துக் காத்திடும் இறைவனிடம் உத்தம அடியார் அடைக்கலம் புகும் அடைக்கலப் பாட்டுக்கள் பக்திப் பரவசத்தை ஏற்படுத்துவன. இந்நூலின் அடைக்கலப் பகுதி 47 (நாற்பத்தேழு) பாடல்களைக் கொண்டது.

உயிர்கள் இறைவனிடத்து அடைக்கலம் புகத் தவிக்கும் உணர்வினை எல்லாச் சமயங்களும், சமய இலக்கியங்களும் கூறுகின்றன. எடுத்துக் காட்டாக 'இஸ்லாம்' என்றாலே 'அனைத்திற்கும் அல்லாவிடமே சரணடைதல்' அல்லது 'தன்னை அடைக்கலப்படுத்துதல்' என்றுதான் பொருள்.

மாணிக்கவாசகரும் தமது நூலில் 'அடைக்கலப் பத்து' என்று ஒரு பகுதியைப் பாடியுள்ளார்,

"நெறியறியேன் நின்னையே அறியேன் நின்னையே அறியும்
அறிவறியேன் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே"

என இறைவனிடம் சரணாகதியடைகின்றார்.

பீர்முகம்மது அப்பா அவர்கள் நன்னெறி நல்கும்படி அடைக்கலம் வேண்டுகிறார்;

"பழுதுபல வினைகளொருநாளும் வாராமல்
படைத்தோனே யானுன் னடைக்கலந்தானேன்"

என்கின்றார்.

ஞானப்புகழ்ச்சியில் அல்லாஹ்வின் உயரிய பண்புகளையும் இயல்புகளையும் கூறும் பாடல்கள் நாற்பத்து மூன்றாம் பாடலிலிருந்து நூற்று ஐம்பத் தேழாம் பாடல் வரை இடம் பெறுகின்றன.

அடைக்கலப் பகுதியின் ஒரு பாடல் நயத்தையும் பிற நூற்களோடுள்ள ஒப்புமையையும் விளக்கலாம்.

"தந்தையிலி தாரமிலி தானவனும் நீயே
தண்மைகொ டெவர்க்கு மொருதாபரமும் நீயே
மைந்தரிலி யன்னையிலி மன்னவனு நீயே
மண்ணிலடி யார்க்கிரணம் வழங்குவது நீயே
சிந்தைதனி லிடறுதனைத் தீர்த்தருள்வை நீயே
தேட்டமறிந் தெனக்குதவி செய்பவனு நீயே
அந்தமிலி எனக்கோ ரிழிவுவ ராமல்
ஆதியே யானுன் னடைக்கலம் தானென்"

(ஞானப்புகழ்ச்சி, 56)

இப்பாடல் தொடங்கிப் பல பாடல்களில் தொடர்ச்சியாக இறைவனின் நிறைவுற்ற பண்புகளையெல்லாம் தமிழ்ச் சுவை கனியக் கூறிச் செல்கின்றார். இணையில்லாப் பரம் பொருளின் தனித் தன்மைகளை இப்பாடலில் கூறுகின்றார்.

பாடற்பொருள்:

எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்குத் தந்தையில்லை, மனைவியில்லை, தாயில்லை, மைந்தரில்லை, தாய் அவனைப் பெறவுமில்லை. எல்லோர்க்கும் என்றும் நல்லருள் புரிந்து நலந்தருபவன் இறைவனே. அருள் புரிந்து காக்கும் காவலனும் இறைவனேயாகும். அடியார்க்கெல்லாம் உணவு வழங்குபவனும் இறைவனே. அனைவர் மனத்திலேற்படும் சிக்கல்களைத் தீர்ப்பவன் அவன். ஒவ்வொருவரது தேவையை அறிந்து அவரவர்க்கு வேண்டியன வேண்டியாங்கு செய்பவன். இறைவன் அந்தமில்லான். எவ்வித முடிவும் அவனுக்கில்லை. இத்தகைய தனிச் சிறப்புடைய இறைவனிடம் தனக்கு இழிவு வராமல் காக்குமாறு குறையிரந்து வேண்டுகிறார் பீரப்பா.

இப்பாடலில் பிறசமயக் கருத்துக்கள் பயின்று வரப் பாடியுள்ளார். இப்பாடல் மட்டுமன்று; இந்நூலின் பிறபாடல்களும் பிற சமய அருளாளர்களின் திருமொழிகளுடன் மிகுதியாக ஒப்பிட்டுப் பேச நிறைய வாய்ப்புக்களைக் கொண்டன.

"தந்தையிலி, தாரமிலி, மைந்தரிலி, அன்னையிலி"

பீர்முகம்மது அப்பா அவர்கள் அல்லாஹ் பிறப்பில்லாதவன் என்கின்றார். அவனுக்குத் தாயில்லை; தந்தையில்லை. ஆதியாய் யாவுக்கும் மூலமாய் முன்னைப் பழம் பொருளாய் விளங்குபவன் இறைவன் என்பது இப் பெரியார் கருத்து.

அல்லாஹ் மானிடனாய் அவதரிக்கவுமில்லை. மானிடப் பெண்டிரை மணந்து மகப்பேறடையவுமில்லை. பரம்பொருளாம் அல்லாஹ்வின் சிறப்பை மக்கட்கு அறிவுறுத்தும் நபிகளே உலகில் மனித நிலையில் தோன்றியதாக இஸ்லாமியச் சமயம் கூறுகின்றது.

சிவபெருமானுக்குப் பார்வதியும், முருகனுக்கு வள்ளி, தெய்வானையும், திருமாலுக்குத் திருமகளும், இந்திரனுக்கு இந்திராணியும், தாரமாகக் கூறப்படுவதுண்டு. ஆனால் முஸ்லீம்கள் இறைவனாகக் கொள்ளும் அல்லாஹ் தாரங்கள் ஏதுமின்றித் தாய் பிள்ளையின்றித் தனித்தவன். சிவபெருமானுக்குத் தாய் தந்தையில்லாவிட்டாலும் தாரமும் மைந்தரும் உண்டு. வேல் மயில் முருகன், தொப்பை வயிற்றுக் கணபதி ஆகியோர் மைந்தர். இத்தகைய மைந்தர் நிலையை இஸ்லாம் ஏற்பதில்லை.

தந்தைதா யில்லாதாய் நீயே யென்றுந்
தலையார் கயிலாய னீயே யென்றும்
எந்தாயெம் பிரானானாய் நீயே யென்றும்
மேகம்பத தென்னீச னீயேயென்றும்

[அப்பர் தேவாரம் ஆறுந் திருமுறை]

"உற்றாரென் றொருவரையும் இல்லாதானே"
[அப்பர் தேவாரம் 257—3]

"ஆருமறியா இடத்தாய் நீ" [257—11]

"அறவன் பிறப்பிலி யாரும் இல்லாதான்
உறைவது காட்டகம் உண்பது பிச்சை"
[திருமந்திரம்]

"தானவனும் நீயே"

யாவர்க்கும் நலந்தருபவன் இறைவனே
கல்லார்க்கும் கற்றவர்க்கும் காணார்க்கும்
காண்பவர்க்கும் வல்லார்க்கும் மாட்டார்க்கும்
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் நல்லார்க்கும்
பொல்லார்க்கும் நரர்களுக்கும் சுரர்களுக்கும்
நலந் தருபவன் இறைவனே.

"தண்மைகொண் டெவர்க்குமொரு தாபரமும் நீயே"

எவர்க்கும் பற்றுக் கோடாகத் தஞ்சமாக, தாபரமாக அமைபவன் இறைவன் என்கின்றார் ஞான வள்ளல் பீர்முகம்மது அப்பா. திருவாசகத்தேன் தந்த மணிவாசகப் பெருமானும் திருச்சதகத்தில் இறைவன் தனக்குத் தனித் துணையாக அமைந்ததை விதந்தோதுகிறார்.

"தொடர்வரி யாய்தமி யேன்தனி நீங்குந் தனித்துணையே"
[திருச்சதகம் 37]

உலகில் நாதியற்ற நிலையிலிருக்கும் ஒவ்வொருவருக்கும் நாதியாக அமைகின்றான், இறைவன் என்கின்றார் அப்பர் பெருமானும்.

"ஆதிநீ அந்தம்நீ அநாத ரட்சகன் நீ
நாதிநீ அன்றிவேறு நாயகனும் உலகில்உளனோ"
[அப்பர் தேவாரம்]

என்கின்றார்.

ஆழ்வார்களில் தொண்டரடிப் பொடியாழ்வார்க்குத் தாபரமாய் அமைந்ததும் இறைவன் பாதமூலமேயாம்.

"ஊரிலே காணியில்லை உறவுமற் றொருவரில்லை
பாரிலே நின்பாதமூலம் பற்றினேன் பரமூர்த்தி"

"மன்னவனும் நீயே"

இறைவனை மன்னாதி மன்னனாய், அருள் வழங்கும் வள்ளலாய்க் கண்டார் ஞான வள்ளலார்.

மாணிக்கவாசகரும் இறைவனைக் கோனாகக் காண்கிறார்.

4808

'வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே'
[திருச்சதகம்—15]

அவரே திருவம்மானைப் பகுதியில்
"விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளு மன்னவர்க்கு மாண்பாகி நின்றானை"
(திருவம்மானை)

என்று மொழிகின்றார்.

"மண்ணிலடி யார்க்கிரணம் வழங்குவது நீயே"

இரணம் = உணவு எனப் பொருள்படும்.

இறைவன் மனுக்குலத்திற்கு உணவளிக்கின்றான். அவனது அடியார்க்குத் தப்பாது உணவு வழங்குபவன்.

விவிலிய நூலில் (Bible) தாவீதசென் பாடிய சங்கீதப் புத்தகத்தில் இறைவனைத் துதிபாடும்போது

"மனுக்குலம் யாவுக்கும் ஆகாரம்
கொடுக்கின்றவரைத் துதியுங்கள்"

என்கிறார். (சங்கீதம் 136 : 25)

அவரே மற்றொரு பாடலில்

"எல்லா உயிர்களும் உம்மை நோக்கிக் கொண்டிருக்கின்றன
ஏற்ற வேளையில் அவைகளுக்கு ஆகாரங் கொடுக்கிறீர்"
(145 சங் 15-ஆம் வசனம்)

என்கிறார்.

பீர்முகம்மது அப்பா இறைவனின் எண்ணிறந்த பண்புகளையும் சிறப்புகளையும் இந்த ஒரே பாடலில் எவ்வளவு அழகாக விரிவாகக் கூறியுள்ளார். தங்கச் சுரங்கத்தைக் கல்லியெடுக்குந்தோறும் தங்கம் கிடைப்பதைப் போல் ஞானக் கருவூலமாம் ஞானப்புகழ்ச்சி யென்னும் நூலின் பாடல்கள் ஒவ்வொன்றும் சிறப்புடையதாகத் தோன்றுகிறது. பக்திப் பாடல்களின் கருத்துகளோடு ஒப்புமை யுடைய பல்வேறு பாடல்களைப் பீர்முகம்மது அப்பா அவர்கள் பாடியிருப்பது நம்மில் பலருக்குத் தெரியாது. "ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம்" என்னும் முது மொழிக் கேற்ப இந் நூலின் அடைக்கலப் பகுதியின் பாடல் ஒன்றின் நயமும், பிறபக்தி இலக்கியங்களோடுள்ள ஒப்புமையுந் தோன்ற இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

22A
3-53